ஸ்ரீ:

2890

ஸ்ரீஸூக்திமாலா மலர்-12

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்

[திவ்யப்ரபந்தஸார வ்யாக்யானத்துடன்]

[ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடு]

பதிப்பாசிரியர்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

அட்வகேட்,

3. புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

T02890

R001G05

ஸ்ரீ:

ஸ்ரீஸூக்திமாலா — மலர்-12.

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்

[திவ்யப்ரபந்தஸார வ்யாக்யானத்துடன்]

[ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடு]

—○—

பதிப்பாசிரியர்:-

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

அட்வகேட்

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

மலிவுப் பதிப்பு விலை ரூ. 2—0—0

உயர்தரப் பதிப்பு (பைண்டுடன்) ரூ. 2—8—0

தபாற்கூலி அணா 6.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், திருச்சி.

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

'நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்' என்னும் இந்தகிரந்தம் 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' என்னும் மாதப்பத்திரிகையில் வெளிவந்தது. இப்பத்திரிகையில், புருஷஸூக்தம், நாராயணஸூக்தம், ஸந்த்யாவந்தநம், உபநிஷத்துக்கள் முதலானவற்றுக்கு விரிவுரைகளும், திவ்யப்ரபந்தங்களுக்கு எளிய வியாக்கியானங்களும் மற்றும் பல விஷயங்களும் வெளிவருகின்றன. வருஷச்சந்தா ரூபாய் மூன்று [ரூ. 3] நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிட்டீர்களா? இல்லையேல் இன்றே சேருங்கள்.

கிடைக்குமிடம்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3. புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

...ரகம் ஜீயர் அருளிச் செய்த

நான்முகன் திருவந்தாதி தனியன் வ்யாக்யானம்

ஸ்ரீராமப்பிள்ளை அருளிச்செய்த தனியன்

நாராயணன் படைத்தான் நான்முகனை, நான்முகனுக்கு
ஏரார் சிவன் பிறந்தா னென்னும்சொல்—சீரார்
மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே, மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்த்து.

பதவுரை:—நாராயணன்—ஸ்ரீமந் நாராயணன், நான்முகனை—நான்கு முகங்களையுடைய ப்ரஹ்மாவை, படைத்தான்—ஸ்ருஷ்டித்தான், நான்முகனுக்கு—அப்பிரமனுக்கு, ஏர் ஆர் சிவன் பிறந்தான்—ஸாதநாநுஷ்டாநத்தினால் பூர்ணனான சிவன் பிறந்தான், என்னும் சொல்—என்னும் இவ்வார்த்தையைச் சொல்லுவதாய், சீர் ஆர்—பெருமைகள் பொருந்தப்பெற்றதான, மொழி செப்பி—இப்பிரபந்தத்தைச் சொல்லி, வாழலாம்—வாழ்ச்சி பெறலாம்; நெஞ்சமே—என் நெஞ்சே! மொய் பூ மழிசை பரன் அ...யே—பூக்கள் நிரம்பிய திருமழிசைப்பிரானுடைய திருவடிகளையே, ...த்து—மங்களாசாஸனம் செய்வாயாக.

அவதாரிகை:—(நாராயணன் படைத்தானித்யாதி) ஸர்வேச்வரனுடைய ஸர்வஸ்மாத்பரத்வத்தை ஸாதித்த பக்திஸாரருடைய ஸ்ரீஸூக்தியான திவ்யப்ரபந்தத்தை அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி, மநஸ்ஸே! பக்திஸார க்ஷேத்ராதிபதியானவர் ஸ்ரீபாதங்களையே ஸ்தோத்ரம் பண்ணு என்கிறது.

திவ்யப்ரபந்த ஸாரம்

தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை:—நான்முகன் திருவந்தாதித் தனியனாகிய இப்பாசுரத்தை அருளியவர் கூரத்தாழ்வானுக்கு இரண்டாவது திருக்குமாரராய், ஸ்ரீபராசரபட்டருக்குத் திருத்தம்பியாராய், வேதவ்யாஸபட்டர் என்னும் திருநாமத்தையுடையரான ஸ்ரீராமப்பிள்ளையாவர். இப்பாசுரத்தில், "நெஞ்சே! ஸர்வேச்வரனுடைய பரத்துவத்தை நிரூபித்த திருமழிசையாழ்வாருடைய திவ்யஸூக்தியாகிற நான்முகன் திருவந்தாதியை அநுஸந்தித்து உய்யும்படியாக, அவருடைய திருவடிகளையே துதிப்பாயாக" என்று தம் நெஞ்சை நோக்கி அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம்:-(நாராயணன் படைத்தான் நான்முகனை) 1 "**एको ह वै नारायण आसीत्। न ब्रह्मा नेशानः॥**" (ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்। ந ப்ரஹ்மா நேஶாநः॥) என்றும், 2 "**नारायणपरो ज्योतिः**" (நாராயணபரோ ஜ்யோதி:) என்றும், 3 "**नारायणे प्रलीयन्ते**" (நாராயணே ப்ரலீயந்தே) என்றும், 4 "**एकस्तिष्ठति विश्वात्मा स च नारायणःप्रभुः**" (ஏகஸ் திஷ்டதி விச்வாத்மா ஸ ச நாராயண: ப்ரபு:) என்றும், 5 "**सृष्टिस्थित्यन्तकरणीं**" (ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம்) என்று தொடங்கி, 5 "**एक एव जनार्दनः**" (ஏக ஏவ ஜநார்த்தந:) என்றும், 6 "**एक एव जगत्स्वामी शक्तिमानच्युतः प्रभुः**" (ஏக ஏவ ஜகத்ஸ்வாமீ ஶக்திமாநச்யுத: ப்ரபு:) என்றும், அவரவர்கள் ஸர்வேச்வரனாலே ஸம்ஹார்யரென்றும், 7 "**यन्नाभिपद्मादभवन्महात्मा प्रजापतिः**" (யந்நாபிபத்மாதபவந்

வியாக்கியானம்:—(நாராயணன் படைத்தான் நான்முகனை.... என்னும் சொல்) 1. "நாராயணன் ஒருவனே (ஆதியில்) இருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை" என்று மஹோபனிஷத்திலும், "மேலான சோதியும் நாராயணனே" என்று நாராயண ஸூக்தத்திலும், 3. "நாராயணனிடத்திலே லயிக்கின்றன" என்று நாராயணோபனிஷத்திலும் 4. "விச்வாத்மாவான பரமாத்மா ஒருவனே (மஹாப்ரளயத்தில்) விஞ்சி நிற்கிறான். அவனே ஸர்வேச்வரனான நாராயணன்" [பாரதம்] என்றும், 5. "ஸ்ருஷ்டிஸ்தித்யந்த கரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம்। ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந:॥" [ஜனார்த்தனன் அந்த பகவான் ஒருவனே ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யும் ப்ரஹ்மவிஷ்ணுசிவநாமங்களை அடைகிறான்.] [வி. பு. (1-2-66)] என்றும், 6. "சக்திமானாய், அழிவற்றவனாய், ஈச்வரனாயுள்ள அச்யுதன் ஒருவனே ஜகத்ஸ்வாமியாவான்" என்றும் பாரத விஷ்ணுபுராணாதிகளான உபப்ருஹ்மணங்களிலும் ப்ரஹ்மருத்ராதிகள் நாராயணனாலே ப்ரளயகாலத்தில் ஸம்ஹரிக்கப்படுபவர்கள் என்று சொல்லப்பட்டது.

7. "யந்நாபிபத்மாதபவந் மஹாத்மா ப்ரஜாபதிர் விச்வஸ்ருட் விச்வரூப:।
தமேவ விதித்வா திமருத்யுமேதி நாந்ய: பந்தா வித்யதேऽயநாய ॥"

[எவருடைய திருநாபிக்கமலத்திலிருந்து விச்வஸ்ரஷ்டாவாய், விச்வரூபராய் மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ, அவரை அறிந்தால் ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறான்; மோக்ஷமடைய வேறு வழி

மஹாத்மா ப்ரஜாபதி:) 8 "नारायणाद्ब्रह्मा जायते। नारायणाद्रुद्रो जायते।" (நாராயணுத் ப்ரஹ்மா ஜாயதே நாராயணுத் ருத்ரோ ஜாயதே) 9 "विरूपाक्षाय ब्रह्मणः पुत्राय ज्येष्ठाय श्रेष्ठाय" (விரூபாக்ஷாய ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய ச்ரேஷ்டாய) என்றும், 10 "ब्रह्मणश्चापि संभूतः शिव इत्यवधार्यताम्" (ப்ரஹ்மணஶ்சாபி ஸம்பூத: ஶிவ இத்யவதார்யதாம்) என்றும் அவரவர்கள் எம்பெருமானுலே ஸ்ருஜ்யர் என்றும் சொல்லப்படுகிற வேதார்த்தங்களை ஸர்வாதிகாரமாம்படி "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும், தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்,—யான்முகமாய், அந்தாதிமேலிட்டறிவித்தேனும்பொருளைச், சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து" என்று உபக்ரமித்து, "இனியறிந்தேன்" என்று தலைக்கட்டிலும் "நற்கிரிசை நாரணன் நீ" என்றிறே அருளிச்செய்தது. அத்தையாயிற்று "நாராயணன் படைத்தான் நான்முகனை நான்முகனுக்கோரார் சிவன் பிறந்தானென்னும் சொல்" என்கிறது. (என்னும்) என்று வேதாந்தப்ரஸித்தி தோற்றச் சொல்லுகிறது.

யில்லை] என்று மஹோபனிஷத்திலும், 8. "நாராயணனிடமிருந்து பிரமன் பிறக்கிறான்; நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டாகிறான்" என்று நாராயணோபனிஷத்திலும் 9. "ப்ரஹ்மாவின் புத்திரனாய், ஜ்யேஷ்டனாய், ச்ரேஷ்டனான விரூபாக்ஷனுக்கு" என்று ஸாமவேதத்திலும்,

10. "யத் தத் பத்மமபூத் பூர்வம் தத்ர ப்ரஹ்மா வ்யஜாயத।
ப்ரஹ்மணஶ்சாபி ஸம்பூத: ஶிவ இத்யவதார்யதாம்॥

[(பகவானுடைய உந்தியிலிருந்து) யாதொரு தாமரை முன் உண்டாயிற்றோ அதில் பிரமன் பிறந்தான்; பிரமனிடமிருந்தே சிவன் பிறந்தனென்று அறியத்தக்கது.] என்று மஹாபாரதத்திலும் அந்த ப்ரஹ்மருத்ரர்கள் ஸ்ருஷ்டிகாலத்தில் பகவானுலே ஸ்ருஷ்டிக்கப்படுகின்றனர் என்றும் உரைக்கப்பட்டது. ருத்ரன் ப்ரஹ்மாவினுலே ஸ்ருஷ்டிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும், ப்ரஹ்மாவுக்கும் நாராயணன் காரணனுகையாலும், ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாயிருந்து பகவானே ருத்ரனைப் படைக்கையாலும், "நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறான்" என்று சொல்லத் தட்டில்லை. ஒரு கல்பத்

"சொல் சீரார் மொழியாவது,"—தமிழுக்கு அவயவமாகச் சொல்லுகிற சொற்சீர்களாலே ஆர்ந்த மொழியென்னுதல்; "என்னும் சொல்" என்று சொல்லப்படுவதுமாய், "சீரார்மொழி" என்று "சீர் கலந்த சொல்" என்கிறபடியே கல்யாணகுண ப்ரசுரமான மொழியென்னுதல். (மொழி செப்பி) ஏவம்விதமான நான்முகன் திருவந்தாதி ப்ரபந்தத்தை அநுஸந்தித்து. (வாழலாம்) உஜ்ஜீவிக்கலாம். (நெஞ்சே) மநஸ்ஸே! நீ ஸஹகரிக்கவேணும்.

அதாவது:—(மழிசைப் பரனடியே வாழ்த்து) ப்ரபந்தவக்தாவான திருமழிசையாழ்வார் திருவடிகளையே ஸ்தோத்ரப்பண்ணு. "இடம் கொண்ட கீர்த்தி மழிசைக் கிறைவன் இணையடிப்போது" என்னும்படி நிரதிசயபோக்யமாயிருக்கிற இத்தையே விரும்பிப்போரு. "மொய் பூ"

தில் பிரமனிடமிருந்தும் மற்றொரு கல்பத்தில் நாராயணனிடமிருந்து நேராகவும் ருத்ரன் பிறப்பதாகவும் கொள்வதுண்டு. இந்த வேதார்த்தங்களை எல்லாரும் அறியும்படி "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்று முதற்பாட்டிலே ஆரம்பித்து "இனியறிந்தேன்" என்னும் கடைசிப் பாட்டிலும் "ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் நற்கிரிசை நாரணன் நீ" என்று அருளிச்செய்தார் திருமழிசையாழ்வார். அதையே "நாராயணன்........என்னும் சொல்" என்னும் இரண்டடிகளும் உரைக்கின்றன. 'என்னும்' என்னும் பதம் மேலே எடுத்த ச்ருதிஸ்ம்ருதிகளில் ப்ரஸித்தியைச் சொல்லுகிறது.

(சொல் சீரார் மொழி) பாட்டுக்கு லக்ஷணமாகச் சொல்லுகிற சொற்சீர்கள் நிறைந்த மொழி என்று ஒரு பொருள். "சொல்லப்படுவதாய் நற்குணங்கள் நிறைந்த வார்த்தை" என்று மற்றொரு பொருள். (மொழி செப்பி) இப்படிப்பட்ட நான்முகன் திருவந்தாதி ப்ரபந்தத்தைச் சொல்லி, (வாழலாம்) உய்ந்துபோகலாம். (நெஞ்சே) மநஸ்ஸே! நீ உதவிசெய்யவேணும்.

உதவிசெய்வது எப்படி யெனில்:—(மொய் பூ மழிசைப் பரனடியே வாழ்த்து) இப்பிரபந்தத்தை அருளிச்செய்த திருமழிசையாழ்வாருடைய திருவடிகளையே துதிப்பாயாக. "இடம் கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் இணையடிப்போது" [இராமா-12] என்று அமுதனார் அருளியபடியே மிகவும் இனிதாயிருக்கிற இத்திருவடிகளையே

பூ என்று அழகாகவுமாம். அப்போது மிக்க அழகு என்றபடி. "மொய் பூ" என்று மழிசைக்கு விசேஷணமாதல், திருவடிகளுக்கு விசேஷணமாதல், படிக்கு விசேஷணமாதல், அடிக்கு விசேஷணமாதல்.

இப்படி வைலக்ஷண்யத்தையுடைய திருமழிசையாழ்வார் திருவடிகளையே மங்களாசாஸனம் பண்ணு என்கிறது. அவர் "வாழிகேசனே" என்றும், "மாலை வாழ்த்தி வாழ்மினோ" என்றும் பகவத் விஷய மங்களாசாஸனப்ரஸம்ஸை பண்ணினாலும், நீ ஆழ்வாரடி விடாமல் மங்களாசாஸனம் பண்ணு என்கிறது.

நான்முகன் திருவந்தாதித் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.
பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

விரும்புவாயாக. "மொய் பூ" என்னும் பதங்களை திருமழிசையாழ்வாருடைய திருவடிக்கும் விசேஷணமாக்கலாம்; மழிசை என்னும் க்ஷேத்திரத்திற்கும் (படிக்கும்) விசேஷணமாக்கலாம். அடிக்கு விசேஷணமாகும்போது 'நெருங்கிய பூ' என்றும், 'அழகிய பூ' என்றும் இரண்டு வகையாகப் பொருள். 'மொய்' என்னும் பதம் நெருக்கத்தையும் அழகையும் குறிக்கும். "நெருங்கிய (அல்லது அழகிய) பூக்களை உடைய திருவடிகள்" என்கை. 'பூ' என்னும் பதமும் அழகைக்குறிக்கும், அப்போது "மிகவும் அழகையுடைய திருவடிகள்" என்றபடி. 'மழிசைப்பதிக்கு விசேஷணமானபோது "மிக்க அழகையுடைய மஹீஸாரக்ஷேத்ரம்" என்றோ "அழகிய (அல்லது நெருங்கிய) புஷ்பங்களையுடைய மழிசை" என்றோ கொள்வது.

. .(அடியே வாழ்த்து) இப்படிப்பட்ட பெருமையையுடைய திருமழிசையாழ்வார் திருவடிகளையே மங்களாசாஸனம் செய். அவர் "வாழிகேசனே" [திருச்சந்-61] என்றும், "மாலை வாழ்த்தி வாழ்மினோ" [திருச்சந்-68] என்றும் பகவானைப்பற்றிய மங்களாசாஸனத்தையும் துதியையும் செய்தாலும், நீ ஆழ்வாரடிக்கே விடாமல் பல்லாண்டு பாடு. (பரனடியே வாழ்த்து) அவர் "ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்" என்றும், "குணப்பரனே!" என்றும் எம்பெருமானிடத்திலேயே பரத்துவ புத்தியைப் பண்ணினாலும், நீ ஆழ்வாரிடத்திலேயே பரத்துவ புத்தியைப் பண்ணி வாழ்த்து.

தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

நான்முகன் திருவந்தாதி வ்யாக்யாநம்.

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே ।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணும் ஸுலப: ஸ்ரீதரஸ் ஸதா ॥

ப்ரவேசம்:—முதலாழ்வார்கள் அநுபாவ்யவஸ்துவை நிஷ்கர்ஷிக்க, அதுக்குக் களைபிடுங்குகிறார். க்ஷேத்ரஜ்ஞர் பக்கலிலே ஈச்வரத்வ புத்தியைப் பண்ணி அநர்த்தப்படுகிற ஸம்ஸாரிகளுக்கு ஈச்வரனுடைய பரத்வத்தை உபபாதித்து அவர்கள் அநீச்வரர் என்கிறார்.

1. நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்–யான்முகமாய்
அந்தாதிமேலிட்டறிவித்தேன் ஆழ்பொருளைச்
சிந்தாமற் கொண்மின் நீர் தேர்ந்து.

பதவுரை:—நாராயணன்–*ஸ்ரீமந் நாராயணன்*, நான்முகனை படைத்தான்—*நான்கு முகங்களையுடைய பிரமனைப் படைத்தான்*; நான்முகனும்—*அப்பிரமனும்*, தான்முகமாய்—*தானே முக்கியனாய்க்கொண்டு*, சங்கரனை—*உருத்திரனை*, தான்படைத்தான்—*தானே ஸ்ருஷ்டித்தான்*; யான் முகமாய்—*நான் முக்கியனாயிருந்துகொண்டு*, ஆழ்பொருளை—*அறிய அரிதான இவ்வர்த்தத்தை*, அந்தாதி மேல் இட்டு—*திருவந்தாதியான பிரபந்தத்திலே வைத்து*, அறிவித்தேன்—*உபதேசித்தேன்*; நீர்–(இதைக் கேட்கும்) *நீங்கள்*, தேர்ந்து–*ஆராய்ந்து*, சிந்தாமல்–*இவ்வரும்பொருள் சிதறிவிடாமல்*, கோள்மின்–*மனத்திற்கொள்ளுங்கள்*.

முதற்பாட்டு அவ:—"ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநரானாற்போலே தந்நிவ்ருத்திக்கு ப்ரதானனானேன் நான்" என்கிறார்.

வ்யா:—(நான்முகனை நாராயணன் படைத்தான்) ஸர்வேச்வரன் ஸ்ருஷ்டிக்கு உபகரணமாக நாலு முகத்தையுடைய ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான். (நான்முகனும் தான் முகமாய்) பின்பு ப்ரஹ்மாவும் தானே ப்ரதானனாய் ருத்ரனை ஸ்ருஷ்டித்தான். (யான்முகமாய் இத்யாதி) இப்படி துரவகாஹமான பொருளை நானே அநுபவித்துப்போகில் ஸம்

ஸூரிகள் அநர்த்தப்படுவரே என்று செம்பிலும் கல்லிலும் வெட்டுமா போலே ப்ரபந்தத்திலே இட்டு இதுக்கு ப்ரதாநனாய் அறிவித்தேன். (ஆழ்பொருளை) என்று நசிக்கிற பொருளை என்றுமாம். (நீர் தேர்ந்து சிந்தாமல் கொண்மின்) ஸம்ஸாரத்தினுடைய தண்மையையும் நான் சொன்ன அர்த்தத்தினுடைய அருமையையும் உணர்ந்து இவ்வர்த்தம் மங்காமல் புத்திபண்ணுங்கோள்.

திவ்யப்ரபந்த ஸாரம்
நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்.

श्रीभक्तिसारसूरिं श्रीकृष्णसूरिमहागुरुं नत्वा।
करोमि हृद्यां व्याख्यां 'चतुर्मुखान्तादि' दिव्यगाथायाः॥

[பக்திஸாரர் என்னும் திருமழிசையாழ்வாரையும், பெரியவாச்சான் பிள்ளையென்னும் பேராசிரியரையும் வணங்கி, நான்முகன் திருவந்தாதியாகிற திவ்யப்ரபந்தத்திற்கு அழகியதோர் வியாக்கியானத்தை இயற்றுகிறேன்.]

திவ்ய-ப்ரவேசம்:—இப் பிரபந்தத்தை அருளியவர் திருமழிசையாழ்வாராவர். 'நான்முகன்' என்று தொடங்குவதாலும் அந்தாதித் தொடையால் அமைந்திருப்பதாலும் "நான்முகன் திருவந்தாதி" என்று பெயர்பெற்றுள்ளது இப்பிரபந்தம். இவ்வாழ்வாருடைய மற்றொரு பிரபந்தம் திருச்சந்த விருத்தமாகும். "ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம்" என்று ஸ்தாபிப்பதிலேயே ஊற்றமுடையவர் இவ்வாழ்வார். ஸகல வேதார்த்தங்களையும் உட்பொதிந்துகொண்டிருப்பவை இவருடைய பாசுரங்கள். இப்பிரபந்தத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்தருளியுள்ளார். மற்ற திருவந்தாதி வியாக்கியானங்களைப்போல் இதுவும் அதிஸங்க்ரஹமாயிருக்கிறது. திருவந்தாதி வியாக்யானங்களை ஆச்சான்பிள்ளை மிகவும் முதிர்ந்த வயதிலே அருளிச்செய்தார் என்று கூறுவர். ஆச்சான் பிள்ளையின் வியாக்கியானம் அதிஸங்க்ரஹமாயிருக்கையால், அந்த வியாக்கியானத்தை விவரிக்கும் நோக்கத்துடன் இவ்வியாக்கியானம் எழுதப்படுகிறது. ஸாரக்ராஹிகளான பெரியார்கள் குற்றம் நீக்கிக் குணம் கொள்வார்களாக.

"வையம் தகளியா" என்றும் "அன்பே தகளியா....ஞானச்சுடர் விளக்கேற்றினேன்" என்றும் பொய்கை பூதத்தாழ்வார்கள் விளக்கேற்றிக்காட்ட, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று தாங்கள் எம்பெருமானை அனுபவித்தபடிக்குப் பாசுரமிட்டருளினர் பேயாழ்வார். முதலாழ்வார்களின் மூன்று அந்தாதிகளும் பகவதனுபவபரமாயிருக்கும். நாராயணனைத் தாங்கள் அனுபவிப்பதின்மூலம் "அனுபவிக்கத்தக்கவன் அவனே" என்று காட்டினார்கள் அவர்கள். இவர் அவ்வநுபவமாகிற பயிருக்கு களை பிடுங்குகிறார். பகவதநுபவத்திற்குக் களையாவது:—இதர தேவதைகளிடத்திலே பரத்துவபுத்தி பண்ணுகை. விஷ்ணுபரத்வஜ்ஞானம் இல்லாதார்க்கு வைஷ்ணவத்வமே இல்லையாகையால் பகவதனுபவத்திற்கு யோக்யதையே இல்லாமலிருக்கும். ப்ரயோஜநாந்தரபரர்க்கும் பகவதனுபவத்திற்கு யோக்யதை உண்டு. தேவதாந்தபரபரர்க்கு, இதர தேவதைகளின் ஸம்பந்தம் அறுகிறவரையில் பகவதனுபவத்திற்கு யோக்யதையே இல்லை. ஆகையால் இதுவே பகவதநுபவத்திற்கு ப்ரதானமான களையாயிருக்கும். இதையே "ஓர் ஊனம்" (ஒப்பற்ற தோஷம்) என்றார் நம்மாழ்வாரும். இப்பிரபந்தத்தில் இக்களையைப் பிடுங்குகிறார் பக்திஸாரராகிற திருமழிசையாழ்வார். உருவின வாளை உறையிலிடாதே தேவதாந்தரபரத்வபுத்தியாகிற களையை வெட்டியெறியுமவரன்றோ இவர். "அதுக்குக் களை பிடுங்குகின்றார்" என்ற ஆச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திக்கு "அநுபாவ்ய வஸ்துவான நாராயணனுக்குக் களையாயிருக்கும் தேவதாந்தரங்களிடம் பரத்வ புத்தியை அழிக்கிறார்" என்றும் பொருள்கொள்ளலாம்.

முதற்பாட்டு-திவ்ய-அவ:—அதில், முதற்பாட்டிலே, பேசநின்ற சிவனும், அவனுக்கும் தகப்பனான பிரமனும் ஒரு காலத்தில் படைக்கப்பட்ட ஜீவர்கள் என்பதே மறைகளின் முடிவு என்பதை உபதேசித்து, "அவர்கள் ஸம்ஸாரத்தை விருத்திசெய்ய முக்கியர்களானாற்போலே, நான் ஸம்ஸாரத்தைப் போக்கடிக்கக் கங்கணங்கட்டிக்கொண்டவனாய் உங்களுக்கு இவ்வரும்பொருளை உபதேசிக்கிறேன். இதை அறிந்து உய்யுங்கள்" என்று பிறரை நோக்கிக் கூறுகிறார்.

திவ்ய-வ்யா:--(நான்முகனை நாராயணன் படைத்தான்) நாரங்கள் எனப்படும் நரஸமூஹங்களுக்கு (நித்யபதார்த்த ஸமூஹங்களுக்கு) இருப்பிடமாயிருப்பதாலும், அவைகளை இருப்பிடமாய் உடைத்தாயிருக்கையாலும், நாரங்களாகிற ஜீவஸமூஹத்திற்கு ப்ராப்யப்ராபகங்களாயிருப்பதாலும் நாராயணன் என்னும் அஸாதாரணமான திருநாமத்தையுடைய ஸர்வேச்வரன், நான்குதிக்கிலும் வியாபரித்துஸ்ருஷ்டித்தொழிலை நடத்துகைக்கும், ஸ்ருஷ்டிக்கு உதவிசெய்யும் நாலு வேதங்களையும் உச்சரிப்பதற்கும் உபயோகியாயிருக்கும் நாலு முகங்களையுடைய பிரமனைப் படைத்தான். (நாராயணன்) ஸர்வவ்யாபியாகவும், ஸர்வதாரகனுகவும், மோக்ஷப்ராப்யனுகவும், ப்ராபகனுகவும் இருக்கும் நிலைகளைக் காட்டுவதாய், பரமாத்மாவுக்கு அஸாதாரணமாயுள்ளதான திருநாமம். (நான்முகனை) ஸ்ருஷ்டித்தொழில் ஒன்றையே நடத்துமவன் என்பதையும், இந்திரியாதீனமான வியாபாரங்களை உடையவன் என்பதையும் காட்டும் பெயர். (படைத்தான்) அண்டம் முழுவதையும் ஸ்ருஷ்டிப்பவனையும் தான் ஸ்ருஷ்டித்தான். "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே" [நாராயணனிடமிருந்து பிரமன் பிறக்கிறுன்] என்று நாராயணோபநிஷத்திலும், "தத்ர ப்ரஹ்மா சதுர்முகோऽஜாயத" [அங்கு நான்முகனுன பிரமன் பிறந்தான்] என்று ஸுபாலோபநிஷத்திலும், "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" [எவனெருவன் பிரமனை முன் படைத்தானே....] என்று நாராயணவல்லியிலும், "ப்ரஹ்மா தேவாநாம் ப்ரதமஸ் ஸம்பபூவ" [பிரமனே தேவர்களுக்குள் முதலில் பிறந்தான்.] என்று முண்டகோபநிஷத்திலும், "யந்நாபிபத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதி:"] எவனுடைய நாபிக்கமலத்திலிருந்து மஹாத்மாவான பிரமன் உண்டாயினனோ....] என்று மஹோபநிஷத்திலும், "ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமபவத்" [ப்ரஜாபதியானவன் தாமரையிதழில் உண்டானுன்.] என்று ச்ருத்யந்தரங்களிலும் ஸுப்ரஸித்தமான பிரமனின் பிறப்பை அருளிச்செய்கிறுர். (நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான படைத்தான்) அந்தப் பிரமனும் தானே முக்கியனுய் நின்று சிவனை ஸ்ருஷ்டித்தான். "விரூபாக்ஷாய ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய" [ப்ரஹ்மாவின் ஜ்யேஷ்டபுத்திரனுன விருபாக்ஷனுக்கு] "த்ர்யக்ஷ: ஶூலபாணி:

புருஷோऽஜாயத" [சூலபாணியாய் முக்கண்ணனை புருஷன் பிறந்தான்] "ஸம்வத்ஸரே குமாரோऽஜாயத" [ஒரு ஸம்வத்ஸரத்தில் பிரமனுக்கு ருத்ரனாகிற குமாரன் பிறந்தான்.] முதலான வேதவாக்கியங்களிற் சொன்ன அர்த்தத்தை அநுஸந்திக்கிறார். "நாராயணாத் ருத்ரோ ஜாயதே" [நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டாகிறான்] என்று நாராயணோபநிஷதாதிகளில் ருத்ரன் நாராயணனிடமிருந்தே உண்டானதாகச் சொல்லியிருக்கின்றதே எனில்: மற்ற வேதவாக்கியங்களை அநுஸரித்து, பிரமனை சரீரமாகக்கொண்ட நாராயணனிடமிருந்து சிவன் உண்டாகிறான் என்பதாகக் கொள்ளுகிறோம். அடுத்துள்ளதான "நாராயணாதிந்த்ரோ ஜாயதே" [நாராயணனிடமிருந்து இந்திரன் உண்டாகிறான்.] என்னும் வாக்கியத்திற்கு இப்படியேயன்றோ பொருள்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகையால் இங்கு "நான்முகனும் சங்கரனைத் தான்படைத்தான்" என்று ஆழ்வார் அருளியதே ஸகலச்ருதிகளுக்கும் தாத்பர்யமாகும். அன்றிக்கே, ஒரு கல்பத்தில் நாராயணனிடமிருந்தும், மற்றொரு கல்பத்தில் பிரமனிடமிருந்தும் சிவன் பிறந்ததாகக் கொள்வதுமுண்டு. இதிஹாஸபுராணங்களில் ப்ரஹ்மருத்ரஸ்ருஷ்டியைச் சொல்லுமிடங்கள் நூற்றுக் கணக்காக உண்டு. ஆங்காங்கு கண்டுகொள்வது. (தான்முகமாய்ப் படைத்தான்) "லலாடாத் க்ரோதஜோ ருத்ர:" என்கிறபடியே தன் நெற்றியிலிருந்து படைத்தான் என்றும் கொள்ளலாம்.

(யான்முகமாய் அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளை) பிரமன் ஸம்ஸாரவ்ருத்திக்கு ப்ரதானனாய் நின்று ஸ்ருஷ்டித்தாப்போலே, நான் ஸம்ஸாரநிவ்ருத்திக்கு முக்கியனாய் நின்று இவ்வரும்பொருளை அறிவித்தேன். (அந்தாதி மேலிட்டு அறிவித்தேன்) செம்பிலும் கல்லிலும் வெட்டுமாபோலே அந்தாதித் தொடையாலமைந்த பிரபந்தத்திலே இட்டு அறிவித்தேன். (ஆழ்பொருளை அறிவித்தேன்) ச்ருதி ஸ்ம்ருதிகளாகிற ஸமுத்ரத்திலே பொதிந்துகிடக்கும் ரத்தினங்கள் போன்ற இவ்வர்த்தங்களை, ஸம்ஸாரிகள் படும் அநர்த்தத்தைக் கண்டு பொறாமல், தூளிதானம் செய்தேன். (ஆழ்பொருளை அந்தாதி மேலிட்டு அறிவித்தேன்) ரத்தினங்களைப் பொன்னிலே வைத்துப் பதித்ததுபோலேயிருக்கை. (ஆழ்பொருளை) நசிக்கிற பொருளை என்றும் பொருள்கொள்ளலாம். பிரமருத்திரர்களின் பிறப்பைச்

சொன்னதிலிருந்தே அவர்கள் நசிக்கிறவர்கள் என்று சொல்லப்பட்டதாகிறபடியால், 'ப்ரஹ்மருத்ராதிகள் அனைவரும் அழியும் பொருள்களே என்பதை அறிவித்தேன்' என்கிறார். (நீர் தேர்ந்து சிந்தாமல் கொண்மின்) ஸம்ஸாரத்தின் தாழ்மையையும், நான் சொன்ன அர்த்தத்தின் அருமையையும் அறிந்து, இவ்வர்த்தம் அழிந்துவிடாமல், இதைச் சிந்தியுங்கள். (சிந்தாமல் கொண்மின்) நான் தானம்செய்த ரத்தினத்தை நழுவவிடாதே கொள்ளுங்கள்!

2. தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பர்
ஆரு மறியா ரவன்பெருமை—ஓரும்
பொருள் முடிவு மித்தனையே யெத்தவம்செய் தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்.

பதவுரை:—தேருங்கால்—விசாரித்தால், தேவன்—பரதேவதை, ஒருவனே என்று உரைப்பர்—ஒருவனே என்று (ஞானிகள்) சொல்லுவர்கள். அவன் பெருமை—அந்த ஸர்வேச்வரனுடைய பெருமையை, ஆரும் அறியார்—ஒருவரும் அறியார்கள்; ஓரும் பொருள் முடிவும் இத்தனையே—(ச்ருதிஸ்ம்ருதிகளிலே) ஆராயப்படும் அர்த்தத்தின் நிர்ணயமும் இவ்வளவே; எத் தவம் செய்தார்க்கும்—எவ்விதமான ஸாதனங்களை அனுஷ்டித்தவர்களுக்கும், அருள் முடிவது—அருளின் முடிவாகிற பலன் உண்டாவது, ஆழியான் பால்—சக்கரபாணியான எம்பெருமானிடமிருந்தே.

• • பெரி-வ்யா-இரண்டாம்பாட்டு-(தேருங்காலித்யாதி) "**तत्त्वं जिज्ञासमानानां हेतुभिस्सर्वतोमुखैः। तत्त्वमेको महायोगी हरिर्नारायणः स्मृतः॥**" (தத்த்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ் ஸர்வதோமுகை:। தத்த்வமேகோ மஹாயோகீ ஹரிர் நாராயண: ஸ்ம்ருத:॥) என்னும்படியே விசாரிக்கும்போது ஸர்வேச்வரன் ஒருத்தனே என்று சொல்லுவர்கள். (ஆருமறியாரவன் பெருமை) ஒருத்தரும் அவனுடைய பெருமையைப் பரிச்சேதிக்க அறியார்கள். (ஓரும் பொருள் முடிவுமித்தனையே) ச்ருதிஸ்ம்ருதிகளெங்கும் ஆராயும் அர்த்தத்தினுடைய நிர்ணயம் இவ்வளவே. (எத்தவமித்யாதி) எல்லா ஸாதநாநுஷ்டானம் பண்ணினவர்களுக்கும் அவற்றுக்கும் பலம் ஸர்வேச்வரன் பக்கலில் நின்றுமென்கை.

திவ்ய-அவ:–ப்ரஹ்மருத்ரர்கள் நாராயணனால் படைக்கப்பட்ட ஜீவர்களே என்று இவர் உரைத்தது, ஸம்ஸாரிகளில் சிலர் "ப்ரஹ்மா விஷ்ணு சிவன் என்று ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யும் தேவர்கள் மூவர் என்று லோகப்ரஸித்தியுள்ளது. ஆகையால், இவர்கள் மூவருமே பரமாத்மா என்று கொள்ளுவதே பொருந்தியதாயிருக்க, நீர் நாராயணன் ஒருவனே பரமாத்மா என்னலாமோ" என்று கேட்க, அதற்குப் பதில் சொல்லுகிறார் இப்பாட்டில்.

வ்யா:–(தேருங்கால் தேவன் ஒருவனே என்றுரைப்பர்) ப்ரமாண யுக்திகளைக்கொண்டு ஆராயும்போது பரதெய்வம் ஒருவனே என்றும், அவன் ஸ்ரீமந்நாராயணனே என்றும் ஞானிகள் உரைப்பார்கள். ஈச்வரர் பலர் இருந்தால் அவர்களுக்குள் பரஸ்பரம் ஆஜ்ஞாபங்கம் நேரிட்டு ஒருவருக்கும் ஈச்வரத்வம் ஸித்தியாமல் போகும். ஆகையால் ஈச்வரன் ஒருவனேயாகவேண்டும். அவன் யாரென்று ச்ருதி ஸ்ம்ருதிகளைக்கொண்டு ஆராயும்போது ப்ரஹ்மருத்ராதி ஸகல சேதனரையும் அசேதனப்பொருள்களையும் படைத்தளித்து அழிப்பவனாய், அவற்றுக்கு அந்தர்யாமியாய் விளங்குமவனான நாராயணனே என்று விளங்கும். இப்படி ஆராய்ச்சி செய்த மஹர்ஷிகளும்

"தத்த்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ் ஸர்வதோமுகை: ।
தத்த்வமேகோ மஹாயோகீ ஹரிர் நாராயண: ஸ்ம்ருத: ॥"

[பலவிதமான காரணங்களால் பரதத்வத்தை அறியவிருப்புமவர்கள் மஹாயோகியாய், ஹரியென்று சொல்லப்படுமவனான நாராயணனையே ஒரே பரம்பொருளாக எண்ணுகிறார்கள்.] என்று நிர்ணயித்தார்கள். ஆகையால் நீங்கள் தேவர் மூவர் என்பது தவறு என்கிறார். "தேவன் ஒருவனே என்றீர். அவன் பெருமை எப்படிப் பட்டது?" என்று கேட்கச் சொல்லுகிறார் (ஆரும் அறியார் அவன் பெருமை) அவன் பெருமையை ஒருவரும் அளவிட்டறியார்கள். (ஓரும் பொருள் முடிவும் இத்தனையே) ச்ருதிஸ்ம்ருதிகளிலே ஆராயப்படும் அர்த்தங்களின் நிர்ணயமும் இவ்வளவே (தேவன் ஒருவனே....இத்தனையே) "திவ்யோ தேவ ஏகோ நாராயண:" [திவ்யனான நாராயணனாகிய தேவன் ஒருவனே] "ஈசதே தேவ ஏக" [தேவன் ஒருவனே சித்சித்துக்களை நியமிக்கிறான்.] "ஏகோ தேவஸ் ஸர்வபூதேஷு கூட:"

[எல்லா ஜீவராசிகளிலும் மறைந்து நிற்கும் தேவன் ஒருவனே] "ஏக: ஸ்வதந்த்ரோ ஜகதோ பபூவ" [ஜகத்துக்கு ஸ்வதந்த்ரஸ்வாமி ஒருவனே] "பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத்" [பூதங்களுக்கு ஒரே ஸ்வாமியாய் இருந்தான்.] "ஏ கோ ஹ வை நாராயண ஆஸீத்" [நாராயணன் ஒருவனே (முதலில்) இருந்தான்.] முதலான நூற்றுக் கணக்கான வேத வாக்கியங்களிலும், ஏக: ஶாஸ்தா ந த்விதீயோऽஸ்தி கஶ்சித்" [ஈச்வரன் ஒருவனே; வேறொருவனுமில்லை.] "ஏக ஏவ ஜகத் ஸ்வாமீ ஶக்திமாநச்யுத: ப்ரபு:" [சக்திமானாய், ப்ரபுவான ஜகத்பதி அச்யுதன் ஒருவனே.] "ஏகஸ் திஷ்டதி விச்வாத்மா ஸ ச நாராயண:" [விச்வாத்மாவான நாராயணன் ஒருவனே விஞ்சி நிற்கிறான்.] "ஏக ஏவ ஜநார்த்தந:" [முத்தொழிலையும் நடத்துமவன் ஜநார்த்தனன் ஒருவனே] முதலான ஆயிரக்கணக்கான ஸ்ம்ருதிவாக்கியங்களிலும் 'தேவன் ஒருவனே' என்னும் அர்த்தம் சொல்லப்பட்டதன்றோ. (ஆருமறியார் அவன் பெருமை ஓரும் பொருள் முடிவுமித்தனையே) "க இத்தா வேத யத்ர ஸ:" [அவனுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை எவனறிவான்.] "ஸோ அங்கவேத யதி வா ந வேத" [(தன் பெருமையை) அவன் தானே அறிவானோ அறியானோ] "யஸ்யாமதம் தஸ்ய மதம்" [எவனுக்கு ப்ரஹ்மம் அறியப்பட்டதல்லவோ அவனுக்கு அது அறியப்பட்டதாகிறது.] "யதோ வாசோ நிவர்த்தந்தே" [எவனை அடையமுடியாமல் வாக்குகள் திரும்புகின்றனவோ....] "ந தே விஷ்ணோ ஜாயமாநோ ந ஜாதோ தேவ மஹிம்ந: பரமந்தமாப" (பஹ்வ்ருசம்) [விஷ்ணுவே! பிறக்கின்றவனும், பிறந்தவனும், (பிறக்கப்போகுமவனும்) உன்னுடைய மஹிமையின் மேலெல்லையை அறிவதில்லை.] "ஏதாவாநஸ்ய மஹிமா அதோ ஜ்யாயாம்ஶ்ச பூருஷ:" [இவ்வளவோ அவன் மஹிமை? இதைக் காட்டிலும் மேலானவனன்றோ பரமபுருஷன்.] என்று வேதங்களிலும்,

"த்வம் ஹி லோககதிர் தேவ ந த்வாம் கேசந ஜாநதே"

[தேவனே! நீயே லோககதியாவாய்; உன்னை எவரும் அறிவதில்லை.] என்று ஸ்ரீ ராமாயணத்திலும்,

"ப்ரஜாபதிஞ்ச ருத்ரஞ்சாப்யஹமேவ ஸ்ருஜாமி வை।
தௌ ச மாம் ந விஜாநீதோ மம மாயாப்ரமோஹிதௌ॥"

[பிரமனையும் உருத்திரனையும் நானே ஸ்ருஷ்டிக்கிறேன். என்னுடைய மாயையினாலே மயக்கப்பட்ட அவர்களும் என்னை அறிவதில்லை.] என்றும்.

"ந ஸ ஶக்யஸ் த்வயா த்ரஷ்டும் மயாந்யைர் வாபி ஸத்தம।
ஸர்வேஷாம் ஸாக்ஷிபூதோऽஸௌ ந க்ராஹ்ய: கேநசித் க்வசித்॥"

[குழந்தாய் ருத்ரனே! அந்தப் பரமபுருஷன் உன்னாலும், (பிரமனாகிற) என்னாலும் மற்றெவராலும் அறியத்தக்கவனல்லன். எல்லாருக்கும் ஸாக்ஷியாய் நின்று அறிகிறானிவன். ஒருவராலும் ஒருபோதும் அறியத்தக்கவனல்லன் இப்பரமாத்மா.] என்றும் பாரதம் மோக்ஷ தர்மத்திலும்,

"ந யஸ்ய ரூபம் ந பலப்ரபாவௌ
ந ச ஸ்வபாவ: பரமஸ்ய பும்ஸ:।
விஜ்ஞாயதே ஶர்வபிதாமஹாத்யைஸ்
தம் வாஸுதேவம் ப்ரணமாம்யசிந்த்யம்॥"

[எந்தப் பரமபுருஷனுடைய ஸ்வரூபமும், பலப்ரபாவங்களும், ஸ்வபாவமும், ப்ரஹ்மருத்ராதிகளாலும் அறியப்படுவதில்லையோ, அறியத்தகாதவனான அந்த வாஸுதேவனை வணங்குகிறேன்.] என்று விஷ்ணு தர்மத்திலும்,

"யந்நாயம் பகவாந் ப்ரஹ்மா ஜாநாதி பரமம் பதம்।
தந்நதா: ஸ்ம ஜகத்தாம தவ ஸர்வகதாச்யுத॥"

[அச்சுதனே! பகவானான பிரமன் பரமப்ராயமாய், ஜகதாதாரமாயிருக்கும் எந்த உன் ஸ்வரூபத்தை அறியானோ அதை வணங்குகிறோம்.] என்றும்,

"யந் ந தேவா ந முநயோ ந சாஹம் ந ச ஶங்கர:।
ஜாநந்தி பரமேஶஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம்॥"

[பரமப்ராப்யனாய், பரமேச்வரனான எவனை தேவர்களும், முனிவரும் (பிரமனான) நானும், சங்கரனும் அறியோமோ, அந்த விஷ்ணுவை வணங்குகிறோம்.] என்றும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும்,

"அத்யாபி மாம் ந ஜாநந்தி ருத்ரேந்த்ராஸ் ஸபிதாமஹா:"

[ப்ரஹ்மருத்திரேந்திரர்கள் இன்றும் என்னை அறிகிறார்களல்லர்.] என்று வராஹபுராணத்திலும்,

"நாஹம் ப்ரகாஶஸ் ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத: ।
மூடோऽயம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம் ॥"

[யோகமாயையால் மூடப்பட்ட நான் எல்லாருக்கும் வெளியாக மாட்டேன். பிறப்பற்றவனாய் அழிவற்றவனான என்னை அறிவற்ற இவ்வுலகம் அறியாது.] என்றும், "மாம் து வேத ந கஶ்சந" [என்னை ஒருவனும் அறியான்] என்றும் கீதையிலும், ப்ரஹ்மருத்ராதிகளாலும், ஸநகாதிமஹர்ஷிகளாலும், வேதங்களாலும், இவையெல்லாவற்றுக்கும் நிர்வாஹகனான அவன் தன்னாலும் அவன் பெருமை அறியப்படமாட்டாது என்னுமர்த்தம் அறிவிக்கப்பட்டதன்றோ. "ப்ரஹ்மருத்ராதிகளும் தங்களைக் குறித்துத் தவம் செய்வார்க்கு அருப்பெரும் பலன்களை அளித்ததாகக் கேள்விப்படுகிறோம். ஆகையால், அவர்களும் பரம்பொருளே என்று கொள்ளலாகாதோ" என்று கேட்கச்சொல்லுகிறார்: (எத்தவம் செய்தார்க்கும் அருள் முடிவது ஆழியான் பால்) எப்படிப்பட்ட தவங்களைச் செய்தவர்களுக்கும் பலன் ஸுதர்சனதாரியான பகவானிடமிருந்தே கிட்டுகிறது. ப்ரஹ்மருத்ராதிகளைக் குறித்துச் செய்யும் ஸாதநாநுஷ்டானங்களுக்கும் அவர்களுக்கு அந்தர்யாமியான நாராயணனிடமிருந்தே பலன் கிடைக்கிறது என்கிறார்.

"யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயாऽர்ச்சிதுமிச்சதி ।
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ॥
ஸ தயா ச்ரத்தயா யுக்தஸ் தஸ்யாராதநமீஹதே ।
லபதே ச ததः காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ॥"

[யாவர் சிலர் என்னுடைய சரீரமாயிருக்கும் சில தேவர்களை ச்ரத்தையுடன் பூஜிக்க விரும்புகிறார்களோ, அவர்களுடைய அந்த ச்ரத்தையை நானே நிலைபெறச்செய்கிறேன். அந்த ச்ரத்தையுடன் கூடிய அந்த ஜீவன் தன் இஷ்டதேவதையை ஆராதிக்கிறான். அந்த ஆராதனத்தாலே என்னாலே கொடுக்கப்பட்ட அந்தந்தப் பலன்களை அடைகிறான்.] என்று கீதையில் தானே சோதிவாய் திறந்து அருளிச்செய்தானன்றோ. (அருள் முடிவு அது) அருளினால் ஏற்படுவதாகிற அந்தந்த பலன்கள். "எத்தவம் செய்தார்க்கும்" என்றவிடத்திலுள்ள உம்மை (சகாரம்) யாலே யாரைக்குறித்துத் தவம் செய்யப்படுகிறதோ அந்த தெய்வங்களுக்கும் தாம் விரும்பும் பலன் ஸர்வேச்வரனிடமிருந்தே

உண்டாகிறது என்று உணர்த்தப்படுகிறது. (எத்தவம்....ஆழியான் பால் ஒரும் பொருள் முடிவுமித்தனையே) ச்ருதிஸ்ம்ருதிகளெங்கும் ஆராய்ந்தால் ஸாதநாநுஷ்டானம் செய்வார்க்கெல்லாம் பலனுண்டாவது நாராயணனிடமிருந்தே என்பது விளங்கும். "அஸ்ய தேவஸ்ய மீடுஷோ வயாவிஷ்ணோரேஷ ப்ரவ்ருதே ஹவிர்ப்பி: விதேஹி ருத்ரோ ருத்ரியம் மஹத்த்வம்" என்னும் பஹ்வ்ருச ச்ருதியில் விஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்ததாலேயே ருத்ரன் தன் பெருமையைப் பெற்றான் என்று சொல்லப்பட்டது.

"யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:।
புநஸ் த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுஶ்ரும:॥"

[கோடிஸஹஸ்ரயுகங்கள் விஷ்ணுவை ஆராதித்து நான்முகன் மூவுலகிற்கும் பதியாயிருக்கும் தன்மையை மறுபடி அடைந்தான் என்று கேள்விப்படுகிறோம்.] என்றும்,

"மயா ஸ்ருஷ்ட: புரா ப்ரஹ்மா மத்யஜ்ஞமயஜத் ஸ்வயம்।
தத்ஸ் தஸ்மை வராந் ப்ரீதோ ததாம்யஹமநுத்தமாந்॥
மத்புத்ரத்வஞ்ச கல்பாதௌ லோகாத்யக்ஷத்வமேவ ச॥"

[என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரமன் என் விஷயமான யாகத்தை முன்னொரு சமயம் அனுஷ்டித்தான். அதன்பிறகு அத்தால் பிரீதியடைந்த நான் 'கல்பாதியில் எனக்குப் புத்திரனாய்ப் பிறக்கை, லோகத்திற்குப் பதியாயிருக்கை' முதலான மேலான வரங்களை அவனுக்குக் கொடுத்தேன்.] என்றும்,

"மஹாதேவஸ் ஸர்வமேதே மஹாத்மா
ஹுத்வாத்மாநம் தேவதேவோ பபூவ".

[மஹாத்மாவான மஹாதேவர் ஸர்வமேதயாகத்தில் தன்னையே ஹோமம் செய்து தேவதேவரானார்.] என்றும் மஹாபாரதத்திலும்,

"ப்ரஹ்மாதயஸ் ஸுராஸ் ஸர்வே விஷ்ணுமாராத்ய தே புரா।
ஸ்வம் ஸ்வம் பதமநுப்ராப்தா: கேஶவஸ்ய ப்ரஸாதத:॥"

[பிரமன் முதலிய தேவர்களெல்லாம் ஆதிகாலத்தில் விஷ்ணுவை ஆராதித்துத் தங்கள்தங்கள் பதங்களை அக்கேசவனுடைய அருளாலே பெற்றனர்.] என்று நாரஸிம்ஹபுராணத்திலும் இவ்வர்த்தம் அறிவிக்கப்பட்டதன்றோ. ஆக, இப்பாசுரத்தில், ப்ரமாணயுக்திகளைக் கொண்டு ஆராயும்போது நாராயணன் ஒருவனே பரதெய்வமென்று ஏற்படுவதாலும், ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் பலப்ரதன் அவனேயாகையாலும் நாராயணனே பரமாத்மா என்று நிர்ணயித்தாராயிற்று.

"எத்தவம் செய்தார்க்கும் அருள் முடிவது ஆழியான்பால்" என்றதுக்கு வேறுவகையாகவும் ஸங்கதி யோஜனைகள் உரைப்பதுண்டு நாராயணனே பரதெய்வமென்றும், அவன் பெருமையை ஒருவரும் அளவிட்டறியார் என்றும் சொன்னவளவில், 'அவனை ஓரளவாவது அறிய உபாயமென்?' என்னும் கேள்விபிறக்க, 'அவனருளாலேயே அவனை அறியமுடியும்' என்ன, 'கர்மஜ்ஞானபக்திகளாகிற ஸாதநங்களாலும் அவனை அறியலாம் என்று சாஸ்திரங்கள் ஓதுகின்றனவே' என்று கேட்க, 'அவற்றுக்கும் பலனளிப்பவன் அவனேயாகையால் ஸாதகர்க்கும் உபாயம் அவனேயாகிறான்' என்கிறார் (எத்தவம் செய்தார்க்கும் அருள் முடிவது ஆழியான்பால்) என்னுமடியாலே. ஸாதனங்கள் தாமே பலனையளிக்கவல்லவையல்லவாகையால், அவனே பலப்ரதனாகிறான் என்பதே ஸகல சாஸ்த்ரநிர்ணயம் என்கிறார். "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" "ராமோ விக்ரஹவாந் தர்ம:" முலான ப்ரமாணங்களைப் படிப்பது.

3. பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்
ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்—ஞாலத்
தொரு பொருளை வானவர்தம் மெய்ப்பொருளை அப்பில்
அரு பொருளை யானறிந்த வாறு.

பதவுரை:—பாலில்கிடந்ததுவும்—திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளியதுவும், பண்டு அரங்கம் மேயதுவும்—பழங்காலத்திலே திருவரங்கத்தில் பொருந்தியதுவும், ஆலில் துயின்றதுவும்—ஆலந்தளிரிலே பள்ளிகொண்டதுவும், (ஆக இப்படிப் பலபடியாக) ஞாலத்து ஒரு பொருளை—உலகத்துள் ஒரே காரணப்பொருளாய் நிற்பவனாய், வானவர்தம் மெய்ப்பொருளை—நித்யஸூரிகளுக்கு நேரே பிரகாசிப்பவனாய், அப்பில் அருபொருளை—(ஸ்ருஷ்டிகாலத்தில்) ஜலத்திலே பள்ளிகொண்டருளினவனை அரும்பொருளாயிருக்கிற பெருமானை, யான் அறிந்த ஆறு—நான் அறிந்தபடி, யார் அறிவார்—யார் அறிவார்கள்?

பெரி—அவ—மூன்றும்பாட்டு—(பாலில்) "வேறொருவர் அறிவாரில்லை, நானே என்றது, நான் அவன் காட்டக்கண்டேனாகையாலே" என்கிறார்.

வ்யா:—(பாலில் கிடந்ததுவும்) அவதாரத்துக்கு உறுப்பாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்ததுவும். (பண்டரங்கமேய்ததுவும்) அபேக்ஷிப்பாரின்றிக்கேயிருக்கக் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளிற்றும்,

ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்? (ஞாலத்தொருபொருளை) கார்யாகார மெல்லாம் அழிந்து "**सदेव**" (ஸதேவ) என்று நிற்கிறவனை. (வானவர் தம் மெய்ப்பொருளை) நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யனாயுள்ளவனை. (அப்பிலரு பொருளை) "**अप एव ससर्जादौ**" (அப ஏவ ஸஸர்ஜாதௌ) என்று ஜலஸ்ருஷ்டியைப்பண்ணி அதிலே கண்வளர்ந்தருளுகிறவனை. (யானறிந்தவாறு) அவன் காட்டக் கண்ட நானறிந்தபடி ஸ்வயத்நத்தால் காண்பார்க்கு அறியப்போகாது.

திவ்ய-அவ:—"ஆருமறியார் அவன் பெருமை" என்று சொல்லும் நீர் அவனை அறிந்ததுபோல் பேச முற்பட்டது பொருந்துமோ என்று சிலர் கேட்க, "'ஆருமறியார்' என்றது ஒருவரும் அளவிட்டு அறியார் என்றபடி. அவன் பெருமையில் ஒவ்வொரு திவலைகளை அறிந்தார் பலருமுண்டு. அவர்களில் என்னைப்போல் அறிந்தவர் ஒருவருமில்லை. தன் முயற்சியாலே அவனை அறிபவர்கள் அவன் பரத்துவத்திலே ஒரு சிறிது அறியப்பெறுவார்கள். அவன் தன் நிர்ஹேதுக க்ருபையாலே காட்டக் கண்ட நானே அவனுடைய ஸௌலப்யாதிமஹாகுணங்களை அறிவேன்" என்கிறார். அன்றிக்கே, "எத்தவம் செய்தார்க்கும்" என்று ஸாதநாந்தரநிஷ்டர்களைப்பற்றிய பேச்சு வந்தவளவில், "அவன் தன்னைக் காட்டக் கண்ட என்னைப்போலே காணமுடியுமோ தன் முயற்சியாலே அவனைக் காணலாமென்றிருப்பவர்களுக்கு?" என்கிறாராகவுமாம்.

வ்யா:—(பாலில் கிடந்ததுவும்) ஜகத்காரணனாய், நித்யஸூரி பரிஷத்திற்கு நிர்வாஹகனாயிருக்குமவன் சேதனர் சிலரைப் பெறுவதற்காகப் பல அவதாரங்கள் எடுக்க நினைத்து அதற்காகத் திருப்பாற்கடலிலே க்ஷீராப்திநாதனாக அவதரித்து யோகநித்திரை செய்ததுவும். (பண்டரங்கமேயதுவும்) அவதாரங்களின் எல்லைநிலமான அர்ச்சாரூபியாய் திருவரங்கத்திலே பொருந்தி வாழ்வதும். (பண்டு) அபேக்ஷிப்பார் ஒருவருமில்லாமல் காடாய்க்கிடந்த காலத்திலேயே 'எக்காலத்திலேயாவது எவராவது நம்மைக் கொள்ளமாட்டார்களா' என்னும் நசையாலே படுகாடுகிடக்கிறபடி. ரக்ஷ்யவஸ்துவின் அளவன்றே ரக்ஷகனின் பாரிப்பு. 'அத்யதிஷ்டத் தஶாங்குலம்' என்றும், 'புரஸ்தாத் ஶுக்ரமுச்சரத்' என்றும்,

"வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம்
பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்" என்றும்,

மறைகள் முறையிட்டனவன்றே. (அரங்கம் மேயதுவும்) பரமபதத்தைக்காட்டிலும் இவ்விடத்திலேயே பொருந்தியிருக்கை. 'மேவியுறை கோயில்' அன்றே. பரமபதத்தில் ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தை அநுஸந்தித்து 'இவை என் படுகின்றனவோ' என்று திருவுள்ளத்தில் வெறுப்போடேயாயிற்று எழுந்தருளியிருப்பது. இவ்வர்த்தத்தை பட்டர் அருளிச்செய்ய, 'பரமபதத்திலே ஆநந்தபரிபூர்ணனாயிருக்குமிருப்பிலே ஒரு வ்யஸனத்தோடே இருந்தான் என்கை உசிதமோ' என்று ஒருவர் கேட்க, "'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:க்கித:' [மனிதர்கள் துன்புற்றால் அவர்களினும் அதிகமாகத் துன்புறுகிறான் ராமபிரான்] என்றது குணப்ரகரணத்திலேயோ தோஷப்ரகரணத்திலேயோ என்று கேட்கமாட்டிற்றிலீரோ? இது குணமாகில் குணமென்று பேர் பெற்றவற்றில் அங்கு இல்லாததொன்றுண்டோ?" என்று அருளிச்செய்தார் என்பர். "தன் இச்சையொழியக் கர்ம நிபந்தனமாக வருமவை இல்லையென்னுமத்தனைபோக்கி, அநுக்ரஹகார்யமாய் வருமவை இல்லையெனில், முதலிலே சேதனனன்றிக்கேயொழியுமிறே. 'ஸ ஏகாகீ ந ரமேத' [நாராயணன் (ஆதியில்) ஒருவனாய் இன்புறவில்லை] என்றது நித்யவிபூதியும் குணங்களும் உண்டாயிருக்கச்செய்தேயிறே" என்று நம்பிள்ளை (4-10-2) ஈட்டிலே அருளிச்செய்வர். "அரங்கம் எய்ததுவும்" என்றும் பாடம் காண்கிறது. "அரங்கம் எய்தியதும்" என்றபடி. பரமபதநிலயன் சேதநலாபத்திற்காக நெடுந்தூரம் வந்ததுவும் என்கை. (ஆலில் துயின்றதுவும்) இச்சேதனர்க்கு ஒரு ஆபத்து வந்த காலத்தில் இவர்களைத் தன் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து, பாலன் தனதுருவாய் ஆலிலையிலே கண்வளர்ந்தருளியதும். (ஆரறிவார்) இப்படிப்பட்ட நீர்மையை உடையவன் எம்பெருமான் என்பதை யாரறிவார்? மேன்மையை ஒருபடி உணரலாம். நீர்மையை உணரப்போகாது என்கை. (யானறிந்தவாறு ஆரறிவார்) அவன் காட்டக் கண்ட நான் அறிந்த அவனுடைய ஸௌலப்யாதிகளை, தம் முயற்சியாலே அவனைக்காண எண்ணியிருக்குமவர்கள் அறிவரோ? (பாற்

கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும் ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்) தங்கள் முயற்சியாலே அவனை அறிய நினைக்குமவர்கள் நமக்காக அவன் செய்யும் முயற்சிகளை அறியப்பெறுவரோ? (பாலிற் கிடந்ததுவும் ஆரறிவார்)

"பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்
காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்கிறபடியே

இதைக் கேட்டதும் உருகி நெஞ்சழியும் நாங்கள் அறியுமித்தனை யொழிய, இதைக் கேட்டும் உருகாதே ஸாதநாநுஷ்டாநம் பண்ண வல்ல கல் நெஞ்சரோ அறியவல்லார்? (பண்டரங்கம் மேயதுவும் ஆரறிவார்)

"கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்கமேயான் திசை" என்று

கருவரங்கத்திலிருந்தே திருவரங்கத்தைத் தொழுத எங்களையொழிய "ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம்" [அஜ்ஞானிகளுக்காகவே அர்ச்சையில் நிற்கிறான்] என்றிருப்பார் அறிவரோ? (ஆலில்துயின்றதுவும் ஆரறிவார்)

"ஆலன்று, வேலை நீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு" என்று

இவ்வகடிதகடநாஸாமர்த்தியத்திலே ஆழங்காற்படும் நாங்களறிவோமே யொழியப் பிறர் அறிவரோ.?

"இவனுக்கு நீர்மையே தான் உள்ளதோ" என்று கேட்க' "இவனுடைய மேன்மையும் எல்லையற்றதாயிருக்கும்." என்கிறார் அடுத்தபடியாக. மேன்மையும் நீர்மையும் கலந்திருந்தாலன்றோ பொன்னில் பதித்த வைரம்போலே பிரகாசிப்பது. (ஞாலத்தொரு பொருளை) "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்" [குழந்தாய்! இவ்வுலகம் ஸத்தாகிற ஒன்றாகவே முதலில் இருந்தது. இரண்டற்றதாயிருந்தது.] "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஶாந:" [நாராயணன் ஒருவனே முதலிலிருந்தான்; பிரமனுமில்லை, சிவனுமில்லை] என்று உபனிஷத்துக்களிலே சொல்லப்பட்ட ஒப்பற்ற பொருளை. (ஞாலத்தொரு பொருளை) உலகமாய் நின்ற ஒரே பொருளை; முதலில் ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டமாயும், பிறகு ஸ்தூல சிதசித்விசிஷ்டமாயும் நிற்கும் ஒப்பற்ற பொருளை. (வானவர்தம்

மெய்ப்பொருளை) நித்யஸூரிகளுக்கு ப்ராப்யனாயுள்ளவனை. "யோ தேவேப்ய ஆதபதி யோ தேவானாம் புரோ ஹித:" "ஸதா பச்யந்தி ஸூரய:" என்னும் வேதார்த்தம் சொல்லுகிறது. (அப்பில் அரு பொருளை) 'அப்பு' எனப்படும் ஜலத்தை முதலிலே ஸ்ருஷ்டித்து, அதிலே கண்வளர்ந்தருளிய ஜகத்காரணனை. "அப ஏவ ஸஸர்ஜாதௌ" [முதலில் ஜலத்தையே ஸ்ருஷ்டித்தான்] என்று தொடங்கி,

"ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: ।
தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத: ॥"

[ஜலம் நாரங்கள் எனப்படுகின்றது. நரனாகிற பரமாத்மாவினிடமிருந்து பிறப்பதன்றோ அது. அது அவனுக்கு இருப்பிடமாயிருக்கிறபடியால் அப்பரமாத்மா நாராயணனெனப்படுகிறான்.] என்று மநுஸ்ம்ருதியிலும்,

"ஸ்ருஷ்ட்வா நாரம் தோயமந்த: ஸ்திதோऽஹம்
தேந ஸ்யாந்மே நாம நாராயணேதி"

[நாரமாகிற ஜலத்தைப் படைத்து அதனுள்ளிருக்கையால் எனக்கு நாராயணனென்று பெயர்] என்று வராஹபுராணத்திலும், "அம்பஸ்யபாரே" என்றும், "ஸமுத்ரேந்தம்" என்றும், "யமந்தஸ் ஸமுத்ரே கவயோவயந்தி" [எவனை சமுத்திரத்தினுள்ளிருப்பவனாகக் கவிகள் அறிகின்றனரோ] என்றும் வேதத்திலும் சொல்லப்பட்ட அர்த்தத்தை அநுஸந்திக்கிறார். "நன்மைப் புனல் பண்ணி" "தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண்வளரும்" என்றானன்றோ நம்மாழ்வாரும். (யானறிந்தவாறு ஆரறிவார்) இவனை நானறிந்தபடி யாரறிவார். மேன்மையை அறிவார் நீர்மையை அறிவதில்லை; நீர்மையை அறிவார் மேன்மையை அறிவதில்லை; இரண்டையும் அறிந்தவன் நானே என்கிறார். ஸாதநாந்தரபரர்கள் நீர்மையறியார்கள்; தேவதாந்தரபரர்கள் மேன்மையறியார்கள்; இரண்டையுமறிந்தவன் யானேயென்கிறார்.

4. ஆறு சடைக்கரந்தான் அண்டர்கோன் தன்னோடும்
கூறுடைய னென்பதுவும் கொள்கைத்தே—வேறொருவ
ரில்லாமை நின்றானை எம்மானை எப்பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன் தொகுத்து.

பதவுரை:—ஆறு—கங்காநதியை, சடை—தனது சடையிலே, கரந்தான்—மறையச்செய்து தாங்கிக்கொண்டிருக்கிற ருத்ரன், அண்டர்கோன் தன்னோடும்—தேவாதிதேவனான பகவானோடு, கூறு உடையன் என்பதுவும்—பங்குடையவன் என்று (பாமரர்) சொல்லுஞ் சொல், கோள்தைத்தே—அங்கீகரிக்கத்தகுந்ததோ? (அல்ல;) வேறு ஒருவர் இல்லாமை நின்றானை—வேறொரு தெய்வமும் தனக்கு ஒப்பாக இல்லாமல் வீறுபெற்றிருப்பவனும், எப்பொருட்கும் சொல்லானை—எந்தப்பொருளைச் சொல்லுகிற சப்தமும் தனக்கு வாசகமாம்படி (ஸர்வ சப்தவாச்யனாய்) உள்ளவனுமான, எம்மானை—எம்பெருமானை, தொகுத்து சொன்னேன்—சுருங்கப்பேசினேனித்தனை.

பெரி-அவ-நாலாம்பாட்டு—தாமறிந்தபடியை உபாதிக்கிறார்.

வ்யா:—(ஆறித்யாதி) ஜடையிலே கங்கையை தரித்து ஸாதகனான ருத்ரன் ஸர்வசேஷியானவனோடொக்க சேஷித்வத்திலே கூறுடையன் என்ற இதுவும் சேதனர்க்கு புத்திபண்ணப்படுமோ? (வேறித்யாதி) "अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा। मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनंजय॥" (அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ் ததா। மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய॥) என்னும்படி நிற்கிறவனை. (எம்மானை) எனக்கு ஸ்வாமியானவனை. (எப்பொருட்கும் சொல்லானை) ஸர்வசப்த வாச்யனானவனை. எல்லாப்பொருளுக்கும் சொல்ல வேண்டும்படி நின்றவனை என்றுமாம். (தொகுத்துச் சொன்னேன்.)

திவ்ய-அவ:-முதற்பாட்டில் ப்ரஹ்மருத்ரகாரணன் நாரணனேஎன்றார். இரண்டாம் பாட்டிலே தேவன் ஒருவனேயாகையால் மூவரும் ஜகத்காரணராகமுடியாது என்றார். மூன்றாவது பாட்டிலே அவனுடைய மேன்மையையும் நீர்மையையும் நானேயறிவேன் என்றார். இவ்வளவிலே, சைவர்கள் சிலர் பின்வருமாறு கேட்க முற்பட்டனர்:—"ஏகோ ஹிருத்ரோ ந த்விதீயாய தஸ்து:" [ருத்ரன் ஒருவனே; இரண்டாவதாகைக்கு ஒருவருமில்லை.] "யோ தேவாநாம் ப்ரபவஶ் சோத்பவஶ்ச விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:। ஹிரண்யகர்ப்பம் ஜநயாமாஸ பூர்வம் ஸ நோ புத்த்யா சுபயா ஸம்யுநக்து॥" [எவனொருவன தேவர்களுக்குக் காரணனாகவும் வர்த்தகனாகவுமிருக்கின்றானோ, விச்வாதிகனாய், ஸர்வஜ்ஞனான எந்த ருத்ரன் முதலில் ஹிரண்யகர்ப்பனைப் பிறப்பிக்கி

ருனே, அவன் எங்களுக்கு நல்லறிவைக் கொடுப்பானாக.] தஸ்மாத் ஸர்வகத: ஶிவ:" [ஆகையால் சிவன் ஸர்வகதன்] "ஸர்வஸ்ய ப்ரபுமீஶாநம்" [எல்லாவற்றுக்கும் ஸ்வாமியான ஈஶானனை] "மாயிநம் து மஹேச்வரம்" [மஹேச்வரனை மாயையுடையவனாக அறி] "ஜ்ஞாத்வா ஶிவம் ஶாந்திமத்யந்தமேதி" [சிவனை அறிந்து மேலான சாந்தியை அடைகிறான்.] "ஶிவம் ஸர்வபூதேஷு கூடம்" [எல்லா பூதங்களிலும் மறைந்திருக்கும் சிவனை] "ஶிவ ஏவ கேவல:" [சிவனொருவனே இருந்தான்.] "ஈஶஸ் ஸர்வாதிபத்யம் குருதே" [ஈசன் எல்லாருக்கும் அதிபதியாயிருக்கிறான்.] "பாவாபாவகரம் ஶிவம்" [ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்யும் சிவனை] "தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்" [ஈச்வரருக்கெல்லாம் மேலான மஹேச்வரனை அவனை] "சிவ ஏகோ த்யேய:" [சிவன் ஒருவனே தியானிக்கத்தகுந்தவன்.] "அஹமேக: ப்ரதமமாஸம் வர்த்தாமி ச பவிஷ்யாமி ச நாந்ய: கஶ்சிந் மத்தோ வ்யரிக்த:" [(சிவனுகிற) நானொருவனே முதலிலிருந்தேன்; இருக்கிறேன்; இருப்பேன். என்னைத்தவிர வேறொருவனுமில்லை.] என்று பற்பல வேதவாக்கியங்களிலே சிவனே ஸகலஜகத்காரணனென்றும், ஸர்வாந்தர்யாமியென்றும் கோஷிக்கப்பட்டிருக்க நீர் நாராயணன் ஒருவனே ஜகத்காரணன் என்று சொல்லலாமோ. சில வாக்கியங்களில் நாராயணனும், நாம் மேலே காட்டிய வாக்கியங்களில் சிவனும் பரம்பொருளாகப் படிக்கப்பட்டிருக்கையால் இருவரும் பரமாத்மாவே என்று கொள்ளுவதே பொருந்தியது. அப்படியிருக்க, 'அவன் பரத்துவத்தை நானே அறிவேன்' என்று நீர் உரைப்பது எப்படி ஒட்டும் என்று சைவர்கள் கேட்க, அவனே பரதத்துவம் என்று தானறிந்தபடியை இப்பாசுரத்திலே விவரித்தருளுகிறார்.

வ்யா:—'சிவன்' என்னும் பெயருள்ள ஒருவனே ஜகத்காரணன் என்று சில வாக்கியங்களில் சொன்னது உண்மையே. ஆனால் அந்த சிவன் நீங்கள் அபிமானித்திருக்குமவனோ என்று ஆராய்ந்தாலாகாதோ என்கிறார்,—(ஆறு சடைக்கரந்தான்) பகவானுடைய ஸ்ரீபாதத்தைப் பிரமன் கழுவ, அது கங்கையாகப் பிரவஹிக்கத் தன் அசுத்தியைப் போக்கிக்கொள்ளுவதற்காக அதைத் தன் தலையிலே தரித்தவன்.

"த்ரவீபூதஸ் ததா தர்மோ ஹரிபக்த்யா மஹாமுநே।
க்ருஹீத்வா தர்மபாநீயம் பதம் நாதஸ்ய துஷ்டயே॥

க்ஷாளிதம் பரயா பக்த்யா பாத்யார்க்யாதிபிரர்ச்சிதம் ||
ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார ஶிரஸா ஹர: |
பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோऽஸ்மீத்யவதாரணாத் ||
வர்ஷாயுதாந்யத பஹூநி ந முமோச ததா ஹர: ||

[ரிஷிச்ரேஷ்டரே! (பகவான் திருவுலகளந்தருளின) அச்சமயம், ஹரியினிடம் பக்தியினால் தர்மம் ஜலமாயிற்று. தர்மமாகிய அந்த ஜலத்தையெடுத்து, ஜகந்நாதனுடைய ஸந்தோஷத்திற்காக (அவனுடைய) திருவடியானது (பிரமனாகிற என்னால்) மேலான பக்தியுடன் விளக்கப்பட்டது. பாத்யம், அர்க்யம் முதலியவைகளாலும் பூஜிக்கப்பட்டது. விழுந்த அந்த ஜலத்தைப்பார்த்து 'நான் (பரிசுத்தப்படுத்த) தகுந்தவனாயிருக்கிறேன்' என்று நிச்சயித்து, சிவன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வதற்காக ஜடையின் நடுவில் தலையால் தாங்கினான். பிறகு, பல பதினாயிரக்கணக்கான வருஷங்கள் ருத்திரன் அப்படியே (அதை) விடவில்லை] என்று ஈச்வர ஸம்ஹிதையில் பிரமனாலேயே சொல்லப்பட்டதை அநுஸந்திப்பது. (ஆறு சடைக்கரந்தான்) சிவ ஶப்தத்தாலே உரைக்கப்படும் ஸ்வாபாவிகமான பரிசுத்தி ருத்ரனிடமுள்ளதோ, ஶாஶ்வதஶிவனான நாராயணனிடமுள்ளதோ என்பதை விசாரித்தாலாகாதோ என்கிறார். (சடை) ஸாதநாநுஷ்டானம் செய்பவன் என்பதை உணர்த்தும் சடையே இவன் பரதத்துவமல்லன் என்று கோட்சொல்லித்தருகிறதே. (சடைக் கரந்தான்) ஸ்ரீபாத தீர்த்தத்தை தலையாலே தாங்கினான். (கரந்தான்) பெருந்தனத்தைப் பெட்டியிலே ஒளித்துவைப்பாரைப்போலே சடையிலே மறைத்து வைத்தான். (அண்டர்கோன் தன்னோடும்) திருவுலகளந்தருளிய இவ்விருத்தாந்தத்தாலேயே தான் தேவாதிதேவன் என்பது தோற்ற நிற்கும் நாராயணனோடு. (கூறுடையன் என்பதுவும் கொள்கைத்தே) கங்காதரன் கேசவனுடைய ஶேஷித்வம், ஜகத்காரணத்வம், ஸர்வவ்யாபித்வம், முமுக்ஷூபாஸ்யத்வம் முதலான ஏற்றங்களில் பங்கு கொண்டவன் என்பதும் ஒப்புக்கொள்ளத்தக்கதோ? (ஆறு சடைக் கரந்தான்........கொள்கைத்தே)

"ஏக: ப்ராஸீஸரத் பாதம் ஏக: ப்ராக்ஷாளந் முதா |
அபரோऽப்யதரந் மூர்த்நா கோதிகஸ் தேஷு கண்யதாம் ||"

[ஒருவன் திருவடியை உயர நீட்டினான்; ஒருவன் உகப்புடன் அதை விளக்கினான். மற்றொருவன் அதைத் தலையாலே தரித்தான். இவர்களிலே எவன் அதிகன் என்று எண்ணிப்பாருங்கள்.] என்று சொல்லிற்றன்றோ.

சிவன் நாராயணனுடன் சேஷித்வாதிகளில் பங்கில்லாதவன் என்று நிர்ப்பந்திக்க ஹேதுவென ?" என்ன, உரைக்கிறார்: (வேறொரு வர் இல்லாமை நின்றானை) தனக்கு ஒப்பாகவும் மேலாகவும் வேறொரு வரும் இல்லாமலிருக்கும் பரமாத்மாவன்றோ இவன்.

"அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ் ததா।
மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய॥" [6-7]

[நானே இவ்வுலகெல்லாவற்றுக்கும் உத்பத்தி லயஸ்தானங்களாக இருக்கிறேன். என்னைக்காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லை.]

"யஸ்மாத் க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம:।
தஸ்மாத் வேதே ச லோகே ச ப்ரதித: புருஷோத்தம:॥" [15-18]

[க்ஷரபுருஷர்களையும், அக்ஷரபுருஷர்களையும்விட மேலானவனா யிருக்கையால் ச்ருதிஸ்ம்ருதிகளில் நானே புருஷோத்தமனெனப்படு கிறேன்.] என்று கீதையில் அவன்தன்னாலேயும், "ந தைவம் கேஶவாத் பரம்" [கேசவனைக்காட்டிலும் மேலானதொரு தெய்வ மில்லை.] "ந பரம் புண்டரீகாக்ஷாத்" [புண்டரீகாக்ஷனைக்காட்டிலும் மேலானதில்லை.] என்று ரிஷிகளாலும், "பரமம் ப்ரபும் நாராயணம்" [தனக்கு மேலொருவரில்லாத நாராயணன்] "ந தத் ஸமஶ்சாப்யதி கச்ச த்ருச்யதே" [அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் காணப்படுவதில்லை.] என்று வேதங்களிலும் இவ்வர்த்தம் உத்கோஷிக்கப்பட்டதன்றோ. "இப்படி யிருப்பவன் யார்" என்று கேட்கச்சொல்லுகிறார்,—(எம்மானை) எனக்கு ஸ்வாமியாயிருப்பவனை. திருமழிசையாழ்வாருடைய மறந் தும் புறந்தொழாத் தன்மையிருக்கும்படி. ஈச்வரனையும் இவ்வரை யிட்டு நிரூபிக்கவேண்டியிருக்கை. அன்றிக்கே, முன்னும் பின்னும் மேன்மையை உபபாதித்தாப்போலே 'எம்மானை' என்று நீர்மையை உபபா திக்கிறார் என்றும் கொள்ளலாம். அதிநிஹீனனான என்னை மேல் விழுந்து ஆட்கொண்டவனை என்றபடி.

"சிவன், ருத்ரன், ஈஶன், ஈச்வரன், மஹேச்வரன் முதலான சப்தங்களால் குறிக்கப்படுபவன் பரமாத்மா என்று பல வாக்கியங் களிற் சொல்லப்பட்டிருக்க, நீர் நாராயணன் ஒருவனே பரமாத்மா என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்" என்று கேட்க உரைக்

கிறார்:—(எப்பொருட்கும் சொல்லானை) எல்லா சப்தங்களாலும் சொல்லப்படுமவனை. ஆகாஶம், ப்ராணன், ஜ்யோதி, இந்திரன், உருத்திரன், சிவன், ஈஶன், ஈஶ்வரன், மஹேஶ்வரன், புருஷன், புருஷோத்தமன், உத்தமபுருஷன், விஷ்ணு, ஹரி, அச்யுதன், அநந்தன், நாராயணன், த்ரிவிக்ரமன், வாமனன் முதலான எல்லா சப்தங்களாலும் வேதங்களில் சொல்லப்படும் பரம்பொருளாயிருப்பவன் இவனேயன்றோ என்கிறார். (எப்பொருட்கும் சொல்லானை) 'பொருள் என்று பொருளைச்சொல்லும் ஶப்தத்தைக் காட்டுகிறது. எல்லா ஶப்தங்களாலும் சொல்லப்படுபவனை (ஸர்வஶப்தவாச்யனை) என்றபடி. (எப்பொருட்கும் சொல்லானை) எல்லா ஶப்தங்களாலும் ஸாக்ஷாத்தாகவும், அந்தந்த ஶப்தங்களால் சொல்லப்படும் பொருள்களுக்கு அந்தர்யாமியாயிருப்பதாலும் சொலலப்படுமவனை. 'சிவன்' என்னும் ஶப்தத்தை எடுத்துக்கொள்வோம். அந்த சப்தத்தினால் சொல்லப்படும் பரிசுத்தி நாராயணனிடமே இயற்கையாக அமைந்திருப்பதால், "சிவ ஏவ கேவல:" [சிவன் ஒருவனே இருந்தான] முதலான வாக்கியங்களில் அவன் சிவன் என்று நேராகவே சொல்லப்படுகிறான். அதர்வசிரஸ் முதலான உபநிஷத்துக்களில் ருத்ரபரமான லிங்கங்கள் (அடையாளங்கள்) உள்ள வாக்கியங்களிலிருக்கும் சிவபதம் ருத்ரனைச் சொல்லி, அவனுக்கு அந்தர்யாமியாயிருக்கும் நாராயணனையும் குறித்து நிற்கிறது. ஆக, இப்படி இரண்டுவிதமாகவும் ஸர்வஶப்தங்களுக்கும் பொருளாகிறான நாராயணன். (எப்பொருட்கும் சொல்லானை) சிவருத்ராதி ஶப்தங்களைப்போலே ஆகாஶப்ராணேந்த்ராதி ஶப்தங்களாலும் வேதங்களில் சொல்லப்படுகிறான் இவன். சிவருத்ராதி ஶப்தங்களைக்கொண்டு சிவபரத்வம் சொல்லப்பார்க்கில், ஆகாஶாதிஶப்தங்களைக்கொண்டு ஆகாஶாதி பரத்வமும் சொல்லவேண்டிவரும். ஆகாஶாதிகளுக்கு அசுத்தியுண்டேயெனில், ஆறு சடைக்காந்தானுக்கும் அசுத்தியுண்டு. ஆகையால் ஆகாஶாதி நாமங்களோடு, சிவாதி நாமங்களோடு வாசியற எல்லாம் நாராயணனைக் குறிக்கின்றன என்று கொள்வதே நல்வழியாகும். நாராயணாதி நாமங்களைத்தான் சிவபரமாகக் கொள்ளக்கூடாதோ எனில்: சிவாதி நாமங்களைக் காட்டிலும், நாராயணாதி நாமங்கள், ஶப்தத்தாலும் அர்த்தத்தாலும் ப்ரபலமாயிருக்கையாலும், லோகப்ரஸித்த சிவன் பிறப்பிக்கப்படுபவ

னென்றும், பாபம் நீங்கப்பெறுதவனென்றும், மற்றும் பல தாழ்ச்சிகளை உடையவனென்றும் ச்ருதிஸ்ம்ருதிகளில் உத்கோஷிக்கப்படுகையால் நாராயணுதி நாமங்களைச் சிவபரமாகக் கொள்ள வழியில்லை. சிவாதி நாமங்களையே நாராயணபரமாகக் கொள்ளவேண்டும். “ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்” “விச்வாக்ஷம் விச்வஶம்புவம்” “ஊர்த்வரேதம் விரூபாக்ஷம்” “ய: பரஸ் ஸ மஹேச்வர:” என்று வேதங்களிலும், “ஈஶாந: ப்ராணத: ப்ராண:” “ஸர்வ: ஶர்வ: ஶிவ: ஸ்தாணு:” “ஆதிதேவோ மஹாதேவ:” “ருத்ரோ பஹுஶிரா பப்ரு:” என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் முதலான உபப்ரும்ஹணங்களிலும் சிவருத்ராதி நாமங்கள் விஷ்ணுபரமாகப் படிக்கப்பட்டுள்ளன. ஆகையால், நாராயணனே ஸர்வஶப்தவாச்யனென்று கொள்ளவேண்டும்.

(எப்பொருட்கும் சொல்லானை) எல்லாப் பதார்த்தங்களுக்கும் ஸ்வாமியாகச் சொல்லப்படுபவனை என்றும் பொருள்கொள்ளலாம். அசேதன பதார்த்தங்களோடு, ப்ரஹ்மருத்ராதிகளோடு வாசியற ஸர்வபதார்த்தங்களுக்கும் ஸ்வாமியாக ச்ருதிஸ்ம்ருதிகள் இவனை ஓதியிருக்க, ருத்ரன் ஶேஷித்வத்திலே இவனோடு பங்குகொண்டவன் என்று சொல்லுவதும் ஒப்புக்கொள்ளப்படுமோ என்கிறார். “பதிம் விச்வஸ்ய நாராயணம்” [எல்லாவுலகிற்கும் பதியானவன் நாராயணன்] முதலான ப்ரமாணங்களைப் படிப்பது. (தொகுத்துச்சொன்னேன்) இவனுடைய பரத்துவத்தையும் ஸௌலப்யத்தையும் சுருங்கச் சொன்னேன். விரிவு வேண்டுமாகில், இப்பிரபந்தத்தில் மேலேயும், திருச்சந்தவிருத்தத்திலும் காணலாம் என்று பாவம்.

5. தொகுத்த வரத்தனாய்த் தோலாதான் மார்வம்
வகிர்த்த வளையுகிர்த்தோள் மாலே—உகத்தில்
ஒருநான்று நீயுயர்த்தி உள்வாங்கி நீயே
அருநான்கு மானா யறி.

பதவுரை:—தொகுத்த வரத்தன் ஆய்—(தவஞ்செய்து) ஸம்பாதிக்கப்பட்ட வரங்களையுடையவனாய், தோலாதான்—ஒருவரிடத்திலும் தோல்வியடையாதவனாயிருந்த இரணியனுடைய, மார்வம்—மார்பை, வகிர்த்த—இருபிளவாக பிளந்த, வளை உகிர்—வளைந்த நகங்களையும், தோள்—தோளையுமுடைய, மாலே—பிரானே! நீ-நீ, உகத்தில்—பிர

ளயகாலத்தில், உள்வாங்கி—(உலகங்களையெல்லாம்) ஸம்ஹரித்து உள்ளேயிட்டுவைத்து, ஒரு நான்று—(மீண்டும் ஸ்ருஷ்டிகாலமாகிற) ஒரு ஸமயத்தில், உயர்த்தி—(அவ்வுலகங்களையெல்லாம்) வெளியிட்டு வளரச்செய்து, நீயே—இப்படிப்பட்ட நீயே, அரு நான்கும் ஆனாய்—(தேவமநுஷ்ய திர்யக்ஸ்தாவர ரூபங்களான) நால்வகைப் பொருள்களிலும் அந்தராத்மாவானாய், அறி—இதனை அறிவாயாக.

பெரி–வ்யா—(தொகுத்த வித்யாதி) திரட்டின வரத்தையுடையவனாகையாலே வரங்கொடுத்தவர்களுக்கும் தோலாத ஹிரண்யனுடைய மார்பைப் பிளந்து வளைந்த உகிரையும் தோளையுமுடையையாய், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே வ்யாமுக்தனானவனே! (உள்வாங்கி நீயேயுகத்தில் ஒரு நான்று நீயுயர்த்தி) ஜகத்தடைய ஸம்ஹரித்த நீயே ஸ்ருஷ்டிகாலத்திலே "**आतपगतं**" (ஆதபகதம்) என்னும்படி நிற்கிற-உயர்த்தியென்று, அவதரித்தி என்னவுமாம். (அருநான்குமானாய்) தேவ திர்யங் மநுஷ்யஸ்தாவராதிகளிலே அந்தராத்மதயா ப்ரகாசித்து நின்ற. (நீயே அறி) இவ்வர்த்தம் வேறொருவர் அறிவாரில்லை. தேவரீரே அறிந்தருளவேணும் என்கை.

திவ்ய–அவ—ஆழ்வார் இவ்வளவு தெளிவாக பகவானுடைய பரத்துவத்தை உபதேசித்தும் ஸம்ஸாரிகள் கலங்கியேயிருந்தார்கள். அவ்வளவிலே "பிரானே! உன்னுடைய பரத்துவத்தைப் புத்தியிற் கொள்வாரைக் காண்பது இவ்வுலகிலே அரிதாயிருக்கிறது. ஆகையால் நான் உபதேசிக்க, நீரே கேட்டறியவேணும்" என்கிறார்.

வ்யா:—*(தொகுத்த வரத்தனாய்) திரட்டிய வரத்தையுடையவனாய். உலகத்திலே எவ்வளவு வகையான வரங்களுண்டோ, அவ்வளவு விதமான வரங்களையும் தான் ஒருவனே திரட்டினான். தேவர், மனிதர் முதலான ப்ரஹ்மஸ்ருஷ்டமான ஜாதிகளாலும், பகலிலும் இரவிலும், வானத்திலும் பூமியிலும், வீட்டின் உள்ளும் புறமும், அஸ்த்ரஶஸ்த்ரங்களனைத்தினாலும், ஈரமுள்ளதினாலும் ஈரமில்லாததினாலும் தனக்கு மரணமில்லை என்று இப்படிப் பலபடியாக இரணியன் பெற்ற வரங்களை நினைக்கிறார். (தோலாதான்) இப்படி வரபலமுடையவனாகையாலே, தனக்கு வரங்கொடுத்த ப்ரஹ்மாதிகளுக்கும் தோற்காதவனானான். (மார்வம் வகிர்த்த) மார்வைப் பிளந்த. (வளை*

யுகிர்த் தோள்) வளைந்த நகங்களையும், தோளையுமுடைய. கடுங்கோபத்தாலே மார்பைப் பிளக்கையாலே தோள்களும், நகங்களும் வளைந்து விடுகின்றன. 'தோள்' என்று திருக் கைகளைச் சொல்லுவதாகக் கொண்டு, 'வளைந்த நகங்களைக்கொண்ட திருக் கைகளையுடைய' என்று கொள்வாருமுண்டு. (மாலே) இப்படிக் கடுங்கோபம் கொண்ட காலத்திலும் ப்ரஹ்லாதாழ்வானிடத்திலே பேரன்பு கொண்டவனே! "சீற்றத்தோடருள் பெற்றவன்" என்றார் நம்மாழ்வாரும். 'அன்பும் கோபமும் ஒரே காலத்திலிருக்குமோ' என்னில்: 'யானையோடு சிங்கம் சண்டைசெய்யும் காலத்திலும் குட்டிக்குப் பால்கொடுக்குமாப்போலே இதுவும் பொருந்தும்' என்று உடையவரருளிச் செய்வர் என்பர். (மாலே) ஸர்வேச்வரனே! என்றும் கொள்ளலாம். இச் செயலாலேயே நீ ப்ரஹ்மாதிகளுக்கும் ஈச்வரனென்று தோற்றியிருக்க, பலரும் அதில் கலங்குகிறபடியென்! (மாலே) வரங்களைக் கொடுத்துவிட்டுத் துன்புற்றவர்கள் பரதெய்வமோ? அல்லது அவர்கள் துன்பத்தைத் துடைத்தவன் பரதெய்வமோ என்று ஆராய்ந்தாலாகாதோ?

"ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை ப்ரஹ்மருத்ரர்கள் பண்ணுவதாகச் சிலர் உரைக்கின்றனரே" என்ன, 'அவர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து நீயேயன்றோ ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைச் செய்வது' என்கிறார் அடுத்தபடியாக: (உள்வாங்கிநீயே உகத்தில் ஒரு நான்று நீயுயர்த்தி) ப்ரளயகாலத்தில் ஸகல வஸ்துக்களையும் உள்ளொடுக்கிவைத்தவனாய், ஸ்ருஷ்டிகாலத்தில் அவற்றை வெளியிடுகிறவனாய். * "ஆதபகதம்" [(ஸூர்யனாலே இழுக்கப்பட்டு) ஸூர்யனுடைய கிரணங்களிலே ஓடுங்

---

* இப் பிரமாணம் எங்குள்ளதென்று தெரியவில்லை. ப்ரமாணத்தின் மற்ற பகுதிகளும் தெரியவில்லை. ஆச்சான்பிள்ளை இவ்வளவே உதாஹரித்துள்ளார். அரும்பதவுரையில் "(ஆதபகதம்) வெய்யிலானது எங்குமொக்க வியாபிக்குமாப்போலே அந்தராத்மாவாக எங்கும் வ்யாபித்தாயென்றபடி—நான்கிலும் அருவாய் நின்றாய்" என்று எழுதப்பட்டுள்ளது. இது வியாக்கியானத்திற்கும் 'ஆதபகதம்' என்னும் பதத்திற்கும் பொருந்தவில்லை. பொருந்தியுள்ள பொருளொன்றை மேலே காட்டினோம்.

கிக்கிடக்கும் நீர் (மழைகாலத்திலே) வெளியாவதுபோலே] என்றுப் போலே. ஸூர்யனுடைய கிரணஸ்தானத்திலே ப்ரஹ்மருத்ரர்களும் ஸூர்யனுடைய ஸ்தானத்திலே நீயுமிருந்துகொண்டு உலகங்களாகிற நீரை, அவர்களை உபகரணமாகக் கொண்டு உள்வாங்குவதும், வெளியிடுவதும் செய்கிறாய். இப்படி நீயே ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களாகிற முத்தொழிலையும் செய்கிறாய் என்பதை ஊனுடைய ஸர்வாத்மபாவத்திலிருந்தே அறியலாம் என்கிறார் அடுத்தபடியாக: (அரு நான்கும் ஆனாய்) தேவர், மனுஷ்யர், திர்யக், ஸ்தாவரம் என்னும் நாலுவகைப்பட்ட சரீரங்களிலுமிருக்கும் அருபியான ஜீவனாகவும் ஆனாய் நீயன்றோ என்றபடி. சரீராத்மபாவத்தைக் காரணமாகக் கொண்டது ஸாமாநாதிகரண்யம் (ஒரே வேற்றுமையில் படிப்பது). 'நான்கும்' என்றவிடத்திலேயுள்ள உம்மையாலே அசித்தாகவுமிருப்பவன் இவனே என்று உணர்த்தப்படுகிறது. "க்ஷேத்ரஜ்ஞும் சாபி மாம் வித்தி" [(சரீரமும்) ஜீவனும் நானேயென்றறி] என்றுப்போலே. "நான்கும் அரு ஆனாய்" என்று கொண்டு, தேவமனுஷ்யதிர்யக் ஸ்தாவரங்களாகிற நான்கிலும் அந்தராத்மாவானாய் என்று பொருள்கொள்வாருமுண்டு. ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைச் செய்வதுபோலே அந்தர்யாமியாயிருந்து ரக்ஷிப்பவனும் நீயேயென்கை. "அந்தராத்மதயா ப்ரகாசித்து நின்ற" என்று ஆச்சான்பிள்ளை வியாக்கியானம் காண்கிறது. "ப்ரவேசித்துநின்ற" என்று பாடமிருந்தால் நன்று. (அருநான்குமானாய்) "விச்வாத்மாநம் நாராயணம்" "அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" [அவையெல்லாவற்றையும் உள்ளும் புறமும் வியாபித்து நிற்கிறான் நாராயணன்] "ஸர்வபூதாந்தராத்மா நாராயண." என்று உபனிஷத்துக்கள் ஓதியது உணரத்தக்கது. (நீயே அறி) இவ்விருள்தருமா ஞாலத்திலே இவ்வர்த்தத்தை உபதேசித்தாலும் அறிவாரில்லை. தேவரீரே அறிந்தருளவேணும் என்கிறார். "நீயே அருநான்குமானாய்" "நீயே அறி" என்றுஇரண்டு விதமாகவும் அந்வயிக்கலாம்.

'உயர்த்தி என்று—அவதரித்தி என்றுமாம்' என்னும் ஸ்ரீஸூக்திகளிலிருந்து பாசுரத்தின் பிற்பகுதிக்கு வேறொரு யோஜனையும் உண்டென்று தோற்றுகிறது. அதாவது:—முந்திய பாட்டிலே பகவானுடைய பரத்துவத்தை ஆழ்வார் பேசியவுடன் "பல பிறவிகளெடுத்துப் படாதன பட்ட நாராயணன் எப்படிப் பரம்பொருளாவான்"

என்று சிலர் க்ஷேபிக்க, "ஆச்ரிதவ்யாமோஹத்தாலே இவனெடுக்கும் பிறவிகளும் இவனுக்குப் பெருமையைத் தருமேயொழிய தாழ்வைத் தராது"என்கிறார் இப்பாட்டில். (உகத்தில்) ஒவ்வொரு யுகத்திலும். "ஸம்பவாமி யுகே யுகே" [ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன்] என்று தானே கீதையில் அருளினனன்றோ. (ஒரு நான்று) ஒவ்வொரு ஸமயங்களில். "யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத, அப்யுத்தாநமதர்மஸ்ய" [எப்போது தர்மத்திற்கு வாட்டமும், அதர்மத்திற்கு எழுச்சியும் ஏற்படுகிறதோ (அப்போது அவதரிக்கிறேன்)] என்று உன்னாலேயே சொல்லப்பட்ட சமயங்களில். (நீ உயர்த்தி) நீ அவதரிக்கிறாய். அவதரிப்பதே அவனுடைய ஸ்வரூபாதிகளுக்கு உயர்வாகிறது. "ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:" [அவன் பிறந்த பின்பே மேன்மையை அடைகிறான்.] "பலபிறப்பாய் ஒளிவரு முழுநலம்" என்றதன்றோ. (உயர்த்தி அருநான்குமானாய்) அவதரிக்கும் போது தேவமநுஷ்யதிர்யக்ஸ்தாவரமாகிற எல்லா யோனிகளும் ஆகிறாய். (உள்வாங்கி) அவதாரப்ரயோஜனம் முடிந்ததும் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளுகிறாய். (நீயே அறி) "நாவேதவிந் மநுதே" [வேதமறியாதவன் (அவன் பிறப்பின் பெருமையை) அறியான்] "அவஜாநந்தி மாம் மூடா:" [மூடர்கள் (மனிதவுருவுடனிருக்கும்) என்னை அவமதிக்கிறார்கள்] என்று சொல்லப்பட்டவர்கள் இவ்வர்த்தத்தை அறியார்கள். "தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்" [அவனுடைய பிறப்பை தீரர்களே அறிவார்கள்] என்று சொல்லப்பட்டவர்கள் அரியராயுள்ளனர். ஆகையால் இவ்வர்த்தத்தை நீயே அறிய வேணும் என்கிறார். முந்தின யோஜனை பரத்துவத்தை விவரிப்பது பிந்தியது ஸௌலப்யத்தை விவரிப்பது.

6. அறியார் சமண ரயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில்—வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவரே யாதலா லின்று.

பதவுரை:—சமணர்—ஜைநர்கள், அறியார்—உண்மையை அறிய மாட்டார்கள்; பவுத்தர்—பௌத்தர்கள், அயர்த்தார்—பிரமித்தார்கள்; சிவப்பட்டார்—சைவமதஸ்தர்கள், சிறியார்—மிகவும் நீசராகியொழிந்தனர்; செப்பில்—(இவர்களுடைய தன்மைகளைச்) சொல்லப்புகுந்தால்,

வெறி ஆய—பரிமளமே வடிவெடுத்தது போன்றுள்ளவனும், மாயவனை —ஆச்சரியமான குண சேஷ்டிதங்களையுடையவனும், மால் அவனை—(அடியார் திறத்தில்) வியாமோஹமுள்ளவனும், மாதவனை—திருமகள் கொழுநனுமான எம்பெருமானை, ஏத்தாதார்—(இவர்கள்) துதிக்க மாட்டாதவர்களாயிரா நின்றார்கள்; ஆதலால்—ஆகையினாலே, இன்று —இப்போது, ஈனவரே—(இவர்கள்) நீசர்களேயாவர்.

பெரி—அவ—ஆறும்பாட்டு—(அறியார்) 'வேறொருத்தர் அறிவாரில்லையோ' என்ன, 'பாஹ்யகுத்ருஷ்டிகளால் அறியப்போமோ' என்கிறார்.

வ்யா:—(அறியார் சமணர்) "स्यादस्ति स्यान्नास्ति" (ஸ்யாதஸ்தி ஸ்யாந்நாஸ்தி) என்று அநேகாந்தமாகக் கொள்கையாலே ஆர்ஹதர் தத்வம் உள்ளபடி அறியார். (அயர்த்தார் பவுத்தர்) ப்ரதிஸந்தாநம் பண்ணுகைக்கு ஓர் அநுபவிதாவைக் கொள்ளாமையாலும், ஜ்ஞாநத்தை க்ஷணிகமாகக் கொள்ளுகையாலும், பௌத்தரும் தத்வஜ்ஞாநத்தில் அறிவுகெட்டிருப்பர்கள். (சிவப்பட்டார் சிறியார்) ப்ரமாணத்தை ஒருபடிகொண்டு, ப்ரமேயத்தை உள்ளபடி கொள்ளாமையாலே ருத்ரஸம்பந்திகளானவர்களும் எளியார். (செப்பில்) இவர்களைப் பேசில். (வெறியித்யாதி) நிரதிசய போக்யனாய், ஆச்சர்யபூதனாய், வ்யாமுக்தனாய், ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனை. (ஏத்தாரீனவரே) அவர்கள் ஏத்தாமையாலே தண்ணியரே. ஹீநரென்றும், அஹீநரென்றும் நான் ப்ரதிபாதிக்கவேணுமோ என்கிறார்.

திவ்ய-அவ:—"நீயே அறி" என்று ஆழ்வார் அருளியவுடன், "இப் பரந்தவுலகிலே வேறொருவரும் இதை அறிவாரில்லையோ" என்று பகவான் திருவுள்ளமாக, "அறியாத சமணரும், அயர்த்த பவுத்தரும், சிறியாரான சிவப்பட்டாருமாக, இப்படி வேதபாஹ்யரும் குத்ருஷ்டிகளும் மலிந்துகிடக்கும் இவ்வுலகில் உன்னை உள்ளபடி அறிவார் யார்?" என்கிறார் இப்பாட்டில். முதலாழ்வார்களைப்போலே பகவத்பரர்கள் பலரும் இருந்திருக்கக்கூடுமே. அப்படியிருக்க ஒருவருமில்லைபோல் இங்கு இவர் பேசுகைக்குக் காரணமென்? எனில்: பரமபுருஷஜ்ஞானிகள் முதலாழ்வார்களைப்போலே ஒருவரிருவர் உண்டாகிலும், அறியாரும், அயர்த்தாரும், சிறியாருமே மிகுந்திருக்கிறார்களே என்னும் வயிற்றெரிச்சலாலே பேசுகிறாராகையாலே விரோதமில்லை.

வ்யா:—(அறியார் சமணர்) "ஸ்யாதஸ்தி, ஸ்யாந்நாஸ்தி, ஸ்யாதஸ்தி ச நாஸ்தி ச, ஸ்யாதஸ்தீதி வக்தவ்யம், ஸ்யாந்நாஸ்தீதி வக்தவ்யம், ஸ்யாதஸ்தி ச நாஸ்தி சேதி வக்தவ்யம், ஸர்வ்தா வக்தவ்யம் ச" [(பதார்த்தங்கள்) 1. இருக்கவும் இருக்கலாம்; 2. இல்லாமலும் இருக்கலாம். 3. இருப்பதாகவும், இல்லாததாகவுமிருக்கலாம். 4. இருக்கலாமென்றும் சொல்லலாம்; 5. இல்லாமலிருக்கலாமென்றும் சொல்லலாம். 6. இருக்கலாமென்றும், இல்லாமலிருக்கலாமென்றும் சொல்லலாம். 7. எப்படிவேண்டுமானாலும் சொல்லலாம்.] என்று ஸப்தபங்கிகள் எனப்படும் ஏழு வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு எல்லா வஸ்துக்களும் எப்படிவேண்டுமானாலும் இருக்கலாம் என்றுரைக்கும் சமணர் ஒரு தத்வத்தையும் உள்ளபடி அறியார்கள். ஒரு சமயத்தில் 'குடம் இருக்கிறது' என்று தோன்றுவதால் இருக்கிறதாகவும் இருக்கலாம்; ஒரு சமயம் 'குடம் இல்லை' என்று தோற்றுவதால் இல்லாததாகவுமிருக்கலாம்; இரண்டுபடியாகவுமிருக்கலாம்; இப்படிப் பலபடியாகவும் உலக வழக்கு காண்கிறதாகையால் எப்படிவேண்டுமானாலும் சொல்லாம் என்று இப்படிக் குதர்க்கம் செய்யும் தர்க்கச் சமணரன்றோ இவர்கள். (அறியார் சமணர்) 'என் தாய் மலடி' என்னுமாப்போலே பரஸ்பரவிருத்தமாகப் பேசும் ஜைநர்கள் அறிவுகேடர் என்னுமிடம் சொல்லவும்வேண்டுமோ? இவ்விடத்தில்,

அங்கீக்ருத்ய து ஸப்தபங்கிகுஸ்ருதிம் ஸ்யாதஸ்திநாஸ்த்யாத்மிகாம்
விச்வம் த்வத்விபவம் ஜகஜ் ஜிநமதே நைகாந்தமாசக்ஷதே ।
பிந்நாபிந்நமிதம் தத்ர ஜகதுஷே வந்த்யா மமாம்பேதிவத்
நூத்நப்ரஹ்மவிதே ரஹ: பரமிதம் ரங்கேந்த்ர ! தே சக்ஷதாம் ॥

[ஸ்ரீரங்கநாதரே! 'ஸ்யாதஸ்தி, ஸ்யாந்நாஸ்தி' இத்யாதியான ஸப்தபங்கி என்னும் துர்மார்க்கத்தை அங்கீகரித்து, தேவரீருடைய விபூதியான எல்லாவுலகையும் ஜைநமதத்தில் அநேகாந்தமாகச் (பலபடிப்பட்டதாகச்) சொல்லுகின்றனர். அதுபோலவே 'என் தாய் மலடி' என்றாப்போலே இவ்வுலகை பின்னமாகவும் அபின்னமாகவும் சொன்ன நவீன ப்ரஹ்மஜ்ஞானியான பேதாபேத வாதியிடம், அந்த ஜைநர்கள் (தங்களுடைய ஸப்தபங்கியாகிற) இந்தப் பரமரஹஸ்யத்தை உபதேசிக்கட்டும்.] என்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே பட்டர்

அருளியது அநுஸந்திக்கத்தக்கது. (அயர்த்தார் பவுத்தர்) பௌத்தரும் அறிவுகெட்டவர்களே. ஏனெனில்; அவர்கள் அறிபவனான ஜீவனையே ஒப்புக்கொள்ளவில்லை. அறிவையும் க்ஷணிகமாகக் கொண்டார்கள். இப்படிப்பட்டவர்கள் ஈச்வரனை அறிய ப்ரஸக்தியேயில்லையன்றோ. (சிவப்பட்டார் சிறியார்) சிவனிடத்திலே ஈடுபட்டவர்கள் அறிவில் சிறியாராயினர். ப்ரமாணத்தை ஒருவிதமாக அங்கீகரித்தனர் இவர்கள். பௌத்தர்களையும், ஜைநர்களையும்போலன்றிக்கே வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்தனர். ஆனால் அத்துடன் கூட மோஹநசாஸ்த்ரங்களான ஆகமங்களையும் ப்ரமாணமாகக் கொள்ளுகையாலே ப்ரமாணத்தால் அறியப்படும் ப்ரமேய வஸ்துவை உள்ளபடி அறியமாட்டாதவராயினர். நிமித்தகாரணமும், உபாதானகாரணமுமாயிருப்பவன் ஸர்வேச்வரனே என்று எல்லா வேதங்களும் ஓதியிருக்க அவன் நிமித்தகாரணம் மட்டுமேயென்றனர். ஸர்வேச்வரன் யாரென்று நிர்ணயிக்கும் விஷயத்திலும், நாராயணனைவிட்டு நரன் ஒருவனைப் பிடித்தனர்; ராஜாதிராஜனிருக்க பிக்ஷுவைப் பற்றினர்; புண்டரீகாக்ஷனிருக்க விரூபாக்ஷனைக் கொண்டனர். ஆகையால் இவர்களும் சிற்றறிவினரேயாயினர்.

(செப்பில்) இவர்களைப் பேசப்புகுந்தால். அதிநிஹீனர்களான இவர்களைப்பற்றிப் பேசுவதும் வெறுக்கத்தக்கதாயுள்ளது. ஸாத்விகர்களையும் கோபமடையச்செய்யும் வார்த்தைகளையும் ஆசாரங்களையும் உடைய இவர்களைப்பற்றிப் பேசுவதும் பகவத்பக்தர்களுக்குப் பரிஹரணீயமாகவேயுள்ளது. ஆயினும் உண்மையைப் பிறர்க்கு உணர்த்த வேண்டி இவர்களைப் பேசப்புகுந்தால். (வெறி ஆய) "ஸர்வகந்த:" [எல்லா கந்தங்களையுமுடையவன்] என்று வேதங்களும் புகழ்ந்தபடியே ஸுகந்தங்களெல்லாம் ஓர் வடிவெடுத்ததுபோலே யிருப்பவன். இத்தால் இவனுடைய நிரதிசயபோக்யத்வம் [அனுபவிக்கத்தகுந்தவைகளில் மிகச்சிறந்ததாயிருக்கும் தன்மை] சொல்லப்பட்டது. "புஷ்பாதிகளுக்குக்கூட கந்தமுள்ளதே; அதுகொண்டு ஓரேற்றமுண்டோ" என்ன,—(மாயவனை) ஆச்சர்யபூதனை; ஆச்சரியத்தை விளைக்கும் ஸ்வரூபரூபகுண விபூதிகளை உடையவனை. ஆச்சரியகரமாயிருப்பதால் மாயை எனப்படும் ப்ரக்ருதியை நியமிப்பதால் மாயவன் எனப்படுபவனை என்றும் கொள்ளலாம். "மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாயி

நந்து மஹேச்வரம்” [ப்ரக்ருதியை மாயையென்றும், மஹேச்வரனை மாயியென்றும் அறியக்கடவன்] என்னும் வேதவாக்யத்தை நினைப்பது.

ஆச்சரியபூதனாயிருந்தாலும், இரக்கமற்றவனாயிருப்பனோ? என்ன, (மாலவனை) அடியாரிடத்தில் அன்பே வடிவெடுத்தவனாயிருப்பவனை. (மாதவனை) இவ்வளவுக்கும் மேலே லக்ஷ்மீநாதனாயிருப்பவனை. ஆச்ரிதவ்யாமோஹத்திற்கு குருகுலவாஸம் பண்ணினவிடம். (ஏத்தாதார்) துதிக்காதவர்களாயுள்ளனர். (ஆதலால் ஈனவரே இன்று) இவர்கள் ஏத்தாமையாலே இப்போது நிஹீனர்களாகவேயுள்ளனர். (வெறியாய....ஏத்தாதார் ஈனவரே) ஒப்பற்ற போக்யவஸ்துவைத் துதிக்காதார் உயர்ந்தோராவரோ? (மாயவனை ஏத்தாதார் ஈனவரே) ஆச்சரியபூதனைப் புகழாதவர் அறிவிற்சிறந்தோராவரோ? (மாலவனை ஏத்தாதார் ஈனவரே) அன்புருவனைப் போற்றாதார் நன்னெஞ்சராவரோ? (மாதவனை ஏத்தாதார் ஈனவரே) காருண்யரூபையான இவள் ஸம்பந்தத்தைப் பார்த்தும் புகழாதவர் ஹீனர்கள் என்பதைச் சொல்லவும் வேணுமோ? (இன்று ஈனவரே) காலாந்தரத்திலே இவர்கள் பகவத்பரர்களாகி உத்க்ருஷ்டராவதற்கு யோக்யதையுண்டாகையாலே 'இப்போது ஹீனராகவேயுள்ளனர்' என்கிறார்.

7. இன்றாக நாளையேயாக இனிச்சிறிது
நின்றாக நின்னருளென் பாலதே—நன்றாக
நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே
நீயென்னை யன்றி யிலை.

பதவுரை:—நாரணனே—நாராயணனே!, இன்று ஆக—இன்றைக்காகவுமாம்; நாளையே ஆக—நாளைக்காகவுமாய்; இனி சிறிது நின்று ஆக—இன்னம் சிறிது காலம் கழித்தாகவுமாய்; (என்றைக்கானாலும்) நின் அருள்—உன்னுடைய கிருபை, என் பாலதே—என்னையே விஷயமாக வுடையதாகும்; நன்று ஆக—நிச்சயமாக, நான் உன்னை அன்றி இலேன் கண்டாய்—நான் உன்னையொழியப் புகலில்லாதவன்காண்; நீ—நீயும், என்னை அன்றி இலை—என்னையொழிய வேறொரு ரக்ஷ்யனை உடையையல்லைகாண்.

பெரி—வ்யா—ஏழாம்பாட்டு—(இன்றாக வித்யாதி) இன்றாகவுமாம்; நாளையாகவுமாம்; சிறிது காலம் கழித்தாகவுமாம். காலவிளம்பமே. உன் ப்ரஸாதம் என் பக்கலிலே. (நன்றாக வித்யாதி) கால விளம்ப

மென்றும், என் பக்கலிலென்றும் சொல்லிற்று எத்தாலே யென்னில்: அகிஞ்சனனாக ஸம்ப்ரதிபன்னனான எனக்கு உன்னையொழிய வேறொரு அபாச்ரயமில்லாமையாலே. (நாரணனே நீ என்னையன்றியிலை) பூர்ண னான உனக்கு அபூர்ணனான என்னையொழிய அபாச்ரயமில்லை. உன் னுடைய ஶேஷித்வஸ்வரூபத்தாலும் என்னுடைய ஶேஷத்வஸ்வரூபத் தாலும் விடப்போகாது.

திவ்ய—அவ—"எவர் எக்கேடுகெட்டாலென்ன? பிரானே! நான் உன் அருளைப் பெறுவது நிச்சயம்" என்று ஸந்துஷ்டராகிறார் இப் பாட்டில்.

வ்யா:—(இன்றாக நாளையேயாக இனிச்சிறிது நின்றாக நின்னருள் என் பாலதே) இன்றோ, நாளையோ, அல்லது இன்னம் சில நாள் கழிந்தபின்போ உன்னுடைய அருள்வெள்ளம் என்மேல் ஏறிப்பாயவே போகின்றது. காலதாமதமேயொழிய, உன்னுடைய அருள் என் னிடத்திலே வெள்ளமிடப்போகிறதென்பது திண்ணம். இப்படிச் சொல்லக் காரணமென்? என்ன,—(நன்றாக நானுன்னையன்றியிலேன் கண்டாய்) நிச்சயமாக நான் உன்னையொழிய வேறொரு கதியற்றவன். அன்றிக்கே, 'நன்றாக நான்' என்றது 'நன்றாகவுள்ள நான்' என்ற தாகவுமாம்; உன்னையொழிய வேறொரு கைம்முதலற்றவனாயிருக்கை யாகிற நன்மையையுடைய நான் என்றபடி. உன்னையும் வேறொன்றை யும் நான் பற்றியிருந்தாலன்றோ "ஏஷ பந்தா விதர்ப்பாணாம் ஏஷ யாதி ஹி கோஸலாந்"[இது விதர்ப்பதேசம் போகும் வழி; இது கோஸல தேசத்திற்குச் செல்லும் வழி.] என்று நளன் தமயந்திக்கு வழிகாட்டிப் போகவிட்டாப்போலே 'இது கர்மயோகம், இது ஜ்ஞாநயோகம், இது பக்தியோகம்' என்று நெறிகாட்டி நீக்குவது. 'நானே உபாயமாகிறேன் என்பதற்கு ப்ரமாணமுண்டோ?' என்ன,—(நாரணனே) நரஸமூஹ மாகிற ஜீவர்களுக்கு ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவுமிருப்பவன் என் பதைக் காட்டும் உன் திருநாமமே இவ்வர்த்தத்தில் ப்ரமாணம் என்கிறார். நாராயணஶப்தார்த்தம் இப்படியன்றோ இருப்பது:—

"நாரஶப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை: |
கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத: ||"

[நாரஶப்தத்தாலே ஜீவர்களுடைய ஸமூஹம் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு ப்ராப்யமாகவும், ப்ராபகனாகவுமாகிறானாகையால் நாரா

யணனென்று சொல்லப்படுகிறான்.] (நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே) "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:க்கித:" [மனிதர்கள் துன்புறும்போது அவர்களிலும் அதிகமாகத் துன்புறுகிறான் ராமன்] என்று து:க்கியான என்னைக்காட்டிலும் என் துக்கத்தைப் பொறுக்கமாட்டாத உன்னையொழிய வேறொரு நாதனை உடையவனல்லேன். "உம்மிடம் ஓர் கைம்முதலில்லை என்கைக்காக உம்மிடம் நான் அருள்சுரந்தேயாகவேண்டுமோ?" என்ன,—(நாரணனே நீ என்னையன்றியிலை) உடையவனான நீ உடைமையாகிற என்னை ஏற்றுக்கொண்டாலொழியப் பூர்ணனாகமாட்டாய். யாசகனைப் பெற்றாலன்றோ கொடையாளிக்குப் பூர்த்தியுண்டாவது. அப்படியே குறைவாளனாகிற என்னை விஷயீகரித்தாலொழிய நீ நிறைவாளனாகமாட்டாய், (நாரணனே....) உன்னுடைய நாராயணத்வம் ஜீவிக்கவேண்டில் என்னிடம் நீ அருள்சுரந்தேயாகவேண்டும். ஆகையால் 'இன்றாக, நாளையேயாக இனிச்சிறிது நின்றாக நின்னருளென்பாலதே' என்று நான் சொன்னது பொருந்தியதேயாகும்.

"ததஹம் த்வத்ருதே ந நாதவாந்
மத்ருதே த்வம் தயநீயவாந் ந ச।
விதிநிர்மிதமேதந்வயம்
பகவந் பாலய மா ஸ்ம ஜீஹப:॥"

[ஆகையால் நான் உன்னையொழிய வேறொரு நாதனை உடையேனல்லேன்; நீயும் என்னையொழிய வேறொரு தயாபாத்திரத்தை உடையையல்லை. இந்த ஸம்பந்தம் உன்னுடைய கேவலக்ருபையாலே ஏற்பட்டது. ஸர்வஜ்ஞனே! இதை ரக்ஷித்தருளுவாயாக. கைவிட வேண்டாம்.] என்று ஆளவந்தார் இப்பாட்டில் சொன்ன அர்த்தத்தை அநுஸந்தித்தருளினார்.

[இப்பாட்டுக்கு வேறொரு வகையாகவும் அவதாரிகையும் வியாக்கியானமுமுண்டு. கீழே காண்க.]

அவ:—"ஆழ்வீர்! பிறர் இருக்கும்படிக்கு ஒரு பாசுரம் சொன்னீர்! நீருள்ளபடியை ஒரு பாசுரமிட்டுப் பேசலாகாதோ?" என்று எம்பெருமான் கேட்க, "பிரானே! என் மேல்வீடு பெறுவது என்றேனுமாக. உன் அருளை இன்றே பெற்றுவிட்டேன். உன்னைப்

பிரிந்தால் நான் ஸத்தையை இழக்கும்படியாகவும், என்னைப் பிரிந்தால் நீ ஸத்தையை இழக்கும்படியாகவும், இப்படிப் பரஸ்பரம் அன்புடைய ராளேம். இனி, எனக்கென்ன குறைவு?" என்கிருர் இப்பாட்டில்.

வ்யா:—(இன்ருக நாளையேயாக இனிச்சிறிது நின்ருக நின்னருளென்பாலதே) நான் பரமபதத்திலே உன்னைக் கிட்டுவது இன்றேயாகவுமாம், நாளையேயாகவுமாம், இன்னும் சிறிது காலம் கழித்தாகவுமாம்; அதைப்பற்றி எனக்கொரு கவலையில்லை. ஏனெனில்: (நின்னருள் என்பாலதே) உன்னுடைய அருளை நான் பெற்றுவிட்டேன். 'இதை எப்படி அறிந்தீர்' என்ன, (நன்ருக நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே) பிரானே! உன்னைப் பிரிந்தால் ஆத்மநாசம் அடையும்படியான தசையை அடைந்தேன் நான். (நீ என்னையன்றியிலை) என்னைப் பிரிந்தால் 'இல்லை' என்னும்படியான தசையை நீயும் அடைந்தாய். ஆகையால் உன் அருள் என்னிடம் பரிபூர்ணமாகப் பாய்ந்துவிட்டது. இனி பரமபதத்தை நான் இன்று பெற்ருலென்ன? என்று பெற்ருலென்ன? என்று ஸந்துஷ்டராகிருர்.

"என்னதாவிமேலையாய் ஏர்கோளேழுலகமும்
துன்னிமுற்றுமாகிநின்ற சோதிஞானமூர்த்தியாய்
உன்னதேன்னதாவியும் என்னதுன்னதாவியும்
இன்னவண்ணமேநின்ருய்! என்றுரைக்கவல்லேனே"

என்ற பாட்டிலே நம்மாழ்வாருக்குள்ள நிலை இப்பாட்டிலே இவருக்கு ஓடுகிறது. "நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே நீயென்னையன்றியிலை" என்னுமடிகள் "உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்" என்னுமடிகளுடன் பொருந்தியிருப்பதைக் காண்பது. "உன்னதென்னதாவியும்" என்றவிடத்தை ஆளவந்தார் நிர்வஹிக்கும்போது, 'இவ்வாத்மாவின் ஸ்வரூபம் அவனிட்டவழக்கென்ருல் கூடும். அவன் ஸ்வரூபம் இவனிட்ட வழக்காகையாவது என்?" என்று சிலர் கேட்க, "இவன் (ஜீவன்) தன்னை அவனுக்காக்குவன் என்றவன்று கர்மம் தகையவும் கூடும். ஸர்வேச்வரன் தன்னை இவனிட்ட வழக்காக்குமன்று நிவாரகர் (தடுப்பார்) இல்லை; ஆனபின்பு அதுவே நிலை நிற்பது. இன்னம், இவன் (ஜீவன்) ஸ்வரூபம் அவனிட்ட வழக்காகக் கூடுமோ? என்று இதிலே காணும் ஸந்தேஹிக்கவேண்டுவது''

என்றருளினரென்னும் ஐதிஹ்யம் இங்கும் அநுஸந்திக்கத்தக்கது. "நீயென்னையன்றியிலே" என்றவிடத்தில் "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" [ஞானியோவெனில், எனக்கு ஆத்மாவாகவேயிருக்கிறன் என்று என் ஸித்தாந்தம்] என்றும், "மம ப்ராணா ஹி பாண்டவா:" [பாண்டவர்கள் எனக்கு, ப்ராணனாகவேயிருக்கின்றனர்.] என்றும் பகவான் தானே அருளிச்செய்த பாசுரங்கள் அநுஸந்திக்கத்தக்கவை. "நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே" என்றவிடத்தில் "நாராணாம் அயநம் ய: ஸ:" [நரஸமூஹங்களுக்கு இருப்பிடமாயிருப்பவன்] என்னும் தத்புருஷஸமாஸார்த்தமும், "நீ என்னையன்றியிலை" என்றவிடத்தில் "நாரா: அயநம் யஸ்ய ஸ:" [நரஸமூஹங்கள் எவனுக்கு இருப்பிடமோ அவன் நாராயணன்] என்னும் பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தமும் சொல்லப்படுவதாகவும் உரைப்பர். நாரணனே! என்னும் பதத்திற்கு முன்னும் பின்னும் நாராயணசப்தத்திற்குள்ள பொருள்களெல்லாம் அநுஸந்திக்கப்படுகின்றன. "நாரணனே நீ என்னையன்றியிலை" என்றதாலே "நாரனுகிற உன்னிடம் ஸம்பந்தம் பெற்ற என்னையே நீ இருப்பிடமாகவும், ப்ராப்யமாகவும் கொண்டிருக்கிறாய்; அதனாலேயே நாராயணனாகிறாய்" என்பதோர் பொருளும் தோற்றுகிறது. "நண்ணித்தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணா" என்று பெரியாழ்வாரும் நாராயணசப்தத்திற்கு இப்படிப் பொருள் கொண்டாரன்றோ.

8. இலைதுணை மற்றென் னெஞ்சே ஈசனைவென்ற
சிலைகொண்ட செங்கண்மால் சேரா—குலைகொண்ட
ஈரைந் தலையா னிலங்கையை யீடழித்த
கூரம்ப னல்லால் குறை.

பதவுரை:—என் நெஞ்சே—எனது மனமே!, ஈசனை வென்ற—ருத்ரனை ஜயித்த, சிலைகொண்ட—வில்லை தரித்த, செம் கண் மால்—புண்டரீகாக்ஷனாகிய தன்னை, சேரா—பணிந்து உய்வுபெறமாட்டாதொழிந்த, குலைகொண்ட ஈரைந்தலையான்—கொத்துப்போலே நெருங்கிக்கிடந்த பத்துத் தலைகளையுடையவனான இராவணனுடைய, இலங்கையை—லங்காபுரியை, ஈடு அழித்த—சீர்கெடுத்த, கூர் அம்பன் அல்லால்—கூர்மைதங்கிய அம்புகளையுடையவனை இராமபிரானைத்

தவிர்த்து, குறை—(*நாம்*) *குறைபடும் காலங்களில்*, மற்று துணை—வேறொரு துணைவன், இலே—*நமக்கு* இல்லை.

பெரி-அவ-எட்டாம் பாட்டு—(இலே துணை) "புகையில் உண்பன் என்று கொண்டு சொல்லி உன்னையொழிய வேறொன்று அறியேன் என்கிற தென் என்னில், வேறுள்ளது கழுத்துக்கட்டியாகையாலே" என்கிறார்.

வ்யா:—(இலே துணை மற்று) ஸர்வேச்வரன் துணையென்கையன்று ஸாத்யம்; மற்றுள்ளார் துணையன்றென்கை. (என்னெஞ்சே) இவ்வர்த்தம் சொல்லுகைக்குப் பாங்கான நெஞ்சே! (ஈசனையித்யாதி) வேறொருத்தர் துணையல்லரென்றது—வேறொரு பூர்ணரில்லாமையால் என்கிறது: ருத்ரனை வென்ற தநுஸ்ஸைப்பிடித்த புண்டரீகாக்ஷனன ஸர்வேச்வரன் வந்து அவதரித்தவிடத்திலும் **"ந நமேயம்"** (ந நமேயம்) என்று. "கோத்துத் தலைவன்" என்னும்படி பத்துத் தலையையுடைய ராவணனுடைய லங்கையை மூலையடியே வழிபோக்கின அம்பின் கூர்மையையுடைய சக்ரவர்த்தித் திருமகனையொழிய நம்முடைய குறையில் வேறொருவர் துணையில்லை. *எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் அசேதநமான க்ரியா கலாபத்தினுடைய கூர்மையை விச்வஸித்திரார்கள். சக்ரவர்த்தித் திருமகன் அம்பின் கூர்மையையேயாயிற்றுத் தஞ்சமாக நினைத்திருப்பது.

திவ்ய-அவ:—"(*தம் வீட்டுச் சமையலறையில்*) *புகைந்தால் (அதாவது,—சமைக்கப்பட்டால்) உண்பது, இல்லையேல் பட்டினி கிடப்பது" என்னும் கொள்கையுடைய சில அறிவீனர்களைப்போல் நீரும் "நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே" என்று சொல்லலாமோ? வேறு சிலரைக்கொண்டு காரியங் கொள்ளலாகாதோ? என்ன, 'செங்கண்மாலைத் தவிர வேறொருவரும் ரக்ஷகரல்லர்; ரக்ஷகரல்லாததோடன்றியில், அவன் செய்யும் ரக்ஷணத்திற்குத் தடையையும் செய்வர்' என்று தம் நெஞ்சை நோக்கிச் சொல்லுகிறார்.*

---

* "*எம்பெருமானார்....நினைத்திருப்பது" என்னும் ஸ்ரீஸூக்திகள் அச்சுப்பிரதிகளில் பின்வருமாறு பிழையாய்க் கிடக்கின்றன—"எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் அசேதனமான க்ரியா கலாபத்தினுடைய கூர்மையை விச்வஸித்திருப்பர்கள். இவர்கள் சக்ரவர்த்தித் திருமகன் அம்பின் கூர்மையைத் தஞ்சமாக நினைத்திருப்பர்கள்" என்று. இது பிழையென்பது தெளிவு. பல ஓலைச்சுவடிகளில் நாம் மேலே அச்சிட்டிருக்கிறபடியுள்ளது.*

வ்யா:—(இலைதுணை மற்று) எம்பெருமான் துணையென்று அறிவதுகூட அவ்வளவு முக்கியமன்று; மற்றவர்கள் துணையன்றென்று அறிகையே மிகவும் முக்கியமாகும். திருவடிதன் நாமம் மறந்தும் புறந்தொழாதிருப்பார்களாகில் வைஷ்ணவத்வஸித்தியுண்டன்றோ. இத்தை அடியொற்றியன்றோ பிள்ளையுலகாசிரியரும் "அதிலும் அந்ய ஶேஷத்வம் கழிகையே ப்ரதாநம்" என்று முமுக்ஷுப்படியில் அருளிச்செய்தார். (என் நெஞ்சே) இவ்வர்த்தத்தை நான் உபதேசிக்கக் கேட்கும்படி அநுகூலமாயிருக்கும் நெஞ்சே! (என் நெஞ்சே) "சஞ்சலம் ஹி மந:" [மனம் சஞ்சலமானது] என்னும் பிறர் நெஞ்சு போலன்றே நீ. "வேறொருவரும் துணையல்லரென்று சொல்லக் காரணமென்?" என்ன, "இவன் ஒருவனே பரமாத்மாவாகையால்" என்ன, "இவன் ஒருவனே பரமாத்மாவென்று நிர்ப்பந்திக்கலாமோ? ருத்ராதிகளும் பரமாத்மாவாகச் சொல்லப்படுகின்றனரே" என்ன, "ருத்ராதிகளின் பரமாத்மத்வமிருந்தபடி கண்டாயே!" என்கிறார் அடுத்தபடியாக:—(ஈசனை வென்ற சிலை கொண்ட செங்கண் மால்) ருத்ரனை வென்ற வில்லைப் பிடித்த புண்டரீகாக்ஷனே ஸர்வேச்வரன். இவ்விருத்தாந்தம் ஸ்ரீ ராமாயணத்தில் பாலகாண்டத்தில் பரசுராமனால் ராமனுக்கு விவரிக்கப்பட்டுள்ளது.

"இமே த்வே தநுஷீ ச்ரேஷ்டே திவ்யே லோகாபிவிச்ருதே।
த்ருடே பலவதீ முக்யே ஸுக்ருதே விச்வகர்மணா॥
அதிஸ்ருஷ்டம் ஸுரைரேகம் த்ர்யம்பகாய யுயுத்ஸவே।
த்ரிபுரக்நம் தநு: ச்ரேஷ்டம் பக்நம் காகுத்ஸ்த யத் த்வயா॥
இதம் த்விதீயம் துர்தர்ஷம் விஷ்ணோர் தத்தம் ஸுரோத்தமை:।
ததிதம் வைஷ்ணவம் ராம தநு: பரபுரஞ்ஜயம்॥
ஸமாநஸாரம் காகுத்ஸ்த ரௌத்ரேண தநுஷா த்விதம்॥
ததா து தேவதா: ஸர்வா: ப்ருச்சந்தி ஸ்ம பிதாமஹம்।
ஶிதிகண்டஸ்ய விஷ்ணோஶ்ச பலாபலநிரீக்ஷயா॥
அபிப்ராயம் து விஜ்ஞாய தேவதாநாம் பிதாமஹ:।
விரோதம் ஜநயாமாஸ தயோ: ஸத்யவதாம் வர:॥
விரோதே ச மஹத் யுத்தமபவத் ரோமஹர்ஷணம்।
ஶிதிகண்டஸ்ய விஷ்ணோஶ்ச பரஸ்பரஜிகீஷிணோ:॥
ததா து ஜ்ரும்பிதம் ஶைவம் தநுர் பீமபராக்ரமம்।
ஹுங்காரேண மஹாதேவ: ஸ்தம்பிதோऽத த்ரிலோசந:॥ [ஸு-64]

தேவைஸ் ததா ஸமாகம்ய ஸர்ஷிஸங்கைஸ் ஸசாரணை:।
யாசிதௌ ப்ரஹ்மம் தத்ர ஜக்மதுஸ் தௌ ஸுரோத்தமௌ॥
ஜ்ரும்பிதம் தத்தநுர் த்ருஷ்ட்வா ஶைவம் விஷ்ணுபராக்ரமை:।
அதிகம் மேநிரே விஷ்ணும் தேவாஸ் ஸர்ஷிகணாஸ் ததா॥''

[ராம! தேவலோகத்தைச் சேர்ந்தவையாய், உலகமெங்கும் புகழ்பெற்றவையாய், சிறந்தவையாய், உறுதியுள்ளவையாய், பலமுள்ளவையாய், ப்ரதானமானவையான இவ்விரண்டு விற்களும் விச்வகர்மாவினால் நன்றாக நிர்மாணம் செய்யப்பட்டன. இவைகளில் ஒன்று (த்ரிபுர தஹனகாலத்தில்) போர் செய்ய விரும்பிய முக்கண்ணனிடம் கொடுக்கப்பட்டது. திரிபுரங்களையும் எரிப்பதற்கு உபகரணமாயிருந்ததும், சிறந்ததுமான அந்த வில்லே உன்னால் (ஜநகஸபையில்) முறிக்கப்பட்டது. அணுகவும் முடியாததான இவ்விரண்டாவது வில் தேவச்ரேஷ்டர்களால் விஷ்ணுவுக்குக் கொடுக்கப்பட்டது. பர புரங்களை ஜயிக்கவல்ல இந்த வைஷ்ணவ தநுஸ்ஸானது சிவதநுஸ்ஸுடன் ஸமமான பலத்தையுடையது. அப்போது தேவதைகள் அனைவரும் விஷ்ணு சங்கரர்களுடைய பலாபலத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று பிரமதேவனை வினவினார்கள். ப்ரஹ்மஜ்ஞானிகளுள் சிறந்தவரான அந்த ப்ரஹ்மதேவர் விஷ்ணு ருத்ரர்களுக்குள் விரோதத்தை உண்டுபண்ணினார். விரோதமுண்டாகிவிடவும், ஒருவரையொருவர் ஜயிக்க விரும்பிய சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் மயிர்க்கூச்செறியும் படியான பெரும்போர் விளைந்தது. அப்போது (திரிபுரமெரித்தல் முதலான) பயங்கரமான செயல்களைச் செய்த சிவனுடைய வில் (விஷ்ணுவினுடைய) ஒரு ஹுங்காரத்தினாலேயே சிறிது முறிந்துவிட்டது. மஹாதேவனான முக்கண்ணனும் (மூர்ச்சையடைந்து) கம்பமாய் நின்றார். ருஷிஸமூஹங்களோடும், சாரணர்களோடும் கூடிய தேவர்களால் ஒன்றுகூடி யாசிக்கப்பட்ட அவ்விரு தேவச்ரேஷ்டர்களும் ஸமாதானத்தையடைந்தனர். அப்போது விஷ்ணுவின் பராக்கிரமத்தால் சிவதனுஸ்ஸானது முறிபட்டதைக் கண்ணாலே கண்ட ரிஷிகணங்களோடு கூடிய தேவர்கள் விஷ்ணுவே சர்வாதிகனென்று அறிந்தனர்.] என்பவை ஸ்ரீ வால்மீகி ராமாயணத்திலுள்ள சுலோகங்கள். இந்த விருத்தாந்தத்தை நினைத்தே இங்கு ''ஈசனை வென்ற சிலை கொண்டசெங்கண்மால்'' என்று ஆழ்வார் அருளிச்செய்திருக்கிறார்.

இங்கு ஒரு சிறிய விசாரம்: சிவனுடைய வில் வலியுள்ளதா, விஷ்ணுவினுடைய வில் வலியுள்ளதா என்பதை அறிவதற்காகவே சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சண்டை மூட்டப்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர். அக்கருத்து வால்மீகிராமாயண வாக்கியங்களுக்குப் பொருந்தாது. "ஶிதிகண்டஸ்ய விஷ்ணோஶ்ச பலாபலநிரீக்ஷயா" [சிவனுடையவும், விஷ்ணுவினுடையவும் பலாபலங்களை அறிவதற்காக] என்று ஸ்பஷ்டமாகவே ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. "ஸமாந ஸாரம் காகுத்ஸ்த ரௌத்ரேண தநுஷா த்விதம்" [விஷ்ணுவின் வில்லும் ருத்ரதநுஸ்ஸோடு ஒத்த பலத்தையுடையது] என்று தெளிவாகவே சொல்லப்பட்டிருப்பதால் விற்களின் பலாபலத்தைப் பற்றிய விசாரம் வர ப்ரஸக்தியில்லை. கடைசியிலும் "அதிகம் மேநிரே விஷ்ணும் தேவாஸ் ஸர்ஷிகணாஸ் ததா" [ரிஷிகணங்களோடு கூடிய தேவர்கள் விஷ்ணுவை ஸர்வாதிகனென்று அறிந்தார்கள்.] என்று விஷ்ணுவினுடைய ஸர்வாதிகத்வத்தைப்பற்றி ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ஆகையால், விற்களின் பலாபலத்தையறிவதற்காக யுத்தம் மூட்டப்பட்டது என்னும் கருத்து வால்மீகியுகந்ததல்ல. [அக்கருத்து வேறு சில ராமாயணங்களிலுண்டு] நிற்க, வியாக்கியானத்தைத் தொடர்வோம். (ஈசனை வென்ற சிலை) "ஈஶோऽஹம்" என்னும் அபிமானத்தையுடைய ருத்ரனை வெற்றிகொண்ட சிலை. "கூருகிரே யறிந்ததல்லால் கோவே நீயறியாயால்" என்றாற்போலே இச்சிலையே அவனை ஜயித்தது என்று சொல்லும்படி அவ்வளவு விளையாட்டாக ருத்ரனுடன போர்புரிந்தபடியை உணர்த்துகிறார். அன்றிக்கே "ஈசனை வென்ற செங்கண்மால்" என்றும் கூட்டலாம். (சிலை கொண்ட) வில்லை தரிக்கும் காரியத்தையே எம்பெருமான செய்தது. ஜயிக்கும் காரியத்தை வில்லே செய்துவிட்டது என்னும்படியிருக்கை. (செம் கண் மால்) ஈச்வரத்வத்தைக் காட்டும் சிவந்த கண்களையுடைய ஸர்வேச்வரன். "கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" [ஸூர்யனால் மலர்ந்த செந்தாமரைபோன்ற இருகண்கள் (அவனுக்குண்டு).] என்று புண்டரீகாக்ஷனன்றோ ஸர்வேச்வரனாக உத்கோஷிக்கப்பட்டான். (செம் கண் மால்) சிவந்த கண்களையுடையவனாய், ஆச்ரிதரிடத்தில் அன்பையுடையவனான ராமபிரான் என்றும் பொருள்கொள்ளலாம். "ராமோ ராஜீவலோசந:" "ராம: கமலபத்ராக்ஷ:" என்று செந்தா

மரைக்கண்ணனைச் சொல்லப்பட்டானன்றோ இவன். 'செம் கண்' ஐச்வர்யத்தையும், அன்பையும் காட்டும். 'மால்' என்னும் பதம் 'பெரியோன்' என்றும், 'அன்பன்' என்றும் பொருள்படும். (இலை துணை மற்றென்னெஞ்சே ஈசனை வென்ற சிலைகொண்ட செங்கண்மால்) வெற்றிகொண்ட ஸர்வாதிகன் துணையாவனோ, வெல்லப்பட்ட ஈசன் துணையாவனோ என்று விசாரித்தாலாகாதோ? (செங்கண்மால் சேரா) ராமனாய் அவதரித்த புண்டரீகாக்ஷனாகிய அந்த ஸர்வேச்வரனை வணங்காத.

"த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயந்து கஸ்யசித்।
ஏஷ மே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ துரதிக்ரம:॥" [ரா-யு-36-11]

[இரண்டாகப் பிளக்கப்பட்டாலும் படுவேனேயொழிய இப்படி ஒருவருக்கும் வணங்கமாட்டேன். இது என்னுடன பிறந்ததான தோஷம். (அவரவர்களுடைய) ஸ்வபாவம் மீறமுடியாதன்றோ.] என்றன்றோ அவன் சொல்லுவது. (செங்கண்மால் சேரா) அன்புடைக் கமலக் கண்ணனைக் கண்டபின்பும் அவன் திருவடியிலே முடியைச் சாய்க்காதவொரு வ்யக்தியிருக்கும்படியென? (ஈசனை வென்ற....செங்கண்மால் சேரா) அநுகூலராயிருக்குமவர்களும் தாமஸகுணத்தின் ஆதிக்யத்தாலே ஒவ்வொரு சமயம் எதிரப்புகோக்கும்போது ப்ரதிகூலர் எதிரம்புகோக்கச் சொல்லவேணுமோவென்கை. இப்படி எம்பெருமானோடு பொருந்தாதவன் யாரெனில்: (குலைகொண்ட ஈரைந்தலையான்) கொத்துப் போலேயிருக்கும் பத்துத் தலைகளைக் கொண்ட ராவணன். "கொத்துத்தலைவன் குடிகெடத் தோன்றிய" [பெரியாழ் (1--9--3)] என்றாரன்றோ பெரியாழ்வாரும். (இலங்கையை ஈடழித்த) ராவணனுடைய லங்காபுரியைக் கட்டுக்கோப்பு குலைந்து போகும்படி செய்த. (கூரம்பனல்லால் குறை இலைதுணை) கூர்மையையுடைய அம்பைக் கொண்ட ராமபிரானையொழிய நம்முடைய குறை தீர்க்க வேறொருவரும் துணையில்லை. ருத்ராதிகளான சேதனரோடு அசேதனமான க்ரியாகலாபங்களோடு வாசியற நமக்குத் துணையாக மாட்டா. சக்கரவர்த்தித் திருமகனுடைய அம்பின் கூர்மையே பிராட்டிக்குப் போலே நமக்கும் தஞ்சமாகும். ஆழ்வார்கள் முடிவு கட்டின இவ்வரும்பொருள் சிறிது காலம் மங்கிக் கிடந்து, பிறகு எம்பெருமானார் அவதரித்தபின்பு மிகவும் விளங்கிற்று. இன்றள

வும், எம்பெருமானுர் ஸம்பந்தமுடையார் க்ஷணத்வம்ஸியான கர்மாதிகளையும், தேவதாந்தரங்களையும் ஸாதநமாகக் கொள்ளார்கள்.

9. குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர்ப்பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி—கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமே லேறக் கழுவினுன்
அண்டத்தான் சேவடியை யாங்கு.

பதவுரை:—நான்முகன்—பிரமதேவன், குறைகொண்டு—அபேக்ஷிதங்களைப் பெற்று, குண்டிகைநீர்—கமண்டல தீர்த்தத்தை பேய்து—வார்த்து, மறைகொண்ட—வேதங்களிலுள்ள, மந்திரத்தால்—புருஷஸூக்தம் முதலிய மந்திரங்களினுல், வாழ்த்தி—மங்களாசாஸநம்பண்ணி, ஆங்கு—(எம்பெருமான் உலகளந்தருளின) அக்காலத்தில், அண்டத்தான் சே அடியை—அந்த சர்வேச்வரனுடைய திருவடிகளை, கறைகொண்ட கண்டத்தான் சென்னிமேல் ஏற—விஷகண்டனை ருத்ரனுடைய தலையில் (ஸ்ரீபாத தீர்த்தம்) விழும்படியாக, கழுவினுன்—விளக்கினுன்.

பெரி—அவ—ஒன்பதாம்பாட்டு—(குறை) வேறொருத்தர் துணையில்லையென்றது, பூர்ணராக ஸம்ப்ரதிபந்நரானவர்களும் தந்தாம் குறையை இவனுக்கு அறிவித்துத் தங்கள் அபேக்ஷிதம் பெறுகையாலே என்கிருர்.

வ்யா:—(குறைகொண்டித்யாதி) சதுர்முகனுன தான் குண்டிகையிலே தர்மத்தை ஜலமாக உண்டாக்கி. (மறையித்யாதி) ஸ்ரீபுருஷஸூக்தாதிகளாலே மங்களாசாஸநம் பண்ணி. (அண்டத்தான் சேவடியைக் கறைகொண்ட கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினுன்) திருவுலகளந்தருளின ஸர்வேச்வரன் திருவடிகளை அக்காலத்திலே நீலகண்டனுடைய சிரஸ்ஸிலே படும்படியாகக் கழுவினுன். ஸாஹஸிகரான ப்ரஜைகள் வழியே போய் வழியே வரவேணுமென்று தீர்த்தத்தை மேலே தெளிப்பாரைப்போலே.

திவ்ய—அவ—சென்ற பாட்டிலே "நமக்குக் குறைபடும்போது வேறு தஞ்சமில்லை" என்ருர். "பூர்ணராக நினைக்கப்படுகிற ப்ரஹ்மருத்ராதிகளும் குறைபடும் போது பகவானைப் பற்றியே தங்கள் குறைகள் தீரப்பெறுகிருர்கள்" என்று காட்டுவதன் மூலம் முன்பாட்டிலே சொன்ன அர்த்தத்தை த்ருடீகரிக்கிருர் இப்பாசுரத்தில்.

வ்யா:—(குறை கொண்டு) அபேக்ஷிதங்களைப் பெற்று, மஹாபலியானவன் இந்திராதி தேவர்களை நலிந்து அவர்களுடைய ராஜ்யங்களை அபஹரித்துக்கொண்டவளவில் பிரமன் முதலான தேவர்கள் ஸர்வேச்வரனிடம் தாங்கள் இழந்த ராஜ்யங்களை மீட்டுத்தரவேண்டும் என்று அபேக்ஷிக்க, எம்பெருமானும் வாமனவுருக்கொண்டு மஹாபலியிடம் சென்று மூவடி மண் யாசித்துப் பெற்று, திரிவிக்ரமனாக வளர்ந்து தேவர்களுக்குக் குடியிருப்பைக் கொடுத்தானன்றோ. அத்தை நினைக்கிறார். "உங்கள் குறை யாது" முதலான விடங்களிலே 'குறை' என்னும் பதம் அபேக்ஷிதங்களைக் குறித்தும் பிரயோகிக்கப்படுவதைக் காண்க. "தந்தாம் குறையை இவனுக்கு அறிவித்துத் தங்கள் அபேக்ஷிதம் பெறுகையாலே" என்னும் ஆச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திக்கு இப்பொருளே பொருந்தியிருப்பது. அரும்பதவுரையிலோவெனில் "குறைகொண்டு—ஆகிஞ்சந்யாதிகளை முன்னிட்டுக் கொண்டு" என்ற பொருள் காண்கிறது. தன்னுடைய நைச்யத்தை அநுஸந்தித்துக்கொண்டு என்றபடி. இப்பொருளிலும் விரோதமொன்றுமில்லையாயினும் ஆச்சான்பிள்ளை திருவுள்ளம்பற்றியதன்றிது. (நான்முகன் குண்டிகை நீர்பெய்து) அபேக்ஷிதம் பெற்ற க்ருதஜ்ஞதையாலும், வருத்த விஷயமாகையாலும் தன்னுடைய கமண்டலத்திலே தர்மத்தை ஜலமாக்கி, அத்தாலே எம்பெருமானுடைய திருவடிகளைக் கழுவினான். (மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி) ஸுகுமாரனை திருவடிகளால் காடுமேடையெல்லாம் அளந்தருளிற்றே! என்று வயிறு பிடித்து புருஷஸூக்தாதிகளான வேதமந்திரங்களாலே மங்களாசாஸனம் பண்ணி. (கறைகொண்ட கண்டத்தான் சென்னிமேலேறக் கழுவினான்) தகப்பனின் தலையைக் கிள்ளியதாலுண்டான ப்ரஹ்மஹத்திபாபம் தீருவதற்காக விஷகண்டனை சிவனுடைய தலையிலே படும்படி திருவடியை விளக்கினான். (கறைகொண்ட கண்டத்தான்) ஆலகால விஷத்தை அருந்தி தேவர்களை ரக்ஷித்தோம் என்னும் மதிப்புடனிருக்கும் நீலகண்டன். (சென்னிமேல் ஏறக் கழுவினான்) அவனுடைய தலையிலே எம்பெருமானுடைய ஸ்ரீபாத தீர்த்தம் படும்படியாக விளக்கினான். (அண்டத்தான் சேவடியை) அண்டக் குலத்துக்கு அதிபதியானவன் திருவடியை ஓரண்டத்துக்குப் பதியாயிருக்குமவன் அண்டத்தினுள்ளேயிருக்கும் தன் பிள்ளையி

னுடைய பாபம் தீருவதற்காகக் கழுவினுன். அவனிப்படிச் செய்தது ஸாஹஸச் செயல்களைச் செய்யப் புறப்படும் பிள்ளைகளின் தலையிலே அவர்கள் க்ஷேமமாகப் போய்வருவதற்காக மந்த்ரஜலத்தைத் தெளிக்கும் தந்தையரின் செயலை ஒத்திருந்தது. இப்பாட்டுக்கு ஸம்வாதமாக

"த்ரவீபூதஸ் ததா தர்மோ ஹரிபக்த்யா மஹாமுநே।
க்ருஹீத்வா தர்மபாநீயம் பதம் நாதஸ்ய துஷ்டயே॥
க்ஷாளிதம் பரயா பக்த்யா பாத்யார்க்யாதிபிரர்ச்சிதம்॥
ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார ஶிரஸா ஹர:।
பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோऽஸ்மீத்யவதாரணாத்॥
வர்ஷாயுதாந்யத பஹூநி ந முமோச ததா ஹர:॥

[ரிஷச்ரேஷ்டரே! (பகவான் திருவுலகளந்தருளின) அச்சமயம் ஹரியினிடம் பக்தியினுல் தர்மம் ஜலமாயிற்று. தர்மமாகிய அந்த ஜலத்தையெடுத்து, ஜகந்நாதனுடைய ஸந்தோஷத்திற்காக (அவனுடைய) திருவடியானது (பிரமனுகிற என்னுல்) மேலான பக்தியுடன் விளக்கப்பட்டது. பாத்யம், அர்க்யம் முதலியவைகளாலும் பூஜிக்கப்பட்டது. விழுந்த அந்த ஜலத்தைப்பார்த்து 'நான் (பரிசுத்தப்படுத்த) தகுந்தவனுயிருக்கிறேன்' என்று நிச்சயித்து, சிவன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வதற்காக ஜடையின் நடுவில் தலையால் தாங்கினுன். பிறகு, பல பதினுயிரக்கணக்கான வருஷங்கள் ருத்திரன் அப்படியே (அதை) விடவில்லை] என்னும் ஈச்வரஸம்ஹிதாவசனம் அநுஸந்திக்கத்தக்கது.

10. ஆங்கார வார மதுகேட்டு அழலுமிழும்
பூங்கா ரரவணையான் பொன்மேனி—யாங்காண
வல்லமே யல்லமே? மாமலரான் வார்சடையான்
வல்லரே யல்லரே வாழ்த்து.

பதவுரை:—ஆங்கு-அத்திரிவிக்கிரமாவதார காலத்தில், ஆரவாரம் அது கேட்டு—ப்ரஹ்மாதிகளுடைய ஸ்தோத்ர கோஷத்தை கேட்டு, (அஸுரர்கள் வந்து ஆரவாரம் செய்வதாக பிரமித்து) அழல் உமிழும்—விஷாக்நியைக் கக்குகின்ற, பூ கார் அரவு அணையான்—அழகிய சீற்றத்தையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய எம்பெருமானது, பொன் மேனி—அழகிய திருமேனியை, யாம்—(அநந்யபக்த

ரான) நாம், காண—ஸேவிப்பதற்கு, வல்லம் அல்லமே—ஸாமர்த்திய முடையோமல்லோமோ? (நாம் ஸமர்த்தரேயாவோம்), மா மலரான்—சிறந்த பூவிற் பிறந்த பிரமனும், வார் சடையான்—நீண்ட ஜடையை யுடைய ருத்ரனும், வாழ்த்து—(எம்பெருமானை) வாழ்த்துவதில், வல்லர் அல்லரே—அஸமர்த்தர்களே.

பெரி–வ்யா:–பத்தாம்பாட்டு—(ஆங்காரவாரமது கேட்டு) "திசை வாழியெழ" என்னும்படி திருவுலகளந்தருளினபோதுண்டான வார்த்தை கேட்டு. (அழலுமிழும்) "விடங்காலும் தீவாயரவணை" என்னும்படியே. (பூங்காரரவணையான்) அழகிய சீற்றத்தையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடையவனுடைய. சேஷிபக்கல் பரிவாலே வந்த சீற்ற மாகையாலே ஆலத்தி வழிக்கவேண்டும்படியிருக்கிறபடி. (பொன்மேனி யாங்காணவல்லமே யல்லமே) அவனுடைய ஸ்ப்ருஹணீயமான திரு மேனி ஸ்வரூபத்துக்கு மேல் ஒன்றில்லையென்றிருக்கிற நமக்குக் காணக் குறையுண்டே? (மாமலரானித்யாதி) திருநாபீகமலத்திலே அவ்யவதா நேந பிறந்தேனென்றும், ஜடை தரையிலே தாழும்படி ஸாதநாநுஷ்டாநம் பண்ணினேனேன்றும் ஸ்வசக்தியில் குறைய நினையாத ப்ரஹ்மருத்ரா திகள் வாழ்த்தமாட்டாரே.

திவ்ய-அவ—"ப்ரஹ்மருத்ரர்களோடு உம்மோடு வாசியறத் தங்கள் தங்கள் குறையிலே ஸர்வேச்வரனே தஞ்சமென்றீர். அப்படி யாகில், உமக்கும் ப்ரஹ்மருத்ரர்களுக்கும் வாசியேயில்லையோ?" என்று கேட்க, "நெடுவாசியுண்டு. அவனருளாலே அவனைக் கண்ட நான் அவனை ஸாக்ஷாத்கரிக்கவும் வல்லேன். தம் முயற்சியாலே அவனைக் காணவிருக்கும் ப்ரஹ்மருத்ரர்கள் அவனைத் துதிக்கவும் வல்லரல்லர்" என்கிறார் இப்பாட்டில்.

வ்யா:—(ஆங்கு) "கழுவினான்....ஆங்கு" என்று முன் பாசுரத்தில் சொன்ன திரிவிக்கிரமாவதாரகாலத்தில். (ஆரவாரம் அது கேட்டு) "மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி" என்கிறபடியே ப்ரஹ்மாவும் "திசை வாழியெழ" [திருவாய் (7-4-1)] என்றும்,

"ஸங்கைஸ் ஸுராணும் திவி பூதலஸ்தைஸ்
ததா மநுஷ்யைர் ககநே ச கேசரை:।
ஸ்துத: க்ரமாந் ய: ப்ரசகார ஸர்வதா
மமாஸ்து மாங்கள்ய விவ்ருத்தயே ஹரி:॥" [விஷ்ணுதர்மம்]

[எல்லாவுலகிலுமுள்ள தேவமனுஷ்யாதி ஸர்வபூதங்களாலும் துதிக்கப்பட்டவனாய், எவன் திருவுலகளந்தருளினானோ, அந்த ஹரி எனக்கு மங்களத்தை விருத்திபண்ணட்டும்.] என்றுப் சொன்னபடியே எல்லா வுலகும் செய்த துதி வார்த்தைகளைக் கேட்டு.

(அழுமிழும்) எல்லாத் திக்கிலுமுள்ளாரும் திரிவிக்ரமனைத் துதிக்கும் சப்தத்தைக் கேட்டு, எம்பிரானுக்கு யாரேனும் தீங்கிழைக்க முற்படுகின்றார்களோ என்று அஸ்தானே பயஶங்கை பண்ணி ஆதிஶேஷன் தீயை உமிழ்கிறபடி. "விடங்காலும் தீவாயரவணைமேல் தோன்றல் திசையளப்பான் பூவாரடி நிமிர்த்தபோது" [இர-திருவ-71] என்று பூதத்தாழ்வாரும் அருளினாரன்றோ. இவ்வர்த்தம் "ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே" [நித்யஸூரிகள் அதிஜாகரூகர்களாய் விளங்குகிறார்கள்.] என்று வேதத்திலும், "சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" "உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே சங்கே" என்று பெரியாழ்வாராலும், "ஸ்நேஹாதஸ்தாநரக்ஷா வ்யஸநிபி:" [அன்பினாலே அஸ்தானே ரக்ஷிக்க முயலுமவர்களால்] என்று பட்டராலும் அருளிச்செய்யப்பட்டது. (பூங்காரரவணையான்) அழகிய சீற்றத்தையுடைய ஆதிசேஷனைப் படுக்கையாக உடையவன். (பூங்கார் அரவு) ஸ்வாமியினிடத்திலுள்ள அன்பாலேயுண்டான சீற்றமாகையாலே அழகியதாயிருக்கிறபடி; இச் சீற்றம் மாறாதே செல்லவேணும் என்று ஆழ்வாரும் மங்களாசாஸநம் செய்யவேண்டுப்படியுள்ளது. (பொன்மேனியாங்காணவல்லமே யல்லமே) அவனுடைய அழகிய திருமேனிக்கு மேலே ஒரு ப்ராப்யப்ராபக வஸ்துவில்லையென்றிருக்கிற நாம் அத்திருமேனியைக் காணவல்லோமல்லோமோ? நன்றாகக் காணவல்லோம் என்கை. "மூர்த்தம் ப்ரஹ்ம ததோऽபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்" [ஸ்வரூபத்தைக்காட்டிலும் பகவானுக்குப் பிரியமானதாய், அத்யத்புதமானதான ரூபம்] என்று பகவானுக்கும் ஸ்வரூபத்தைக்காட்டிலும் பிரியமாயிருப்பதன்றோ ரூபம். (மாமலரான்) எப்பெருமானுடைய நாபிக்கமலத்திலே இருக்கும் நான்முகனும். (வார் சடையான்) தாழ்ந்த சடையையுடைய ருத்ரனும். (வாழ்த்து வல்லரேயல்லரே) அப்பெருமானை வாழ்த்தவும் வல்லரல்லர். (மாமலரான்....) திருநாபிக்கமலத்திலே நேரே பிறந்தேனென்றும், சடை தரையிலே தாழும்படி நின்று ஸாதநாநுஷ்டானம் பண்ணினேனென்றும் அபிமானித்திருக்கும் அவர்கள் வாழ்த்தவும் வல்லரல்லர். அவனுடைய திருமேனியே ப்ராப்யமும் ப்ராபகமும் என்றிருக்கும் நாம் காணவும் வல்லோம் என்கிறார். (வல்லமேயல்லமே....வல்லரேயல்லரே) அவனிடத்திலே பரிவுள்ளார்க்கு மங்களாசாஸநம் செய்யும் நாம் அடையவல்லோமேயல்

லது, தங்கள் சக்தியைப் பெரிதாக நினைத்திருக்கும் அவர்கள் துதிக்க வல்லரல்லர். (வல்லரேயல்லரே வாழ்த்து)

"யந்ந தேவா ந முநயோ ந சாஹம் ந ச ஶங்கர:।
ஜாநந்தி பரமேஶஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம்॥" [வி.பு.]

[யாதொன்றை தேவர்களும், முனிவர்களும், (பிரமனாகிற) நானும், சங்கரனும் அறியமாட்டோமோ, அதுவே பரமேசனான விஷ்ணுவினுடைய மேலான ஸ்வரூபம்.] என்றும்,

"ந ஸ ஶக்யஸ் த்வயா த்ரஷ்டும் மயாந்யைர் வாபி ஸத்தம॥
ஸர்வேஷாம் ஸாக்ஷிபூதோஸௌ ந க்ராஹ்ய: கேநசித் க்வசித்॥" [பாரதம்]

[குழந்தாய் ருத்ரனே! அந்தப் பரமபுருஷன் உன்னாலும், என்னாலும் பிறராலும் காணத்தக்கவனல்லன்; எல்லாருக்கும் ஸாக்ஷியாயிருந்து காண்கிறானவன். ஒருவராலும், ஒருசமயத்திலும் காணப்படுகிறானல்லன்.] என்றுமன்றோ அவர்கள் பேசுவது. முதலடிக்கு வேறொரு வகையாகவும் பொருள்கொள்வதுண்டு. அதாவது:—(ஆங்கு) "விச்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷு லோகேஷு" என்கிறபடியே எல்லாவுலகையும் கடந்து நிற்கும் பரமபதத்தில். (ஆரவாரம் அது கேட்டு) "ஏதத்ஸாம காயந்நாஸ்தே ஹாவு ஹாவு ஹாவு" என்றும், "விபந்யவ:" [துதிசீலர்களான ஸூரிகள்] என்றும், "சூழ்ந்திருந்தேத்துவர்" என்றும் ச்ருத்யாதிகளில் ப்ரஸித்தமான நித்யமுக்தர்களின் மங்களாசாஸனத்வனியைக் கேட்டு. (அழலுமிழும்) அஸுரராக்ஷஸர்கள் இவ்விபூதியிலும் வந்து கூச்சலிடுகிறார்கள்போலும் என்று ப்ரேமமடியாகக் கலங்கி விஷாக்னியைக் கக்குகிறபடி. மற்றவை முன்போல்.

11. வாழ்த்துகவாய் காண்கசுண் கேட்கசெவி மகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால்—சூழ்த்த
துழாய்மன்னு நீண்முடியேன் தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பி மதித்து.

பதவுரை:—சூழ்த்த—சுற்றப்பட்ட, துழாய்—திருத்துழாய் மாலை, மன்னு—பொருந்தியிருக்கப்பெற்ற, நீள் முடி—நீண்ட திருவபிஷேகத்தையுடையவனும், என் தொல்லை மால் தன்னை—என்னிடத்தில் நெடுநாளாக வியாமோஹமுடையவனுமான ஸர்வேச்வரனை, வழா—

ஒரு நொடிப்பொழுதும் விடாமல், வண் கை கூப்பி மதித்து—உதாரமான கைகளைக் கூப்பி த்யானம்பண்ணி, மகுடம் தாழ்த்தி—தலையைவணக்கி, தண்மலரால்—குளிர்ந்த புஷ்பங்களைக்கொண்டு, வணங்குமின்கள்—ஆச்ரயியுங்கள்; வாய்—(உங்களுடைய) வாய், வாழ்த்துக—(அவனைத்) துதிக்கட்டும்; கண்—கண்கள், காண்க—(அவனையே) ஸேவிக்கட்டும்; செவி—காதுகள், கேட்க—(அவனது சரிதங்களையே) கேட்கட்டும்.

பெரி-வ்யா-பதினோராம்பாட்டு—(வாழ்த்துக வாயித்யாதி) ஸர்வேச்வரனை வாழ்த்தக்கண்ட வாயும், காணக்கண்ட கண்ணும், அவனுடைய குணங்களைக் கேட்கக்கண்ட செவியும், தந்தாமுக்கு வகுத்த தொழிலைச் செய்க. (மகுடந்தாழ்த்தி) அவன் திருவடிகளிலே வணங்கக்கண்ட தலையை அங்கே தாழ்த்தி. (வணங்குமின்கள் தண்மலரால்) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அவன் திருவடிகளிலே உங்கள்தலையைத் தாழ்த்தி வணங்குங்கோள். (சூழ்த்த வித்யாதி) வணங்குவித்துக் கோள்ளுகைக்கு லக்ஷணம் சோல்லுகிறது. சூழப்பட்ட திருத்துழாய் வர்த்தியாநின்ற ஆதிராஜ்யஸூசகமான முடியையுடைய ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை மாறாமல் நினைத்து உதாரமான கையைக்கூப்பி. (மகுடம் தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால்) புஷ்பாத்யுபகரணங்களைக்கோண்டு அவன் திருவடிகளிலே உங்கள் தலையைத் தாழ்த்தி வணங்குங்கோள்.

திவ்ய-அவ—பரமபுருஷனுக்குப் பணிசெய்ய ஏற்பட்ட உங்களுடைய இந்திரியங்களை அவன் விஷயத்திலே ஈடுபடுத்துங்கள் என்று பிறரை நோக்கி உபதேசிக்கிறார்.

வ்யா:—(வாழ்த்துக வாய்) "ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி" [எது ஹரியைத் துதிக்கின்றதோ அதுவே நாவாகும்] என்றாப்போலே அவனை வாழ்த்துவதற்காகவே ஏற்பட்ட வாயைக்கொண்டு அவனை வாழ்த்துங்கள். (காண்க கண்) அவனுடைய திருவுருவைக் காண்பதற்காகவே ஏற்பட்ட கண்களைக்கொண்டு அவனைக் காணுங்கள். (கேட்க செவி) அவனுடைய திருக்குணங்களைக் கேட்பதற்காகவே படைக்கப்பட்ட செவியைக்கொண்டு அவனுடைய குணநாம சேஷ்டிதங்களைக் கேளுங்கள். (மகுடம் தாழ்த்தி வணங்குமின்கள்) அவன் திருவடிகளிலே வணங்குவதற்கே உண்டான தலையை அங்கே தாழ்த்தி

வணங்குங்கள். (வணங்குமின்கள் தண்மலரால்) அவனுடைய ஸுகுமாரமான திருமேனிக்குத் தகுந்த குளிர்ந்த புஷ்பம் முதலிய உபகரணங்களைக் கொண்டு வணங்குங்கள். (மலரால்) புஷ்பத்திலே இது ஆகும், இது ஆகாது என்னும் நியமமில்லை. "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியும் ஆம்பலும் கண்டக்கால்" அவனுக்கென்று எண்ணித் திருவடிகளிலே இடுகையே வேண்டியது.

"பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி।
ததஹம் பக்த்யுபஹ்ருதம் அஶ்நாமி ப்ரயதாத்மந:॥" [கீதை]

[ஏதேனுமொரு இலையையாவது, பூவையாவது, பழத்தையாவது தண்ணீரையாவது, எவனொருவன் எனக்கு பக்தியுடன் கொடுக்கிறானோ, நன்னெஞ்சையுடைய அவனால் பக்தியுடன் அளிக்கப்பட்ட அதை நான் (விருப்புடன்) புசிக்கிறேன்.] என்று அவனும், "புரிவதும் புகை பூவே" என்று ஆழ்வாரும் அருளிச்செய்தனரன்றோ. தலையை அவனிடத்திலே வணங்குவித்துக்கொள்ளுகைக்காக அவனுடைய லக்ஷணம் சொல்லுகிறார் அடுத்தபடியாக: (சூழ்த்த துழாய் மன்னு) திருத்துழாயை அணிந்திருக்கையே ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமாயிருக்கிறபடி. (சூழ்த்த துழாய் மன்னு) சுற்றப்பட்ட திருத்துழாய் விளங்காநிற்கிற. (துழாய் மன்னு) தன்னிலத்தைக்காட்டிலும் இவனுடைய திருமேனியிலே விளங்கிநிற்கிறபடி. (துழாய் மன்னு நீண்முடி) "தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடி மேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்" அன்றோ இவன். (நீண்முடி) நீண்ட கிரீடத்தையுடைய. ஸர்வாதிக வஸ்துவின் மற்றொரு லக்ஷணம்.

"ஆதிராஜ்யமதிகம் புவநாநாம்
ஈஶ! தே பிஶுநயந் கில மௌலி:"

[ஈசனே! புவனங்களுக்கெல்லாம் ஒரே ஸர்வாதிகனாயிருக்கும் தன்மையை உன்னுடைய கிரீடமே கோட்சொல்லித்தருகிறது.] என்றாரன்றோ கூரத்தாழ்வான். (என் தொல்லை மால்தன்னை) என்னால் வணங்கப்படும் ஆதிபுருஷனான ஸர்வேச்வரனை. திருமழிசையாழ்வாராலே வணங்கப்படுகை ஸர்வாதிகவஸ்துவுக்கு மற்றொரு லக்ஷணம். மால்-பெரியோன். (என் தொல்லை மால் தன்னை) என்னிடத்திலே அறியாக்காலத்திலிருந்து அன்பு செய்தவனை என்றும்

கொள்ளலாம். மால்—அன்பன். (வழா) மாறுமல். (வண் கை கூப்பி) உதாரமான கையைக் கூப்பி. (வண் கை) "உதாராஸ் ஸர்வ ஏவைதே" [என்னை வணங்கும் இவர்களெல்லாரும் உதாரர்கள்] என்னும் அவன் நினைவாலே சொல்லுகிறுர். ஸம்ஸாரத்திலே அவனை வணங்குவார் அரிதாயிருக்கையாலே கொண்டாடுவதாகவும் கொள்ளலாம். (தொல்லைமால் தன்னை மதித்து வணங்குமின்கள்) ஸர்வேச்வரனை நினைக்கக்கண்ட நெஞ்சாலே அவனை நினைத்து வணங்குங்கள். "ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை மாறுமல் நினைத்து" என்னும் ஆச்சான்பிள்ளை ஸூக்தியிலிருந்து "தோல்லை மால் நாமம்" என்று பாடமிருந்திருக்குமோவென்று தோன்றுகிறது. "திரு நாமம் அத்யாஹார்யம்" என்னும் அரும்பதவுரை உள்ள பாடத்தைக்கொண்டே உபபத்தி சொல்லிற்று. (வாழ்த்துகவாய்....வணங்குமின்கள்)

"விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும் ।
பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா ॥"

[ப்ராஹ்மணரே! விசித்ரமானதாய் கைகால்கள் கூடியதான தேஹச் செல்வம் ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்வதற்காகவே ஆதியில் ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ளது.] என்று ரிஷிகளும்,

"வாயவனையல்லது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லது தாம் தோழா—பேய்முலைநஞ்
சூணுகவுண்டான் உருவோடு பேரல்லால்
காணுகண் கேளா செவி" என்று முதலாழ்வாரும்

அருளிச்செய்த அர்த்தத்தை அனுஷ்டித்து உய்யுங்கள் என்கிறுர்.

12. மதித்தாய்போய் நான்கின் மதியார்போய் வீழ
மதித்தாய் மதிகோள் விடுத்தாய்!—மதித்தாய்
மடுக்கிடந்த மாமுதலை கோள்விடுப்பான் ஆழி
விடற்கிரண்டும் போயிரண்டின் வீடு.

பதவுரை:—போய்—எல்லா சாஸ்திரங்களிலும் சென்றுராய்ந்தும், மதியார்—உன்னை அறியாதவர்கள், நான்கில்—நால்வகைப்பட்ட யோநிகளில், போய் வீழ—சென்று விழும்படியாக, மதித்தாய்—ஸங்கல்பித்தாய்; மதி—சந்திரனுடைய, கோள்—துன்பத்தை, விடுத்தாய்—போக்கியருளினவனே! மடு—ஒரு மடுவில், கிடந்த—(சாபத்தினுல்) வந்து சேர்ந்திருந்த, மா முதலை—பெரிய முதலை, கோள்—(கஜேந்தி

ராழ்வானைப் பற்றிய பற்று, விடுப்பான்—விடுவிப்பதற்காக, ஆழி—திருவாழியை, விடற்கு—(அந்த முதலையின் மேல்) பிரயோகிப்பதற்கு மதித்தாய்—நினைத்தருளினாய்; இரண்டும்—முதலையும் கஜேந்திராழ்வானுமாகிற இரண்டும், போய்—பழைய நிலையை விட்டுப்போய், இரண்டின்—அவ்விரண்டு ஜந்துக்களுக்கும், வீடு—சாபமோக்ஷமும் மோக்ஷஸாம்ராஜ்யமும் உண்டாம்படி, மதித்தாய்—ஸங்கல்பித்தாய்.

பெரி--வ்யா--பன்னிரண்டாம் பாட்டு—(மதித்தாயித்யாதி) (நான்கின் மதியார் போய் வீழ மதித்தாய்) வேதத்தாலும் எங்கும்புக்கு உன்னை உணராதவர்கள் அத:பதிக்கும்படியாக மதித்தாய். (மதியார் நான்கில் போய் வீழமதித்தாய்) உன்னை மதியாதவர்களை "क्षिपाम्यजस्रमशुभाना-सुरीष्वेव योनिषु" (க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு) என்னும்படியே சதுர்விதயோநிகளிலும் போய் விழும்படிக்கீடாக நினைத்தாய். (மதிகோள் விடுத்தாய்) சந்த்ரனுக்கு வ்யஸனத்தைப் போக்கினவனே! (மடுவித்யாதி) பொய்கையிலே கிடந்த பயாவஹமான முதலை ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப் பற்றின பற்று விடும்படிக்கீடாக ஸங்கல்பமின்றிக்கே திருவாழியை விடுகைக்கு நினைத்தாய். (இரண்டும் போயிரண்டின் வீடு மதித்தாய்) பூர்வாகாரங்களை விட்டு முதலை கந்தர்வனாய், ஆனை திருவடிகளைப் பெறும்படிக்கீடாகவும் நினைத்தாய்.

திவ்ய–அவ—அவனை மதியாதார் படும் பாட்டையும், "ஸ து நாகவர: ஸ்ரீமாந் மநஸாऽசிந்தயத் ஹரிம்" [ஸ்ரீமானான அந்த கஜேந்திராழ்வான் ஹரியை மனத்திலே எண்ணினான்.] என்கிறபடியே மனத்தாலே எண்ணிய கஜேந்திராழ்வான் பெற்ற நன்மையையும் ஆராய்ந்தாலாகாதோ? என்கிறார். இப்பாட்டு எம்பெருமானை நோக்கி அருளிச் செய்யப்பட்டதாகிலும், முன்னும் பின்னும் போலே பரோபதேசத்திலேயே நோக்கு.

வ்யா:—(நான்கில் போய் மதியார் வீழ மதித்தாய்) நாலு வேதங்களிலெல்லாம் சென்று ஆராய்ந்தும் உன்னை அறியாதவர்கள் கீழே விழும்படி ஸங்கல்பித்தாய். (நான்கில் மதியார்)

"சதுர்வேததரோ விப்ரோ வாஸுதேவம் ந விந்ததி।
வேதபாரபராக்ராந்தஸ் ஸ வை ப்ராஹ்மணகர்த்தப:॥"

[நாலு வேதத்தையும் தரித்தும் வாஸுதேவனை அறியாமலிருக்கும் விப்ரன், வேதபாரமாகிற (குங்கும)மூட்டையைச் சுமந்த ப்ராஹ்மணக்

கழுதையேயாவான்.] என்று இகழப்பட்டவர்களன்றோ இவர்கள். (மதியார் நான்கில் போய் வீழ மதித்தாய்) உன்னை அறியாதவர்களை தேவமனுஷ்யதிர்யக்ஸ்தாவரமாகிற நால்வகை யோனிகளிலும், சென்று விழும்படி ஸங்கல்பித்தாய்.

"தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் |
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு || [கீதை16-19]

[என்னைத்வேஷிப்பவர்களும், கொடியவர்களும், நராதமர்களும், பாபிகளுமான அவர்களை ஆஸுரயோனிகளிலேயே தள்ளுகிறேன்.] என்கிறபடியே. (மதிகோள் விடுத்தாய்) உன்னை மதித்த மதியி (சந்திர) னுடைய க்ஷயரோகத்தைப் போக்கினவனே! உன்னை மதிக்காதார் துன்பமும், உன்னை மதித்தார் இன்பமும் பெறுகிறார்களென்பது ப்ரஸித்தமன்றோ. இவ்வர்த்தத்தை வேறு எங்காவது கண்டதுண்டோ என்ன—, (மடுக்கிடந்த மாமுதலை கோள்விடுப்பான் ஆழி விடற்கு மதித்தாய்) பொய்கையிலே கிடந்த பயங்கரமான முதலை பற்றிய பற்று விடுவிக்கைக்காக சக்கரத்தாழ்வானை விட நினைத்தாய். (மாமுதலை) யானையைக்காட்டிலும், உருவத்திலும், பலத்திலும் பெரிதாயிருக்கும் முதலை. (கோள்) பற்றின பற்று. (ஆழி விடற்கு மதித்தாய்) முதலையை ஸங்கல்பத்தாலே கொன்றுவிடலாமாயினும், கையும் திருவாழியுமாய் நீ நிற்கும் நிலையைக் காண ஆசைப்பட்டிருக்கும் கஜேந்திராழ்வானை தரிக்கச்செய்வதற்காக திருவாழியைவிட ஸங்கல்பித்தாய். துஷ்டநிக்ரஹத்தை ஸங்கல்பத்தாலும் செய்யலாம். சிஷ்டபரிபாலனத்தைத் திருவாழியைக் காட்டியே செய்யமுடியும். அவனுடைய திவ்யமங்களவிக்ரஹமும், ஆயுதபூஷணாதிகளும் பக்தர்களுக்காகவே ஏற்பட்டவையன்றோ.

"ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் |" [ஜிதந்தே]
[உன்னுடைய ஸ்வரூபமும், திருமேனியும், ஆயுதங்களும், இருப்பிடமும் உனக்காவன்று. பக்தர்களுக்காகவே ஏற்பட்டவை] என்றன்றோ சாஸ்திரங்கள் முறையிடுவது.

"மழுங்காத வைந்நுதிய சக்கர நல் வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே
மழுங்காத ஞானமே படையாக மலருலகில்
தொழும்பாயார்க் களித்தால் உன்சுடர்ச்சோதி மறையாதே?"

என்றன்றோ நம்மாழ்வாரும் [திருவாய்(3-1-9)] அருளிச்செய்தது.

(இரண்டும் போய் இரண்டின் வீடு மதித்தாய்) முதலே யானை ஆகிய இரண்டு பழையவுருவமும் போய், முதலே தன்னுடைய பழைய கந்தர்வஸ்தானத்தையும், யானை தன் ஸ்வரூபானுரூபமான மோக்ஷ ஸ்தானத்தையும் அடையும்படி ஸங்கல்பித்தாய். வீடு—ஸ்தானம். அன்றிக்கே, வீடு என்று மோக்ஷமாய், முதலேக்கு சாபமோக்ஷத்தையும், யானைக்கு ஸம்ஸாரமோக்ஷத்தையும் ஸங்கல்பித்தாய் என்றுமாம்.

முன்னொருகாலத்தில் தேவலன் என்னும் முனிவர் ஒரு நீர்நிலையில் நின்று தவஞ்செய்தபோது "ஹூஹூ" என்னும் கந்தர்வன் அம்முனிவருடைய காலைப் பற்றி இழுத்ததினால் 'காலையிழுக்கும் முதலையாகக்கடவாய்' என்று சபிக்கப்பட்டு முதலையாயிருந்தான் என்றும், விஷ்ணுபக்தனான இந்த்ரத்யும்நன் என்பவன் தியானத்தில் ஈடுபட்டிருந்தபோது அகஸ்திய முனிவர் வந்ததைக் காணாமலிருந்ததினால், "செருக்குற்றிருந்ததனால் யானையாகக்கடவாய்" என்று சபிக்கப்பெற்று, யானையானபின்பும் விஷ்ணுபக்தி குன்றாமலிருக்க, ஒருநாள் ஒரு மடுவிலே எம்பெருமானுக்குப் பூவெடுக்க இறங்கும்போது முன் சொன்ன முதலையால் பிடிக்கப்பட்டு, நெடுநாள் போர் செய்து களைத்து, 'ஆதிமூலமே' என்று கதற, எம்பெருமான் வந்து சக்ராயுதத்தாலே முதலையைக் கொன்று, முதலேக்கு சாபமோக்ஷத்தையும், யானைக்கு ஸம்ஸாரமோக்ஷத்தையும் அளித்தான் என்றும் புராணங்களில் ப்ரஸித்தம்.

13. வீடாக்கும் பெற்றி யறியாது மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்!—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான் விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாராயணன்.

பதவுரை:—வீடு ஆக்கும் பெற்றி அறியாது—மோக்ஷத்தைப் பெறுவிக்கும் வழியைத் தெரிந்துகொள்ளமல், மெய்—சரீரத்தை, வருத்தி—(உபவாஸாதிகளாலே) க்லேசப்படுத்தி, கூடு ஆக்கி—எலும்பே மிகுந்த கூடாக அஸாரமாக்கி, நின்று—இப்படி நெடுங்காலம் தவம் புரிந்தும், உண்டு கொண்டு—பிறகு புஜித்தும், உழல்வீர்—திரிகின்றவர்களே!, வீடு ஆக்கும்—மோக்ஷத்தைத் தரக்கூடிய, மெய் பொருள்தான்—உண்மையான உபாயமாயிருப்பவனும், வேதம் முதல் பொருள்தான்—வேதங்களினால் முழுமுதற்கடவுளாகப் ப்ரதிபாதிக்கப்படுபவனும், விண்ணவர்க்கு—நித்யஸூரிகளுக்கு, நல் பொருள்தான்—போக்யமான வஸ்துவாயிருப்பவனும், நாராயணன்—ஸ்ரீமந் நாராயணனேயாவன்.

பேரி-வ்யா:—பதின்மூன்றும் பாட்டு. (வீடாக்கும் பெற்றியறியாது) மோக்ஷத்தைத் தருவிக்கும் ப்ரகாரம் அறியாது. (மெய்வருத்தி) சிர காலம் உண்ணுதே நின்று, பின்பு ஜீவித்து, இப்படி அநுஷ்டிப்போ மென்று நெஞ்சிலே கொண்டு உழல்வீர்! "கொன்றுழல்வீர்" என்னில், உங்களை ஹிம்ஸித்து உழல்வீர் என்றுமாம். (வீடாக்கும் மெய்ப்பொருள் தான்) மோக்ஷத்தையுண்டாக்கும் அவ்யவஹிதஸாதநம். (வேத முதற் பொருள்தான்) மோக்ஷப்ரதனென்று வேதத்திலே ப்ரதிபாதிக்கப்படு மவன். (விண்ணவர்க்கும் நற்பொருள்தான்) நித்யஸூரிகளுக்கும் ப்ராப்ய னானவன். (நாராயணன்) ஸர்வேச்வரன்.

திவ்ய-அவ:—'*அவனை மதித்தார் பேறு பெறுகிறார்கள்' என்று ஆழ்வார் அருளிச்செய்ய,* "யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி" [*யஜ்ஞத்தினாலும், தானத்தினாலும், தவத்தினாலும் பட்டினிகிடப்பதனாலும் ப்ராஹ்மணர்கள் அவனை அறிய விரும்புகிறார்கள்] என்று வேதங்களில் சொல்லியபடியே அவனை அடைவது மிகவும் சிரமஸாத்யமாயிருக்க, நீர் மிக எளிதுபோல் சொல்லலாமோ என்று மற்ற ஸாதனங்களைப்பற்றிய சிலர் கேட்க அருளிச்செய்கிறார் இப்பாசுரத்தை.*

வ்யா:—(*வீடாக்கும் பெற்றி அறியாது*) மோக்ஷத்தை *அளிக்கும் உபாயம் யாதென்பதை அறியாமல். பரமசேதனனான அவனே பல ப்ரதனாகிறான் என்பதை அறியாமல், அசேதனமாய் க்ஷணத்வம்ஸி யான கருமங்களை மோக்ஷோபாயமாக நினைத்திருக்கும் அறிவுகேடு இருந்தபடியே! என்று ஆச்சரியப்படுகிறார்.* (*மெய்வருத்திக்கூடாக்கி*) *உடம்பை வருந்தச்செய்து எலும்புக்கூடாக ஆக்கி.* "தபஸாऽநாஶகேந" [*உண்ணாவிரதமாகிற தவத்தினால்*] *என்னும் வாக்கியத்தை அநுஷ்டிப்பவர்களன்றோ.* (*நின்று*) *இப்படிப் பலகாலம் நின்று.* (*உண்டு*) *இந்தத் தவத்தின் பலனைப் பிறகு சிலகாலம் வாழ்ந்து அனுபவித்து.* (*கொண்டு உழல்வீர்*) *இப்படியே மேலும் கருமங்களை அனுஷ்டித்து மோக்ஷமாகிற பெரும் பலனையும் பெற்றுவிடலாம் என்று நெஞ்சிலே கொண்டு திரிகிறவர்களே!* "*கொன்று உழல்வீர்*" *என்று பாடமானபோது உங்களையே ஹிம்ஸித்துத்திரிகிறவர்களே என்று பொருள்.* (*அறியாது மெய்வருத்தி....உழல்வீர்*) "*வம்மின் புலவீர்!*

றும் மெய்வருத்திக் கைசெய்து உய்ம்மினோ" என்கிறபடியே கைங்கரியம் செய்வதற்கு மெய்வருத்தினால் உய்வுபாயமாகவும் "ஸுஸுகம் கர்த்தும்" [செய்வதற்கு இனிமையாயிருப்பது] [கீதை 9-2] என்கிற படியே பரமபோக்யமாகவும் இருக்குமே. மோக்ஷோபாயமாக நினைத்து உடம்பை ஒடாக்கித் துன்புறுமிது என்ன அறிவுகேடு! என்கிறார்.

"மோக்ஷோபாயத்தை நாங்கள் அறியவில்லையென்கிறீர்; அறிந்த நீர்தான் அருளிச்செய்யலாகாதோ?" என்ன, (வீடாக்கும் மெய்ப் பொருள்தான் நாராயணன்) இவனுடைய பெயரே இவனே மோக்ஷோ பாயம் என்பதை அறிவிக்குமே. இப்பெயரையும் கேட்டிலீரோ என்கிறார்.

"நாரஶப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை: ।
கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத: ॥"

[நாரஶப்தத்தினால் நரர்களாகிற ஜீவர்களின் ஸமூஹம் சொல்லப்படு கிறது. அந்தச் சேதனஸமூஹத்திற்கு ப்ராப்யமாகவும் உபாயமாக வும் இருக்கையால் இவன் நாராயணனாகிறான்] என்னும் ப்ரமாணம் உங்கள் செவியில் பட்டதில்லையோ என்கிறார். (வீடாக்கும் மெய்ப் பொருள்தான்) நீங்கள் அனுஷ்டிக்கும் கருமங்களும் இவனை உகப் பித்தால்தான் பலனை அடைவிக்கும். ஆகையால் அவை நேரே உபா யங்களன்று. இவன் ஒருவனே நேரே பலனைத்தரும் உபாயமாகிறான். இக்கருமங்களை அநுஷ்டிக்கும் உங்களைப்போலே, இக்கருமங்களும் நேரே உபாயமாகாமையாலே 'உண்மையுபாயங்களன்று; இவன் ஒருவனே உண்மையுபாயமாவான். ஆகையால் அக்கருமங்களில் உபாயத்வபுத்தியை விட்டுக் கைங்கர்ய புத்தியைக் கொள்ளுங்கள் என்கிறார். 'இவனே மோக்ஷோபாயம்' என்னும் விஷயத்தில் வேறு ப்ரமாணமுண்டோ? என்று கேட்க,—(வேத முதற்பொருள்தான்) "நாராயணம்....பராயணம்" [மேலான உபாயமாயிருப்பவன் நாரா யணன்] "உதாம்ருதத்வஸ்யேஶாந:" [மோக்ஷத்திற்கு ப்ரபுவாயிருப் பவன் பரமபுருஷனே] "அம்ருதஸ்யைஷ ஸேது:" [இவனே மோக்ஷத் திற்குச் செல்லும் அணையாவான்] என்று பரமப்ரமாணமான வேதங் களிலே மோக்ஷப்ரதனாகச் சொல்லப்பட்டவன் நாராயணனேயன்றோ என்கிறார்.

'அடைவிப்பவன் (உபாயம்) இவனாகில், அடையப்படும் பொருள் (உபேயம் அல்லது ப்ராப்யம்) வேறொன்றுண்டோ' என்ன,—(விண்ணவர்க்கும் நற்பொருள் தான்) பரமபதத்திலேயிருக்கும் நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யவஸ்துவாயிருப்பவன் இவனேயன்றோ என்கிறார். (வேதமுதற்பொருள்தான் விண்ணவர்க்கு நற்பொருள் தான்) "தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:" [விஷ்ணுவினுடைய பரமப்ராப்யமான ஸ்வரூபத்தை நித்யஸூரிகள் எப்போதும் காண்கிறார்கள்.] "யோ தேவேப்ய ஆதபதி। யோ தேவாநாம் புரோஹித:" [எவன் விண்ணவர்க்காக விளங்குகின்றானோ, எவன் அநாதி காலமாக விண்ணவர்க்கு நற்பொருளாயிருக்கிறானோ....] முதலான வேதவாக்கியங்கள் இவ்விஷயத்தில் ப்ரமாணம் என்றபடி. இப்படி ப்ராப்யப்ராபகங்களாயிருப்பவன்தான் யாரென்னில்: (நாராயணன்) நாராயணன் என்னும் தனிப்பெயரை உடையவனே அவன் என்கிறார். நாரஸமூஹங்களுக்கு ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் இருப்பவன் இவனே என்பதை இவன் பெயரே காட்டுகிறதன்றோ என்று கருத்து. 'இண்—கதௌ' என்னும் தாதுவிலிருந்து தோன்றிய அயநசப்தம் மோக்ஷமடைவதற்கு ஸாதனத்தையும், மோக்ஷத்தில் அடையப்படும் ஸாத்யத்தையும் குறிக்கும். ப்ராப்யப்ராபகங்கள் இவனே என்றபடி. "எண்பெருக்கந்நலத்தொண்பொருள் ஈறிலவண்புகழ் நாரணன்" "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" "காராயின காளநன்மேனியினன் நாராயணன்" "நாராயணனே நமக்கே பறை தருவான்" "நண்ணித்தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணா" "நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே நீயென்னையன்றியிலை" என்று ஆழ்வார்கள் நாராயணஶப்தத்திற்கு முன்னும் பின்னும் அதன் பொருள்களை அநுஸந்திப்பதொரு நியதியுண்டு. அப்படியே இவரும் இப்பாட்டின் பின்னடிகளிலும் அடுத்தபாட்டின் முன்னடிகளிலும் நாராயணஶப்தத்தின் சில பொருள்களை அனுஸந்திக்கிறார்.

14. நாராயண னென்னை யாளி நரகத்துச்
சேராமல் காக்கும் திருமால் தன்—பேரான
பேசப்பெறாத பிணச்சமயர் பேசக் கேட்டு
ஆசைப்பட் டாழ்வார் பலர்.

பதவுரை:—நாராயணன்—நாராயணனென்னுந் திருநாமமுடையவனும், என்னை ஆளி—(விசேஷித்து) அடியேனை ஆட் கொள்பவனும், நரகத்து சேராமல் காக்கும்—(அடியார்களை) ஸம்ஸாரத்தில் சேராமல் காத்தருள்பவனுமான, திருமால் தன்—திருமாலுடைய, பேர் ஆன—திருநாமங்களை, பேச பெறாத—ஸங்கீர்த்தநம் பண்ணும் பாக்கியமற்றவர்களான, பிணம்—நடைபிணம் என்னலாம்படியுள்ள, சமயர்—பாஹ்யகுத்ருஷ்டி மதஸ்தர்கள், பேச—(அவப்பொருள்களை) பிதற்ற, கேட்டு—அவற்றைக்கேட்டு, பலர்—பலபேர்கள், ஆசைப்பட்டு—தாங்களும் அப்படியேபாஹ்ய குத்ருஷ்டிகளாயிருக்க விரும்பி, ஆழ்வார்—அதோகதியை யடைந்தொழிவர்.

பெரி-வ்யா:-பதினொலாம்பாட்டு-(நாராயணனென்னையாளி) "अखिलजगत्स्वामिन् अस्मत्स्वामिन्" (அகிலஜகத்ஸ்வாமிந் அஸ்மத்ஸ்வாமிந்). (நரகத்து இத்யாதி)பிராட்டிக்கு ப்ரியமாக ஆச்ரிதரை ஸம்ஸாரத்தில் ப்ரவேசியாமல் காக்குமவன். இப்படி ஸர்வரக்ஷகனானவனுடைய திருநாமங்களைப் பேசப்பெறாதே ஜீவியாநிற்கச்செய்தே ம்ருதப்ராயராயிருக்கும் பாஹ்யகுத்ருஷ்டிகள் 'வேறே ஓரர்த்தமுண்டு' என்று சொல்லக்கேட்டு அநர்த்தப்படுவார் சிலருண்டேன்றும் பரமப்ராப்யன் நாராயணனேன்றும் உபபாதிக்கிறார்.

திவ்ய-அவ:— "நாராயணனே ப்ராப்யப்ராபகவஸ்துவென்றீர். உலகிற் பலரும் இதை நம்புவதில்லையே; இதுக்குக் காரணமென்?" என்ன, "அவன் திருநாமத்தைப் பேசவும் பாக்கியமற்ற சில பிணச் சமயர்கள் படுத்தும்பாடு இது" என்கிறார்.

வ்யாக்யானம்:--(நாராயணன் என்னையாளி) எவர் எப்படிப்போனாலென்ன; அவன் என்னை ஆட்கொண்டான் என்கிறார். (நாராயணன் என்னையாளி) அகிலஜகத்ஸ்வாமியாயிருப்பவன், என்னையொழிந்தாரங்கள் எல்லாம் ஒருதட்டும், நான் ஒருதட்டும் ஆகும்படியாக என்மேல் அன்புவைத்தான். அப்படியிருக்கும்போது உலகில் எவர் எப்படியிருந்தால் எனக்கென்ன? (நாராயணன் என்னையாளி) இந்த ஸ்ரீஸூக்தியை அடியொற்றியே எம்பெருமானார் "அகிலஜகத்ஸ்வாமிந் அஸ்மத்ஸ்வாமிந்" என்று கத்யத்திலே அருளிச்செய்தார். 'உம்மை எப்படி ரக்ஷித்தான்' என்ன,—(நரகத்துச் சேராமல் காக்கும்) இந்த

ஸம்ஸாரமாகிற வெங்நரகத்திலே சேராமல் காப்பதன்மூலம் என்னை ரக்ஷித்தான் என்கிறார். யோகீச்வரரான திருமழிசையாழ்வார் ரௌரவாதிநரகத்தை அடைவோமோ என்று ஸந்தேஹிக்கவும் ப்ரஸக்தியில்லையாகையால், இங்கு 'நரகம்' என்றது ஸம்ஸாரமாகிற இவ்வெங்நரகத்தை. உண்மையில் ரௌரவாதிநரகங்களைக் காட்டிலும் இந்த ஸம்ஸாரமே கொடியது. அவை துன்பத்தைத் தருமவை யென்பது பிரஸித்தமாகையால் அவைகளுக்கு அஞ்சி, அவைகளை அடையாதபடி வாழ முற்படுவர் மனிதர். இந்த ஸம்ஸாரமோ வெனில் தேன்தடவின பொறிபோலே வெளிப்பார்வைக்கு இன்ப மளிப்பது போல் தோன்றுவதால், இதைப் போக்கிக்கொள்ளவேணும் என்னும் அறிவேற்படுவதும் அரிது. ஆகையால் இதுவே கொடிது; நரகம் என்னவும், வெங்நரகம் என்னவும் தகுந்தது. நாராயணனே உபாயம் என்னும் அர்த்தம் சென்ற பாட்டிலும் இப்பாட்டிலும் அறிவிக்கப்படுகிறது. ஆனால் சிறிது வித்தியாசமுண்டு. உபாயமா னது இஷ்டப்ராப்தியையும், அநிஷ்டநிவ்ருத்தியையும் செய்து கொடுப்பது. அதில், "வீடாக்கும் மெய்ப்பொருள்தான் நாராய ணன்" என்று சென்ற பாட்டில் இஷ்டப்ராப்தியைச் செய்பவன் நாராயணனே என்று கோஷிக்கப்பட்டது. "நாராயணன் என்னை யாளி நரகத்துச் சேராமல் காக்கும்" என்று அநிஷ்டநிவ்ருத்தியையும் செய்துகொடுப்பவன் அவனேயென்கிறது இங்கு.

'அநாதிகாலமாக இந்த ஸம்ஸாரத்திலே உம்மை இட்டுப் போந்த அவன், இன்று வந்து நரகத்துச் சேராமல் காக்கக்காரண மென்?' என்ன—(திருமால்) புருஷகாரபூதையான பிராட்டி ஸம்பந் தத்தாலே என்னை ஆட்கொள்பவனானான் என்கிறார். (திருமால்) திருவிடம் (லக்ஷ்மியிடம்) மயக்கங்கொண்டவன். இவன் நாராயண னானாலும் அவளுக்கு ப்ரேம பாரதந்திரனாயிற்றே. அவள் முகஞ் சுளிக்கப் பொறுப்பனோ? அவளுடைய பரிகரமான என்னை விலக்கி விட்டு அவள் முகத்திலே விழிப்பதெப்படி? (நாராயணன் திருமால் தன் பேரான) அவனுடைய பாத்வத்தையும், அவன் பிராட்டிக்குத் தோற்றிருக்கும் படியையும் சொல்லும் திருநாமங்களை. (பேரான) "தேவோ நாமஸஹஸ்ரவாந்" "பேராயிரங்கொண்டதோர் பீடுடையன் நாராயணன்" "பேரும் ஓராயிரம் பிறபல உடைய எம்பெருமான்"

என்று சொல்லப்பட்ட திருநாமங்களை. (பேசப் பெறுத பிணச்சமயர்) அத்திருநாமங்களைப் பேச பாக்கியம் செய்யாதவர்களாய், அத்தாலேயே பிணத்தையொத்தவர்களான புறமத்ஸ்தர்கள். (பிணச்சமயர்) பிணம்போன்ற மதங்களைப் பற்றினவர்கள் என்றும் கொள்ளலாம். (நாராயணன்....பேரான பேசப்பெறுத பிணச்சமயர்) உலகங்கட்கெல்லாம் ஒருயிராயிருப்பவனை அறியாத இவர்களையும், அறிவிக்காத இச்சமயங்களையும் உயிரற்ற பிணமெனக் கூறத்தட்டில்லையன்றே. (பிணச்சமயர்)

"யா வேதபாஹ்யா: ஸ்ம்ருதயோ யாஂஸ்ச காஂஸ்ச குத்ருஷ்டய: ।
ஸர்வாஸ்தா நிஷ்பலா: ப்ரேத்ய தமோநிஷ்டா ஹி தா:ஸ்ம்ருதா: ॥"

[வேதத்திற்குப் புறம்பான நூல்களும், (வேதத்தையொப்புக்கொண்டபோதிலும்) பொய்ந்நின்றஞானத்தைப் பரப்பும் நூல்களும் பரலோகத்தில் நிஷ்பலங்களாகவும், தாமஸ நூல்களாகவும் சொல்லப்படுகின்றன.] [மநு 12-95] என்று நிஷ்பலங்களாகச் சொல்லப்பட்டவையாகையாலே பிணத்தையொத்தவையன்றே பாஹ்யகுத்ருஷ்டிமதங்கள். (பேசக்கேட்டு) 'வேதவைதிகர்கள் சொல்வதைக்காட்டிலும் வேறுபட்டதே உண்மை' என்று சொல்லுவதைக் கேட்டு. (ஆசைப்பட்டு) 'இதுவே உண்மை' என்று இவற்றை விரும்பி. (ஆழ்வார் பலர்) ஸம்ஸாரத்திலே கீழ்நோக்கி விழுவார் இவ்வுலகில் பலர் இருக்கின்றனர். (நாராயணன் என்னையாளி—ஆழ்வார் பலர்) பலர் கீழ்விழுகின்றனர். என்னைப்போலே சிலர் அவனையே பரமப்ராப்யனுக அறிந்து உய்கின்றனர்.

15. பலதேவ ரேத்தப் படிகடந்தான் பாதம்
மலரேற விட்டிறைஞ்சி வாழ்த்த—வலராகில்
மார்க்கண்டன் கண்ட வகையே வருங்கண்டீர்
நீர்க்கண்டன் கண்ட நிலே.

பதவுரை:—பல தேவர்—பல தேவர்கள், ஏத்த—துதிக்கும்படியாக, படி—பூமியை, கடந்தான்—அளந்தவனுன ஸர்வேச்வரனுடைய, பாதம்—திருவடிகளிலே, மலர்—புஷ்பங்களை, ஏற இட்டு—ஸமர்ப்பித்து, இறைஞ்சி—வணங்கி, வாழ்த்த வலர் ஆகில்—மங்களாசாஸநம் பண்ணவல்லவர்களானல், நீர்க்கண்டன் கண்ட நிலே—விஷநீர்க்கண்ட

ஞகிய ருத்ரனிடத்தில் காணத்தக்க நிலைமை, மார்க்கண்டன் கண்ட வகையே—மார்க்கண்டேயன் நேராகக் கண்டவிதமாகவே, வ்ரும் கண்டீர்—ஸித்திக்குங்கிடீர்.

பெரி-அவ:—பதினைந்தாம்பாட்டு—(பலதேவரித்யாதி) வேறு ஆஶ்ரயணீயர் இல்லையென்று தோற்றிநின்றவன் திருவடிகளிலே 'வேருராச்ரயணீயராக நினைத்தவர்கள் செய்கிற தொழிலை அவ்யவஹிதமாகத் தாங்கள் செய்யவல்லார் சிலர் என்கிறார்.

வ்யா:—(பலவித்யாதி) பலதேவர் ஏத்தப் படிகடந்தான் பாதமென்கையாலே ஆச்ரயணீயவஸ்து இவன் என்று அறுதியிட்டு. (மலரேறவிட்டிறைஞ்சி வாழ்த்தவலராகில்) என்கையாலே தாங்கள் ஆச்ரயணீயராக நினைத்தவர்கள் செய்கிற செயலைத் தாங்களும் செய்யவல்லராகில். (மார்க்கண்டனித்யாதி) மார்க்கண்டேயன் தேவனை மோக்ஷார்த்தமாகச் சென்று ஆச்ரயிக்க, மோக்ஷப்ரதன் ஈச்வரனே என்று ருத்ரன் காட்டக் கண்டு, 'இதுவே இவனுக்குள்ளது' என்று மார்க்கண்டேயன் கண்ட வகையே அநுஸந்திக்கும். அவ்யவஹிதமாக ஸர்வேச்வரன் திருவடிகளை ஆச்ரயிக்கவல்லவராகில் மார்க்கண்டேயன் கண்ட வகையே ஸித்திக்கும்.

திவ்ய-அவ:—அநர்த்தப்படுவார் பலரென்றார் சென்ற பாட்டில். அப்படி அநர்த்தப்படாதே ஆச்ரயிக்கத்தகுந்தவன் இவனேயென்று அறிந்து, ஆச்ரயிக்கத்தகுந்தவராகப் பலரால் நினைக்கப்படும் தேவர்களும் இவனிடத்திலே செய்யும் கைங்கர்யத்தை நேரே செய்யவல்லவர்கள் சிலர் என்று உணர்த்தி, நீங்களும் அப்படியாகுங்கள் என்கிறார் இப்பாட்டில்.

வ்யா:—(பலதேவரேத்தப்படி கடந்தான்) தேவஸமூஹம் முழுவதும் துதிக்கும்படியாக உலகளந்தவன்.

"ஸங்கைஸ் ஸுராணும் திவி பூதலஸ்தைஸ்
ததா மநுஷ்யைர் ககநே ச கேசரை: ।
ஸ்துத: க்ரமாந் ய: ப்ரசகார ஸர்வதா
மமாஸ்து மாங்கள்ய விவ்ருத்தயே ஹரி: ॥"

[ஸ்வர்க்கத்தில் தேவஸமூகங்களாலும், அப்படியே பூமிப்ரதேசத்திலிருக்கும் மநுஷ்யர்களாலும், ஆகாயத்தில் ஆகாசஸஞ்சாரிகளாலும் துதிக்கப்பட்டவனாய் எந்த பகவான் திருவடிகளை வைத்தருளினானோ,

(திரிவிக்கிரமாவதாரம் செய்த) அந்த ஹரி எனக்கு எப்போதும் மங்களங்களை விருத்திசெய்யட்டும்.] என்று ஸ்ரீவிஷ்ணுதர்மம் மாங்கள்ய ஸ்தவத்தில் கோஷிக்கப்பட்டதன்றோ.

(பல தேவரேத்த) "குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர் பெய்து மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி" என்று பிதாமஹனான நான்முகனே வாழ்த்தியபோது மற்ற தேவர்கள் வாழ்த்தச் சொல்லவேணுமோ? (பல தேவரேத்தப் படிகடந்தான் பாதம்) திருவடிகளின் கீழே துகையுண்கையாலே "ஈச்வரோऽஹம்" என்பவர்களும் ஸ்வரூபத்தை உணர்ந்து துதிக்கிறார்கள். (பாதம் மலரேற விட்டிறைஞ்சி வாழ்த்த வலராகில்) அவனுடைய திருவடித்தாமரைகளிலே கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியும் ஆம்பலும் முதலான பூக்களைச்சொரிந்து வாழ்த்தவல்லீர்களானால். (படிகடந்தான் பாதம்....வாழ்த்த வலராகில்) இப்போதும் நீங்கள் இச்செயலைச் செய்து தான் வருகிறீர்கள். ஆனால் படிகடந்தானிடம் செய்வதில்லை. அவனை அக்காலத்திலே துதித்த தேவர்களிடம் செய்கிறீர்கள். சரீரியான அவனைவாழ்த்தாமல், அவனுடைய சரீரபூதராய் ரஜஸ்தமோகுணம் நிறைந்தவர்களான தேவர்களை வாழ்த்துகிறீர்கள். அவிதிபூர்வமாகச்செய்வதை விதிபூர்வகமாகச் செய்தாலாகாதோ என்கிறார். (பலதேவரேத்தப் படிகடந்தான் பாதம் வாழ்த்தவலராகில்) அவர்கள் அவனிடத்திலே செய்யும் செயலை, நீங்கள் அவர்களிடத்திலே செய்யாமல், நேரே அவனிடத்திலேயே செய்தாலாகாதோ? (வலர் ஆகில்) இப்படிப்பட்ட அதிகாரிகள் மிகவும் துர்லபர் என்கிறார். "ஆழ்வார்பலர்" என்ற அவர்களைப்போலே யல்லாமல் இந்த கோஷ்டி மிகவும் சிறுத்திருக்கிறது. (வலர் ஆகில்) இக்குழுவிலே சேரவல்லீர்களாகில். (மார்க்கண்டன்....) "நீர்க்கண்டன் கண்ட நிலை மார்க்கண்டன் கண்ட வகையே வரும் கண்டீர்" என்று அந்வயம். விஷஜலத்தைக் கழுத்திலே தரித்திருக்கும் ருத்ரனிடத்தில் கண்ட நிலையானது மார்க்கண்டேய பகவான் கண்ட விதமாக நீங்களும் காணலாகும். மார்க்கண்டேயன் நீண்ட ஆயுளையும் அதற்குப்பின் மோக்ஷத்தையும் ருத்ரனைக் கேட்க, மோக்ஷம் தருபவன் ஜநார்த்தனனே என்று ருத்ரன் காட்டக்கண்ட அர்த்தத்தை நீங்களே நேரே காணலாம்.

"நீர்க்கண்டன் கண்ட நிலை மார்க்கண்டன் கண்ட வகையே வருங் கண்டீர்" என்று மார்க்கண்டேய வ்ருத்தாந்தத்தை நினைக்கிறார். இவ் விருத்தாந்தம் ஸ்ரீ பாகவதம் பன்னிரண்டாவது ஸ்கந்தத்திலும், மஹாபாரதம் ஆரண்யபர்வத்திலும், "புக்கடிமையினால் தன்னைக் கண்ட மார்க்கண்டேயனவனை நக்கபிரானுமன்று உய்யக்கொண்டது நாராயணனருளே" [திருவாய் 4--10--8] "மார்க்கண்டேயனும் கரியே" [திருவாய் 5-2-7] "கண்டும் தெளிந்தும் கற்றார் கண்ணற்காளன்றி யாவரோ வண்டுண் மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழுநாள், இண்டைச்சடைமுடியீசனுடன் கொண்டுசாச்செல்லக் கொண்டங்குத் தன்னொடுங்கொண்டுடன் சென்றதுணர்ந்துமே" [திருவாய் 7-5-7] "மன்னு நான்மறை மாமுனி பெற்ற மைந்தனை மதியாத வெங்கூற்றம் தன்னையஞ்சி, நின் சரணெனச் சரணாய்த் தகவில் காலனையுகமுனிந் தொழியாப், பின்னையென்றும் நின் திருவடி பிரியாவண்ணமெண்ணிய பேரருள்" [பெரியதிரு 5-8-6] என்று ஆழ்வார்களாலும் அநுஸந்திக்கப்பட்டது. "கண்டும் தெளிந்தும்" வியாக்கியானத்திலேயும் விவரிக்கப்பட்டுள்ளது.

அதாவது:—ம்ருகண்டு மஹாமுனிவரும், அவர் பத்தினியும் தம் அருமைப் பிள்ளையான மார்க்கண்டேயன் சிறுவனாயிருக்கும்போது அவனை அலங்கரித்து விளையாடவிட, அப்போது ஓர் அசரீரிவாக்கியம் "இவனுக்கு மரணம் அணுகிற்று" என்று சொல்ல, அத்தைக் கேட்டுத் தாய்தந்தையர் பதறிநிற்க, "நீங்கள் பயப்படவேண்டாம்; நான் எப்படியாவது நீண்ட ஆயுளைப் பெற்றுவருகிறேன்" என்று கூறி மார்க்கண்டேயன் ருத்ரனை ஆச்ரயித்து நெடுநாள் அடிமை செய்து தாய்தந்தையருக்குச் சொல்லிவந்தபடியே நீண்ட ஆயுளையும் நற்குலத்தில் பிறந்தவனாகையாலே, ஆத்மஹிதார்த்தமாக மோக்ஷத்தையும் தரவேணுமென்று சிவனைக்கேட்க, அவனும் தலைக்கடையையும் புழக்கடையையும் மூடிக்கொண்டு தனியிடத்துக்கு அழைத்துப்போய், தன் இண்டைச் சடைமுடியைக்காட்டி, "நானும் உன்னைப்போலே ஒரு ஸாதனானுஷ்டானம் செய்பவனே; உன் விருப்பம் நிறைவேறவேண்டுமாகில் ஜநார்த்தனனை அடையவேண்டும்" என்று கூறித் தானே அவனைக் கூட்டிக்கொண்டு, நாராயணனுடைய மோக்ஷப்ரதத்வாதி

குணங்களை அவனுடன் உசாவிக்கொண்டு சென்று ஸர்வேச்வரனிடம் அவனைக் காட்டிக்கொடுத்து அவன் விருப்பங்களை நிறைவேற்றிவைத்தான். "ஆராதயந் ஹ்ருஷீகேசம் ஜிக்யே ம்ருத்யும் ஸுதுர்ஜயம்" [இருடிகேசனை ஆராதித்து வெல்லவரிய ம்ருத்யுவை மார்க்கண்டேயன் ஜயித்தான்] என்று ஸ்ரீ பாகவதத்தில் மார்க்கண்டேயன் ம்ருத்யுவெனப்படும் யமனையும் ஸம்ஸாரத்தையும் ஜயித்தவிதம் உணர்த்தப்பட்டது. மஹாபாரதத்திலும் மார்க்கண்டேயன் விஷ்ணுபக்தனாகவே உத்கோஷிக்கப்பட்டான். ஸாத்விகசாஸ்த்ரங்களான இவற்றில் சொல்லியிருப்பதற்கு விரோதமாகச் சிவபுராணங்களில் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தால் அவை அநாதரிக்கத்தக்கவையே. நிற்க; மார்க்கண்டேயன் அபேக்ஷித்தது ஆயுளேயொழிய, மோக்ஷமல்லவே என்னும் ஸந்தேஹம் ஏற்படக்கூடும். "நக்கபிரானும் அன்றுய்யக் கொண்டது" "இண்டைச்சடைமுடி யீசனுடன் கொண்டுசாச்செல்லக் கொண்டங்குத் தன்னொடுங்கொண்டு" என்றும் ஆழ்வார்கள் அருளியிருப்பதாலும், "மார்க்கண்டேயன் தேவனை மோக்ஷார்த்தமாகச் சென்று ஆச்ரயிக்க, மோக்ஷப்ரதன் ஈச்வரனே என்று காட்டுமிதுவேயுள்ளதென்று...." என்று பெரியவாச்சான்பிள்ளை இரண்டிடங்களில் மோக்ஷசப்தத்தைப் பிரயோகித்திருப்பதாலும், நம்பிள்ளையீட்டில் (7-5-7) "மோக்ஷப்ரதத்வாதி குணங்களையும் உசாவிக்கொண்டு" என்றிருப்பதாலும், மார்க்கண்டேயன் தாய்தந்தையரின் விருப்பதிற்காக ஆயுளையும் ஆத்மஹிதார்த்தமாக மோக்ஷத்தையும் ருத்ரனிடம் விரும்பினன் என்பதையும், ருத்ரனும் அவற்றை ஸர்வேச்வரன் மூலமாகப் பெறுவித்தான் என்பதையும் உணரலாம்.

16. நிலைமன்னு மென்னெஞ்ச மந்நான்று தேவர்
தலைமன்னர் தாமே மாற்றாக—பலமன்னர்
போர்மாள வெங்கதிரோன் மாயப்பொழில் மறைய
தேராழியால் மறைத்தாரால்.

பதவுரை:—அந்நான்று—பாரதயுத்தம் நடந்த அக்காலத்து, தேவர் தலை மன்னர் தாமே—தேவாதிதேவனான தானே, மாற்று ஆக—எதிரியாயிருந்துகொண்டு, பல மன்னர்—பல அரசர்கள், போர்—யுத்தகளத்தில், மாள—மடிந்து போம்படியாகவும், வெம் கதிரோன்—ஸூர்யன், மாய—(அகாலத்தில்) அஸ்தமிக்கும்படியாகவும், பொழில்

மறைய—பூமண்டலம் முழுதும் இருள் மூடும்படியாகவும், தேர் ஆழியால்—சக்கராயுதத்தினுல், மறைத்தாரால்—(ஸூர்யனை) மறைத்த பெருமானுலே, என் நெஞ்சம்—எனது (சஞ்சலமான) மனமானது, நிலை மன்னும்—நிலை நிற்கும்.

பெரி-வ்யா:—பதினூரும்பாட்டு—(நிலைமன்னுமென்னெஞ்சம்) ஸர்வேச்வரனை ஆச்ரிதார்த்தமாகக் கண்டதென்று அறிந்தபடியாலே பறக்கிற தோன்றிலே பாரம்வைத்தாற்போலே **"चञ्चलं हि मनः"** (சஞ்சலம் ஹி மந:) என்று சொல்லப்படுகிற நெஞ்சம் நிலைபெற்றது. ப்ராப்தி தசையில் பிறக்குமது இங்கேயிருக்கப்பிறந்தது. (அந்நான்று) பாரதஸமரத்திலே. (தேவர் தலைமன்னர்) **"राजाधिराजस्सर्वेषां"** (ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம்) என்று சொல்லப்படுகிற * அயர்வறு மமரர்களதிபதி. (தானே மாற்றாக வித்யாதி) **"द्विषदन्नं"** (த்விஷதந்நம்) இத்யாதிப்படியே பாண்டவஶத்ருக்கள்தனக்கு ஶத்ருக்களாகவும், பல மன்னர்கள் முடியும்படியாகவும், **"भीषोदेति सूर्यः"** (பீஷோதேதி ஸூர்ய:) என்று தன்னுஜ்ஞையாலே ஒரு முஹூர்த்தம் தப்பாமல் உதிப்பதஸ்தமிப்பதாகிற ஆதித்யன் மறையவும், எதிரிகளுக்கு இவ்விடத்தில் அஸ்தமித்ததில்லை என்று குறை சொல்லப்போகாதபடி பூமியடைய மறையவும், ஆதித்யனை ப்ரகாஶகமான திருவாழியாலே மறைத்தாரானவராலே என் நெஞ்சம் ஸ்தித்தது. நித்யஸூரிகளுக்கு அவ்வருகாய், **"सत्यकामस्सत्यसङ्कल्पः"** (ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:) என்றோதப்படுகிற தாமே தமக்குத் தகாதபடியான பொய்யைச் செய்கையாலே என்நெஞ்சு ஸ்திதித்தது. ஈச்வரன் அஸத்ய ப்ரதிஜ்ஞனாய் ரக்ஷிப்பானுன பின்பு நம்முடைய ஸத்யதபஶ்ஶமாதிகளைக்கொண்டு என்னேன்கை. † **"न्यासो नाम भगवति"** (ந்யாஸோ நாம பகவதி). இச்லோகத்தில் நினைத்த உரம் இப்பாட்டால் சொல்லுகிறது.

திவ்ய-அவ—தன்னை அடைந்தாரைத் தான் ரக்ஷிக்கமாட்டாமல் காட்டிக்கொடுப்பாரைப்பேசினுர் சென்ற பாட்டில். தன் ஸ்வரூபத்தை அழித்தாவது அடியாரை ரக்ஷிக்குமவனைப்பேசுகிறுர் இப்பாட்டில்.

வ்யா:—(நிலை மன்னுமென் நெஞ்சம்) "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்। தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே

---

† இந்தச்லோகம் பூர்ணமாகத் தெரியவில்லை. அறிந்தவர்கள் அறிவித்தால் க்ருதஜ்ஞராயிருப்போம்.

வாயோரிவ ஸுதுஷ்கரம்॥" [கிருஷ்ணா! மனம் (நல்விஷயங்களில்) நிலையற்றதாகவும், நிலைகலங்கச் செய்வதாயும், பலமுள்ளதாகவும், (கீழான விஷயங்களில்) நிலையானதாகவும் இருக்கிறதன்றோ. வாயுவைப்போல் அதை அடக்குவதையும் மிகவும் செய்தற்கரிதாக எண்ணுகிறேன்.] [கீதை 6-34] என்றும் "நின்றவா நில்லா நெஞ்சு" என்றும் சொல்லுகிறபடியே மிகவும் நிலையற்றதான என் நெஞ்சும் நிலை பெற்றது. (தோராழியால் மறைத்தாரால்....நிலைமன்னும்என்னெஞ்சம்)

"ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம்।
தயாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஸஸே॥"

[(உன்னுடைய) திவ்யாத்மஸ்வரூபம், திவ்யமங்களவிக்ரஹம், திவ்யாயுதங்கள், இருப்பிடமான வைகுண்டம் முதலியவை உனக்காயிருக்கவில்லை. பக்தர்களுக்காகவே உள்ளன. (இப்படி) பக்தபராதீனனாயிருந்தும், நீ பரமபுருஷனாய் ப்ரகாசிக்கிறாய்] என்று ஜிதந்தேயிலும்,

"பரிஜநபரிபர்ஹா பூஷணாந்யாயுதாநி
ப்ரவரகுணகணாஸ்ச ஜ்ஞாநஸக்த்யாதயஸ்தே।
பரமபதமதாண்டாந்யாத்மதேஹஸ் ததாத்மா
வரத! ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த॥"

[வரதனே! (விஷ்வக்ஸேனர், ஆதிஸேஷன் முதலிய) பரிஜனங்களும், (சத்ரம் சாமரம் முதலிய) பரிச்சதங்களும், ஆபரணங்களும், ஆயுதங்களும், ஜ்ஞானம் ஸக்திமுதலிய அந்தச் சிறந்த குணஸமூஹங்களும், ஸ்ரீவைகுண்டமும், அண்டங்களும், உன்னுடைய திவ்யமங்களவிக்ரஹமும், திவ்யாத்மஸ்வரூபமுமாகிய இவையெல்லாவற்றையும் அடியவர்களுக்கு ஆக்கிவைத்தாய்.] என்று வரதராஜஸ்தவத்திலும் சொல்லியபடியே ஸர்வேச்வரன் தன் ஸ்வரூபரூபகுணவிபூதிகள் முதலானவற்றை அடியார்க்காகவே ஆக்கிவைத்திருக்கிறான் என்பதை அறிந்தவுடன் பறக்கும் பஞ்சிலே பாரம் வைத்தாப்போலேயாகி, நிலையற்றதான என் நெஞ்சமும் நிலைபெற்றது. (நிலைமன்னுமென் நெஞ்சம்) பரமபதத்திற்குச் சென்ற பின்பு வரும் நிலை இவ்வுலகிலிருக்கும் போதே ஏற்பட்டது. இதற்குக் காரணம் யாதென்பதைப் பின்வரும் அடிகளாலே விவரிக்கிறார். (அந் நான்று) பாரதயுத்த காலத்திலே. பரமபுருஷன் பெண்ணுக்கும் பேதைக்கும் காணலாம்

படி வந்து, அடியார்க்காக அரும்பாடுபட்ட அதுவும் ஒரு காலமே! என்று கொண்டாடுகிறார். (தேவர் தலைமன்னர் தாமே) தேவாதி தேவனன்றே இது செய்தான்.

"தமீச்வராணும் பரமம் மஹேச்வரம்
தம் தேவதாநாம் பரமஞ்ச தைவதம்" [ச்வே 6-7]

[ஈச்வரருக்கும் மேலான மஹேச்வரனும், தேவதைகளுக்கும் மேலான தேவதையுமான அவனே] என்று வேதங்களும்,

"ராஜாதிராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்ரஹ்மமயோ மஹாந் ।
ஈச்வரம் தம் விஜாநீமஸ் ஸ பிதா ஸ ப்ரஜாபதி: ॥"

[ப்ரஹ்மமயராய்ப் பெரியவரான விஷ்ணு அனைவர்க்கும் ராஜாதி ராஜராய் விளங்குகிறார். அவரை ஈச்வரராக அறிகிறோம். அவரே தந்தை. அவரே ப்ரஜாபதி] என்று மஹாபாரதமும் முறையிடும் படியான மகிமையையுடைய அயர்வறுமமரர்களதிபதியன்றே இக் காரியம் செய்தான்; என்ன நீர்மை! என்று உருகுகிறார். (தாமே மாற்றாக) துரியோதனனுதியரை எம்பெருமான் பாண்டவவிரோதிக ளாக நினைத்திலன்; தன் விரோதிகளாகவே நினைத்தான்.

"த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத் ।
பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா: ॥"

[த்வேஷிப்பவனின் அன்னம் புஜிக்கத்தக்கதன்று. த்வேஷிப்பவனை புஜிப்பிக்கவும் கூடாது. அரசனே! நீ பாண்டவர்களை த்வேஷிக் கிறாய். பாண்டவர்கள் எனக்கு ப்ராணனன்றோ.] [பார-உத் 24-27] என்று தானே சோதிவாய்திறந்து அருளிச்செய்தானன்றே. (தாமே மாற்றாக) சரீரத்தை த்வேஷிப்பவன் சரீரிக்கும் எதிரியன்றே. "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" [ஞானியோவெனில் எனக்கு தாரகன் என்று என் நினைவு] எனப்படுமவர்களன்றே இவனடியார். (பல மன்னர் போர் மாள) அஹங்காரம் மிக்கவர்களான பல அரசர்களும் யுத்தத்திலே முடியும்படியாகவும். (வெங்கதிரோன் மாய) ஒரு வஸ்து வாலும் மறைக்கமுடியாத வெம்மையுள்ள கிரணங்களுடன் கூடிய ஸூர்யனும் மறையும்படியாகவும். (வெவகதிரோன் மாய) "பீஷோ தேதி ஸூர்ய:" [பரமபுருஷனிடம் பயத்தினால் சூரியன் உதிக்கிறான்] [தை-ஆ-7] என்கிற பகவதாஜ்ஞையைப் பின்பற்றிச் சிறிது நேரமும்

தப்பாமல் உதிப்பதும் அஸ்தமிப்பதும் செய்கையாகிற வெம்மையை உடைய சூரியனும் காலமில்லாக்காலத்தில் மறையும்படியாக, (பொழில் மறைய) பூமி முழுவதும் மறையும்படியாக. சூரியன் பூமியிலே ஓரிடத்தில் அஸ்தமிப்பதும் மற்றோரிடத்தில் பிரகாசிப்பதும் உண்டே. அம்மாதிரியாகவாகில் ஜயத்ரதன் முதலான எதிரிகள் தாங்களிருந்தவிடத்தில் ஸூர்யன் மறையவில்லை என்று சொல்லக்கூடும். அதற்காக பூமிமுழுவதும் ஸூர்யன் அஸ்தமித்து இருளடையும்படி செய்தான். (தேராழியால் மறைத்தாரால்) கோடி ஸூர்யப்ரகாசமான சக்ராயுதத்தால் ஸூர்யனை மறைத்தவராலே என் நெஞ்சம் நிலைமன்னும் என்று அந்வயம். தேராழி—ரதாங்கம்; சக்ரம்: கோடிஸூர்ய ப்ரகாசமாயிருப்பதாலே கண்ணை மழுங்கச்செய்வதன் மூலம் ஸூர்யனைச் சக்ரம் மறைத்தது என்று ஆசாரியர்கள் நிர்வஹிப்பர்கள். அம்பரீஷனிடம் அபசாரப்பட்ட துர்வாஸருடைய சாபத்தை ஏற்றுக்கொண்டு கருநிறத்தையடைந்து ஸூர்யனை மறைத்தது என்று நிர்வஹிப்பாருமுளர். தன் புத்திரனான அபிமன்யுவை வஞ்சித்துக் கொன்ற ஜயத்ரதனை ஸூர்யன் அஸ்தமிப்பதற்குமுன் கொல்வதாகவும் இல்லையாகில் அக்னிப்ரவேசம் செய்வதாகவும் அர்ஜுனன் ப்ரதிஜ்ஞை செய்ய, துர்யோதனாதியர் ஜயத்ரதனை ஒளித்து வைத்து ரக்ஷித்துவர, அர்ஜுனன் வார்த்தையை மெய்யாக்குவதற்காக, 'ஆயுதமெடேன்' என்று ப்ரதிஜ்ஞை செய்திருந்த கண்ணன் தன் வார்த்தையைப் பொய்யாக்கிக்கொண்டு சக்ராயுதத்தை எடுத்து ஸூர்யனை மறைத்த விருத்தாந்தம் மஹாபாரதத்தில் பிரஸித்தம்.

(தேவர் தலைமன்னர் தாமே தேராழியால் மறைத்தாரால் நிலைமன்னும் என்நெஞ்சம்) நித்யஸூரிகளுக்கும் அதிபதியாயிருப்பவன் "ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:" [ஸத்யமான குணங்களையும், ஸத்யமான ஸங்கல்பங்களையும் உடையவன்] [சாந் 8-1] என்று வேதங்களிலே ஓதப்படுகிற தன்னுடைய ஸங்கல்பத்தையும் பொய்யாக்கிக் கொண்டு தன் அடியானொருவன் வார்த்தையை மெய்யாக்கினான் என்பதை அறிந்ததும் என் மனம் நிலைபெற்றது. ஸத்யஸங்கல்பனான ஈச்வரன் அடியார்க்காக அஸத்யஸங்கல்பனாகியும் ரக்ஷிப்பனை அறிந்தபின்பு வேதாந்தங்களிலே மோக்ஷஸாதனமாக ஓதப்படும்

ஸத்யம், தபஸ், ஶமம், தமம், தானம், தர்மம் முதலானவை [*தை-நா* 49,50] *நம்மிடமில்லையேயென்று ஏங்குவதை விட்டு என் மனம் நிலைபெற்றது.*

17. ஆல நிழற்கீ ழறநெறியை நால்வர்க்கு
மேலையுகத் துரைத்தான் மெய்த்தவத்தோன்—ஞால
மளந்தானை யாழிக் கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு.

பதவுரை:—மெய் தவத்தோன்—*உண்மையான தவநெறியையுடைய* *ஞன ருத்ரன்*, ஞாலம் அளந்தானை—*உலகளந்தவனும்*, ஆழி கிடந்தானை—*க்ஷீராப்திசாயியும்*, ஆல் மேல் வளர்ந்தானை—*ஆலிலை மேல் வளர்ந்தவனுமான பெருமானை*, தான் வணங்கும் ஆறு—*தான் வழிபடும் மார்க்கமாகிய*, அறம் நெறியை—*நல்வழியை*, மேலை யுகத்து—*முன் யுகத்திலே*, ஆல நிழல் கீழ்—*ஓராலமரத்தின் நிழலிலே*, நால்வர்க்கு—*நான்கு மஹர்ஷிகளுக்கு*, உரைத்தான்—*உபதேசித்தான்.*

பெரி-அவ—பதினேழாம்பாட்டு-(ஆலநிழல் கீழ்) ஜ்ஞாநாதிகனான ருத்ரனும் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு இவ்வர்த்தத்தையிறே சொல்லிற்று என்கிறார்.

வ்யா:—(ஆலநிழற்கீழித்யாதி) பகவத்பஜனத்தில் அநுஷ்டிதமான அநுஷ்டானத்தையுடைய ருத்ரன் ஆலநிழலிலே அகஸ்த்யாதிகளுக்கு தர்மமார்க்கத்தைப் பண்டு சொன்னான். (ஞாலமித்யாதி) சொன்னபடி எங்ஙனேயென்னில்: அவதாரத்துக்கு அடியாகத் திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்து சிறியார் பெரியார் என்று வாசிவையாதே எல்லார் திருவடிகளிலும் ஒக்கத்திருவடிகளை வரையாதே வைத்து, வரையாதே எல்லாரையும் தன் வயிற்றிலே வைத்துப் பவனாயிருப்பதோரு ஆலிலையிலே கண்வளர்ந்து ரக்ஷிக்குமவனைத் தான் வணங்கும் ப்ரகாரத்தைச் சொன்னான்.

திவ்ய-அவ—*"ருத்ரனும் தன்னையடைந்தவர்களை ரக்ஷித்ததில்லையோ?" என்று சிலர் கேட்க, "அறிவிற்சிறந்தவனான ருத்ரனும் எம்பெருமானுடைய குணங்களையும், தானும் அவனையே வணங்கும் படியையும் சொல்லியன்றோ தன்னை அடைந்தவர்களை ரக்ஷிப்பது" என்று அருளிச்செய்கிறார்.*

வ்யா:—(ஆலநிழற்கீழறநெறியை நால்வர்க்கு மேலையுகத்துரைத்தான்) ருத்ரன் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து கொண்டு, அகஸ்த்யர் தக்ஷர், புலஸ்த்யர், கச்யபர் என்னும் நாலு மஹர்ஷிகளுக்கும் தர்மமார்க்கத்தை முன்னொரு யுகத்திலே உபதேசித்து அவர்களை ரக்ஷித்தான். (மெய்த்தவத்தோன்) 'இதுவே உண்மைத் தவம்; இனி வேறு தவமில்லை' என்று சொல்லும்படி அரிதான தவங்களை அநுஷ்டித்த ருத்ரன் 'இவன் என்ன'விஷயத்தைச் சொல்லி இவர்களை ரக்ஷித்தது?' என்னில்: (ஆழிக்கிடந்தானை) அர்த்தக்ரமத்திற்காகப் பாடக்ரமத்தை மாற்றிக் கொள்ளவேணும். (ஆழிக்கிடந்தானை) அநந்தமான அவதாரங்களை எடுப்பதற்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுமவனை. (ஞாலம் அளந்தானை) அதற்குப் பின் திரிவிக்கிரமனாக அவதரித்து வஸிஷ்டசண்டாளவிபாகமற பூமியிலுள்ள எல்லாரையும் திருவடிகளாலே தடவிக்கொடுத்தவனை. (ஆல்மேல் வளர்ந்தானை) ப்ரளயாபத்தின்போது எல்லாப் பிராணிகளையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து ஆலந்தளிரொன்றிலே கண்வளர்ந்தருளிய அற்புதனை. (தான் வணங்குமாறு) தானும் இவனுடைய இக்குணங்களிலே ஈடுபட்டு வணங்குவதேயே அவர்களுக்கு உபதேசித்து ரக்ஷித்தான். "ஈச்வராத் ஜ்ஞாநமந்விச்சேந் மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத்" [சிவனிடமிருந்து ஞானத்தையும், ஜநார்த்தனனிடமிருந்து மோக்ஷத்தையும் விரும்பக்கடவன்] என்னுமர்த்தத்தை இம்மூன்று பாட்டுக்களாலும் அருளினாராயிற்று.

18. மாறாய தானவனை வள்ளுகிரால் மார்விரண்டு
கூறாகக் கீறிய கோளரியை—வேறாக
ஏத்தி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சாத்தி யிருப்பார் தவம்.

பதவுரை:—மாறு ஆய—எதிரிட்டுநின்ற, தானவனை—ஹிரண்யாஸுரனுடைய, மார்வு—மார்வை, வள் உகிரால்—கூர்மையான நகங்களினால், இரண்டு கூறு ஆக கீறிய—இருபிளவாகப் பிளந்த, கோள் அரியை—பெருமிடுக்கனான நரசிங்க மூர்த்தியை, வேறாக—விலக்ஷணமாக, ஏத்தி இருப்பாரை—துதித்து இருப்பவர்களை, மற்று அவரை சாத்தி இருப்பார் தவம் வெல்லுமே—அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை ஆச்ரயித்திருக்கும் சரமாதிகாரிகளின் நிஷ்டைவென்று விடும்.

பேரி-அவ:—பதினெட்டாம்பாட்டு-(மாறுயவித்யாதி) குறிக்கொண்டு பகவானையே பஜிக்குமதிலும் ததீயரைப் * (புருஷகாரமாகக் கொண்டு) பற்றுகை சீரியதென்கிறார்.

வ்யா:—(மாறுயவித்யாதி) ஈச்வரனென்று பாராமே தனக்கு எதிரியான ஹிரண்யனைக் கூரிய உகிராலே மார்விரண்டு பிளவாகக் கீண்ட நரஸிம்ஹத்தை. (வெருகவித்யாதி) வேருகவேத்தியிருப்பாராகிறார் "அந்தியம் போதிலரியுருவாகி அரியையழித்தவனைப் பல்லாண்டு" என்று ரக்ஷகனுக்குத் தீங்குவருகிறதென்று திருப்பல்லாண்டுபாடும் பெரியாழ்வார் போல்வார். (மற்றித்யாதி) சாத்தியிருப்பாராகிறார், "வல்லபரிசு வருவிப்பரேல்" என்று பெரியாழ்வார் பக்கலிலே ந்யஸ்தபரராயிருக்கும் ஆண்டாள் போல்வார். தவம்—ஸுக்ருதம்.

திவ்ய-அவ:—"*ஆல்மேல் வளர்ந்தானைத் தான் வணங்குமாறு.... உரைத்தான்*" *என்றதும்* "*எம்பெருமானை ஆச்ரயிப்பது தான் மேலான உபாயமோ*" *என்று சிலர் கேட்க*, "*அவனடியார்களைப் பற்றியிருப்பது அதிலும் சிறந்தது*" *என்கிறார்*.

வ்யா:—(*மாறுய தானவனை*) *எதிரியான ஹிரண்யாஸுரனை. ஸர்வேச்வரனை தனக்கும் எதிரியாய், தன்னையே ஸர்வேச்வரனாக நினைத்துவந்தவனை*. (*மாறுய தானவனை*) *கடைசிவரையில் எதிரியாகவே நிலைநின்ற ஹிரண்யாஸுரனை*. "கச்சாநுஜாநாமி" [*போய்வா; அநுமதிக்கிறேன்*] [*ரா-யு* 59-114] *என்று முயன்றுபார்த்துக் கடைசிவரையில் எதிரியாகவே நிலைநிற்பவர்களையன்றோ இவனழிப்பது*. (*மாறுய தானவனை*) *மனோவாக்காயங்கள் மூன்றினுலும் எதிரியாய் நின்ற ஹிரண்யாசுரனை. இவற்றில் ஒன்றிரண்டினுல் மட்டும் எதிரியாயிருப்பவர்களை இவன் அழிப்பதில்லையே. மந:பூர்வகமாக எதிரிடுமவர்களையே அழிப்பது*. "*உன்னைச் சிந்தையினால் இகழ்ந்தஇரணியன் அகல்மார்வம் கீண்ட என் முன்னைக்கோளரியே*" [திருவாய்2-6-6] *என்றுரன்றே. கைக்கொள்ளும்போது உக்திமாத்ரமும் போதும்; கைவிடும் போது நெஞ்சார த்வேஷித்தாலொழிய விடான்*. (*மாறுய தானவனை*) *தன் உயிர்நிலையிலே நலிந்த அஸுரனை*. "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" [*ஞானியானவன் எனக்கே ஆத்மாவாயிருப்பவன் என்று என்*

---

*குண்டலிதபதங்கள் பல ஓலைச்சுவடிகளில் இல்லையென்பர். [ஸு-71]

ஸித்தாந்தம்.] என்றும், "மம ப்ராணு ஹி பாண்டவா:" [பாண்டவர்கள் எனக்கு ப்ராணனன்றோ] [பார-உத் 24-23] என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானுக்கு ப்ராணன் போன்ற ப்ரஹ்லாதனிடம் அபசாரப்பட்டவனன்றோ இரணியன். (மாறாய தானவனை) தன்னை விரோதிப்பவர்களையும் தன் எதிரிகளாக நினைப்பதில்லை எம்பெருமான். தன் அடியாரை விரோதிப்பவர்களையே "த்விஷதந்நம்" என்றாப் போலே தனக்கு த்வேஷிகளாக நினைப்பது. தன்மேல் அம்புபட்டபோது "க்ரோதமாஹாரயத்தீவ்ரம்" [கடுங்கோபத்தை வரவழைத்துக் கொண்டான் ராமபிரான்] [ரா-ஆ 24-34] என்று கோபத்தை வரவழைத்துக்கொள்ளவேண்டியிருந்தது. திருவடியின் மேல் அம்பு பட்டபோது,

"அத ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம் ।
த்ருஷ்ட்வா ப்லவகஶார்த்தூலம் கோபஸ்ய வஶமேயிவாந் ॥"

[மஹாதேஜஸ்வியான ராமன் ராவணனால் காயமடைந்த வாநச்ரேஷ்டனான ஹனுமானைப் பார்த்ததும் கோப பரவசனானான்.] [ரா--யு59-136] என்று ஸர்வேச்வரனான தானே கோபவசப்பட்டானன்றோ. (வள்ளுகிரால் கீறிய) "கூருகிரேயறிந்ததல்லால் கோவேநீயறியாயால்" என்று அரித்தால் தன்னையறியாமல் சொரிந்துகொள்வதுபோல் இவனுடைய நகங்களே இக்காரியம் செய்தனவென்று சொல்லும்படி அவலீலையாக அவனை அழித்தான் என்கை. (மார்பிரண்டு கூறாகக் கீறிய கோளரியை) 'இவனை அழிக்கைக்கு மார்வை இரண்டாகப் பிளக்கவும் வேணுமோ? ஒரு ஹூங்காரம் பண்ணினால் போராதோ' என்னில்: "இவன் நெஞ்சிலேயாவது சிறிது ஈரம் (ஆநுகூல்யம்) உள்ளதோ" என்று ஆராய்வதற்காகவே மார்வைப்பிளந்து துழாவினான் என்பர். "உளந்தொட்டு இரணியன் ஒண்மார்வகலம் பிளந்திட்டகை" [பெரியாழ் திரு 1-6-9] என்றானன்றோ பெரியாழ்வார். (வள்ளுகிரால் கீறிய) 'ஆயுதத்தால் சாவில்லை' என்று பிரமன் கொடுத்த வரத்தைப் பொய்யாக்காமல் காரியம் செய்தபடி. (கோளரியை) மஹாபலவானான நரஸிம்ஹனை. (வேறாக ஏத்தியிருப்பாரை) விலக்ஷணமாகத் துதித்திருப்பாரை. துதிக்கு வைலக்ஷண்யமாவது:—ரக்ஷிக்கப்படுமவனான தான், பரமபுருஷன் பண்டைக்காலத்திலே செய்த செயல்களை அநுஸந்தித்து, 'என் வருகிறதோ?' என்று

கலங்கி ரக்ஷகத்வத்தை ஏறிட்டுக்கொண்டு பகவானுக்குப் பல்லாண்டு பாடித் துதிக்கை.

"அந்தியம்போதில் அரியுருவாகி அரியை அழித்தவனைப்
பந்தனை தீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே"

என்ற பெரியாழ்வாரைப்போல்வார் இங்கு சொல்லப்படுமவர்கள். (மற்றவரைச் சாத்தியிருப்பார்) அப்படித் திருப்பல்லாண்டு பாடும் ஸ்ரீ வைஷ்ணவர்களே நமக்கு ப்ராப்யப்ராபகங்கள் என்று அவர்களைப் பற்றியிருப்பவர்கள். (மற்று) "தேவுமற்றறியேன்" என்கிறபடியே பகவானிடத்திலே நேராகக் கண்வைக்கமாட்டார்கள் இவர்கள். நம் ஸ்வாமிகளான ஸ்ரீ வைஷ்ணவர்கள் உகந்த விஷயம் என்றே எம் பெருமானிடம் கண் செலுத்துவர்கள்.

"வில்லிபுதுவை விட்டுச்சித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே" [நாச்-திரு 10-10] என்ற

ஆண்டாளைப்போல்வார் இங்கு சொல்லப்படுமவர்கள். (ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்) பகவானுக்கு மங்களாசாஸனம் பண்ணுமவர்களின் புண்ணியத்தை பாகவதர்களைப் பற்றியவர்களின் புண்ணியம் வென்றிருக்கும். கையைப்பற்றி அபேக்ஷித்தால் மறுக்கலாம்- காலைப்பற்றி வேண்டினால் மறுக்கமுடியாதன்றோ. அப்படியே ஸ்வதந்த்ரனை எம்பெருமானை நேராகப் பற்றியவர்களுக்கு பல ஸித்தியில் ஸந்தேஹமுண்டு. அவனுக்குத் திருவடி போன்றவர்களான அந்த ஸ்ரீ வைஷ்ணவர்களையே பற்றினார்க்குப் பல ஸித்தி நிச்சயமாகும்.

"ஸித்திர் பவதி வா'நேதி ஸம்ஶயோऽச்யுதஸேவிநாம் ।
ந ஸம்ஶயோऽஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநாம் ॥

[பலஸித்தி உண்டாகுமோ இல்லையோவென்ற ஸந்தேஹம் பகவானைப் பற்றியவர்களுக்கு உண்டு. அவனுடைய (அந்த) பக்தர்களுக்குக் கைங்கர்யம் செய்யுமவர்களுக்கு அம்மாதிரியான ஸந்தேஹமில்லை.] என்ற ப்ரமாணம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. பகவந் நிஷ்டையைக்காட்டிலும் பாகவதநிஷ்டை சிறந்தது என்னும் பரமார்த்தம் இப்பாசுரத்தின் பரமதாத்பர்யமாகும்.

19. தவம்செய்து நான்முகனல் பெற்ற வரத்தை
அவம்செய்த வாழியா னன்றே—உவந்தெம்மைக்
காப்பாய்நீ காப்பதனை யாவாய்நீ வைகுந்த
மீப்பாயு மெவ்வுயிர்க்கும் நீ.

பதவுரை:—தவம் செய்து—*தபஸ்ஸை அநுஷ்டித்து*, நான்முக ஞல்—*பிரமனிடத்திலிருந்து*, பெற்ற—*(ஹிரண்யன் முதலானவர்கள்) பெற்றுக்கொண்ட*, வரத்தை—*வரங்களை*, அவம் செய்த—*பழுதாக்கின*, ஆழியான்அன்றே—*திருவாழிக்கையனுன பெருமானன்றோ நீ*; எம்மை—*அடியோங்களை*, உவந்து—*திருவுள்ளமுவந்து*, காப்பாய் நீ—*காத்தருள் பவன் நீயே*; காப்பதனை ஆவாய் நீ—*ரக்ஷணஸங்கல்பமும் உன்னதே*; எவ்வுயிர்க்கும்—*(உன்னை ஆச்ரயித்த) எல்லாச்சேதனர்க்கும்*, வைகுந் தம்—*பரமபதத்தை*, ஈப்பாயும்—*அளிப்பவனும்*, நீ—*நீயே*.

பெரி-அவ—பத்தோன்பதாம்பாட்டு. ப்ரதானரானவர்களும் அறிவு கெடுமிடத்தில் ரக்ஷிக்கும் நீயே எனக்கு எல்லா அபிமதஸித்தியும் செய்வாய் என்கிருர்.

வ்யா:—(தவமித்யாதி) தபஸ்ஸைப் பண்ணி ப்ரஹ்மாவின் பக்க லிலே ஹிரண்யாதிகள் பெற்ற வரத்தை அழித்து வரம் கொடுத்தவர் களுக்கும் குடியிருப்புக்கொடுத்த நீயே. (உவந்தித்யாதி) உன் பேருக ரக்ஷிப்பாய் நீ; ரக்ஷணம்தான் நீ; புநராவ்ருத்தியில்லாத மோக்ஷத்தை எவ்வுயிர்க்கும் ஈப்பாய் நீ.

திவ்ய-அவ:—*'எனக்கு பக்தர்களாய் தேவர் தலைவர்களான ப்ரஹ்மாதிகளும் உத்தேச்யராகலாமே' என்று இவரைச் சோதிப்பதற்காக எம்பெருமான் கேட்க, இப்பாட்டை அருளிச்செய்கிருர். ப்ரஹ்மாதிகள் ஸத்வம் தலையெடுத்தபோது பகவத்பக்தர்களாயிருந்தபோதிலும், ரஜஸ்தமோ குணங்கள் மேலிட்டபோது ஈச்வரத்வாபிமானம் கொண்டு ஹிரண்யராவணுதிகளுக்கு வரங்களைக் கொடுத்துவிட்டு அவதிப்படுமவர்களாகையால் அவர்கள் உத்தேச்யரல்லர். அந்தந்த ஆபத்துக்களிலிருந்து அவர்களை ரக்ஷிக்கும் தேவரீரே எனக்கு ஸர்வ விதரக்ஷகரும் ஆவீர் என்கிருர். இப்பாட்டிலிருந்து இருபத்தாறும் பாட்டு வரையில் ஆழ்வாருக்கும் எம்பெருமானுக்கும் ஸம்வாதமாகவும் பகவானுடைய ரூபகுணங்களின் அனுபவமாகவும் செல்லுகிறது.*

வ்யா:—(தவம் செய்து நான்முகனால் பெற்ற வரத்தை அவம் செய்த ஆழியானன்றே) ஸர்வலோகஸ்ரஷ்டாவாய், உன் திருநாபீ கமலத்திலிருந்து தோன்றியவனாயிருந்தும், 'நாம் கொடுக்கும் வரத்தினால் விளையக்கூடிய கேடுகள் எத்தனை' என்று ஆராயாமல், 'நாமும் வரப்ரதாதாவாகவேணும்' என்னும் அபிமானத்துடன் வரங்கொடுத்துவிட்டு அவதிப்பட்ட அவன் உத்தேச்யனோ? அல்லது, அவ்வரங்களையும் பொய்யாக்காமல், அவற்றை நிஷ்பலமாகும்படி நரசிங்க உருவைக்கொண்டு, அந்திவேளையில், நகத்தாலே அவனைக்கொன்றொழித்த நீ உத்தேச்யனோ என்பதை, பிரானே! நீயே உரைக்கவேணும். (தவம் செய்து....) ராவண வ்ருத்தாந்தத்தை நினைப்பதாகவும் கொள்ளலாம். ராவணனுக்கு வரத்தைக் கொடுத்துவிட்டுத் துன்புற்ற ப்ரஹ்மாதிகள் உத்தேச்யரோ? அல்லது, அவர்கள் வரங்களைப் பொய்யாக்காமல் மனிதவுருக்கொண்டு ராவணாதிகளை அழித்து அவர்களுக்கும் குடியிருப்புக்கொடுத்த நீ உத்தேச்யனோ என்பதை அருளிச்செய்யவேணும் என்கை. (ஆழியானன்றே) தங்களையும் ரக்ஷித்துக்கொள்ள வல்லமையற்ற அவர்களோ உத்தேச்யர்? அடியாரை ரக்ஷிப்பதற்காகவே எப்போதும் கையும் திருவாழியுமாயுள்ள நீயன்றோ உத்தேச்யன் என்கை. (உவந்தம்மைக் காப்பாய் நீ) எங்களை ரக்ஷிக்கும்போது எங்களுடைய காரியம் ஒன்றைச் செய்ததாக நினைத்திராமல், உன் காரியம் கைகூடியதுபோல் ஸந்தோஷப்பட்டுக்கொண்டு ரக்ஷிப்பவனன்றோ நீ.

"அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்|
க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ||"

[லங்கையில் ராக்ஷஸர் தலைவனை விபீஷணனை அபிஷேகம் செய்வித்த பின்பு ராமபிரான் தன் காரியம் செய்து முடிக்கப்பெற்றவனாய், துன்பம் நீங்கப்பெற்று ஆநந்தமெய்தினான்.] என்றாரன்றோ வால்மீகிபகவான். (உவந்தெம்மைக் காப்பாய் நீ....தவம்செய்து நான்முகனால் பெற்ற) அருந்தவங்கள் செய்தபின்பும் அழியத்தக்க வரங்களைக் கொடுக்கும் ப்ரஹ்மாதிகள் உத்தேச்யரோ, அடிவணங்கியவுடன் தன்பேறாக உகந்து அடியார்க்கு அனைத்தையுமளிக்கும் நீ உத்தேச்யனோ என்பதை விவரிக்கவும் வேணுமோ என்றபடி. (காப்பதனையாவாய் நீ) ரக்ஷணமும் நீயே; ரக்ஷணஸங்கல்பமும் உன்னுடையதே என்கை.

ப்ரஹ்மாதிகள் தங்களடியார்களைச் சிலவிடங்களில் ரக்ஷிப்பதும் அவர்களுக்கு அந்தர்யாமியாயுள்ள உன் ஸங்கல்பத்தாலேயேயென்கை.

"யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயார்ச்சிதுமிச்சதி।
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்॥"

[எந்த எந்த மனிதர்கள், என்னுடைய சரீரங்களான தேவர்களை ச்ரத்தையுடன் பூஜிக்கவிரும்புகிறார்களோ அவர்கள் என்னாலேயே கொடுக்கப்பட்ட இஷ்டங்களை அந்த தேவதைகளிடமிருந்து பெறுகின்றார்கள்] [கீதை7-22] என்று தேவரீரே அருளிச்செய்திலீரோ என்கை. (காப்பதனை யாவாய் நீ)ரக்ஷண தர்மந்தான் வேறொருவரிடம் கிடக்கமுடியுமோ?

"ந ஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம்।
ஸ்திதௌ ஸ்திதம் மஹாபாக பவத்யந்யஸ்ய கஸ்யசித்॥"

[ரக்ஷணத்திலே நிலைநிற்கும் ஸர்வேச்வரனான ஹரியைத் தவிர வேறொருவனுக்கும் ரக்ஷணஸாமர்த்தியம் இல்லையன்றோ] [வி-பு 1-22-21] என்று பராசரபகவானும் அருளினார். (வைகுந்தமீப்பாயும் எவ்வுயிர்க்கும் நீ) மற்றதெல்லாம் கிடக்கட்டும்; திரும்பி இங்கு வந்து துன்புறாதபடி வைகுண்டமாகிற மோக்ஷத்தை அளிப்பதற்கு உன்னைத் தவிர வேறு எவராலாகும்? "உதாம்ருதத்வஸ்யேஶாந:" [மோக்ஷத்திற்கும் ப்ரபு பரமபுருஷனே] "தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே" [அவனை இப்படி அறிபவனே இங்கு மோக்ஷமடைகிறான். மோக்ஷமடைய வேறு வழியில்லை] "அம்ருதஸ்-யைஷ ஸேது:" [மோக்ஷத்திற்குச் செல்லும் அணையிவனே] "மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத்" [மோக்ஷத்தை ஜநார்தனனிடமிருந்தே விரும்பவேண்டும்] என்று சாஸ்திரங்கள் உத்கோஷித்தனவன்றோ. ஆக, இப்பாசுரத்தால், ப்ரஹ்மாதிகள் தங்களைத் தாங்கள் ரக்ஷித்துக் கொள்ளவும் வல்லரல்லராகையால் உத்தேச்யரல்லரென்றும், எல்லாவுயிர்க்கும் ஸர்வ ரக்ஷணங்களையும் செய்யும் பகவானே உத்தேச்யனென்றும் அருளிச்செய்தாராயிற்று.

20. நீயே யுலகெல்லாம் நின்னருளே நிற்பனவும்
நீயே தவத்தேவ தேவனும்—நீயே
எரிசுடரும் மால்வரையு மெண்டிசையும் அண்டத்
திருசுடரு மாய விவை.

பதவுரை:—உலகு எல்லாம் நீயே—உலகங்கட்கெல்லாம் நிர்வாஹகன் நீயே; நிற்பனவும்—நிலையான புருஷார்த்தமான மோக்ஷமும், நின் அருளே—உனது கிருபையினாலேயே; தவம் தேவர் தேவனும் நீயே—தவத்தினால் தேவர்களான பிரமன் முதலியோர்க்குத் தலைவனும் நீயே; எரி சுடரும்—ஜ்வலிக்கின்ற அக்நியும், மால் வரையும்—பெரியகுலபர்வதங்களும், எண் திசையும்—எட்டு திசைகளிலுமுள்ள ஸகல பதார்த்தங்களும், அண்டத்து—அண்டத்திலுள்ள, இரு சுடரும்—சந்த்ரஸூர்யர்களும், ஆய இவை—ஆகிய இவைகளெல்லாம், நீயே—நீயேகாண்.

பெரி-வ்யா—இருபதாம் பாட்டு—(நீயே யுலகெல்லாம்) உன்னை யொழிய ஜகத்துக்கு ப்ருதக்ஸ்திதியும் ப்ருதகுபலம்பமுமில்லை. (நின்னருளே நிற்பனவும்) உன் ப்ரஸாதமடியாகப் பெறும் பேறு நிலைநிற்பது. (நீயே தவத்தேவதேவனும்) ஸாதநாநுஷ்டாநம் பண்ணி அதிகாரம் பெற்றவர்களுக்கும் உன்னையொழிய ஸ்திதியில்லை. (நீயேயெரிசுடருமித்யாதி) பிரித்துச் சொல்லுகிறதேன்? அக்நியும் குலபர்வதங்களும் எட்டுத் திக்கும் அண்டாந்தர்வர்த்திகளான சந்த்ராதித்யர்களுமான இப்பதார்த்தங்களுமெல்லாம் உன்னதீனம்.

திவ்ய—அவ:—"காப்பாய் நீ காப்பதனையாவாய் நீ வைகுந்தமீப்பாயுமெவ்வுயிர்க்கும் நீ" என்றுஆழ்வார் அருளிச்செய்ததைக் கேட்டு மிகவுகந்தான் எம்பெருமான். "கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம்" [எது இனிமையானது? தன் பிள்ளையின் பேச்சே இனிமையானது] "குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்" என்றாப்போலே ஆழ்வாருடைய இன் சொற்களை இன்னும் சிறிது கேட்க வேணுமென்று அவாவுற்றவனாய், "ஆழ்வீர்! உம் பாசுரம் செவிக்கினிய செஞ்சொல்லாயிராநின்றது. மற்றுமோர் பாசுரம் பாடியருள்வீர்" என்றான். ஸர்வேச்வரனுடைய ஸர்வாத்மபாவத்தைத்தேன் போன்ற தம் சொற்களிலே குழைத்து அளிக்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(நீயே யுலகெல்லாம்) "விச்வம் நாராயணம் ஹரிம்" என்று நாராயணாநுவாகத்தில் சொல்லியபடியே எல்லாவுலகுக்கும் அந்தர்யாமியாயிருப்பதால் "உலகெல்லாம் நீயே" என்று சொல்லலாம்படியிருப்பவன். "ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:" [எல்லாவற்றையும் வியாபித்திருப்பதால் நீ எல்லாமுமாகிறாய்] என்று கீதையிலும், "தத்ஸ்தத்வாதநுபச்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாதவ:" [அந்த

ஜீவனுக்குள்ளே வியாபித்து நிற்பதால், இருவரையும் ஸாதுக்கள் ஒருவராகவே காண்கிறார்கள்] என்று மஹாபாரதமும், "அவஸ்தி-தேரிதி காஶக்ருத்ஸ்ந:" என்று ப்ரஹ்ம ஸூத்ரமும் இவ்வர்த்தத்தை அறுதியிட்டன. இவனை விட்டுப் பிரிந்த நிலையும், பிரிந்து காணப் படுவதும் இவ்வுலகிலுள்ள எப்பதார்த்தத்திற்கும் என்றும் இல்லை யாகையால், 'இவனே உலகெல்லாம்' என்று சொல்லத்தட்டில்லை யன்றோ. "நான் மெலிந்தவன்" என்று தேஹாத்மவாசிஶப்தங்கள் ஓரே வேற்றுமையில் பிரயோகிக்கப்படுவதையும், 'குடம் கறுப்பு' என்று குணவாசிஶப்தங்களும் குணிவாசிஶப்தங்களும் ஓரே வேற்று மையில் பிரயோகிக்கப்படுவதையும் நாம் உலகிலேயே காண்கிறோ மன்றோ. எல்லாவுலகிற்கும் ஆத்மாவாகவும், குணி அல்லது ப்ரகாரி யாகவும் இருப்பவனன்றோ நாராயணன். (நின்னருளே நிற்பனவும்) நிலை நின்ற புருஷார்த்தமாகிற மோக்ஷமும் உன் அருளாலேயே ஏற்படுவது. "எல்லாப்பொருள்களும் ஸத்தை பெற்று நிலைநிற்பதும் உன் அருளாலேயே" என்றும் பொருள் கொள்ளக்கூடுமாயினும், "நீயேயுலகெல்லாம்" என்றதிலிருந்தே இவ்வர்த்தம் ஸித்திக்கு மாகையால் "நிலை நின்ற புருஷார்த்தமும் உன் அருளாலேயே" என்னும் பொருள் ஆசார்யரால் ஆதரிக்கப்பட்டது. பரமபதத்திலே பெரும்பேறு அபரிமிதமானதாகையால் 'நிற்பன' என்று பன்மை யாகக் கூறப்பட்டது. (நீயே தவத்தேவதேவனும்) தவத்தினால் தேவரானவர்களுக்கும் தேவனாயிருப்பவனும் நீயே. "தம் தேவதா--நாம் பரமஞ்ச தைவதம்" [ச்வே] என்றும்,

"யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:।
புநஸ் த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுஶ்ரும:॥"

[ஆயிரங்கோடிக்கணக்கான யுகங்கள் விஷ்ணுவை ஆராதித்துப் பிரமன் மறுபடியும் மூவுலகிற்கும் பதியாயிருக்கும் தன்மையை அடைந்தான் என்று கேள்விப்படுகிறோம்] [பார-ஸபா 14-8] என்றும்,

"ப்ரஹ்மாதயஸ் ஸுராஸ் ஸர்வே விஷ்ணுமாராத்ய தே புரா।
ஸ்வம் ஸ்வம் பதமநுப்ராப்தா: கேஶவஸ்ய ப்ரஸாதத:॥"

[பிரமன் முதலிய எல்லா தேவர்களும் முன் விஷ்ணுவை ஆராதித்துத் தங்கள் தங்கள் பதவிகளைக் கேசவனுடைய அருளாலே பெற்றார்கள்.] [நாரஸிம்ஹபுராணம்] என்றும்,

"மஹாதேவஸ் ஸர்வமேதே மஹாத்மா
ஹுத்வாऽऽத்மாநம் தேவதேவோ பபூவ"

[ஸர்வமேதயஜ்ஞத்தில் தன்னையே ஹோமம் செய்துகொள்வதன் மூலம் மஹாத்மாவான மஹாதேவன் தேவதேவனானான்] [பாரதம்] என்றும் தவத் தேவர்களுக்கும் தேவன் இவனே என்னுமர்த்தம் அறிவிக்கப் பட்டதன்றோ.

(நீயே எரிசுடரும் மால் வரையும்....) தனித்தனியாகச் சொல்ல வேணுமோ? எரியா நிற்கும் அக்நியும் பெரிய குலபர்வதங்களும், எட்டு திக்குகளும், அண்டத்தினுள்ளேயிருக்கும் சந்திரசூரியர்களுமாகிற இவையெல்லாம் நீயே; இவையனைத்தும் உனக்கு வசப்பட்டவையே என்றபடி.

"ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநி விஷ்ணுர்
வநாநி விஷ்ணுர் கிரயோ திஶஶ்ச" [வி. பு 2-12-38]

[சுடர்களும் விஷ்ணுவே; உலகெல்லாம் விஷ்ணுவே; வநங்களும் விஷ்ணுவே; மால்வரையும் எண்டிசையும் விஷ்ணுவே] என்று பராசரபகவான் அருளியதை அடியொற்றியிருக்கிறது.

21. இவையா பிலவாய் திறந்தெரிகான்ற
இவையா வெரிவெட்டக் கண்கள்—இவையா
வெரிபொங்கிக் காட்டுமிமையோர் பெருமான்
அரிபொங்கிக் காட்டு மழகு.

பதவுரை:—திறந்து—விரிந்து, எரி கான்ற—நெருப்பை உமிழ்ந்த, பிலம்வாய்—குஹைபோன்ற பெரிய வாய், இவையா—இதுவோ!; எரி வட்டம்—கொள்ளிவட்டம்போலே உருண்டு சிவந்து ஜ்வலிக்கிற, கண்கள்—திருக்கண்கள், இவையா—இவையோ!; எரி—அக்நிபோல், பொங்கி—கிளர்ந்து, காட்டும்—தோன்றின திருமேனியையுடையவனாய், இமையோர் பெருமான்—நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனான ஸர்வேச்வரன், அரி—நரசிங்கமூர்த்தியாய், பொங்கி—கிளர்ந்து, காட்டும்—காட்டின, அழகு—அழகு, இவையா—இதுவோ!

பெரி-அவ:—இருபத்தோராம் பாட்டு—(இவையா) இப்படிப் பூர்ணனானவனுக்கு ஆச்ரிதார்த்தமாக வரும் சீற்றத்தைச் சொல்லுகிறது. நரஸிம்ஹத்தைத் தத்காலத்திலே அநுஸந்தித்தாற்போலே பேசுகிறார்.

வ்யா:—(இவையித்யாதி) "**अवाक्यनादरः**" (அவாக்யநாதர:) என்ற தத்வம் இருக்கிறபடி. பிலம்போலே இருக்கிற வாயைத் திறந்து அக்நியை உமிழாநின்ற இவை. அக்நியை உமிழாநின்று பிலம்போலே இருக்கிற வாய் இவை. (இவையாஎரிவட்டக்கண்கள்) "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணன்" என்கிற கண்கள் கொள்ளிவட்டம்

போலேயிருக்கிற கண்கள். (இவையாவித்யாதி) அக்நிபோலே ஜாஜ்வல்ய மானமான திருமேனியை உடையனாய், நித்யஸூரிகளுக்கு நிர்வாஹக னானவன். அன்றிக்கே, அக்நி கொடுக்கும் ஹவிஸ்ஸையுடைய இந்த்ராதி களுக்கு நிர்வாஹகன். (அரியித்யாதி) நித்யஸூரிகள் பரிய இருக்குமவன் ஆச்ரிதார்த்தமாக நரஸிம்ஹமாய்ச் சீறிக் காட்டின அழகு.

திவ்ய-அவ:—ஆழ்வாருடைய செவிக்கினிய செஞ்சொல்லைக் கேட்டவுடன் பரமப்ரீதனானான் எம்பெருமான். அவனுடைய திருவர் யும், திருக்கண்களும், திருமேனியும் மலர்ந்து சுடர்விட ஆரம்பித்தன. 'அவிகாராய' என்று சொல்லப்படும் தத்துவம் அடியேற்காக விகார மடைந்தபடியென்! என்று ஆச்சரியமடைந்தார். உடனே, தன் அடியானான ப்ரஹ்லாதனை நலிந்தவுடன் கடுங்கோபங்கொண்டு விகார மடைந்த வாயும் கண்ணும் மேனியும் நினைவுக்குவந்தது. நரஸிம் ஹத்தையும் மனக்கண்முன்னே காணலானார். இப்படியும் ஒரு மாறு பாட்டை அடைந்தபடியென்! என்று அவ்வுருவத்திலே ஈடுபட்டுப் பேசுகிறார்.

வ்யா:—(இவையாபிலவாய்) "அவாக்யநாதர:" [*ஒருவரிடமும் முகங்கொடுத்துப் பேசமாட்டாதவன்; வேண்டுதல் வேண்டாமை யிலான்.*] [*சாந் 3-6*] *என்றும்*, "வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டதி" [*விருக்ஷம்போலே வணங்காதவனாய் பரமபதத்தில் நிற்கிறான்*] [*முண்டக 1-1-7*] *என்றும் சொல்லப்படும் தத்துவம் அடியார்க்காகப் படும் பாட்டை ஒரு பாசுரத்தால் பேசமுடியுமோ?* (இவையா *பிலவாய்*) "மாயனார் செய்ய வாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந் தது வே" [*அமல-7*] "வாலியதோர் கனிகொல் வினையாட்டியேன் வல் வினைகொல், கோலம் திரள் பவளத் துண்டங்கொலோ அறியேன், நீல நெடுமுகில்போல் திருமேனியம்மான் தொண்டைவாய்" [திருவாய்7-7-3] *என்று அடியாரை ஈடுபடுத்தும் வாய் குஹைவாயிலைப்போலே திறந்து நின்று நெருப்பைக் கக்கின. என்ன ஆச்சரியம். "திறந்து எரிகான்ற பிலவாய் இவை" "பிலவாய் இவை திறந்து எரி கான்ற" என்று இரண்டுவிதமாக அந்வயிக்கலாம்.* (இவையா) *இவை ஆ; 'ஆ' என்றது 'என்ன ஆச்சரியம்!' என்றபடி. அன்றிக்கே, 'இவையா?' என்பதாகவும் கொள்ளலாம். "என்முன்னே அதிமனோஹரமாகக்*

காட்சியளிக்கும் இந்த வாயா நரஸிம்ஹாவதாரகாலத்தில் பிலத்தின் வாயைப்போலே திறந்து நின்று அக்நியை உமிழ்ந்தன?" என்றபடி. (இவையா எரிவட்டக்கண்கள்) "சுடர்மாமதிபோல் உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணு" [பெரியதிரு7-1-9] என்றும், "சூழவும் தாமரை நாண்மலர்போல் வந்து தோன்றும் கண்டீர்" என்றும், "கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" [அமல-8] என்றும் பாகவதரைப் பரவசப்படுத்தும் இக்கண்களா பாகவத விரோதி விஷயத்தில் கொள்ளிவட்டக் கண்களாக மாறின? கொள்ளி வட்டம்போன்ற கண்கள் இவையன்றோ. என்ன ஆச்சரியம்! என்றும் கொள்ளலாம். தமக்கு முன் தண்ணளியுடன் காட்சியளிக்கும் பெருமானுருவையும் நரசிங்கவுருவையும் மாறிமாறி அநுபவிப்பதாக ஒரு பொருள். நரசிங்கவுருவையே நோக்கி ஆச்சரியப்படுவதாக ஒரு பொருள். (இவையா எரிபொங்கிக்காட்டும் இமையோர் பெருமான் அரிபொங்கிக் காட்டுமழகு) நெருப்பைப்போலே கிளர்ந்து காட்டும் திருமேனியை உடையவனும், நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியாயுள்ளவன் அடியான் ஒருவனுக்காக நரஸிம்ஹமாய்ச் சீறிக்காட்டின அழகு இதுவன்றோ என்றபடி. (எரிபொங்கிக் காட்டும்) சுடர்கள் எல்லாவற்றிலும் விஞ்சி விளங்கும் திருமேனியை உடையவன் என்றுமாம்.

"ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்நி:" [முண்ட 2-2-11]

[அப்பரமாத்மாவின் முன் சூரியனும் சந்திர நக்ஷத்திரங்களும் இந்த மின்னல்களும் ஒளிவிடுவதில்லை. இவ்வக்னியைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?] என்றதன்றோ சுடர்மிகு சுருதியும். (இமையோர் பெருமான்) நித்யஸூரிகளும் 'என்வருகிறதோ' என்று பரிந்து பல்லாண்டு பாடும்படி ஆனைத்தொழில் செய்தபடி. (எரிபொங்கிக் காட்டும் இமையோர்) ஆஹுதியினாலே அக்னியானது கிளர்ந்தெழுந்து அந்தந்த தேவதைகளிடம் கொடுக்கும் ஹவிஸ்ஸை ஏற்றுக்கொள்ளும் இந்திரன் முதலிய தேவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். (இமையோர் பெருமான்) தேவர்களுடைய ஸ்வாமியாகையாலே அவர்களுக்காக இக்காரியம் செய்தானென்றபடி. இச்செய

னுக்குத் தோற்று அவர்கள் தங்களை எழுதிக்கொடுத்தபடியைச் சொல்லுகிறதாகவுமாம். (அரிபொங்கிக் காட்டுமழகு) பரமபதநாதனாயிருந்த இருப்பிலும் நரஸிம்ஹமாய்ச் சீறின விடத்திலே அழகு விஞ்சியிருக்கிறபடி. ஆக, இப்பாசுரத்தால் அவிகாரமாயிருக்கும் வஸ்து அடியார்க்காக அடையும் விகாரங்களுக்கு ஓர் எல்லையில்லை என்று அருளிச் செய்தாராயிற்று.

22. அழகியான் தானே யரியுருவன் தானே
பழகியான் தாளே பணிமின்—குழவியாய்த்
தானே ழுலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே
மீனு யுயிரளிக்கும் வித்து.

பதவுரை:—வித்து தான்—ஜகத்காரணனான தானே, ஏழ் உலகுக்கும்—ஏழுலகங்களுக்கும், தன்மைக்கும்—(ரூபம் ரஸம் கந்தம் முதலிய) குணங்களுக்கும், தன்மையன்—இருப்பிடமானவனாய், குழவி ஆய்—(பிரளயகாலத்தில்) சிறுகுழந்தையாய்க்கொண்டும், மீன் ஆய்—(பின்பொருகால்) மத்ஸ்யரூபியாய்க் கொண்டும், உயிர் அளிக்கும்—ஆத்மாக்களை ரக்ஷிக்கின்றவனான, தானே—எம்பெருமான் தானே, அரி உருவன்—நரசிங்கவுருக்கொண்டவன்; தானே அழகியான்—அழகுக்கு எல்லை நிலமாயிருப்பவனும் அவன்றானே; பழகியான்—புராணபுருஷனாகிய அப்பெருமானுடைய, தாளே—திருவடிகளையே, பணிமின்—ஆச்ரயியுங்கோள்.

பெரி—வ்யா:—இருபத்திரண்டாம் பாட்டு—(அழகியானித்யாதி) நரஸிம்ஹவ்ருத்தம் ப்ரஸ்துதமானது பின்னாட்டுகிறது. (அழகியான்) ஆபத்ஸகனானவனே அழகியான். (பழகியான் தாளே பணிமின்) த்யஜிக்கிற சரீரத்திலும் வர்த்திக்கிற சரீரத்திலும் புதியகோளாயிருந்துள்ள நீங்கள், உங்கள் கையில் உங்களைக் காட்டிக்கொடாதே காலத்ரயத்திலும் சரீரங்களில் ப்ரவேசிக்கைக்கு நிதானத்தையும் அதுக்குப் பரிஹாரத்தையும் அறியுமவனை ஆச்ரயிக்கப்பாருங்கோள். ப்ரக்ருதி வாசியறிந்து பழையனாய்ப் பரிஹரிக்கும் வைத்யனை வ்யாதிக்ரஸ்தர் பற்றுமாப்போலே. (குழவியித்யாதி) கார்யாகாரமான ஜகத்துக்கும் தன் மாத்ரையான ஜகத்துக்கும். (தானேழுலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே) எல்லாச் சேதநாசேதநங்களுக்கும்

இவற்றின் குணத்துக்கும் குணி. (தன் வைக்கும்) தன் பக்கலிலே வைக்கும். "सदेव" (ஸதேவ) என்று சொல்லப்படுகிறவனே தன்னை அழியமாறிச் சேதநரை ரக்ஷிக்கும் த்ரிவிதகாரணமும்.

திவ்ய-அவ:—எம்பெருமானுடைய அரிபொங்கிக் காட்டுமழகை அநுபவித்த ஆநந்தத்தாலே 'இத்தைச் சிலர் இழப்பதே' என்று நினைத்து, 'இந்த ஸௌந்தர்யமூர்த்தியை அடிபணிந்து உய்யுங்கள்' என்று பிறரை நோக்கி உபதேசிக்கிறார்.

வ்யா:—(*அழகியான் தானே....*) சென்ற பாட்டில் அநுபவிக்கப்பட்ட நரஸிம்ஹவ்ருத்தாந்தம் மேலும் தொடர்கிறது. (*அழகியான் தானே*) அழகையுடையவன் இவனொருவனே. 'பரமபதநாதனோ அழகியான்?' என்ன,—(*அரியுருவன் தானே*) நரசிங்கமூர்த்தியாய் அவதரித்தவனே அழகியவன். பரமபதத்திலழகு பகல்விளக்குப் போன்றது. இவ்வழகு இருட்டிலே விளக்கேற்றிவைத்தாப்போலே ஒளிவிடுவது. அருளே அங்கு காணலாவது. "சீற்றத்தோடருள் பெற்றவன்" என்று அருள்மட்டுமன்றிக்கே சீற்றத்தையும் காணலாவது இங்கு. தன்னையொத்த ஸர்வஜ்ஞர்க்குக் காட்டுமழகு அது. அஜ்ஞர்க்குக் காட்டுமழகு இது. அது கேட்டே கிடக்கும் அழகு. "இரணியனகம் பிளந்தரியாய் உதிரமளைந்த கையோடிருந்தானை உள்ளவா கண்டாருளர்" [பெரியாழ்-திரு 4-1-1] என்று இவ்வழகை நேரே கண்டவர்கள் உண்டு. (*அழகியான் தானே அரியுருவன் தானே*) '*அழகிய சிங்கர்*' என்று உலகம் புகழ நிற்பவனன்றோ இவன். (*அழகியான் தானே அரியுருவன் தானே*) "நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந்" என்று ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலேயுள்ள திருநாமங்களுக்கு மொழிபெயர்ப்பாய் அமைந்துள்ளது. (*அழகியான் தானே....பணிமின்*) இவன் அழகைப் பார்த்தால் இவனடியிலேயே பணியவேண்டாவோ? 'வெறும் அழகேயோ? ஆண்மையில்லையோ?' என்ன,—(*அரியுருவன் தானே....பணிமின்*) ஆண்மைக்கு எல்லைநிலமாயிருப்பவனாகிய இவனையே பணியவேண்டாவோ? ஆபத்ஸகனாகவுள்ளவனே அழகியவனாகவும் ஆனபின்பு விடலாமோ? 'அழகியானாகவும், ஆபத்ஸகனாகவும் இருந்தாலும் எங்களுடைய வியாதியையும், எங்களுக்கு அபேக்ஷிதமானதையும் அறியுமவனா

யிருக்கவேணுமே' என்ன,—(பழகியான் தாளே பணிமின்) உங்களுக்கு நீக்கவேண்டிய நோயாகிய இந்த சரீரத்தையும், பெறப்போகிற அப்ராக்ருத சரீரத்தையும் அறியாத உங்களைப்போலன்றிக்கே இவற்றிலே நெடுநாளாகப் பழகிப்போரும் புராணபுருஷனைப் பற்றுங்கள். (பழகியான் தாளே பணிமின்) அவனுடைய திருவடிகளையே உபாயமாகவும், உபேயமாகவும் நினைத்துப் பணிந்தீர்களானால், முக்காலத்திலும் நீங்கள் இச்சரீரத்தில் பிரவேசிப்பதற்குக் காரணமான கருமகதியையும், அதுக்குப் பரிஹாரம் தன் கேவலக்ருபையே என்பதையும் அறிந்தவனான அவன் உங்களை ரக்ஷித்தருள்வான். (பழகியான் தாளே பணிமின்) தேஹத்தினுடையவும், மருந்தினுடையவும் ஸ்வபாவங்களை அறிந்த பழையனான வைத்யனை நோயாளிகள் பற்றுவதுபோல், "மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா" என்றும், "வைத்யோ நாராயணோ ஹரி:" என்றும் சொல்லப்படும் இவனைப் பற்றுங்கள். (பழகியான் தாளே பணிமின்) "எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனும் மற்றும் ஒருத்தருமிப் பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா!" [பெரியாழ்-திரு 5-3-6] என்று சொல்லப்பட்ட அவைத்யர்களான ப்ரஹ்மருத்ராதிகளைப் பற்றாமல் வைத்யனான விஷ்ணுவைப் பற்றுங்கள். "அவைத்ய: ப்ராக்ருத: ப்ரோக்தோ வைத்யோ வைஷ்ணவ உச்யதே" [ஸம்ஸாரிகள் அவைத்யர்களென்றும், வைஷ்ணவன் வைத்யன் என்றும் சொல்லப்படுகின்றனர்.] என்று இவனுடன் ஸம்பந்தம் பெற்றவர்களையே வைத்யராகச் சொல்லும்போது இவன் வைத்யச்ரேஷ்டன் என்பதைச் சொல்லவும்வேண்டுமோ?

'நாம் விடப்போகும் சரீரத்தையும், புகப்போகும் சரீரத்தையும் நன்கறிந்தவன் இவன் என்பது எப்படி ஒட்டும்' என்ன,—(தானே மூலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே) ஸகலஜகத்துக்கும் சரீரியாயிற்றே இவன். இவனையல்லது வேறு எவரால் நோயையும், நோயாளியையும், மருந்தையும் அறிய முடியும்? (தானேமூலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே) ப்ரக்ருதிசரீரவிசிஷ்டனான தன்னிடமிருந்து உண்டான மஹான், அஹங்காரம், பஞ்சபூதங்கள் ஆகிய ஏழுவிதமான காரியப்பொருள்களுக்கும், இப்பஞ்சபூதங்களுக்குக் காரணமான சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்த தன்மாத்ரைகள் ஐந்துக்கும் இருப்பிடமானவன் இவனே. தன்மையாவது தன்மாத்ரை; அதாவது பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றுக்கும்

பூர்வாவஸ்தையாய், அந்தந்த பூதங்களின் அஸாதாரணகுணம் வெளிப்படாமல் உள்ளடங்கிநிற்கும் நிலே. உதாரணமாக, ஆகாஶத்திற்கு ஶப்தகுணம் அஸாதாரணம். ஆகாஶத்தின் பூர்வாவஸ்தையான ஶப்ததந்மாத்ரையில் இந்த ஶப்தகுணம் உள்ளடங்கிநிற்கும். இப்படியே வாயு, அக்நி, ஜலம், பூமி எனனும் பூதங்களுக்கும் முறையேகாரணமான ஸ்பர்ஶ ரூப ரஸ கந்த தந்மாத்ரைகளில் ஸ்பர்ச ரூப ரஸ கந்தகுணங்கள் உள்ளடங்கிநிற்கும். அந்தந்த பூதங்களில் இவை வெளிப்படும். தன்மாத்ரைக்கும் குணங்களுக்கும் மிகுந்த பேதமுண்டு. தன்மாத்ரைகள் த்ரவ்யங்களாகவும் அந்தந்த பூதங்களுக்குக் காரணமாகவும் இருப்பவை. குணங்கள் அப்படியன்று. ஆக, "தானேழுலகுக்கும்....தன்மையனே" என்றதால் பரஸ்பரம் கார்யமாகவும் காரணமாகவுமிருக்கும் வஸ்துக்களுக்கெல்லாம் காரணமாயிருப்பவன் தானே என்றாராயிற்று. 'ஏழுலகு' என்னும் ஶப்தம் காரியப்பொருள்களான மஹதஹங்கார பூதங்களைக் குறிக்கிறது.

அன்றிக்கே, (தானேழுலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே) 'ஏழுலகு' என்று பூலோகம் புவர்லோகம், ஸுவர்லோகம் முதலான மேலேழு லோகங்களையும், அதலவிதலாதிகளான கீழேழு லோகங்களையும் உரைப்பதன்மூலம் அவற்றிலுள்ள ஸகல சேதநா சேதநங்களையும் சொல்லுகிறது. 'தன்மைக்கும்' என்று அசேதனப் பொருள்களின் குணங்களாகிற சப்தஸ்பர்ஶாதிகளையும், சேதன குணங்களையும் சொல்லுகிறது. ஆக, ஸர்வசேதநாசேதனங்களுக்கும், அவற்றின் குணங்களுக்கும் இவனே குணியாய்-ப்ரகாரியாய்-இருப்பிடமாய்-இருப்பவன் என்றாராகிறது. இவனுக்கு ப்ரகாரமாம்போது குணியோடு குணங்களோடு வாசியில்லை என்றதாயிற்று. "தன்வைக்கும் தன்மையனே" என்று பாடமானபோது "ஏழுலகங்களையும் இயற்கையாகவே தன்னிடத்தில் கொண்டிருப்பவன்" என்று பொருள். 'இவன் நம்மை ரக்ஷித்ததுண்டோ?' என்னில்,—(குழவியாய் மீனாய் உயிரளிக்கும் வித்து) இவன் நமக்குச் செய்யாத ரக்ஷணமும் உண்டோ? ப்ரளயாபத்திலே சிறு குழந்தையாகி நம்மை வயிற்றிலே வைத்து ரக்ஷித்தான். நமக்குக் கண்ணாகிய வேதங்கள் பறிபோன போது தன்னை ஒரு ஜல(ட)ஜந்துவாக்கிக்கொண்டு அவற்றை மீட்டுத் தந்தான். (வித்து) இவ்வளவேயன்றிக்கே நமக்கு நிமித்த உபாதான ஸஹகாரிகாரணங்கள் மூன்றுமாயிருப்பவன் இவனே என்கிறார்.

23. வித்துமிட வேண்டுங் கொலோ விடையடர்த்த
பத்தி யுழவன் பழம்புனத்து—மொய்த்தெழுந்த
கார்மேக மன்ன கருமால் திருமேனி
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து.

பதவுரை:—விடை அடர்த்த—(நப்பின்னைப் பிராட்டிக்காக) ரிஷபங்களை அடக்கினவனும், பத்தி உழவன்—(தன் விஷயத்தில் சேதநர்கட்கு) பக்தியுண்டாவதற்குத் தானே முயற்சி செய்பவனுமான எம்பெருமானுடைய, பழம் புனத்து—(ஸம்ஸாரமென்கிற) அநாதியான க்ஷேத்ரத்திலே, வித்தும் இட வேண்டும் கொலோ—(ஸ்வப்ரயத்நமாகிற) விதையை நாம் விதைக்க வேண்டுமோ? [வேண்டா;] (போதுபோக்க வழியென்னென்னில்:) மொய்த்து எழுந்த—திரண்டு கிளர்ந்த, கார் மேகம் அன்ன—காளமேகம்போன்ற, கரு மால்—கரிய திருமாலினது, திரு மேனி—திருமேனியை, நீர் வானம்—நீர்கொண்டெழுந்த மேகமானது, நிகழ்ந்து—எதிரே நின்று, காட்டும்—காண்பிக்கும். (போலிகண்டு நாம் தரித்திருக்கலாமென்றபடி.)

பெரி—அவ—இருபத்துமூன்றாம்பாட்டு—(வித்தும்) அறிந்த தசையிலும், அறியாத தசையிலும் ஸர்வேச்வரனே ரக்ஷகனாக அறுதியிட்ட பின்பு தன் அபிமதஸித்திக்கு இவன் செய்யவேண்டும் ஸுக்ருதமுண்டோ? ஸத்தா ப்ரயுக்தமான இச்சை இவனுக்குண்டாகில் மேலுள்ளதுக்கு அவன் கடவனாகில் இவன் செய்யும் அம்சம் என்னேன்கிறார்.

வ்யா:—(வித்துமிடவேண்டுங்கொலோ) வித்தென்று சொல்லுகிறது ஸுக்ருதத்தை. (விடையடர்த்த பத்தியுழவன்) நப்பின்னைப்பிராட்டிக்கு உதவிற்றென்று வ்யாஜமாய் ஆஶ்ரிதருடைய பக்திக்குக் கர்ஷகனானவனுடைய. (பழம் புனத்து) பழம்புனங்களிலே விதைக்க வேண்டாதே உதிரி முளைக்குமாப்போலே யாத்ருச்சிகஸுக்ருதங்கள் தன்னடையே பிறக்கும்படியாகவிறே ஈச்வரன் ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணுவது. (மொய்த்தெழுந்தவித்யாதி) ருசி பிறந்தபின்பு ப்ராப்தியளவும் நாம் தரிக்கைக்கு அவன் திருமேனிக்குப் போலியுண்டென்கை. செறிந்தெழுந்த கார்காலத்தில் மேகம்போலே ஶ்யாமமான திருமேனியையுடைய ஸர்வேச்வரனுடைய நிறத்தை நீர் கொண்டெழுந்த காளமேகம் காட்டும்.

திவ்ய-அவ:—"பழகியான் தாளே பணிமின்" என்று மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணனைப் பணிவதே ஸம்ஸாரமாகிற வியாதி நீங்குவதற்கு வழியாகும் என்று அருளிச்செய்தவுடன் "சிறிய பலன்களைப் பெறுவதற்கே அரும்பாடுபடவேண்டியிருக்கிறது. அப்படியிருக்க, மோக்ஷமாகிற பெரும் பலனைப் பெற ஸர்வேச்வரன் அடிகளிலே பணிந்தால்மட்டும் போதுமா" என்று சிலர் கேட்க, "சென்ற பாசுரத்திற் சொன்னபடியே, இச்சேதனன் தன்னை அறிந்த தசையிலே அரியுருவனாகவும் மீனாகவும் பிறந்து உயிரளித்தும், அறியாத (ப்ரளய) தசையிலும் தானே மூலகுக்கும் தன்மைக்கும் தன்மையனாய்நின்று நோக்கியும் அவனே ரக்ஷித்தருளும்போது இவனிடத்தில் ஒரு கைம்முதலும் வேண்டுமோ? இவனுக்கு இயற்கையாகவேயுள்ள அறிவினாலேற்படும் இச்சையிருந்ததாகில், மேல் செய்யவேண்டியவற்றை ப்ரப்தாவும், ப்ராபகனும், ப்ராப்திக்கு க்ருஷிசெய்வானுமான அப்பத்தியுழவன் பார்த்துக்கொள்வான். இச்சைக்கு மேற்பட இவன் செய்யவேண்டிய அம்சம் என்னவிருக்கிறது?" என்கிறார்.

வயா:— (பத்தியுழவன் பழம்புனத்து வித்துமிடவேண்டுங்கொலோ) பக்தியாகிற பயிருக்காகப் பாடுபடும் பரமபுருஷனுடைய பழையதான உலகமாகிற இவ்வயலில் நாம் புண்ணியங்களாகிற விதையை விதைக்கவும் வேண்டுமோ? (பத்தியுழவன்) ஒரு சேதனனிடத்திலே பக்தியாகிற பயிரொன்று முளைப்பதற்காக இவ்வுழவன் பட்டிருக்கும் பாடுகள் கொஞ்சமோ? உழுவது, நீர்பாய்ச்சுவது, களை பிடுங்குவது, எருவிடுவது, விதைப்பது, நாற்றுநடுவது முதலிய பல காரியங்களை உழவன் பயிருக்காகச் செய்வதுபோல் இவன் பக்திப் பெரும்பயிருக்காகப் பட்ட பாடுகள் ஒரு கணக்கில் அடங்கா என்றபடி. த்ரிபாத் விபூதியாகிற பெருநிலம் செழிப்பாக விளைந்துகிடக்கச் செய்தேயும், லீலாவிபூதியாகிற இந்நிலம் தரிசாகக்கிடப்பதைக் கண்டு தாளாமல் ஜகத் ஸ்ருஷ்டியைப் பண்ணி, ஜீவர்களுக்கு தேஹேந்திரியாதிகளைக் கொடுத்து, அந்தர்யாமியாய் நின்று நோக்கியும் அவதாரங்களைச் செய்தும் ரக்ஷித்துப்போருவதையெல்லாம் நினைக்கிறது.

"ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்மடுத்து
ஈரநெல்வித்தி முளைத்த நெஞ்சப்பெருஞ்செய்யுள் [ஸ-ூ-74]

பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர் மேனி நம் கண்ணன்" என்று நம்மாழ்வாரும்

இவனைப் பத்தியுழவனாகவே பேசினாரன்றோ. (பழம் புனத்து) புதிதாகத்தரிசு திருத்தினதன்றிக்கே பழையதாக உழுவது நடுவது விளைவதாய்ச் செல்லும் நிலத்தில். பத்தியுழவன் நெடுங்காலமாக உழுதுவரும் இவ்வுலகமாகிற வயலில். (பழம் புனத்து வித்துமிட வேண்டுங்கொலோ) பழையதான நன்செய் நிலங்களிலே நிலத்தின் வளத்தாலே, விதைகளை முறைப்படி முயற்சிசெய்து விதைக்கவும் வேண்டாதே உதறிவிட்டாலும் நன்கு விளைவதுபோலே, இப்பத்தியுழவனுடைய பழம்புனமாகிய பூமியிலுள்ளார்க்கு, இச்சைக்கு மேற்பட ஸ்வப்ரயத்நரூபமான வேறொரு முயற்சியும் வேண்டாவென்றபடி. பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் "பழம்புனங்களிலே விதைக்கவேண்டாதே உதறி முளைக்குமாப்போலே...." என்று காணும் பாடத்தின்படி மேற்கண்டவாறு பொருள்படுகிறது.

ஆயினும், "பழம்புனங்களிலே விதைக்கவேண்டாதே, உதிரி முளைக்குமாப்போலே யாத்ருச்சிகஸுக்ருதங்கள் தன்னடையே பிறக்கும்படியாகவிறே ஈச்வரன் ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணுவது" என்று பாடமிருந்திருக்கக்கூடுமென்று பின்வரும் நிரூபணங்களால் விளங்கும். இப்பாசுரத்தின் பொருளை ஒரு ஸூத்ரமாக ஸ்ரீவசநபூஷணத்திலே (ஸூ 389) அருளிச்செய்யாநின்ற பிள்ளைலோகாசார்யர் "பழையதாக உழுவது நடுவது விளைவதாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே உதிரி முளைத்துப் பலபர்யந்தமாமாப்போலே, இவைதான் தன்னடையே விளையும்படியாய்த்து பத்தியுழவன் பழம்புனத்தை ஸ்ருஷ்டித்த கட்டளை" என்று அருளியிருப்பதிலிருந்தும், "புதிசாகத் தரிசு திருத்தினதன்றிக்கே பழையதாக உழுவது நடுவது விளைவதாய்க்கொண்டு செய்காலாய்ப் போரும் க்ஷேத்ரத்திலே கர்ஷகன் அதுக்கென்ன க்ருஷியும் பண்ணாதிருக்க உதிரியானது முளைத்து விளைந்து தலைக்கட்டுமாப்போலே" என்று மாமுனிகள் வியாக்கியானம் செய்திருப்பதிலிருந்தும் ஆச்சான்பிள்ளையும் "உதிரி முளைக்குமாப்போலே யாத்ருச்சிகஸுக்ருதங்கள் தன்னடையே பிறக்கும்படியாகவிறே...." என்றே அருளியிருப்பார் என்பது விளங்கும். "வித்துமிடவேண்டுங்கொலோ"

என்ற மூலமும், "யாத்ருச்சிக ஸுக்ருதங்கள் தன்னடையே பிறக்கும்படியாக" என்னும் வ்யாக்யானஸூக்தியும் "உதிரி முளைக்குமாப் போலே" என்ற பாடத்திற்கு மிகப்பொருந்தியிருக்கும். உதிரி முளைப்பதாவது:—சென்றவருடப் பயிரிலே நிலத்தில் உதிர்ந்த நெற்கள் தாமாகவே முளைக்கையைச் சொன்னபடி. பழையதாய் ஸாரமான தான பூமியிலே விதை விதைக்காவிடினும் சென்ற பயிரிலே உதிர்ந்த நெற்கள் தாமாகவே முளைக்குமாப்போலே, இவ்வுலகிலும் யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகம் என்னும் புண்யங்கள் தானாகவே பிறக்கும்படியாகப் பத்தியுழவன் இப்பழம்புனத்தை ஸ்ருஷ்டித்து வைத்திருக்கிறானுகையாலே இச்சேதனன் தான் முயற்சி செய்து ஒரு புண்யமாகிற விதையை விதைக்கவேண்டிய அவசியமில்லை என்று பாவம். யாத்ருச்சிகம் முதலான ஸுக்ருதங்கள் (நற்காரியங்கள்) இச்சேதனனுக்குத் தானாகவே விளையுமோவென்றால்; அவற்றின் ஸ்வரூபத்தை ஆராய்ந்தால் தானாகவே விளையுமென்று அறியலாம். யாத்ருச்சிக ஸுக்ருதமாவது:—ஒருவன் கோடைகாலத்தில் தன் வயல்கள் காய்ந்துபோகாமலிருக்க, நெடுந்தூரத்திலுள்ள ஆற்றிலிருந்து ஏற்றமிட்டிறைத்து வாய்க்கால் வழியே வயலுக்குத் தண்ணீர்பாய்ச்சுமளவிலே, தண்ணீரில்லாமல் தவித்துக் கொண்டுவரும் பாகவதர் சிலர் அவனுமறியாமல் அத்தண்ணீரினாலே இளைப்பாறினால், அதை 'என்னடியார் விடாயைத் தீர்த்தானிவன்' என்று ஒரு புண்யமாகக் கணக்கிட்டுவைப்பன் ஈச்வரன்; ஒருவன் தனக்குச் சூதுசதுரங்கமாடுகைக்கும் காற்றுட வீற்றிருக்கைக்குமாக வாசல் திண்ணையைக் கட்டிவைத்திருக்க மழை வெயில்களால் துன்புறும் சில பாகவதர்கள் அவனுமறியாமல் அதிலே சிறிது தங்கிப்போனார்களாகில் 'என் அடியார்க்கு ஒதுங்க நிழல் கொடுத்தானிவன்' என்று ஒரு ஸுக்ருதமாக எழுதிக் கொள்ளும் ஈச்வரன். இதுபோல் யத்ருச்சையால் ஏற்படும் ஸுக்ருதங்கள் யாத்ருச்சிக ஸுக்ருதங்களாகும். ப்ராஸங்கிக ஸுக்ருதமாவது:— புத்தூர், தென்னூர் என்றாற்போலே பல ஊர்ப்பெயர்களைச் சொல்லி வரும்போது ப்ரஸங்காத் திருவரங்கம் என்று பகவத்ஸம்பந்தமுள்ள பெயரைச் சொன்னால் 'என்னூரைச் சொன்னான்' என்று ஸுக்ருதமாகக் கணக்கிடுவன் ஈச்வரன். அப்படியே நம்பி, பிம்பியென்று நாட்டுமானிடப்பேரைச் சொல்லிவரும்போது 'நாராயணன்' என்று

பகவந்நாமத்தையும் சொல்லிவைத்தால், இதுவேகொண்டு 'என் பேரைச்சொன்னுன்' என்று புண்யமாகக்கணக்கிடுவன். இது போன்றவை ப்ராஸங்கிகஸுக்ருதமாகும். ஆநுஷங்கிக ஸுக்ருதமாவது:- ஒரு காட்டிலே சில பாகவதர்கள் வழிநடக்கும் போது சில திருடர்கள் அவர்களை வழிபறிக்கத் தொடங்க, தன் கார்யமாகச் செல்லும் சேவக னொருவன் பின் வருவதைக் கண்டு இவர்களை ரக்ஷிக்கவே வருகிறுன் என்றெண்ணி திருடர்கள் பயந்தோடினுல், 'என்னடியாரை நோக்கினு னிவன்' என்று இதை அந்த ஸேவகனுடைய ஸுக்ருதமாக எழுதி வைப்பன். இதுபோல் ஒரு காரியத்தைச் செய்யும்போது ஆநுஷங் கிகமாக வருமவை ஆநுஷங்கிகஸுக்ருதமாகும். இப்படிப்பட்ட இந்த யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்கள் தானுகவே பிறக்குமென்பது தெளி வன்றே. (பத்தியுழவன் பழம்புனத்து வித்துமிடவேண்டுங்கொலோ) உழவன் விதைத்த நிலத்திலே வேறொருவர் விதைக்கவேண்டுமோ?

"தேந சேதவிவாதஸ்தே மா கங்காம் மா குரூந் கம:"

[பரமாத்மாவுடன் விவாதமில்லையாகில் கங்காதி புண்யதீர்த்தங்க ளுக்கும், குருக்ஷேத்ராதி புண்யக்ஷேத்ரத்திற்கும் செல்லவேண்டா] என்ற மனுவைப்போலே ஸாதநபுத்தியுடன் ஸுக்ருதம் செய்ய வேண்டா என்று நிஷேதிக்கிறுர். இப்பத்தியுழவன் செய்யும் உழுவது முதலான காரியங்கள் யாவை? என்னும் அபேக்ஷையிலே அருளிச் செய்கிறுர்,— (விடையடர்த்த பத்தியுழன்) இவனுடைய அவதார சேஷ்டிதங்களே பக்திப்பெரும்பயிருக்கு இவன்செய்யும் க்ருஷியென்ற படி. இவன் ஏழு எருதுகளையும் வென்றது நப்பின்னைப்பிராட்டிக் காக என்பது வ்யாஜமாத்ரமேயாகும். இச்செயலாலே அடியார் களைத் தோற்பித்து அவர்களிடத்திலே பக்தியை விளைப்பிக்கவேண் டும் என்பதே உண்மையான கருத்து. (வித்துமிட.....புனத்து) அவதா ராதிகளாலே அவன் இதற்கு க்ருஷிபண்ணியிருக்கும்போது இவன் செய்யவேண்டியதென்?

"ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்"

[இவ்வுலகில் ஒருக்ஷணப்பொழுதும் ஒரு காரியமும் செய்யாமல் ஒருவ னும் நிற்பதில்லை] என்று கீதையில் கண்ணன் அருளியபடியே இவனுல் ஒருகணமும் சும்மாயிருக்க முடியாதே. இவன் ஒருஸுக்ருதமும் செய்யா மலிருந்தால் பொழுது போவது எப்படி? என்ன, அருளிச்செய்கிறுர்,-

(மொய்த்தெழுந்தகார்மேகமன்ன கருமால் திருமேனி நீர்வானம் காட்டும் நிகழ்ந்து) "நெருங்கியெழுந்த மழைகால மேகம்போன்ற கண்ணனின் கறுத்த திருமேனியை நீர் கொண்டெழுந்த மேகமானது காட்டும். ருசி பிறந்த பின்பு, அவனை அடையும் வரையில் அத்தைக் கண்டு தரித்திருந்து பொழுதைப் போக்கலாம்" என்கிறார். இங்கு நீர்வானம் என்றது பகவானுடைய திருமேனிக்குப் போலியான—ஒப்பான—பொருள்களுக்கெல்லாம் உபலக்ஷணம்.

"கோண்டல்தான் மால்வரைதான் மாகடல்தான் கூரிருள்தான்
வண்டறுப்பூவைதான் மற்றுத்தான்—கண்டநாள்
காருருவம் காண்தோறும் நெஞ்சோடும் கண்ணனார்
பேருருவேன்றெம்மைப் பிரிந்து"

"பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலரென்றும் காண்தோறும்—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
யெல்லாம் பிரானுருவே யென்று" என்று

நம்மாழ்வாரும் பொழுதுபோகைக்கு இவனுக்குப் போலியான பொருள்களைப் பார்த்து தரித்துநின்றபடியை அருளிச்செய்தாரன்றோ. (நிகழ்ந்து காட்டும்) ப்ரஹ்மாதிகளும் காணமாட்டாத திருமேனியை நம் கண்ணெதிரே காட்டும்.

24. நிகழ்ந்தாய் பால்பொன் பசுப்புக் கார்வண்ணம் நான்கும்
இகழ்ந்தா யிருவரையும் வீய—புகழ்ந்தாய்
சினப்போர்ச் சுவேதனைச் சேனாபதியாய்
மனப்போர் முடிக்கும் வகை.

பதவுரை:—பால் பொன் பசுப்பு கார் நான்கு வண்ணமும்—வெண்மை, சிவப்பு, பசுமை, கறுப்பு ஆகிற நான்கு வர்ணங்களையுமுடையனாய்க்கொண்டு, நிகழ்ந்தாய்—(நான்கு யுகங்களிலும்) பிரகாசித்தாய்; இருவரையும்—மதுகைடபர்களாகிற இரண்டு அசுரர்கள், வீய—தொலையும்படி, இகழ்ந்தாய்—விலக்கினாய், சேனாபதி ஆய்—அர்ஜுனனுடைய ஸேனைக்கு ரக்ஷகனாய்க்கொண்டு, மனம்—(த்ரௌபதியின் கூந்தலை முடிப்பிக்கவேணுமென்று) மனோரதங்கொண்டிருந்த

படியே, போர்—பாரத யுத்தம், முடிக்கும் வகை—முடியும்படி, சினம் போர் சுவேதனை—சீறிக்கொண்டு யுத்தத்தில் இழியும் சுவேதவாஹனனான அர்ஜுனனை, புகழ்ந்தாய்—கொண்டாடினாய்.

பெரி–வ்யா:—இருபத்து நாலாம் பாட்டு—(நிகழ்ந்தாயித்யாதி) அவ்வோ யுகங்களில் சேதநர்க்கு ப்ரியமான வெண்மை தொடக்கமான நிறங்களை உகந்தாய். (இகழ்ந்தாய் இருவரையும் வீய) மது கைடபர்கள் முடிய. அன்றிக்கே, “எல்லாச்சேனையும் இருநிலத்தவித்த” என்னுமாப்போலே பக்ஷத்வயத்தையும் முடித்த என்றுமாம். (புகழ்ந்தாயித்யாதி) சினத்த போரையுடைய ச்வேதவாஹனனான அர்ஜுனன் ஸேனைக்கு நிர்வாஹகனாய், தர்மபுத்ரன் முடிசூடவும், த்ரௌபதி குழல் முடிக்கவும், துர்யோதநாதிகள் மடியும்படியும் நினைத்த போரை முடிக்க வல்லனாகப் புகழ்ந்தாய்.

திவ்ய–அவ:—பத்தியுழவன் படும் பாடுகளை இப்பாட்டிலும் அடுத்த பாட்டிலும் அருளிச்செய்கிறார். அதில் இப்பாட்டிலே அவன் அடியார்க்காகத் தன்னை அழியமாறியும் உதவுவதைக்கண்டு உருகுகிறார்.

வ்யா:—(நிகழ்ந்தாய் பால் பொன் பசுப்புக் கார் வண்ணம் நான்கும்) அந்தந்தக் கல்பங்களிலேயிருப்பவர்கள் தங்கள் குணத்திற்கேற்றவாறு ஒவ்வொரு நிறத்தை விரும்பியிருப்பார்கள். அவர்களுக்காகத் தன் இயற்கையான காளமேகத் திருவுருவையும் மாற்றியமைத்துக் கொண்டு காட்சியளிப்பான் ஸர்வேச்வரன் என்று சாஸ்திரங்கள் சொல்லுவதுண்டு. “காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி” என்கிறபடியே இவர்களுக்கு பக்தியை விளைவிப்பது திருமேனியே யாகையாலே அதன் இயற்கை நிறத்தையும் இவர்களுக்காக மாற்றியமைக்கும் இம்மஹாகுணத்திலே ஈடுபடுகிறார். (நிகழ்ந்தாய் பால் வண்ணம்) “க்ருதே ஶுக்லஶ்சதுர்பாஹு:” என்கிறபடியே ஸத்வ குணம் நிறைந்த க்ருதயுகத்திலிருப்பவர்கள் ஸத்வப்ரதானராய் வெள்ளை மனத்தையுடையராகையாலே தம் குணத்திற்கேற்ப தூயவெள்ளை நிறத்தை விரும்பியிருப்பர்கள்; அப்போது பகவான் வெளுத்த நிறமுள்ளவனாகக் காட்சியளிக்கிறான். வண்ணம்–வர்ணம்; நிறம். “வளையுருவாய்த் திகழ்ந்தான்” என்றும் “சங்கவண்ணமன்ன மேனி” என்றும் சங்கைப்போல் வெளுத்திருந்தான் என்று சொல்லாமல் ‘பால்போன்று வெளுத்திருந்தான்’ என்று சொல்லுவதிலிருந்து

நிறத்தில் வெளுத்ததோடல்லாமல் ரஸத்திலும் உயர்ந்திருப்பவன் என்று தோன்றுகிறது. "க்ருதமிவ பயஸி நிகூடம்" [பாலினுள் மறைந்திருக்கும் நெய்போன்றவன்] என்றும், "ஸர்வரஸ:" [எல்லா ரஸங்களையும் உடையவன்] என்றும், "ரஸோ வை ஸ:" [ரஸமென்பது அவனே] என்றும் வேதங்களாலும், "தேனே பாலே கன்னலே அமுதே" "கனியைக் கரும்பினின் சாற்றைக் கட்டியைத் தேனை அமுதை" "கறந்த பாலுள் நெய்யேபோல்" என்று ஆழ்வார்களாலும் புகழப்பட்டவனன்றோ இவன். வண்ணம் என்னும் பதம் ஸ்வபாவத்தையும் (தன்மையையும்) சொல்லும்.

(நிகழ்ந்தாய் பொன் வண்ணம்) "த்ரேதாயாம் ரக்தவர்ணோஸௌ" என்கிறபடியே த்ரேதாயுகத்தில் ரஜோகுணத்தோடு கலந்த ஸத்வ குணத்தையுடையவர்களாய் இருப்பர்களாகையாலே சிவப்பும் வெளுப்பும் கலந்ததான பொன்னிறத்தை விரும்பியிருப்பர்கள். அவர்களுக்காகப் பொன்னிறத்தையுடையவனாய்க் காட்சியளிக்கிறான் எம்பெருமான். "ரக்தவர்ண:" என்றும், "சேயன் என்றும் திரேதைக்கண்" என்றும் பொதுவாகச் சிவந்த நிறத்தையுடையவன் என்னாமல் "பொன்னிறம்" என்றதால் பொன்போலே விலையுயர்ந்தவனாயிருப்பவன் என்றும் உணர்த்தப்படுகிறது. "ஹிரண்மய: புருஷ:" [புருஷஸூக்தம்] என்று வேதங்களும் "ருக்மாபம்" [மநுஸ்ம்ருதி] என்றும், "ஹேமஸமாநவர்ணம்" [ராமாயணம்] என்றும் ரிஷிகளும், "சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனி" என்று ஆழ்வார்களும் இவனைப்பேசும்போது பொன்மேனியனென்றே பாசுரமிட்டார்களன்றோ.

(நிகழ்ந்தாய் பசுப்புவண்ணம்) "த்வாபரே பகவாந் ச்யாம:" என்கிறபடியே, த்வாபரயுகத்தில் மனிதர்கள் ரஜஸ்தமோ குணங்களுடன் கலந்த ஸத்வகுணத்தையுடையவர்களாயிருக்கையாலே சிவப்பும், கறுப்பும், வெளுப்பும் கலந்ததான பசுமை நிறத்தை விரும்பியிருப்பர்கள்; அவர்களுக்காக பசுநிறத்தையுடையவனாகக் காட்சியளிக்கிறான் எம்பிரான். இங்கு 'பசுப்பு' என்னும் பதம் பாசியின் பசுமை நிறத்தைக் குறிப்பதாகக் கொள்ளுவது சிறந்தது. "பாலினீர்மை செம்பொனீர்மை பாசியின் பசும்புறம் போலும் நீர்மை பொற்புடைத் தடத்து வண்டு விண்டுலா நீலநீர்மையென்றிவை நிறைந்த காலம் நான்குமாய்" என்று இவரே திருச்சந்தவிருத்தத்திலே அருளிச்செய்திருக்கிறாராகையாலும், பால், பொன், கார் என்று கீழும் மேலும் நிறத்தையுடைய

வஸ்துக்களையே சொல்லும் நியமம் காண்கையாலும் இங்கு 'பசுப்பு' என்றது பாசியின் பசும்புறத்தைக் குறிக்கிறது. இப்படி விசேஷித்ததிலிருந்து பாசியின் பசும்புறத்தைப்போலே கண்டார் கண்களைக் குளிரச்செய்வது இவன் திருமேனி என்று உணர்த்தப்படுகிறது. "புருஷம் க்ருஷ்ண பிங்களம்'' என்று வேதங்களும் "பச்சைமாமலை போல் மேனி" என்று ஆழ்வார்களும் புகழ்ந்தார்கள் இவ்வடிவை.

(நிகழ்ந்தாய் கார்வண்ணம்) ''கலௌ க்ருஷ்ணம் த்விஷா க்ருஷ்ணம்" என்கிறபடியே, கலியுகத்திலே எந்த நிறங்கொண்டாலும் ஆச்ரயிப்பாரில்லாமையாலே "முழுதும் நிலநின்ற பின்னைவண்ணம் கொண்டல்வண்ணம்" [பெரிய-திரு 4-9-8] என்கிறபடியே தனக்கு இயற்கையாயுள்ள நீலமேக ச்யாமளவர்ணத்தையே உடையவனாயிருக்கிறபடி. கலியுகத்திலே தம:ப்ரசுரராயிருப்பரென்றும், தமோநிஷ்டர்கள் கறுப்பு நிறத்தை விரும்பியிருப்பரென்றும் ப்ரஸித்தியிருக்கையால் கோல் விழுக்காட்டாலே இவ்வியற்கை நிறமே அவர்களையும் ஆகர்ஷிப்பதாயிருக்கிறது. 'கறுப்பு நிறம்' என்னாமல் 'கார்வண்ணம்' என்கையால் ப்ரயோஜந நிரபேக்ஷமாகவும், வரையாமலும், கொடுத்தோமென்னும் நினைவில்லாமலும் பிறர்க்கு அளிக்கை முதலான மேககுணங்களையும் உடையவனிவன் என்று உணர்த்தப்படுகிறது. "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா'' என்று வேதங்களும், "மேகச்யாமம்" என்று ரிஷிகளும், "கார்மேனி" என்று ஆழ்வார்களும் அருளிச்செய்தனரன்றோ.

இப்படி அவரவர்களுடைய குணாநுகுணமாகத் தன் திருமேனியை அமைத்துக்கொள்வதோடன்றியில், அவர்களுடைய விரோதிகளைப் போக்கிக்கொடுப்பதன்மூலமும் பத்தியான பாசனத்திற்குப் பெருமுயற்சி செய்கிறான் என்கிறார் அடுத்தபடியாக, —(இகழ்ந்தாய் இருவரையும் வீய) ஆச்ரிதனான ப்ரஹ்மாவின் வேதத்தை அபஹரித்த மது கைடபர்கள் என்னும் இரண்டு அசுரர்களும் அழியும்படியாக ஸங்கல்பித்தாய். அன்றிக்கே, பாண்டவர்கள் கௌரவர்கள் ஆகிய இருவர் பக்ஷத்திலும் துர்மானிகளான அரசர்கள் திரண்டிருந்தார்களாகையாலே அவ்விருபக்ஷத்திலுள்ளாரும் பெரும்பாலும் அழியும்படியாக உபேக்ஷித்திருந்தாய். "கொல்லாமாக்கோல் கொலைசெய்து பாரதப் போர் எல்லாச்சேனையும் இருநிலத்தவித்த எந்தாய்" என்று ஆழ்வார் அருளியபடியே பஞ்சபாண்டவர்கள், அச்வதாம க்ருபாசார்ய க்ருதவர்மாக்கள் தவிர்ந்த மற்ற எல்லாரையும் அழித்தானன்றோ இவன்.

தன்னடியார்கள் காரியத்தை முடிப்பதற்காகத் தன்னை அழிய மாறியும் கார்யம் செய்வான் என்பதை மேலும் ஒரு உதாஹரணத்தாலே காட்டுகிறார் மேலே. (புகழ்ந்தாய் சினப்போர்ச் சுவேதனை) கடுங்கோபத்துடன் போர்புரியவல்ல ச்வேதவாஹனனான அர்ஜுனனைப் புகழ்ந்தாய்! (புகழ்ந்தாய்) அவன் "ஹே க்ருஷ்ண ஹே யாதவ" என்று கூப்பிடுவதையும் பொருட்படுத்தாமல் "பரந்தப" [எதிரிகளைத் தபிப்பவனே] "அநக" [பாபமற்றவனே!] என்றும் மற்றும் பலவிதமாகவும் அவனைப் பதினெட்டு ஓத்தாலும் புகழ்ந்தாய். (புகழ்ந்தாய்) "ஸ்தவ்ய:" [புகழத்தக்கவன்] என்றும், "ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத்தெவ்வெவையும் சாதுவாய் நின்புகழின் தகையல்லால் பிறிதில்லை" என்றும் புகழப்படுபவன் ஒருவனைப் புகழ்வதே! (சினப்போர்ச் சுவேதனை) கடுங்கோபத்துடன் சண்டைசெய்யும் சுவேதவாஹனனான அர்ஜுனனை. (சுவேதனை) "அர்ஜுந: பல்குந: பார்த்த: கிரீடீ ச்வேதவாஹந:। பீபத்ஸுர் விஜய: க்ருஷ்ணஸ் ஸவ்ய ஸாசீ தநஞ்ஜய:" என்று அர்ஜுனனுக்குள்ள பல பெயர்களில் சுவேதவாஹனன் என்பதும் ஒன்றாகும். வெள்ளைக்குதிரை பூட்டப்பெற்ற தேரை வாஹனமாக உடையவன் என்று இப்பெயருக்குப் பொருள். "வெள்ளைப் புரவிக் குரக்கு வெல்கொடித் தேர்மிசை முன்பு நின்று" என்று பெரியாழ்வாரும் அருளிச்செய்தார். "நாமைகதேசக்ரஹணே நாமக்ரஹணம்" [பெயரின் ஒரு பகுதியைமட்டும் எடுத்தாலும் பெயர் முழுவதையும் எடுத்ததாகும்] என்னும் நியாயத்தின்படி 'ச்வேதவாஹனன்' என்ன வேண்டிய இடத்தில் 'சுவேதன்' என்கிறார் ஆழ்வார். (சேநாபதியாய்) அந்த அர்ஜுனனுடைய சேனைக்குத்தானே தலைவனாய். தேர்ப்பாகன் என்னும் வியாஜத்தில் சேனைத்தலைவனாகவேயிருந்து பல அருங்காரியங்களையும் முடித்துப் போரை நடத்தினவன் எம்பெருமானே என்று பாவம். "யத்ர யோகேச்வர: க்ருஷ்ண: யத்ர பார்த்தோ தநுர்தர:। தத்ர ஸ்ரீர் விஜயோ பூதிர்" [கீதை-18] [எங்கு யோகேச்வரனான க்ருஷ்ணன் எழுந்தருளியிருக்கிறானோ, வில்லேந்திய அர்ஜுனன் எங்குள்ளானோ அங்கேயே செல்வமும் ஜயமும் சிறப்பும் உண்டாகும்] என்று ஸஞ்ஜயனும் க்ருஷ்ணனை முதலில் வைத்துப் பின்பன்றோ அர்ஜுனனை வைத்துப் பேசினான். "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" [க்ருஷ்ணனை ஆச்ரயமாகவும், பல

மாகவும், தலைவனாகவும் கொண்டவர்கள் பாண்டவர்கள்] என்றிருக்கும்போது, பாண்டவஸேனைக்குப் பதி க்ருஷ்ணனே என்று சொல்லவும் வேண்டுமோ?

இப்படி அர்ஜுனனைப் புகழ்ந்து யுத்தத்திலே ஈடுபடுத்தியது எதற்காகவெனில்: (மனப்போர் முடிக்கும் வகை) தான் மனத்தில் ஸங்கல்பித்தபடியே போரை முடிப்பதற்காகவே. அதாவது,

"கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் ।
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி ॥"

[தூரதேசத்திலிருந்த என்னை துரௌபதியானவள் 'கோவிந்தா' என்று கூப்பிட்டது, விருத்தியடைந்த கடன்போலே என் நெஞ்சை விட்டு அகலுகிறதில்லை.] என்று புண்பட்ட தன் நெஞ்சு ஆறுதலடையும்படி துரௌபதியானவள் குழல் முடிக்கும்படியாகவும், அவளுடைய கணவனான தர்மபுத்ரன் முடிசூடும்படியாகவும், அவளை அவமதித்த துர்யோதனாதிகள் முடியும்படியாகவும் தான் ஏற்கனவே தன் மனத்திலே நினைத்துவைத்தபடி போரை முடிப்பதற்காகவே அர்ஜுனனைப் புகழ்ந்தான் என்கை. (மனப்போர் முடிக்கும்வகை சுவேதனைப் புகழ்ந்தாய்) "மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந்" [இடதுகையாலும் அம்புவிடக்கூடிய அர்ஜுனா! என்னால் இந்த துரியோதனாதியர் முன்னமே (ஸங்கல்பத்தால்) கொல்லப்பட்டுவிட்டனர். நீ ஒரு வியாஜமாத்ரமாக ஆவாயாக.] என்று தானே அருளிச்செய்தானன்றோ. ஆக, தன்னை சரணமடைந்தவளான துரௌபதிக்காகவே அர்ஜுனனைத் தானே புகழ்ந்து யுத்தத்திலே மூட்டினான் என்று சொல்லப்பட்டதாயிற்று—இவனுடைய செயல்களெல்லாம் அடியார்க்காகவே இருக்குமென்றபடி.

"புகழ்ந்தாய் சினப்போர்ச் சுவேதனைச் சேனாபதியாய் மனப்போர் முடிக்கும்வகை" என்னும் இரண்டு அடிகளுக்கும் வேறொரு வகையாகப் பொருள்கொள்வதற்கும் பாரதத்தில் பீஷ்மபர்வத்திலே ஒரு இதிஹாஸமுண்டு. விராடராஜனின் புத்திரனான 'சுவேதன்' என்பவன் மஹாபலிஷ்டனாயிருந்தானாகையால், முதலில் அவனை ஸேநாபதியாக்க, சினப்போர்ச் சுவேதனான அவன் கடும்போர் புரிந்து எண்ணிக்கையில் பாண்டவ சேனையைக்காட்டிலும் அதிகமாயிருந்த

கௌரவஸைந்யத்தின் பெரும்பகுதியை அழித்து, இரண்டு சேனைகளையும் ஸமமாக்கிவிட்டுத் தானும் மாண்டான் என்பது அவ்விருத்தாந்தம். இதை ஆழ்வார் நினைப்பதாகவும் கொள்ளலாம். அப்போது "இகழ்ந்தாய் இருவரையும் வீய" என்று முந்தின அடியில் இரண்டு சேனைகளும் அழிந்துபோகும்படி உபேக்ஷித்தாய் என்று அருளிச்செய்ததுக்கு விவரணமாயிருக்கும் பின் இரண்டு அடிகளும். (சினப்போர்ச் சுவேதனைச் சேனாபதியாய்ப் புகழ்ந்தாய்) கடும்போர் புரியும் சுவேதனை ஸேநாபதியாகும்படி புகழ்ந்தாய். க்ருஷ்ணன் தானே புகழ்ந்து சுவேதனை சேநாபதியாக்கினதாக ஸ்ரீபாரதத்திலில்லாவிடினும், பாண்டவர்களுக்கு எல்லாக் காரியங்களையும் தானே முன்னின்று செய்யும் க்ருஷ்ணனே இதையும் செய்திருக்கவேண்டுமெனக் கொள்ளலாம். [இந்த அஸ்வாரஸ்யத்தை நினைத்தே பெரியவாச்சான்பிள்ளை இப்பொருளை அருளவில்லை.] இப்படி அவனை சேனாபதியாக்கினது எதற்காகவெனில்: (மனப்போர் முடிக்கும் வகை) "துரியோதனாதியருடைய ஸேனையில் திரண்டுகிடக்கும் துஷ்டர்களும் அழியவேண்டும்; சுவேதனைப்போலே பலிஷ்டர்களாகப் பாண்டவ ஸேனையிலிருக்கும் அஹங்காரிகளையும் அழியச்செய்யவேண்டும்" என்று கபடநாடகஸூத்ரதாரியான தான் தன் திருவுள்ளத்தில் ஸங்கல்பித்துவைத்தபடி போரை முடிப்பதற்காகவே ச்வேதனை சேநாபதியாக்கினான் என்றபடி.

25. வகையால் மதியாது மண்கொண்டாய் மற்றும்
வகையால் வருவதொன் றுண்டே—வகையால்
வயிரம் குழைத்துண்ணும் மாவலி தானென்னும்
வயிர வழக்கொழித்தாய் மற்று.

பதவுரை:—மதியாது—இதை ஒரு பெரிய காரியமாக நினையாமல், வகையால்—யாசிப்பதாகிற வழியாலே, மண் கொண்டாய்—மாவலியிடத்திலிருந்து பூமியை வசப்படுத்திக்கொண்டாய்; மற்றும்—அதற்கு மேலும், வயிரம்—வயிரமாகிற ரத்னத்தை, வகையால்—ஔஷதாதி உபாயங்களாலே, குழைத்து—இளகச்செய்து, உண்ணும்—உண்பவனும், (அதனால்) தான் என்னும்—தானே பலவான் என்று அஹங்காரங்கொண்டிருப்பவனுமான, மாவலி—மஹாபலியினுடைய, வயிரம்

வழக்கு—சத்ருத்வமுறைமை, ஒழித்தாய்—போக்கினாய்; வகையால்—இப்படிப்பட்ட உனது காரியங்களினால், வருவது ஒன்று உண்டே—உனக்கு வசித்திப்பதொருபலன் உண்டோ? (எல்லாம் அடியார்க்காகச் செய்கிறாயித்தனை.)

• அவதாரிகை—இருபத்தைந்தாம் பாட்டு—(வகையால்) ஆச்ரிதார்த்தமான செயலொழியத் தனக்கென்ன ஒரு செயல் இல்லையென்கிறார்.

வ்யா:—(வகையாலித்யாதி) மஹாபலி உகக்கும் ப்ரகாரத்தாலே பூமியை அநாயாஸேந கொண்டாய். (மற்றித்யாதி) ஓர் உபாயத்தாலே வைரத்தை புஜித்து அத்தாலே மிடுக்கனாக அபிமானித்திருக்கிற மஹாபலியுடைய சாத்ரவமுறைமையைத் தவிர்த்து, மஹாபலிபக்கல் நின்றும் ராஜ்யம் மீட்டுக்கொடுத்தாய். (மற்றும் வகையால் வருவதொன்றுண்டே) இவற்றால் உனக்கு ப்ரயோஜநமாவதொன்று உண்டோ?

திவ்ய-அவ:—இவனுடைய செயல்களெல்லாம் அடியார்க்காயிருக்குமேயொழியத் தனக்கென்று செய்யும் காரியம் ஒன்றுமில்லையென்கிறார்.

வ்யா:—(வகையால் மண்கொண்டாய்) 'மஹாபலியிடம் ஔதார்யம் (வண்மை) என்னும் குணமொன்று இருக்கையாலே அவனை அழியச்செய்யவும் கூடாது; இந்திரன் காரியமும் ஆகவேணும்; இதற்கென்செய்வது' என்று ஆலோசித்து, ஸகலபலப்ரதனான தன்னுடைய ஸ்வரூபத்தை அழித்துத் தன்னை யாசகனாக்கி வந்து நல்லதோர் உபாயத்தாலே உலகையளந்து இந்திரனுக்குக் குடியிருப்புக் கொடுத்தாய். (மதியாது மண் கொண்டாய்) இதை ஒரு பெருங் காரியமாக நினையாமல் அநாயாஸமாகத் திருவுலகை அளந்தருளினாய். 'அநாயாஸேந மண் கொண்டாய்' என்ற வ்யாக்யான ஸ்ரீஸூக்திக்குப் பொருந்திய பொருள் இதுவாகும். 'தன் மேன்மையைச் சிறிதும் நினையாமல் தன்னை யாசகனாக்கி மண்கொண்டான்' என்று பொருள் கொள்வாருமுண்டு. இரண்டாமடியைக் கடைசியில் கூட்டிக்கொள்வது. (மற்று) மேலும் இப்படித் தன்னை அழியமாறி இரப்பாளனாகியது இந்திரனுக்கு நன்மை செய்வதற்கு மட்டுமோ? மஹாபலிக்கும் நன்மை செய்வதற்காகவன்றோ? பக்தியுள்ளவனாகையாலே ஆஸுரப்ரக்ருதியான அவனையும் அடியானாகக்கொண்டு அவனுக்கும் நன்மை

செய்தானன்றே. (வகையால் வயிரம் குழைத்துண்ணும் மாவலி) அவன் தன் அஹங்காரத்திற்குப் பூண்கட்டியபடியைப் பேசுகிறார். நேரே வைரத்தை உண்டால் அது மரணத்துக்கே காரணமாகுமாகையாலே, ஔஷதங்களோடு சிறு அளவில் குழைத்து உண்பது முதலான உபாயங்களாலே வைரத்தை உண்டு, அத்தாலே அஹங்காரத்திற்கு அடியான தேஹத்தைப் பூண்கட்டித் திரிந்த மாவலி. (மாவலி தானென்னும் வயிரவழக்கு ஒழித்தாய்) இப்படிப்பட்ட மஹாபலியுடைய 'நான்' என்னும் அஹங்காரமாகிற சத்துருத்தன்மையைப் போக்கடித்து, அவனைத் தலைவணங்கும்படி செய்து, முடியிலே அடி வைத்து அவனை அளித்தாய். (வயிர வழக்கு) வயிரம்—வைரம், சத்துருத்தன்மை. வயிரவழக்கு—எதிரியாயிருக்கும் முறை. (தானென்னும் வயிர வழக்கு) வெளிப்பார்வைக்கு ஒருவிதமான பக்தியை உடையவனாயிருந்தபோதிலும் அஹங்காரமுடையவனாயிருந்தவனாகையாலே பகவானுக்கு விரோதியாகவேயிருந்தான் இவன் என்று உணர்த்தப்படுகிறது. "ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ:" [என் ஆஜ்ஞையை மீறுபவன் எனக்கு த்ரோஹம் செய்பவனாவான்; எனக்கு பக்தனாயிருந்தபோதிலும் அவன் வைஷ்ணவனல்லன்.] என்று தானே அருளிச்செய்தானன்றே. (மற்றும் வகையால் வருவதொன்றுண்டே) வகையால் வருவது மற்றும் ஒன்று உண்டே என்று அந்வயம். நீ அநுஷ்டித்த இவ்வுபாயங்களால் அடியார்களுக்குள்ள பயனைத் தவிர வேறு உனக்கு ப்ரயோஜனம் ஏதாவது உண்டோ? ஆச்ரிதர்களுக்காகவே உன் செயல்கள் ஆகின்றனவேயொழிய உனக்காகவன்று என்றபடி.

26. மற்றுத் தொழுவா ரொருவரையும் யானின்மை
கற்றைச் சடையான் கரிக்கண்டாய்—எற்றைக்கும்
கண்டுகோள் கண்டாய் கடல்வண்ணா யானுன்னைக்
கண்டுகோள்கிற்கு மாறு.

பதவுரை:— கடல்வண்ணா — கடல்போன்ற திருநிறமுடைய பெருமானே!, யான் தொழுவார் மற்று ஒருவரையும் இன்மை— அடியேனால் ஆச்ரயிக்கப்படும் தெய்வம் (நீ தவிர) வேறு ஒருவருமில்லையென்னும் விஷயத்தில், கற்றை சடையான்—சேர்த்துக் கட்டின

ஜடையையுடையனை ருத்ரன், கரி கண்டாய்—ஸாக்ஷிகாண்; யான்—இப்படி உன்னையே தொழும் அடியேன், உன்னை—, எற்றைக்கும்—எந்நாளும், கண்டுகோள்கிற்கும் ஆறு—ஸேவித்துக்கொண்டேயிருக்க வல்லேனும்படி, கண்டுகோள்—நோக்கியருளவேணும்.

பெரி–வ்யா:—இருபத்தாறும் பாட்டு. (மற்றுத் தொழுவாரித்யாதி) நான் தேவதாந்தர ஸமாச்ரயணம் பண்ணேன் என்னுமிடத்துக்கு ஆள் பிடித்துத் தொழுவித்துக்கொள்ளும் ருத்ரன் ஸாக்ஷி. (எற்றைக்குமித்யாதி) ச்ரமஹரமான வடிவையுடைய நீயே மேலும் இந்த நன்மை நிலை நிற்கும்படியாகப் பார்த்தருளவேணும்.

திவ்ய–அவ:—இவருடைய உறுதியை அறிந்திருந்தபோதிலும், இவர் வாயாலே சொல்ல அதைக் கேட்கவேணுமென்னும் ஆசையாலே, "மற்ற தேவதைகளும் அடியார்க்காகக் காரியம் செய்வதாகக் காண்கிறோமே! அவர்களையும் ஆச்ரயிக்கலாமோ" என்று எம்பெருமான் கேட்க, "நான் வேறு எந்த தெய்வத்தையும் தொழமாட்டேன் என்பதற்கும், மற்ற தெய்வங்கள் மோக்ஷபலனைக் கொடுக்கவல்லவையல்ல என்பதற்கும் ருத்ரன் ஸாக்ஷியாவான்" என்கிறார்.

வ்யா:—(மற்றுத் தொழுவார் ஒருவரையும் யானின்மை கற்றைச் சடையான் கரிக்கண்டாய்) நான் வேறொரு தெய்வத்தையும் தொழமாட்டேன் என்பதற்கு சிவன் ஸாக்ஷியாவான். (கற்றைச் சடையான்) அறநெறியை உபதேசிக்கத்தகுந்த வேஷத்துடன் சடாமுடியைத் தரித்துநின்று சீடர்களைத் தேடிப்பிடித்துத் தொழுவித்துக்கொள்ளும் ருத்ரன் ஸாக்ஷி. (கற்றைச்சடையான் கரிக்கண்டாய்) ஸர்வஜ்ஞனை உனக்குத் தெரியாததில்லை. "கோத்ர ஸாக்ஷீ" என்று ஒருகால் ஸாக்ஷியை விரும்பினையாகிலும் உன் பேரனை ருத்ரனைக் கேட்டுக்கொள். கரி–ஸாக்ஷி. நேரே கண்டவன்.

இவ்விடத்தில் தம் வாழ்வில் நடந்ததொரு விருத்தாந்தத்தையே ஆழ்வார் நினைக்கிறார் என்பது தெளிவு. அதாவது:—இவ்வாழ்வார் திருமழிசையில் யோகநிலையில் நின்று எம்பெருமானை த்யானித்துக்கொண்டிருக்கையில், ஒரு நாள் ஆகாசமார்க்கத்தில் எருதின்மீது ஏறிக்கொண்டு ருத்ரன் பார்வதியுடன் செல்லுகையில், பார்வதியானவள் இவரது தவவொழுக்கத்தைக் கண்டு கொண்டாடித் தன் கணவனை

நோக்கி 'இவன் ஆரோ?' என வினவ, 'இம்மஹாநுபாவன் நம்மை விட்டு நாராயணனுக்கு அடிமைப்பட்டவன்' என்று ருத்ரன் சொன்ன வளவிலே, அவள் 'இப்பெரியவனுக்கு நாமும் தரிசனம்தந்து ஏதேனும் வரமளித்துப்போவோம்' என்றுகூற, அவளது விருப்பத்தின்படி செய்ய ஸம்மதித்துச் சிவபிரான் இவரெதிரேவந்து தோன்றினன்; இவர் அச்சிவனைப்பார்த்தும் பாராதவர்போல உபேக்ஷித்து ஒரு கந்தைத்துணியைத் தைத்துக்கொண்டு விமுகராயிருக்க, அதுகண்ட சங்கரன் 'உனக்கு அருள்செய்ய வந்த நம்மை நீ அநாதரஞ்செய்தல் தகுதியோ?' என்ன, ஆழ்வார் 'உன்னால் ஆகவேண்டியது எனக்கு ஒன்றுமில்லை; ஆதலால் நான் உதாஸீநனாயிருந்தேன்' என்றார். பின்பும் சிவன் 'நம் வரவு வீண்போவதன்று; உனக்கு அபீஷ்டமான வரம்வேண்டிப் பெற்றுப்போவீர்' என்று நிர்ப்பந்திக்க, அநந்தரம் 'ஆழ்வார் மோக்ஷம் கொடுக்கமுடியுமாகில் கொடு' என்றார். அதற்கு ருத்ரன் 'அது நம்மால் தரத்தக்கதன்று; அது தருவதற்கு சக்தியுள்ளவன் ஸ்ரீமந்நாராயணனே; வேறுவரம் வேண்டுவாயாக' என்ன, ஆழ்வார் புன் முறுவல் செய்து 'அம்முக்தியைப் பெறும் பொருட்டுப் பலகாலம் இவ்வுலகில் உயிர்த்திருந்து பெருந்தவம் புரிவதற்கு உபயோகமாக நீண்ட ஆயுளையேனும் அளிப்பாயாக என்றார். அதுகேட்டுச் சிவன் 'அது கருமாநுஸாரமாக நடப்பதேயன்றி என்னாலாவதன்று; வேறு வேண்டுவதை விளம்புவாய்' என்றதும், திருமழிசைப்பிரான் புன்சிரிப்போடு இகழ்ச்சியாய் 'இவ்வூசியின் பின்னே நூல் வரும்படி வரம் தந்தருளீர்' என்று விநோதமாகச் சொல்ல, அப்பரிஹாஸவார்த்தை செவிப்பட்டவுடனே கடுஞ்சினங்கொண்ட நெற்றிக்கண்ணன் 'இச்செருக்குடையவனை இப்பொழுதே அநங்கனைப்போலாக்கிவிடுகிறேன்' என்று தனது நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணைத் திறந்துவிட்டான்; அதில் நின்றும் புகையும் பொறியுமாகக் கிளர்ந்தெழுந்த காலாக்நியைக் கண்டு திருமழிசைப்பிரான் சிறிதும் கலங்காமல் 'இந்திரன்போல உடம்பு முழுவதும் கண்காட்டினாலும் அஞ்சுவேனல்லேன்' என்று சொல்லித் தமது வலத்திருவடியின் பெருவிரலிலுள்ளதொரு கண்ணைத் திறந்துவிட, அதில்நின்றும், ஒரு பெருந் தீ எழுந்து ஊழித்தீயினும் பன்மடங்கு மேலிட்டு அவ்வனலை அடக்கத்தொடங்கிற்று. அவ்வளவில் அரன்

அக்கடுநெருப்பை அவிக்கும்படி தனது சடையிலுள்ள பல மேகங்களை ஏவிவிட, அவையும் ஊழி காலத்திற்போலப் பெருமழை பொழிந்து பெருவெள்ளங்கோக்கவும் ஆழ்வார் சிறிதும் சலியாமல் பகவத்பக்தியிலே ஊன்றியிருந்தார்; அதுகண்டு முக்கண்ணன் மிக வியந்து இவர்க்கு 'பக்திஸாரர்' என்று திருநாமஞ்சாத்தி இவரது வைபவத்தைக் கொண்டாடித் தன்னிடத்திற்குத் திரும்பிப்போயினன் என்றவிருத்தாந்தம். இவ்வளவையும் திருவுள்ளம்பற்றியே ஆழ்வார் இங்கு "கற்றைச்சடையான் கரிகண்டாய்" என்கிறார்.

'இப்படி அநந்யபக்தியை உடைய உமக்கு நான் செய்யவேண்டியதென்ன?' என்று பகவான் திருவுள்ளமாகச் சொல்லுகிறார்,—(எற்றைக்கும் கண்டுகொள்கண்டாய் கடல்வண்ணா யானுன்னைக் கண்டுகொள்கிற்குமாறு) இப்படி தேவதாந்தரஸ்பர்சமற்றவனாய் என்றும் உன்னிடத்திலேயே பக்தியுடையவனாக என்னைச் செய்தருளவேண்டும். இதுவே யான் வேண்டுவது. (எற்றைக்கும்) இந்த ஜன்மத்தில் மட்டுமின்றி எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்னிடம் மறந்தும் புறந்தொழாப் பக்தியிருக்கவேண்டுமென்பதொன்றே யான் விரும்புவது. (எற்றைக்கும் யானுன்னைக் கண்டுகொள்கிற்குமாறு கண்டுகொள்)

"துர்க்கதாவபி ஜாதாயாம் த்வத்கதோ மே மநோரத: ।
யதி நாஶம் ந விந்தேத தாவதாஸ்மி க்ருதீ ஸதா ॥"

[தேவரீரிடத்தில் ஈடுபட்டிருக்கிற என்னுடைய மநோரதமானது மிகவும் கீழான நிலை ஏற்பட்டபோதிலும் அழியாதிருக்குமேயாகில் அவ்வளவாலே நான் க்ருதக்ருத்யனாகிறேன்] என்றும்,

"ந காமகலுஷம் சித்தம் மம தே பாதயோ: ஸ்திதம் ।
காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வஜந்மஸு கேவலம் ॥"

[தேவரீருடைய திருவடிகளில் நிலைநின்ற அடியேனுடைய மனம் மற்ற ஆசைகளினால் கலங்கவில்லை; எல்லாப் பிறப்புகளிலும் வைஷ்ணவனாயிருக்கும் தன்மையை மட்டுமே ஆசைப்படுகிறேன்] என்று சொல்லப்பட்ட இப்பலனே யான் விரும்புவது. மோக்ஷத்தை நீ அளிக்கவேண்டும் என்னும் நிர்ப்பந்தங்கூட இல்லை. (எற்றைக்கும் கண்டுகொள்கிற்குமாறு) "ஸதா பச்யந்தி" [நித்யஸூரிகள் எப்போதும் காண்கிறார்கள்] என்று அங்கு சென்று பெறும்பேறு இங்கேயே ஸித்தித்தால் அங்கு போகவேண்டுமென்று நிர்ப்பந்தமென்ன? (கடல்வண்ணா கண்டுகொள்) ஸகலதாபஹரமான உன் வடிவைக்காட்டி அநந்யபக்தியை விளைவித்த நீயே மேலும் இந்நன்மை நிலைநிற்கும்படி செய்தருளவேண்டும்.

27. மாறன் புகுந்த மடநெஞ்சம் மற்றதுவும்
பேறாகக் கொள்வனோ பேதைகாள்—நீறாடி
தான்காண மாட்டாத தாரகலச் சேவடியை
யான்காண வல்லேற் கிது.

பதவுரை:—பேதைகாள்—மூடர்களே!, நீறாடி தான்—நீறு பூசின உடம்பையுடையனான ருத்ரனும், காண மாட்டாத—ஸேவிக்க முடியாததும், தார்—மாலை சூட்டப்பட்டதும் அகலம்—பரப்பையுடையதுமான, சே அடியை—திருவடியை, காண வல்லேற்கு—ஸேவிக்கும்படியான பாக்கியம் பெற்ற எனக்கு, மால்—எம்பெருமான், தான் புகுந்த—தானேமேல்விழுந்து வந்து புகுந்திருக்கப்பெற்ற, மட நெஞ்சம் இது—(எனது) விதேயமான இந்த நெஞ்சைக்காட்டிலும், மற்றதுவும்—வேறொன்றை, பேறு ஆக—பயனாக, யான் கொள்வனோ—நான் கொள்வனோ [கொள்ளமாட்டேன்;].

பெரி—அவ:—இருபத்தேழாம்பாட்டு. (மாறன்) பார்த்தருள வேணும் என்று அபேக்ஷித்தபடியே அவன் பார்க்கப்பெற்றபடியைப் பேசுகிறார்.

வ்யா:—(மாறன் புகுந்த மடநெஞ்சம்) ஈச்வரன் வ்யாமுக்தனாய்ப் புகுரும்படியான நெஞ்சு. (நீறித்யாதி) ருத்ரன் காணமாட்டாத தாரையும் அகலத்தையும் உடைத்தான திருவடிகளைக் காணவல்லேனான எனக்கு இதொழிய வேறேயொன்றைப் பேறாகக் கொள்வனோ? வேறொன்றைப் பேறாகநினைத்திருக்கும் அறிவுகேடர்காள்!.

திவ்ய—அவ:—"எற்றைக்கும் கண்டுகொள்கண்டாய் கடல்வண்ணா யானுன்னைக் கண்டுகொள்கிற்குமாறு" என்று ஆழ்வார் பிரார்த்தித்தவுடன் எம்பெருமான் "அப்படியே ஆகுக" என்று விசேஷகடாக்ஷம் செய்தான். இவருடைய இப்பிரார்த்தனையைச் செவியுற்ற சிலர், "என்றும் வைஷ்ணவனாயிருந்தால் போதாமோ? மோக்ஷம் வேண்டாவோ?" என்ன, "அறிவுகேடர்காள்! மோக்ஷத்தில் சென்றடையும் அவ்வெம்பெருமானை அவ்விருப்பையும் இகழ்ந்து என் நெஞ்சிலே புகுந்திருக்கும்போது, நான் இந்நெஞ்சைக்காட்டிலும் வேறொன்றை விரும்புவதற்கு ப்ரஸக்தியேது?" என்கிறார்.

வ்யா:—(மால்தான் புகுந்தமடநெஞ்சம்) "யத்....அபிஸம்விஶந்தி தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்மேதி" [முக்தியடையும்போது எதனுள்

ஜீவராசிகள் நுழைகின்றனவோ அதுவே ப்ரஹ்மமென்று அறிவாயாக.] என்றும், "பக்த்யா த்வநந்யயா ஶக்ய: அஹமேவம்விதோர்ஜுந। ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப" [எதிரிகளைத் தவிக்கச்செய்யும் அர்ஜுநா! அநந்யமான பக்தியினாலேயே இப்படிப் பட்ட நான் உள்ளபடி அறிவதற்கும், காண்பதற்கும், நுழைவதற்கும் தகுந்தவன்] என்றும், "ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோऽஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்" [கடுங்கோடையில் குளிர்ந்த குளத்திலே மூழ்கு வதுபோல் நான் ப்ரஹ்மத்தினுள் நுழைந்திருக்கிறேன்.] என்றும் பிறரால் புகுரப்படுவன் தான் மேல்விழுந்து புகுந்திருக்கும்படியான ருசியையுடைய என் நெஞ்சமன்றோ இது. (மால் தான் புகுந்த) மிகப்பெரியவனாயுள்ள ஸர்வேச்வரனன்றோ புகுந்தான்! மால்—பெரியோன். (மால் தான் புகுந்த) அன்பே வடிவுகொண்டவனா யன்றோ புகுந்தான். மால்—அன்பன். (மற்றதுவும் பேறாகக் கொள் வனோ பேதைகாள்) இந்நெஞ்சையொழிய வேறொன்றான பரமபதத் தையும் ப்ராப்யமாகக் கொள்வேனோ? "என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றும், "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லா" என்றும், "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும் "பாவோ நாந்யத்ர கச்சதி" [என் நினைவு வேறொன்றிலும் செல்லுகிறதில்லை] என்றுமன்றோ அறிவுடையார் வார்த்தை இருப்பது. (மட நெஞ்சம் மற்றதுவும் பேறாகக்கொள்வனோ) "நின் புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ, நீயவர்க்கு வைகுந்தம் என்றருளும் வான்" [பெரியதிருவ 53] என்றும், "மாயாப்பெருவிறலுலகம் மூன்றினொடு நல்வீடு பெறினும் கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே" என்றும் நம்மாழ்வாரும் அருளிச்செய்தாரன்றோ. (மால்தான் புகுந்த மடநெஞ்சம் மற்றதுவும் பேறாகக் கொள்வனோ)

"வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும்
இடவகைகளிகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே"
[பெரியாழ்—திரு 5-4-10]

என்கிறபடியே அவன் வைகுந்தத்தை இகழ்ந்து என்னெஞ்சில் வந்து புகுந்திருக்க, நான் இத்தை இகழ்ந்து அங்கே புகுரவோ? (பேதைகாள்) இத்தை அறியாத நீங்கள் அறிவுகேடர்களேயாவீர். "சிக்கெனமற்றொராணும் உண்டெண்பார் என்பது தானதுவும் ஓராமை-

யன்றே உலகத்தார் சொல்லும் சொல்" என்று திருமங்கையாழ்வாரும் இத்தை அறியாமை என்றே அருளிச்செய்தாரன்றோ. (பேதைகாள்) இவ்வறிவையுடையார் 'தெள்ளியோர்' (தெளிந்த அறிவையுடையவர்) ஆகவும், இதில்லாதார் பேதைகளாகவுமிருக்கும்படி. இப்படிப்பட்ட அத்யவஸாயம் உமக்கு எப்படி உண்டாயிற்று என்ன, அருளிச்செய்கிறார்,—(நீறுடி தான் காண மாட்டாத தாரகலச் சேவடியை யான் காண வல்லேற்கிது) சாம்பலைப் பூசிநிற்கும் ருத்ரனும் காணமுடியாததும், மாலையையும் பரப்பையும் உடைய்துமான திருவடியைக் காணவல்ல நெஞ்சையுடையவனன்றோ யான். அப்படிப்பட்ட எனக்கு இந்த அத்யவஸாயம் உண்டானதில் என்ன ஆச்சரியம்? (நீறுடி தான் காணமாட்டாத) "ஈச்வராத் ஜ்ஞாநமந்விச்சேத்" [ருத்ரனிடமிருந்து அறிவை விரும்பக்கடவன்.] என்று பிறருக்கு அறிவை அளிப்பவனாகச் சொல்லப்படும் அவனும் அறியமாட்டாத. ஸர்வஜ்ஞன் என்று பெயர்பெற்றிருப்பவனும் அறியமாட்டாத. (நீறுடி தான்) "பஸ்மச்சந்ந: முச்யதே ஸர்வபாபை:" என்கிறபடியே ஜ்ஞாந விரோதியான ப்ரஹ்மஹத்யாதி பாபங்கள் போவதற்காக நீறு பூசிநிற்கை முதலான ப்ராயச்சித்தங்களை அனுஷ்டித்துநிற்கும் அவன் தானும் அறியமாட்டான் என்கை. (நீறுடி தான் காணமாட்டாத)

"ந ஸ ஶக்யஸ் த்வயா தரஷ்டும் மயாந்யைர் வாபி ஸத்தம" [அப்பரமபுருஷன் (பிரமனாகிய) என்னாலும், (உருத்திரனாகிய) உன்னாலும், வேறு எவராலும் காணமுடியாதவன்] என்று பாரதத்தில் ப்ரஹ்மருத்ரஸம்வாதத்திலும்,

"யந்ந தேவா ந முநய: சாஹம் ந ச ஶங்கர: |
ஜாநந்தி பரமேஶஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம் ||"

[எதை தேவர்களும், முனிவர்களும், (பிரமனாகிய) நானும், சங்கரனும் அறியமாட்டோமோ, அதுவே விஷ்ணுவின் மேலான ஸ்வரூபம்] என்று விஷ்ணுபுராணத்திலும் பேச நின்ற பிரமனாலும் பேசப்பட்டதன்றோ. "திருமால்! நான்முகன் செஞ்சடையான் என்றிவர்கள் எம்பெருமான் தன்மையை யாரறிகிற்பார் பேசியென்?" [திருவாய் 8-3-9] என்றன்றோ அறிவுடையார் வார்த்தையிருப்பது. (நீறுடி தான் காண மாட்டாத தார்) அவனுடைய திருவடியைக் காண மாட்டாத அளவேயோ? அதிலணிந்திருக்கும் மாலையையும் காண

மாட்டான். (தார் அகலச் சேவடியை) "தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடை அம்மான்" [திருவாய் 1-9-7] என்று துழாய் மாலை சூடியிருக்கும் திருவடியன்றோ இது. (அகலச் சேவடியை) படிக்களவாக நிமிர்த்தலாம்படியான பரப்பையுடையதாயிருக்கும் திருவடியை. அன்றிக்கே, படிக்களவாக நிமிர்த்தி நின்ற த்ரிவிக்ரமாவதார நிலையை நினைப்பதாகவும் கொள்ளலாம். (நீருடி தான் காண மாட்டத....அகலச்சேவடியை) "த தம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார ஶிரஸா ஹர:" [(பிரமனுடைய கமண்டலுவிலிருந்து பகவானுடைய திருவடிகளில் விடப்பட்ட) அந்த கங்காஜலம் விழுவதைக் கண்டு, சிவன் அதைத் தலையாலே தரித்தான்] என்கிறபடியே எம்பெருமான் திருவுலகளந்தருளியபோது ருத்ரன் ஸ்ரீபாததீர்த்தத்தைக் கண்டானேயொழிய அந்த ஸ்ரீபாதத்தைக் காணப்பெற்றானில்லை என்றபடி. (நீருடி தான் காணமாட்டாத சேவடி)

"கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணன்
அடிக்கமலம்தன்னை அயன்" [முதல்-திருவ 56]

என்கிறபடியே அருகிலிருக்கும் அவனே காணமாட்டாத விஷயத்தை தூரஸ்தனான இவன் காண்கையாவதென்? (தாரகலச்சேவடியை) மாலைபட்டாலும் கன்றிச் சிவந்து போம்படியான மார்த்தவத்தையுடைய திருவடியை. (காணவல்லேற்கு) காணவல்லவனான எனக்கு. மால்தான் புகுந்த மடநெஞ்சமாகிற இதைக்காட்டிலும் வேறொன்றைப் பலனாகக் கொள்ளமாட்டேன் யான் என்று கூட்டிப்பொருள் கொள்வது.

[இப்பாட்டுக்கு வேறொருவகையாக அவதாரிகையும் உண்டு. அது கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கனுகுணமாக வ்யாக்யானத்தையும் யோஜித்துக்கொள்வது. "மால்தான் புகுந்த மடநெஞ்சம் — திருமால் தானே வந்து புகுந்திருக்கிற என் விதேயமான நெஞ்சத்திலே, மற்றதுவும்-(அவனுடைய திருவடியைக்காட்டிலும்) வேறொன்றை...." என்று பதவுரையில் பேதம்.]

அவதாரிகை:-"எற்றைக்கும் கண்டுகொள்கண்டாய் கடல்வண்ணா யானுன்னைக் கண்டுகொள்கிற்குமாறு." என்று ஆழ்வார் பிரார்த்தித்ததைச் செவியுற்ற சிலர் "ஸ்வர்க்கலோகப்ராப்தியென்றும், சிவலோகப்ராப்தியென்றும், ப்ரஹ்மலோகப்ராப்தியென்றும், ஸ்வாத்

மானுபவம் என்றும் சாஸ்திரங்களிலே பல பெரிய பலன்கள் சொல்லப்பட்டிருக்கும்போது, பரமது:க்கமயமான இவ்வுலகத்தில் வைஷ்ணவனுயிருந்தால் போதுமானது என்கிறீரே. இதென்ன அறிவுகேடு" என்று சொல்ல, "உயர்ந்ததைத் தாழ்ந்ததென்றும், தாழ்ந்ததை உயர்ந்ததென்றும் எண்ணும் நீங்களன்றோ அறிவுகெட்டவர்கள். நீங்கள் உயர்ந்த உலகங்களில் ஒன்றென்று நினைத்திருக்கும் சிவலோகத்திற்கு அதிபதியான அச்சிவனும் காண்மாட்டாத திருவடிகளை உடையவனன்றோ என் நெஞ்சில் புகுந்திருக்கிறான். அந்நெஞ்சிலே அத்திருவடியையொழிய வேறொன்றைப் பலனாக எண்ணமாட்டேன்" என்கிறார்.

28. இதுவிலங்கை யீடழியக் கட்டிய சேது
இதுவிலங்கு வாலியை வீழ்த்தது (வும்)—இதுவிலங்கை
தானொடுங்க வில்நுடங்கத் தண்டாரிராவணனை
ஊனொடுங்க வெய்தா னுகப்பு.

பதவுரை:—இலங்கை—லங்காபுரியானது, ஈடு அழிய—சீர்குலையும் படியாக, கட்டிய—(வானரசேனையைத் துணைகொண்டு) கட்டின, சேது-திருவணையாகிய, இது-இதுவும், விலங்கு—திர்யக்யோநியிற் பிறந்தவனான, வாலியை-வாலியை, வீழ்த்ததுவும்—முடித்த செயலும், இலங்கைதான்—லங்காபுரியானது, ஒடுங்க—அழியும்படியாகவும், வில் நுடங்க—சார்ங்கவில்வளையும் படியாகவும், தண் தார் இராவணனை ஊன் ஒடுங்க—(அலங்காரமாகக்) குளிர்ந்த பூமாலையணிந்து கொண்டிருந்த இராவணனுடைய முதுகு வளையும்படியாகவும், எய்தான்-எய்த ராமபிரானுடைய, இது-இச்செயலும், உகப்பு-அவனுடைய விளையாட்டு.

பெரி—வ்யா:—இருபத்தெட்டாம் பாட்டு. (இதுவித்யாதி) லங்கைக்கு மூலையடியே வழிபோம்படியாகக் கட்டின திருவணை இது. கடல் அடைபட்டபோதே லங்கை அழிந்ததென்று நினைக்கும்படியாக. (இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்) திர்யக்கான வாலியை முடித்ததுவும். (இதுவித்யாதி) லங்கை நெருக்குண்ணவும், ஸ்ரீசார்ங்கம் வளையவும், மதிப்பனான ராவணன் முதுகு கூனவும் எய்தான் இது. (அவனுகப்பு) அவன் லீலை. வாலியைக் கொன்ற ஜயமும், ராவணவதமும் புத்திஸ்தமானபடியாலே 'இது' என்கிறார். ஒரு முஷ்டியிலே நின்றெய்ய நெஞ்சழியும் படியாயிறே இருப்பது.

திவ்ய—அவ:—“அவன் சேவடியைச் சிவன் காணமாட்டான் என்றும், நான் கண்டேன் என்றும் சொன்னீரே. எங்கே எப்போது கண்டீர்?” என்று சிலர் வினவ, “அவன் திருவடியை மட்டுமோ? அவனுடைய லீலா வ்யாபாரங்களையெல்லாம் இங்கேயே இப்போதே மால்தான் புகுந்த மடநெஞ்சிலே காண்கிறேன்” என்கிறார்.

வ்யா:-(இது இலங்கை ஈடழியக் கட்டிய சேது) லங்கை கட்டுக்கோப்பு குலையும்படியாக அதற்கு மார்க்கமாகக் கடலிலே எம்பிரான் கட்டின திருவணை இதோ என் கண்ணெதிரே தோற்றுநின்றது. (இது இலங்கை ஈடழியக் கட்டிய சேது) “தாரகலச் சேவடியை யான் காணவல்லேற்கு” என்று அடியைக் கண்டேன் என்றார் கீழ்ப்பாட்டில். இங்கு அடிபட்ட அணையையும் காண்கிறேன் என்கிறார். (ஈடழியக் கட்டிய) அணைகட்டியபோதே இலங்கையழிந்தது என்று நினைக்கும் படியாக, இலங்கைக்கு வலிதான இயற்கையரணாகவன்றோ கடல் இருந்தது. (இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்) மிருகமான வாலியை அம்பாலே அடித்து வீழ்த்தியதும் இதோ என் கண்ணெதிரே தோற்றுகிறது. (விலங்கு வாலியை) திர்யக்ஜாதியிற் பிறந்ததோடன்றியில் செயல்களிலும் மிருகமாயிருந்தவன். சுக்கிரீவனுடன் சண்டைசெய்யும்போது ராமபிரான் மறைந்து நின்று அவனையடித்தது அவன் விலங்காகையாலே தோஷமாகாது என்று பாவம்.

“வாகுராபிச்ச பாஶைச்ச கூடைச்ச விவிதைர் நரா:।
ப்ரதிச்சந்நாச்ச த்ருச்யாச்ச க்ருஹ்ணந்தி ஸுபஹூந் ம்ருகாந்॥”

[மனிதர்கள் வலைகளாலும், பாசங்களாலும், விதவிதமான வஞ்சனைகளாலும், மறைந்திருந்தும், நேரேநின்றும் பலவிதமான மிருகங்களைப் பிடிக்கிறார்கள்.] என்று எம்பெருமானும் அருளிச்செய்தானன்றோ. (இலங்கை தான் ஒடுங்க வில் நுடங்கத் தண் தார் இராவணனை எய்தான் இது) லங்கை நெருக்குண்ணவும், வில் வளையும்படியாகவும், கர்வங்கொண்ட ராவணன் முதுகு வளையும்படியாகவும் எய்த அந்த ராமபிரானுடைய இச்செயலும். (இலங்கை தானொடுங்க) இலங்கை அழிவதையும் கண்முன்னே காண்கிறேன். (வில் நுடங்க) வில் வளைவதையும் காண்கிறேன். (தண் தார்.... எய்தான் இது) குளிர்ந்த மாலையணிந்து கர்வங்கொண்டு நிற்கும் ராவணன் உடம்பு ஒடுங்கும் படியாக எம்பிரான் எய்வதையும் காண்கிறேன். (இது இது இது

உகப்பு) என் கண்ணெதிரே தோற்றும் இச்செயல்கள் எல்லாம் எம்பிரானுடைய லீலாவ்யாபாரங்கள். (இது) வெகுகாலத்திற்கு முன் நடந்த செயல்களெல்லாம் நெஞ்சிலே ஓடுகையாலே 'இது,இது' என்கிறார்.

29. உகப்புருவம் தானே யொளியுருவம் தானே
மகப்புருவன் தானே மதிக்கில்—மிகப்புருவம்
ஒன்றுக்கோன் றோசனையான் வீழ ஒருகணையால்
அன்றிக்கோண் டெய்தா னவன்.

பதவுரை:—மதிக்கில்—சிந்தித்தால், உகப்பு உருவம் தானே—அனைவரும் விரும்பும் திருமேனியை யுடையவன் தானேயாகவும், ஒளி உருவம் தானே—தேஜோமயமான திருமேனியை உடையவனும் தானேயாகவும், மகப்பு உருவம் தானே—மிகவும் ஆச்சரியமான வடிவையுடையவனும் தானேயாகவுமிருக்கும், அவன்—அவ்விராமபிரான், மிக—மிகவும், புருவம் ஒன்றுக்கோன்று ஓசனையான்—ஒரு புருவத்துக்கு ஒரு புருவம் காதவழி நீளமிருக்கப்பெற்ற கும்பகரணன், வீழ—ஒழியும்படியாக, அன்றிக்கோண்டு—சீறிக்கொண்டு, ஒருகணையால்-ஒரு பாணத்தினால், எய்தான்—அடித்து முடித்தான்.

பெரி—வ்யா:— இருபத்தோன்பதாம் பாட்டு. (உகப்புருவமித்யாதி) "इच्छागृहीताभिमत" (இச்சாக்ருஹீதாபிமத) என்னும்படி ஸ்வவ்யதிரிக்தர்க்கும் ப்ராப்யமாய்த் தனக்கும் அபிமதமாய், ரஜஸ்தமோ மிச்ரமன்றிக்கே நிஷ்க்ருஷ்டஸத்வமாகையாலே, நிரவதிகதேஜோரூபமாய் "रूपमन्यद्धरेर्महत्" (ரூபமந்யத் ஹரேர் மஹத்) என்னும்படியான சக்ரவர்த்தித்திருமகன் தானே, ஒரு புருவத்துக்கோரு புருவம் யோஜனை நீளமுடைய கும்பகர்ணன் பட்டுவிழும்படி ஸங்கல்பத்தாலன்றிக்கே திருச்சரத்தாலே, தேவகார்யம் செய்தானுகையன்றிக்கே, தனக்கே வந்ததாகச் சீற்றத்தை ஏறிட்டுக்கோண்டு எய்தான். (மதிக்கில்) இவனுடைய திருமேனியை ஒன்றால் பரிச்சேதிக்கப்போகாதேன்கை.

திவ்ய-அவ:—"அப்படியாகில் ஸர்வேச்வரனுடைய திருமேனியை முற்றமுணர்ந்தவரோ நீர்?" என்ன, "ஒருவராலும் முற்றும் உணரமுடியாதபடியான திருமேனியை உடையவனன்றோ அவன்" என்கிறார்.

வ்யா:—(உகப்புருவம் தானே) எல்லாரும் விரும்பக்கூடிய திரு மேனியை உடையவனும் தானே.

ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ
ஸ்வஶக்திலேஶோத்த்ருதபூதஸர்க்க: ।
இச்சாக்ருஹீதாபிமதோருதேஹஸ்
ஸம்ஸாதிதாऽஶேஷஜகத்திதோऽஸௌ ॥ [வி-பு 6-5-84]

[இந்த பகவான் ஸகலகல்யாணகுணங்களையும் இயற்கையாகவே உடையவன்; தன்னுடைய சக்தியில் ஒரு சிறிய பகுதியினாலேயே தரிக்கப்பட்ட பூதங்களை உடையவன்; இச்சையினாலேயே எடுக்கப் பட்டவையும், இஷ்டமானவையுமான பல தேஹங்களை உடையவன்; இவன் எல்லா ஜகத்துக்கும் நன்மையைச் செய்பவன்.] என்று பராசர மஹர்ஷி அருளிச்செய்தபடியே அனைவரும் விரும்பும்படியான திரு மேனியை உடையவன். (உகப்புருவம் தானே) பிறர் விரும்புகையே யன்றிக்கே, தானும் தன் ஸ்வரூபத்தைக் காட்டிலும் மிகவிரும்பி யிருக்கும் திருமேனியை உடையவன்.

ஶாந்தாநந்தமஹாவிபூதி பரமம் யத் ப்ரஹ்ம ரூபம் ஹரே:
மூர்த்தம் ப்ரஹ்ம ததோऽபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம் ॥

[ஷடூர்மிகளற்றதாய், ஆநந்தமயமாய், பெரிய விபூதிகளை உடைய தாய், தனக்கு மேலானதற்றதாய், பெரிதாயிருப்பதாலும், (பிறரைப்) பெரிதாகச் செய்வதாலும் ப்ரஹ்மஶப்தத்தாலே சொல்லப்படுவதாய் இருக்கும் ஹரியினுடைய யாதொரு ஸ்வரூபமுண்டோ, அதைக்காட்டி லும், அந்த பகவானுக்கு மிகவும் பிரியமாயிருப்பதும், கண்ணால் காணக்கூடியதும், ப்ரஹ்மஶப்தத்தால் சொல்லப்படுவதும், மிகவும் அத்புதமானதுமான யாதொரு ரூபம் உண்டோ] என்று ஆளவந் தாரும் அருளிச்செய்தாரன்றோ. (உகப்புருவம் தானே) அடியார் களுக்கு ப்ராப்யம் (அடையப்படும் வஸ்து) ஆகையாலே அவர்க ளுடைய உகப்புக்கு விஷயமாயிருக்கும். அவர்கள் உகந்திருக்கும் தாகையாலேயே தனக்கும் மிகவும் இஷ்டமாயிருக்கும். (உகப்புருவம் தானே) ஸ்வரூபமும், விக்ரஹமும் ஒரே த்ரவ்யமோ என்று நினைக்கலாம்படி அந்தரங்கமாயிருக்கை. "உகப்புருவன் தானே" என்று பாடம் கொள்வாருமுண்டு.

எல்லாராலும் விரும்பப்படுகைக்குக் காரணம் சொல்லுகிறது அடுத்தபடியாக,— (ஒளியுருவர்தானே) "பரம் ஜ்யோதி:" என்றும் "நாராயணபரோ ஜ்யோதி:" என்றும், "ஆதித்யவர்ணம்" என்றும், "வித்யுத: புருஷாத்" என்றும் சோதியுருவனாகப் பேசப்படுபவனும் இவனே என்கை. (ஒளியுருவம் தானே) "தேஜஸாம் ராசிமூர்ஜிதம்" [பெரியதோர் ஒளிக் குவியலாயிருப்பவனே] என்று சொல்லப்படுபவனன்றோ. (ஒளியுருவம் தானே) "பரஞ்சோதி நீ பரமாய் நின்னிகழ்ந்து பின் மற்றோர் பரஞ்சோதியின்மையின் படியோவி நிகழ்கின்ற பரஞ்சோதி" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியே தன்னைத் தவிர வேறொருவரும் ஒளியுருவமுடையாரில்லை என்று சொல்லும் படியிருப்பவன். "ந தத்ர ஸூர்யோ பாதி" என்று ஸூர்யசந்திராதியரின் ஒளிகளையும் அஸத்ஸமமாக்குவதன்றோ இவனுடைய ஒளி. பரமபதத்தில் நித்யஸூரிகளுடைய ஒளியையும் இரவிக்கெதிர் மின்மினி போல் ஆக்கிக்கொண்டு எழுந்தளியிருப்பவனன்றோ இப்பெருமான். (மகப்புருவம் தானே) மிகப்பெரிய உருவத்தையுடையவனும் இவனே.

"ஸமஸ்தா: ஶக்தயச்சைதா ந்ருப யத்ர பரதிஷ்டிதா:।
தத் விச்வரூபவைரூப்யம் ரூபமந்யத் ஹரேர் மஹத்॥" [6-7-70]

[அரசனே! இவ்வெல்லா சக்திகளும் எதனிடத்திலே நிலைநிற்கின்றனவோ, ஹரியினுடைய மேலான உருவமான அது உலகிலுள்ள உருவங்கள் எல்லாவற்றிலும் மேலானதாய், வேறுபட்டதாயிருப்பது] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் பேசப்பட்டதன்றோ. இங்கு பெருமையாவது,— ஆகாரத்தாலும், ஆச்சர்யகரத்வம் முதலான குணங்களாலும் பெருமைபெற்றிருக்கை. 'மஹத்' என்னும் வடமொழிச் சொல் 'மகப்பு' என்று கிடக்கிறது. அன்றிக்கே, "மஹாத்புதம்" என்னும் வடமொழிச் சொல் 'மகப்பு' என்று சிதைந்துள்ளதாகவும் கொள்ளலாம். "ரூபம் யதத்யத்புதம்" என்றாரன்றோ ஆளவந்தாரும்.

'இப்படியிருப்பவன் பரமபதநாதனோ?' என்ன, "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்று தன்னை மனிதனாக நினைத்து வந்த அவதாரத்திலும் இப்படியேயிருந்தான என்கிறார் பிற்பகுதியாலே. (புருவம் ஒன்றுக்கொன்று ஓசனையான்வீழ) ஒருபுருவத்துக்கு ஒரு புருவம் யோஜனை தூரமுள்ளதான பெரிய வடிவையுடைய கும்பகர்ணன் விழும்படியாக. (மிக அன்றிக்கொண்டு எய்தான்) "க்ஷமயா ப்ருதிவீ-

ஸம:" [பொறுமையில் பூமியைப்போன்றவன்] என்னும் நிலை போய், "கோபமஹாரயத் தீவ்ரம்" [கடுங்கோபத்தை ஏறிட்டுக்கொண்டான்] என்கிறபடியே மிகுந்த கோபத்தை ஏறிட்டுக்கொண்டு எய்தான். பிறர் காரியம் செய்யும் நமக்குக் கோபதாபங்கள் ஏதுக்கு என்னும் நினைவில்லாமல், தன்காரியம் செய்வதாகவே நினைத்துக் கடுங்கோபங் கொண்டு எய்தான். (கணையால் எய்தான்) 'ஸங்கல்பத்தால் கொன்றால் நற்கொலையாம்; அடியார் திறத்துப்பட்ட அபசாரத்துக்கு அது போராது' என்று நினைத்து நேரே வந்து "வெந்நரகம் சேரா வகையே சிலைகுனித்தான்" [சிறியதிருமடல்] என்கிறபடியே விற்பிடித்து நின்ற காட்சியைக் காண்பதைக்காட்டிலும் மேற்பட்ட நாகானுபவம் இல்லையென்னும்படி விற்பிடித்துநின்று அம்பெய்தான். புருவம் ஒன்றுக்கொன்றேசனையானைகையாலே, இவனை அழிக்க அதிகமாக சிரமப்பட்டானோ? என்ன,—(ஒரு கணையால் எய்தான்) ஓர் அம்பாலே அநாயாஸமாக எய்தான். (மதிக்கில்....) இப்படிப்பட்ட இந்த ராமபிரானை அறியப்பார்த்தால் உகப்புருவையுடையவனாகவும் ஒளியுருவையுடையவனாகவும், மகப்புருவையுடையவனாகவுமிருப்பன். 'மதிக்கில்' என்றதால் இவனுடைய திருமேனியை அளவிட்டு அறிதல் ஆர்க்கும் ஆகாது என்றதாகிறது. (எய்தாவவன் உகப்புருவம்தானே) "தே தம் ஸோமமிவோத்யந்தம்" [உதிக்கும் சந்திரனைப்போன்றவனான ராமபிரானை] என்று அறிவுடையரான ரிஷிகளாலும், "அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:" என்று அறிவற்ற மரங்களாலும் விரும்பப்படும் திருமேனியை உடையவன் இவனே. (எய்தானவன் ஒளியுருவம் தானே) "ஶோபயந் தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா" [தன் ஒளிவிடும் தேஜஸ்ஸாலே தண்டக வநம் முழுவதையும் ஒளிபெறச் செய்துகொண்டு வந்தான் ராமபிரான்] என்கிறபடியே தன் ஒளியாலே இருள்செறிந்த காட்டையும் ஒளிவிஞ்சியதாகச் செய்யவல்ல ஒளியுருவனும் இவனேயாவான். (எய்தானவன் மகப்புருவம் தானே) "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிறபடியே ஆடவர்களின் நெஞ்சையும் கண்ணையும் கவர்கின்ற பெருமை பெற்ற வடிவையுடையவன் இவனேயாவான். *

* இப்பாசுரத்தின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் "'ரூபமந்யத் ஹரேர் மஹத்' என்னும்படியான ஆச்சர்யமான வடிவை உடையவனுமான சக்ரவர்த்தித்திருமகன்தானே" என்று பாடத்தைத் திருத்திக்கொள்க.

30. அவனென்னை யாளி யரங்கத்து அரங்கில்
அவனென்னை யெய்தாமல் காப்பான்—அவனென்ன
துள்ளத்து நின்று னிருந்தான் கிடக்குமே
வெள்ளத் தரவணையின் மேல்.

பதவுரை:—என்னை ஆளி—என்னை ஆட்கொண்டருள்பவனான, அரங்கத்து அவன்-ஸ்ரீரங்கநாதன், என்னை—, அரங்கில்-ஸம்ஸாரமாகிற நாடகசாலையில், எய்தாமல்—பிரவேசிக்கவொட்டாமல், காப்பான்—காத்தருள்வன்; அவன்-அப்பெருமான், என்னது—என்னுடைய, உள்ளத்து-நெஞ்சிலே, நின்றான் இருந்தான்—நிற்பதும் இருப்பதும் செய்தான், (ஆனபின்பு இனி) அவன்—அப்பெருமான், வெள்ளத்து—திருப்பாற்கடலில், அரவு அணையின்மேல்—ஆதிசேஷனாகிற படுக்கையில், கிடக்குமே—பொருந்துவனோ? [பொருந்தமாட்டான்]

பெரி-வ்யா:—முப்பதாம் பாட்டு— (அவனித்யாதி) அரங்கத்தவன் என்னையாளி. (அரங்கித்தியாதி) "பிறவிமாமாயக் கூத்து" என்று ஸம்ஸாரமாகிற நாடகசாலையில் என்னை ப்ரவேசியாமல் காப்பாரார்? பெருமாளே. (அவனித்யாதி) என்ஹ்ருதயத்தில் புகுருகைக்கு அவஸர ப்ரதீக்ஷனாய்க் கோயிலிலே கண்வளர்ந்தருளி அவகாசம் பெற்று என் ஹ்ருதயத்திலே நிற்பதிருப்பதாகிறவனுக்குத் திருப்பாற்கடலிலே படுக்கையில் கண்ணுறங்குமோ?

திவ்ய-அவ:—"உகப்புருவனாகவும், ஒளியுருவனாகவும், மகப்புருவனாகவும் இருப்பவனாகில், அவனை நீர் கண்டது எப்படி?" என்ன, "திருப்பாற்கடலையும் இகழ்ந்து என்னை ரக்ஷிப்பதற்காக என்நெஞ்சிலே கோயில் கொண்டிருக்கும்போது அவனைக்காண்பதில் அருமையென்ன?" என்கிறார்.

வ்யா:—(அரங்கத்து அவன் என்னையாளி) அரங்கத்திலே கோயில் கொண்டெழுந்தருளியிருப்பவனே என்னையாளி. என்னைத் தன் வடிவழக்கைக் காட்டி ரக்ஷிப்பதற்காகவே திருவரங்கத்திலே கிடந்தான் என்கை. 'அரங்கத்திலே கிடந்து அவன் செய்ததென்? என்னில்: (அரங்கில் அவனென்னை எய்தாமல் காப்பான்) ஸம்ஸாரமாகிய அரங்கத்திலே-நாடகசாலையிலே-என்னை அடையாமல் காப்பவன் அவனே. "பிறவி மாயக் கூத்து" [திருவாய் 8-4-11] என்று நம்மாழ்வாரும்

ஸம்ஸாரத்தை நாடகசாலையாக நிரூபித்தார். ஒரு மனிதனே நாடக வரங்கில் பல வேஷங்களில் தோன்றுவதுபோல், ஒரு ஜீவனே பல தேஹங்களை எடுத்துக்கொண்டு ஸம்ஸாரத்தில் தோன்றுகிறானன்றோ.

ஆக, இவ்வளவால் இவ்வாழ்வாரைப் பெறுகைக்கு ஈச்வரன் அனுஷ்டித்த ஸாதநாநுஷ்டானத்தைப் பேசினார்; இனி அவனுடைய பலனைப் பெற்றான் என்கிறார்,—(அவனென்னெனுள்ளத்து நின்றான் இருந்தான்) திருப்பாற்கடல், திருவரங்கம் முதலான விடங்களில் பள்ளிகொண்டருளியது என்னுடைய நெஞ்சில் நிற்பதும் இருப்பது மாகிற பலனைப் பெறுவதற்காகவேயன்றோ; அப்பலனைப் பெற்றான். ''ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே'' [ரக்ஷிக்கப்படுபவனின் அபேக்ஷையை எதிர்பார்க்கிறான்] என்கிறபடியே கொள்வாருமுண்டோ என்று படு காடுகிடக்கும் அரங்கன் என்னெஞ்சில் இடங்கிடைக்குமோ என்று எதிர்பார்த்துக்கிடந்து, இடம் சிறிது கிடைத்தவுடன் பெறும்பேறு பெற்றவனாய், நிற்பதும், இருப்பதும், கிடப்பதுமாகிற செய்கைகளை யெல்லாம் என்னெஞ்சிலே செய்தான். (கிடக்குமே வெள்ளத்தரவணையின்மேல்) இனிமேல் பாற்கடலிலே ஆதிசேஷனின்மேல் கிடப்பனோ? ஸாத்யத்தைப் பெற்றபிறகு ஸாதநாநுஷ்டாநம் செய்வாருண்டோ? இங்கு வெள்ளத்தரவணையில் கிடப்பதைச் சொன்னது பரமபதம் திருமலை திருவரங்கம் முதலானவிடங்களில் இருப்பதும், நிற்பதும், கிடப்பதுமாகிற எல்லாவற்றுக்கும் உபலக்ஷணம்.

“நிற்பதும் ஓர் வெற்பகத்திருப்பும் விண்கிடப்பதும்
நற்பெரும் திரைக்கடலுள் நானிலாத முன்னெலாம்
அற்புதன் அநந்தசயனன் ஆதிபூதன் மாதவன்
நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே”

என்று இவரே திருச்சந்தவிருத்தத்தில் அருளிச்செய்தாரன்றோ.

‘‘கல்லும் கனைகடலும் வைகுந்தவானாடும்
புல்லென் றொழிந்தனகொல் ஏபாவம்!—வெல்ல
நெடியான் நிறங்கரியா னுள்புகுந்து நீங்கான்
அடியேன துள்ளத் தகம்” [பெரியதிருவ-60]

[கல்—திருமலை; கனைகடல்—திருப்பாற்கடல்; புல்லென்றொழிந்தன கொல்—புல்முளைத்துப் போயினவோ?] என்று நம்மாழ்வாரும் அரு

ளிச்செய்தார். (கிடக்குமே வெள்ளத்தரவணையின்மேல்) திருப்பாற்கடலிலே சேதனரைப்பெறுகைக்காக ஸாதநாநுஷ்டானம் செய்யும் பகவான், தனக்கு மிகவினியனான சேதனனொருவனைப் பெற்று விட்டானாகில்,

"பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்து என்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாளநம்பீ" [பெரியாழ்-திரு 5-4-9]

என்று அத்தையும் விட்டு இங்கே ஓடிவருவன். அதைக்கண்ட இச் சேதனன்,

"வெள்ளத்து இளங்கோயில் கைவிடேல்" [இரா-திருவ-54]

என்று பிரார்த்தித்தால் அரைமனத்துடன் அங்குமிருப்பன். வெள்ளத்திலிருப்பு 'இளங்கோயில்' [பாலாலயம்] ஆகும். சேதனன் நெஞ்சிலிருப்பு "ஆயதநம் மஹத்" [நாராயணஸூக்] [பெருங்கோயில்] "நெஞ்சமே நீள்நகர்" [திருவாய் 3-8-2] என்கிறபடியே பெருங்கோயிலாகும். அது ஸாதனாநுஷ்டான தசை. இது ஸாத்யப்ராப்தி தசை. இதைப் பெற்றவுடன் அதைக் கைவிடுவதற்கே எம்பெருமானுக்குக் குதூஹலம் விஞ்சிநிற்கும். 'இளங்கோயில் கைவிடேல்' என்னுமிவனுடைய நிர்ப்பந்தத்தினாலேயே அங்கேயும் நிற்பன்.

31. மேல் நான்முக னரனையிட்ட விடுசாபம்
தான் நாரணனேழித்தான் தாரகையுள்—வானோர்
பெருமானை யேத்தாத பேய்காள் பிறக்கும்
கருமாயம் பேசில் கதை.

பதவுரை:—மேல்—முன்பொருகால், நான்முகன்—பிரமன், அரனை—ருத்ரனைக்குறித்து, இட்ட—கொடுத்த, விடுசாபம்—சாபத்தை, தாரகையுள்—இந்நிலவுலகத்தில் (உள்ளாரெல்லாருமறிய) நாரணன்தான்—எம்பெருமானே, ஒழித்தான்—போக்கியருளினன்; (அப்படிப்பட்ட) வானோர் பெருமானை—நித்யஸூரி நாதனை ஸ்ரீமந்நாராயணனை, ஏத்தாத—வாய்கொண்டு வாழ்த்த மாட்டாத, பேய்காள்—அறிவு கேடர்களே!, பிறக்கும் கரு—பிறப்பதற்கு அடியான கர்ப்பஸ்தானத்தில் (நீங்கள் அநுபவிக்கக்கூடிய) மாயம்—ஆச்சரியமான துக்கங்களை, பேசில்—சொல்லப்புகுந்தால், கதை—ஒரு மஹாபாரதம் போல் பரந்திருக்கும்.

பெரி-அவ:—முப்பத்தோராம் பாட்டு—(மேல் நான்முகன்) நீங்கள் ஆச்ரயணீயராக நினைத்தவர்களுக்கும் இடர்வந்த இடத்திலே அவ் விடரைப் பரிஹரிக்குமவனையன்றோ பற்றவடுப்பது என்கிறார்.

வ்யா:— (மேலித்யாதி) பண்டு சதுர்முகன் ருத்ரனை **"कपाली त्वं भविष्यसि"** (கபாலீ த்வம் பவிஷ்யஸி) என்று சபித்த சாபத்தைத் தரணியிலே எல்லாருமறிய ஸர்வேச்வரன் போக்கினான். (வாணனோரித்யாதி) ஒருத்தன் தலையை அறுத்துப் பாதகியாக, ஒருத்தன் சோச்யனாக, இருவருடைய வ்யஸநத்தையும் போக்குவதும் செய்து நித்யஸூரிகளுக்கு ப்ராப்யனானவனை ஏத்தாத அறிவுகேடர்காள்! (பிறக்குமித்யாதி) இவ் வறிவுகேடுகிடக்கப் பிறவிக்கடியான கர்ப்பஸ்தானத்திலுள்ள ஆச்சர்யம் சொல்லப்புகில் மஹாபாரதம்.

திவ்ய-அவ:-*'தனக்கு து:க்கநிவர்த்தகன் அவனே' என்று சென்ற பாசுரத்தில் அருளிச்செய்தார். "எனக்குமட்டுமோ? நீங்கள் தெய்வங்களாக நினைக்கிற ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் துக்கத்தைப் போக்கடிப்பவன் அவனே; அவனைப் பற்றுங்கள்" என்கிறார் இப்பாசுரத்தில்.*

வ்யா:—*(மேல் நான்முகன் அரனையிட்ட விடுசாபம்) முன்னொரு நாள் தன் தலையொன்றைக் கிள்ளிய ருத்ரனைக் குறித்துப் பிரமனிட்ட சாபத்தை. (தான் நாரணனொழித்தான் தாரகையுள்) நாராயணன் தானே அச்சாபத்தைப் பூமியிலுள்ளார் எல்லாருமறியும்படி போக்கினான். இவ்விடத்தில்,*

"தேவீம் ப்ரதி ருத்ர:-தத: க்ரோதபரீதேந ஸம்ரக்தநயநேந ச।
வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய ஶிரோ மயா॥
ப்ரஹ்மா—யஸ்மாதநபராதஸ்ய ஶிரச்சிந்நம் த்வயா மம।
தஸ்மாச்சாபஸமாவிஷ்ட: கபாலீ த்வம் பவிஷ்யஸி॥
ருத்ர:—ப்ரஹ்மஹாऽऽகுலிதோ பூத்வா சரந் தீர்த்தாநி பூதலே।
ததோऽஹம் கதவாந் தேவி! ஹிமவந்தம் ஶிலோச்சயம்॥
தத்ர நாராயணச் ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:।
ததஸ்தேந ஸ்வகம் பார்ச்வம் நகாக்ரேண விதாரிதம்॥
மஹதீ ஸ்ரவதீ தாரா தஸ்ய ரக்தஸ்ய நிஸ்ஸ்ருதா॥
விஷ்ணுப்ரஸாதாத் ஸுச்ரோணி! கபாலம் தத்ஸஹஸ்ரதா।
ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்நலப்தம் தநம் யதா॥"

[தேவியைக்குறித்து ருத்ரன்:—'பிறகு கோபத்தையுடையவனும், சிவந்த கண்களை உடையவனுமான என்னால், அப்பிரமனுடைய தலை இடதுகைக் கட்டைவிரல் நகத்தின் நுனியால் வெட்டப்பட்டது'. பிரமன்:—'அபராதமற்ற என்னுடைய தலை, உன்னால் அறுக்கப்பட்டபடியால் நீ சாபத்தை அடைந்து கபாலியாக (கபாலத்துடன் கூடியவனாக) ஆவாய்.' ருத்ரன்:—தேவி! ப்ரஹ்மஹத்தி செய்தவனாயும் கலங்கினவனாகவும் பூமியில் தீர்த்தங்களைச் சுற்றிக்கொண்டிருந்த நான் அதற்குப்பின் ஹிமாசலமலைக்குச் சென்றேன். அங்கு ஸ்ரீமந்நாராயணன் என்னால் பிச்சைக்காக யாசிக்கப்பட்டான். அதன் பின் அவனால் தன் (தேஹத்தில்) ஒரு பாகம் நகத்தின் நுனியால் கீறப்பட்டது. அதிலிருந்து பெரிதாக வெள்ளமிடும் ரத்ததாரை பெருகிற்று. ....அழகிற் சிறந்தவளே! விஷ்ணுவினுடைய அருளினால் அக்கபாலம் ஆயிரக்கணக்கான பல துண்டுகளாக வெடித்து, கனவில் கிடைத்த பணம்போல் சென்றது.] என்ற மாத்ஸ்யபுராண வசனம் அநுஸந்திக்கத்தக்கது. தாரகை-"धरतीति धारका" [(எல்லாவற்றையும்) தாங்குகையாலே பூமியானது தாரகையாகிறது.] என்னும் வ்யுத்பத்தியாலே பூமியைக் குறிக்கிறது. (தாரகையுள்) பூமியுள்ளோர் எல்லாரும் அறியும்படி ஒழித்தான்; கபாலியென்றும், பிக்ஷாண்டார் என்றும் ருத்ரனுக்கும், ஹரசாபஹரன் என்று தனக்கும் லோகப்ரஸித்தமான பெயராகும்படி சாபத்தைப் போக்கினான். (வானோர் பெருமானை) தனையன் தந்தையின் தலையை அறுத்துப் பாபியாய் நின்றான்; தந்தையோவெனில் தலையறுப்புண்டு வருந்தத்தக்கவனாய் நின்றான். இருவருடைய துன்பத்தையும் துடைத்தான எம்பெருமான். இச்செயலிலே ஈடுபட்டு நித்யஸூரிகள் இவனுக்குத் தங்களை எழுதிக்கொடுத்தார்கள். (வானோர் பெருமானை) அன்றிக்கே வானோரென்று இவ்வுலகிலுள்ள தேவராய், தங்கள் தலைவரான ப்ரஹ்மருத்ரர்களுடைய துன்பத்தையும் துடைக்கக் காண்கையாலே இவனே ஸர்வேச்வரனென்று அறுதியிட்டார்கள் தேவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். "அதிகம் மேநிரே விஷ்ணும் தேவா:" [தேவர்கள் விஷ்ணுவையே சர்வாதிகனென்று அறுதியிட்டார்கள்] என்னுமாப்போலே. (ஏத்தாதபேய்காள்) இப்படிப்பட்ட விலக்ஷணனைப் புகழாத அறிவுகெட்டவர்களே!

இப்படி எம்பெருமானைத் துதிக்காததினால் இவ்வறிவுகெட்டவர்களுக்கு வரும் அநர்த்தத்தைச் சொல்லுகிறார் அடுத்தபடியாக—,(பிறக்கும் கரு மாயம் பேசில் கதை) அவனைத் துதிக்காத நீங்கள் மாறிமாறிப் பலபிறப்புக்களெடுக்கும்போது கர்ப்பப்பையிலே அநுபவிக்கும் ஆச்சர்யமான துன்பங்களைச் சொல்லப்புகுந்தால் ஒரு மஹாபாரதக் கதையாய் முடியும். இவ்விடத்தில்,

“ஸுகுமாரதநுர் கர்ப்பே ஜந்துர் பஹுமலாவ்ருதே।
உல்பஸம்வேஷ்டிதோ புக்ந ப்ருஷ்ட க்ரீவாஸ்திஸம்ஹதி:॥
அத்யம்ல கடு தீக்ஷ்ணோஷ்ணலவணைர் மாத்ருபோஜநை:।
அத்யந்ததாபைரத்யர்த்தம் வர்த்தமாநாதிவேதந:॥
ப்ரஸாரணாகுஞ்சநாதௌ நாங்காநாம் ப்ரபுராத்மந:।
ஶக்ருந் மூத்ர மஹாபங்க ஶாயீ ஸர்வத்ர பீடித:॥
நிருச்ச்வாஸ: ஸசைதந்ய: ஸ்மரந் ஜந்மஶதாந்யத:।
ஆஸ்தே கர்ப்பேऽதிது:க்கேந நிஜகர்மநிபந்தந:॥
ஜாயமாந: புரீஷாஸ்ருங் மூத்ர ஶுக்லாவிலாநந:।
ப்ராஜாபத்யேந வாதேந பீட்யமாநாஸ்திபந்தந:॥
அதோமுகோ வை க்ரியதே ப்ரபலை: ஸூதிமாருதை:।
க்லேசாந் நிஷ்க்ராந்திமாப்நோதி ஜடராந் மாதுராதுர:॥”

[ஜீவனானவன், மிகவும் ம்ருதுவான தேஹத்தையுடையவனாய், பல அழுக்குகள் நிறைந்த கருப்பையில் சொப்பூழ்க்கொடியினால் சுற்றப்பட்டவனாய், வளைந்துகிடக்கும் முதுகு, கழுத்து, எலும்புகள் ஆகியவற்றையுடையவனாய், மிகவும் புளிப்பு, துவர்ப்பு, காரம், உஷ்ணம், உவர்ப்பு முதலியவற்றுடன்கூடியவையும், மிகுந்த எரிச்சலைத் தருமவையுமான தாயின் உணவினால் மிகவும் விருத்தியடைகிற பெருந்துன்பத்தை அனுபவிப்பவனாய், தன் அவயவங்களை நீட்டவும் முடக்கவும் மாட்டாதவனாய், மலமூத்திரப் பெருஞ்சேற்றில் படுத்துக்கொண்டு நாற்புறமும் துன்புறுபவனாய், மூச்சற்றவனாய், அறிவுள்ளவனாயிருக்கையாலே, நூற்றுக்கணக்கான முன் சென்றதன் பிறவிகளின் நினைவை உடையவனாய், தன் கருமத்தாலே கட்டுண்டு மிகுந்த து:க்கத்துடன் கருப்பையில் வாழ்கிறான். பிறக்கும் போதும், மலம், மூத்திரம், ரத்தம், சுக்கிலம் ஆகியவற்றால் அழுக்கடைந்த முகத்தையுடையவனாய் ப்ரஹ்மாவால் செலுத்தப்பட்டதொரு வாயுவினால் எலும்புக்கூடுகள் நெருக்கப்பெற்றவனாய், மிகுந்த பலமுள்ள ப்ரஸவவாயுக்களால் தலைகீழாகச் செய்யப்படுகிறான். இப்படிக் கஷ்டமடைந்த அந்த ஜீவன் தாயின் வயிற்றிலிருந்து பெருந்துன்பத்துடன் வெளிப்படுகிறான்.] என்று விஷ்ணுபுராணத்தில் [6-5] சொல்லபபட்ட கருமாயங்கள்-(கர்ப்பக்லேசங்கள்)-அநுஸந்திக்கத்தக்கவை.

32. கதைப்பொருள்தான் கண்ணன் திருவயிற்றினுள்ள
உதைப்பளவு போதுபோக் கின்றி—வதைப்பொருள்தான்,
வாய்ந்த குணத்துப் படாத தடைமினோ,
ஆய்ந்த குணத்தானடி.

பதவுரை:— கதை பொருள் தான்— ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள்தான், கண்ணன் திருவயிற்றினுள்ள-ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தைப் பற்றிநிற்பவை; உதைப்பு அளவு—ஒரு க்ஷணமும், போது போக்கு இன்றி—(வேறுவிதமாகக்) கழிக்காமல், வாய்ந்த குணத்து படாதது—(பகவானுடைய) ஆச்சரியமான கல்யாணகுணங்களில் ஈடுபடாமலிருப்பது, வதைப் பொருள்தான்—பரஹிம்ஸையேயாம்; ஆய்ந்த குணத்தான்—தோஷமற்ற குணங்களையுடைய பெருமானுடைய, அடி திருவடிகளை, அடைமினோ-அடையுங்கள்.

வ்யா:-முப்பத்திரண்டாம் பாட்டு- (கதையித்யாதி) ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள் ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்திலுள்ளன. (உதைப்பித்யாதி) ஒரு கோடிமாத்ரம்போது போக்கின்றி. (வாய்ந்த குணத்துப் படாதது வதைப்பொருள் தான்) ஆஶ்சர்ய குணத்தில் அகப்படாதது பரஹிம்ஸை. (ஆய்ந்த குணத்தான் அடி அடைமினோ) ஹேயப்ரத்யநீகமான குணத்தையுடையவன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோள்.

திவ்ய-அவ-"பெருமானை ஏத்தாத பேய்காள்" என்றார் சென்ற பாசுரத்தில். "ஸத்வப்ரசுரரான நீர் பேயென்றும் நாயென்றும் நிஹீன வார்த்தைகளைச் சொல்லிப் பரநிந்தை செய்யலாமோ? பரபரிவாதத்தைப் பரிஹரிக்கவேண்டுமென்றன்றோ பெரியோர்கள் பேசுகிறார்கள்," என்று சிலர் வினவினார்கள். "பரநிந்தையில் ருசியாலே பேசினேனல்லேன்; வஸ்துஸ்திதியிருந்தபடியைச் சொன்னேனித்தனை. உண்மையில் பகவத் குணங்களிலே ஈடுபடாதவர்கள், தங்களை அழித்துக்கொள்வதோடன்றியில் பிறருடைய ஸ்வரூபத்தையும் அழியச்செய்யும் பேய்களேயன்றோ. உள்ளதைச்சொன்னால் உடம்பெரியலாமோ? பேய்காள் என்று என்னால் இகழப்பட்டவர்களே பகவதநுகூலர்களானால் எனக்கும் உத்தேச்யராகவன்றோ ஆகிறார்கள்" என்று அவர்களுக்குப் பதிலுரைக்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:-- (கதைப்பொருள் தான்-) கதைகளை முக்கியமாகக் கொண்ட இதிஹாஸபுராணங்களும், பொருளை-தத்துவங்களை-முக்கியமாகக்கொண்ட ஸ்ம்ருதிகளும். "கருமாயம் பேசில் கதை" என்று மஹாபாரத விஷ்ணுபுராணாதிகள் ப்ரஸ்துதமாகையாலே,—(கதைப் பொருள்தான் கண்ணன் திருவயிற்றினுள்ள) உங்களுடைய கருமாயங்களைப் பேசும் ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களெல்லாம் அவனுடைய ஸங்கல்பத்தைப் பற்றிநிற்கின்றன என்கிறார். இக்கருமாயங்களை ஒழிக்கவல்லவன் அவனே என்று பாவம். (திருவயிற்றினுள்ள) வயிறு, என்றது லக்ஷணையாலே அந்த: கரணமான மனத்தைக் குறிப்பதாய், மந: கார்யமான ஸங்கல்பத்தை இங்கு சொல்லுகிறது. "அரவிந்த லோசநமந: காந்தா" [ஸ்தோ-ர] [தாமரைக்கண்ணனுடைய மனத்துக்கு இனியவள்]"உன் தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும்" [திருவாய்] "அஸ்யா தேவ்யா மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம்" [ரா-ஸு] [இந்த தேவியின் மனம் அவரிடமும், அவருடைய மனம் இவளிடமும் நிலைநிற்கிறது.] முதலான ப்ரமாணங்களிலிருந்து பகவானுக்கும் அப்ராக்ருதமான மனம் உண்டென்று தெளிவாகிறது. அப்ராணோ ஹ்யமநா:" [ப்ராணனற்றவன்; மனமற்றவன்] "பஸ்யத்யசக்ஷு: ஸ ச்ருணோத்யகர்ண: [கண்ணற்றவனாயினும் காண்கின்றான்; காதற்றவனாயினும் கேட்கின்றான்.] என்ற வாக்கியங்கள் ப்ராக்ருதமான மனம், கண், காது முதலானவையற்றவன் என்றும், இவனுக்கு மனத்தைக்கொண்டே ஸங்கல்பம் செய்யவேண்டும், கண்ணைக் கொண்டே காணவேண்டும், காதைக் கொண்டே கேட்கவேண்டும் என்னும் நியமமில்லையென்றும் உணர்த்துகின்றன. இவனுடைய ஸங்கல்பம் மனத்தைக்கொண்டேயன்றாகில், "வயிறு" என்றும் பதம் மனத்தைக்குறித்து, அதன்மூலம் ஸங்கல்பத்தைக் குறிக்கும்படியென்னென்னில்: இவனுக்கு அந்யமம் இல்லையாகிலும், லோகஸித்தமான நியமத்தைக்கொண்டு பாசுரமிடுகிறார்.

(உதைப்பளவு போதுபோக்கின்றி வாய்ந்த குணத்துப்படாதது வதைப்பொருள்தான்) ஒரு கணநேரமும் வேறுவிதமாகப் பொழுது போக்காமல், பகவானுடைய ஆச்சரியமான கலியாணகுணங்களில் ஈடுபடாதது லோகஹிம்ஸையேயாகும். லோகஹிம்ஸகர்களைப் 'பேய்காள்' என்னுமல் என்னென்று சொல்லுவது? இது பர

ஹிம்ஸையாகுமோவென்னில்: பகவத்குணங்களிலே ஈடுபடாமல் இதர விஷயங்களிலே ஈடுபடுவதன் மூலம், இவன் தன்னையும், தன்னைப் பின்பற்றி நடக்கும் மற்றவரையும், "அஸந்நேவ" என்கிறபடியே இல்லாதவரைப்போலேயாக்கி அழிக்கிறுனகையாலே இவனே பரஹிம்ஸகர்களுள் தலைசிறந்தவனுவான். (உதைப்பளவு....வதைப்பொருள்தான்) நொடிப்பொழுது ஈடுபடாவிடினும் பரஹிம்ஸையே.

"யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே।
ஸா ஹாநிஸ் தந் மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா॥

[யாதொரு முஹூர்த்தத்திலோ, கணத்திலேயோ வாஸுதேவன் நினைக்கப்படவில்லையோ, அதுவே தாழ்வு; அதுவே பெருந்தொல்லை; அதுவே மயக்கம்; அதுவே விகாரம்] என்று ரிஷிகளும் அருளினர்களன்றே. உதைப்பு—காலை உதைத்துக்கொள்ளும் நேரம்; நொடிப்பொழுது. (அடைமினே ஆய்ந்த குணத்தான் அடி) ஆய்ந்தெடுத்த நற்குணங்களை உடையவனுடைய திருவடிகளை அடையுங்கள். தாழ்வுக்கு எதிர்த்தட்டாயுள்ள குணங்களையுடையவனாய் அவனிருக்கும்போது அவனடியை அடையாமலிருக்கலாமோ? (அடைமினே) "பேய்காள்" என்று இகழப்பட்ட நீங்களே, பகவானிடம் ஆநுகூல்யமுடையரானுல் கௌரவமாக வார்த்தை சொல்லத் தகுந்தவர்களாகிறீர்கள் என்று பாவம்.

33. அடிச்சகடம் சாடிஅரவாட்டி, ஆனை
பிடித்தொசித்துப் பேய்முலை நஞ்சுண்டு—வடிப்பவள,
வாய்ப்பின்னைத் தோளிக்கா வல்லேற்றெருத்திருத்து,
கோப்பின்னுமானுன் குறிப்பு.

பதவுரை:— அடி சகடம் சாடி-திருவடிகளாலே சகடாசுரனை உதைத்து, அரவு ஆட்டி-காளியனை ஆட்டிவைத்து, ஆனை பிடித்து ஒசித்து-குவலயாபீடமென்னும் யானையைப் பிடித்து, (அதன் கொம்பை) முறித்து, பேய்முலை நஞ்சு உண்டு-பூதனை முலையிலுள்ள விஷத்தை அமுது செய்து, வடி பவள வாய் தோளி பின்னைக்கா-அழகிய பவளம் போன்ற வாயையும், அழகிய தோளையும் உடைய நப்பின்னைப் பிராட்டிக்காக, வல் ஏறு எருத்து இறுத்து-பலம் பொருந்திய காளைகளின் முசுப்பை ஒழித்து, பின்னும்-பிறகும், குறிப்பு-திருவுள்ளத்தால், கோ ஆனுன்-ஸ்வாமியானுன்.

பெரி-அவ- முப்பத்து மூன்றும்பாட்டு:—அஸாதாரணையான நப்பின்னைப் பிராட்டிக்கும், அல்லாதார்க்கும் ஒக்க விரோதியைப் போக்கு மவன் என்கிறார்.

வ்யா:– திருவடிகளாலே சகடையழித்து, காளியனைத்துரத்தி, குவலயா பீடத்தைப் பிடித்து அதின்கொம்பை அநாயாஸேந முறித்து, பூதனையை முடித்து, அழகிய பவளம் போன்றிருக்கிற அதரத்தையும் அழகிய தோளையுமுடைய நப்பின்னைப்பிராட்டிக்காகத் தன்னையொக்க வலிய வ்ருஷபங்களுடைய ககுத்தைப்போக்கி, ஸ்வாபாவிகமான ஶேஷித்வத்ததைப் பின்னையும் உதறிப்படுத்தான் திருவுள்ளத்தாலே.

திவ்ய-அவ—"அடி அடைமினோ" என்றீர்; அநாதிகாலமாகத் தொடர்ந்துவரும் விரோதிகள் அடியடைய விடுமோ என்ன,—தனக்கினியையான நப்பின்னைப் பிராட்டிக்கும், மற்றுள்ளவர்க்கும் ஒருபடியாக விரோதிகளை நிரஸித்துத்தரும் தன்மையை உடையவனன்றோ அவன்;விரோதிகளுக்கு அஞ்சவேண்டா என்கிறார்.

வ்யா:—(அடிச்சகடம் சாடி) பிறந்த எழுதிங்களில் தோன்றிய விரோதியான சகடாசுரனைத் தன் திருவடியாலே உதைத்தழித்துத் தன்னைத் தமர்க்கு நல்கினானன்றோ. (அரவாட்டி) 'அடி' என்பதை இங்கும் கூட்டிக்கொள்வது. காளியனைத் தன் திருவடியாலே ஆட்டிவைத்துத் துரத்தி ஆயர்களை ரக்ஷித்தான் என்கை. "காளியனைத் துரத்தி" என்னும் வியாக்கியான ஸ்ரீஸூக்தியை நோக்கினால், "அரவோட்டி" என்று பாடமிருந்திருக்குமென்று தோற்றுகிறது. (ஆனை பிடித்தொசித்து) குவலயாபீடமென்னும் யானையைத் தன்கையாலே பிடித்து அதன்கொம்பை முறித்து. (பேய்முலை நஞ்சுண்டு) சிறு குழந்தையாயிருக்கும்போதே தன்னைக் கொல்லவந்த பூதனையின் முலையிலேயுள்ள விஷத்தை வாயாலே அமுதம்போலே உண்டு. "பெருமா வஞ்சப்பேய் வீய, தூய குழவியாய் விடப்பால் அமுதா அமுது செய்திட்ட மாயன்" [திருவாய் 1-5-9] என்றாரன்றோ நம்மாழ்வாரும். (வடிப்பவள வாய்ப்பின்னைத் தோளிக்கா வல்லேற்றெருத்திறுத்து) பவளம்போன்று அழகிய வாயையும், அழகிய தோளையும் உடைய நப்பின்னைப் பிராட்டிக்காகத் தன்னையொத்த வலிமையையுடைய ஏழு

ஏருதுகளையும் தன் திருமேனியாலே தழுவி அவற்றின் கருத்துக்களை (முசுப்புகளை) அழித்து. (அடிச்சகடம் சாடி அரவாட்டி) திருவடியால் செய்தவிரோதிநிரஸனம். (ஆனை பிடித்தொசித்து) திருக்கையால் செய்தவிரோதிநிரஸநம். (பேய்முலை நஞ்சுண்டு) திருப்பவளத்தால் செய்த விரோதிநிரஸநம். (வல்லேற்றெருத்திருத்து) திருமேனி முழுவதாலும் செய்த விரோதிநிரஸநம். அஸாதாரணையான நப்பின்னைப்பிராட்டியைப் பெறுவதற்கு விரோதிகளாகையாலே திருமேனி முழுவதையும் ஈடுபடுத்தினான். மற்றவர்களுடைய விரோதிநிரஸநத்துக்குக் கை, கால், வாய் இவற்றில் ஒரொன்றே போதுமாயிருந்தது. விரோதிநிரஸநமாகிற ஸாத்யத்தில் வாசியில்லை. ஸாதநத்திற்குக் கையோடு காலோடு வாயோடு வாசியற எதுவும் அமையும். (வடிப்பவள வாய்ப்பின்னைத் தோளிக்கா) பெறப்போகும் வஸ்துவின் வைலக்ஷண்யத்திற்குத் தகுந்தபடியிருக்கவேண்டாவோ ஸாதநாநுஷ்டானம்? அதனாலே ஏழு எருதுகளையும் திருமேனி முழுவதாலும் தழுவி இறுக்கிக்கொன்றான். (பின்னும் குறிப்பு கோவானான்) அவதாரம் முடிந்தபின்பும், பாஹ்யேந்திரியங்களாலே விரோதிநிரஸம் செய்கை தவிர்ந்து, அந்தரிந்திரியமான திருவுள்ளத்தாலே விரோதிநிரஸநஸீலனானான். அவதாரம் முடிந்து திருப்பாற்கடலுக்கு எழுந்தருளிய பின்பும்,

> "வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை
> மெத்தையாக விரித்து அதன்மேல்
> கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்" என்றும்,

> "உறங்குவான்போல் யோகுசெய்த பெருமானை" என்றும்

சொல்லுகிறபடியே, திருவுள்ளத்தாலே ஆச்ரிதவிரோதி நிரஸனத்தை மேலும் சிந்திந்துக்கொண்டு, இயற்கையான தன்ஸேஷித்வம் வெளிப்படும்படி ஆதிசேஷன்மேலே கண்வளர்ந்தருளினான். (பின்னும் குறிப்பு கோவானான்) அவதாரம் முடிந்தபின்னும் ஸங்கல்பத்தாலே விரோதிநிரஸநஸீலனாய், ஸ்வாமித்வம் தோற்ற இருந்தான். (பின்னும்) அவதரிக்கும்போதோடு, மற்றபோதோடு வாசியற விரோதிநிரஸனத்தையே தொழிலாகக் கொண்டவனாக அவனிருக்கும்போது விரோதிகளைப்பற்றின சிந்தை உங்களுக்கு எதற்கு என்கிறார்.

34. குறிப்பெனக்குக் கோட்டியூர் மேயானையேத்த,
குறிப்பெனக்கு நன்மை பயக்க-வெறுப்பனோ
வேங்கடத்து மேயானை மெய்வினை நோயெய்தாமல்
தாங்கடத்தும் தன்மையான் தாள்.

பதவுரை:— கோட்டியூர் மேயானை ஏத்த குறிப்பு-*திருக்கோட்டியூரில் பொருந்திவாழும் எம்பெருமானைத் துதிப்பதே என் கருத்து;* எனக்கு நன்மை பயக்க குறிப்பு- *எனக்கு நன்மை பிறக்வேண்டுமென்பது என் கருத்து;*(*அப்படியிருக்க*) வேங்கடத்து மேயானை வெறுப்பனோ-*திருவேங்கடத்தெம்பெருமானை ஒதுக்கித்தள்ளுவேனோ?* மெய்வினைநோய் எய்தாமல் தான்கடத்தும் தன்மையான்தாள் வெறுப்பனோ-*சரீரம் காரணமாக வரும் கர்மமும் நோய்களும் அணுகாமல் தானே* (*ரக்ஷகனாக நின்று*) *அகல்விக்கும் தன்மையை உடைய எம்பிரானின் திருவடிகளைவெறுத்து மறப்பேனோ?*

பெரி-அவ-முப்பத்துநாலாம் பாட்டு:— (குறிப்பெனக்கு) "உகந்தருளின தேசங்களிலே எனக்காக அவன் வர்த்திக்க, 'வரில் போகடேன்; கெடில் தேடேன்' என்றிருக்கவோ?" என்கிறார்.

வ்யா:- (குறிப்பித்யாதி) திருக்கோட்டியூரில் எனக்காக ஸந்நிஹிதனானவனை ஏத்தக்கருத்து. (குறிப்பித்யாதி) ஸம்ஶ்லேஷத்தால் வந்த உத்கர்ஷம் பிறக்கக் கருத்து. (வெறுப்பித்யாதி) வந்த ஸம்பத்தை வேண்டாவென்று தள்ளுவனோ? (மெய்யித்யாதி) சரீரமடியாக வந்த வ்யாதியும், வ்யாதிக்கு ஹேதுவான கர்மமும் கிட்டாமல் மாற்றுமவன் திருவடிகளை மறப்பனோ?

திவ்ய- அவ- உதைப்பளவு (*நொடிப்பொழுது*) *போதுபோக்கின்றி வாய்ந்த குணத்தில் ஈடுபடவேண்டும் என்றீர், நீர் அப்படியீடுபட்டிருப்பதுண்டோ? என்ன "எனக்காக திவ்ய தேசங்களில் அவன் வந்து எழுந்தருளியிருக்க, நான் அவனை உபேக்ஷித்திருப்பேனோ?" என்று இப்பாசுரத்தில் பதிலுரைக்கிறார்.*

வ்யா:— (*குறிப்பெனக்குக் கோட்டியூர் மேயானை ஏத்த*) *திருக்கோட்டியூரிலே எனக்காக எழுந்தருளியிருப்பவனை எப்போதும் துதிக்கவேண்டுமென்பதே என் கருத்து.* (*கோட்டியூர் மேயானை*) *என்னைப்பெற மாட்டாமையாலே பரமபதத்திலும் பொருந்தாமல்*

திருக்கோட்டியூரிலே பொருந்தி வாழ்கிறவனை. "மேவியுறைகோயில்" [திருவாய்]என்றாரன்றோ நம்மாழ்வாரும். (குறிப்பெனக்கு நன்மை பயக்க) தனக்கு நன்மையை விரும்பாத சேதனன் உண்டோ? எனக்கு நன்மையை விரும்புகையாலும் நான் எம்பிரானையே இடைவிடாமல் ஏத்துகிறேன். (கோட்டியூர் மேயானை) அவனைப்பார்த்தாலும் இடைவிடாமல் ஏத்தவேணும். (எனக்கு) என்னைப்பார்த்தாலும் ஏத்தவேணும். (நன்மை பயக்க) இச்சேதனனுக்கு நன்மையாவது,—பகவத் ஸம்ச்லேஷத்தால் வந்த பெருமை. அதைப்பெறுவதற்காகவும் ஏத்துகிறேன். (குறிப்பெனக்கு நன்மை பயக்க)

"ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி |
ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர ||

[உன்னை உய்வித்துக் கொள்ளவேண்டுமென உனக்கு விருப்பமிருந்ததாகில், உன் இருப்பில் ஆசையிருந்ததாகில் ஆத்மாவின் அடிமை நிலையையும், ஹரியின் ஸ்வாமி பாவத்தையும், இவற்றின் தன்மையையும் எப்போதும் நினைப்பாயாக.] என்றல்லவோ சொல்லப்பட்டது. (வெறுப்பனோ வேங்கடத்துமேயானை) எனக்காகப் பரமபதத்திலிருந்து திருவேங்கடமலையில் வந்து நிற்பவனை நான் வெறுப்பேனோ? தானே வரும் ஸ்ரீதேவியைக் காலாலுதைப்பாருண்டோ? மெய்வினைநோயெய்தாமல் தான் கடத்தும் தன்மையான் தாள் வெறுப்பனோ) சரீரத்தைப் பற்றிவரும் நோய்களும், நோய்க்குக்காரணமான கர்மங்களும் நம்மை அணுகாமல் தானேநின்று விலக்கியருளுகையை இயற்கையாகக்கொண்டவனுடைய திருவடிகளை வெறுப்பேனோ? ஒரு கணநேரமாகிலும் மறப்பேனோ? (மெய்வினை நோயெய்தாமல் தான் கடத்தும் தன்மையான்) வேங்கடவன் என்னும் இவனுடைய திருநாமமே இவன் மெய்வினைகளைப் போக்கடிப்பவன் என்று அறிவிக்குமே.

"வேங்கடங்கள் மெய்மேல் வினைமுற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்
வேங்கடத்துறை வார்க்கு நமவெனல்
ஆங்கடமை அது சுமந்தார்கட்கே" என்னும்

பாசுரத்தில் நம்மாழ்வார் இவ்வாழ்வாரை அடியொற்றினார். "எனக்கு நன்மை பயக்க" என்றதை "தங்கட்கு நல்லனவே செய்வார்" என்றும் "மெய்வினைநோயெய்தாமல் தாங்கடத்தும்" என்றதை "மெய்மேல்வினை முற்றவும் வேம் கடங்கள் என்றும் அனுவதித்திருப்பதைக் காண்க.

35. தாளாலுலக மளந்த வசைவே கோல்,
வாளாகிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான்
ஐந்தலை வாய் நாகத்தணை.

பதவுரை:— நீள் ஓதம் வந்து அலைக்கும் மா மயிலை மா வல்லி கேணியான்- *பெரிய அலைகள் வந்து அடிக்கிற சிறந்த மயிலைக்கு அடுத்த சிறந்த திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கிறவன்*, ஐந் தலை வாய் நாகத்து அணை வாளா கிடந்தருளும் - *ஐந்து தலைகளையும் வாய்களையுமுடைய திருவநந்தாழ்வானாகிற படுக்கையில் அசையாமல் கிடக்கிறான்*; வாய் திறவான்-பேசவும் இல்லை. தாளால் உலகம் அளந்த அசைவே கோல்- (*இது*) *திருவடியால் உலகம் அளந்த களைப்பினாலேயோ?*

பெரி-அவ- முப்பத்தைந்தாம் பாட்டு. (தாளால்) லௌகிகர் படியைக் கண்டு வெறுப்பனே என்கிறார்.

வ்யா:- (தாளாலித்யாதி) "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்று பிராட்டிகளும் கூசித் தொடவேண்டும் திருவடிகளைக்கொண்டு காடுமேடையுமளந்து திருமேனி அலற்றதோ? இல்லாதத்தை உண்டாக்கும் ஸங்கல்பம் போராதோ உண்டானத்தை உஜ்ஜீவிப்பிக்க? (வாளாவித்தியாதி) ஏகரூபமாகக் கிடப்பதும் செய்து வார்த்தையும் பேசுகிறிலன். (நீளோதமித்யாதி) நீர்க்கரையைப் பற்றிக் கண்வளருகிறதும் ஶ்ரமத்தின் மிகுதியாலேயென்றிருக்கிறார்.

திவ்ய-அவ- முப்பத்தோராம் பாட்டிலே "பெருமானை ஏத்தாத பேய்காள்" என்று லௌகிகர் ஸ்வபாவத்தைக்கண்டு வெறுத்தார். அதன் மேலெழுந்த உக்திப்ரத்யுக்திகளாய்ச் சென்றது சென்ற பாசுரம் வரையில். இப்பாசுரத்தில் "எம்பெருமான் செய்த ஸாஹஸச் செயல்களுக்குப் பரிவதற்கே எனக்குப் போது போராததாயிருக்க, பிறர் தன்மையைக்கண்டு வெறுக்கையாவதென்" என்று எம்பெருமானுக்குப் பரிய முற்படுகிறார்.

வ்யா:— (தாளால் உலகமளந்த அசைவே கொல்) "வடிவிணையில்லா மலர்மகள் மற்றைநிலமகள் பிடிக்கும் மெல்லடியை" [திருவாய் 9–2–10] என்கிறபடியே திருமகள் கரம்தொடச் சிவந்து காட்டும் மென்மையை உடைய திருவடிகளைக்கொண்டு, காடுமேடு பாறை பள்ளங்களையெல்லாமளந்ததினாலே திருமேனி அயர்வுற்றதாலே தான், அசையாமலும், வாய் திறவாமலும் கண்வளர்ந்தருளுகிறாயோ பிரானே! (தாளால்) ஸம்பந்தத்தை மட்டும் பார்த்து எல்லாப் பொருள்களையும் திருவடியாலே தடவிக்கொடுத்து உஜ்ஜீவிப்பிக்க நினைத்தாய் போலும்! "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்। ந ப்ரஹ்மா நேஶாந: நேமே த்யாவாப்ருதிவீ॥" [நாராயணன் ஒருவனே முதலிலிருந்தான். பிரமனுமில்லை; சிவனுமில்லை; கீழுலகங்களும், மேலுலகங்களுமில்லை.] என்கிறபடியே இல்லை என்னலாம் படி கிடந்த பொருள்களை உண்டாக்கிய "பஹு ஸ்யாம்" [நானே பலவாகக் கடவேன்] என்னும் ஸங்கல்பம் போராதோ உண்டானதை உஜ்ஜீவிக்கச் செய்ய? தாளாலே தடவிக்கொடுத்தேயாகவேண்டுமோ? (உலகம்) இக்கொடுவுலகத்திற்கேயோ இப்பாடுபட்டது? (அளந்த அசைவே கொல்) அயர்வறுமமரர்களதிபதியின் அவிகாரமான திருமேனிக்கும் அயர்வுண்டென்று நினைக்கிறார் பரிவின் மிகுதியாலே. அஸ்தாநே பயஶங்கையிருக்கிறபடி. (வாளா கிடந்தருளும்) அசையாமல் கிடந்தருளுகிறான். கிடக்குமழகைக்கண்ட எங்களுக்கு, தாளாலுலகமளந்ததைக் காணாத இழவு தீர, அசையுமழகைக்காட்டுகிறானல்லன். (வாய் திறவான்)

"ஆஶயா யதி வா ராம: புந: ஶப்தாபயேதிதி"

[ராமபிரான மறுபடியும் திரும்பிவந்து 'அழைப்பரோ என்னும் ஆசையாலே (அங்கு நெடுநாள் நின்றேன்)] என்றும், 'ப்ரியவாதீ" என்றும்

"பழுத்த நல்லமுதினின் சாற்றுவெள்ளம்
பாவியேன் மனமகந்தோறு முள்புக்(கு)
அழுத்தநின் சேங்கனிவாயின்கள்வப்
பணிமொழிநினைதோறும் ஆவிவேமால்"

என்றும் சொல்லுகிறபடியே அடியாரை அகப்படுத்தும் வார்த்தைகளையும் சொல்லுகிறிலன்.

(நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான்) நீண்ட கடல், பகவான் உகந்துவாழும் ப்ரதேசமாகையால் தானே தேடிவந்து அலையெறியும் மயிலாப்பூரைச்சேர்ந்த திருவல்லிக்கேணியிலே நித்ய வாஸம் பண்ணுமவன். (நீளோதம்....) தேஹ பரிச்ரமப்பட்டவர்கள் கடற்கரையிலே சாய்ந்து காற்றுவாங்குவதுபோலே, தாளாலுலக மளந்த தளர்த்தி தீரக் கடற்கரையிலே சாய்ந்திருக்கிறான் போலும் என்று நினைக்கிறார். (ஐந்தலைவாய் நாகத்தணை) கரடுமுரடான காடு மேடுகளையளந்த களைப்புத்தீர மெத்தென்ற பஞ்சசயனமாயிருக்கும் ஆதிசேஷனாகிற படுக்கையிலே சாய்ந்தருளினான்போலும்.

"கோடியார் மாடக்கோளூரகத்தும்புளிங்குடியும்
மடியாதின்னே நீ துயில் மேவி மகிழ்ந்ததுதான்
அடியாரல்லல் தவிர்த்த அசைவோ அன்றேலிப்
படிதான் நீண்டு தாவிய அசைவோ பணியாயே"

என்று நம்மாழ்வார் [திருவாய் (8-3-5)ல்] இப்பாசுரத்தை அடியொற்றினார்.

36. நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத்தணை யரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்த னவான்.

பதவுரை:—நாகத்து அணை-திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேலே குடந்தை-திருக்குடந்தையிலும், வெஃகா-திருவெஃகாவிலும், திரு எவ்வுள்-திருவெவ்வுளூரிலும், (அப்படியே) நாகத்து அணை-திருவனந்தாழ்வானாகிற படுக்கையின் மேல், அரங்கம்-திருவரங்கத்திலும், பேர்-திருப்பேர் நகரிலும், அன்பில்—அன்பில் என்னுந் திருப்பதியிலும், (அப்படியே) நாகத்துஅணை-சேஷசயனத்தின் மீது, பால் கடல்-திருப்பாற்கடலிலும், ஆதி நெடுமால்-ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன், கிடக்கும்-பள்ளிகொண்டிருக்கின்றான்; (ஏதுக்காக வென்னில்) அணைப்பார் கருத்தன் ஆவான்-அன்பருடைய நெஞ்சில் புகுந்தவனாக ஆவதற்காக.

பெரி—அவ—முப்பத்தாறும் பாட்டு—(நாகத்தணை) பலவிடத்தில் கண் வளர்ந்தருளுகிறதும் ஆயாஸத்தாலே என்றிருக்கிறார்.

வ்யா:— (நாகத்தணையித்யாதி) திருக்குடந்தையிலே திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறதும், கோயில் தோடக்கமான எல்

லாத்திருப்பதிகளிலும், திருப்பாற்கடலிலும் ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன் தோள்தீண்டியாகக் கண்வளர்ந்தருளுகிறதும், தான் புகுரப்புக்கால் ஆணையிடாதார் ஹ்ருதயத்திலே புகுருகைக்காக. இப்படி அவஸரப்ரதீக்ஷனாக வேண்டுவானேன்னேன்னில்: தாயாகையாலே.

திவ்ய-அவ-இப்படி ஓரிடத்திலேயோ கண்வளர்ந்தது; பலவிடங்களிலும் கண்வளர்ந்தருளியது உலகமளந்த அசைவினாலேயும், ஆசாலேசமுடையார் நெஞ்சிலே புகுவதற்காகவுமே என்கிறார்

வ்யா:—(நாகத்தணைக்குடந்தை......நாகத்தணைப்பாற்கடல் கிடக்கும்) திருக்குடந்தை, காஞ்சியில் திருவெஃகா, திருவெவ்வுளூர், திருவரங்கம், திருப்பேர், திருவன்பில், திருப்பாற்கடல் ஆகிய இந்ததிவ்யதேசங்களிலெல்லாம், ஸம்ஸாரிகளோடு தோள்தீண்டியாக ஸர்வேச்வரன் கண்வளர்ந்திருக்கிறான். எதற்காகக் கண்வளர்ந்தருளுகிறானென்னில்: (அணைப்பார் கருத்தனாவான் கிடக்கும்) 'உன்னை நெஞ்சிலே புகவொட்டோம்' என்னாமல், 'நெஞ்சிலே அணைப்போம்' என்னும் ஆசாலேசமுடையவர்களுடைய நெஞ்சிலே புகுவதற்காகவே இப்படிப் பலவிடங்களில் படுகாடு கிடக்கிறான். இவனிப்படி நெஞ்சிலே புகுவதற்கு ஸமயம் பார்த்து நிற்பதும் எதனாலேயென்னில்: (ஆதி நெடுமால்) உயிர்க்கெல்லாம் தாயாயிருப்பவனாகையாலே யென்கிறார். (ஆதி) தாயைப்போலே காரணபூதனாயிருப்பவன்; ஆதிகாலத்திலே வயிற்றிலேவைத்து நோக்கினவன். (நெடுமால்) தாயைப்போலே பேரன்பு கொண்டவன்.

37. வானுலவு தீவளி மாகடல் மாபொருப்பு
தானுலவு வெங்கதிரும் தண்மதியும்—மேனிலவு
கோண்டல் பெயரும் திசையெட்டுஞ் சூழ்ச்சியும்
அண்டந் திருமா லகைப்பு,

பதவுரை:-வான்-ஆகாசமும்,உலவு-அசைகின்ற,தீ-அக்நியும்,(உலவு) வளி-உலாவுகின்ற வாயுவும், மா கடல்-பெரிய கடலும், மா பொருப்பு-பெரிய குலபர்வதங்களும், உலவு-திரிகின்ற, வெம்கதிர்தானும்-உஷ்ணகிரணனான ஸூர்யனும், தண் மதியும்-குளிர்ந்த சந்திரனும், மேல் நிலவு-மேலே நிலாவுகின்ற, கோண்டல்-மேகங்களும், பெயரும்-சேதந

வர்க்கமும், திசை எட்டும்-எட்டுத்திசைகளும், சூழ்ச்சியும்-ஆவரணங்களும், அண்டம்-ஆகிய இவையெல்லாவற்றோடுங்கூடின அண்டமும், திருமால்-ஸர்வேச்வரனுடைய, அகைப்பு-ஸங்கல்பத்தினாலாயது.

பெரி-அவ-முப்பத்தேழாம் பாட்டு —(வானுலவு) ஆதிநெடுமாலை விவரிக்கிறது.

வ்யா:—(வானுலவு) சூழ்ச்சியும்—ஆவரணமும். இவையெல்லாம் திருமால் அகைப்பு-எழுச்சி; ஸ்ரிய: பதியினுடைய ப்ரயத்னத்தாலே யென்கை.

திவ்ய-அவ-இவனே ஆதிகாரணபூதனோ? என்ன, அருளிச் செய்கிறார்.

வ்யா:-(வான்) ஆகாசமும். (உலவு தீவளி மாகடல்) எப்போதும் அசைந்துகொண்டிருக்கும் வாயு, அக்நி, ஜலம் என்னும் தத்துவங்களும். 'கடல்' என்றது ஜலதத்வம் முழுவதையும் குறிக்கிறது. (மாபொருப்பு) பெரிய குலபர்வதங்களும். இது ப்ருதிவீ தத்வம் முழுவதற்கும் உபலக்ஷணம். (தானுலவு வெங்கதிரும் தண்மதியும்)உலவும்படியான ஸூர்யசந்திரர்கள் தானும். (உலவு) "பீஷோதேதி ஸூர்ய:" என்கிறபடியே அவனிடம் பயத்தாலே சிறிதும் தவறாதபடி ஸஞ்சரிக்கிறபடி. (மேல்நிலவு கொண்டல்) மேலே ஸஞ்சரிக்கும் மேகங்களும் (பெயரும்) சேதனவர்க்கமும். (கொண்டல்பெயரும்) மேகமென்று பெயர்பெற்றவையும் என்றுமாம். (திசையெட்டும்) "திஶஶ்ச நாராயண:" என்கிற எட்டுத் திக்குகளும். (சூழ்ச்சியும்) ஏழு ஆவரணங்களும். (அண்டம்) இவற்றாலான அண்டமும். (திருமால் அகைப்பு) ஸ்ரீமந் நாராயணனுடைய மனவெழுச்சியைப்—ஸங்கல்பத்தைப்—பற்றி நிற்பவை. "திருமால் அகைப்பு" என்றதால் ஸர்வேச்வரன் ஜகத்ஸ்ருஷ்டிசெய்வது பிராட்டியின் முகோல்லாஸத்திற்காகவே என்பதும், ஜகத்ஸ்ருஷ்டியில் பிராட்டிக்கும் ப்ரேரகத்வரூபமான அப்ரதானமான அந்வயம் உண்டென்பதும் உணர்த்தப்படுகின்றன.

38. அகைப்பில் மனிசரை யாறு சமயம்
புகைத்தான் பொருகடல் நீர்வண்ணன்—உகைக்குமேல்
எத்தேவர் வாலாட்டு மெவ்வாறு செய்கையும்
அப்போ தொழியுமழைப்பு.

பதவுரை:—போருகடல் நீர் வண்ணன்-அலையெறிகின்ற கடல்நீர் போன்றதிருநிறத்தையுடையவனான ஸர்வேச்வரன், அகைப்பு இல் மனிசரை-அறிவுச்சிறப்பில்லாத மனிசரை, ஆறு சமயம்-(நீசங்களான) ஆறு மதங்களில், புகைத்தான்-அகப்படச் செய்தான்; உகைக்கும் ஏல்-உதாஸீநனாயிருந்துவிடும் பக்ஷத்தில், அப்போது-அப்போதே, எத் தேவர் வாலாட்டும்-எந்த தேவர்களுடையவும் அஹங்காரமும், எவ் வாறுசெய்கையும்-அவர்கட்கு ஆராதனமான எவ்விதமான (யஜ்ஞம் முதலிய) காரியங்களும், அழைப்பு-யஜ்ஞங்களில் (தேவதைகளின்) ஆஹ்வாநமும், ஒழியும்-ஒழிந்துபோய் விடும்.

பெரி-வ்யா- முப்பத்தெட்டாம் பாட்டு- (அகைப்பில்மனிசரை) எழுச்சியில்லாதமனிசரை; அளவில்லாதவரை என்கை. (ஆறுசமயமித்யாதி) க்ஷுத்ரபதார்த்தங்களை அகப்படுத்தப் புகைக்குமாப்போலே பாஹ்ய ஸமயங்களைக் காட்டி அகப்படுத்தினான் ஸர்வேச்வரன். (உகைக்கு மேலித்யாதி) நெகிழநிற்குமேல், தேவதாந்தரங்கள் "ईश्वरोऽहं" (ஈச்வரோஹம்) என்று க்ஷுத்ரஜந்துக்கள் வாலாட்டுமாபோலே பண்ணும் அபிமாநமும், அத்தேவதைகளை ஆச்ரயிக்கைக்காகப் பண்ணும் வ்யாபாரமாகிற காட்டழைப்பும் அவன் நெகிழ்ந்தபோது ஒழியும்—முடியும்.

திவ்ய-அவ:—"எல்லாம் ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தைப் பற்றிநிற்கின்றனவாகையாலே அவனே ஆதியாவான் என்றீர். பிரமன் ஸ்ருஷ்டியைச் செய்கிறானென்றும், புராரியானவன் ஸம்ஹாரத்தைச் செய்கிறானென்றும், ஒவ்வொரு தேவதையும் ஒவ்வொரு அருஞ் செயல்களைச் செய்வதாகவும் லோகவேதங்களில் ப்ரஸித்தியுள்ளதே. அவர்களும் காரணபூதராகார்களோ" என்ன, 'அவன் அந்தர்யாமியா யில்லாவிடில், அவர்களுக்கு நீங்கள் சொல்லும் பெருமைகளெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் அழிந்தொழியும்' என்கிறார்.

வ்யா:—(அகைப்பில் மனிசரை) எவ்வளவு உபதேசித்தாலும் புத்தியில் கொள்ளமாட்டாத புல்லறிவாளர்களான உங்களைப்போன்ற ஜீவர்களை. அகைப்பு—எழுச்சி; அறிவில் மேம்பாடு. (அகைப்பில் மனி சரை) அறிவில் சிறப்பில்லாத ஜீவர்களை என்றபடி. (பெரிய) அளவு டைய புத்தியற்றவர்கள் என்கை. (ஆறுசமயம் புகைத்தான்) ஆறு மதங்களிலும் அகப்படும்படியாகச் செய்தான். (ஆறு சமயம்) சாக்கி

யர், உலூக்கியர், அக்ஷபாதர், க்ஷபணர், கபிலர், பதஞ்ஜலி எனப்படுபவரால் ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட மதங்கள். (புகைத்தான்) காட்டில் புதர்களிலே ஒளிந்துகிடக்கும் ப்ராணிகளைப் பிடிப்பதற்காக, வேடர்கள் கூளங்களையிட்டுப் புகைத்து அவைகளை வெளிவரச்செய்து, அவற்றை அகப்படுத்துவதுபோலே புறச்சமயங்களாகிற புகையையிட்டு ஸம்ஸாரமாகிற வலையிலே அகப்படச் செய்தான். (அகைப்பில்........ புகைத்தான்) புகையிலே அகப்பட்டார்க்கு வழிதெரிய வழியுண்டோ? அதனாலேயே எவ்வளவு சொல்லியும் நீங்கள் தேவதாந்தரபாத்வஸங்காக்ரஸ்தராகவேயுள்ளீர்கள்.

(பொருகடல் நீர்வண்ணன் உகைக்குமேல்) கண்டார் கண்களெல்லாம் குளிரும்படியான திருநிறத்தையுடைய ஸர்வேச்வரன் உபேக்ஷித்தானாகில். வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றையெல்லாம் அளிக்கும் கடல்போன்ற தன்மையை உடையவன் உபேக்ஷிக்க ப்ரஸக்தியில்லை ஒருக்கால் நீர் நெருப்பாகமாறி, உபேக்ஷித்தானாகில். (எத்தேவர் வாலாட்டும் ஒழியும்) எல்லாத் தேவர்களுடைய அபிமானமும் ஒழியும். (வாலாட்டும்) நாய்கள் தங்கள் அபிமானம்தோற்ற வாலாட்டுவதுண்டாகையாலே, இங்கு 'வாலாட்டு' என்னும் பதம் அபிமானத்தைக் குறிக்கிறது. இத்தேவதைகளும் "ஈச்வரோऽஹம்" [நானே ஈச்வரன்] என்று அபிமானத்தன்றோ விருப்பது. (எவ்வாறு அழைப்புச் செய்கையும் ஒழியும்) அத்தேவதைகளை ஆச்ரயிப்பதற்காக "இந்த்ராய ஸ்வாஹா, வருணாய ஸ்வாஹா" என்றும், "இந்த்ரமாவாஹயாமி, ஸோமமாவாஹயாமி" என்றும் அவர்கள் முகம் காட்டுவதற்காகச் செய்யும் அழைப்புகளும் ஒழியும். அன்றிக்கே, (எவ்வாறு செய்கையும் ஒழியும்) நீங்கள் அவர்களை ஆராதிக்கச் செய்யும் யஜ்ஞாதிகளும் ஒழியும். (அழைப்பு ஒழியும்) ஹவிர்ப்பாகம் வாங்கிக்கொள்ள நீங்கள் "ஸ்வாஹா" என்று அழைக்கும் அழைப்பும் ஒழியும். அன்றிக்கே, (எத்தேவர் வாலாட்டும் எவ்வாறு செய்கையும், அழைப்பு மொழியும்) அவர்களுடைய அபிமானமும், அவர்கள் செய்யும் த்ரிபுர தஹநாதி காரியங்களும், அவர்களை ஆச்ரயிக்கைக்கு நீங்கள் செய்யும் அழைப்புக்களும் அழிந்துபடும். அவர்களுடைய ஸத்தையோடு, உங்களுடைய ஸத்தையோடு வாசியற அழியும் என்றபடி. (அப்போது

ஒழியும்) காலாந்தரத்திலேயன்றிக்கே, அவன் உபேக்ஷித்த க்ஷணத்திலேயே அழிந்தொழியும்.

"ந ததஸ்தி விநா யத் ஸ்யாந் மயா பூதம் சராசரம்"

[அசைவனவும், அசையாதனவுமான பொருள் எதுவும் என்னைப் பிரிந்தால் இல்லையாம்] என்று தானே கீதையில் அருளிச் செய்தானன்றோ.

39. அழைப்பன் திருவேங்கடத் தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பே
ரருவி மணிவரன்றி வந்திழிய யானை
வெருவி யரவொடுங்கும் வெற்பு.

பதவுரை:—திருவேங்கடத்தானை-திருவேங்கடமுடையானை, காண-கண்ணால் ஸேவிக்க, அழைப்பன்-வாய்விட்டுக்கூப்பிடா நின்றேன்; மழை மழைகாலத்தில், பேர் அருவி - பெரிய அருவிகளானவை, மணி - (அங்குமிங்கும் கிடக்கிற) ரத்னங்களை, வரன்றி வந்து இழிய-திரட்டிக் கொண்டுவந்து விழ (அந்த ரத்னங்களின் ஒளியைக்கண்டு அக்நி ஜ்வாலைகளாக ப்ரமித்து) யானை-யானைகளானவை, வெருவி- பயப்பட்டு நிற்கவும், அரவு-மலைப்பாம்புகளானவை, ஒடுங்கும்-(அந்த ரத்னங்களை மின்னலாக மயங்கி) புற்றிலே சென்று மறையவும் பெற்ற, வெற்பு-திருமலையை, கூட-சென்று கூடவேணுமென்று, திருக்கூடல் இழைப்பன்-கூடலிழைக்கின்றேன்.

பெரி—வ்யா—முப்பத்தோன்பதாம்பாட்டு— (அழைப்பன்) போக மோக்ஷத்துக்கோ வென்னில்—(காண). (இழைப்பனித்யாதி) மழையிலே பெரிய அருவிகள் ரத்நங்களைக் கொண்டுவந்திழிய, ரத்நதீப்தியை ஆனை அக்னியென்றும், ஸர்ப்பம் மின்னேன்றும் பயப்பட்டு ஒதுங்கும் திருமலை. அன்றிக்கே, நெருப்புக்கு பயப்பட்டு ஆனை மலைப்பாம்பின் வாயிலே புக்கு ஒடுங்கும் என்றுமாம். இப்படிக்கொத்த திருமலையைக் கூட இழைப்பன் திருக்கூடல் என்று அந்வயம்.

திவ்ய—அவ—மறுபடியும் பரோபதேசத்திலிருந்து கைவாங்கி, திருவேங்கடமலையையும், அங்கு நிற்கும் பெருமானையும் பல பாசுரங்களாலே அனுபவிக்க இழிகிறார். இவருக்குப் பரோபதேசமும், ஸ்வாநுபவமும் மாறிமாறிச் செல்கிறபடி.

வ்யா:—(அழைப்பன் திருவேங்கடத்தானை) திருவேங்கடமலையில் எம்பிரானை அழைப்பேன். 'நீர் அழைப்பது எங்களைப்போல தநதாந்ய புத்ரகளத்ராதி போகங்களைப் பெறுவதற்கோ, அல்லது ஞானிகளைப் போலே மோக்ஷத்தை அடைவதற்கோ, என்ன, (காண) இரண்டுக்கு மன்று. அவனைக் கண்ணால் கண்டு அநுபவிக்கைக்காகவே கூப்பிடா நின்றேன். "கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாமே இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்" என்றாப்போலே இங்கு இப் போதே காணவேணுமென்னும் ஆசையுடையேனாயிருக்கும்போது, தேசாந்தரத்திலே, காலாந்தரத்திலே மோக்ஷத்தை விரும்ப இடமேது? மோக்ஷமே இப்பாடுபடும்போது போகத்தை விரும்புகையாகிற பேச்சே யில்லை. (இழைப்பன் திருக்கூடல்கூட) கூடுவதற்காகத் திருக்கூட லிழைப்பேன். கூடலிழைத்தலாவது,—"வட்டமாகக் கோட்டைக்கீறி, அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து, இரண்டிரண்டு சுழி யாகக் கூட்டினால், இரட்டைப்பட்டால் கூடுகை, ஒற்றைப்பட்டால் கூடாமை என்று ஸங்கேதம்" [நாய்ச்சியார் திருமொழி-4-அரும் பதம்] என்பர். தங்கள் இஷ்டம் ஸித்திக்குமோ என்பதற்காகப் பார்க் கும் சகுனங்களில் இதுஒரு வகையாகும். நாய்ச்சியார் திருமொழி யில் நாலாம் திருமொழி காண்க. எதைக்கூடத் திருக்கூடலிழைப்பது என்ன, திருவேங்கடமலையைக் கூட என்று அருளிச்செய்கிறார் பின் னடிகளாலே—(மழைப்பேரருவி மணிவரன்றி வந்திழிய யானைவெருவி அரவொடுங்கும் வெற்பு கூடத்திருக்கூடல் இழைப்பன்) மழை காலத் தில் பெரிய அருவிகள் ரத்நங்களை அடித்துக்கொண்டு வந்து விழ, அந்த ரத்னங்களின் ஒளியை யானை கொள்ளிக்கட்டையினொளியென் றும், பாம்பு மின்னலென்றும் கண்டுபயப்பட்டு ஒதுங்கும்படியான திரு மலை. யானைகள் கொள்ளிக்கட்டைக்கும், மலைப்பாம்புகள் மின்னலுக் கும் பயப்படும் என்பது ப்ரஸித்தம். அன்றிக்கே, மழைப்பேரருவி மணிகளைக்கொண்டுவந்துவிழ, அதைக் கொள்ளியாகக் கொண்டுயானை பயப்பட்டு மலைப்பாம்பின்வாயை மலைக்குகையாக நினைத்து அதிலே விழும்மலை என்றும் கொள்ளலாம். "கரியமாமுகில் படலங்கள் கிடந் தவை முழங்கிடக் களிறென்று பெரியமாசுணம் வரையெனப் பெயர் தருபிரிதி" [பெரிய திரு1-3-10] என்ற பாசுரத்திலெடுத்ததோரை திவ்யத்தில் யானைகளை விழுங்கும் மலைப்பாம்புகளும் உண்டென்று அருளிச்செய்திருப்பது அநுஸந்திக்கத் தக்கது.

40. வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டிகேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன் காண்.

பதவுரை:-வெற்பு என்று-பலமலைகளையும் சொல்லிவருகிறபோது, வேங்கடம் பாடினேன்-திருமலையையும் பாடினேன்; (இச்சொல்லாலேயே) வீடு ஆக்கி நிற்கின்றேன்,-மோக்ஷம் நமக்கு நிச்சயம் என்னும்படியாக நின்றேன்; நின்று நினைக்கின்றேன்-'நாம் சொன்ன ஒரு சிறிய சொல்லுக்குப் பெரிய பேறு கிடைத்த பாக்கியம் என்னே!' என்று நினைத்து ஆராய்கின்றேன்; கற்கின்ற-ஓதப்படுகிற, நூல்-வேதங்களாகிற சாஸ்த்ரங்களில், வலையில் பட்டிருந்த-வலையினுள் அகப்பட்டிருப்பது போல் நிலைபேராமல் நிற்கின்ற, நூலாட்டி கேள்வனார்-லக்ஷ்மீ நாதனான எம்பெருமானுடைய, கால் வலையில் பட்டிருந்தேன்-திருவடிகளாகிற வலையிலகப்பட்டுநிலையாக இருந்தேன்!.

பெரி-வ்யா:—நாற்பதாம்பாட்டு:- (வெற்பித்யாதி) விசேஷித்து ஒன்று செய்ததில்லை; அல்லாத மலைகளைச் சொல்லுகிறவோபாதியித்தைச் சொல்லத்திருமலையாயிற்று. (வீடாக்கி நிற்கின்றேன்) அநேக யத்நத்தாலே பெறும் மோக்ஷத்தை இச்சொல்லாலே உண்டாக்கிக்கொண்டு நின்றேழிந்தேன். (நின்று நினைக்கின்றேன்) எது சொல்லிற்று எது பற்றிற்றென்று விசாரியா நின்றேன். (கற்கின்ற வித்யாதி) ஓதப்படுகிற வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற பெரிய பிராட்டியார்க்கு வல்லபனானவன் திருவடிகளாகிற வலையிலகப்பட்டிருந்தேன்.

திவ்ய-அவ:—செய்த காரியம் மிகச்சிறிது; பெற்றபலனோ மிகப் பெரிது என்கிறார்.

வ்யா:—(வெற்பென்று வேங்கடம் பாடினேன்) விசேஷமாக ஒரு ஸாதநாநுஷ்டானம் செய்தேனல்லன்; "கொச்சிமலை, குடகுமலை, இமயமலை" என்றாப்போலே மலைத்தொடர்களின் பெயர்களைச்சொல்லி வரும்போது யாத்ருச்சிகமாக என்னையுமறியாமல் திருவேங்கடமலையென்றும் சொல்லிவைத்தேன். இதை எம்பெருமான் திருவேங்கடத்தைப்பாடியதாகக் கணக்கிட்டு வைத்தான். ஆகவே, நானும் வேங்கடம்பாடினவனானேன். (வீடாக்கி நிற்கின்றேன்) பெற்றபலனோ பரம புருஷார்த்தமாயிரா நின்றது.

"யந்ந தேவா ந முநயோ ந சாஹம் ந ச ஸங்கர: |
ஜாநந்தி பரமேஸஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம் ||"

[பரமேசனான விஷ்ணுவினுடைய பரமபதத்தை தேவர்களும் முனிவர்களும், (பிரமனாகிய) நானும், சங்கரனும் அறியமாட்டோம்] என்று விஷ்ணு புராணத்திலும்,

"அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: |
ஸ்வயைவ ப்ரபயா ராஜாந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை: ||

[மஹாத்மாவான விஷ்ணுவினுடைய அவ்விருப்பிடம் சூரியனையும், அக்னியையும் விஞ்சிய ஒளியையுடையது. தன் ஒளியாலே தேவாசுரர்களும் காணவொண்ணாதது] என்று பாரதத்திலும் சொல்லியபடி பெரும்பெரும் தவங்களையனுஷடிப்பாரும் அடையவரிதான மோக்ஷ புருஷார்த்தத்தை எனக்காக்கிவைத்துக்கொண்டு நின்றேன் வேங்கடம் பாடிய அக்கணத்திலேயே. (நின்று நினைக்கின்றேன்) "வரவாறொன் றில்லையால் வாழ்வினிதால்" [பெரியதிரு 59] என்றாப்போலே ஆராய் கின்றேன். நாம்சொன்னதோ ஒருக்தி மாத்ரம். பெற்றபலனோ மிகப் பெரிது; இதெங்ஙனே கூடியது என்று தீவிரமாக ஆராய்ச்சி செய்தேன். (நின்று நினைக்கின்றேன்) "சஞ்சலம் ஹி மந:" [கீதை] [மனம் மிகச்சஞ்சலமானது] என்றும், "நின்றவாநில்லா நெஞ்சு" [பெரியதிருமொழி1-1-4] என்றும் சொல்லப்படும் நெஞ்சையும் நிலை நிறுத்தி ஆராய்ந்தேன் என்னுதல்; நினைந்து நின்றேன் என்னுதல்; அதாவது:—இதை நினைத்து, இதொரு ஆச்சரியமிருந்தபடியென்! என்று ஸ்தப்தனாயிரா நின்றேனென்கை.

இப்படி ஆராய்ந்தவுடன் புருஷகாரபூதையான பிராட்டியி னுடையவும் பரமதயாளுவான பரமபுருஷனுடையவும் நிர்ஹேதுக க்ருபையாலேயே இது நிகழ்ந்ததென்றறிந்து அவர்களிடத்திலே ஈடு பட்டுநின்றேனென்கிறார் மேல். (கற்கின்ற நூல் வலையில் பட்டிருந்த ....கேள்வனார்) ஓதப்படுகின்ற வேதமாகிற வலையிலே அகப்பட்டு வெளி வரவொண்ணாதபடி கிடக்கிற லக்ஷ்மீநாதன். வலையாகில் பலநூல்க ளாலே பின்னப்பட்டிருக்குமே என்ன,—(நூல்வலையில்) இதுவும் நூல்வலையே என்கிறார். கயிறுகளால் பின்னப்பட்ட வலை என்று த்வனி. வேதமாகிற வலை என்று அர்த்தம். வேதத்தை வலையாகவும்,

அதில் தப்பவொண்ணுதபடி அகப்பட்டுக்கிடப்பவனுக ஸர்வேச்வரனை யும் சொல்லுகையாலே, வேதப்ரதிபாத்யான பரப்ரஹ்மம் நாரா யணனே என்பதை அசைக்கமுடியாது என்றதாயிற்று. (நூலாட்டி) நூலை ஆள்பவள். அதாவது அவனைப்போலே தானும் ஸ்ரீஸூக்தாதி வேதபாகங்களாலே சொல்லப்படுபவள் என்கை. "வேதைச்ச ஸர்வை-ரஹமேவ வேத்ய:"[வேதங்கள் முழுவதாலும் நானொருவனே அறியப் படுபவன்] என்ற அவனைப்போலே தானும் வேதங்கள் அனைத்தாலும் அறிவிக்கப்படுபவள் என்றுமாம். ஸர்வவேதப்ரதிபாத்யத்வம் பர ப்ரஹ்மபூதனுன ஸர்வேச்வரனுக்குண்டேயொழிய இப்பிராட்டிக் குண்டோவெனில்: உண்டு. கடம் என்றால் கடத்வஜாதியும் தன் னடையே சொல்லப்பட்டதாவதுபோலே பரமபுருஷனைச் சொன்னுல், அவனுக்கு ஸ்வரூபநிரூபகபூதையான இப்பிராட்டியையும் சொன் னதேயாகும். "எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியை யும் சொல்லிற்றும்" என்று எம்பெருமானுர் அருளிச்செய்ததாக ஸ்ரீவேதாந்ததேசிகர் ரஹஸ்யத்ரயஸாரத்திலே எடுத்த வார்த்தைக்கும் இதுவே கருத்து. "மியேஜகிலேர் மாணை:" [எல்லாப் பிரமாணங்க ளாலும் அளக்கப்படுகிறேன்] என்று பிராட்டியும் லக்ஷ்மீதந்த்ரத்திலே அருளினுள்.

"ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத்தெவ்வெவையும்
சாதுவாய் நின்புகழின் தகையல்லால்பிறிதில்லை
பூவின்மேல் மாதுவாழ்மார்பினுய்" என்று

நம்மாழ்வாரும் இவ்வரும்பொருளையே அறிவுறுத்தினுர். ஸகலவேதங் களிலும் ஸர்வசிதசித்வஸ்துக்களுக்கு விசேஷ்யனுகச் சொல்லப்படுப வன் அவன். அவனுக்கு அந்தரங்க விசேஷணமாகச் சொல்லப்படு பவள் அவள். அவளைச்சொன்னுல் அவனைச் சொன்னதாகும்; அவனைச்சொன்னுல் அவளைச்சொன்னதாகும். இதையே (கற்கின்ற நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனுர்) என்கிறுர் ஆழ்வார். (நூலாட்டி) புருஷகாரபூதையான அவளுடைய கருணையாலன்றே இப்பேறு ஸித்தித்தது என்று பாவம். (கேள்வனுர்) "தாமரையா ளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்னும் அவனுடைய கருணையால இதுநிகழ்ந்ததே யொழிய என்னுலானதொன்றுமில்லை யென்கை. (நூலாட்டி கேள்வ

னர் கால்வலையில் பட்டிருந்தேன் காண்) இப்படி ஆராய்ந்தவுடன் ஒருவருக்கொருவர் நான்முந்தி நான்முந்தியென்று ரக்ஷிக்கும் திவ்ய தம்பதிகளின் திருவடிகளாகிற வலையிலே நான் அகப்பட்டு நின்றேன்.

41. காண லுறுகின்றேன் கல்லருவி முத்துதிர
ஓண விழவி லொலியதிர—பேணி
வருவேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய்
திருவேங்கட மதனைச் சென்று.

பதவுரை:— கல் அருவி-ஒலிக்கின்ற அருவிகளின் மூலமாக, முத்து உதிர-முத்துக்கள் உதிரப்பெற்றதாய், ஓணம் விழவில்-திருவோணத்திருநாளில், ஒலி அதிர-மங்களசாஸந த்வநி அதிரப்பெற்றதாய், பேணி வரு-(பக்தர்கள்) விரும்பிவந்து சேரப்பெற்றதான, வேங்கடவா-திருவேங்கடமலையை இருப்பிடமாகவுடையவனே! என் உள்ளம் புகுந்தாய்—நீ என் நெஞ்சிலே புகுந்து விட்டாய்; (நீ திருமலையை விட்டு என்னுள்ளத்திலே வந்துவிட்டாலும்) திருவேங்கடம் அதனை சென்று காணல் உறுகின்றேன்-நான் அத்திருமலையிற்சென்று ஸேவிக்க விருப்பம் கொண்டிருக்கிறேன்.

பெரி-வ்யா:—நாற்பத்தோராம் பாட்டு:-(கல்லருவியித்யாதி) ஒலியையுடைய அருவிகளிலே முத்துதிர, திருவோண நக்ஷத்ரமாகிற மஹாதிவஸத்திலே அநுகூலருடைய மங்களாசாஸநத்தாலே வந்த த்வநி மிக ப்ராப்யதயா வந்து ஆச்ரயிக்கப்படும் திருமலையையுடைய நீ என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்தாய். நான் திருமலையை யடைந்து காண லுறுகின்றேன்.

திவ்ய-அவ:—என் நெஞ்சிலே அந்தர்யாமியாய் நிற்கும் நிலையிலும் திருவேங்கடமலையில் நிற்கும் நிலை அதிவிலக்ஷணமாயிருக்கையாலே, அங்கு சென்றுகாண ஆசைப்படுகிறேனென்று திருமலையின் பெருமையைப்பேசுகிறார். "கல்லும் கனைகடலும் வைகுந்தவானாடும் புல்லென்றொழிந்தன கொல்....அடியேனதுள்ளத்தகம்" [பெரியதிருவ68][கல்—திருமலை] "நிற்பதும் ஓர் வெற்பகத்து" [திருச்சந்த-65] என்கிறபடியே அவன் திருமலையைவிட்டு இவர் உள்ளத்துக்கு வர ஆசைப்படுவது போலே, இவர் உள்ளத்திருப்பை விட்டு அங்கேகாண ஆசைப்படுகிற்படி. "இளங்கோயில் கைவிடேல்" [பெரிய திருவ] என்று ப்ரார்த்தித்தவருமுண்டன்றோ.

வ்யா:—(கல்லருவி முத்துதிர) சப்தம் செய்கின்ற அருவியி லிருந்து முத்துக்கள் உதிரும்படியாகவும். (கல் அருவி) 'கல்' என்று சப்திக்கும் அருவி. திருமலையிலுள்ள அருவிகள் சப்திப்பதும் உத்தேச்யமாகா நின்றது. அன்றிக்கே 'கல்' என்று மலையாய் மலையருவி யென்றுமாம். (ஓணவிழவில் ஒலியதிர) திருவோணத்திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி அரியையழித்தவனைப் பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பெரியாழ்வாரைப்போன்ற ப்ரேமஸ்வபாவர்கள் பாடும் ஒலியானது மிகுதியாக முழங்கவும். (ஓண விழவில் ஒலியதிர, கல்லருவி முத்துதிர)பல்லாண்டுபாடுமிப்பேரொலி யானது கல்லையுமுருக்கிக் கண்ணீரையும் வரவழைப்பதுபோலே இராநின்றது. (பேணிவருவேங்கடவா) இப்படி மங்களாசாஸனம் மிக்கிருக்கும் தேசமாகையாலும், அசேதனங்களும் சேதநஸமாதியை யடைந்து ஈடுபடும் தேசமாகையாலும் பல்லாண்டுபாடுவார் பலர் இப் பர்வதமே பரமப்ராப்யமென்று நினைத்து வரும்படியான திருவேங்கட மலையிலே எழுந்தருளியிருப்பவனே! (என்னுள்ளம் புகுந்தாய்) வேங் கடமலையிலே ஸாதநாநுஷ்டானம் செய்யும் நீ, ஸாத்யமாகிற என் நெஞ்சைப் பெற்றவுடன் அத்தைவிட்டு இதிலே புகுந்தாய். (திரு வேங்கடமதனைச் சென்று காணலுறுகின்றேன்) நானோவெனில் என் நெஞ்சைக்காட்டிலும் மிகவிலக்ஷணமாயுள்ள திருவேங்கடமலையிலேயே உன்னைக்காண ஆசைப்படுகிறேன். நெஞ்சைக்காட்டிலும் திருவேங் கடமலைக்குள்ள வைலக்ஷண்யமென்னென்னில்: (என் நெஞ்சம்—திரு வேங்கடம்) பாவங்களுக்கெல்லாம் உத்பத்திஸ்தானமாயிருப்பது என் நெஞ்சம்.

" வேம் கடங்கள் மெய்மேல் வினை முற்றவும் "

[திருவாய் 3-3-6] என்கிறபடியே பாவங்களைப் போக்கடிப்பது வேங் கடம். (கல்லருவி முத்துதிர) ரத்தம் அருவிபோல் சொரியும் அழுக் குப்படிந்த என் கல் நெஞ்சம் போலன்றியே கல்லுமுருகிக் கண்ணீர் முத்துக்களைப் பொழியுமிடம் வேங்கடம். (ஓண விழவில் ஒலியதிர) பல்லாண்டுபாடுவார் நெருங்கமுடியாத என் நெஞ்சம் போலன்றியே திருவோணத்திருவிழவில் பல்லாண்டு பாடுமொலி பெருகியிருக்கு மிடம். (பேணிவருவேங்கடவா) ஸுலபமாகப் பருகமுடியாத பூகத ஜலம் போலிருக்கும் நெஞ்சத்திருப்பைப் போலல்லாமல், ஆற்றுவெள்

ளத்தில் தேங்கின மடுப்போலே அதிஸுலபமாகச் சென்று ஆச்ரயிக்கும் படியாயிருப்பது வேங்கடம். (வேங்கடவா) வாத்ஸல்ய குணம் ஒன்று மட்டும் பிரகாசிக்கும் அந்தர்யாமிநிலையைப் போலன்றிக்கே, பரத்வ, ஸௌலப்ய, ஸௌசீல்ய வாத்ஸல்யாதி ஸர்வ கல்யாண குணங்களும் வாநரர்களோடு, நரர்களோடு, அயர்வறுமமரர்களோடு வாசியற அனைவர்க்கும் வெளிப்பட்டு நிற்குமிடம் வேங்கடம். (என்னுள்ளம் புகுந்தாய் திருவேங்கடமதனைச் சென்று காணலுறுகின்றேன்) சேதநலாபம் ஈச்வரனுக்காகையாலே அவன் இவருள்ளத்தை ஆசைப்படுகிறான். தன்னை அயோக்யனென்று அநுஸந்திக்கையாலே இவர் வேங்கடத்திலேயே அவனைக் காணவிரும்புகிறார்.

42. சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்—என்றும்
கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும்
அடிக்கமல மிட்டேத்து மங்கு.

பதவுரை:— சேண் உயர் வேங்கடத்தை-மிகவும் ஓங்கின (சிகரத்தையுடைய) திருமலையை, சென்று வணங்குமின்-சென்று வணங்குங்கோள்; (அத்திருமலையானது) நீர்மையால்-தன ஸ்வபாவத்தினால், நின்று வினை கெடுக்கும்-பாவங்களைப்போக்குவதில் நிலை நின்றிருக்கும்; அங்கு-அத்திருமலையில், கடி கமலம் நான்முகனும்-பரிமளம் மிக்க தாமரையிற் பிறந்தவனான பிரமனும், கண் மூன்றத்தானும்-முக்கண்ணனான சிவபிரானும், என்றும்-எக்காலத்தும், அடி- (எம்பெருமானது) திருவடிகளிலே, கமலம்-தாமரைப் புஷ்பங்களை, இட்டு-ஸமர்ப்பித்து, ஏத்தும்-துதித்துக்கொண்டிருப்பார்கள்.

பெரி—வ்யா:— நாற்பத்திரண்டாம்பாட்டு:— (சென்றித்யாதி) "சென்னியோங்கு தண்திருவேங்கடம்" என்னும்படியே புறப்பட்டவாறே கண்டுக்லேசம்தீரும்படியாக ஆகாசாவகாசமடங்க விழுங்கும்படி உயர்ந்த சிகரங்களையுடைய திருமலையைச்சென்று வணங்குங்கோள். (நீர்மையால் நின்று வினைகெடுக்கும்) விரோதியான பாபத்தைத் திருமலை தன் ஸ்வபாவத்தாலே நசிப்பிக்கும். (கடிக்கமலமித்யாதி) ப்ரயோஜநாந்தரபரரும் தங்கள் அதிகாரம் பெறுவது இத்திருமலையிலே அவனைஆச்ரயித்து.

திருநாபிகமலத்திலே அவ்யவதாநேந பிறந்த சதுர்முகனும் லலாடநேத்ரனும் அவன் திருவடிகளைப் புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டாச்ரயித்து.

திவ்ய-அவ:—"இஷ்டப்ராப்தியும் அநிஷ்டநிவ்ருத்தியும் அன்றோ நமக்கு வேண்டுவது? திருவேங்கடயாத்திரை செய்துகொண்டிருந்தால் அவை ஸித்திக்குமோ?" என்று சிலர் கேட்க, "மலையிலேறி அப்பனை ஸேவிக்கவேண்டுமென்பதுமில்லை; அருகே சென்று மலையை வணங்கினாலும் போதுமானது; அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் தன்னடையே ஸித்திக்கும்" என்கிறார்.

வ்யா:—(சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை) அளவிலும் புகழிலும் மிகவுயர்ந்த வேங்கடத்தைச் சென்று வணங்குங்கள். (சேணுயர் வேங்கடத்தை) நீங்கள் இதை வணங்குவதற்காக வெகு தூரம் நடக்கவும் வேண்டா; "சென்னியோங்குதண் திருவேங்கடம்" [பெரியாழ்-திரு 5-4-1] என்கிறபடியே நீங்கள் உங்கள் ஊரிலிருந்து புறப்படும்போதே உங்களுக்குப் புலப்பட்டுப் பாபங்களையெல்லாம் போக்கும்படியாக ஆகாசப்பரப்பு முழுவதையும் அடைத்துக்கொண்டு மிகவுயர்ந்து விளங்குவதன்றோ இது என்கிறார். (நின்று வினைகெடுக்கும் நீர்மையால்) "வேங்கடம்" [வினைகளை வேகவைத் தழிப்பது] என்று இதையே நிரூபகமாகப் பெற்றிருக்கையாலே இது இயற்கையாகவே பாவங்களைப் போக்கடிக்கும் தன்மையை உடையது. ஆகையாலே அநிஷ்டநிவ்ருத்தியை நினைத்து அஞ்சவேண்டாவென்கை. இஷ்டப்ராப்திக்கென்செய்வதென்னில்,—நீங்கள் பலப்ரதராக நினைத்திருக்கும் ப்ரஹ்மருத்ராதிகளும் தங்கள் பதங்களைப் பெற்றுச்செல்வது அத்திருமலையிலே அவனை வணங்குவதன் மூலமேயாகுமென்கிறார் அடுத்தபடியாக; (என்றும்) இது ஏதேனுமொரு காலத்திலன்று; எப்போதும் இப்படியே நடந்துபோருகிறதென்கிறார். (கடிக்கமல நான்முகனும்) "ஸர்வகந்த:" எனப்படும் வஸ்து விலிருந்து தோன்றியதாகையாலே மணங்கமழும்படியான உந்தித்தாமரையிலே அமர்ந்துள்ள நான்முகனும். (கண்மூன்றத்தானும்) பெரிய ஞானசக்தியுடையவன் என்பது தோற்ற மூன்று கண்களை தரித்துநிற்கும் முக்கண்ண

னை சிவனும். (அடி கமலம் இட்டேத்துமங்கு) இவர்களிருவரும் அத்திருமலையிலேயே அவனுடைய திருவடிகளில் தாமரை முதலிய பூக்களாலே அர்ச்சனைசெய்து அவனைத்துதித்துத் தங்கள் பதங்களைப் பெற்றுப்போவர்கள். ஆகையால் இஷ்டப்ராப்தியைக் குறித்தும் சிந்திக்கவேண்டா என்று கருத்து.

43. மங்குல்தோய் சென்னி வடவேங்கடத்தானை
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான்—திங்கள்
சடையேற வைத்தானும் தாமரை மேலானும்
குடையேறத் தாம்குவித்துக் கொண்டு.

பதவுரை:—மங்குல்தோய் சென்னி-மேகமண்டலத்தளவுஞ்சென்று கிட்டியிருக்கிற சிகரத்தையுடைத்தான, வடவேங்கடத்தானை-வடதிரு வேங்கடமலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு, காப்பு அணிவான்-திருவந்திக்காப்பிடுவதற்காக, திங்கள் சடை ஏற வைத்தானும்-சந்திரனைச் சடையிலே ஏறவைத்துக் கொண்டுள்ள சிவனும்-தாமரை மேலானும்-தாமரைப்பூவிற் பிறந்த பிரமனும், தாம்-ஆகிய இவர்கள், குடைஏற குவித்துக்கொண்டு-திருமுத்துக்குடை முதலான உபகரணங்களைச் சேகரித்துக்கொண்டு, கங்குல்-ஸந்த்யா காலந்தோறும், புகுந்தார்கள்-திருமலைக்குச் செல்லுவர்கள்.

பெரி—அவ:—நாற்பத்துமூன்றும்பாட்டு— (மங்குல்) சதுர்முகனும் லலாடநேத்ரனும் திருமலையிலே யொருகாலாச்ரயித்துப் போமளவன்று, ஸமாராதகாலங்கள்தோறும் ஸமாராதநோபகரணங்களைக் கொண்டு வந்தாச்ரயிப்பரென்கிறது.

வ்யா:-(மங்குலித்யாதி) மேகபதத்திலே செல்ல உயர்ந்தசிகரங்களை யுடைய திருமலையையுடையவனை. (காப்பணிவான் கங்குல்புகுந்தார்கள்) திருவந்திக் காப்பெடுப்பான் ஸமாராதநகாலந்தோறும் புகுந்தார்கள். (திங்களித்யாதி) சந்த்ரனை ஜடையிலே தரித்த ருத்ரனும் தாமரைப்பூவை ஜந்மமாகவுடைய ப்ரஹ்மாவும் திருமுத்துக்குடை முதலானவற்றைத் தரித்துக்கொண்டு கங்குல் புகுந்தார்கள்.

திவ்ய-அவ:—இஷ்டப்ராப்தி அநிஷ்டநிவ்ருத்திகளுக்காக ப்ரஹ்ம ருத்ரர்கள் ஒருகால் வணங்கிப்போவதோடு நில்லார்கள்; திருவாராதனகாலங்கள்தோறும், ஆராதநத்துக்கு உறுப்பான குடை முதலிய உபகரணங்களை தரித்துக்கொண்டு வந்து வணங்குவர்கள் என்கிறது.

வ்யா:—(மங்குல் தோய் சென்னி வடவேங்கடத்தானை) மேக மண்டலத்தளவும் உயர்ந்துள்ள திருமலையிலே எழுந்தருளியிருப்பவனை. நிலத்திலே கால்தோயப்பெறாத தேவர்க்கும் ஸுலபனுகைக்காக அவர்களுடைய பதங்களையும் தொட்டு நிற்கும் திருமலையிலே எழுந்தருளியிருக்கிறபடி. (காப்பணிவான் கங்குல் புகுந்தார்கள்) திருவந்திக்காப்பெடுப்பதற்காகக் காலை மாலைகளிலே புகுந்துபோருவர்கள், இவர்கள்தான் யாரென்னில்,-(திங்கள் சடையேற வைத்தானும்) தக்ஷப்ரஜாபதியின் சாபத்தாலே கலைகுறைந்து வந்து சரணமடைந்த சந்திரனைத் தலைமீதுகொண்டு ரக்ஷித்த ருத்ரனும். ரக்ஷகராக ப்ரஸித்திபெற்றவர்களும் தங்களுடைய ரக்ஷகத்வத்தை நிலைநிறுத்திக்கொள்வது இத்திருமலையில் புகுந்தே என்று பாவம். (தாமரை மேலானும்) திருநாபிக்கமலத்திலே பிறந்து படைக்கும் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் பிரமனும். (திங்கள்....மேலானும்) (சந்திரனை) ஏற வைத்தவனோடு, (தாமரையில்) ஏறியிருப்பவனோடு வாசியற இவனைத் தொழப்புகுவர். (குடையேறத் தாங்குவித்துக்கொண்டு புகுந்தார்கள்) திருமுத்துக்குடை முதலான ஆராதந உபகரணங்களைத் தாங்கிக்கொண்டு புகுவர்கள். இங்கு குடையைச் சொன்னது சாமரம் முதலிய மற்ற ஆராதந உபகரணங்களுக்கும் உபலக்ஷணம். (தாங்குவித்துக்கொண்டு)தாங்கிக்கொண்டு என்றபடி. இப்பொருள் "திருமுத்துக்குடை முதலானவற்றை தரித்துக்கொண்டு" என்னும் வ்யாக்யானஸ்ரீஸூக்திக்குப் பொருந்தியது."தாம் குவித்துக்கொண்டு"என்று பிரித்து குடை முதலான உபகரணங்களைத் தாமே சேகரித்துக்கொண்டு என்றும் பொருளுரைப்பதுண்டு. (கங்குல் புகுந்தார்கள்) ஸந்த்யாகாலந்தோறும் புகுவர்கள். "இரண்டாமடியில் 'புகுந்தார்கள்' என்று இறந்தகாலமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் 'நித்யமாகப் புகுந்துகொண்டிருக்கின்றனர்' என்று நிகழ்காலமாகப் பொருள் கொள்ளக் குறையில்லை. விரைவினு மிகவினுந் தெளிவினுமியல்பி

னும், பிறழவும் பெறாஉமுக் காலமுமேற்புழி' என்ற நன்னூற் சூத்திரமுணர்க'' என்ற தீபிகையுரையை அநுஸந்திப்பது.

44. கோண்டு குடங்கால்மேல் வைத்த குழவியாய்
தண்ட வரக்கன்தலை தாளால்—பண்டெண்ணிப்
போம்குமரன் நிற்கும் பொழில்வேங்கட மலைக்கே
போங்குமர ருள்ளீர் புரிந்து.

பதவுரை:—குமரர் உள்ளீர்—கிழத்தனமற்றவர்களே! பண்டு—முன் பொருகால், குடங்கால்மேல்—மடியிலே, கோண்டுவைத்த குழவி ஆய்—எடுத்துவைக்கும் சிறு குழந்தையாய்க் கொண்டு, தண்டம் அரக்கன்—தண்டிக்கத்தகுந்தவனை இராவணனுடைய, தலை—பத்துத் தலைகளையும், தாளால்—திருவடியாலே, எண்ணி—கீறி எண்ணிக்காட்டிவிட்டு, போம்—அந்தர்த்தானமடைந்தவனை, குமரன்—நித்யயௌவனமுடையனை எம்பெருமான், நிற்கும்—நிற்குமிடமான, பொழில் வேங்கடம் மலைக்கே—சோலைகள் சூழ்ந்த திருமலைக்கே, புரிந்து போம்—ஆசைகொண்டு செல்லுங்கோள்.

பேரி—அவ—நாற்பத்தினாலாம்பாட்டு. (கோண்டு) அறிவுடையாரும் அறிவுகேடும் தசையில் ஹிதைஷியாய் ரக்ஷிக்குமவன் நிற்கிற திருமலையிலே படுகரணரானபோதே சென்று ஆச்ரயியுங்கோள் என்கிறார்.

வ்யா:—(கோண்டித்யாதி) எடுத்து மடியிலே வைக்கும் பிள்ளையாய் தண்ட்யனை ராக்ஷஸன் தலை பத்தும் அறுக்கப்படும் என்று திருவடிகளாலே கீறிக்காட்டி அந்தர்த்தாநம் பண்ணின முக்தன் நிற்கும் திருமலைக்கே கால் நடையாடும்போதே ஆச்ரயித்துப்போருங்கள்.

திவ்ய-அவ:- 'இப்படி ப்ரஹ்மருத்ரர்கள் இவனை வணங்குகைக்கு காரணமென்' என்ன, 'அறிவுடைய அவர்களும் அறிவுகெடும்போது அவர்களுக்கு நன்மைசெய்ய விரும்பி ரக்ஷிப்பவனன்றோ இவன்; அவன் நிற்கும் திருமலையிலே சக்தியுள்ளபோதே சென்று வணங்குங்கள்' என்கிறார்.

வ்யா:—(கொண்டு....குமரன்) இந்த விருத்தாந்தம்

"ஆமே அமரர்க் கறிய அது நிற்க,
நாமே அறிகிற்போம் நன்னெஞ்சே—பூமேய
மாதவத்தோன் தாள் பணிந்த வாளரக்கன் நீண்முடியை
பாதமத்தால் எண்ணினன் பண்பு"

என்று முதல்திருவந்தாதியிலும்,

"ஆய்ந்த அருமறையோன் நான்முகத்தோன் நன்குறங்கில்
வாய்ந்த குழவிவாய் வாளரக்கன்—ஏய்ந்த
முடிப்போது மூன்றேழென்றெண்ணினன் ஆர்ந்த
அடிப்போது நங்கட்கரண்"

என்று மூன்றாந் திருவந்தாதியிலும் முதாலாழ்வார்களால் அநுஸந்திக்கப்பட்டுள்ளது. இராவணன் கடுந்தவம் செய்து பிரமனைக் கண்டு வரம் வேண்டிக்கொள்ளும்போது, ஸர்வேச்வரன் ஒரு குழந்தை வடிவாய்ப் பிரமன் மடியிலே தூங்குவதுபோலே கிடந்து இவன் தசகண்டனாகையாலே — பத்து தலைகளையுடையவனாகையாலே—லோககண்டகனாய் விளங்குவான் என்று அறிவிப்பதற்காகவும் தான் ராமனாயவதரித்து இவனுடைய தலைகளைக் கிள்ளியெறியப் போவதை உணர்த்துவதற்காகவும் தன் திருவடிகளாலே ராவணனுடைய பத்துத் தலைகளையும் கீறி எண்ணிக்காட்டி மறைந்தான் என்னும் விருத்தாந்தம் இங்கு அநுஸந்திக்கப்படுகிறது. இவ்விருத்தாந்தத்திற்கு இதிஹாஸபுராணங்களில் மூலமிருப்பதாகத் தெரியவில்லை. ஆழ்வார்கள் தம் மயர்வற்ற மதிநலத்தாலே ஸாக்ஷாத்கரித்ததாயிருக்கத்தகும். (கொண்டு குடங்கால்மேல் வைத்த குழவியாய்) மடியின்மேல் எடுத்து வளர்க்கும் சிறுகுழந்தையாகி, (தண்ட அரக்கன்....) தண்டயனை ராக்ஷஸன்; இவன் என்னால் பிறிதொரு காலத்திலே தலையறுபட்டு தண்டிக்கப்படப்போகிறான் என்று காட்டுவதற்காகத் தலையைத் தாளாலே எண்ணிக்காட்டினான் என்றுபாவம். (பண்டெண்ணிப்போம் குமரன் நிற்கும்) முன்னொருகாலத்தில் இப்படித் தலையெண்ணி மறைந்த பாலனை ஸர்வேச்வரன் நிற்குமிடமான. (பொழில் வேங்கட மலைக்கே) சோலைகள் சூழ்ந்த திருமலைக்கே, (குமரருள்ளீர் புரிந்து போம்) * முற்ற

மூத்துக் கோல் துணையா முன்னடி நோக்கி நடக்கும் தசை வரு முன்னே விரும்பிப்போவீர்களாக. கிழத்தனம் வந்துவிட்டால் திருமலையில் ஏறிச்செல்வது இயலாத காரியமாகையால் சக்தியுள்ள போதே சென்று வணங்குமின்கள் என்கிறார். (குமருள்வீர்) "பால்யேந திஷ்டாஸேத்" [ப்ரஹ்மஜ்ஞானியானவன் குழந்தையைப் போலிருக்கக்கடவன்] என்ற ச்ருதிவாக்யத்தின்படி பரமாத்மஜ்ஞானிகள் என்றும் குழந்தையுள்ளம் படைத்தவராயிருப்பர் என்னும் உண்மையை உணர்த்துவதாகவும் கொள்ளலாம்.

45. புரிந்து மலரிட்டுப் புண்டரீகப் பாதம்
பரிந்து படுகாடுநிற்ப—தெரிந்தெங்கும்
தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு.

பதவுரை:—புண்டரீகம் பாதம்—திருவடித்தாமரைகளில், புரிந்து—அன்புபூண்டு, மலர் இட்டு—புஷ்பங்களைப் பணிமாறி, பரிந்து—மங்களாசாஸநம் பண்ணி, படு காடு நிற்ப—வெட்டி வீழ்த்தின மரங்கள் போலே வணங்கிநிற்கும்படியாக, எங்கும்—ஸகல ப்ரதேசங்களிலும், தெரிந்து—விளங்கி, தான் ஓங்கி நின்றான்—குணங்களால் பெருமை பெற்று எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடையதாய், தண் அருவி வேங்கடமே-குளிர்ந்த அருவிகளையுடைத்தான திருமலையே, வானோர்க்கும்—நித்யஸூரிகளுக்கும், மண்ணோர்க்கும்—இவ்வுலகத்தவர்க்கும், வைப்பு—நிதியாயிருக்கும்.

பெரி—அவ:—நாற்பத்தைந்தாம் பாட்டு. (புரிந்து) வெறும் ஸம்ஸாரிகளுக்கேயன்று; நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யம் திருமலை என்கிறார்.

வ்யா:— (புரிந்தித்யாதி) நிரதிசய போக்யமான திருவடிகளிலே ஆதரித்துப் புஷ்பாதிகளையிட்டு ஸ்நேஹித்துப் படுகாடு கிடக்கும்படியாக விசததமமாக எங்கும் குறைவற்றவனுடைய ச்ரமஹரமான திருமலையே உபயவிபூதிக்கும் ப்ராப்யம்.

திவ்ய-அவ:—"சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை" என்றும், "பொழில்வேங்கட மலைக்கே போம்" என்றும் ஸம்ஸாரிகளுக்கு ப்ராப்யம் திருவேங்கடமலையென்றார் கீழ்ப்பாசுரங்களில். ஸாமாந்யமான ஸம்ஸாரிகளுக்குமட்டுமோ ப்ராப்யம்? விலக்ஷண

ரான நித்ய ஸூரிகளுக்கும் ப்ராப்யமாயிருப்பது இத்திருமலையன்றோ என்கிறார்.

வ்யா:—(புண்டரீகப்பாதம்) "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" [விஷ்ணுவினுடைய மேலான திருவடிகளில் மதுதாரைகள் ஒழுகா நிற்கின்றன] "தேனே மலரும் திருப்பாதம்" [திருவாய் 1-5-8] என்கிற படியே தேனொழுகும் தாமரைபோலே மிகவினியதாயிருக்கும் திருவடிகளில். (புரிந்து மலரிட்டு) விரும்பிப் புஷ்பம் முதலியவற்றை ஸமர்ப்பித்து. மலர் என்றது நீர் சுடர் தூபம் முதலிய அனைத்துக்கும் உபலக்ஷணம். (பரிந்து படுகாடு நிற்ப) 'அபாயபஹுளமான தேசமாயிற்றே; என் வருகிறதோ' என்று பக்தர்கள் பரிந்து, வெட்டி வீழ்த்தின மரக்காடுபோலே பெயராமல் வணங்கிநிற்க. (தெரிந்து எங்கும் தானோங்கி நிற்கின்றான்) தன்னுடைய உயர்வானது நன்கு தெரியும்படியாக எல்லாவிடத்திலும் குறைவற்று உயர்ந்து நிற்பவனுடைய; "கண்டவாற்றால் தனதே உலகென நின்றான்" [திருவாய் 4-5-10] என்கிறபடியே நிற்பவனுடைய. (படுகாடுநிற்பத் தெரிந்தெங்கும் தான் ஓங்கிநிற்கின்றான்) விழுந்து கிடக்கும் மரங்களின் நடுவே ஓங்கிநிற்கும் மரம்போலே விளங்குகிறபடி. "வ்ருக்ஷ இவ ஸ்தப்த:" [வணங்காத மரம்போலே நிற்கிறான் பரமபுருஷன்] என்று வேதங்களால் புகழப்படுபவனன்றோ. (தண்ணருவி வேங்கடமே) இவனுக்கும் இவனடியார்க்கும் ஸகலதாபங்களையும் போக்கும்படியான குளிர்ந்த அருவிகளையுடைய தேசம். (வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு) நித்யஸூரிகளுக்கும் இவ்வுலகத்தவர்க்கும் நிதிபோலே பரமப்ராப்யமாயிருக்கும்.

46. வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கென்
றெப்பொழுதும் கைநீட்டும் யானையை—எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே
நாடுவளைத் தாடுதுமேல் நன்று.

பதவுரை:—மா மதியை—சிறந்த (இந்த) சந்திரனை, மாலுக்கு—திருவேங்கடமுடையானுக்கு, மணிவிளக்கு ஆ—மங்கள தீபமாக, வைப்பன் என்று—(திருமுன்பே) வைக்கக்கடவேன்' என்றெண்ணி, அந்த (சந்திரனைப் பிடிப்பதற்காக) எப்போழுதும்—எப்போதும், கை

நீட்டும்-உயரத்தூக்கின துதிக்கை தூக்கினபடியேயிருக்கிற, யானையை— ஒரு யானையைப் (பிடிப்பதற்காக), எப்பாடும் வேடு—வெளிப்புறங்களிலுள்ள வேடர், வளைக்க—சூழ்ந்துகொள்ள, குறவர் — (திருமலையிலுள்ள) குறவர்கள், வில் எடுக்கும்—(அவ்வேடரை எதிர்க்க) வில்லை எடுத்துக்கொள்ளுமிடமான, வேங்கடமே—திருமலையையே, நாடு— நாட்டிலுள்ளாரனைவரும், வளைத்து—பிரதக்ஷிணம் பண்ணி, ஆடுதும் ஏல்—(மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாக) நர்த்தனம் பண்ணப்பெற்றால், நன்று—நல்லது.

பெரி-வ்யா:—நாற்பத்தாறும்பாட்டு. வைப்பனித்யாதி) சந்த்ரன் அணியனாயிருக்கையாலே ஸர்வேச்வரனுக்குத் திருநந்தாவிளக்காக வைப்பன் என்று ஒருகால் நீட்டிக் கிடையாதொழிந்தால் மீளவறியாதே எப்போதும் கை நீட்டினபடியே அந்யபரமாய் நிற்கிற யானையைப் புறம்புள்ள வேடர் சூழ, திருமலையிலே வர்த்திக்கும் குறவர் வில்லெடுத்தபடி எதிர்க்கும் திருமலையை அறிவில்லாதாரோடு அறிவுடையாரோடு வாசியற எல்லாரும் ஆச்ரயிக்கப்பெறில் நன்று.

திவ்ய-அவ:—தன்னிடமுள்ள அறிவற்ற விலங்குகளும், அறிவில் தாழ்ந்த குறவர்களுங்கூட பகவத்பாகவதர்களுக்குப் பணிசெய்யும் பெருமைபெற்றிருக்கும் இத்திருமலையை நாடெல்லாம் ஆச்ரயிக்க வேண்டாவோ என்கிறார்.

வ்யா:—(வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கு என்று எப்பொழுதும் கைநீட்டும் யானையை) வேங்கடத்திலுள்ள விலங்கின் ஸ்வபாவமிருக்கும்படியிது. வேங்கடத்து வாழ்கின்றதோர் யானை இரவிலே சந்திரனைக் காண்கின்றது. மங்குல்தோய் சென்னி வடவேங்கடமாகையாலே அருகிலேயிருக்கும் சந்திரனை ஸர்வேச்வரனுக்கு நந்தாவிளக்காக வைக்கவேண்டுமென்று எண்ணித் தன் துதிக்கையை நீட்டுகிறது. ஒருமுறை நீட்டிக் கிடைக்காதபோதிலும் பகவத் கைங்கர்யத்திலுள்ள பேராசையாலே எப்பொழுதும் கைநீட்டிக்கொண்டே கிடக்கிறது. தேசவைபவத்தாலே வனவிலங்குகளும் பரமபுருஷனிடம் பெருங்காதல்பெற்றுத்திரிகிறபடி. (எப்பாடும் வேடு வளைக்க) இந்த தேசத்தில் வஸிக்கப்பெறுமையாலே ரஜஸ்தம: ப்ரசுரராய் வெளிப்புறங்களிலே வஸிக்கும் வேடர்கள், — ஆனைபிடிப்பதற்காக

இங்கு வந்தவர்கள்—இந்த யானையைக் கண்டதும் வளைத்துக்கொள்கின்றனர். பகவானுக்குத் திருவிளக்காய் வைப்பதற்காகச் சந்திரனைப் பிடிக்கையிலே ஈடுபட்டு அந்யபரமாயிருக்கையாலே யானையும் இவர்கள் வளைத்துக்கொள்வதை அறியாமல் நிற்கின்றது. இனி, யானையின் கதியென்ன?-(குறவர் வில்லெடுக்கும்) அத்திருமலையிலே வாழும் குறவர்கள் அவ்வேடர்களை எதிர்த்துத் துரத்துவதற்காக வில்லையெடுக்கிறார்கள். இனி யானைக்கோர் தீங்குவர இடமில்லை என்று பாவம். (எப்பாடும் வேடு—குறவர்) வேடர்களை 'எப்பாடுமுள்ள வேடர்கள்' என்று விசேஷித்து, 'குறவர்' என்று விசேஷணமில்லாமல் சொல்லுகையாலே திருமலையிலேயுள்ள குறவர்கள் என்று உணர்த்தப்படுகிறது. பகவத்ஸந்நிதியில்லாத தேசத்தில் வாழ்கையாலே வேடர்கள் தங்கள் ஜாதிக்கேற்பக் கொடுந்தொழில் புரிகிறார்கள். குறவர்களும் க்ரூரஜாதியிலே பிறந்தவர்களானாலும் தேசவைபவத்தாலே ஸத்வப்ரதானராயுள்ளனர்; தங்கள் க்ரௌர்யத்தை பாகவதவிரோதிகளான வேடர்களிடத்திலே காட்டுகின்றனர். (எப்பாடும் வேடு—குறவர்) ஜாதியின் க்ரௌர்யத்திலே வாசியில்லை; தேசவைபவம் ஸ்வபாவத்தில் நெடுவாசியை உண்டுபண்ணியுள்ளது. (எப்பாடும் வேடு வளைக்க) 'எப்பாடும் வளைக்க' என்று கூட்டி நாற்புறமும் வளைத்துக் கொள்ள என்று பொருள்கொள்வாருமுண்டு. 'வளைக்க' என்பதிலிருந்தே 'நாற்புறமும் வளைத்துக்கொள்ள' என்னும் அர்த்தம் ஸித்திக்குமாகையால் இது அஸ்வரஸம். 'புறப்புள்ள வேடர்' என்னும் பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியோடும் பொருந்தாது. (வேடு வளைக்கக் குறவர் வில்லெடுக்கும்) "வேடர்கள் யானையை வளைத்துக் கொள்ள, அந்தயானையை அடிப்பதற்காகக் குறவர்கள் வில்லை எடுக்கும்படியான" என்று அரும்பதவுரைகாரர் முதலானோர் பொருள் கொண்டனர். இப்பொருளில் தேசவைபவம் வெளியிடப்படவில்லையாகையால் இது ஆழ்வார் உகந்ததன்று. "புறம்புள்ள வேடர் சூழ, திருமலையிலே வர்த்திக்கும் குறவர் வில்லெடுத்தபடி எதிர்க்கும்" என்று பெரியவாச்சான்பிள்ளை வேடர்களுக்கும் குறவர்களுக்குமிட்டிருக்கும் பரஸ்பர விலக்ஷணமான-(ஒன்றுக்கொன்று வேறுபட்ட)-விசேஷணங்கள் நிரர்த்தகமாகிவிடும். ஆகையால் ஆழ்வாரும் ஆச்சான்பிள்ளையும் திருவுள்ளமுகந்த பொருள் நாம் இங்கு காட்டியபடியேயாகவேண்டும். (குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே நாடுவளைத்தாடுதுமேல் நன்று) அறிவு குறைந்தவர்க்கும் பேரறிவு கொடுக்கும் வேங்கட

மலையை அறிவில்லாதார் அறிவுடையார் ஆகிய அனைவரும் வலம் வந்து கூத்தாடினால் அது லோகக்ஷேமமாகும். (வேடு வளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே....நல்ற) வனவிலங்குக்கே ரக்ஷை யுண்டாயிருக்கும் தேசத்தில், மற்றுள்ளார்க்கு ரக்ஷையுண்டாக்கச் சொல்லவேணுமோ?

47. நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்
பொன்னும் மணியும் முத்தமும் பூமரமும்—பன்மணிநீ
ரோடுபொருதுருளும் கானமும் வானரமும்
வேடுமுடை வேங்கடம்.

பதவுரை:—ஆளியும்—யாளிகளும், கோள் அரியும்—வலிமைதங்கிய சிங்கங்களும், பொன்—பொன்களும், மணியும்—மாணிக்கங்களும், முத்தமும்—முத்துக்களும், பூ மரமும்—பூத்த மரங்களும், பல்மணி நீரோடு பொருது உருளும் கானமும்-பலவகைப்பட்ட ரத்னங்கள் அருவிகளோடே கலந்து உருண்டு விழப்பெற்ற காடுகளும்,வானரமும்-குரங்குகளும், வேடும் — வேடச்சாதியுமாகிற இவற்றை, உடை—உடையதான, வேங்கடம்—திருமலையானது, நல்மணிவண்ணன் ஊர்—நல்ல நீலரத்நம்போன்ற வடிவையுடையனான ஸர்வேச்வரனுடைய வாஸஸ்தானமாகும்.

பெரி—வ்யா:— நாற்பத்தேழாம்பாட்டு. (நன்மணி) ச்ரமஹரமான வடிவையுடையவனுக்கு ரக்ஷணத்துக்குறுப்பாகையாலே திருமலையை ஊரேன்கிறது. ரக்ஷணத்துக்குறுப்பாகையாலே திருவயோத்யையிலும் காட்டை விரும்பினாரிறே பெருமாள். அவர் விரும்பின காட்டை விரும்பிப்போகிற இளையபெருமாளை அக்காட்டோபாதி இப்படை வீட்டையும் நினையுங்கிடீரேன்றாரிறே திருத்தாயார். [“रामं दशरथं विद्धि” (ராமம்தசரதம்வித்தி)] “वध्यतां बध्यतां” (வத்யதாம் பத்யதாம்) என்று அருவராதே உங்கள் தமயனாரோபாதியாக உங்களையரையும் நினையுங்கிடீர். [“मां विद्धि जनकात्मजां” (மாம் வித்தி ஜநகாத்மஜாம்)] உங்கள் தமயனாருகந்த பிராட்டியோபாதி என்னையும் நினையுங்கிடீரேன்கிறார். (ஆளியுமித்யாதி) திருமலையில் வர்த்திக்கும் நித்யஸம்ஸாரிகளைச் சொல்லுகிறது.

திவ்ய–அவ:—திருமலையிலேயுள்ள யானையொன்றின் பெருமையைப்பேசினார் கீழ்ப்பாட்டில். இப்பாட்டிலே இயற்கையில் அறிவு குறைந்த பற்பல பொருள்கள், திருமலையிலே நித்யஸூரிகளைப்போலே பேரறிவுபெற்று பகவானுக்குக் கைங்கரியம் செய்யும் பரிசைப் பேசுகிறார்.

வ்யா:—(நன்மணிவண்ணனூர்) நல்லதான நீலமணிபோன்ற திருநிறத்தையும் ஸ்வபாவத்தையும் உடையவனுடைய ஊர். வண்ணம்:—நிறம்; ஸ்வபாவம். நிறத்திலும், விலைமதிப்பற்றதாயிருக்கை, முந்தானையிலே முடிந்து ஆளலாம்படியான ஸௌலப்பத்தை உடைத்தாயிருக்கை. இழந்தால் உயிர்வெறுக்கும்படியாகவும், உண்டென்ன உயிர்தரிக்கும்படியாகவுமிருக்கை, உடையவன் காலிலே அணைவரும் விழும்படியிருக்கை முதலான தன்மைகளிலும் மணியை ஒத்திருக்கிறானையாலே மாதவன் மணிவண்ணன் எனப்படுகிறான். (நன்மணிவண்ணன்) உண்மையில் உலகிலுள்ள மணிகளெல்லாம் இவனுடைய தன்மைகளுக்கு ஏகதேசமும் ஒவ்வாமையாலே 'நன்மணிவண்ணன்' என்கிறார். கடினமாயிருக்கை, உருவில் சிறிதாயிருக்கை முதலான மணியின் தோஷங்கள் இவனுக்கில்லையன்றோ. (ஊர்) "கானமும் வானரமும் வேடும் உடைவேங்கடம்" என்று சொல்லப்புகும் இவர் திருமலையை ஊர் என்னலாமோ? மலையென்றோ காடென்றோ சொல்லுவதன்றோ பொருத்தமானது என்னில்: ராஜாவாயிருப்பவனுடைய ரக்ஷணத்துக்கு உறுப்பாயிருப்பது ஊராகிறது. ரிஷிகளை ராக்ஷஸபயத்திலிருந்து காப்பாற்றி ரக்ஷிப்பதற்கு உறுப்பாகையாலே அயோத்தியாகிற தலைநகரைக்காட்டிலும் காட்டை மிக விரும்பிச்சென்றான் ராமபிரான். அப்போது காடு நாடாகியது; நாடு காடாகியது. அப்பிரான் செல்லும் காட்டை விரும்பிச்செல்லும் லக்ஷ்மணனைப்பார்த்துத் தாயாரான ஸுமித்திரை "அயோத்யாமடவீம் வித்தி" [ரா-அ-40-8] [அயோத்தி நகரைக் காடாக அறிவாயாக] என்று-அக்காட்டிலேயுள்ள ப்ரீதியை இந்நகரிலேயும் வைக்கவேண்டும்—என்று வேண்டிக்கொண்டாள். "ராமம் தசரதம் வித்தி" [ரா-அ 40-8] தசரதரை ராமபிரானாக நினைப்பாய்; "கொல்லவேண்டும் கட்டவேண்டும்" என்று தசரதரை வெறுக்காமல் உன் தமயனாரைப்போலே தந்தையையும் நினைக்கவேண்டும் என்று யாசிக்கிறாள். "மாம் வித்தி ஜநகாத்மஜாம்" [என்னை சீதா

பிராட்டியாக நினை; 'இத்தந்தையின் மனைவியன்றோ இவள்' என்று அவர்மேலுள்ள கோபத்தாலே என்னையும் வெறுக்காதே, உன் தமய னுக்கினிய சீதையைப்போலே என்னையும் நினைக்கவேணும் என்று இரக்கிறாள். ஆக, இந்த ச்லோகத்தாலே ரக்ஷணத்துக்கு உறுப்பாகு மிடமே ஊர் என்றதாகிறது. அந்த லக்ஷணத்தின்படி பார்த்தால் தாழ்ந்தார்க்கும் முகங்கொடுத்து அவர்களை ரக்ஷிக்கும் இத்திருமலையே ஊர் எனத்தகுந்ததாகும். ரக்ஷிக்கப்படுமவர்களைச் சொல்லுகிறது அடுத்தபடியாக:-(ஆளியும் கோளரியும்) யாளிகளும் சிங்கங்களும் தங்க ளுக்கிடையேயுள்ள இயற்கையான வைரத்தை மறந்து ஒன்றாக ஸர் வேச்வரனுக்குப் பணிசெய்துநிற்கிறபடி. (பொன்னும் மணியும் முத்த மும் பூமரமும் பன்மணிநீரோடு பொருதுருளும் கானமும் வானரமும் வேடும்) அறிவு மழுங்கிக்கிடக்கும் பொன்னும், மணியும் முதலானவை யும் பகவத்ப்ரபாவததாலே பரமபுருஷனுக்குப் பணிசெய்யும்படியான பேறறிவுபெற்று விளங்குகிறபடி. அறிவுடையாரும், "வேங்கடத்துக் கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே" என்றும், "மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேனே" என்றும் "செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே" என்றும், "தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே" என்றும் பிரார்த்திக்கும்படியன்றோ இவற்றின் பெருமை யிருப்பது. (பொன்னும்....வேடுமுடை வேங்கடம் நன்மணிவண்ண னூர்) அறிவுதுறைந்தார்க்கும் முகங்கொடுத்து ரக்ஷிக்குமிடமான இதுவே அவன் உகந்து வாழும் ஊராகும். தன்னோடொத்தவர்க ளான நித்யமுக்தரை ரக்ஷிக்குமிடமான பரமபதத்திலும், நித்யஸம்ஸாரி களை நித்யஸூரிகளாக்கும் இவ்விடமே சிறந்ததன்றோ. (ஆளியும்....) "திருமலையில் வர்த்திக்கும் நித்யஸூரிகளைச் சொல்லுகிறது" என்ற வ்யாக்யான ஸூக்திக்கு இரண்டுவிதமாகக் கருத்துரைக்கலாம். திரு மலையில் வாழும் விலங்கு முதலானவையும், நித்யஸூரிகளைப்போலே பகவத்கைங்கர்யருசியைப்பெற்று விளங்குகின்றன என்பது ஓர்கருத்து.

"அஹ்ருதஸஹஜதாஸ்யாஸ் ஸூரய: ஸ்ரஸ்தபந்தா:
விமலசரமதேஹா இத்யமீ ரங்கதாம।
மஹித மநுஜதிர்யக் ஸ்தாவரத்வா:ச்ரயந்தே
ஸூரியதமிதிஹ ஸ்ம ப்ராஹ ஸூரேப்யோ நமஸ்தாத்॥"

[இயற்கையான சேஷத்வத்தை இழவாத நித்யஸூரிகளும், ஸம்ஸார பந்தம் அறுந்தமுக்தர்களுக்கும், பாவம் நீங்கிய கடைசி உடம்பை உடைய முமுக்ஷுக்களுமாகிய இவர்கள், மானிடப் பிறவியையும், பசு பக்ஷிப் பிறவியையும், ஸ்தாவரப் பிறவியையும் விரும்பினவர்களாய்க் கொண்டு ஸ்ரீரங்கத்தை எப்போதும் ஆச்ரயித்துள்ளனர் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவர்களின் பொருட்டு நமஸ்காரம் ஆகுக.] என்று பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் [1-33] சொல்லிய படியே நித்யஸூரிகளே பகவத்ஸௌலப்யத்தை அநுபவிப்பதற்காகப் பொன் மணி முதலியவையாக வடிவெடுத்துள்ளனர் என்பதும் ஒரு கருத்து.

48. வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்—வேங்கடமே
தானவரை வீழத்தன் ஞாழிப்படை தொட்டு
வானவரைக் காப்பான் மலை.

பதவுரை:-விண்ணோர்-நித்யஸூரிகள், மெய்ம்மையால்—உண்மையான பக்தியுடனே, தொழுவதுவும்—ஆச்ரயிப்பதுவும், வேங்கடமே—திருமலையையே; மெய் வினை—(அநுபவியாமல்) அழியாத பாவங்களையும், மெய் நோய்—உடம்பைப்பற்றின நோய்களையும், தீர்ப்பதுவும்—போக்கடிக்கவல்லதும், வேங்கடமே—திருமலையே; தானவர் வீழ—அசுரர்கள் மாளும்படி, தன் ஆழி படைதொட்டு—தனது சக்ராயுதத்தைப் பிடித்து, வானவரை—தேவர்களை, காப்பான்—காத்தருளும்எம்பெருமானுடைய, மலை—திருமலை, வேங்கடமே—திருவேங்கடமேயாம்.

பெரி-வ்யா:—நாற்பத்தெட்டாம்பாட்டு—(வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்) திருமலை ப்ராபகமாக, வேறொன்று ப்ராப்யமாகையன்றிக்கே, இதுதானே ப்ராப்யமாக ஆச்ரயிப்பர்கள் நித்யஸூரிகள். (வேங்கடமித்யாதி) "अवश्यमनुभोक्तव्यं" (அவச்யமநுபோக்தவ்யம்) என்கிற பாபத்தைப் போக்குமதுவும் திருமலை. (வேங்கடமித்யாதி) அஸுர ஜாதி தரைப்படும்படிக்கீடாகத் திருவாழியைப் பிடித்து தேவஜாதிக்குக் குடியிருப்புக்கொடுத்தவனுக்கு ஊரும் திருமலையே.

திவ்ய-அவ:-நித்யஸூரிகள் தொழுவதுவும், நித்யஸம்ஸாரிகளின் நோய்களைத் தீர்ப்பதுவும் திருமலையே என்கிறார்.

வ்யா:—(வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்) "மெய்ம்மையால் தொழுவதுவும்" என்கையாலும், "வானவரைக் காப்

பான்" என்று தேவர்களைத்தனியாக எடுக்கையாலும், இந்த "விண்ணோர்" என்று நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. (மெய்ம்மையால் தொழுவதுவும்) தொழுவதிலே, மெய்யாகத் தொழுவதென்றும், பொய்யாகத் தொழுவதென்றும் இரண்டுண்டு போலேகாணும்! "கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும் அடிக்கமல மிட்டேத்துமங்கு" என்று கர்மவச்யரான தேவர்கள் தொழும்போது அவனை உபாயமாகப்பற்றினபோதிலும், தங்கள் பதவிமுதலான பலன்களை ப்ராப்யமாக நினைத்துத்தொழுவர்கள். இது பொய்யான தொழுகையாகும். நித்யஸூரிகளோவெனில் அவன் உகந்துவாழும் இத்திருமலையையே உபாயோபேயங்களாகக் கொண்டு தொழுவர். இது மெய்யான தொழுகையாகும். வேறொன்றைநினைத்து அவனைத்தொழுமவர்களுக்கு பாவசுத்தியில்லாமையாலே அவர்களுடைய தொழுகை பொய்யானதாகும். அவனையே எல்லாமாகநினைத்துத் தொழுவாருடைய அக்ருத்ரிமமான தொழுகையே மெய்யானதாகும். (வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்) இப்படி நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமாயிருப்பதோடன்றியில், நித்யஸம்ஸாரிகளின் அநிஷ்டங்களையும் தீர்க்கிறது திருமலையே. (மெய்வினை) அநுபவித்தாலல்லது அழியாதபாபங்கள்.

"அவச்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்।
நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி॥"

[ப்ரஹ்மவைவர்த்தம்-ப்ரக்ருதிகண்டம் 26-70]

[ஜீவன் தான் செய்த புண்யபாபங்களை அநுபவித்தே தீர்க்கவேண்டும். நூறுகோடி கல்பகாலமானாலும் கர்மம் அநுபவியாமல் கழியாது.] என்கிற பாபங்களைப் போக்குவதும் திருமலையே. (நோய்தீர்ப்பதுவும் வேங்கடமே) இப்பாபங்கள் காரணமாக வரும் வியாதிகளைத் தீர்ப்பதுவும் திருமலையே.(மெய்வினைநோய்...) சரீரஸம்மந்தபடியாகவரும் பாபங்களையும் வியாதிகளையும்தீர்ப்பதும் திருமலையே என்றுமாம். மெய்-சரீரம். (வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்) "வேங்கடம்" [பாபங்களைக் கொளுத்துவது] என்னும் இதனுடைய பெயரே இது மெய்வினைநோய் தீர்க்கவல்லது என்று உணர்த்துகிறதன்றோ. "வேங்கடங்கள் மெய்மேல் வினைமுற்றவும்" என்றார் நம்மாழ்வாரும். 'வினை' என்று பாபங்களையும், 'நோய்' என்று வினை காரணமாக வரும் வியாதிகளையும் குறிப்பதாகக் கொள்ளலாம். அன்றிக்கே, போயபிழையும் புகுதருவான் நின்றனவுமான பூர்வாக உத்தராகங்களைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (வேங்கடமே தானவரைவீழத்........வானவரைக்

காப்பான் மலை) அஸுரர்கள் விரும்பபடியாகத்தன் சக்ராயுதத்தை தரித்து தேவர்களுக்குக் குடியிருக்குமிடங்கொடுத்துக் காப்பவனுடைய மலையும் திருமலையேயாகும். (ஆழிப்படைதொட்டு) சக்கரத்தாழ்வானைச் சுழற்றவேண்டியதுமில்லை; தொடுவதே போதுமானது அசுரர் கூட்டங்கள் அழிவதற்கு என்றுபாவம். திருமலையின் மெய்வினை நோய் தீர்க்கும் தன்மையும், அஸுரராக்ஷஸர்களை அழித்த விருத்தாந்தங்களும் வேங்கடாசல மாஹாத்மியத்தில் பரக்கக் காணலாம்.

49. மலையாமை மேல்வைத்து வாசுகியைச் சுற்றி
தலையாமை தானொருகை பற்றி—அலையாமல்
பீறக் கடைந்த பெருமான் திருநாமம்
கூறுவதே யாவர்க்கும் கூற்று.

பதவுரை:— மலை—மந்தரபர்வதத்தை, ஆமை மேல் வைத்து—கூர்மரூபியான தன்மேல் வைத்து, வாசுகியை—வாஸுகிநாகத்தை, சுற்றி—(கடை கயிறாகச்) சுற்றி, ஆமைதான்—கூர்மரூபியாகத் திருவவதரித்த தானே, தலை ஒரு கை பற்றி—மலையினுச்சியை ஒருகையாலே பிடித்தமுக்கி, அலையாமல்—நீர் வெளியில் புரளாமல், பீற—(அமுதம்) புறப்படும்படியாக, கடைந்த—(கடலைக்) கடைந்தருளின, பெருமான்—எம்பெருமானுடைய, திருநாமம்—திருநாமங்களை, கூறுவதே—வாய்விட்டுச் சொல்லுவதே, யாவர்க்கும்—எல்லார்க்கும், கூற்று—வாய்ப்பேச்சாகக்கடவது.

பெரி-வ்யா:—நாற்பத்தோன்பதாம் பாட்டு. (மலையாமையித்யாதி) கூர்மரூபியான தன்மேலே மலையைவைத்து வாஸுகியைச்சுற்றி. (தலையாமையித்யாதி) ஆமையான தான் மேலே கொந்தளியாதபடிக்கு ஈடாக, மலையின் உச்சியை ஒருகையாலேஅமுக்கி. (அலையாமலித்யாதி) நிரம்பின நீர்புறம்பு ஒசியாமலும், அம்ருதம் படும்படி உள்ளுடையவும் கடைந்த ஸர்வேச்வரனுடைய திருநாமத்தைச் சோல்லுவதே எல்லார்க்கும் அடுப்பது.

திவ்ய-அவ:—மலைமேலே நின்று முகங்கொடுக்கும் நீர்மையைப் பேசினார் கீழ்ப்பாசுரங்களில். மலையின்கீழே கிடந்து தாங்கிய நீர்மையைப்பேசி மகிழ்கின்றார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(மலை ஆமைமேல் வைத்து) மந்தரமலையை ஆமையாகிற தன்மேல் வைத்து. சக்தியற்றதேவர்களை ரக்ஷிப்பதற்காகத்தானே மந்தரமலையைப் பெயர்த்துவந்து திருப்பாற்கடலிலே மத்தாகநாட்டி, அது அமிழ்ந்து போகுமளவில்தான் ஆமையாய்க்கீழ்ப்புகுந்து தாங்கினபடி

யைச் சொல்லுகிறார். (வாசுகியைச் சுற்றி) வாசுகியென்னும் பெரு நாகத்தைக் கடைகயிறாகச் சுற்றி. (ஆமைதான் தலை ஒரு கை பற்றி) மலையமிழ்ந்துபோகாமல் கீழ்நின்று தாங்கினாலும், கடையும்போது மலையானது மேலேயும் புறங்களிலேயும் அலையுமன்றோ; அப்படி அலையாதபடி, கீழே ஆமையாய் நிற்கும் தானே மற்றுமோர் உருக்கொண்டு மலையின் உச்சியை ஒரு கையாலே பற்றிக்கொண்டு. (அலையாமல் பிறக்கடைந்த) இவ்வளவு செய்தபின்பும் தேவாசுரர்கள் கடைவதற்கும் அஸமர்த்தர்களாய்நிற்க, தானே முன்னின்று கடைந்தபடி. (அலையாமல் பிறக் கடைந்த பெருமான்) கடல் கொந்தளிக்காதபடியும், பெருமலையையிட்டதாலே கடல்நீர் வழியாதபடியும், அப்ருதம் வெளி வரும்படி கடலின் உட்புறமெல்லாம் உடைந்துபோகும்படியாகவும் கடைந்து அச்செயலாலே தானே தேவாதிதேவன என்பது விளங்க நின்றவன். (கடைந்த பெருமான்) இச்செயலாலே தேவஜாதி முழுவதையும் எழுதிக்கொண்டவன் என்றும் கொள்ளலாம். (பெருமான திருநாமம் கூறுவதே யாவர்க்கும் கூற்று) இப்படி அங்யப்ரயோஜனர்களுக்கும் தன்னை அழியமாறி அளித்த ஸர்வேச்வரனுடைய திருநாமங்களைச் சொல்லுவதே அங்யப்ரயோஜநர்களோடு அநந்யப்ரயோஜனர்களோடு வாசியற அனைவர்க்கும் தகுந்தது.

50. கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்—ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைக்கிடக்கு முள்ளத் தேனக்கு.

பதவுரை:— கடல்— திருப்பாற்கடலிலே, கிடக்கும்— திருக்கண் வளர்ந்தருளுகிற, மாயன்— ஆச்சர்யபூதனாய், ஆறு கரை— திருக்காவேரிக்கரையான கபிஸ்தலத்திலே, கிடக்கும்— திருக்கண்வளர்ந்தருள்கிற, கண்ணன்— கிருஷ்ணனுடைய, உரை— ஸ்ரீஸூக்தியாகிற சரமச்லோகம், எனக்கு— என்னுடைய, உள்ளத்து— நெஞ்சிலே, கிடக்கும்-பதிந்திருக்கிறது; (ஆனபின்பு) கூற்றமும் சாரா— யமபயம் அணுகாமைக்கும், கொடுவினையும் சாரா— கொடிய பாவங்கள் அணுகாமைக்கும், தீ மாற்றமும் சாரா வகை— கெட்ட பெயர் அணுகாமைக்கும் உபாயத்தை, அறிந்தேன்— அறிந்தவனானேன்.

பெரி-வ்யா:— ஐம்பதாம் பாட்டு. (கூற்றமுமித்யாதி) ம்ருத்யு அணையாமைக்கும், ம்ருத்யு அணைகைக்கு ஹேதுவான மஹாபாபம் அணையா

மைக்கும், அபவாதம் சேராமைக்கும் உபாயம் அறிந்தேன். (ஆற்றங்கரை யித்யாதி) திருப்பாற்கடலிலே கண்வளர்ந்து ஆச்சர்யபூதனாய், அநந்தரம் திருக்கபிஸ்தலத்திலே கண்வளர்ந்தருளுகிறக்ருஷ்ணன் "உன்னுடைய ரக்ஷணத்துக்கு நானே கடவேன்; நீ சோகிக்கவேண்டா" என்று அருளிச் செய்த வார்த்தை என்னெஞ்சிலே கிடக்கும். (கூற்றம்) வர்ணாச்ரமதர்ம நிஷ்டரில் வ்யாவ்ருத்தி. (கோடுவினை) த்ருஷ்டசாம்யபரரில் வ்யாவ்ருத்தி. (ஆயனித்யாதி) அவனுடைய திருநாமங்கள் ஹ்ருதயத்திலே கிடக்கும் எனக்கு. அதாவது-தத்விஷயஜ்ஞாநம். "மாம்-அஹம்" (மாம்-அஹம்).

திவ்ய-அவ்:—ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை வாய்படைத்த பலன் பெறுவதற்காகச் சொல்லுங்கள் என்று பரோபதேசம் செய்தார் கீழ்ப்பாட்டில். இங்கு, அவனுடைய திருநாமத்தை நெஞ்சில் கொண்ட எனக்கு ஒருதீங்குமில்லை என்று அநுஸந்தித்து நிர்ப்பரராகிறார்.

வ்யா:—(கூற்றமும் சாராவகையறிந்தேன்)யமன் என்னை அணுகா மைக்கு உபாயமறிந்தேன். "ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய" [வி-பு 3-7-14] என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணச்லோகமும், "திறம்பேன்மின் கண்டீர்" என்னும் அறுபத்தெட்டாம் பாட்டும், "கெடுமிடராயவெல்லாம் கேசவா வென்னநாளும், கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுக கில்லார்" [திருவாய் 10-2-1] "நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே" [திருமாலை-1] "வள்ளலே! உன் தமர்க்கென்றும் நமன் தமர்கள்ளர்போல்" [பெரியதிரு 8-10-7] முதலான அருளிச்செயல் களும் இங்கு அநுஸந்திக்கத்தக்கவை. (கொடுவினையும் சாரா வகை யறிந்தேன்) யமன் என்னைப் பற்றுகைக்குக் காரணமான கொடிய பாபங்கள் என்னை அடையாமைக்கும் உபாயமறிந்தேன். (தீ மாற்ற மும் சாரா வகையறிந்தேன்) "இவன் தேஹாத்மாபிமானி; ஸ்வ தந்த்ராத்மாபிமானி; தேவதாந்தரபரன்; விஷயாந்தரபரன்; உபாயாந் தரபரன்" என்னும் அபவாதங்கள் ஒன்றும் அணுகாமைக்கும் உபாய மறிந்தேன். இவ்வுபாயங்களறிவதற்கு அடியென் என்னில்: (கடல் கிடக்கும் மாயன் ஆற்றங்கரைக்கிடக்கும் கண்ணன் உரைக்கிடக்கும் உள்ளத்து எனக்கு) திருப்பாற்கடலிலே கண்வளரும் ஆச்சர்யபூதனாய், அங்கு காணமுடியாதார்க்கும் எளியனாகைக்காக கபிஸ்தலமென்னும் திவ்யதேசத்திலே ஆற்றங்கரையைப் பற்றிநின்று திருக்கண்வளரும் க்ருஷ்ணன் பாரத யுத்த ஸமயத்திலே,

"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம்வ்ரஜ।
அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச:॥"

[மோக்ஷஸாதனமான எல்லா உபாயங்களையும் வாஸனையோடு விட்டு என்னை ஒருவனையே சரணமாகப்பற்று. நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன். வருந்தாதே] என்று சொன்ன வார்த்தை என்நெஞ்சிலே எப்போதும் கிடக்கும்—ஆகையாலே நான் கூற்றமுஞ்சாரா கொடுவினையுஞ்சாரா தீமாற்றமுஞ்சாரா வகையறிந்தேன் என்கை. (கடல் கிடக்கும் மாயன்) திருப்பாற்கடலிலே ச்வேத த்வீபவாஸிகள் போன்ற சிலருக்கே அணுகலாம்படியிருக்கும் ஆச்சர்ய பூதன். (ஆற்றங்கரைக்கிடக்கும் கண்ணன்) அவ்வருமைதீர கபிஸ்தலத்தில் ஆற்றங்கரையைப்பற்றி நின்று எல்லார் கண்ணுக்கும் விஷயமாகி நிற்பவன். (ஆற்றங்கரைக்கிடக்கும்) ஒரூரில் ஒருவனைத்தேட நினைப்பவன், 'அவன் எப்படியும் குளிக்கவருவான்' என்றும் எண்ணத்தாலே ஆற்றங்கரையிலே நின்று தேடுவதுபோலே ஆசாலேசமுடையாரை அடைவதற்காக ஆற்றங்கரையிலே படுகாடு கிடக்கிறபடி. (கண்ணன்) கிருஷ்ணன்; எல்லாருடைய கண்ணுக்கும் விஷயமாகி நிற்பவன். (கண்ணன் உரை) கிருஷ்ணன் உரைத்ததான சரமச்லோகம். அன்றிக்கே, அவனுடைய ஸ்வரூப ரூபகுண விபூதி சேஷ்டிதங்களையுரைக்கும் திருநாமங்கள் என்றும் கொள்ளலாம் (உரைக்கிடக்கும்) கண்ணன் திருநாமம் நெஞ்சிற்கிடக்கும் எனக்கு; அதாவது:—அவனைப் பற்றிய அறிவுடைய எனக்கு என்று பாவம். (கண்ணன் உரைக்கிடக்கும் உள்ளத்தெனக்குக் கூற்றமும் சாரா) "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்னும் உபதேசத்தை உள்ளத்திற்கொண்ட எனக்குக் கேவல வர்ணாச்ரம தர்மங்களிலேயே ஊன்றிநிற்பவர்களுக்கு வரும் யமபயம் இல்லை. (கண்ணன் உரைக்கிடக்கும்...கொடுவினையும் சாரா)"ஸர்வ தர்மாக் பரித்யஜ்ய" என்னும் உக்தியிலே ஊன்றிநிற்கும் எனக்கு, இவ்வுலகிலும் ஸ்வர்க்காதிகளான அவ்வுலகிலும் காமங்களை விரும்பிக் காம்யதர்மங்களை அநுஷ்டிக்குமவர்களுக்கு வரும் புண்யபாபஸம்பந்தம் வர இடமில்லை. (ஆற்றங்கரைக்கிடக்கும் கண்ணன்) இத்தால், சரமச்லோகத்தில் "மாம்" என்ற பதத்திற்சொன்ன ஸௌலப்யம் முதலான ஆச்ரயண ஸௌகர்யாபாதக குணங்கள் உணர்த்தப்படுகின்றன. (கடல்கிடக்கும் மாயன்) இத்தால் "அஹம்" என்றவிடத்திற்சொன்ன ஆச்சர்யமான ஜ்ஞாநசக்திகள் முதலான ஆச்ரிதகார்யாபாதக குணங்கள் உணர்த்தப்படுகின்றன.

50. எனக்காவா ராரோருவரே எம்பெருமான்
தனக்காவான் தானேமற்றல்லால்—புனக்காயா
வண்ணனே யுன்னைப் பிறரறியார் என்மதிக்கு
விண்ணெல்லா முண்டோவிலை.

பதவுரை:—புனம்—*தன்னிலத்திலே வளர்கிற,* காயா—*காயாம் பூவினுடைய,* வண்ணனே—*நிறம்போன்ற நிறமுடைய பெருமானே!* எனக்கு—*நீயே ரக்ஷகன் என்றிருக்கும் எனக்கு,* ஆவார் ஆர் ஒருவரே—*ஒப்பாகுமவர் யாரிருக்கின்றனர்? (எவருமில்லை;)* எம் பெருமான்—*ஸர்வேச்வரனுகிய நீயும்,* தானே தனக்கு ஆவான் அல்லால்—*தனக்குத் தானே ஒப்பாயிருப்பவனேயன்றி,* மற்று — *எனக்கு ஒப்பாக வல்லையோ?* உன்னை பிறர் அறியார் — *நான் தவிர வேறொருவரும் உன்னையறியமாட்டார்கள்!* என் மதிக்கு — *(உன்னை நன்ருக அறிந்திருக்கிற) என்னுடைய புத்திக்கு,* விண் எல்லாம் விலை உண்டோ—*பரமபதமெல்லாம் கூடினுலும் ஒப்பாகப்போருமோ?.*

பெரி-வ்யா:—ஐம்பத்தோராம்பாட்டு. (எனக்கித்யாதி) எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிற எனக்கு ஒருத்தர் எதிருண்டோ? (எம்பெருமானித்யாதி) ஈச்வரன் தனக்கு ஒருவன் ரக்ஷகனுண்டென்று இராமையாலே அவனும் எனக்கு ஒப்பன்று. (புனக்காயாவித்யாதி) ச்ரமஹரமான வடிவையுடைய நீ ரக்ஷகனல்லையாகிலும் விரும்பப்படும் உன்னை அசலார் அறியார். (என் மதிக்கித்யாதி) ஸம்ஸாரத்திலே எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிற எனக்கு விரோதியில்லாத தேசத்திலேயிருக்கிறவர்கள் என்னோடு ஒப்பரோ?

திவ்ய-அவ:—*எனக்கு ஒரு தீங்குமில்லையென்ருர் கீழ்ப்பாட்டில். எனக்கு ஒப்பாவார் ஒருவருமில்லையென்கிருர் இதில்.*

வ்யா:—*(எனக்காவார் ஆரொருவரே) பிரானே! உன்னையே ரக்ஷகனுகக்கொண்ட எனக்கு ஒப்பாவார் உபயவிபூதியிலும் ஒருவரேனும் உளரோ?* "ந தத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" [ச்வே] [*அந்தப் பரம புருஷனுக்கு ஒத்தவரும், மேலானவரும் காணப்படவில்லை*] *என்றும்,* "ந த்வத்ஸமோஸ்த்யப்யதிக: குதோऽந்யோ லோகத்ரயேऽப்யப்ரதிமப்ரபாவ" [கீதை] [*ஒப்பற்ற கீர்த்தியை உடையவனே! உன்னை ஒத்தவர் மூவுல*

கிலுமில்லை. மிகுந்தவர் இருக்கமுடியுமோ?] என்று வேதவைதிகர்கள் ஒத்தார் மிக்காரை இலாதவன் என்று நம்மைப்பற்றிச் சொல்லாநிற்க, என்னையொத்தார் ஒருவருமில்லையென்று நீர் உத்கோஷிப்பதென்? என்று ஸர்வேச்வரன் அருளிச்செய்ய,—(எம்பெருமான் தனக்காவான் தானே மற்றல்லால்) ஸர்வேச்வரனான உனக்கு நீயே ஒப்பாவாயேயொழிய எனக்கு நீயும் ஒப்பாகாய். உன்னைப்போலவே நானும் ஒத்தார் மிக்காரையிலாதவனே. ரக்ஷகத்வத்திலே உனக்கு ஒப்பாவார் ஒருவருமிலாததுபோலே, ரக்ஷ்யத்வத்தில் என்னையொத்தார் ஒருவருமில்லை. 'எனக்கு ரக்ஷகர் ஒருவருமில்லை' என்றிருக்கும் நீயும், 'ஸர்வேச்வரன் ஒருவனே ரக்ஷகன்' என்றிருக்கும் எனக்கு ஒப்பாகமாட்டாய். 'அதுகிடக்கட்டும். இவ்வுலகிலே நானே ரக்ஷகன் என்றறிந்தார் மற்றும் சிலருமில்லையோ உமக்கு ஒப்பாகைக்கு?' என்று பகவதபிப்ராயமாகச் சொல்லுகிறார்,—(புனக்காயாவண்ணனே உன்னைப் பிறர் அறியார்) நீ ரக்ஷகனல்லாமல் ஹிம்ஸகனானாலும் உன் வடிவழகைவிட்டு அகலமாட்டாத என்னையொழிய இவ்வுலகில் வேறெவரும் உன்னை அறியார். (புனக்காயாவண்ணனே) தன்னிலமாகிற புனத்தில் பூத்த காயாம்பூவைப்போன்ற திருநிறத்தையும், மென்மை, குளிர்த்தி, கந்தம் முதலிய தன்மைகளையும் உடையவனே! (புனக்காயாவண்ணனே! உன்னைப் பிறர் அறியார்) இவ்வுலகில் உன்னை தேஹாத்மாபிமானிகள் அறியவோ? ஸ்வதந்த்ராத்மாபிமானிகள் அறியவோ? தேவதாந்தரபரர் அறியவோ? ப்ரயோஜநாந்தரபரர் அறியவோ? ஸாதநாந்தரபரர் அறியவோ? ஸ்வரூபத்யானபரர்களான ரிஷிகள்தான் அறியவோ? "நித்யவிபூதியிலே அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகள் என்னையறிவாரில் தலைசிறந்தவர்களாயிற்றே. அவர்களாவது உமக்கு ஒப்பாவார்களா?" என்று பரமபுருஷன் கேட்கச்சொல்லுகிறார்,—(என் மதிக்கு விண்ணெல்லாம் உண்டோ விலை) பரமபதத்திலுள்ளார் உன் ஸ்வரூபரூபாதிகளை நன்கு அறிந்தவர்களே என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் அவர்கள் அனைவரும் சேர்ந்தாலும் எனக்கு ஒப்பாகமாட்டார்கள். விரோதியான கர்மஸம்பந்தமில்லாத தேசத்திலிருந்துகொண்டு உன்னையறிந்திருப்பவர்கள் அவர்கள். கர்மம் கொடுங்கோலாட்சிபுரியும் கொடுவுலகத்தில் 'நீயே ரக்ஷகன்' என்றறிந்திருப்பவனன்றோ நான். எனக்கு

அவர்கள் ஒப்பாவர்களோ? நீரில் தாமரைகள் இந்தளத்தில்—[இந்தளம்—நெருப்புச்சட்டி]—தாமரைக்கு ஒப்பாகுமோ? "சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" [விருத்தம்-79] என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தாரன்றே. (எனக்காவார் ஆரொருவரே) ஆக இப்படி உபயவிபூதியிலுள்ளாரும் எனக்கு ஒப்பாக மாட்டாமையாலே எனக்கு ஒப்பாவார் யாருளர்? "இனி யாவர் நிகர் அகல்வானத்தே" [திருவாய் 4-5-8] "நினைக்கும் நெஞ்சுடையேன் எனக்கினி யார் நிகர் நீணிலத்தே" [திருவாய் 6-4-7] "எனக்கு எவ்வுலகம் நிகரே" [திருவாய் 6-4-2] "ஒருவர் நம்போல் வருங்கேழ்பவர் உளரே" [திருவிருத்தம்-44] என்று நம்மாழ்வாரும் இப்படி அருளிச்செய்தார். இது பகவத்ஸம்பந்தமடியாக வந்த அஹங்காரமாகையாலே ஹேயமன்று; அத்யந்தம் உபாதேயமே.

52. விலைக்காட்டுபவர் விசாதியேற்றுண்பர்
தலைக்காட்பலிதிரிவர் தக்கோர்—முலைக்கால்
விடமுண்ட வேந்தனையே வேறா வேத்தாதார்
கடமுண்டார் கல்லாதவர்.

பதவுரை:—தக்கோர்—நீசர்கள், விலைக்கு ஆள்படுவர்—வாழ்வதற்காகப் பிறர்க்கு அடிமைப்பட்டிருப்பர்கள்; விசாதி ஏற்று உண்பர்—(மிருத்யுதானங்கள் வாங்கும் முகத்தால் பிறருடைய) வியாதிகளைத் தாம் வாங்கி அநுபவிப்பர்கள்; தலைக்கு ஆள் பலி திரிவர்—ஒருவன் தலைக்காகத் தம் தலையை அறுப்பதாகச் சொல்லி நரபலியாகத் திரிவர்கள்; முலைக்கால் விடம் உண்ட வேந்தனையே—(பூதனையின்) முலையிலிருந்த விஷத்தை உட்கொண்ட கண்ணனையே, வேறு ஆ எத்தாதார்—குறிப்பாகத் துதிக்கமாட்டாதவர்களாய், கல்லாதவர்—அறிவு கெட்டவர்களாய்க்கொண்டு, கடம் உண்டார்—பாபங்களையநுபவிப்பவர்களாயிராநின்றார்கள்.

பெரி-அவ:—ஐம்பத்திரண்டாம்பாட்டு. என்னோடு ஒப்பாருண்டோ என்று சொல்லுவானேன்னேன்னில்: இதுவன்றே நாடு அநர்த்தப்படுகிறபடி என்கிறார்.

வ்யா:—(விலையித்யாதி) ஈச்வரசேஷமாய், அநந்யார்ஹமான வஸ்துவை வேறுசிலர்க்கு சேஷமாக்கியும், ஜீவநத்துக்காகப் பிறருடைய

வ்யாதிகளை நீர்வார்ப்பித்துக்கொண்டும், ஒருத்தன் பிழைத்தால் தலை யரிகிறேன் என்று ப்ரார்த்தித்து பலித்ரவ்யமாய்த் திரிந்துமன்றோ படு கிறது. "தக்கோர்" என்று க்ஷேபோக்தி. (முலையித்யாதி) இவர்கள் குறித்துச்செய்வது ஸ்வவிரோதியைப் போக்குமவனை ஏத்தாமை. (கட மித்யாதி) அறிவுகேடர் **"ते त्वघं भुञ्जते पापाः"** (தே த்வகம் புஞ்ஜதே பாபா:) என்னும்படியே பாபத்தை புஜிக்கிறார்கள். அன்றிக்கே, கொடுக்க உடலின்றிக்கேயிருக்கத் தனிசுவாங்கி ஜீவிக்குமவர்களென் னவுமாம்.

திவ்ய-அவ:—'இவ்வுலகிலே எனக்கு ஸமானமானவர் உண்டோ' என்று ஒருவருமேயில்லைபோல் சொல்லலாமோ?; என்னில்: உலகில் எங்குபார்த்தாலும் இப்படிப்பட்டவர்களாகவேயிருக்கையாலே சொன்னேன் என்கிறார்.

வ்யா:--(விலைக்காட்படுவர்) பரமபுருஷனுக்கு அடிமைப்பட்டதாய், அவனுக்கே உரித்தானதாய், ஸ்ரீகௌஸ்துபம்போலே அவனுக்கு இனியதாய் அநர்க்கமானதான—(விலைமதிப்பற்றதான)—இவ்வாத்ம வஸ்துவை ஒரு பணத்துக்கும் அரைப்பணத்துக்கும் வேறுசிலருக்கு அடிமையாக்குவர். * வாழாட்பட்டு நிற்காமல் * சூழாட்பட்டு நிற்பர். (விசாதியேற்றுண்பர்) தனவானாயிருப்பானொருவன் வியாதியால் துன் புறும்போது, அவன் கொடுக்கும் பணத்திற்காக அவனுடைய வியாதியை தாரையேற்றுக்கொண்டு அந்த வியாதியை அநுபவிக்கவும் துணிவர். விசாதி—வியாதி. (உண்பர்) அவன் கொடுக்கும் பணத்தை அநுபவிக்கும்போதே வியாதியையும் அநுபவிப்பர். இவ்வளவேயோ;— (தலைக்காட்பலிதிரிவர்) மரணாவஸ்தையால் துன்புறும் ஒரு தனிகன் தலைதப்பினானாகில்—(பிழைத்தானாகில்)—என் தலையை அறுத்துக் கொடுக்கிறேன் என்று க்ஷுத்ரதெய்வங்களிடம் பிரார்த்தித்துப் பலித்ரவ்யமாய்த் திரிந்து, தலையை அறுத்தும் கொடுப்பர், பணத் தின்மேலுள்ள ஆசையாலே. (தக்கோர்) மஹாபுத்திசாலிகள்! சுவரை வைத்துக்கொண்டன்றோ சித்திரம் எழுதவேண்டும் என்னும் உண்மையை அறியாமல் தங்களைப் பிறர்க்காக்கி ச்வவ்ருத்தியான— நாய் வேலையான—ஸேவையை ஏறிட்டுக்கொண்டும், தங்கள் உடம் புக்கு வியாதியை வரவழைத்துக்கொண்டும், தங்கள் உடம்பையே

அழிக்க முற்பட்டுக்கொண்டும் தங்கள் உடம்புக்கு ஸுகம் தேடும் இவர்களுடைய் அறிவிருந்தபடி என்னே! இவர்கள் இப்படி அறிவு மழுங்குகைக்குக் காரணமென்னென்னில்: (முலைக்கால் விடமுண்டவேந்தனையே வேறு ஏத்தாதார் கல்லாதவர்) தாயுருக்கொண்டுவந்த பூதனையென்னும் பேயுடைய முலைவழியாக அவள் தடவிவந்த விஷத்தோடு கூட அவளுடைய வஞ்சனையாகிற விஷத்தையும் உண்டு அழித்த ஸர்வேச்வரனை புத்திபூர்வகமாகத் துதியாமையே இவ்வறிவுசேட்டுக்குக் காரணம் என்கை. விரோதிகளை அழிப்பதையே தொழிலாகக் கொண்டவனை நினைவறிந்து துதிக்காமையாலேயே இவர்களுடைய அஞ்ஞானமாகிற விரோதி அழியாமல் கிடக்கிறது என்றுபாவம். (வேந்தனையே வேறு ஏத்தாதார்) பகவானையே குறிப்பாகத் துதியாதவர்கள். பணத்திற்காக எதையும் செய்பவர்களாகையாலே, இவ்வுலகிலுள்ள நாய்களையும் பேய்களையும் இந்திரனென்றும் சந்திரனென்றும் துதிப்பதிலே ஒருகுறையுமிராது. ஆனால், பகவானாகிற ஒருவனைமட்டும் துதிப்பதேயில்லை என்னும் விரதம் பூண்டிருக்கிறார்கள், அறிவு கேட்டின் மிகுதியாலே. (வேறு ஏத்தாதார்) வேறு—தனியாக; குறிப்பிட்டு. “வேறு ஏத்தார்” என்பதற்கு விலக்ஷணமாகத் துதிக்காதவர்கள்” என்றுபொருள் கொள்வாருமுண்டு. ஆச்சான் பிள்ளையின் “இவர்கள் குறித்துச்செய்வது” என்ற ஸ்ரீஸூக்திக்கு நாம் கீழ் விவரித்த பொருளே பொருந்தும். அர்த்தஸ்வாரஸ்யமும் அப்பொருளிலேயே. (கடமுண்டார்) “தேத்வகம் புஞ்ஜதே பாபா:” [கீதை 3-13] [பாபிகளான அவர்கள் பாபத்தை புஜிக்கிறார்கள்] என்றாற்போலே பாபத்தை உண்கிறார்கள் இவர்கள். கடம்-பாவம். (வேந்தனையே வேறு ஏத்தார் கடமுண்டார் கல்லாதவர்)

“ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: ।
மாயயாऽபஹ்ருத ஜ்ஞாநா ஆஸுரம் பாவமாச்ரிதா: ॥

[கீதை 7-15]

[பாபிகளான மூடர்களும், நராதமர்களும், மாயையினால் அறிவுகெட்டவர்களும், அசுரஎண்ணங்கொண்டவர்களும் என்னை அடைவதில்லை] என்ற பகவத் வசனத்தை அடியொற்றியிருப்பது இது. (கடமுண்டார்) கடனுண்டார் என்றாய் எப்போதும் தாரித்ரியத்தாலே கடன்வாங்கி ஜீவிப்பவர்களாகவேயிருப்பவர் என்றுமாம்.

53. கல்லாதவ ரிலங்கை கட்டழித்த காகுத்த
னல்லாலொரு தெய்வம் யானிலேன்—பொல்லாத
தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத்
தேவரைத் தேறேல்மின் தேவு.

பதவுரை:— கல்லாதவர் இலங்கை — *அறிவுகெட்ட ராக்ஷஸருடையதான இலங்காபுரியை,* கட்டு அழித்த— *அரணழித்த,* காகுத்தன் அல்லால்— *இராமபிரானையல்லது,* ஒரு தெய்வம்— *வேறொரு தெய்வத்தை,* யான் இலேன்— *நான் தெய்வமாகக் கொள்வேனல்லேன்;* பொல்லாத தேவரை— *விரூபரான தேவதைகளாயும்,* தேவர் அல்லாரை— *(உண்மையில்) தெய்வத்தன்மையற்றவர்களாயும்,* திரு இல்லா தேவரை— *பிராட்டியின் ஸம்பந்தமில்லாமலே தேவரென்று பேர் சுமப்பவர்களாயுமுள்ள சிலரை,* தேவு — *தெய்வங்களாக,* தேறேல்மின் — *நீங்கள் நினைக்கவேண்டா.*

பெரி-வ்யா:—ஐம்பத்துமூன்றாம்பாட்டு:-(கல்லாதவரித்யாதி)கற்றான் ஒருத்தன் உளனாக, அவனைப்புறப்படவிட்ட ஜ்ஞாநஹீனருடையதான லங்கையை அரணழித்த சக்ரவர்த்தித் திருமகனையொழிய வேறொன்று ஸமாச்ரயணீயமாக நினைத்திரேன். **"भावो नान्यत्र गच्छति"** (பாவோ நாந்யத்ர கச்சதி) என்ற திருவடியைப்போலே இவரும். (பொல்லாத தேவரை) சுபாச்ரயமாக விரூபாக்ஷன் தொடக்கமானாரை ஆச்ரயிக்கப் போமோ? (தேவரல்லாரை) அத்தைப்பொறுத்து ஆச்ரயித்தாலும் கட்டக் குடியன்; அப்ராப்தஸ்தலம். (திருவில்லாத்தேவரை)மோக்ஷப்ரதனானவன் ஸ்ரிய: பதியன்றே. (தேறேன்மின் தேவு) ப்ராப்தஸ்தலமல்லாமையே யன்று; ஆச்ரயித்தால் ப்ரயோஜநமில்லை யென்கை. (தேறேன்மின்தேவு) முகப்பிலே புத்ரபச்வந்நாதிகளைத்தரும் அத்தைக்கண்டு ஆச்ரயணீயராய் புத்திபண்ணாதே கொள்ளுங்கோள்.

திவ்ய-அவ:—*''எனக்காவார் ஆரொருவரே' என்னும் நிலையிலே நீரிருக்கைக்கும், 'விலைக்காட்படுவர்' என்னும் நிலையிலே நாங்களிருக்கைக்கும் ஹேதுவையும், நாங்கள் உய்வதற்கு உபாயத்தையும் அருளிச்செய்யவேணும்'' என்று ஸம்ஸாரிகளில் சிலர்கேட்க, ''தேவதாந்தர ஸம்பந்தமில்லாமையே என்பெருமைக்கு ஹேது; அதுள்ளதே உங்கள் சிறுமைக்கு ஹேது; நீங்கள் உய்யவேண்டுமாகில் அதை அறுத்துக் கொள்ளுங்கள்'' என்று உபதேசிக்கிறார்.*

வ்யா:—(கல்லாதவரிலங்கை) குளவிக்கூடுபோலே கல்லாதவரெல்லாம் திரண்டுவ்ாழும் இலங்கை. "இஹ ஸந்தோ ந வா ஸந்தி"[ரா-ஸு 21-9] [இங்கு கற்றவர்களே இல்லையோ?] என்று பிராட்டியும் அதிஶங்கைகொள்ளும் இலங்கை. கற்றவனான விபீஷணன் ஒருவனிருப்பதைக்கண்டு பொறுக்காமல் அவனை விரட்டிவிட்ட அறிவுகேடர்க்கு இருப்பிடமான இலங்கை. இங்கு கல்வியாவது:—"ஸா வித்யா யா விமுக்தயே" [வி-பு 1-19-41] [மோக்ஷத்திற்கு உபயோகப்படுவதே கல்வியாகும்.] என்கிறபடியே மோக்ஷத்திற்கு உறுப்பான பரம்பொருளறிவு. இலங்கையிலுள்ளார்க்கு அதில்லையென்னுமிடம் பிரஸித்தமன்றோ. (கட்டழித்த காகுத்தன்) அவ்விலங்கையின் அரணையழித்த சக்கரவர்த்தித்திருமன். (காகுத்தனல்லால் ஒரு தெய்வம் யானிலேன்) அப்பிரானைத்தவிர வேறொருபொருளை ஆச்ரயிக்கத்தகுந்த தெய்வமாக நான் நினையேன்; இதுவே என் பெருமைக்குக்காரணம் என்றபடி. (யான் இலேன்) இதில்லாமையே உங்கள் சிறுமைக்கும் காரணம் என்கை.

"ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:।
பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி॥" [ரா-உ 40-15]

[பெருமானே! எனக்கு உன்னிடமுள்ள அன்பு (என்னிலும்) பெரிது. உன்னிடம் இவ்வன்பு என்றுமே நிலைநிற்பது; வீரனே! என் பக்தியும் அப்படியே நித்யமானது. என் நெஞ்சு வேறெங்கும் செல்லாது.] என்கிற ஹனுமானைப்போன்றவர் இவ்வாழ்வாரும். 'நாங்கள் உய்வுபாயம் யாது' என்ன, தேவதாந்தரங்களின் தன்மை சொல்லி அவர்களோடு ஸம்பந்தத்தை அறுத்துக்கொள்ளச் சொல்லுகிறார் பின்னடிகளாலே,—(பொல்லாத தேவரை) ரூபகுணசேஷ்டிதங்களாலே த்ருஷ்டிசித்தாபஹாரியாயிருக்கும் இவனைப்போலன்றியே, *காணிலும் உருப்பொலார், செவிக்கினிதான கீர்த்தியார், பேணிலும் வரந்தரமிடுக்கிலாதாராயன்றோ மற்ற தேவர்களிருப்பது. உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற இவனைப்போலன்றிக்கே, விரூபாக்ஷராயும் அனல்கக்கும் கண்ணராயுமிருக்கையாலே ரூபமும் பொல்லாதாயிருக்கும். 'துஷ்டர்களை அழித்தான்; நல்லோர்களை அளித்தான்; இறந்துபோன பிள்ளைகளை மீட்டுக்கொடுத்தான்; பறவைக்கும் பேய்க்கும் பானைக்கும் மோக்ஷமளித்தான்' என்பதுபோன்ற செவிக்கினிய செயல்களையுடைய இவனைப்போலன்றிக்கே, 'தந்தையின் தலையைக் கிள்ளினான்; அதற்குப் பரிஹாரமாகப் பிச்சையெடுத்தான்; யாகத்தையழித்தான்;

பஸ்மாஸுரனைக் கண்டு ஓடினான்; பாணாஸுரனுக்குத் துணைநின்று புறமுதுகிட்டான்' என்று மற்ற தெய்வங்களுடைய செயல்களும் செவிகொண்டு கேட்கவொண்ணாதபடி பொல்லாதாயிருக்கும். 'பத்ரம் புஷ்பம்' [கீதை] என்னும் இவனைப்போலன்றிக்கே, 'உன் பையலை அறுத்துத்தா' என்கையாலே குணங்களும் அறப்பொல்லாதாயிருக்கும். இப்படி எல்லாம் பொல்லாதாயிருக்கையாலே 'பொல்லாத தேவரை' என்கிறார். இப்படி சுபத்வமுமில்லாமல், ஆச்ரயத்வமாகிற த்யேயத்வமுமில்லாமலிருப்பவர்களை சுபாச்ரயமாக — (தியானிக்கத் தகுந்த மங்களப் பொருளாக)—ஆச்ரயிக்கமுடியுமோ என்றுபாவம். அடுத்தபடியாக, 'ஐயோ! 'தேவரை' என்று தப்பச்சொன்னோமே! தேவசப்தத்துக்குள்ள ஒரு பொருளும் பொருந்தப்பெறாத இவர்களை தேவரென்றதும் தவறு' என்று அநுசயிக்கிறார்,—(தேவரல்லாரை) இப்பொல்லாங்கையெல்லாம் பொறுத்துக்கொண்டு, வணங்கலாமென்று இவர்களுடைய ஸ்வரூபத்தை ஆராய்ந்தால், இயற்கையில் ஒரு பெருமையுமற்றவர்களாய் தாங்களே ஸர்வேச்வரனிடமிருந்து யாசித்துக் கஷ்டஜீவனம் பண்ணும் தரித்ரர்களாயிருப்பர்கள். வணங்கத்தகாதவர்களாயிருப்பர்கள் என்கை. (தேவரல்லாரை) 'திவு-க்ரீடா' "அயன்முதலாத் தந்த நளிர்மாமலருந்தி வீட்டைப்பண்ணி விளையாடும் விமலன்" என்று அவனுடைய விளையாட்டுக்கு உபகரணமாயிருப்பாரையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-விஜிகீஷா' புறமுதுகிட்டு ஓடியும், ஹுங்காரத்தாலே ஸ்தம்பித்தும் தவிப்பவரையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-வ்யவஹார' கிளிப்பிள்ளைபோலே அவனிடமிருந்து ஓதியுணர்ந்ததை உச்சரிப்பவர்களையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-த்யுதி' 'தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி" என்று ஒளியை இரவல் வாங்கி மினுங்குமவர்களையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-ஸ்துதி' துதிக்கத்தகாத ரூபகுண சேஷ்டிதங்களை உடையவர்களையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-மோத' பிண்டியார் மண்டையேந்தித் துன்புற்றவரையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-மத' பாணாஸுரயுத்தம் முதலிய சமயங்களிலே கர்வமொடுங்கப்பெற்றவர்களையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-காந்தி' காணிலும் உருப்பொலாதவரையோ தேவரென்பது? (தேவரல்லாரை) 'திவு-கதி' அரக்கரால் அலைப்புண்டபோது கதிதேடித்திரிபவர்களையோ தேவரென்பது? எதைக்கொண்டு இவர்களை தேவரென்பது?

இவர்கள் தேவரல்லாராயிருப்பதற்குக் காரணமென்னென்னில்: (திருவில்லாத்தேவரை) திருவில்லாத்தேவராயிருக்கையாலேயே தேவரல்லாராகின்றனர் என்றபடி. "ச்ரத்தயா தேவோ தேவத்வமச்நுதே" [பெரிய பிராட்டியாராலேயே தேவனாகிற நாராயணன் தேவனாயிருக்கும் தன்மையை அடைகிறான்.] என்று வேதமும் புகழும் பிராட்டியின் ஸம்பந்தமற்ற தேவர்களாகையாலே தேவத்வகந்தமும் அற்றவர்களாயுள்ளனர் என்கை. (திருவில்லாத்தேவரை) மிகத்தாழ்ந்தவர்களைச் சொல்லும்போது உலகத்திலும் 'திருவிலார்' என்றன்றோ சொல்லுவது. (திருவில்லாத்தேவரை) 'உதாம்ருதத்வஸ்ய ஈசாந:' என்று மோக்ஷமளிக்கும் பரமபுருஷனைப்பேச முற்பட்ட புருஷஸூக்தமும் 'ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ....ஸர்வம் மநிஷாண'[உனக்குஸ்ரீபூமி தேவிகள் பத்தினிகளாவர். உன்னிடம் எல்லாவற்றையும் பெறக்கடவோம்.] என்று ஸ்ரீமானான தத்துவமே மோக்ஷமளிப்பது என்று முடிவுகட்டிற்றன்றோ. (பொல்லாததேவரை தேவரல்லாரை திருவில்லாத்தேவரை) பிராட்டியின் ஸம்பந்தமில்லாமையாலே உண்மையில் தேவரல்லாதாராயிருந்தும், தேவர் என்று பெயர் சுமப்பவர்களாகையாலே 'பொல்லாததேவரை' என்றும் 'திருவில்லாத்தேவரை' என்றும் அருளிச்செய்கிறார். கள்ளிவ்ருக்ஷத்தை மஹாவ்ருக்ஷமென்றாப்போலே தேவரென்றும் மஹாதேவரென்றும் பெயர் சுமந்து திரிகின்றனரன்றோ. (தேறேன்மின் தேவு) இவர்களை தேவர்களாக மதிக்காதீர்கள். இது செய்தீர்களானால் நீங்களும் 'எனக்காவார் ஆரொருவரே' என்று சொல்லத்தகுந்த நிலையை அடைவீர்கள் என்று பாவம். (தேறேன்மின்தேவு) வெளித்தோற்றத்திற்குப் புத்திரன், பசு, அந்நம் முதலிய இப்பொருள்களைத் தருகையாலே, 'டுதாஞ்—தாநே' என்னும் தாதுவிலிருந்து தோன்றிய தேவசப்தம் இவர்களையும் குறிக்கக்கூடும்; ஆகையால் இவர்களும் ஆச்ரயிக்கத்தக்க தேவர்களே என்று நீங்கள் நினைக்கக்கூடும்; இவர்கள்தரும் அப்பொருள்கள் நிலையற்றவையாகையாலும், மிகத்தாழ்ந்தவையாகையாலும், அதையும் 'மயைவ விஹிதாந் ஹிதாந்' என்று கீதையில் பகவான் அருளியபடியே ஸர்வேச்வரனே இவர்கள் மூலமாகத்தருகிறானாகையாலும், இவர்களை தேவர்களாக நினைக்காதீர்கள் என்கை.

54. தேவராய் நிற்குமத்தேவும் அத்தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்—யாவராய்
நிற்கின்றதெல்லாம் நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாம் கடை.

பதவுரை:—தேவர் ஆய்நிற்கும் அத்தேவும்—(*ஆதித்யர் இந்திரன் முதலிய) தேவதைகளின் நடுவே உபேந்திரனாய் நிற்கிறநிலையும்*, அத்தேவரில்-*அந்த தேவர்களுக்குள்ளே*, மூவர் ஆய்நிற்கும்-*முப்மூர்த்திகளில் ஒருவனாய் நிற்பதாகிற*, முது புணர்ப்பும்—*முதல் அவதாரமும்*, யாவர் ஆய் நிற்கின்றது எல்லாம்—*மற்றும் தேவர் முதலியனவாய்க்கொண்டு நிற்கிற சிதசித்துக்களெல்லாமான*, நெடு மால்என்று ஓராதார்—*நாராயணனே என்று ஆராய்ந்துணர மாட்டாதவர்கள்*, கற்கின்றது எல்லாம் கடை—*கற்ற கல்வியெல்லாம் மிகத்தாழ்ந்தது.*

பெரி--வ்யா:—ஐம்பத்துநாலாம்பாட்டு. (தேவரித்யாதி) ஆதித்யேந்த்ராதிகளுக்கு நடுவே நிற்கும் நிலையும், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நடுவே **"मध्येविरिञ्चगिरिशं प्रथमावतारः"** (மத்யே விரிஞ்சகிரிஶம் ப்ரதமாவதார:) என்கிற ப்ரதமாவதாரத்தையும், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களிலும் சேதநத்வாரா ப்ரவேசித்து அவற்றுக்கு வஸ்துத்வ நாமபாக்த்வமுண்டாம்படி நிற்கிறநிலையும், ஸர்வாதிகனான ஈச்வரனேன்றறியாதவர்கள் பரக்கக்கற்கிறதெல்லாம் ஸம்ஸார ப்ரவர்த்தகராகைக்கு.

திவ்ய—அவ:—"'*பொல்லாத தேவரை*'*என்று தொடங்கி ருத்ரன் முதலான தேவர்களை தூஷிக்கிறீரே; உம் தெய்வமும் இந்திரன் முதலான தேவர்களில் ஒருவனான உபேந்திரனாகவும், ப்ரஹ்மருத்ரர்களோடு ஒருவனாகப் படிக்கப்படும் விஷ்ணுவென்னும் தேவனாகவும் தேவர்களில் ஒருவனாகவும், தேவர்களால் நியமிக்கப்படுபவனாகவும் இருப்பதாக சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறதே; இந்த தோஷங்கள் அவனையும் அடையவோ*" *என்று சிலர்கேட்க*, "*உபேந்திரனாகவும், விஷ்ணுவாகவுமிருப்பவனே ஸர்வாந்தர்யாமியான நாராயணன் என்று அறியாத நீங்கள் படித்த சாஸ்திரமெல்லாம் (உங்கள் விஷயத்தில்) வீணாயின*" *என்று அவர்களை நிந்திக்கிறார்.*

வ்யா:—(தேவராய் நிற்கும் அத்தேவும்) '*அதிதிபுத்திரர்களான ஆதித்தியர்கள் இந்திரன் ஆகிய தேவர்களிலே இவனும் ஒருவன்*' *என்று*

உலகத்தார் பிரமிக்கும்படி அதிதிக்குப் புத்திரனாய் உபேந்திரன் என்றும் வாமனனென்றும் பெயர்கொண்டு அவதரித்து தேவர்களிலே ஒருவனாய் நிற்கும் அந்த தெய்வநிலையும். 'தேவர்களுக்கு அந்தர்யாமியாய் நிற்கிற தெய்வமும்' என்று பொருள்கொள்வாருமுண்டு. அப்பொருள் 'யாவராய் நிற்கின்றதெல்லாம்' என்னுமடியிலிருந்தே கிடைக்கக்கூடியதாகையாலும், 'மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்' என்று விஷ்ணுவைச் சொல்லுவதற்கு முன் உபேந்திரனைச் சொல்லுவதே பொருத்தமுள்ளதாகையாலும், ஸங்கதிஸ்வாரஸ்யமும் உபேந்திரனைச் சொல்லும்போதே ஏற்படுகிறதாகையாலும் உபேந்த்ராவதாரத்தைச் சொல்லுவதாகக் கொள்ளுவதே பொருத்தமுடையது. "ஆதித்யேந்த்ராதிகளுக்கு நடுவே நிற்கும் நிலையையும், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நடுவே....ப்ரதமாவதாரத்தையும்" என்ற பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தியும் இப்பொருளையே காட்டுகிறது. (அத்தேவரில் மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்) அந்த தேவர்களுக்குள்ளே ப்ரஹ்மவிஷ்ணுருத்ரரென்னும் மும்மூர்த்திகளில் ஒருவனாக ஆகி, உலகோர்க்கு ப்ரஹ்மருத்ரர்களோடு ஸமன் என்னும் மயக்கத்தை விளைவித்துக்கொண்டு ப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவே விஷ்ணு என்னும் திருநாமத்துடனிருக்கும் முதல் அவதாரமும். (மூவராய் நிற்கும்) மும்மூர்த்திகளில் ஒருவனாய் நிற்கும். அன்றிக்கே, மும்மூர்த்திகளாகவும் நிற்கும் என்றும் கொள்ளலாம். இவன் ப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவே அவர்களோடு ஒருவன் என்று நினைக்கும்படி நின்றபோதிலும், அறிவாளிகள்

"ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுசிவாத்மிகாம் ।
ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந: ॥"[வி-பு 1-2-66]

[ஜனார்த்தனனாகிய நாராயணன் ஒருவனே படைத்து, அளித்து, அழிக்கும் பிரமன் விஷ்ணு சிவன் என்னும் மூன்று பெயர்களை அடைகிறான்] என்று இவனை ப்ரஹ்மருத்ரர்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் என்று அறுதியிட்டனரன்றோ. (முதுபுணர்ப்பும்) விஷ்ணு என்னும் பெயர்கொண்ட பழைமையான அவதாரமும். முதுமை—பழமை. புணர்ப்பு—ஸங்கல்பம்; (இங்கு) ஸங்கல்பத்தினாலேற்படும் அவதாரத்தைச் சொல்லுகிறது. "த்ரிபாதூர்த்வ உதைத் புருஷ: பாதோऽஸ்யேஹாபவாத் புந:" [மூன்று அவதாரங்களுடன் பரமபதத்தில் எழுந்

தருளியிருக்கும் பரமபுருஷன் ஸங்கல்பித்தான்; அவனுடைய ஒரு அவதாரமான அநிருத்தன் இவ்வுலகில் மறுபடியும் விஷ்ணுவாக அவதரித்தான்] என்று புருஷஸூக்தத்திலும், "ஸம்பவாம்யாத்மமாயயா" [என்னுடைய ஸங்கல்பரூபஜ்ஞானத்தாலே நான் பிறக்கிறேன்] என்று கீதையிலும் சொன்னபடியே இவனுடைய பிறப்பு மற்றுள்ளாருடையதைப்போலே கர்மத்தாலாவதன்றிக்கே ஸங்கல்பத்தாலேயே ஆவதொன்றன்றோ. இவனுடைய பிறப்பு இழிவானதன்றென்று உணர்த்துவதற்காக, 'புணர்ப்பு' [ஸங்கல்பத்தாலான அவதாரம்] என்று அதைக் குறிப்பிடுகிறார். (முது புணர்ப்பும்) "பாதோஸ்யேஹாபவாத் புந:" என்று புருஷஸூக்தத்தில் சொன்னபடியே ப்ரஹ்மருத்ரர் நடுவே படிக்கப்படும் விஷ்ணு என்னும் அவதாரமே இவ்வுலகத்தில் முதல் அவதாரமாகையாலே 'முதுபுணர்ப்பு' என்கிறார். (மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்) ப்ரஹ்மருத்ரர்களோடு ஒருவனாய் நின்றபோதிலும்,

"மத்யேவிரிஞ்சகிரிஶம் ப்ரதமாவதார:
தத்ஸாம்யத: ஸ்தகயிதும் தவசேத் ஸ்வரூபம்।
கிம் தே பரத்வ பிஶுநைரபி ரங்கதாமந்
ஸத்த்வப்ரவர்த்தந க்ருபாபரிபாலநாத்யை:॥" [ர-ஸ்த 2-5]

[அரங்கனே! ப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவே முதல் அவதாரமெடுத்து விஷ்ணுவாய் நிற்பது அவர்களோடு ஒற்றுமையைக்காட்டி உன் ஸ்வரூபத்தை மறைப்பதற்காகவாகில், (அவ்வவதாரத்திலேயே) உன் பரத்வத்தைக்காட்டும் ஸத்வகுணப்ரவர்த்தனம், அருளாலே ப்ரஹ்மருத்ரர்களை ரக்ஷித்தல் முதலிய காரியங்களை நீ எதற்காகச் செய்கிறாய்?] என்று பட்டருளிச்செய்தபடியே இவன் பரமபுருஷனின் அவதாரமே என்பது ஸுப்ரஸித்தமாயன்றோ இருப்பது. 'விஷ்ணுவாய் நின்று ப்ரஹ்மருத்ரர்களையும் அவர்களுடைய சரீரத்தையும் அதிஷ்டித்து நிற்குமளவேயோ? சேதநாதிஷ்டிதமாயிருக்கும் ஸர்வபதார்த்தங்களையும் அதிஷ்டித்து நிற்பவன் இவனேயன்றோ' என்கிறார் அடுத்தபடியாக:— (யாவராய் நிற்கின்றது எல்லாம்) தேவர், மநுஷ்யர், திர்யக், ஸ்தாவரம் என்னும் சரீரங்களையும், அவற்றை அதிஷ்டித்துநிற்கும் சேதனரையும் 'யாவராய் நிற்கின்றது' என்கிறது. 'யாவராய் நிற்கின்றது எல்லாம்' என்கையாலே ஏதேனுமொரு சேதனனாலே அதிஷ்டிக்கப் படாத அசேதனம் இல்லையென்று உணர்த்தப்படுகிறது.

" அவிநாஶிது தத் வித்தி யேந ஸர்வமிதம் ததம்" [2-17]
[இந்த எல்லா அசேதனப்பொருளும் எதனால் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அவ்வாத்மதத்வத்தை அழிவற்றதென்று அறிவாயாக] என்று கீதையிலும் சொல்லப்பட்டதன்றோ. (யாவராய் நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்று ஓராதார்) தன்னிலும் வேறுபட்ட எல்லாப்பொருள்களிலும் சேதனரைமுன்னிட்டு வியாபித்து, அவற்றுக்கு ஸத்தையையும், ரூபநாமங்களையும் கொடுத்துநிற்கும் நாராயணனே உபேந்திரனாகவும், விஷ்ணுவாகவும் அவதரித்து தேவரிலும், மூவரிலும் ஒருவனாய் நிற்கிறான் என்று அறியாதவர்கள். (நிற்கின்றதெல்லாம் நெடுமால்) நிற்கின்ற எல்லாப்பொருள்களுமாகிநிற்கும் நெடுமாலே தேவராய் நிற்கும் அத்தேவும், மூவராய் நிற்கும் மூதுபுணர்ப்பும் என்னுதல்; தேவராய் நிற்குமத்தேவும், மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் யாவராய் நிற்கின்றதெல்லாமும் நெடுமால் என்னுதல். அந்வயத்தில் பேதமேயொழிய அர்த்தத்தில் பேதமில்லை. தேவும் முதுபுணர்ப்பும் யாவராய் நிற்கின்றதும் (ஆகிய) எல்லாம் நெடுமால் என்று கூட்டிப்பொருள் கொள்வாரும் உண்டு. (நெடுமால் என்று ஓராதார் கற்கின்றதெல்லாம் கடை) ப்ரஹ்மருத்ரர்களுக்கும், தேவர்களுக்கும் நடுவே அவதரித்து நிற்பவன் ஸர்வேச்வரனே என்று அறியாதவர்கள் கற்ற கல்வியெல்லாம் வீணானது மட்டுமன்று; ஸம்ஸாரத்தில் மேலும்மேலும் அழுத்தி அநர்த்தத்தையும் விளைப்பது. (கற்கின்றதெல்லாம் கடை) "வித்யாऽந்யா ஶில்பநைபுணம்" [மற்ற கல்வியெல்லாம் செருப்புத்தைக்கக் கற்ற கல்விபோன்றதாகும்] என்று விஷ்ணுபுராணத்தில் சொன்னாப்போலே. (நெடுமால் என்று ஓராதார் கற்கின்றதெல்லாம் கடை)

"சதுர்வேததரோ விப்ரோ வாஸுதேவம் ந விந்ததி ।
வேதபாரபராக்ராந்த: ஸ வை ப்ராஹ்மணகர்த்தப: ॥"

[நாலு வேதமும் படித்த ப்ராஹ்மணனாயினும் வாஸுதேவனே பரனென்று அறியானாகில், வேதமாகிற (குங்கும) பாரத்தைச் சுமக்கும் ப்ராஹ்மணக்கழுதையாவான் அவன்] என்று சொல்லப்பட்டதன்றோ.

55. கடைநின்றமரர் கழல்தொழுது நாளும்
இடைநின்ற வின்பத்தராவர்—புடைநின்ற
நீரோதமேனி நெடுமாலே நின்னடியை
யாரோதவல்லா ரவர்.

பதவுரை:—அமரர் கடைநின்று— தேவதாந்தரங்களின் வாசல்களைப்பற்றிநின்று, நாளும்—தினந்தோறும், கழல் தொழுது—(அவர்களுடைய) காலில் விழுந்து, இடைநின்ற இன்பத்தர் ஆவர்— (ஸம்ஸார மோக்ஷங்களுக்கு) நடுவேகிடக்கிற (சுவர்க்கம் முதலிய) சுகத்தைப் பெற்றொழிவர்கள்; புடை நின்ற நீர் ஓதம் மேனி நெடுமாலே— (பூமியைச்) சூழ்ந்து கிடக்கிற கடல்போன்ற திருமேனியையுடைய ஸர்வேச்வரனே! நின் அடியை—உனது திருவடிகளை, ஓத வல்லாரவர்ஆர்— அநுஸந்திக்க வல்லார் ஆரேனுமுண்டோ? [யாருமில்லையே!]

பெரி—வ்யா:—ஐம்பத்தைந்தாம்பாட்டு. (கடை) தேவதாந்தரங்கள் வாசலிலே நின்று ஸர்வேச்வரன்பக்கல் பண்ணும் ப்ரணமாதிகளை அவர்கள்பக்கலிலேபண்ணி ஸம்ஸாரஸுகமுமின்றிக்கே நிரதிசயமான மோக்ஷஸுகமுமின்றிக்கேயிருக்கிற ஸ்வர்க்கஸுகத்தையுடையராவர். (புடையித்யாதி) ஒரு ப்ரயோஜநம் பெறாவிடிலும் ஸ்தோத்ரம்பண்ண வேண்டும்படி ச்ரமஹரமான வடிவையுடைய உன் திருவடிகளையேத்த வல்லாரார்?

திவ்ய—அவ:—இப்படிப் பரோபதேசம் செய்தும் திருந்துவாரில்லாமையாலே, 'பிரானே! அல்பஸுகத்தைத் தேடி தேவதாந்தரங்களின் காலில் விழுவார் நிறைந்துள்ள இவ்வுலகில் பேரின்பமளிக்கும் உன் திருவடியைத்துதிக்கவல்லார் ஆருளர்?' என்று ஸர்வேச்வரனிடம் முறையிடுகிறார். 'விலைக்காட்படுவர்' என்னும்பாட்டிலே ஸம்ஸார ஸுகத்தைத் தேடியலைபவர்களைக்கண்டு துன்புற்றார். இப்பாட்டில், ஸித்தமான ஸம்ஸாரஸுகத்திலும், ஸாத்யமாயினும் மிகச்சிறந்ததான மோக்ஷஸுகத்திலும் ஈடுபடாமல், ஸாத்யமாயும் அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள ஸ்வர்க்காதி ஸுகஸித்திக்காக யஜ்ஞாதிகளை அநுஷ்டித்து மற்ற தேவதைகளின் காலிலேவிழுந்து துவளுமவர்களைக்கண்டு துன்புறுகிறார்.

வ்யா:—(அமரர் கடைநின்று) ஆராதிக்க அரியவர்களான அமரர்களின் வாசலிலே நின்று. தொழுது மாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு எழுதும் என்னும் இது மிகையான அவனைப்போன்றவர்களன்றே இவர்கள். (கழல்தொழுதுநாளும்) தினந்தோறும் அவர்கள் காலிலே விழுந்து. ஓரஞ்சலியை பாரமாகவும், 'கோவிந்தா' என்னும் சப்தத்தை மனத்தையழுத்தும் சுமையாகவும் கொண்டு, ஆர்த்தநாதம் செவிப்

பட்டவுடன் அரைகுலையத்தலைகுலைய அடியாரிருந்தவிடத்திற்கு ஓடி வரும் அவனைப்போன்றவர்களன்றே இவர்கள். (கழல்தொழுதுநாளும்) ஸாதனபுத்தியுடனல்லாமல், ஸ்வயம் ப்ரயோஜனமாக அவன் திருவடியிலே செய்யவேண்டிய செயல்களை அவர்களிடம் செய்து. இப்படிப் படாதனபட்டதற்குப்பலன் யாதென்னில்;—(இடைநின்ற இன்பத்தராவர்) இவ்வுலகிலுள்ள வித்தஸுகமுமில்லாமல், ஸாத்யஸுகமான போதிலும் மிகச்சிறந்ததான மோக்ஷஸுகமுமில்லாமல், ஸாத்யமுமாய், அல்பாஸ்திரமுமான ஸ்வர்க்காதிஸுகத்தைப் பெறுவர்கள். இதென்ன அறிவுகேடு. 'விலைக்காட்படுவர்' என்ற பாட்டிற்சொன்ன ஸம்ஸாரிகள் 'கையிலிருக்கும் முயலைவிட்டுக்காக்கைப்பின் போவது போலே ப்ரத்யக்ஷமாயிருக்கும் ஸுகத்தை விட்டுக்கண்காணாத ஸுகத்தைத்தேடியலைகைபாவதென்' என்று எண்ணி இவ்வுலக இன்பத்தைத் தேடியலைவர். அவர்கள்கூட அறிவாளிகள் என்று சொல்லத்தகுந்தவர்களாகின்றனர், இவர்களைக்காணும்போது. ப்ரத்யக்ஷமுமல்லாததாய் ஸம்ஸாரஸுகத்தைப்போலவே அல்பாஸ்திரமானதான ஸுகத்தையல்லவோ இவர்கள் தேடிப்படாதன படுகின்றனர்.

(புடைநின்ற நீரோதமேனி நெடுமாலே) பூமியைச் சூழ்ந்துநிற்கும் கடல்போன்ற திருமேனியை உடைய எம்பிரானே! ப்ரத்யக்ஷமாயிருந்தபோதிலும் அல்பாஸ்திரமான ஸம்ஸாரஸுகத்தைப்போலுமல்லாமல், கண்காணாத ஸ்வர்க்கமோக்ஷஸுகங்களைப்போலுமல்லாமல், அர்ச்சாவதாரபர்யந்தமாய் நிற்கையாலே அடியார்க்கு ப்ரத்யக்ஷமாயும், கடல்போலே ஸகலதாபஹரமாயும், சிறந்த ஸுகத்தை அளிப்பதாயுமிருப்பதன்றோ உன் திருமேனி என்று பாவம். (நீரோதமேனி நெடுமாலே உன்னடியை யாரோதவல்லாரவர்) ஒருபலனுமில்லாவிடினும் துதிக்கவேண்டும்படியான பெருமைபெற்ற உன் திருமேனியைத் துதிக்கவல்லவர்கள் இவ்வுலகில் யாரிருக்கின்றனர்? விலைக்காட்படும் ஸம்ஸாரிகள் துதிக்கவல்லரோ? இடைநின்ற இன்பத்தரான இவர்கள் தான் துதிக்கவல்லரோ?

56. அவரிவ ரென்றில்லை யனங்கவேள் தாதைக்கு
எவரு மெதிரில்லை கண்டீர்—உவரிக்
கடல்நஞ்சமுண்டான் கடனென்று வாணற்
குடனின்று தோற்றா னொருங்கு.

பதவுரை:—அவர் இவர் என்று இல்லை—*அறிவாளிகள் அறிவற்றோர் என்று ஒருவாசியில்லை*; அனங்கவேள் தாதைக்கு— *காமனுக்குத் தந்தையான கண்ணபிரானுக்கு*, எவரும்—*ஒருவரும்*, எதிர் இல்லை கண்டீர்—*எதிர் நிற்கவல்லாரில்லை காண்மின்*; உவரிக்கடல் நஞ்சம் உண்டான்—*கடலில் தோன்றின விஷத்தை உட்கொண்டவனான சிவன்*, வாணற்கு—*பாணாஸுரனுக்கு*, கடன் என்று—*'உன்னை ரக்ஷிப்பது என்கடமை' என்று சொல்லி*, உடன் நின்று—*அவனோடு கூடவே நின்று (எம்பெருமானுடன்) சண்டைசெய்து*, ஒருங்கு தோற்றான்—*அவனோடு கூடத்தோற்று ஓடிப்போனான்.*

பெரி–வ்யா:—ஐம்பத்தாறும்பாட்டு. (அவரித்யாதி)காமனுக்குத்பாதகனுக்கு ஒருத்தருமுபமாநமில்லாமைக்கு விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியில்லாமை கண்டிகோளே. (உவரியித்யாதி) ஒருத்தருமில்லையென்கிறதேன்? ஒருதேவர் இல்லையோவென்னில்; அவரும் செய்தபடி இதுவன்றோவென்கிறார். அம்ருதமதநகாலத்திலேயுண்டான விஷத்தைக் கண்டத்திலே தரித்தானான ருத்ரனும் தன்னையாச்ரயித்த வாணனுக்கு ஓலக்கத்திலே ரக்ஷிக்கிறேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணி அவன்தானே ஸாக்ஷியாகத் தோற்றான். (ஒருங்கு) ஒருபடிப்பட; வாணனோடு தன்னோடு வாசியற.

திவ்ய–அவ:—*"நெடுமாலே நின்னடியை யாரோதவல்லாரவர்" என்று ஆழ்வார் பரோபதேசத்தில் நின்றும் கண்ணநீரோடே கை வாங்குவதைக் கண்ட ருத்ரபக்ஷபாதிகள் சிலர்,—"நீர் பகவானுக்குப் பெருமைசொல்லுவதெல்லாம் சரி! ஆனால் ருத்ரனையும் விஷ்ணுவோடொத்தவனாகவே கொள்ளவேண்டும். அம்ருதமதநகாலத்திலே தேவாசுரர்களை அழிக்கவிருந்த ஆலகால விஷத்தை உண்டு அனைவரையும் ரக்ஷித்தவனன்றோ சிவன்" என்று கேட்க, "தன்னை அண்டின பாணனை ரக்ஷிப்பதாக ப்ரதிஜ்ஞைபண்ணிப் பிறகு கிருஷ்ணனோடு யுத்தம் மூண்ட காலத்திலே புறமுதுகிட்டு ஓடிய ருத்ரனையோ நீங்கள் ரக்ஷகனாக நினைப்பது? ஸர்வேச்வரனோடு ஒத்தவர் ஒருவருமேயில்லைகிடீர்" என்று அவர்களைத் தெளிவிக்கிறார்.*

வ்யா:—(அனங்கவேள் தாதைக்கு அவரிவரென்றில்லை எவரும் எதிரில்லை கண்டீர்) அழகிற்சிறந்த மன்மதனுக்கும் தந்தையாய், ஸாக்ஷாத் மந்மதமந்மதன் என்று புகழப்படுபவனாயிருக்கும் ஸர்வேச்வரனுக்கு அறிவாளிகளோடு அறிவற்றாரோடு வித்தியாசமில்லாமல் அனைவரும் ஒப்பில்லை என்னும் விஷயத்தைப் பார்த்தீர்களா? (அனங்கவேள் தாதைக்கு எவருமெதிரில்லை) அழகில் ஒப்பில்லாதாப்போலே ஆண்மையிலும் ஒப்பில்லாமை கண்டீர்களோ? (அவர் இவர்) 'அவர்' என்று தூரத்திலிருப்பவரையும், 'இவர்' என்று அருகிலிருப்பவரையும் குறிக்கும் சொற்கள். இங்கு, ஸாமாந்ய சேதனருடைய புத்திக்கு வெகு தூரத்திலிருக்கும் ப்ரஹ்மருத்ராதிகளை 'அவர்' என்னும் பதமும், அருகிலிருக்கும் மற்ற சேதனரை 'இவர்' என்னும் பதமும் குறிப்பிடுகின்றன. ஜ்ஞாநசக்த்யாதிகளில் குறைந்த இவ்வுலகத்தோர் எப்படி எம்பிரானுக்கு ஒப்பாகமாட்டார்களோ, அப்படியே, அவைகளில் மிக்க ப்ரஹ்மருத்ராதிகளும் அவனுக்கு ஒப்பாகமாட்டார்கள் என்கை. (எவரும் எதிரில்லை கண்டீர்) நீங்கள் உயர்ந்தவனாகக்கருதும் ருத்ரனோடு அவனுக்குக் கீழ்ப்பட்ட தேவதைகளோடு வாசியின்றிக்கே எவரும் எம்பிரானுக்கு எதிர் நிற்கமுடியாதென்பதைக் கண்டீர்களோ? காணவில்லையாகில் நான் காட்டக்காணுங்கள் என்று பாவம்.

'எவரும் எதிரில்லை' என்னலாமோ, அம்ருதமதநகாலத்திலே பாற்கடலிலிருந்து தோன்றிய ஆலகாலவிஷத்தை உண்டு அமரரை ரக்ஷித்த சிவன் ஒப்பாகமாட்டானோ? என்றுகேட்க அருளிச்செய்கிறார் மேல்;-(உவரிக்கடல் நஞ்சமுண்டான்) உப்புக்கடலிலிருந்து தோன்றிய விஷத்தை உண்டவனாக நீங்கள் அபிமானித்திருக்கும் சிவன். உண்மையில் ஸர்வேச்வரனுடைய அதிஷ்டானம் அச்சமயம் விசேஷித்திருந்ததாலேயே ருத்ரன் விஷபானம் செய்யமுடிந்ததென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. (கடன் என்று வாணற்கு) 'உன்னை ரக்ஷிப்பது என் கடமை' என்று பாணாஸுரனுக்கு நாலுபேரறியும்படி ஸபையிலே ப்ரதிஜ்ஞைபண்ணி. (உடன்நின்று) அவனோடு கூடவேநின்று எம்பிரானுடன் சண்டைசெய்து. (உடன்நின்று தோற்றான்) அந்த பாணாஸுரனே ஸாக்ஷியாம்படி தோற்றான். (ஒருங்கு தோற்றான்) வாணனோடு தன்னோடு வித்தியாசமில்லாதபடி தோற்றான். அன்றிக்கே,

"மோடியோடு இலச்சையாய சாபமெய்தி முக்கண்ணன் கூடுசேனை மக்களோடு கொண்டுமண்டி வெஞ்சமத்து ஓட" [53] "முண்டன் நீறன் மக்கள் வெப்புமோடி அங்கி ஓடிட" [71] [முண்டன் நீறன்—சிவன்; வெப்பு—ஜ்வரம்; மோடி—காளி; அங்கி—அக்னி] என்று இவ்வாழ்வார் திருச்சந்தவிருத்தத்திலும், "பரிவின்றி வாணனைக்காத்து மென்றன்று படையொடும் வந்தெதிர்ந்த திரிபுரம் செற்றவனும மகனும் பின்னும் அங்கியும் போர்தொலைய" [திருவாய் 3-10-4] என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தபடியே தன் பரிவாரங்களோடு தன்னோடு வாசியறத்தோற்றான் என்றும் கொள்ளலாம். திருப்பாற்கடலை உப்புக்கடலென்றது பொதுவாக ஸமுத்ரம் உவர்ப்பாயிருக்குமாகையாலே. க்ருஷ்ணனுடையபிள்ளை ப்ரத்யும்னன் மந்தமனுடைய அம்சமாகையால் கண்ணனை 'அநங்கவேள்தாதை' என்றார்.

57. ஒருங்கிருந்த நல்வினையும் தீவினையுமாவான்
பெருங்குருந்தஞ் சாய்த்தவனே பேசில்—மருங்கிருந்த
வானவர்தாம் தானவர்தாம் தாரகைதான் என்னெஞ்சம்
ஆனவர்தா மல்லாததேன்.

பதவுரை:—பேசில்—உண்மை பேசப்புகுந்தால், பெருகுருந்தம் சாய்த்தவனே—பெரிய குருந்தமரத்தை வேர்பறியத் தள்ளி முறித்த கண்ணபிரானே, ஒருங்கு இருந்த நல்வினையும் தீவினையும் ஆவான்—ஜீவனுடன்கூடநிற்கும் புண்யபாபங்களுக்கு நிர்வாஹகன்; மருங்கு இருந்த—ஸமீபத்திலுள்ள, வானவர்தாம்—தேவர்களும், தானவர்தாம்—அசுரர்களும், தாரகைதான்—பூமியும், என் நெஞ்சம் ஆனவர்தாம்—என் நெஞ்சினுள் உறைகின்ற ஸர்வேச்வரனேயாம்; அல்லாதது என்—அந்த ஸர்வேச்வரனல்லாத வஸ்து என்ன இருக்கிறது?

பெரி-வ்யா:—(ஒருங்கித்யாதி) "अवश्यमनुभोक्तव्यं"(அவச்யமநுபோக்தவ்யம்) என்கிற புண்யபாபங்களுக்கு நிர்வாஹகனானவனே குருந்தை அநாயாஸேந ஒசித்தாற்போலே நம்முடைய வலிய ப்ரதிபந்தகங்களைப் போக்குவான். (மருங்கித்யாதி) ஆஸந்நரான தேவர்கள், அஸுரர்கள், தாரகைதான் இதடங்கலுக்கும் அவனையொழிய ஸ்திதியில்லை.

திவ்ய-அவ:—ஆக, "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்று தொடங்கி, "அனங்கவேள் தாதைக்கு எவருமெதிரில்லை

கண்டீர்" என்னுமளவும் ப்ரஹ்மருத்ரர்களுக்குப் பரத்வம் சொல்லு வாரும், எம்பெருமானோடு ஸாம்யம் சொல்லுவாரும் நிரஸிக்கப்பட் டனர். ப்ரஹ்மருத்ரர்களும் நாராயணனும் ஒருவரே என்று திரி மூர்த்யைக்யம் சொல்லுமவன் வாதாடக்கிளம்பினான் பின் வரும் யுக்தியைச் சொல்லிக்கொண்டு. அதாவது:— "வேதத்திலேயே 'ஸ ப்ரஹ்மா ஸ சிவ:'' 'ப்ரஹ்மா நாராயண:। ஶிவச்ச நாராயண:' [நாரா யணோபநிஷத்] [பிரமனும் நாராயணனே; சிவனும் நாராயணனே] என்று சொல்லப்பட்டிருக்கையாலே ப்ரஹ்மருத்ரர்களும் நாராயண னும் ஒரே தத்துவமே; அப்படியிருக்க, இவன் பெரியவனா, அவன் பெரியவனா என்று வாதாடுவதே வேதவிருத்தமாகும்'' என்று. இந்த துர்வாதத்தை இப்பாசுரத்தில் கண்டித்து நிரஸனம் செய்தருளுகிறார். ''கெடுவாய்! 'ப்ரஹ்மா நாராயண: ஶிவச்ச நாராயண:' 'ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ:' என்றவுடன் 'ஸேந்த்ர:' 'ஶக்ரச்ச நாராயண:, காலச்ச நாரா யண:, திஶச்ச நாராயண:, விதிஶச்ச நாராயண:, ஊர்த்வஞ்ச நாராயண:, அதச்ச நாராயண:, அந்தர் பஹிச்ச நாராயண:; நாராயண ஏவேதம் ஸர்வம் யத்பூதம் யச்ச பவ்யம்' [இந்திரனும் நாராயணனே, காலமும் நாராயணனே, திக்குகளும் நாராயணனே; விதிக்குகளும் நாராயணனே; மேலும் நாராயணனே; கீழும் நாராயணனே; உள்ளும் புறமும் நாராயணனே; முன் இருந்தவையும், (இப்போதிருப்பவையும்), இனி வருமவவையு மெல்லாம் நாராயணனே] என்று ஜீவர்களாக ப்ரஸித்தர்களான இந்திரன் முதலானோரோடு, அறிவற்ற காலம், திக் முதலானவற்றோடு வாசியில்லாமல் எல்லாம் நாராயணனே என்று உத்கோஷித்திருக்கிற படி கண்டாயே; அசேதனப்பொருள்களோடு பரமசேதனனுக்கு ஸ்வ ரூபைக்யம் சொல்லுவாயோ? அவையெல்லாம் நாராயணனுக்கு விபூதியாய், சரீரமாய், கார்யமாய், தார்யமாய், வ்யாப்யமாய், நிர் வாஹ்யமாய், நியாம்யமாய், ஶேஷபூதமாய், ப்ரகாரமாயுள்ளனவாகை யாலே 'எல்லாம் அவனே' என்று சொல்லலாம் என்றுதானே நிர் வஹித்தாகவேண்டும். அப்படியே இந்த ப்ரஹ்மருத்ரர்களுமிருக்கை யாலே 'இவர்களும் அவனே' என்று சொல்லப்படுகிறது என்றன்றோ நிர்வஹிக்கவேண்டும். சாஸ்திரங்களிலே அவனல்லாததாகச்சொல் லப்படும் வஸ்து என்ன இருக்கிறது?" என்று பதிலுரைப்பதன்மூலம் சாஸ்திரத்தை ப்ரமாணமாகக் கொண்டு திரிமூர்த்யைக்யம் ஸாதிப் பவனை நிரஸித்தருளுகிறார்.

வ்யா:—(பேசில்) 'ப்ரஹ்மா நாராயண:, பிவச்ச நாராயண:' முதலான வாக்கியங்களைக்கொண்டு பேசப்புகுந்தால். (ஒருங்கிருந்த நல்வினையும் தீவினையும் ஆவான்) நம்மோடு கூடவேயிருக்கும் புண்ய பாபங்களும் அவனேயாவான். "ஏஷ ஏவ ஸாது கர்ம காரயதி । ஏஷ ஏவ அஸாது கர்ம காரயதி" [இப்பரமபுருஷனே ஜீவனை நற்கருமம் செய்விக்கிறான்; இப்பரமபுருஷனே இந்த ஜீவனைத் தீய கருமங்களைச் செய்யும்படி தூண்டுகிறான்] என்கிறபடியே புண்யபாபகர்மங்களை நிர்வஹிப்பவன் அவனேயாகையாலே புண்யபாபங்களாயிருப்பவனும் அவனேயென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறான். இதுகொண்டு, அசேதநமாய் க்ஷணத்வம்ஸியான கர்மத்தோடு அவனுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லுவதோ? (ஒருங்கிருந்த நல்வினையும் தீவினையும) அநுபவித்தாலல்லாது கழியாமல் கூடவேயிருக்கும் புண்ணியமும் பாவமும்.

"அவச்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம் ।
நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி ॥
[ப்ரஹ்மவைவர்த்தம்-ப்ரக்ருதிகண்டம் 26-90]

[(ஜீவனால்) செய்யப்பட்ட நல்வினையும் தீவினையும் அவனால் அநுபவிக்கப்பட்டே தீரவேண்டும். நூற்றுக்கணக்கான கல்பகோடிகாலமானாலும் கர்மம் அநுபவியாமல் கழியாது.] என்று சொல்லப்படுகிறதன்றோ. (பெருங்குருந்தம் சாய்த்தவனே நல்வினையும் தீவினையும் ஆவான்) கண்ணனாய் அவதரித்தபோது கம்ஸனால் ஏவப்பட்ட ஒரு அசுரன் கண்ணன் ஏறும் குருந்த மரமொன்றிலே ஆவேசித்துநிற்க, அதை ஒடித்தெறிந்து அவ்வசுரனை அழித்து ஆயர்களின் விரோதியை விளையாட்டாகப் போக்கினாற்போலே, நம்முடைய விரோதியான பாபங்களை "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று ஸங்கல்பமாத்ரத்தாலே போக்குவான். இப்படிக்கர்மம் அவனிட்ட வழக்காகையாலே புண்ய பாபகர்மமாகவே சொல்லப்படுகிறான் அவன்என்று கருத்து.

இவ்வளவேயோ? (மருங்கிருந்த வானவர்தாம்) உங்களுக்கு எட்டாதவராகையாலே ஐக்யப்ரமத்தை விளைக்கும் ப்ரஹ்மருத்ரர்களிருக்கட்டும்; நம்மைப்போலே ஜீவர்களாக ப்ரஸித்தர்களாகையாலே நமக்கு அருகிலிருக்கும் இந்திரன், அக்னி, வாயு, ஸூர்யன், முதலிய தேவதைகளும் அவனேயென்றன்றோ சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றனர். "ஶக்ரச்ச நாராயண:" "ததேவாக்நிஸ் தத் வாயு: தத் ஸூர்யஸ் தது சந்த்ரமா:" [அந்த ப்ராஹ்மமே அக்னி; அதுவேவாயு; அதுவேஸூர்யன்; அதுவேசந்திரன்] என்றன்றோ வேதங்கள் விளம்புகின்றன. இந்த

தேவர்களோடு அவனுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லலாமோ? 'சொன்னால் போகிறது' என்ன, அருளிச்செய்கிறார் (தானவர்தாம்) 'பாபிகளான அஸுரர்களும் அவனே' என்றன்றோ சொல்லப்படுகிறது? இவர்களோடு அவனுக்கு ஐக்யம் சொல்லுவதோ? 'ஸகலசேதனஸ்வரூபமும் ப்ரஹ்மம் ஒன்றே' என்று ஆத்மைக்யத்தை ஒப்புக்கொண்டுவிட்டால் போகிறது என்ன, அருளிச்செய்கிறார் (தாரகைதான்) அசேதனதத்வமான பூமியும் அவனே என்றன்றோ 'திஶச்ச நாராயண: விதிஶச்ச நாராயண: நாராயண ஏவேதம் ஸர்வம்' என்று வேதங்களிலே உத்கோஷிக்கப்படுகிறது. ஸகலதோஷங்களுக்கும் இருப்பிடமான அசேதனத்தோடு அகிலஹேயப்ரத்யநீகனான அவனுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லுவாயோ? தாரகை-பூமி. முப்பத்தோராம்பாட்டில் 'தாரகையுள்' என்றது காண்க.

இவையெல்லாமாயிருப்பவன் யார்? என்ன அருளிச்செய்கிறார் (என்நெஞ்சமானவர்தாம்) நியமித்துக்கொண்டு என்நெஞ்சிலே எழுந்தருளியிருக்கையாலே 'மநச்ச நாராயண:' என்று ஸுபாலோபநிஷத்திற் சொல்லுகிறபடியே என் நெஞ்சாகவுமிருப்பவன் என்னத்தகுந்த நாராயணனே இவையெல்லாமுமாகிறான். இதுமட்டுமோ? (அல்லாததென்) அவனல்லாததாக சாஸ்திரங்களில் சொல்லப்படும் வஸ்து சேதனசேதனங்களிலே என்ன இருக்கிறது? "நாராயண ஏவேதம் ஸர்வம்" "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாந்" [அந்த ப்ரஹ்மத்தினிடமே இவைதோன்றி வாழ்ந்து மறைகையாலே, இவையெல்லாம் ப்ரஹ்மமே] என்றன்றோ வேதத்தில் கோஷிக்கப்படுகிறது. ஆகையால் உன்னுடைய யுக்தியைக்கொண்டு பார்த்தால் ஸகலசிதசித்துக்களோடு நாராயணனுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லவேண்டிவருமாகையால் அது குயுக்தியேயாகும். ப்ரஹ்மருத்ராதி ஸகலபதார்த்தங்களும் நாராயணனைப் பிரியில் வாழ்வில்லாதபடி அவனைஒட்டி நிற்கையாலேயே எல்லாம் அவனே என்று சொல்லப்படுவதாகவே கொள்ளவேண்டும். ஆகையால் ஆத்மைக்யமும், தேவதைக்யமும், திரிமூர்த்யைக்யமும் ஒருகாலும் ஸித்தியாது என்றுகருத்து.

58. என்னெஞ்ச மேயா னிருள்நீக்கி யெம்பிரான்
மன்னஞ்ச முன்னொருநாள் மண்ணளந்தான்—என்னெஞ்ச
மேயானை யில்லா விடையேற்றான் வெவ்வினைதீர்த்
தாயானுக் காக்கினே னன்பு.

பதவுரை:—என் நேஞ்சமேயான்—என்னுடைய நெஞ்சிலே நித்ய வாஸம் செய்பவனும், இருள் நீக்கி எம்பிரான்—(நெஞ்சிலுள்ள) அறியாமையிருளைப் போக்கி உபகரிப்பவனும், மன் அஞ்ச—அரசரை வரும் பயப்படும்படியாக, மூன் ஒருநாள் — முன்பொருகாலத்தில், மண் அளந்தான்—பூமியை அளந்துகொண்டவனும், என் நேஞ்சம் மேயானை—(அந்தத் திருக்கோலத்துடனே) என் நெஞ்சை விடாமலிருப்பவனுமான எம்பெருமானை, இல்லா—நெஞ்சில் கொள்ளாத, விடை ஏற்றான்—ரிஷபவாஹநனை ருத்ரனுடைய, வெம் வினை—பெரும் பாவத்தை, தீர்த்து—தொலைத்து, ஆயானுக்கு— (அதனால்) ஸத்தை பெற்றவனை பெருமானுக்கு, அன்பு ஆக்கினேன்—(உலகில்) அன்பை உண்டாக்கினேன்.

பேரி-வ்யா:—ஐம்பத்தேட்டாம்பாட்டு:- (என்னேஞ்சமித்யாதி)என்னுடைய ஹ்ருதயத்தை இருப்பிடமாகக்கோண்டு அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கி அத்தாலே எனக்கு உபகாரகனாய், க்ஷத்ரிய ஜாதியெல்லாம் அஞ்சும்படிக்கீடாகப் பண்டு பூமியையடையத்தன் கால்கீழே இட்டுக்கோள்வதும் செய்து, பின்னையும் என்பக்கலிலே அபிநிவிஷ்டனாயிருக்கிறவனைத் தன் நேஞ்சிலே கோள்ளாத ருஷபவாஹநனுடைய மஹாபாபத்தைப் போக்கி, அத்தாலே தானுளனானவனுக்கு ஸ்நேஹத்தை உண்டாக்கினேன்.

திவ்ய-அவ:—இப்படி தேவதாந்தரபரத்வபுத்தியுடையாரையும், ஸாம்யபுத்தியுடையாரையும், ஐக்யபுத்தியுடையாரையும் பலபடியாகக் கண்டித்து வாய்திறக்கவொண்ணாதபடி செய்கையாலே அவர்களனைவரும் பகவத்ப்ரவணர் ஆயினர். இதைக்கண்டு ‘எனக்குப் பலபடியாக உபகரித்த ஸர்வேச்வரனுக்கு, நான் இவ்வுலகெல்லாம் அன்பு செலுத்தும்படி பண்ணினேன்’ என்று ஆநந்திக்கிறார். சென்றபாட்டுடன் இப்பிரபந்தத்திலே இவ்வாழ்வாருடைய பரோபதேசம் முடிவடைகிறது. ஸ்வாநுபவபரமாகவும், திருந்தினவர்களுக்குக் காலக்ஷேபப்ரகாரத்தை உபதேசிப்பதாகவும், ‘இவ்வநுபவத்தைச் சிலர் இழப்பதே’ என்னும் வெறுப்பை வெளியிடுவனவாகவும் பின்வரும் பாசுரங்களிருக்கின்றன.

வ்யா:—(என் நெஞ்சம் மேயான்) என்னுடைய நெஞ்சத்திலே பொருந்தினான். பரமபதம் முதலானவிடங்களிலும் பொருந்தவில்லை

போலேகாணும் ஆழ்வார் நெஞ்சத்தைப் பெற்றபின்பு! "நிற்பதும் ஓர் வெற்பகத்து" [திருச்சந்த-65] "நின்றதெந்தையூரகத்து" [திருச்சந்த-64] என்று இவ்வாழ்வார்தாமும்,

"கல்லும் கனைகடலும் வைகுந்தவானாடும்
புல்லென்றொழிந்தனகொல் ஏபாவம்—வெல்ல
நெடியான் நிறம் கரியான் உள்புகுந்து நீங்கான்
அடியேனதுள்ளத் தகம்." [பெரியதிருவ 68]

என்றும், "ஆதிப்பிரானவன் மேவியுறை கோயில்" [திருவாய் 4-10-2] என்றும் நம்மாழ்வாரும்,

"பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டோடி வந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ"

என்று பெரியாழ்வாரும் இவ்வர்த்தத்தை அருளிச்செய்தனர்.

இவருடைய மனத்திலே இப்படி ஸ்தாவரப்ரதிஷ்டையாய்ப் பொருந்தியிருந்தது எதற்காகவென்னில்: (இருள் நீக்கி) முதலில் என்னுடைய அறியாமையிருளைப் போக்கிப் பிறகு பிறருடைய அறியாமையிருளைப் போக்குவதற்காகவே இத்தனை உகப்போடு எழுந்தருளியிருந்தான். (என்னெஞ்சமேயான் இருள் நீக்கி) இருளற்ற உலகமாகிற பரமபதத்திலே இருந்தால் இருள் நீக்கமுடியாதென்று, இவ்விருள்தருமாஞாலத்திலே இருளுக்கோர் இருப்பிடமாயிருந்த என் நெஞ்சில் பொருந்தி 'இருள்நீக்கி' என்னும் பட்டப்பெயர் பெற்றான். (இருள்நீக்கி எம்பிரான்) இப்படி என்னுடைய இருளையும், என்னைக்கொண்டு பிறருடைய இருளையும் போக்குகையாலே எனக்கு உபகரித்தவன். தன்னுடைய அறியாமையைப் போக்கியதைப்போலவே தம்மைக்கொண்டு பிறருடைய அறியாமையைப் போக்கியதையும் தமக்குச் செய்த உபகாரமாக நினைக்கிறார். எம்பிரான்—எனக்கு உபகாரகன்.

'இவன் எவன்?' என்ன அருளிச்செய்கிறார்,--(மன் அஞ்ச முன்னொருநாள் மண் அளந்தான்) மூவுலகையும் ஆண்டுவந்த மஹாபலிச்சக்ரவர்த்திக்கு நேர்ந்த கதியைக் கண்டு எக்காலத்திலுமுள்ள தர்மானிகளான க்ஷத்ரியர்களனைவரும் பயந்துநடக்கும்படியாக முன்பொரு ஒப்பற்ற நாளிலே உலகனைத்தையும் தன் காலின்கீழே இட்டுக்கொண்டவனே இவன். 'மன்னஞ்ச' என்றதுக்கு 'மஹாபலிசக்ரவர்த்தி பயப்படும்படியாக' என்று பொருள் கொள்வாருமுண்டு.

விஷ்ணுபக்தனை, தன் தலையைத் திருவடியின் கீழ்க்கொண்ட மஹாபலி, திருவுலகளந்தருளியபோது உகந்திருப்பானேயொழிய பயந்திருக்க ப்ரஸக்தியில்லையாகையால், 'க்ஷத்ரிய ஜாதியெல்லாம் அஞ்சும் படிக் கிடக்க' என்று பெரியவாச்சான்பிள்ளை கொண்டபொருளே பொருத்த முடையது. அர்த்த ஸ்வாரஸ்யமும் இப்பொருளிலேயே அதிகம். (இருள்நீக்கி எம்பிரான்....மண்ணளந்தான்) அப்போது மண்ணளந்ததும் என்னை ஆட்கொண்டு இருள் நீக்குவதற்காகவே என்கிருக்கிறார். (மண்ணளந்தான் என் நெஞ்சம் மேயானை) உலகையெல்லாம் வசப் படுத்திக்கொண்டபின்பும் திருப்தியுறாமல், உலகெல்லாம் ஒரு தட்டும் நான் ஒரு தட்டுமாகக் கொண்டு என் நெஞ்சிலே பேரன்போடு எழுந் தருளியிருக்கிறவனை. (என் நெஞ்சம் மேயானை யில்லா விடையேற் றான்) இப்படிப்பட்ட அன்பனைத் தன் நெஞ்சிற்கொள்ளாத ரிஷப வாஹனனான சிவனுடைய. ஸத்வம் தலையெடுத்த சில சமயங்களிலே "அஹமபி தே தாஸ:" [நானும் உனக்கு தாஸனே] என்று அநுஸந் தித்துப்போந்தாலும், பெரும்பாலும் ரஜஸ்தம:ப்ரசுரனாய் எதிரம்பு கோத்துத் திரிபவனாயன்றோ பேசநின்ற சிவனிருப்பது. அதனாலேயே 'என் நெஞ்சமேயானை இல்லா விடையேற்றான்' என்கிறார். விடை- ரிஷபம்; ஏறு-வாஹனம்; விடையேற்றான்-ரிஷபவாஹனனான சிவன். (விடையேற்றான் வெவ்வினைதீர்த்து) தன்னை நெஞ்சிற்கொள்ளாமல் தூர்மானியாய்த் திரியும் அவனுடைய ப்ரஹ்மஹத்தி பாபத்தையும் போக்கினான் எம்பெருமான் என்று ஈடுபடுகிறார். போக்கினவள வேயோ? (வெவ்வினை தீர்த்து ஆயானுக்கு) இவன் ப்ரஹ்மகபா லத்தைச் சுமந்து 'கண்ட கடலும் மலையும் உலகேழும் முண்டத்துக் காற்றா' என்று கதறித் திரிவதைக் கண்டு தன் ஸத்தையையே இழந் தாற்போலே வருந்தி, கபாலத்தைத் தன்கையாலே நிறைத்துப்போக் கினபின்பு தன் ஸத்தையைப் பெற்றதாக நினைத்தனனன்றோ எம் பிரான். இது என்ன நீர்மை! என்று ஈடுபடுகிறார். (ஆயானுக்கு ஆக்கினேன் அன்பு) இப்படி எதிரம்புகோக்குமவர்களுக்கும் உப கரித்து உளனுமவனுக்கு நான் அன்புசெலுத்துவதோடன்றியில், பிறரையும் அன்புசெலுத்தும்படி பண்ணினேன். இந்நிலையில் என்னை நிறுத்தினதன்றோ எம்பிரான் எனக்குச்செய்த பேருபகாரம் என்கி றார். 'நின்கண் வேட்கை எழுவிப்பனே' [திருவிருத்தம்-96] என்று ப்ரதிஜ்ஞைசெய்தார் நம்மாழ்வார். 'ஆக்கினேன் அன்பு' என்று நிறைவேற்றினதைப் பேசுகிறார் இவர்.

59. அன்பாவா யாரமுத மாவாய் அடியேனுக்
கின்பாவா யெல்லாமும் நீயாவாய்—போன்பாவை
கேள்வா கிளரொளி யென்கேசவனே கேடின்றி
ஆள்வாய்க் கடியேனு னுள்.

பதவுரை:—அன்பு ஆவாய்— (என்னிடம்) பிரீதியே வடிவெடுத்தவன்போலிருப்பவனே! ஆர் அமுதம் ஆவாய்—நிறைந்த அமுதம்போல் இருப்பவனே! அடியேனுக்கு இன்பு ஆவாய்—(உன்னுடைய அநுபவமாகிற) ஸுகத்தை அடியேனுக்கு உண்டாக்கினவனே!, எல்லாமும் நீ ஆவாய்—மற்றுமுள்ள ஸுகங்களுமெல்லாம் எனக்கு நீயேயாயிருப்பவனே! போன்பாவை கேள்வா—லக்ஷ்மீ நாதனே! கிளர் ஒளி—(அத்திருமகளின் சேர்த்தியினால்) கொழுந்துவிடுகின்ற ஒளியை உடைய, என் கேசவனே—எம்பெருமானே! கேடு இன்றி—ஒருகுறையுமில்லாமல், ஆள்வாய்க்கு—அடிமைகொள்ளும் உனக்கு, அடியேன் நான்—அடியானான், ஆள்—அடிமைப்பட்டவன்.

பெரி-வ்யா—ஐம்பத்தோன்பதாம்பாட்டு. (அன்பித்யாதி) என்பக்கல் ப்ரேமத்தையுண்டாக்கி, நிரதிஶய போக்யனுமாய், எனக்கு ஸ்வாநுபவத்தையும் தந்து, அனுக்தமான போக்யங்களையும் தந்து, இவையெல்லாம் செய்கைக்கடியான பிராட்டிக்கு வல்லபனாய், இவளோட்டை ஸம்ச்லேஷத்தாலே நிரதிஶயோஜ்ஜ்வலனாய், ப்ரஶஸ்தகேஶனாய், கைங்கர்யானுபவத்துக்கு விச்சேதமின்றிக்கே என்னை அடிமைகோள்ளுகிற உனக்கு நான் அடிமை. ஸர்வஜ்ஞனானவனுக்கு 'நான் உனக்கு ஆள்' என்று சோல்லவேண்டாதிருக்க, ஆளென்று சோல்லிற்று, அவன் தாழப் பரிமாறுகிறபடியைக் கண்டு முறையறிந்து பரிமாறவேண்டுமென்று. முறையுணர்த்தவேண்டுகிறது அவன் விரும்பினபடியைக்கோண்டு.

திவ்ய-அவ:—“ஆக்கினேன் அன்பு” என்னும்படியான ஆழ்வாருடைய அன்பைக்கண்ட அச்சுதன், ஆழ்வாருடைய கையைக்காலைப் பிடிப்பதாய்த் தாழநின்று பரிமாறத்தொடங்கினன். அவனை முறையுணர்த்துகிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(அன்பாவாய்) அன்பே வடிவானவனாயிருக்கிறாய். “நான்முகனை” என்று தொடங்கிப் பரத்வமே இவனுக்கு வடிவுஎன்று உபதேசித்து வந்தவர், ஸ்வானுபவம் தொடங்கியவுடன் 'அன்பே இவ

னுக்கு வடிவு' என்று முடிவுகட்டுகிறார். "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று தொடங்கியவர்கள் அவனை அணுகியவுடன் "மாலே!" என்று கூப்பிட்டாப்போலே. (அன்பாவாய்) அன்றிக்கே, "ஆக்கினேன் அன்பு" என்று பிறருடையவும், என்னுடையவும் அன்பை உனக்கு ஆக்கினேன் என்று அருளிச்செய்தவர், விசாரித்த வாறே தம்முடைய அன்பையும் உண்டாக்கினவன் அவனேயென்றுணர்ந்து, 'என்னுடைய அன்பாகவும் ஆனவனே!' என்று கூப்பிடுவதாகவும் கொள்ளலாம். "என்பக்கல் ப்ரேமத்தை உண்டாக்கி" என்ற பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி, "என் விஷயத்தில் உன் அன்பை உண்டாக்கி" என்றும், "என்னிடம் (உன்விஷயமான) அன்பை உண்டாக்கி" என்றும் இருவிதமாகவும் பொருள் கொள்ளப் பாங்காக அமைந்திருப்பது உற்று நோக்கத்தக்கது. (ஆரமுதமாவாய்) எனக்குப் பரமபோக்யமாயிருப்பவனும் நீயே. அன்புருவனாகவேயிருப்பதால் எனக்குப் பூர்ணம்ருதமாகவுமிருப்பவன் நீயே. என்னிடம் அன்பை உண்டாக்கினதோடன்றியில், அவ்வன்புக்கு விஷயமாகவும் உன்னை நீயே கொடுத்தாய் என்றுமாம். (ஆர் அமுதம்) நிறைந்த அமுதம். தேவர்களுக்கு போக்யமான உப்புச்சாறு நிறைவில்லாத அமுதம்போலே காணும்!

(அடியேனுக்கு இன்பாவாய்) 'ஆநந்தம்' என்னும் சொல்லுக்கு முக்யார்த்தமான தன் விஷயமான அனுபவமாகிற ப்ரஹ்மாநந்தத்தையும் அடியேனுக்கு அளித்தவன் நீயே என்கை. 'இன்பு' என்னும் ஸாமான்யபதத்திற்கு ப்ரஹ்மாநந்தமே முக்யார்த்தமாகும் என்று உணர்த்துகிறபடி. (எல்லாமும் நீ ஆவாய்) ஸ்வானுபவத்திலும் வேறுபட்ட நித்யமுக்தானுபவம், உபயவிபூதியனுபவம் முதலானவையும் உன்னால் தரப்படுமவையே என்கை. "வாஸுதேவஸ் ஸர்வம்" [கீதை] என்றும், "உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" [திருவாய் 6-7-1] என்றும் சொல்லுகிறபடியே தாரகபோஷகபோக்யங்களெல்லாம் எனக்கு நீயே ஆவாய் என்றுமாம்.

(பொன்பாவை கேள்வா) ஹிரண்யவர்ணையான லக்ஷ்மியின் நாதனே! மேலே சொன்னவையெல்லாம் இவளுடைய ஸாந்நித்யமிருந்ததாலேயே எம்பெருமான் தனக்கு அருளினன் என்று கருத்து.

(அன்பாவாய்-பொன்பாவை கேள்வா) "க்ஷிபாமி" [கீதை] "ந க்ஷமாமி" [வராஹபுராணம்] என்று தீயெனக் கொதிக்கும் எம்பெருமான், வெந்நீருக்குக் குளிர்நீர்போன்ற இவளுடைய ஸம்பந்தத்தாலே அன்புருவனானான் என்கை. "கோலமலர்ப் பாவைக்கன்பாகிய என்னன்பேயோ" [திருவாய் 10-10-7] என்று நம்மாழ்வாரும் அருளினாரன்றோ. (ஆரமுதமாவாய்—பொன்பாவை கேள்வா) "அமுதில் வரும் பெண்ணமுது உண்ட எம்பெருமானே!" [பெரியதிரு 6-1-2] என்கிறபடியே அமுதத்தில் ஸாரமெல்லாம் ஓர் வடிவெடுத்தாப்போலேயிருக்கும் அவளைப் பருகிப்பருகியே அவனும் ஆரமுதானான் என்கை. (அடியேனுக்கின்பாவாய் பொன்பாவை கேள்வா) ஸ்வாநுபவத்தைத் தருவதும் அவளுடைய ஸாந்நித்யத்தாலேயே என்கை. "தரும் அவ்வரும் பயனாய திருமகளார் தனிக்கேள்வன்" [திருவாய் 1-6-9] என்று சடகோபரும் அருளினாரன்றோ. (அடியேனுக் கின்பாவாய்—பொன்பாவை கேள்வா) ப்ரஹ்மசாரி நாராயணனாயிருந்தீரல் ரஸமில்லைபோலே காணும்! அவளுக்கு இன்பமளிப்பதுபோலே அடியேனுக்கும் இன்பமளிக்கிறாய் என்றுமாம். "நமக்கும் பூவின்மிசை நங்கைக்குமின்பனே" [திருவாய் 4-5-8] என்றானன்றோ மாறன். (எல்லாமும் நீயாவாய்—பொன்பாவை கேள்வா) அவன் தாரகபோஷகபோக்யங்களெல்லாமாவதும் இவள் ஸம்பந்தத்தாலேயே என்கை. "எனக்கென்றும் தேனும் பாலும் அமுதுமாகிய திருமால்" [பெரியதிரு 6-10-6] என்றானன்றோ மங்கைமன்னன்.

(பொன்பாவை கேள்வா கிளரொளி) அப்பிராட்டியுடைய சேர்த்தியாலே சிறந்த ஒளிபெற்றவனாகிறான் என்கை. "ச்ரத்தயா தேவோ தேவத்மச்நுதே" [ச்ரத்தாஶப்தவாச்யையான பிராட்டியாலே பரமபுருஷன் ஒளியுடையனாகிறான்.] என்றது சுடர்மிகு சுருதி. "அதீவ ராம: ஶுஶுபேऽதிகாமயா விபு: ஶ்ரியா விஷ்ணுரிவ" [ஸர்வவ்யாபியான விஷ்ணு ஸ்ரீதேவியாலே விளக்கமடைவதுபோலே ராமபிரான் பிராட்டியாலே மிகவும் விளங்கினான்.] என்றார் வால்மீகி பகவான். "வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கை" [திருப்பல்-2] "திகழ்கின்ற திருமார்பில் திருமங்கைதன்னோடும் திகழ்கின்ற திருமாலார்" [திருவாய் 10-6-9] என்றனர் ஆழ்வார்கள்.

(கிளரொளி என் கேசவனே) பிராட்டியாலே ஒளிபெறுமவனாய், எனக்கு ஸ்வாமியாய், அவளும் விரும்புவதும், "ஹிரண்யகேஶ:" என்று வேதத்தாலும் புகழப்படுவதுமான திருக்குழற்கற்றையை உடையனாயிருப்பவனே! (கேஶவன்) ப்ரஶஸ்த கேசத்தை உடையவன். வேதவைதிகர்களால் புகழப்படும் கேசத்தை உடையவன் என்கை.

(கேடின்றி ஆள்வாய்க்கு அடியேன் நான் ஆள்) கைங்கர்யத்துக்கும், அனுபவத்துக்கும் இடையூறு சிறிதுமில்லாதபடி அடிமை கொள்ளுமுனக்கு, இயற்கையிலேயே சேஷபூதனாயிருக்கிற நான் அடிமை—கைங்கர்யம் செய்யவேண்டியவன். ஆகையால் நீ என் கையைக் காலைப் பிடித்துக் கைங்கர்யம் செய்யலாகாது என்று கருத்து. 'அடியேன்' என்றதுக்கும், 'ஆள்' என்றதுக்கும் புநருக்தி வாராதோ வென்னில்: 'அடியேன்' என்று ஶேஷத்வ ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. 'ஆள்' என்று "அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:" [கைங்கரியம் செய்யாதவனுக்கு சேஷத்வஸ்வரூபம் ஸித்தியாது] என்கிறபடியே ஶேஷத்வகார்யமான கைங்கர்யத்துக்கு ஆச்ரயமாயிருப்பவன் என்கிறது. ஆகையாலே புநருக்தியில்லை. ஸர்வஜ்ஞனான பகவானுக்கு இவரிதை உணர்த்தவேண்டுமோ என்னில்: அன்புருவனான அவன் தாழநின்று பரிமாறுகையாலே முறையறிந்து பரிமாற வேணுமென்று உணர்த்துகிறார். "குற்றேவல் எங்களைக்கொள்ளாமற் போகாது.... எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்" [திருப்பாவை-29] என்று உணர்த்தினாரும் உண்டன்றோ.

60. ஆள்பார்த் துழிதருவாய் கண்டுகோ ளென்றும்
தாள்பார்த் துழிதருவேன் தன்மையை—கேட்பார்க்
கரும்பொருளாய் நின்ற வரங்கனே உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம்.

பதவுரை:—கேட்பார்க்கு—(ஸ்வயத்நத்தாலே) கேட்டறிய விரும்புமவர்களுக்கு, அரு பொருள் ஆய் நின்ற அரங்கனே—அறியவொண்ணாத பரம்பொருளான அரங்கநாதனே! ஆள் பார்த்து உழிதருவாய்—'நமக்கு ஆட்படுமவன் யாரேனும் கிடைக்கக்கூடுமோ' என்று தேடித் திரிகிறவனே! நின் தாள் பார்த்து உழிதருவேன்—உனது திருவடிகாணத்

திரிகின்ற என்னுடைய, தன்மையை—இந்த ஸ்வபாவத்தை, என்றும் கண்டுகொள்—என்றைக்கும் நிலைத்திருக்கும்படியாகக் கடாக்ஷித்தருள வேணும், உன்னை விரும்புவதே—நான் உன்னையே ஆசைப்பட்டிருக்கும் தன்மையை, மனம் — நெஞ்சில், விள்ளேன் — தவிராதவனாயிருக்கிறேன்.

பெரி-வ்யா—அறுபதாம்பாட்டு- (ஆட்பார்த்தித்யாதி) தேவர்திருவடிகளைக்காண்கையே ஸ்வபாவமான என்னை, 'ஆரோ நமக்கு அகப்படுவார்' என்று பார்க்குமதுவே ஸ்வபாவமாயிருக்கிற நீ காலமெல்லாம் இப்படியேயாகப் பார்த்தருளவேணும். (கேட்பார்க்கித்யாதி) **"नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन"** (நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந) என்னும்படியே உன் ப்ரஸாதமொழிய ஸ்வயத்நத்தாலே ச்ரவணாதிகள் பண்ணுவார்க்கு அரியையாய், நீயே காட்டக் காண்பார்க்கு எளியையாகைக்காகக் கோயிலிலே கண்வளருகிறவனே! (உன்னையித்யாதி) என்னுடைய மநஸ்ஸானது உன்னை விரும்புகையை விடுகிறதில்லை. விரும்புகையை விடாதொழிகையைப் பார்த்தருளவேணும் என்றுமாம்.

திவ்ய-அவ:—இப்படி உனக்கு அடிமைப்பட்டிருக்கும் தன்மையை என்றுமே ஆகும்படி பார்த்தருளவேணும் என்கிறார்.

வ்யா:—(ஆட்பார்த்துழிதருவாய்) 'நமக்கு அடிமைப்பட்டிருப்பார் ஆரேனுமுண்டோ?' என்று தேடித்திரியுமவனே! அடியேன் உனக்கு ஆளானதும், நீ * உயிர் அளிப்பான் எந்நின்ற யோநிமாய் * நாட்டிற் பிறந்து மனிசர்க்காப் படாதன பட்டதாலேயே என்கை. (கண்டுகொள் என்றும் தாட்பார்த்து உழிதருவேன் தன்மையை) உன் திருவடிகளையே பெறவேணுமென்று ஆசைப்பட்டுத் திரிகிற என் தன்மையை என்றுமிருக்குமாறு பார்த்துக்கொள். ஆட்படுத்திய உனக்கே, அதை ஸ்திரப்படுத்திக்கொள்வதும் பணி.

(கேட்பார்க்கு அரும்பொருளாய்) உன்னருளாலேயல்லாமல், (சாஸ்திரங்களின்) ச்ரவணத்தாலும், மனனத்தாலும், தியானத்தாலும், அறிய விரும்புமவர்களுக்கு அடைய அரியனாய். 'கேட்பார்க்கு' என்று ச்ரவணத்தைச் சொன்னது மநநத்துக்கும், நிதித்யாஸனமென்னும் தியானத்திற்கும் உபலக்ஷணம். "நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந" [கட 3-23] [பலபடியான ச்ர

வணத்தாலும், மனனத்தாலும், தியானத்தாலும் அடைய அரியவன்] என்று சொல்லப்பட்டதன்றோ. (நின்ற அரங்கனே) "யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" [கட 3-23] [எவனொருவனை இப்பரமபுருஷன் வரிக்கிறானோ, அவனாலேயே இவன் அடையப்படுகிறான். அவனுக்கு இப்பரமாத்மா தன் மேனியைக் காட்டுகிறான்.] என்கிறபடியே நீயே உன்னருளாலே உன்னைக்காட்டக் காண்பார்க்கு எளியனாவதற்காகத் திருவரங்கத்தில் அனைவரும் காணும்படி கண்வளர்ந்தருளுமவனே! (உன்னை விரும்புவதே விள்ளேன் மனம்) நான் விடினும் என் மனம் ஆட்பார்த்துழிதரும் உன்னை விரும்புவதை விடமாட்டாது. நானும் இத்தன்மையிலேயே நிற்கும்படி நீ பார்த்தருளவேணும் என்று கருத்து. அன்றிக்கே, என் மனமும் உன்னை விருப்புவதை விடாதபடி நீ கண்டுகொள்-பார்த்தருள் என்று கீழோடே கூட்டியும் பொருள்கொள்ளலாம்.

61. மனக்கேதம் சாரா மதுசூதன் றன்னை
தனக்கேதான் தஞ்சமாக் கொள்ளில்—எனக்கேதான்
இன்றேன்றி நின்றுலகை யேழாணை யோட்டினான்
சென்றேன்றி நின்ற திரு.

பதவுரை:— மதுசூதன் தன்னை — மதுவென்னும் அசுரனைக் கொன்றொழித்த பெருமானை, தனக்கே தஞ்சம் ஆ தான் கொள்ளில்— தனக்கு கதியென்று ஒருவன் கொண்டால், மனம் கேதம் — மனத் துன்பங்கள், சாரா—வந்தடையா; ஒன்றிநின்று—(விடாமல்) சேர்ந்துநின்று, ஏழ் உலகை-ஸப்தலோகங்களிலும், ஆணை ஓட்டினான்— (தன்னுடைய) செங்கோலைச் செலுத்துமவனான எம்பெருமான், இன்று—இப்போது, தான்—தானே, சென்று—(என்னிடம்) வந்து, ஒன்றி நின்ற திரு—(என்னிடத்தில்) பொருந்தியிருப்பதாகிற செல்வமானது, எனக்கே-என்னொருவனுக்கொழிய வேறொருவர்க்குமில்லை.

பெரி-வ்யா:—அறுபத்தோராம்பாட்டு: (மனக்கேதம் சாரா) மனஸ்ஸுக்குக் கேதம் சாரா என்றுமாம். (மதுசூதனித்யாதி) தஞ்சமான செயலைச் செய்யுமவனைத் தனக்கே தான் தஞ்சமாக்கொள்ளில் (எனக்கித்யாதி) ஸமஸ்தலோகத்தையும் விடாதே நின்று தன் ஆஜ்ஞை செல்லும்படி நடத்தினவன் தானே வந்து அபிநிவிஷ்டனான ஸம்பத்து எனக்கே உள்ளது. அதுதானும் இன்று.

திவ்ய-அவ—"விரும்புவதே விள்ளேன் மனம்" என்று ஆழ்வார் அருளிச்செய்தவுடன், "மறப்பனென்று செந்தாமரைக் கண்ணொடு மறப்பற என்னுள்ளே மன்னினான்" [திருவாய் 1-10-10] என்கிற படியே, நீரும் உம்மனமும் மறந்தாலும் நான்விடேன் என்று நெஞ்சிலே நிலைநின்றான் நாரணன். இதைக்கண்டு "மற்றுள்ளார் தன்னைப் பற்றினால் அவர்களுடைய மனத்துன்பங்களைப் போக்குமளவோடு நிற்பன் ஸர்வேச்வரன்; என் விஷயத்திலோவெனில் அப்பெருமானே மேல்விழுந்து என்நெஞ்சில் கலந்து ஸ்தாவர ப்ரதிஷ்டையாய்நின்றான்; இச்செல்வம் வேறுஎவர்க்கும் இல்லை" என்று இனியராகிறார்.

வ்யா:—(மனக்கேதம்) மந:க்கேதம் (मनःखेदः) என்னும் வடசொல்லாகக் கொண்டால் மனத்துன்பங்கள் என்று பொருளாகிறது. அன்றிக்கே, மனத்துக்கு ஏதம்என்று பிரித்து மனத்துக்குள்ள அஜ்ஞானம் முதலிய தோஷங்கள் என்றும் பொருள்கொள்ளலாம். 'மனத்துக்கு' என்னும் பதத்தில் அத்துச்சாரியை வாராமல் 'மனக்கு' என்று கிடப்பதாகக்கொள்வது, "மனக்கு இன்பம் படமேவும்" என்றார் ஆழ்வாரும். (மனக்கேதம் சாரா மதுசூதன் தன்னைத் தனக்கேதான் தஞ்சமாக் கொள்ளில்) வேதத்தை அபஹரித்து அஜ்ஞானத்தைப் பரப்பிய மதுகைடபர்களை அழித்து ப்ரஹ்மாதிகளுக்குத் தஞ்சமான செயலைச்செய்தவனைத் தனக்கு ஒருவன் உபாயமாகக் கொண்டானாகில், மதுவையொழித்தாப்போலே மனத்திலுள்ள மயர்வு முதலியவற்றையும் முடித்தருளுவான் மாதவன் என்கிறார். (தனக்கே தான் தஞ்சமாக் கொள்ளில்) இத்தால் இது-தானாக எம்பெருமானைப்பற்றும் ஸ்வகத ஸ்வீகார நிஷ்டன் விஷயம்என்று உணர்த்தப்படுகிறது. தானாக எம்பெருமானைப் பற்றுவார் ஸ்வகதஸ்வீகார நிஷ்டரென்றும், 'உடையவன் உடைமையை வேண்டும்போது ஸ்வீகரித்துக் கொள்ளுகிறான்' என்று அவன் கை பார்த்திருப்பார் பரகதஸ்வீகார நிஷ்டரென்றும் ப்ரபந்நர் இருவகைப்பட்டன்றோ இருப்பது.

ஆக, முதலிரண்டடிகளாலே ஸ்வகத ஸ்வீகாரநிஷ்டன் விஷயத்திலே எம்பெருமான் இருக்கும்படியைப் பேசினார். இனி பரகத ஸ்வீகாரநிஷ்டரான தம் விஷயத்தில் விசேஷித்து எம்பெருமானிருக்கிறபடியைப் பேசுகிறார்:—(எனக்கேதான் இன்றொன்றி நின்றுலகை ஏழாணையோட்டினான் சென்றொன்றி நின்ற திரு) ஏழுலோகங்களையும், "அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" [நாரா

யணன் இவையெல்லாவற்றையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான்.] என்கிறபடியே அவற்றோடு பொருந்தியிருந்து ஏக சக்ராதிபத்யம் செலுத்தும் எப்பெருமான் தானே வலிய வந்து என் மனத்தில் பொருந்தியிருக்கப்பெற்றதாகிற இப்பெருஞ்செல்வம் எனக்கே ஏற்பட்டது; அதுவும் இன்று ஏற்பட்டது. (எனக்கேதான்) தானுகச் சென்று அவனை வரிப்பவர்களிடத்தில் காட்டும் பரிவினும், அவன் கையே பார்த்து இருப்பவர்களிடம் பரமபுருஷனுக்குப் பரிவு பதின் மடங்கு அதிகமாயிருக்குமன்றோ. ஆயர்கள், ஆய்ச்சியர்கள், ஆயர் சிறுமிகள், பசுக்கள், கன்றுகள் ஆகிய இவர்களிடம் உத்தரோத்தரம் தமகுணிதமாயன்றோ கண்ணனின் அன்பிருப்பது. "திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி" "கன்றுமேய்த்து இனிதுகந்த" "காலி மேய்க்க வல்லான்" "கன்று மேய்த்து விளையாடவல்லான்" முதலான ப்ரமாணங்களில் பொதிந்துகிடக்கும் பரமரஹஸ்யமான பெரும்புதைய லன்றோ இப்பொருள். ஆக இப்பாட்டால் "ப்ரஜாபதிஸ் த்வம்வேத। ப்ரஜாபதிம் த்வோ வேத। யம் ப்ரஜாபதிர் வேத ஸ புண்யோ பவதி" [பரம புருஷன் ஒருவனைத்(தானே) அறிகிறான்; பரமபுருஷனை ஒருவன் (தான்சென்று)அறிகிறான். இவர்களிருவரிலும் எவனைப் பரமபுருஷன் அறிகிறானே அவனே சிறந்தவன்] என்னும் வேதார்த்தம் வெளியிடப் பட்டதாயிற்று.

62. திருநின்ற பக்கம் திறவிதேன் றோரார்
கருநின்ற கல்லார்க் குரைப்பர்—திருவிருந்த
மார்வன் சிரீதரன்றன் வண்டுலவு தண்டுழாய்
தார்தன்னைச் சூடித்தரித்து.

பதவுரை:—திருஇருந்த மார்வன்—பெரியபிராட்டியா எழுந்தருளி யிருக்கப்பெற்ற திருமார்வை உடையவனுய், (அதனாலே) சிரீதரன்தன்—'ஸ்ரீதரன்' என்று திருநாமம்பெற்றவனான எம்பெருமானுடைய, வண்டு உலவு தண் துழாய் தார் தன்னை — வண்டுகள் ஸஞ்சரிக்கப்பெற்ற குளிர்ந்த திருத்துழாய்மாலையை, சூடி—(தலையில்) அணிந்து, தரித்து—அதனால் ஸத்தைபெற்று, திரு நின்றபக்கம் திறவிது என்று ஓரார் — 'பிராட்டி பொருந்தியிருக்கப்பெற்ற இடமாகிய நாராயணனே பரம் பொருள்' என்று நிச்சயிக்கமாட்டாதவர்கள், கரு நின்ற—(தங்களைப் போலே) கர்ப்பவாஸம்பண்ணிப் பிறக்கின்ற பிரமன் உருத்திரன் முதலானாரை, கல்லார்க்கு உரைப்பர்—(பரதெய்வமாக) மூடர்களுக்கு உபதேசிப்பர்கள்.

பேரி-வ்யா:—அறுபத்திரண்டாம் பாட்டு. (திருநின்றபக்கம்) "अपाङ्गा भूयांसो यदुपरि" (அபாங்கா பூயாம்ஸோ யதுபரி)என்னும்படியே 'இன்ன வஸ்து' என்னவேண்டா; ஏதேனுமோரு வஸ்துவிலே அவளுடைய கடாக்ஷமுண்டாகில் அது ஸர்வேச்வரதத்வமாகிறது. (திறவிதேன்று) திறவிதாவது—ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தமும் தன்னதீனமாய், வேறொன்று லறியாதது; ஒருசேதநராகில் அறியலாம் என்கை. (கருநின்றகல்லாரித்யாதி) மாம்பழமுண்ணி ந்யாயத்தாலே ஸ்ரீஸம்பந்தமில்லாதாரை ஸ்ரீமாங்களாகச் சோல்லும்படியன்றிக்கே, பெரியபிராட்டியார் திருமார்விலே எழுந்தருளியிருக்கையாலே 'ஸ்ரீதரன்' என்று திருநாமத்தை உடையவனுடைய மதுவெள்ளத்தாலே வண்டுகள் திரியாநின்றுள்ள சேவ்வியையுடைய திருத்துழாயை "சூடிக்களைந்தன சூடும்" என்னும்படியே தலையாலே தரித்துத் திருநின்றபக்கம் திறவிதேன்று ஓரார்.

திவ்ய-அவ:—*தன் பெருமையைப்பார்த்து இன்புற்றவுடன் பிறருடைய தாழ்வைக் கண்ணுற்றார். 'இதுக்குக் காரணம் தங்களோடொத்து கர்ப்பவாஸம்பண்ணிப் பிறந்த சில தெய்வங்களைப் பரதெய்வமாக நினைத்து மயங்குகையும் மயக்குகையுமன்றோ' என்று வருந்தி அருளிச்செய்கின்றார் இப்பாட்டில். பிறர்துன்பங்கண்டால் பொறுக்கமாட்டாமலிருக்கையன்றோ ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம்.*

வ்யா:—*(திருநின்ற பக்கம் திறவிது) இன்ன வஸ்து என்னவேண்டியதில்லை. பிராட்டி எந்த வஸ்துவிலே ஸாந்நித்யம் செய்திருக்கிறாளோ அதுவே பரதத்துவம்.* "ச்ரத்தயா தேவோ தேவத்வமச்நுதே" *[ச்ரத்தாசப்தவாச்யையான பிராட்டியாலே பெருமான் தேவனுயிருக்கும் தன்மையைப் பெறுகிறான்] என்று மறையும் முடிவுகட்டின விஷயமன்றோ இது.*

"அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம ததபூத்" [30] *[(பிராட்டியின்) அதிகமான கடாக்ஷங்கள் எப்பொருளின்மீது விழுந்தனவோ, அப்பொருள் பரப்ரஹ்மமாயிற்று.] என்றும்,*

"வேதாந்தாஸ் தத்வசிந்தாம் முரபிதுரஸி யத்பாதசிஹ்நைஸ் தரந்தி" [4] *[எப்பிராட்டியின் திருவடியடையாளங்களை முராரியின் திருமார்பிலே கண்டு வேதாந்தங்கள் பரதத்வ விசாரத்தை முடிக்கின்றனவோ] என்றும் ஸ்ரீகுணரத்நகோசத்தில் பட்டரும் இவ்வர்த்தத்தையே அறுதி*

யிட்டாரன்றே. (திறவிதென்று) திறவிதாவது:— தன்னைபொழிந்த எல்லாப்பொருளும் தனக்கு வசப்பட்டதாய், தானே தன்னைக் காட்டி லொழிய வேறொன்றால் அறியமாட்டாதது. (ஓரார்) அறிவுடையாரா யிருந்தால் இத்தத்துவம் இப்படிப்பட்டது என்று அறியலாமே; அதில்லையே! அறிவுடைமைக்கு அடையாளமேயில்லையே! (கருநின்ற) தங்களோடொக்க கர்ப்பவாஸம் பண்ணிப் பிறக்கும் உருத்திரன் முதலிய தேவதைகளை. "உஷஸி ரேதோऽஸிஞ்சத்" [உஷ: காலத்துக்கு அபிமானினியான தேவியிடம் பிரமன் வீரியத்தை விட்டான்] என்று உருத்திரனின் பிறப்பைச்சொல்லும் வேதபாகமொன்று அவனும் கர்ப்ப வாஸம் பண்ணிப்பிறந்தவனே என்று பேசிற்றன்றே. (கரு நின்ற கல்லார்க்கு உரைப்பர்) தங்களைப்போன்ற ஜீவர்களான தேவர்களைப் பர தெய்வமாக, தங்களைப்பேன்ற சில மூடர்களுக்கு உபதேசிப்பார்கள்.

இவர்கள் செய்ய அடுப்பது யாதென்பதைப் பிற்பகுதியாலே பேசுகிறார்:— (திருவிருந்த மார்வன் சிரீதரன்)மாம்பழத்தின் வாஸனை யும் அறியாததொரு புழுவுக்கு உலகத்திலே 'மாம்பழமுண்ணி' என் னும் பெயருண்டு. பிராட்டியின் ஸம்பந்தலேசமும் அற்ற மற்ற தெய் வங்களை "ஸ்ரீமாந்" என்று அவற்றின் பக்தர்கள் அழைப்பது மாம்பழ முண்ணியென்னும் பெயரை ஒத்ததேயாகும். இப்பரமபுருஷன் விஷயத்திலோவெனில் பெரிய பிராட்டியார் திருமார்பிலேயே அகல கில்லேன் இறையும் என்று எழுந்தருளியிருக்கையாலே, "ஸ்ரீதரன்" என்னும் பெயருக்குப் பொருந்தியவன் இவனேயென்கை. இதுவே எம்பிரானுக்குள்ள தனிப்பெருமை என்று காட்டுவதற்காகவன்றே

"ஸ்ரீவத்ஸவக்ஷா: ஸ்ரீவாஸ: ஸ்ரீபதி: ஸ்ரீமதாம் வர:
ஸ்ரீத: ஸ்ரீஶ: ஸ்ரீநிவாஸ: ஸ்ரீநிதி: ஸ்ரீவிபாவந: ||
ஸ்ரீதர: ஸ்ரீகர: ச்ரேய:ஸ்ரீமாந்" [608-619]

[திருமறுமார்வன்; திருவுக்கிருப்பிடம்; திருவின் நாயகன்; திருவாளர் தலைவன்; திருவையளிப்போன்; திருவுக்கும் திரு; திருமகள் கொழுனன்; திருவின் பெட்டகம்; திருப்புகழாளன்; திருவை தரிப்போன்; திரு வுடன் பிறப்போன்; திருவை உடையோன்] என்று பன்னிருதிரு நாமங்களாலே இவளுடைய ஸம்பந்தத்தை விஷ்ணு ஸஹஸ்ரநாமத் திலே வியாஸர் வெளியிட்டார். "திருவிருந்த மார்பில் சிரீதரன்"

என்னும் பாடம் காண்கிறது. (சிரீதரன் தன் வண்டுலவு தண்டுழாய்த் தார் தன்னைச் சூடித்தரித்து) லக்ஷ்மீநாதனுடைய, மதுவெள்ளம் மிக்கிருக்கையாலே வண்டுகள் ஸஞ்சரிக்கும், குளிர்ந்து மலர்ந்த திருத்துழாய் மாலையை "சூடிக்களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்" [திருப்பல்லாண்டு-9] என்கிறபடி தலையிலே சூட்டிக்கொண்டு, அத்தாலே ஸத்தைபெற்று நின்று; "திருநின்ற பக்கம் திறவிதென்று ஓரார்" என்று மேலோடே கூட்டி அந்வயித்துக்கொள்வது.

63. தரித்திருந்தே னாகவே தாராகணப் போர்
விரித்துரைத்த வெந்நாகத் துன்னை—தெரித்தெழுதி
வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது.

பதவுரை:—தாராகணம் — நக்ஷத்ரகணங்களினுடைய, போர்—ஸஞ்சாரத்தை, விரித்து உரைத்த— (ஜ்யோதிச்சாஸ்த்ரத்தின் மூலம்) விஸ்தாரமாக வெளியிட்டவனும், வெம்நாகத்து உன்னை—எதிரிகளுக்கு வெம்மைமிக்கவனுமான திருவனந்தாழ்வானுக்கு அந்தராத்மாவாகிய உன்னை, தெரித்து—அநுஸந்தித்தும், எழுதி—எழுதியும், வாசித்தும்—(எழுதினவற்றைப்) படித்தும், கேட்டும்—(பலரிடம்) ச்ரவணம்பண்ணியும், வணங்கி—நமஸ்காரம்பண்ணியும், வழிபட்டும்—ஆராதனம்செய்தும், பூசித்தும்—பூஜித்தும், போது போக்கினேன்—காலத்தைக்கழித்துக்கொண்டிருக்கிறேன்; ஆகவே—இப்படி செய்ததினால், தரித்திருந்தேன்—நான் ஸத்தைபெற்றிருந்தேன்.

பெரி-அவ:—அறுபத்து மூன்றாம்பாட்டு—(தரித்திருந்தேன்) கீழ்ப் பாட்டில் இப்படி செய்திலர் என்று வெறுத்தார் லோகத்தை. இதில் தமக்குள்ள ஏற்றம் சொல்லுகிறது.

வ்யா:—(தாராகணப்போரித்யாதி) நக்ஷத்ரகணங்களுடைய ஸஞ்சாரத்தை விஸ்த்ருதமாகச்சொன்ன திருவனந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருந்துள்ள உன்னை அநுஸந்தித்தும், லிகித்தும், வாசித்தும், ச்ரவணம் பண்ணியும், நிர்மமனாய் வணங்கி அதுதானே யாத்ரையாய் ஆராதித்தும் காலம் போக்கினேன். (ஆகவே தரித்திருந்தேன்) ஆக தரித்திருந்தேன். (தரித்திருந்தேனாகவே) தரித்திருந்தேனாகைக்காகப் பூசித்துக் காலத்தைப் போக்கினேன் என்றுமாம்.

திவ்ய-அவ:—சென்ற பாட்டில் பிறருடைய தாழ்வைக்கண்டு, 'பரமபுருஷனை வணங்குகிறார்களில்லையே' என்று வருந்தினர். இப்பாட்டில், "ஆரானுமாதானும் செய்ப, அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே" [பெரிய திருவ 25] என்ற நம்மாழ்வாரைப்போலே நெஞ்சை மீட்டு மறுபடியும் தான் பெற்ற நன்மையைப் பேசி உகக்கிறார்.

வ்யா:—(தாராகணப்போர் விரித்துரைத்த வெந்நாகத்துன்னை) நக்ஷத்திரகணங்களின் போக்கை (கதியை-ஸஞ்சாரத்தை) ஜ்யோதி: சாஸ்திரமூலமாக விஸ்தாரமாகச்சொன்ன திருவனந்தாழ்வானுகிற உன்னை; திருவநந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருக்கும் உன்னையென்றபடி. "என்னாகத்துன்னை" என்று ஆராய்ச்சிக்காரரொருவர் "ஆழ்வார்கள் காலநிலை" என்னும் புத்தகத்தில் பாடத்தை மாறுபடுத்தி வீண் ஆராய்ச்சிகள் செய்திருப்பது ஆசார்யஸ்ரீஸூக்திவிருத்தமாகையாலே அநாதரிக்கத்தக்கது. (தெரித்து) தெரிந்து; அறிந்து; அநுஸந்தித்து என்றபடி. "தரித்து" "விரித்து" என்றதோடு எதுகை ஒத்திருப்பதற்காக, 'ந்' என்னும் மெல்லொற்றை, 'த்' என்னும் வல்லொற்றாக்கி, 'தெரித்து' என்று கிடக்கிறது. "தெரிவித்து" [உபதேசித்து] என்பது இடைக்குறையாய்க் கிடக்கிறது என்று கொள்ளலாமாயினும், "தெரித்து, எழுதி, வாசித்தும், கேட்டும்"என்னும் கிரமத்தைப் பற்ற, "அநுஸந்தித்து" என்னும் பொருளே சுவையுடைத்தாகையாலே, ஆசார்யவர்யரால் அங்ஙனமே அருளிச்செய்யப்பட்டது. (தெரித்து) முதலில் மநஸ்ஸாலே அநுஸந்தித்து. (எழுதி) பிறகு அவ்வர்த்தங்களை நூல்களாக எழுதி. (வாசித்தும்) தாமும் பிறரும் எழுதிய செவிக்கினிய செஞ்சொற்களைப் படித்தும்; சகாரத்தாலே பிறரைப் படிக்கச்செய்வதையும் கூட்டிக்கொள்கிறது. (கேட்டும்) முதலாழ்வார்கள் போன்ற மஹான்கள் அருளிச்செய்யுமவற்றைக் கேட்டும். சகாரத்தாலே தம்முடைய சிஷ்யர்களுக்கு உபதேசித்து அவர்களைக் கேட்கச்செய்வதையும் கூட்டுகிறது. (வணங்கி) 'நாம் இவ்வளவு அறிவுடையோம்' என்னும் கர்வமில்லாமல், 'அதுவும் அவனதின்னருளே' என்றறிந்து மமகாரமற்று அவன் திருவடிகளிலே வணங்கி. (வழிபட்டும் பூசித்தும்) மநோவாக்காயங்களால் அவனை ஆராதனம் செய்தும். "வழிபட்டும்" என்றும் "பூசித்தும்"என்றும்

இரண்டு பதங்களைப் பிரயோகிக்கையால் தனக்கு பகவதாராதனமே ப்ரதானமான பொழுதுபோக்காயிருந்தது என்று உணர்த்துகிறார். (போக்கினேன் போது) ஆத்மோஜ்ஜீவனார்த்தமாகச் செய்யவேண்டுவதொன்றில்லை. திருத்தலாமளவும் பிறரையும் திருத்தியாகிவிட்டது. இனி, இங்கிருக்கும் நாள் நல்ல போதாகப் போக்கவேண்டுமிவ்வளவேயன்றோ உள்ளது. அதை இக்காரியங்களாலே போக்கினேன். (ஆகவே தரித்திருந்தேன்) ஆகையினாலேயே மிகக்கொடிய இந்த ஸம்ஸாரத்திலிருந்தும் ஸத்தை பெற்றிருந்தேன். அன்றிக்கே, இவற்றைச்செய்தது எதற்காகவெனில்:— (தரித்திருந்தேனாகவே) தரித்திருந்தவன் ஆவதற்காக; ஸத்தை பெறுவதற்காக என்றும் கொள்ளலாம்.

64. போதான விட்டிறைஞ்சி யேத்துமினோ பொன்மகரக்
காதானை யாதிப்பெருமானை—நாதானை
நல்லானை நாரணனை நம்மேழ் பிறப்பறுக்குஞ்
சொல்லானைச் சொல்லுவதே சூது.

பதவுரை:—பொன் மகரம் காதானை— அழகிய மகரகுண்டலங்களைத் திருக்காதுகளில் அணிந்துள்ளவனும், ஆதி—ஜகத்காரணபூதனும், பெருமானை—பெருமைபொருந்தியவனும், நாதானை—(அனைவர்க்கும்) நாதனாயிருப்பவனும், நல்லானை — அடியாரிடம் வாத்ஸல்யமுடையவனும், நாரணனை—நாராயணனென்று ப்ரஸித்திபெற்றவனும், நம் ஏழ்பிறப்பு அறுக்கும் சொல்லானை—நம்முடைய ஜந்மபரம்பரைகளை அறுக்கவல்ல திருநாமங்களையுடையவனுமான புருஷோத்தமனைக் குறித்து, போது ஆன இட்டு இறைஞ்சி ஏத்துமின்—புஷ்பமென்று பேர் பெற்றவற்றை ஸமர்ப்பித்து வணங்கித் துதிசெய்யுங்கள்; சொல்லுவதே— (அவனுடைய திருநாமங்களை வாயாரச்) சொல்லித் துதிப்பதே, சூது—நமக்குத் தகுதி.

பெரி-வ்யா:— அறுபத்துநாலாம் பாட்டு. (போதானவித்யாதி) 'இன்ன புஷ்பம்' என்று நியதியில்லை; பூவானதையெல்லாவற்றையும் கொண்டு திருவடிகளிலே ஸமர்ப்பித்து வணங்கி ஸ்தோத்ரம் பண்ணுங்கோள். (பொன் மகரக்காதானை) கைக்கூலி கொடுத்தும் ஸ்தோத்ரம் பண்ணவேண்டும்படி ஸ்ப்ருஹணீயனானவனை. (ஆதியித்யாதி) அழகியதென்று அப்ராப்தமன்றிக்கே நமக்கு உத்பாதகனானவன். ஸ்வாமியாய், வத்ஸலனாகையாலே நாராயணஶப்த வாச்யனாய், நம்

முடைய ஸம்ஸாரஸம்பந்தத்தை அறுக்கும் திருநாமத்தை உடையவனைச் சொல்லுவதே இவ்வாத்மாவுக்கு உறுவது.

திவ்ய-அவ:—தம் காலக்ஷேபப்ரகாரத்தை அருளிச்செய்தார் கீழ்ப்பாட்டில்; பிறருக்குப் போதுபோக்கும் வழியை உபதேசிக்கிறார் இப்பாட்டில்.

வ்யா:—(போதான இட்டிறைஞ்சி ஏத்துமினோ) பூவென்று பெயர்பெற்றது எதுவானாலும் சரி; அவற்றையெல்லாம் எம்பெருமானுடைய திருவடிகளிலே ஸமர்ப்பித்து, மனத்தாலே அவனை வணங்கி, வாயாலே துதியுங்கள். பக்தியுடன் ஸமர்ப்பித்தால் எந்தப் பூவாயினும் எம்பிரானுக்கு ஆகாததில்லை என்னும் சாஸ்திரார்த்தத்தை "போதான" என்னும் பதத்தாலே உணர்த்துகிறார். "பத்ரம் புஷ்பம்-பக்த்யுபஹ்ருதம் அச்நாமி" [பக்தியோடு அளிக்கப்பட்ட எந்த இலையையும் பூவையும் நான் ஆதரத்துடன் அனுபவிக்கிறேன்.] என்றான் கீதையில் கண்ணன்; திருமங்கையாழ்வாரும் "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியும் ஆம்பலும் புள்ளாய் ஓரேனமுமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கு" என்று எம்பெருமானுக்கு ஆகாத பூவில்லை என்று உணர்த்தினார். "புரிவதுவும் புகை பூவே" என்றார் நம்மாழ்வாரும். இவ்விடத்தை உபந்யஸியாநின்ற பட்டர் "கூளத்தையிட்டுப் புகைத்தாலும் போதும்; கண்ட காலிப்பூவை இட்டாலும் ஏற்றுக்கொள்ளுவன்" என்று அருளிச்செய்தார். இதைக்கேட்ட நஞ்சீயர் "'ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்' [கண்டகாரிப்பூவை எம்பெருமானுக்கு இடலாகாது] என்று சாஸ்திரம் சொல்லிற்றே" என்றார். "எம்பெருமானுக்கு ஆகாதது என்னும் நினைவாலே கண்டகாரிப் புஷ்பத்தை நிஷேதிக்கவில்லை. பறிக்கிற ஆச்ரிதன் கையில் முள்பாயும் என்பதற்காகத் தவிர்த்ததுகாணும்" என்று பட்டர் அருளினார். (இட்டு இறைஞ்சி ஏத்துமினோ) 'இட்டு' என்று காயிககைங்கர்யத்தையும், 'இறைஞ்சி' என்று மாநஸகைங்கர்யத்தையும், 'ஏத்துமினோ' என்று வாசிககைங்கர்யத்தையும் சொல்லுகிறது. (பொன் மகரக் காதானை) பொன் போலே ஆசைப்படத்தக்கதாய், மகரகுண்டலங்களணிந்ததான திருச்செவிகளை உடையவனை. விலைகொடுத்து வாங்கிப் போற்றி ரக்ஷிக்கப்

படும் பொன்போலே இவனும் கூலிகொடுத்துத் துதிக்கத்தக்கவன் என்று உணர்த்துவதற்காக 'பொற்காதானை' என்றார். 'பொன்மகரம்' என்று ஸுவர்ணமயமான மகரகுண்டலங்கள் என்றும் பொருள் கொள்வர். (ஆதிப்பெருமானை) அழகியதாயிருந்தும், தகாததாயிருக்கும் சிலபொருள்கள்போல் அன்றிக்கே, நமக்குத் தகுந்தவனாய், நம்மைப் படைத்த பெருமையை உடையவனை. "நம்மை ஏற்பனோ?' என்ன:—(நாதானை) நம் ஸ்வாமியாகையாகலே நம்மை அங்கீகரிக்கக்கூடியவனை. 'நம் தோஷங்கண்டு வெறுப்பனோ?' என்ன,—(நல்லானை) தோஷங்களைக் காணாமலிருக்கை, அவைகளைக் குணமாகவும் கொள்ளுகை என்னும் வாத்ஸல்யமாகிற நல்லதோர்குணத்தை உடையவனை. இப்பெருமைகள் இவனுக்குண்டு என்னும் விஷயத்தில் ப்ரமாணமென்னவெனில்;-(நாரணனை) நாராயணன் என்னும் இவன் பெயரே இப்பெருமைகளைப் பிரகடனம் செய்கிறதன்றோ என்கிறார். (ஆதிப்பெருமானை நாரணனை) ஸ்ருஷ்டிகாலத்தில் நரஸமூஹங்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருந்தவனாகையாலே நாராயணஶப்தம் இவனுடைய ஸர்வஸ்ஷ்ட்ருத்வத்தையும் காட்டுகிறது. "ஞாலமுற்றும் உண்டுமிழ்ந்த நாராயணனே" [திருவாய் 4-3-6] என்றார் ஆழ்வாரும். (நாதானை நாரணனை) நரஸமூஹங்களை தரித்தும், வியாபித்தும் நின்று, அவற்றுக்கு ப்ராப்யப்ராபகங்களாயிருக்கையாலே ஸர்வஸ்வாமித்வமும் நாராயணஶப்தார்த்தம். 'நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" [திருவாய் 2-7-2] என்றார் ஆழ்வாரும். (நல்லானை நாரணனை) மிகத்தாழ்ந்த நரஸமூஹங்களைக் கண்டு வெறுக்காமல் அவற்றினுள்ளே பூர்ணமாக வியாபித்து விளங்குகிறானாகையாலே வாத்ஸல்யகுணமும் நாராயணஶப்தார்த்தம். "நல்லானுடைய நாமம் சொல்லில் நமோநாராயணமே" [பெரியதிரு 6-10-4] என்றார் பரகைமன்னனும். (நாரணனை நம்மேழ் பிறப்பறுக்கும் சொல்லானை) நம்முடைய கணக்கற்ற பிறவிகளைப் போக்கடிக்கும் நாராயணசப்தத்தால் சொல்லப்படுமவனை.

"ஸங்கீர்த்ய நாராயணஶப்தமாத்ரம் விமுக்தது:க்கா: ஸுகிநோ பவந்தி" [நாராயணசப்தத்தைமட்டும் ஸங்கீர்த்தனம் செய்தவளவில் ஸம்ஸாரத் துன்பம் நீங்கி மோக்ஷஸுகத்தை அடைகின்றனர்] என்று சொல்லப்

பட்டதன்றோ. "அடியார் படுதுயராயினவெல்லாம் நிலந்தரஞ்செய்யும் நாராயணாவென்னும் நாமம்" [பெரிய திரு 1-1-9] என்றார் மங்கை மன்னனும். அன்றிக்கே, 'நம்மேழ் பிறப்பறுக்கும் சொல்லானை" என்று பொதுவாக பகவானுடைய திருநாமங்களின் பெருமையைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். "யந்நாமஸங்கீர்த்தநதோ விமுச்யதே" "யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி" [எவனுடைய திருநாமஸங்கீர்த்தனத்தினால் ஸம்ஸாரமாகிற பெரும் பயத்தினின்றும் நீங்கி மனிதன் மோக்ஷமடைகிறானோ.......] என்று ரிஷிகளும் இவ்வர்த்தத்தைப் பேசினர். (சொல்லுவதே சூது) அவனைச் சொல்லுவதே ஜீவர்களான நமக்குத்தகுந்தது.

65. சூதாவ தென்னெஞ்சத் தெண்ணினேன் சொன்மாலை
மாதாய மாலவனை மாதவனை—யாதானும்
வல்லவா சிந்தித் திருப்பேற்கு வைகுந்தத்
தில்லையோ சொல்லீ ரிடம்.

பதவுரை:— மாது ஆய — அழகுதான் ஒரு வடிவுகொண்டாப் போலேயிருப்பவனும், மாலவனை—அடியாரிடம் மயக்கமுடையவனுமான, மாதவனை — திருமாலைக் குறித்து, சொல் மாலை — இச்சொல் தொடைகளை, யாதானும் வல்ல ஆ சிந்தித்து இருப்பேற்கு—சக்தியுள்ள வரையில் அநுஸந்தித்திருக்கிற எனக்கு, வைகுந்தத்து இடம் இல்லையோ—ஸ்ரீவைகுண்டத்தில் இடம் இல்லையோ? சொல்லீர்— சொல்லுங்கள்; சூது ஆவது—இதுவே நமக்குத் தகுந்து என்று, என் நெஞ்சத்து எண்ணினேன்—என் மனத்தில் உறுதிகொண்டேன்.

பெரி-வ்யா;—அறுபத்தைந்தாம் பாட்டு. (சூதித்யாதி) உறுவதாவது என் நெஞ்சிலே மநோரதித்தேன். (சொன்மாலையித்யாதி) அழகுதான் வடிவு கொண்டாற்போலேயாய், வ்யாமுக்தனாயிருந்துள்ள ஸ்ரிய: பதியைச் சொல்லப்பட்ட ப்ரபந்தத்தை ஏதேனும் ஒருபடி அநுஸந்தித்திருக்கிற எனக்குப் பரமபதத்தில் இடமில்லையோ? ஸ்ம்ருதிமாத்ரம் உடையாருக்கும் பரமபதம் ஸித்தியாதோ என்கை. "स्मृतो यच्छति शोभनं" (ஸ்ம்ருதோ யச்சதி ஶோபநம்) என்கிறபடியே, பரமபதப்ராப்திக்கு ஸ்மர்த்தவ்யனுடைய நீர்மையாலே ஸ்மரணமாத்ரத்துக்கு அவ்வருகு வேண்டாவென்று தாத்பர்யம்.

திவ்ய-அவ:—"சொல்லுவதே சூது" என்று பிறருக்கு உபதேசித்ததைத் தாம் அனுஷ்டித்தபடியையும், அதனால் பெறவிருக்கும் பலனையும் பேசுகிறார்.

வ்யா:—(சூதாவது என்னெஞ்சத் தெண்ணினேன்) செய்யத் தகுந்த காரியத்தை என் மனத்திலே மனனம் செய்தேன். "நின் புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு வைகுந்தம் என்றருளும் வான்" [பெரிய திருவந்தாதி-53] என்கிறபடியே நினைப்பதும் பேரின்பமாயிருக்கும் விஷயமாகையாலே இதையே நெஞ்சிலே மநோரதித்தேன். அது யாதென்னில்-(சொல்மாலை வல்லவா சிந்தித்து....) ஸர்வேச்வரனைச்சொல்லும் பிரபந்தங்களை முடிந்தவரையில் அநுஸந்திப்பதே என்கை. 'விஷயமேது?' என்ன;—(மாதாய) அழகே வடிவெடுத்தது என்னும்படியான விஷயம். மாது—அழகு. வெளியழகேயாய், உள்ளத்தில் கொடியவனாயிருப்பனோ? என்ன;—(மாலவனை) அன்பே உருவானவனை. இவ்வழகுக்கும், அன்புக்கும் அடியென்ன? எனில்;—(மாதவனை) லக்ஷ்மீநாதனை. மா—லக்ஷ்மீ; தவன்—நாதன். இவளுடைய ஸம்பந்தமே இவனை அழகனாகவும், அன்பனாகவும் ஆக்குகிறது என்கை. (யாதானும் வல்லவா சிந்தித்திருப்பேற்கு) மாலைச்சொல்லும் மாலைகளை ஏதேனுமொரு விதத்தில் இயன்றவரையில் நினைத்திருக்கும் எனக்கு. (வைகுந்தத்திலலையோ சொல்லீர் இடம்) வைகுந்தத்திலே இடமில்லையோ? நீங்களே சொல்லுங்கள். (சிந்தித்திருப்பேற்கு வைகுந்தத்திலலையோ இடம்)

"ஆயாஸ: ஸ்மரணே கோஸ்ய ஸ்ம்ருதோ யச்சதி சோபநம்"
[வி-பு 1-17-78]

[இப்பரமனை நினைப்பதில் என்ன சிரமமுள்ளது? நினைத்த மாத்திரத்தில் நன்மையளிப்பவன் இவன்.] என்று சொல்லப்படும் ஸௌலப்யத்தையுடையவனாய் அவனிருக்கும்போது அவனை அடைய நினைவுக்குமேல் வேறொன்று வேண்டுமோ?

66. இடமாவ தென்னெஞ்ச மின்றெல்லாம் பண்டு
படநாகணை நெடியமாற்கு—திடமாக
வையேன் மதிசூடி தன்னோடு அயனைநான்
வையேனாட் செய்யேன் வலம்.

பதவுரை:—பண்டு—(நான் நினைப்பதற்கு) முன்பு, படம் நாகஅணை நெடியமாற்கு—படங்களையுடைய சேஷசயனத்தில் பள்ளிகொண்டருள் பவனாயிருந்த ஸர்வேச்வரனுக்கு, இன்று—இப்போது முதலாக, எல்லாம்—மேலுள்ள காலமெல்லாம், இடம் ஆவது—இருப்பிடமாவது, என் நெஞ்சம்—எனது நெஞ்சாகும்; மதி சூடி தன்னோடு—சந்திரனைத் தலையிலே சூடியிருக்கிற ருத்ரனையும், அயனை—பிரமனையும், திடம் ஆக-பரம்பொருளாக, வையேன்—மனத்திற்கொள்ள மாட்டேன்; வையேன் நான்—(பரதத்துவமின்னதென்று கண்டறியத்தக்க) ஸூக்ஷ்ம புத்தியுடையேனான நான், வலம்—(பகவானை அண்டைகொண்ட) பலத்தாலே ஆள் செய்யேன்—(அந்த தேவதாந்தரங்களுக்குத்) தொண்டு செய்யவும் மாட்டேன்.

பெரி-வ்யா:—அறுபத்தாறும்பாட்டு—(இடமித்யாதி) ஸர்வாதிகனை ஸர்வேச்வரனுக்கு வாஸஸ்தானம் என்னோடுஸம்ச்லேஷிப்பதுக்கு முன்பெல்லாம், தன்னோடே ஸம்ச்லேஷத்தாலே விஸ்த்ருதமான பணத்தையுடைய திருவனந்தாழ்வான்; இப்போதெல்லாம் என்னுடைய ஹ்ருதயம். (திடமித்யாதி) சந்த்ரனை தரித்தானாயிருக்கிற ருத்ரனையும், திருநாபீகமலத்திலே உத்பந்நனாகையாலே அஜனென்றிருக்கிற ப்ரஹ்மாவையும் த்ருடபதார்த்தங்களாக நினையேன். (வையேனாட்செய்யேன்) அதுக்கடி கூரியேனாய், ஸாராஸார விவேகஜ்ஞனாகை. "प्रतिबुद्धा न सेवन्ते" (ப்ரதிபுத்தா ந ஸேவந்தே) என்று கூரியரானவர்கள் தேவதாந்தரபஜநம் பண்ணார்களிறே என்கை. (வலம்) இதுக்கெல்லாவற்றுக்கும் அடி பகவத் பரிக்ரஹமான பலம்.

அவ:—"என்னெஞ்சத் தெண்ணினேன்" என்றார் கீழ்ப்பாட்டில். எண்ணியவுடன் அவன் பட்ட பாட்டையும், அதைக்கண்டு தான் ஈடுபட்ட படியையும் அருளிச்செய்கிறார் இப்பாட்டில்.

வ்யா:—(இடமாவதென்னெஞ்சமின்றெல்லாம்) நான் அவனை நெஞ்சிற்கொண்டபிறகு, இப்போதெல்லாம் என் நெஞ்சமே அவனுக்கு இருப்பிடமாயிற்று. இதற்குமுன் எங்கிருந்தான்? எனில்: (பண்டு பட நாகணை) இதற்குமுன்பெல்லாம், தன்னோடு உண்டான நித்யஸ்பர்சத்தாலே பல்கிப் பணைத்திருக்கும் பல்லாயிரம் பணங்களையுடைய திருவனந்தாழ்வான் மேலேயாயிற்று கண்வளருவது. (இன்

றெல்லாம் என்னெஞ்சம்-பண்டு படநாகணை) ஸாத்யஸ்தலமும் ஸாதநாநுஷ்டானஸ்தலமும். நிஹீநமான நெஞ்சை விரும்பும் அவன் தான் யாரென்னில்: (நெடிய மாற்கு) ஸர்வாதிகனான ஸர்வேச்வரனுக்கு என்கிறார். (இடமாவதென்....நெடியமாற்கு)

"அன்று வெஃகணைக்கிடந்ததென்னிலாத முன்னெலாம்" [64]
"கிடப்பதும், நற்பெருந்திரைக்கடலுள் நானிலாத முன்னெலாம்"[65]

என்று இவ்வாழ்வார்தாமே திருச்சந்தவிருத்தத்திலும்,

"பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாளநம்பீ" [5-4-9]

என்று பெரியாழ்வாரும் இவ்வர்த்தத்தை விவரித்தருளினார்கள். (நெடிய மாற்கு) என்னிலும் விஞ்சிய காதலை உடையவனுக்கு என்றும் பொருள்கொள்ளலாம். மால்—பெரியோன்; அன்பன்.

"வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னையொழிய என்னின்முன்னம்
பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்" [திருவாய் 9-6-10]

என்னும்படியான நெடிய காதலை உடையவனாகையாலே அதிநிஹீநமான என்னெஞ்சிலே நிலைபெற்றான் என்கிறார். "நீர் என்செய்தீர்" என்ன; "அவன் வந்து சேர்ந்த பிறகு அந்நெஞ்சை அவனிருக்கத்தக்கதாம்படி திருத்திவைத்தேன்" என்கிறார் பின்னடிகளாலே. (திடமாக வையேன்) இதரதேவதைகளை நிலையான பொருள்களாக நெஞ்சிலே வைக்கமாட்டேன். அவர்கள்தான் யாரென்னில்: (மதிசூடி தன்னோடு அயனை) ஆபத்துக்காலத்திலே தன்னை அண்டிவந்த சந்திரனைத் தலையிலே தரித்து ரக்ஷிக்கையாலே தானே ஸர்வரக்ஷகன் என்று அபிமானித்திருக்கிற ருத்ரனையும், நாபீகமலத்திலிருந்து பிறக்கையாலே நான் அயோநிஜன் என்று அபிமானித்திருக்கிற பிரமனையும் பரம்பொருளாக நினையேன். (நான் வையேன்) இதற்குக் காரணம் நான் ஸூக்ஷ்மபுத்தியுடையவனாய், நன்மை தீமைகளை அறியவல்லவனாயிருக்கை. வை-கூர்மை; (இங்கு) புத்திகூர்மை. வையேன்-புத்திகூர்மையை உடையேன். (வையேன் ஆட்செய்யேன்) புத்திகூர்மையை உடையேனாகையாலே ப்ரஹ்மருத்ரர்களுக்கு அடிமை செய்ய மாட்டேன்.

"ப்ரஹ்மாணம் ஶிதிகண்டஞ்ச யாச்சாந்யா தேவதா: ஸ்ம்ருதா ।
ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம் ॥" [பார-மோக்ஷ-116]

[அவர்களிடமிருந்து கிடைக்கும் பலன் அளவுபட்டதாகையாலே, புத்தி கூர்மையுடையவர்கள் பிரமனையும், சிவனையும், மற்ற தேவதைகளையும் ஆராதிக்கமாட்டார்கள்.] என்றன்றோ சொல்லப்பட்டது. (வலை) இப்பெருமைகள் எல்லாவற்றுக்கும் காரணம் அப்பெருமானை அண்டை கொண்ட பலமாகும்.

67. வலமாக மாட்டாமை தானாக வைகல்
குலமாக குற்றந்தா னாக— நலமாக
நாரணனை நாபதியை ஞானப்பெருமானை
சீரணனை யேத்துந் திறம்.

பதவுரை:—நாரணனை — ஸர்வஸ்வாமியாய், நாபதியை—என்னு டைய) நாவுக்கு நிர்வாஹகனாய், ஞானம் பெருமானை—அறிவிற் பெரிய வனாய், சீர்அணனை—நற்குணங்கள் பொருந்தியிருக்கப்பெற்றவனான ஸர்வேச்வரனை, வைகல் நலம் ஆக ஏத்தும் திறம்—எப்போதும் நன்றாகத் துதிசெய்கையாகிற இந்த ஸ்வபாவமானது, வலம் ஆக—பலம் தருவதாகிலுமாகுக; மாட்டாமை தான் ஆக — பலம்தரமாட்டாதாகிலுமாகுக; குலம் ஆக—நற்குலத்தைத் தருவதாகிலுமாகுக; குற்றம் தான் ஆக — தீக்குலத்தையுண்டாக்குவதாகிலுமாகுக; (துதிப்பதை நான் கைவிடமாட்டேன்).

பெரி-வ்யா:—அறுபத்தேழாம் பாட்டு. (வலம்) (நலமாகவித்யாதி) நன்றாக ஸர்வஸ்வாமியாய், என் நாவுக்கு நிர்வாஹகனாய், ஜ்ஞாநகுணங்களுக்கெல்லாம் ஆச்ரயமாயிருக்கிறவனை நன்றாக ஏத்தும் ப்ரகாரம்; (வலமாக) பலமாகவுமாம்; ஆபிஜாத்யத்தை உண்டாக்கவுமாம்; அதிலே தோஷத்தை உண்டாக்கவுமாம். இவையன்று உத்தேச்யம்; அவனை ஏத்துகையே உத்தேச்யமென்கை.

திவ்ய-அவ:—"நெஞ்சத்து எண்ணினேன்" என்றும், "திடமாக வையேன் மதிசூடிதன்னோடு அயனை" என்றும் சொன்னீர். நண்ணாதார் முறுவலிப்பதும், நல்லுற்றோர் கரைந்தேங்குவதும் உலகியற்கையாகக் காணப்படுகிறதே. துன்பம் வந்துற்றபோதும் இவ்வுறுதி தளராதிருக்குமோ? என்ன;—இன்பம் வந்தாலும் துன்பம் வரினும்

யான் எம்பிரானைத் துதிப்பதில் ஒருகுறையுமிராது என்று தன் அத்யவஸாயத்தை அருளிச்செய்கிறார்.

வ்யா:—(நலமாக நாரணனை) நன்றாக ஸர்வஸ்வாமியாயிருப்பவனை நரஸமூஹங்கள் எல்லாவற்றையும் வியாபித்து, தரித்துநின்று அவற்றுக்கு ஸ்வாமியாயிருக்கும்போது அவற்றின் தோஷம் தன்மேல் படாதபடி நன்றாக இருப்பவன். ஆகையால் இவனைத் துதிப்பது தாழ்வுக்குக் காரணமாகாது என்று பாவம். (நாபதியை) தாழ்ந்த விஷயங்களிலே அழுந்திக்கிடந்த என் நாவைத் தன் விஷயத்திலே யாம்படி நிர்வஹித்தவனை. (ஞானப்பெருமானை) "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" [எவன் எல்லாப் பொருள்களுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை அறிகிறானோ] என்கிறபடியே அறிவுக்கோர் இருப்பிடமா யிருப்பவனை. (சீரணனை) அறிவுள்ளவனாயிருந்தும் குணஹீனனா யிருக்கையன்றிக்கே, குணங்களுக்கெல்லாம் கொள்கலமாயிருப்பவனை. (ஏத்தும் திறம்) ஏத்தும் விதம். 'நலமாக' என்றதை இங்கு கூட்டி 'நன்றாகத் துதிக்கும் வழி' என்றும் பொருள்கொள்ளலாம். (வலமாக) அவனைத் துதிப்பதாகிற செயல் பலத்தைக் கொடுத்தாலும் சரி; (மாட்டாமைதானாக) பலமின்மையைக் கொடுத்தாலும் சரி; (குலமாக) நற்குடிப்பிறப்பைக் கொடுத்தாலும் சரி; (குற்றந்தானாக) தோஷமுள்ள குடிப்பிறப்பைக் கொடுத்தாலும் சரி;(வலமாக–குலமாக)"குலம் தரும்; வலந்தரும்" [பெரியதிரு 1-1-9] என்றபடி ஆனாலும் சரி; அதற்கு எதிர்த்தட்டேயானாலும் சரி; "என்னெஞ்சத்தெண்ணினேன்" "திடமாக வையேன்" என்னும் இரண்டு உறுதிகளையும் கைவிடேன்

"கடியன் கொடியன் நெடியமால் உலகங்கொண்ட
அடியன் அறிவருமேனிமாயத்தன் ஆகிலும்
கொடிய என் நெஞ்சம் அவனென்றே கிடக்கும் எல்லே"
[திருவாய் 5-3-5]

என்ற நம்மாழ்வாரின் உறுதியும் இங்கு நினைக்கத்தக்கது.

68. திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்க ளென்றான் நமனுந்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு.

பதவுரை:—நமனும்—யமனும், தன் தூதுவரை—தனது சேவகர்களை, கூவி—அழைத்து, செவிக்கு—(அவர்களுடைய)காதில், திறம்பேல் மின் கண்டீர்—(தூதர்காள்! இப்போது நான் உங்களுக்கு இடும் ஆணையைத்)தவறவேண்டா; திருவடி தன்—ஸர்வேச்வரனுடைய, நாமம்—திருநாமத்தை, மறந்தும்—மறந்தொழிந்தாலும், புறம் தொழா மாந்தர்—தேவதாந்தர பஜநம் பண்ணுக மனிசர்களை(க் கண்டால்) இறைஞ்சி—வணங்கி, சாதுவர் ஆய் போதுமின்கள் என்றான்—(கொடுமை தவிர்ந்து) ஸாதுக்களாய் நடக்கக்கடவீர்கள் என்று சொன்னான்.

பெரி-அவ:—அறுபத்தெட்டாம்பாட்டு. (திறம்பேன்மினித்யாதி) பகவத் பரிக்ரஹமே பலமென்னுமத்தை **"स्वपुरुषमभिवीक्ष्य"** (ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய) என்கிற ச்லோகத்தின்படியாலே விவரிக்கிறார்.

வ்யா:—(திறம்பேன்மின் கண்டீர்) 'திறம்பாதே கொள்ளுங்கோள்' என்னும்போது நாலுபத்தோலை மறுக்கவுமாம். (திருவடியித்யாதி) **"परिहर मधुसूदनप्रपन्नान्"** (பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந்) என்கிறபடியே. ஸ்வாமியினுடைய திருநாமத்தை மறக்கவுமாம்; தேவதாந்தர பஜநம் பண்ணுதொழிகை இவன் ப்ரபந்நனுகையாவது. பர்த்தாவின் பக்கல் ஆநுகூல்யம் க்ரமத்திலே பிறக்கவுமாம்; பர்த்ரந்தரபரிக்ரஹமிறே அவனுக்காகாமைக்கு அடி. (மாந்தரை) மநுஷ்யரை. (இறைஞ்சியுமித்யாதி) அவர்களை நலிந்தோம் என்றிருக்கவொண்ணுது; **"पाशहस्तं"** (பாசஹஸ்தம்) என்கிற க்ரூர வேஷத்தைத் தவிர்ந்து விநீதவேஷராய், அஞ்ஜலிப்ரணுமாதிகளைப் பண்ணிப்போருங்கோள் என்கிறார். (நமனும்) **"सम इति"** (ஸம இதி) என்று சொல்லப்படுகிறவனும். (தன் தூதுவரை) **"स्वपुरुषं"** (ஸ்வபுருஷம்) என்றபடி. (செவிக்கு) **"कर्णमूले"** (கர்ணமூலே) என்றபடி. அந்தரங்கர்க்கு வார்த்தை சொல்லாநிற்கச் செய்தே, ப்ரகாசிக்கில் என்னுகிறதோ? என்று நெஞ்சு பறைகொட்டுகிறபடி.

திவ்ய-அவ:—பகவத் பஜனமும், தேவதாந்தர வைமுக்யமும் தான் பந்தருவதாகிலும் உத்தேச்யமே என்றார்; உண்மையில் பகவத் ஸம்பந்தமே பலந்தருவது என்னும் அருப்பொருளை ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் யமகிங்கர ஸம்வாதத்தில்

ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம்
வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்
ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥" [3-7-14]

[பாசத்தைக் கையில் கொண்டு நிற்கும் தன் தூதனைக் கண்ணாலே நோக்கி, (ஸர்வலோகபயங்கரனாகப்) பிரஸித்திபெற்ற யமன் அவன் காதினுள் பின்வருமாறு சொல்லுகிறான்:—தூத! மதுஸூதனனை சரணமடைந்தவர்களை விலகிச்செல். நான் மற்றுள்ளார்க்கு ஸ்வாமியே யொழிய வைஷ்ணவர்களுக்கு ஸ்வாமியல்லன்.] என்று யமன் சொன்ன பாசுரத்தைக் காட்டி நிலைநாட்டுகிறார். இந்த ஸ்ரீவிஷ்ணு புராணச்லோகத்திற்கு மொழிபெயர்ப்பாகவும், வியாக்கியானமாகவும் அமைந்துள்ளது இப்பாசுரம்.

வ்யா:—(திறம் பேண்மின் கண்டீர்) நான் சொல்லும் இவ்வார்த்தையை மீறிவிடாதீர்கள் என்று இவ்வளவு கண்டிப்பாகப் பீடிகை போட்டுக்கொண்டு ஆரம்பிப்பதாலே, இது யமனிடும் மற்ற ஆணைகளுக்கெல்லாம் மேலான ஆணை என்று தோற்றுகிறது. இக்கட்டளையைக் காப்பாற்றுவதற்காக, என்னுடைய மற்ற கட்டளைகள் பத்தெட்டையும் நிறைவேற்றாமல் விடலாம் என்று பாவம். ஒருவனுடைய ஆவியைக் கொண்டுவரும்படி யமனே ஓலையனுப்பினாலும், அவன் வைஷ்ணவனாகில் யமதூதன் அவ்வோலையை மறக்கலாம் என்று கருத்து. (திருவடிதன் நாமம் மறந்தும் புறம்தொழா மாந்தர்) சுலோகத்தில் "மதுஸூதநப்ரபந்நாந்" என்னும் பதத்தை அவ்யாப்தி முதலான தோஷங்கள் வாராதபடி லக்ஷணசிக்ஷை செய்து விவரிக்கிறார். 'மதுஸூதநனை சரணம் பற்றியவர்கள்' என்று பொதுவாகச் சொன்னதை, சரண்யனுடைய ஸ்வபாவத்தைத் திருவுள்ளத்தில் கொண்டு, "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்று விவரிக்கிறார். ஸர்வேச்வரனை ஒருகால் சரணம்பற்றிய பிறகு அவனை அடியோடு மறந்துவிட்டாலும் பாதகமில்லை; மற்றுமோர் தெய்வத்தைத் தொழாமலிருந்தார்களாகில் போதுமானது மதுஸூதனப்ரபன்னர்களாகைக்கு என்று கருத்து. மனைவியொருத்திக்குக் கணவனிடம் அன்பில்லாவிடினும், பாதகமில்லை; சிறுகச்சிறுக அன்பு பிறக்கக்கூடுமாகையாலே அவளுடைய பத்னீத்வத்திற்கு ஹானியில்லை. ஆனால் அவள் வேறொரு

ருவனோடு கூடினளாகில் அவனால் ஸ்வீகரிக்கத்தகாதவளாய் தன் ஸ்வரூபத்தையே இழக்கிறாளன்றோ. அதுபோலவே பகவந்நாமத்தை மறந்தாலும், புறந்தொழாமலிருந்தார்களில் அவர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களாவர்கள்; அவர்கள் விஷயத்திலும் அஞ்சி நடக்கவேணும் என்கை. திருவடி-ஸ்வாமி. (மாந்தர்) மநுஷ்யரை. பாகவதர்களுக்குரிய குணச்சிறப்புகளில்லாமல், ஸாமாந்யர்களைப்போலே இருந்தாலும் சரி; மறந்தும் புறந்தொழாமை ஒன்றையே நீங்கள் கவனிக்க வேண்டியது. (இறைஞ்சியும் சாதுவராய்ப் போதுமின்கள் என்றான்) "பரிஹர" என்றதை விவரிக்கிறபடி. 'அவர்களைத் துன்புறுத்தாமல் செல்கிறோம்' என்று இவ்வளவோடே திருப்தியடைந்தால் போதாது. "பாஶஹஸ்தம்" என்று சொல்லப்பட்ட கொடிய வேஷத்தை விட்டு அடக்கவொடுக்கத்தோடு அஞ்சலி, நமஸ்காரம் முதலியவற்றைச் செய்து ஸாதுக்கள் என்று தோற்றப்போகவேண்டும் என்றான். சாதுவர்—ஸாதுக்கள். இப்படிச் சொன்னவன்தான் யாரென்னில்: (நமனும்)

"அஹமமரவரார்ச்சிதேந தாத்ரா
ஸம இதி லோகஹிதாஹிதே நியுக்த:" [வி-பு 3-7-15]

[நான் தேவர்தலைவர் வணங்கும் பரமபுருஷனாலே, (உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வாசிபாராமல் அனைவருக்கும் நீதி வழங்குவதில்) ஸமானமானவன் என்னும் காரணத்தாலே உலகிற்கு நன்மையளிப்பதிலும், தீமைதீர்ப்பதிலும் ஏவப்பெற்றிருக்கிறேன்.] என்று ஸமன்-பக்ஷபாதமற்றவன்-என்று பிரஸித்திபெற்றவனை யமன் கிடீர் இவ்வார்த்தையைச் சொன்னது. "ப்ரபுரஹமந்யந்ருணாம்" என்கிறபடியே மற்றுள்ளார் விஷயத்திலன்றோ இவன் ஸமனாகவும் யமனாகவும் ஆவது. பிரஜைகளுக்கு நீதி வழங்குமவன் ராஜமஹிஷிக்கு நீதி வழங்கமுடியுமோ? ஆகையாலே, பக்ஷபாதமற்றமவன் என்று பிரஸித்திபெற்றவனும் பக்ஷபாதம் தோற்ற வார்த்தை சொன்னான் என்கிறார்.

"அவன்தமர் எவ்வினையராகிலும் எங்கோன்
அவன்தமரே என்றொழிவதல்லால்—நமன்தமரால்
ஆராயப்பட்டறியார்கண்டீர் அரவணைமேல்
பேராயற்காட்பட்டார் பேர்" என்றார் பொய்கையாழ்வாரும்.

(தன் தூதுவரை) "ஸ்வபுருஷம்" என்றதன் மொழிபெயர்ப்பு. (கூவி) அழைத்து. (செவிக்கு) "கர்ணமூலே" [காதினுள்] என்றதன் மொழி பெயர்ப்பு—''ராஜமஹிஷியை விரும்பாதே'' என்னும் வார்த்தையை ஒருவன் நாலுபேரறியச் சொல்லலாகாதன்றே. சொன்னால், சொல் லப்பட்டவனுக்கு ராஜமஹிஷியிடம் விருப்பமுள்ளதென்று ராஜாவின் காதில் விழுந்து அவனுக்கு ப்ராணஹாநியும் ஆகுமன்றே. அது போலே, தனக்கு மிகவும் அந்தரங்கனை தூதனிடம் சொல்லும் போதும், 'இது வெளிப்பட்டால் நம் கதி என்னுமோ?' என்னும் பயத்தாலே நெஞ்சு 'திடுக் திடுக்' என்று அடித்துக்கொள்ள தூதனின் காதுக்குள் அதிரஹஸ்யமாகச் சொல்லுகிறான். (செவிக்கு) ''கர்ண மூலே'' என்றதற்கு வியாக்கியானமருளிச்செய்த விஷ்ணுசித்தா சார்யர், ''ப்ரபுபி: ஸ்வப்ரபாவபங்கஸ்தாநம் ந ப்ரகாச்யமிதி நீத்யா, விஷ்ணு நாமஸங்கீர்த்தநச்ரவணாதிநா நரகாந் முச்யேரந் தேந ஸ்வாதிகாரஹாநிரிதி பீத்யா ச கர்ணமூலே கதநம்। ராஜதாராந் மா கா இதி வசநவத் ரஹஸி கதநீயத்வாச்ச॥" [யஜமானர் கள், தங்கள் பெருமைக்குக் குறைவேற்படுவதற்குக் காரணமாயிருக் கும் விஷயத்தை வெளிப்படுத்தலாகாது என்னும் நியாயத்தாலும், விஷ்ணுநாமத்தை உரக்கச் சொன்னால் அதைக் கேட்பது, நினைப்பது, சொல்லுவது முதலான செயல்களைச் செய்து நரகவாசிகளும் முக்தி யடைவர்; அதனால் தன் பதவிக்கு அழிவேற்படும் என்னும் பயத்தாலும் கர்ணமூலத்தில் சொல்லுகிறான். ''ராஜமஹிஷியை அநுபவிக்காதே" என்னும் வாக்கியத்தைப்போலே ரஹஸ்யமாச் சொல்லவேண்டிய விஷயமாகையாலும் (காதினுள் சொல்லுகிறான்)] என்று செவியி னுள் சொன்னதற்கு மூன்று காரணங்களை அருளிச்செய்ததும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

69. செவிக்கின்ப மாவதுவும் செங்கண்மால் நாமம்
புவிக்கும் புவியதுவே கண்டீர்—கவிக்கு
நிறைபொருளாய் நின்றானை நேர்பட்டேன் பார்க்கில்
மறைப்பொருளு மத்தனையே தான்.

பதவுரை:—செவிக்கு இன்பம் ஆவதுவும்—காதுக்கு இன்ப மளிப்பதும், செம் கண்மால் நாமம்—புண்டரீகாக்ஷனை எம்பெருமா னுடைய திருநாமமே; புவிக்கு—பூமியிலுள்ளாரெல்லார்க்கும், புவியும்

அதுவே— (நிழல்பெற ஒதுங்குவதற்கு) இடமாவது அத்திருநாமமே; கவிக்கு நிறைபொருள் ஆய் நின்றானை—கவிதைக்கு நிறைந்த பொருளாயிருக்கும் எம்பெருமானை, நேர்பட்டேன்—யாத்ருச்சிகமாக அடையப் பெற்றேன்; பார்க்கில்—ஆராய்ந்து பார்த்தால், மறை பொருளும் அத்தனையேதான்—வேதங்களில் தேர்ந்த பொருளும் அவ்வளவே.

பெரி—வ்யா:—அறுபத்தோன்பதாம்பாட்டு—(செவிக்கித்யாதி) யமவச்யதையைத் தவிர்க்குமளவன்று; செவிக்கினியதுவும் புண்டரீகாக்ஷனுடைய திருநாமம். (புவிக்கும் புவியதுவே கண்டீர்) எனக்கு ஒருத்தனுக்குமேயோ? பூமியிலுள்ளார்க்கெல்லாம் ஸ்தாநம் திருநாமம். (கவியித்யாதி) ஸ்துத்யனுக்கு ஒரு பூர்த்தியின்றிக்கே, ஸ்தோதா நிரப்பவேண்டும்படியன்றிக்கே, கவிபாடுகைக்கு ஸ்வரூபரூபகுணங்களால் குறைவற்று நின்றவனை யாத்ருச்சிகமாக லபித்தேன். (பார்க்கிலித்யாதி) யாத்ருச்சிகமாகவன்றிக்கே ஆராய்ந்து பார்க்கில் வேதாந்தரஹஸ்யமும் அத்தனையே.

திவ்ய-அவ:—யமவச்யதையைத் தவிர்க்கும் இப்பெருமை மாத்திரமுள்ளதன்று; செவிக்கின்பமாவதுவும், பூமிக்குப் புகலிடமும், கவிகளுக்கு நிறைபொருளும், மறையின் முழுப்பொருளும் பகவத் விஷயமே என்கிறார்.

வ்யா:—(செவிக்கின்பமாவதுவும் செங்கண்மால் நாமம்) 'உம்' என்ற சகாரம் கீழ்ப்பாட்டிற் சொன்ன யமவச்யதையைக் கூட்டுகிறது. யமனுக்கு வசப்பட்டிருக்கையைத் தவிர்ப்பது மாத்திரமன்று; செவிக்கினிய செஞ்சொல்லாயிருப்பதும் தாமரைக்கண்ணனுடைய திருநாமமே. முக்கண்ணன், நெருப்புக்கண்ணன் என்னும் பெயர்களைப் போலே கேட்கும்போதே கொள்ளிக் கட்டையைக் காதிலே செருகினாற் போலே செவிக்கினாததாய் விரூபமாயிராதே, கேட்பவர்களை அம்ருதப்ரவாஹத்திலே அழுத்துவது போலேயிருப்பது தாமரைக்கண்ணனின் திருநாமமே. (புவிக்கும் புவியதுவே கண்டீர்) என் ஒருவனுக்கு மட்டுமோ இனியது. பூமியிலுள்ளார் அனைவர்க்கும் புகலிடமாயிருப்பது அத்திருநாமமன்றோ.

"ஆர்த்தா விஷண்ணா: ஶிதிலாச்ச பீதா
கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநா: ।
ஸங்கீர்த்ய நாராயண ஶப்தமாத்ரம்
விமுக்தது:க்காஸ் ஸுகிநோ பவந்தி ॥"

[தாபத்ரயங்களால் வருந்தியவர்களும், (அவைகள் வருமோ என்று) பயந்தவர்களும், கோரமான வியாதிகளில் வாடுமவர்களும் நாராயண ஶப்தத்தைமட்டும் கேட்டால், துன்பம் நீங்கப்பெற்று இன்பமடைகிறார்கள்] என்றல்லவோ சொல்லப்பட்டது.

நாமத்தின் பெருமையைச் சொன்னார் கீழ்; அதை உடையவனின் பெருமையைச் சொல்லுகிறார் மேலே:— (கவிக்கு நிறைபொருளாய் நின்றானை) மற்றுள்ளார் குறைவாளராகையாலே; அவர்களைத் துதி பாடுமவர்கள் அவர்களுக்கு உள்ள குறைகளை, இல்லாத நிறைவுகளையிட்டு நிரப்பிக் கவிபாடவேண்டியிருக்கும். "அந்யதீயாந் குணாந் அந்யத்ர த்வஸதோऽதிரோப்ய பணிதி:" [ஸ்ரீஸ்தவம்-3] [மற்றொருவனுடைய குணத்தை, அதில்லாத வேறொருவனிடம் ஏறிட்டுப்பாடுவது துதி] என்றார் ஆழ்வானும். இவனோவெனில் நிறைவாளனாகையாலே எவ்வளவு கவிகள் இவனைத் துதிக்கப்புக்காலும் துதித்து முடித்தது சிறிதாய், துதிக்கத் தொடங்காதது பெரிதாயிருக்கும்படியான ஸ்வரூபரூபகுண விபூதிகளை உடையவன். ஆகையால் இவனே கவிக்கு நிறைபொருளாய் நிற்பவன். "வசஸாம் வாச்யமுத்தமம்" [ஜிதந்தே 1·7] [வாக்குகளுக்கு மேலான பொருளாயிருப்பவன் ஸர்வேச்வரன்] என்று சொல்லப்பட்டதன்றோ. (நேர்பட்டேன்) அவனை என் முயற்சியாலன்றியே யாத்ருச்சிகமாக அடையப்பெற்றேன். அதாவது:— அவனுடைய நிர்ஹேதுக கிருபையாலே அடைந்தேன். "விதிவாய்க்கின்று காப்பாரார்" [திருவாய் 5-1-1] "ஆழியான் அருள்தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே" [திருவாய் 10-6-1] "விதிநிர்மிதமேததந்வயம்" [ஸ்தோ-ர-51] [இந்த ஸம்பந்தம் விதியினாலேற்பட்டது] என்று விதியென்றும் யத்ருச்சையென்றும் சொல்லப்படுவது பகவானுடைய நிர்ஹேதுகக்ருபையேயன்றோ. (பார்க்கில்) "யாத்ருச்சிகமாகக் கிடைத்த பொருள்தானே" என்று திருப்தியுடனிருந்துவிடவில்லை. ரத்னபரீக்ஷை பண்ணுவாரைப்போலே ஆராய்ந்துபார்த்தேன். அப்படிப்பார்த்தவளவிலே தேறிநின்றதென்னவென்றால்: (மறைப்பொருளுமத்தனையேதான்) வேதாந்த விழுப்பொருளும் அதுவேயாயிருந்தது. இடறிவிழுந்தபோது விலைமதிப்பற்ற மாணிக்கமே நம் கைப்பட்டது என்று உணர்ந்தேன்.

70. தானொருவனாகித் தரணி யிடந்தெடுத்து
ஏனொருவனா யெயிற்றில் தாங்கியதும்—யானொருவன்
இன்று வறிகின்றே னல்லேன் இருநிலத்தைச்
சென்றுங் கடிப்படுத்த சேய்.

பதவுரை:—தான் ஒருவன் ஆகி—*தான் ஒப்பற்ற அழகையுடைய வாமனனாய்*, சென்று—(*மஹாபலியினிடத்தில் யாசகனாய்ச்*) *சென்று*, ஆங்கு—*அந்த மாவலியின் யாக பூமியிலே*, இரு நிலத்தை—*விசாலமான இந்நிலத்தை*, அடிப்படுத்த—*அளந்து கொண்ட*, சேய்—*சிறுபிள்ளையானவன்*, ஏன் ஒருவன் ஆய்—*விலக்ஷண வராஹ ரூபியாய் பிரளயப் பெருங் கடலினுள் முழுகி*), தரணி—*பூமியை*, இடந்து எடுத்து-(*அண்ட பித்தியில் நின்றும்*) *குத்தி எடுத்து*, எயிற்றில் — (*தனது*) *கோரைப் பல்லின் மீது*, தாங்கியது—*தரித்தமையை*, யான் ஒருவன்—*நானொருவன் மாத்திரம்*, இன்று—*இன்றாக*, அறிகின்றேன் அல்லேன்—*அறிகிறேனில்லை*. [*நெடுநாளாகவே அனைவருமறிவர்.*]

பெரிய-அவ:—எழுபதாம்பாட்டு. வேதாந்தாஹஸ்யம் இது என்றிருந்தபடி எங்ஙனேயென்னில்: நான் ஒருத்தனும் இன்றாக அறிந்ததோ? ப்ரஸித்தமன்றோ? என்கிறார்.

வ்யா:-(தானொருவனாகி) வாமனனாய். (இருநிலத்தித்யாதி) வாமனனாய், பரப்பான பூமியைத் தன் திருவடிக்குள்ளே அடங்கும்படி இட்டுக்கொண்டு, அச்சேயலாலே அத்விதீயனாய், ப்ரளயங்கொண்ட பூமியை அண்டபித்தியில் நின்றும் ஒட்டுவிடும்படி இடந்தெடுத்து, மஹாவராஹ ரூபியாய்ப் பெரிய பூமியைத் திருவெயிற்றில் ஏகதேசத்திலே தரித்ததும் நான் ஒருத்தனும் இன்றாக அறிந்ததோ?

திவ்ய-அவ:—'*மறைப்பொருளும் அதுவே*' *என்றீர்; இதை எப்படி அறிந்தீர்? என்ன;—உண்மையில் நான் ஒருவனே இன்று வரையில் இதை அறியாதவன். ஆயினும், அறிவாளிகள் எல்லோரும் என்றும் அறிந்த அரும்பொருளன்றோ இது என்கிறார்.*

வ்யா:—(*தான் ஒருவனாகி*) *ஸர்வேச்வரனாயிருக்கும் தானே ஒப்பற்றதொரு நிலையை உடையவனாகி. பெரியவனுக்கு ஒப்பற்ற நிலையாவது ஸௌசீல்ய ஸௌலப்ய வாத்ஸல்ய குணங்களின் எல்லை நிலத்திலே நிற்கை. அது வாமனனாய் நின்ற நிலையேயாகும்.* "ஒரு மாணிக்

றாளாகி" [திருவாய் 1-10-1] என்றார் நம்மாழ்வாரும். (ஒருவனாகி) 'ஒருவன்' என்பதும் 'வாமனன்' என்பதும் பர்யாயம்போலே காணும்! பெரியவன் தாழநின்றான்; ஸகலபலப்ரதன் யாசகனாகிநின்றான்; அபேக்ஷை எதிர்பாராமலே குணகுண நிரூபணம் செய்யாமல் எல்லாரையும் திருவடியாலே தடவிக்கொடுத்தான். இதுவன்றோ ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்யகுணங்களின் எல்லைநிலமாவது. இவனையன்றோ 'ஒருவன்' என்ன அடுப்பது. இந்த அர்த்தஸ்வாரஸ்யத்தாலும், 'என் ஒருவனாய்' என்று தனியே படித்திருப்பதாலும், 'தானொருவனாகி' என்றதை, "இருநிலத்தைச் சென்றாங்கடிப்படுத்த சேய்" என்ற கடையடியோடு கூட்டிப் பொருள்கொள்வது சிறக்கும். (ஆங்கு சென்று) இருந்தவிடத்திலேயிருந்து ஸங்கல்பத்தாலே அழிக்கலாயிருக்க, அவனிடம் ஔதார்யமென்னும் ஒரு குணமிருக்கையாலே தன்னை அழியமாறி அவனிருக்குமிடம் சென்று. (இருநிலத்தை அடிப்படுத்த சேய்) பரப்பு மிகுந்த பூமி தன் திருவடியிலே அடங்கும்படி அளந்துகொண்டு, அத்தாலும்

"ஏக: ப்ராஸீஸரத் பாதமேக: ப்ராசிக்ஷளந்முதா।
அபரோப்யதரந் மூர்த்நா கோதிசஸ்தேஷு கண்யதாம் ॥"

[ஒருவன் திருவடியை நீட்டினான்; ஒருவன் அதை உகப்புடன் கழுவினான்; ஒருவன் அந்நீரைத் தலையிலே தரித்தான். அவர்களிலே எவன் பெரியவன் என்று எண்ணிப்பாருங்கள்] என்கிறபடியே 'இவனே ஒப்பற்றவன்' என்று எழுத்திடலாய்படியிருந்த சிறுபிள்ளை. (தரணி இடந்தெடுத்து) ப்ரளயஜலத்தில் மூழ்கிப் பாதாளத்தில் அண்டபித்தியிலே ஒட்டிக்கொண்டிருந்த பூமியை அதிலிருந்து ஒட்டு விடும்படி தன் கொம்பாலே குத்தியெடுத்து. (ஏன் ஒருவனாய் எயிற்றில் தாங்கியதும்) ஒப்பற்ற பன்றியுருவையுடையவனாய். மிகப்பெரியனாயிருந்தும், மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாய் அவதரிக்கையாலே இவ்வவதாரத்திலும் ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய குணங்கள் மிகவும் பிரகாசிக்கையாலே 'ஏன்.ஒருவனாய்' என்கிறார். (எயிற்றில் தாங்கியதும்) தன் தந்தத்தின் ஒரு நுனியிலே தாங்கினின்றதும். (யானொருவன் இன்று அறிகின்றேனல்லேன்) அறிவற்றவனான நான் ஒருவனே இன்றுவரை இதை அறியவில்லை. இன்று நான் அறிந்தேன். ஆனால், இன்று நான் அறிந்துதானா இவ்விஷயம் வெளிப்பட்டது? அன்று. அனைவரும் என்றும் அறிந்துள்ளனர் இவ்வுண்மையை. (யானொருவன் இன்று அறிகின்றேன்) நான் ஒருவன்

இன்றுதானு இவ்விஷயத்தை அறிந்தேன்? (அல்லேன்) அன்று. பலரும் என்றும் அறிவர். ''இதம் விஷ்ணுர் விசக்ரமே'' ''த்ரீணி பதா விசக்ரமே'' ''விசக்ரமே ப்ருதிவீமேஷ ஏதாம் க்ஷேத்ராய விஷ்ணு: ''த்ரிர் தேவ: ப்ருதிவீமிதி ப்ரவிஷ்ணு:'' ''விஷ்ணோர் நுகம்........விசக்ர மாணஸ் த்ரேதாருகாய:'' ''உபே தே வித்ம ரஜஸீப்ருதிவ்யா விஷ்ணோ தேவ த்வம் பரமஸ்ய வித்ஸே'' [யஜு-அஷ்ட 2-8-16] [விஷ்ணுவே! பூமியிலும், ஆகாயத்திலும் நீ வைத்த இரண்டடிகளை அறிவோம். மூன்றுவது அடிவைப்பை நீயே அறிவாய் போலும்!] ''ஶம் நோ விஷ்ணுருருக்ரம:'' ''விஷ்ணுக்ராந்தே வஸுந்தரே'' என்றும், ''உத்த்ருதாஸி வராஹேண க்ருஷ்ணேந'' [தை-நா] என்றும் இவ்வர்த்தத்தை வேதங்கள் வாய் வெருவும்போது இவனே மறைப்பொருளென்பதை இன்றுவரை அறிவற்றிருந்தநான் சொல்லித்தானு தெரிந்துகொள்ள வேணும்?

71. சேய னணியன் சிறியன் மிகப்பெரியன்
ஆயன் துவரைக்கோனுய்நின்ற—மாயன் அன்
றோதிய வாக்கதனைக் கல்லார் உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞான மில்.

பதவுரை:—சேயன்—ஸுதூரஸ்தனுய், மிகப்பெரியன் — மிகப் பெரியவனுனும், சிறியன்—(ஸம்ஸாரிகளிலும்) தாழநின்று அவதரிப்பவனுய், அணியன்—ஸுலபனுயும், ஆயன்—இடைப் பிள்ளையாகவும் பிறந்தவனுய், துவரை கோன் ஆய் நின்ற—த்வாரகா புரிக்குத் தலைவனுய் நின்ற பெருமேன்மையை யுடையவனுயுமிருந்த, மாயன்—எம்பெருமான், அன்று—(பாரதயுத்தம்நடந்த) அக்காலத்தில், ஓதிய—(திருத்தேர்த்தட்டில் அர்ஜுநனைக் குறித்து) அருளிச்செய்த, வாக்கு அதனை—(சரமச்லோகமாகிய) அந்தத்திருவாக்கை, உலகத்தில்—இவ்வுலகத்திலுள்ளார், கல்லார்-கற்கப்பெருதவர்களாய், மெய் ஞானம் இல்—தத்துவவுணர்ச்சி யற்ற, ஏதிலர் ஆம்—பகவத் விரோதிகளாயுளர்.

பெரிய-அவ:—எழுபத்தோராம்பாட்டு. (சேயன்) ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்து ரக்ஷித்தது அறியாதிருந்தவளவேயோ? ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் எடுக்க அவனருளிச்செய்த வார்த்தையைத் தான் அறியப் பெற்றேமோ என்கிறுர்.

வ்யா:—(சேயன் மிகப்பெரியன்) ''यतो वाचो निवर्तन्ते'' (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்று வாங்மனஸ்ஸுக்களுக்கு நிலமல்லாதபடி

யாலே ப்ரஹ்மாதிகளுக்கும் தூரஸ்தனுயிருக்கும். (சிறியனணியன்) ஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகாய்ப்பிறந்து அநுகூலர்க்கு அண்ணியனுயிருக்கும். (ஆயனித்யாதி) அண்ணியனுனமைக்கு உதாஹரணம்–இடையனுய், ஸ்ரீமத்த்வாரகைக்கு நிர்வாஹகனுய், ஒரு க்ஷத்ரனுக்குத் தோற்கவல்ல ஆச்சர்யகுணத்தையுடையவன், தேர்த்தட்டிலே நின்று "உன்னுடைய ஸகலதூருக்கும் நானே கடவேன்; நீ சோகிக்கவேண்டா" என்று அருளிச்செய்த வார்த்தையைத் தஞ்சமாக நினைத்திருக்கைக்கு அடியான தத்வஜ்ஞானமின்றிக்கே, ஈச்வரன் "तानहं द्विषतः क्रूरान्"(தாநஹம் த்விஷத: க்ரூராந்) என்று நினைக்கும்படி சத்ருக்களாய், தாங்களும் 'க்ருஷ்ணன் எங்களுக்கு சத்ரு' என்றும் இருப்பார்கள்.

திவ்ய–அவ—லௌகிகமான ப்ரளயம் அகப்படுத்திக்கொண்டபோது அவன் நம்மை எடுத்து ரக்ஷித்ததை அறியாதிருந்தது மாத்திரமோ? ஸம்ஸாரஸாகரப்ரளயத்திலிருந்து நம்மை எடுக்க அவன் அருளிச்செய்த சரமச்லோகமாகிற வார்த்தையைத்தான் இன்றுவரை நாம் அறியப்பெற்றோமோ? என்று வருந்துகிறார்.

வ்யா:—(சேயன்) பிரமன், உருத்திரன் முதலானோர்க்கு அரியவொண்ணுதபடி மிகவும் தூரத்திலிருப்பவன்; "நத்வாம் கேசந ஜாநதே" [ரா-உத்] என்றும்,

"யந்ந தேவா ந முநயோ ந சாஹம் ந ச ஶங்கர: ।
ஜாநந்தி பரமேஶஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம் ॥ [வி-பு 1-9-55]

[தேவரும், முனிவரும், பிரமனென நானும், உருத்திரனும் பரமேச்வரனை விஷ்ணுவுடைய அந்த மேலான ஸ்வரூபத்தை அறியமாட்டோம்] என்றும்,

"ந ஸ ஶக்யஸ் த்வயா த்ரஷ்டும் மயாந்யைர் வாபி ஸத்தம ।
ஸர்வேஷாம் ஸாக்ஷிபூதோऽஸௌ ந க்ராஹ்ய: கேநசித் க்வசித் ॥"
[பார-மோக்ஷ]

[குழந்தாய் ருத்ரனே! அப்பெருமான் உன்னாலும், என்னாலும், வேறு எவராலும் காணத்தக்கவனல்லன்; எல்லோரையும் காண்பவனாயினும் இவன் எவனாலும் எக்காலத்திலும் காண அரியவன்] என்று பிரமனும் பகர்ந்தானன்றே.

"அத்யாபி மாம் ந ஜாநந்தி ருத்ரேந்த்ராஸ் ஸபிதாமஹா:" [பிரமனோடு கூடிய ருத்ரனும் இந்திரனும் இன்றும் என்னை அறியார்] என்று வராஹபுராணத்திலும், "நாஹம் ப்ரகாஶ: ஸர்வஸ்ய" [நான் எவருக்கும் வெளிப்படுபவனல்ல] என்று கீதையிலும் தானும்

ந யஸ்ய ரூபம்ந பலப்ரபாவௌ ந ச ஸ்வபாவ: பரமஸ்ய பும்ஸ: ।
விஜ்ஞாயதே ஸர்வபிதாமஹாத்யைஸ் தம் வாஸுதேவம் ப்ரணமாம்யசிந்த்யம் ॥

[எந்தப் பரமபுருஷனுடைய உருவமும், பலப் பெருமைகளும், தன்மையும், ப்ரஹ்மருத்ராதிகளாலும் அறியப்படுவதில்லையோ, அறிதற்கரிய அந்த வாஸுதேவனை வணங்குகிறேன்] என்று ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் பிறரும் வாசியறச் சொல்லும்படியுள்ள அர்த்தமன்றோ இது. "ந தே விஷ்ணோ ஜாயமானோ ந ஜாதோ தேவ மஹிம்ந: பரமந்தமாப" [விஷ்ணுவே! முன்பிறந்தவனும், பிறக்கிறவனும உன் பெருமையின் மேலெல்லையை அறிந்ததில்லை] என்று பஹ்வ்ருசச்ருதியும் ஓதிற்று. இப்படி அறிவரியனாயிருக்கக் காரணமென்னென்னில்: (மிகப்பெரியன்) மிகவும் பெரிய ஸ்வரூப ரூப குண விபூதிகளை உடையவன். "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" [தை-ஆந] [வாக்குடன் கூடிய மனஸ்ஸுகள் எந்தப் பரமபுருஷனை அடையாமல் திரும்புகின்றனவோ] என்று வேதங்களும் அளவிடவொண்ணாதபடி மிகப்பெரியவன். (அணியன்) ஆசாலேசமுடையார்க்கு அறியலாம்படி அருகிலேயிருப்பவன். (சேயன்-அணியன்) விமுகர்க்கும், தன் முயற்சியாலறிவார்க்கும் தூரஸ்தான்; ஆசையுடையார்க்கும் தன் கைபார்த்திருப்பார்க்கும் அருகிலுள்ளவன்.

"யாருமோர் நிலைமையன் எனவறிவரிய எம்பெருமான்
யாருமோர் நிலைமையன் எனவறிவெளிய எம்பெருமான்"
[திருவாய்-1-3-4]

என்றாரன்றோ நம்மாழ்வாரும். அநுகூலர்க்கு அருகிலிருப்பது எப்படிஎனில்: (சிறியன்) தன் கிருபையாலே அவர்களிலும் தாழ்ந்தவனாய்ப் பிறந்து நிற்பவனாகையாலே எளியன் என்கை. (சேயன் அணியன் மிகப்பெரியன் சிறியன்)

"நமோ நமோ வாங்மநஸாதிபூமயே நமோ நமோ வாங்மநஸைகபூமயே ।
நமோ நமோऽநந்தமஹாவிபூதயே நமோ நமோऽநந்ததயைகஸிந்தவே ॥"

[(தன் முயற்சியால் அறிய நினைப்பாருடைய) வாக்குக்கும், மநஸ்ஸுக்கும் எட்டாதவனான உனக்கு நமஸ்காரம்; (நீ காட்டக் காண்பாருடைய) வாக்குக்கும் மநஸ்ஸுக்குமே நிலமாயிருக்கிற உனக்கு நமஸ்காரம்; அளவற்ற பெரிய செல்வத்தையுடைய உனக்கு நமஸ்காரம்; அளவற்ற கருணைக்கு ஒரு கடலாயிருக்கும் உனக்கு நமஸ்காரம்] என்று ஆளவந்தார் இந்நான்கு திருநாமங்களையும் அடியொற்றினார். சிறியன் என்று இங்கு சொல்லப்பட்ட அவதாரத்திற்குக் காரணம் கருணையேயாகையால் 'அநந்ததயைகஸிந்தவே' என்றார்.

"அணியன் சிறியன்" என்ற ஸௌலப்யகுணத்துக்கு உதாஹரணம் சொல்லுகிறார், (ஆயன்) இடக்கையும் வலக்கையுமறியாத இடையனானவன். (துவரைக்கோனாய் நின்ற) உபயவிபூதிநிர்வாஹகன் என்னும் நிலை தவிர்ந்து, த்வாரகாபதி என்னும்படி நின்றவன் (மாயன்) அநுகூலர்க்கு ஸுலபனான அளவன்றிக்கே, அநுகூலனான பீமஸேனனைக் கொண்டு ஜராஸந்தனைக் கொல்லச்செய்து அவனுக்குப் பெருமை விளைவிக்கவேண்டும் என்னும் எண்ணத்தால், 'க்ஷுத்ரனான ஜராஸந்தனுக்குத் தோற்று த்வாரகையிலே ஒளிந்து கொண்டான்' என்னும் அபகீர்த்தியை ஸம்பாதித்துக்கொண்ட ஆச்சர்ய பூதன். "ஆயன் துவரைக்கோனாய் நின்ற மாயன்" என்றுமிது "அணியன் சிறியன்" என்ற பதங்களுக்கு விவரணம் என்று பெரியவாச்சான் பிள்ளையின் நிர்வாஹம்.

அன்றிக்கே, "ஆயன்" என்னும் பதம் "அணியன் சிறியன்" என்னும் பதங்களுக்கு விவரணமென்றும், "துவரைக்கோனாய் நின்றமாயன்" என்னும் பதம் "சேயன் பெரியன்" என்னும் பதங்களுக்கு விவரணமென்றும் அப்பிள்ளார் நிர்வஹிக்கும்படி. இவையிரண்டுக்கும் உதாஹரணமென்னலாம்படி "இடையனாய்ப் பிறந்த நீர்மையையும், ஸ்ரீமத் த்வாரகைக்கு நிர்வாஹகனாய் நிற்கும் பெருமையையும் உடையனாய், பதினாறாயிரம் ஸ்த்ரீகளுக்குப் பல வடிவெடுத்துக் கொண்டு ஏககாலத்திலே ஆடல்கொடுக்கவல்ல ஆச்சர்யபூதனான க்ருஷ்ணன்" என்பது அப்பிள்ளாருரை.

(மாயன் அன்று ஓதிய வாக்கதனைக் கல்லார்.) க்ருஷ்ணன் பாரத யுத்தத்தின் தொடக்கத்தில் ஓதிய * மெய்ம்மைப்பெருவார்த்தையான சரமச்லோகத்தைக் கல்லாதவர்கள்.

"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:॥"

[எல்லாதர்மங்களையும் வாஸனையோடு விட்டு (ஸௌலப்யாதிகளோடு கூடிய) என்னை ஒருவனையே உபாயமாக அடைவாயாக. (ஜ்ஞாநஶக்த்யாதிகளோடு கூடிய) நான் உன்னை எல்லாப்பாபங்களினின்றும் விடுவிக்கிறேன். வருந்தாதே.] என்னும் வார்த்தையை குருமுகமாக ஓதாதவர்கள். (அணியன் சிறியன் ஓதிய வாக்கு) "மாம்" என்ற பதத்திற்சொன்ன ஸௌலப்யாதிகளை விவரிக்கிறார். (சேயன் பெரியன் ஓதிய வாக்கு) "அஹம்" என்ற பதத்திற்சொன்ன ஜ்ஞாநஶக்த்யாதிகளை விவரிக்கிறார். (துவரைக்கோன்) ஸ்வாமித்வம் சொன்னபடி.

(மாயன்) ஸௌலப்யாதிகளோடு, ஜ்ஞாநஶக்த்யாதிகளோடு வாசியற ஆச்சர்யகரமாயிருக்கை.

(கல்லார் உலகத்தில்) ஒருவரிருவரோ இந்த மெய்ம்மைப் பெரு வார்த்தையை உணராதிருப்பவர்? உலகத்தில் பெரும்பான்மையான வரன்றோ சரமச்லோகார்த்தஜ்ஞாநம் இல்லாமலிருப்பவர். இதைக் கல்லாமைக்குக் காரணமென்னென்னில்: (மெய்ஞ்ஞானமில்) தத்வம், ஹிதம், புருஷார்த்தம் ஆகியவற்றைப்பற்றி உண்மையறிவு அடியோடு இல்லாமையே இதற்குக் காரணம் என்கை. இப்படி அறிவுகெட்டிருக்கைக்குக் காரணமென்னென்னில்: (ஏதிலராய்) பகவத் த்வேஷிகளாயிருக்கையே இதற்குக் காரணம் என்கை. ஏதிலர்—பகைவர்.

"தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்।
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு॥" [கீதை 16-19]
[த்வேஷிகளும், கொடியவர்களும், மனிதர்களுள் கீழ்மையானவர்களும், சுபமற்றவர்களுமான அவர்களை, ஸம்ஸாரத்தில் அதிலும் அஸுரயோனிகளில் எப்போதும் தள்ளுகிறேன்.] என்றும் "ஆஜ்ஞாச் சேதீ மம த்வேஷீ" [என் ஆணையை மீறுபவன் என் விரோதி] என்றும் ஈச்வரன் தானும் தன் தண்ணளிமிக்க திருவுள்ளத்திலே இவர்களை எதிரிகளாக நினைக்கும்படியாய், "ஶத்ரோ:ப்ரக்யாத வீர்யஸ்ய" [ரா-யு 106-6] என்று தாங்களும் 'அவன் எனக்கு சத்துரு' என்று வாய் விட்டுச் சொல்லும்படியிருக்கிறார்கள்.

72. இல்லற மில்லேல் துறவற மில்லென்னும்
சொல்லற மல்லனவும் சொல்லல்ல—நல்லற
மாவனவும் நால்வேத மாத்தவமும் நாரணனே
யாவ தீதன்றென்பாரார்.

பதவுரை:— (மோக்ஷஸாதநம் தெரியாமல் தியங்கித்திரிகின்ற ஆத்மாக்களுக்கு) இல்லறம் இல் என்னும் சொல்லும்—க்ருஹஸ்த தர்மமாக சாஸ்த்ரஸித்தமான கர்மயோகம் புகல் என்று சொல்லுகிற பிரமாணங்களும், சொல் அல்ல—பிரமாணமல்ல; இல்லேல்—(கர்மயோகம் உபாயம்) அன்றாகிலும், துறவறம் இல் என்னும் சொல்லும்—ஜ்ஞாந யோகம் புகல் என்று சொல்லுகிற பிரமாணங்களும், சொல் அல்ல—பிரமாணமல்ல; இல்லேல்—அங்ஙனுமன்றிக்கே, அல்லன அறம் இல் என்னும் சொல்லும் — (பக்தியோகம் தேசவாஸம் திருநாம ஸங்கீர்த்தனம் முதலான) மற்ற உபாயங்கள் தஞ்சமென்று சொல்லுகிற பிர

மாணங்களும், சொல் அல்ல—*பிரமாணமல்ல*; நல் அறம் ஆவனவும்—*நல்ல தருமங்களாகிய ஜ்ஞாநம் பக்தி முதலியனவும்*, நால் வேதம் மா தவமும்—*நான்கு வேதங்களிலும் பிரதிபாதிக்கப்பட்ட பெரிய கரும யோகமும்*, நாரணனே ஆவது—*ஸ்ரீமந்நாராயணனுடைய அநுக்ரஹத்தாலே பலனளிப்பனவாகின்றன*; ஈது — *இவ்வுண்மையை*, அன்று என்பார் ஆர்—*இல்லை செய்வாருண்டோ?*

பெரி-அவ— எழுபத்திரண்டாம் பாட்டு— (இல்லறம்) நீர் ஓதினீராகில் இதுக்குப் பொருள் சொல்லும் என்னச் சொல்லுகிறார்.

வ்யா:— (இல்லறமில்லேல்) கர்மயோகமன்றாகில்; ப்ரவ்ருத்தி தர்மமன்றாகில் என்றுமாம். (துறவறமில்லென்னும் சொல்) நிவ்ருத்தி தர்மம் ஸ்நாந(ஸாதந)மென்னுமது ப்ரமாணம். ஜ்ஞாநயோகம் என்றுமாம். (அறமல்லனவும் சொல்லல்ல)அ‌‌ல்லாத தர்மங்களை விதிக்கிறவை ப்ரமாணங்களுமன்று. அல்லாத தர்மங்கள் என்கிறதும், கர்த்ருத்வபலாபிஸந்திரஹிதமாக ... டிக்கும் கர்மங்கள். அன்றிக்கே, இதிஹாஸ புராணங்களிற் சொல்லுகிற நாமஸங்கீர்த்தநாதிகளாகவுமாம். "சொல்லறமல்லன" என்று பதச்சேதமானபோது ப்ரமேயபரம்; "இல்லென்னும் சொல்" என்றபோது ப்ரமாணபரம். (நல்லறமாவனவும்) பலாபிஸந்திரஹிதமான கர்மங்கள். இதிஹாஸ புராணங்களிற் சொல்லுகிற நாமஸங்கீர்த்தநாதிகள். (நால்வேதமாத்தவமும்) பூர்வபாகத்திற் சொன்ன கர்மயோகம்; இவையெல்லாம் நாராயணப்ரஸாத மடியாக. இதர தர்மங்களைச் சொல்லுகிறது ப்ரமாணங்களன்றென்று நீர் சொல்லுகிறது எத்தாலேயென்னில்: "அவை பலப்ரதங்களாம்போது பகவத்ப்ரஸாதம் வேணும்; பகவான் உபாயமாமிடத்தில் அவை ஸஹகரிக்கவேண்டா" என்னும் ப்ரமாணபலத்தாலே சொல்லுகிறேன். (ஈதன்றென்பாரார்) அல்லாதவை போலன்றிக்கே உபாயமாகவற்றன இத்தை அன்றென்ன வல்லாருண்டோ?

திவ்ய-அவ— "*மாயன் அன்றோதிய வாக்கதனைக் கல்லார் உலகத்தில் ஏதிலராம்*" *என்று மற்றவர்களை இகழ்வதால் பயனென்ன? மாயன் அன்றோதிய வாக்கதனைக் கற்ற நீர்தாம் அவ்வார்த்தைக்குப் பொருள் சொல்லும் என்று கேட்க, சரமச்லோகத்தின் பொருளை இப் பாசுரத்தில் பேசுகிறார். மஹாபாரதத்துக்கு க்ருஷ்ணசரமச்லோகம் போலேயும், ஸ்ரீராமாயணத்துக்கு ஸ்ரீராமசரமச்லோகம் போலேயும்,*

திருமாலைக்கு "மேய்பொருள்" என்னும் பாசுரம்போலேயும், இத்திருவந்தாதிக்கு இப்பாசுரமிருக்கிறது.

வ்யா:— (இல்லறம் இல்லென்னும் சொல்லும் சொல்லல்ல) கர்மயோகம் உபாயம் என்று சொல்லும் வாக்கியங்களும் ப்ரமாணங்களன்று. இல்லறம் என்றால் கர்மயோகத்தைக் குறிக்குமோ என்னில்: யஜ்ஞம், தானம், தவம் முதலியவற்றைக் கொண்ட கர்மயோகத்தில் க்ருஹஸ்தனுக்கே அதிகமாக அதிகாரமுண்டாகையால் கர்மயோகத்தை 'இல்லறம்' என்கிறார். (இல்லென்னும்) "உபாயே க்ருஹ ரக்ஷித்ரோ: ஶப்த: ஶரணமித்யயம் வர்த்ததே"[உபாயம், வீடு, ரக்ஷகன் என்னும் இப்பொருள்களில் ஶரணஶப்தம் பிரயோகிக்கப்படுகிறது.] என்கிறபடியே ஶரணஶப்தமும், க்ருஹஶப்தமும் பர்யாயமாகையாலே க்ருஹத்தைக் குறிக்கும் 'இல்' என்னும் ஶப்தத்தால் உபாயத்தைக் குறிக்கிறார். (இல்லறமில்லென்னும் சொல்லும் சொல்லல்ல) "கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:" [கீதை 3-20] [கர்மயோகத்தினாலே ஜநகர் முதலானோர் ஸித்தியடைந்தனர்.] "அஸக்தோ ஹ்யாசரந் கர்ம பரமாப்நோதி பூருஷ:"[கீதை 3-19] [பற்றற்றவனாய் கர்மயோகத்தை அனுஷ்டிக்கும் புருஷன் மேலான தன் ஆத்மாவை அடைகிறான்.]

"யத: ப்ரவ்ருத்திர் பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம் ।
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: ॥" [கீதை 18-46]

[எவனொருவனிடமிருந்து ஜீவராசிகளுக்கு உற்பத்தி முதலான செயல்கள் ஏற்படுகிறதோ, எவனால் இவையெல்லாம் வியாபிக்கப்பட்டு விளங்குகிறதோ, அந்தப் பரமபுருஷனைத் தன் கருமத்தால் அர்ச்சனை செய்து மனிதன் என்னையடைவதாகிற ஸித்தியையடைகிறான்.] என்று கர்மயோகம் மோக்ஷத்திற்கு உபாயம் என்று சொல்லும் இவ்வாக்கியங்களும் ப்ரமாணமன்று.

(இல்லேல்) கர்மயோகம் உபாயமன்றாகிலும். (துறவறம் இல் என்னும் சொல்லும் சொல் அல்ல) ஜ்ஞானயோகம் உபாயம் என்று சொல்லும் வாக்கியங்களும் ப்ரமாணங்களன்று. துறவறம் என்றால் ஜ்ஞானயோகத்தைக் குறிக்குமோ என்னில்: கர்மயோகத்தைத் துறந்து பற்றவேண்டிய தர்மமாகையாலே ஜ்ஞானயோகத்தைத் துறவறம் என்னலாம். "ஸந்யாஸம் கர்மணாம்" [கீதை 5-1] "ஸந்யாஸஸ்து" [கீதை 5-6]

“ஸந்யாஸ: கர்மயோகச்ச” [கீதை 5-2] “கர்மஸந்யாஸாத் கர்மயோகோ விசிஷ்யதே” [கீதை 5-2] [கர்மத்தை துறந்து பற்றுமதான ஜ்ஞாந யோகத்திலும், கர்மயோகம் சிறந்தது] என்பது முதலான விடங்களில் கீதையிலும் ஜ்ஞாநயோகம் ஸந்யாஸமென்றும், கர்ம ஸந்யாஸமென்றும் சொல்லப்பட்டதன்றோ. “ஜ்ஞாநாம்ருதேந த்ருப்தஸ்ய க்ருதக்ருத்யஸ்ய யோகிந:” [ஞானயோகமாகிற அமுதத்தினாலேயே திருப்தியடைபவனும், கர்மங்கள் அனைத்தையும் செய்து முடித்தவனுமான ஞானயோகிக்கு] என்ற ப்ரமாணமும் காண்க. (துறவறம் இல்லென்னும் சொல்லும் சொல்லல்ல)

“யதைதாம்ஸி ஸமித்தோऽக்நிர் பஸ்மஸாத் குருதேऽர்ஜுந ।
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா ॥” [கீதை 4-37]

[அர்ஜுனா! நன்கு எரியும் நெருப்பு எப்படி விறகை எரித்து விடுமோ, அப்படியே ஜ்ஞாநயோகமாகிற நெருப்பு எல்லாக் கருமங்களையும் சாம்பலாக்கிவிடும்.] என்று ஜ்ஞாநயோகத்தை மோக்ஷோபாயமாகச் சொல்லும் வாக்கியங்களும் ப்ரமாணமல்ல.

(அல்லன அறம் இல்லென்னும் சொல்லும் சொல்லல்ல) மற்ற தர்மங்கள் மோக்ஷோபாயம் என்று சொல்லும் வாக்கியங்களும் ப்ரமாணமன்று. மோக்ஷோபாயமாகச் சொல்லப்படும் மற்ற தர்மங்கள்தான் எவையென்னில்:

“பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம் விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥”
[கீதை 11-54]

[என்னை ஒருவனையே விஷயமாகக்கொண்ட பக்தியினாலேயே இப்படிப்பட்ட நான் உள்ளபடி அறிவதற்கும், காண்பதற்கும் நுழைவதற்கும் தகுந்தவன்.] என்று சொல்லப்பட்ட பக்தியோகமும். “தேஶோऽயம் ஸர்வகாமதுக்” [இந்த தேசம் மோக்ஷமுள்ளிட்ட எல்லாக் காமங்களையும் அளிப்பது.] என்று சொல்லப்பட்ட தேசவாஸமும், “கிம் ஜபந் முச்யதே ஜந்து:” [எதை ஜபிப்பதனால் ஜீவன் முக்தியடைகிறான்] என்று சொல்லப்பட்ட திருநாமஸங்கீர்த்தனமும்,

“ஜந்ம கர்ம ச மே திவ்யமேவம் யோ வேத்தி தத்வத: ।
த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந ॥” [கீதை 4-9]

[அர்ஜுநா! என்னுடைய அப்ராக்ருதமான பிறப்பையும் செயல்களையும் எவனொருவன் இப்படி உள்ளபடி அறிகிறானோ, அவன் இவ்வுடலை விட்டபின் மறுபிறப்பை அடையான்; என்னையே அடைகிறான்.] என்று சொல்லப்பட்ட அவதாரரஹஸ்ய ஜ்ஞானமும்

"யோ மாமேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் ।
ஸ ஸர்வவித் பஜதி மாம் ஸர்வபாவேந பாரத ॥ [கீதை 15-19]

[எவனொருவன் மயக்கமற்றவனாய் என்னைப் புருஷோத்தமனென்று அறிகிறானோ, அவன் எல்லா உபாயங்களையுமறிந்தவன்; எல்லா உபாயங்களாலும் என்னை அடைகிறான்.] என்று சொல்லப்பட்ட புருஷோத்தம வித்யையும் மோக்ஷஸாதனங்களாக இதிஹாஸபுராணங்களில் அடிக்கடி சொல்லப்படும் உபாயங்கள். அவை 'அல்லன அறம்' என்று இங்கு சொல்லப்படுகின்றன. இவையெல்லாம் மோக்ஷோபாயங்களென்று கீதாதிகளில் பகவானாலேயும் பரமரிஷிகளாலேயும் செ[illegible]பட்டிருக்க, இவைகளை மோக்ஷோபாயங்களாகச் சொல்லும் வாக்கியங்கள் ப்ரமாணங்களன்று என்று இவர் சொல்லலாமோ? எனில்: "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" [(என்றால் மோக்ஷஸாதனங்களாகச் சொல்லப்பட்ட) எல்லா தர்மங்களையும் அடியோடு விட்டு] என்று அவனே அவ்வுபாயங்களைக் கழிக்கையாலே சொல்லலாம். உண்மையில் கர்மஜ்ஞாந பக்தியோகாதிகள் மோக்ஷோபாயங்கள் என்னும் வார்த்தை ஔபசாரிகமான வார்த்தையாகுமேயொழிய முக்கியார்த்தமாகாது. யாதொன்று பலத்தைத் தருகிறதோ அது உபாயமாகும். க்ஷணத்வம்ஸியாய், அசேதனமான கர்மஜ்ஞாநாதிகள் பலத்தைத் தாமே தரமாட்டாவே. அவைகளால் ப்ரீதியடைந்த அவனன்றோ பலத்தைத் தருகிறான். ஆகையால் உபாயசப்தத்துக்கு முக்கியார்த்தமாயிருப்பவன் நாராயணனேயாவான். இக்காரணத்தாலேயே இல்லற[illegible]றவறம், அல்லன அறம் ஆகியவை இல்லென்னும் சொற்கள் சொல்லல்ல என்று இவர் சொல்லுவதே வேதாந்த விழுப்பொருளாகும்.

"இல் என்னும் சொல்" என்னும் பதங்களைப் பிரித்தெடுத்து, 'இல்லறம்' 'துறவறம்' 'அல்லன அறம்' என்னும் ஒவ்வொருபதத்தோடும் கூட்டிக்கீழே பொருள் கொள்ளப்பட்டது. இப்படி பொருள் கொள்ளும்போது கர்மஜ்ஞான பக்தி முதலான யோகங்களை விதிக்கும் ப்ரமாணங்கள் ப்ரமாணமாகமாட்டா என்று தாத்பர்யம் ஏற்படுகிறது.

அப்படியல்லாமல், "சொல்லறமல்லன" என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். அதாவது:—"இல் என்னும் இல்லறம்-உபாயம் எனப் படும் கர்மயோகமும், இல்லேல் இல் என்னும் துறவறம்-கர்மயோக மில்லையாகிலும் உபாயமாவதாகச் சொல்லப்படும் ஜ்ஞாநயோகமும், இல் என்னும் சோல் அல்லன அறமும்-உபாயம் என்று சொல்லப்படும் பற்ற தர்மங்களான பக்தி, திருநாம ஸங்கீர்த்தனம் தொடக்கமான வையும், சோல் அல்ல—அர்த்தமாகமாட்டா; உபாயங்களாகமாட்டா என்கை" என்று பதவுரை. இந்த நிர்வாஹத்தில் ப்ரமாணங்களால் சொல்லப்படும் ப்ரமேயங்களான கர்மஜ்ஞாந பக்தி முதலானவை உபாயமாகமாட்டா என்று தாத்பர்யம்.

"இல்லறம்" என்று க்ருஹஸ்தர்களுக்கு உரித்தான — பிள்ளை பெண்டுகளை ரக்ஷிப்பது முதலான—ப்ரவ்ருத்தி தர்மமும், 'துறவறம்' என்று ஸந்யாஸிகளுக்கு உரித்தான—எல்லாவற்றையும் விடுவதான— நிவ்ருத்திதர்மமும், 'அல்லன அறம்' என்று அனைவர்க்கும் பொது வாய் கர்த்ருத்வாநுஸந்தானம், பலனில் விருப்பம் ஆகி வை இல்லா மல் செய்யப்படும் கர்மங்களும் சொல்லப்படுவதாகக்கொண்டு, 'இவை மோக்ஷோபாயமென்று விதிக்கும் வாக்கியங்கள் ப்ரமாணமன்று' என்றோ, 'இவை மோக்ஷோபாயமன்று' என்றோ பொருள் கொள்ளலாம்.

கர்மஜ்ஞாந பக்தியோகாதிகள் உபாயமன்று என்று நீர் சொல்லு கைக்குக் காரணமென்? என்னில்: (நல்லறமாவனவும்) அறமாவது— கர்மங்கள். நல்லறமாவது—பலத்தில் விருப்பமில்லாமல் செய்யப்படும் கர்மங்கள். அன்றிக்கே, ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்யர்களுக்கு மாத் திரம் அதிகாரமுள்ள கர்மஜ்ஞாந பக்திகள் அறமாகின்றன. த்ரை ணிகர்களோடு, ஸ்த்ரீசூத்ராதிகளோடு வாசியற அனைவர்க்கும் அதிகாரமுள்ள நாமஸங்கீர்த்தனம் முதலானவை நல்லறமாகின்றன. இதிஹாஸபுராணங்களில் அதிகமாக ஓதப்படும் நாமஸங்கீர்த்தனாதி களுக்கு வேதத்தில் அதிகமாக ஓதப்படும் கர்மஜ்ஞாந பக்திகளைக்காட் டிலும் நன்மையாவது— ஸர்வாதிகாரமாயிருக்கை. (நால் வேத மாத்தவமும்) ருக்யஜுஸ் ஸாம அதர்வணம் என்று நாலுவகைப்பட்ட வேதத்தின் பூர்வபாகங்களிற் சொல்லப்பட்டதாய், மிகப்பெரிய க்ரியா

கலாபரூபமாயிருக்கும் சர்மயோகமும். இது உபநிஷத்பாகத்தில் ஓதப்பட்ட ஜ்ஞாந பக்தியோகங்களுக்கும் உபலக்ஷணம். அன்றிக்கே, 'நால் வேதமாத்தவம்' என்று வேதஸித்தமான க்ருஹஸ்த ஸந்யாஸிதர்மங்களாகவுமாம். 'நல்லறமாவனவும்' என்று அல்லன அறம்' என்றதையும் 'நால்வேதமாத்தவமும்' என்று "இல்லறம்' '...றம்' என்ற இரண்டையும் அநுவதிக்கிறார். இது இரண்டு நிர்வாஹத்திலும் ஒக்கும். 'துறவறம்' என்றது ஜ்ஞாநயோகத்தையும், ஜ்ஞாநவிசேஷமான பக்தியையும் குறிக்கும் என்று பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ளம். பக்தியை 'அல்லன அறம்' என்றதில் சேர்த்தார் ... பிள்ளார். கர்ம ஜ்ஞாநபக்திகளை வேதஸித்தமென்றதும், நாமஸங்கீர்த்தநாதிகளை இதிஹாஸ புராணஸித்தம் என்றதும் ப்ராசுர்யத்தைப்பற்ற. (நாரண'னையாவது) இவை நாராயணனுடைய அருளாலேயே பலனைத் தருகின்றன. ஆகையால் இல்லறமும், துறவறமும், அல்லனவறமும உபாயங்களாகமாட்டா. நரஸமூஹங்களான நாரங்களுக்... யநமாயிருக்கும் அவனே உபாயமாவான். அவன் பலனைத்த...ம் உபாயமாம்போது அவற்றின் துணை வேண்டியதில்லை. அவை பலனைத்தருவிப்பது அவற்றால் பிரீதியடைந்த அவனாலேயே. (நல்லறமாவனவும் நால்வேத மாத்தவமும் நாரணனேயாவது)

"ஸர்வே வேதாஸ் ஸர்வவேத்யா: ஸஶாஸ்த்ரா:
ஸர்வே யஜ்ஞாஸ் ஸர்வ இஜ்யாச்ச க்ருஷ்ண: |
விது: க்ருஷ்ணம் ப்ராஹ்மணாஸ் தத்த்வதோ யே
தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா: ||

[அரசனே! எல்லா வேதங்களும், சாஸ்திரங்களும், (அவற்றால்) அறியப்படும் எல்லாப் பொருள்களும், ஸகலயாகங்களும், அந்த யாகங்களில் ஆராதிக்கப்படும் தேவர்கள் அனைவரும் கிருஷ்ணனேயாவான். எந்தப்ராஹ்மணர்கள் கிருஷ்ணனை உள்ளபடி அறிகிறார்களோ. அவர்களுக்கு எல்லா யஜ்...ங்களும் முடிந்தன.] என்றன்றோ சொல்லப்பட்டது. (ஈது அன்றென்பார் ஆர்) இவ்வர்த்தையை இல்லையென்பார் யார்? வேதவித்துக்களோடு, அத்யாத்மவித்துக்களோடு வாசியற உணர்ந்த விஷயமன்றோ இது.

"யே ச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா: |
தே விதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்' [பார-வந 71-123]
[வேதமறிந்த ப்ராஹ்மணர்களும், ஆத்மஸ்வரூபமறிந்த பெரியோர்களும் மஹாத்மாவான கிருஷ்ணனையே பழமையான தர்மமாக அறிகிறார்கள். என்றல்லவோ சொல்லப்படுகிறது.

(ஈது அன்றென்பாரார்) பரமபுருஷனே உபாயமென்பதை "நாராயணம்–பராயணம்" "முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே" என்று ஓதினன் வேதபுருஷன். "லோகாநாம் த்வம் பரோ தர்ம:" [ரா-யு 120-15] "ராமோ விக்ரஹவாந் தர்ம:" [ரா-ஆ 37-13] "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" [பார-வந 71-123] "பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வமேவ" [ரா-உத் 82-9] "பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே। புண்யாநாமபி புண்யோऽஸௌ மங்களாநாஞ்ச மங்களம்॥" [பார-வந 88-27] [பரிசுத்தமானவைகளுள் கோவிந்தன் மேலான பரிசுத்தப்பொருளாகச் சொல்லப்படுகிறான். புண்ணியங்களினுள் மிகப் புண்ணியமானவனும் மங்களங்களுக்குள் மிக மங்களமானவனும் இவனே] என்று ருஷிகள் உத்கோஷித்தனர். "மாமேகம் ஶரணம் வ்ரஜ" "தமேவ ஶரணம் கச்ச" "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்ய" "ஶரணம் மாம் ப்ரபத்யஸ்வ" என்று ஶரண்யனை அவன் சொன்னான். "அறந்தானாய்த் திரிவாய்" "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" "நெறிவாசல் தானேயாய் நின்றானை" "நாராயணனே நமக்கே பறை தருவான்" "களைகண் நீயே" என்றனர் மற்றுமுள்ள ஆழ்வார்கள். இப்படிப்பட்ட இவ்வரும் பொருளை இல்லை செய்வாரும் உண்டோ?

இப்பாசுரம் சரமச்லோகத்துக்கு விவரணமானபடியென்னென்னில்: "இல்லறமில்லேல் துறவறமில்லெனும் சொல்லறமல்லனவும் சொல்லல்ல" என்று "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" [எல்லா தர்மங்களையும் அடியோடு விட்டு] என்பதின் அர்த்தம் சொல்லிற்று. "நாரணன்" என்று "மாம்" "அஹம்" என்றதின் பொருள் சொல்லிற்று. "நாரணனே" என்ற ஏகாரத்தாலே 'ஏகம்' என்னும் சப்தத்தின் அர்த்தம் சொல்லிற்று. "நல்லறமாவனவும் நால்வேத மாத்தவமுமாவது" என்றதற்கு ஸகலதர்மத்தால் ஸித்திக்கும் பாப விமோசனம் நாராயணனாலேயே ஸித்திக்கிறது என்று தாத்பர்யமாகையாலே "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" [எல்லாப் பாபங்களினின்றும் உன்னை விடுவிக்கிறேன்] என்ற அர்த்தம் சொல்லிற்று. "மாஶுச:" என்றதால் அர்த்தாத் ஏற்படும் இவ்வர்த்ததார்ட்யம் "ஈதன்றென்பார் ஆர்?" என்று விளக்கப்பட்டது. ஆக இப்பாசுரம் இவ்வகையில் சரமச்லோக விவரணமாகிறது.

73. ஆரே யறிவா ரனைத்துலகு முண்டுமிழ்ந்த
பேராழியான்தன் பெருமையை—கார்செறிந்த
கண்டத்தா னெண்கண்ணுன் காணுன் அவன்வைத்த
பண்டைத்தானத்தின் பதி

பதவுரை:—அனைத்து உலகும்—எல்லாவுலகங்களையும், உண்டு உமிழ்ந்த—(*பிரளயத்தில்*)*உண்பதும்*(*பிறகு*) *உமிழ்வதும் செய்தவனும்*, பேர் ஆழியான்தன்—*பெரிய கடல்போன்றவனுமான எம்பெருமானுடைய*, பெருமையை—*மஹிமையை* அறிவார் ஆரே—(*அளவிட்டு*) *அறியக்கூடியவர்யார்?* [ஒருவருமில்லை.] அவன் வைத்த—*அப்பெருமான்* (*முன்பே*) *சேமித்து வைத்த*, பண்டைத்தானத்தின் பதி—*பழயதான உபாயபாவத்துக்கு இருப்பிடமான சரமச்லோகத்தை*, கார் செறிந்த கண்டத்தான்—*நீலகண்டனன சிவனும்*, எண் கண்ணுன்—*நான் முகனும்*, காணுன்—*அறியமாட்டார்கள்.*

பெரி-வ்யா:—எழுபத்து மூன்றும்பாட்டு—(ஆரேயறிவார்) இப்பாட்டையும் பட்டர் அருளிச்செய்தார். (ஆரேயித்யாதி) ஸகலலோகத்தையும் வயிற்றிலே வைத்து வெளிநாடுகாண உமிழ்ந்த பேரியவனுடைய நைரபேக்ஷ்யத்தை யாரறிவார்? இவனுடைய பெருமையைப் பரிச்சேதிக்க வல்லார் ஆரென்றுமாம். (அவனித்யாதி) அவன் என்றும் உண்டாக்கி வைத்த பரமபதத்தை, நீலகண்டன் அஷ்டநேத்ரனன ப்ரஹ்மா என்கிறவர்களால் காணப்போகாது. **कृष्णं धर्मं सनातनम्** (க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்) என்கிறவன் உபாயபாவம் இவர்களால் அறியப் போகாது என்றுமாம்.

திவ்ய-அவ—*சரமச்லோகத்தின் பொருளை அருளிச் செய்தார் கீழ்ப்பாட்டில். 'அதிலே நிஷ்டராயிருப்பார்க்குக் கிடைக்கும் பலன் எப்படிப்பட்டது?' என்ன, 'சரமச்லோகநிஷ்டர்க்கு ப்ராப்யனன அவனுடைய பெருமையையும், அவனுடைய ஸ்தானத்தின் பெருமையையும் ப்ரஹ்மருத்ராதிகளும் அறியமாட்டார்கள்' என்று இப்பாட்டில் ப்ராப்ய வைபவம் சொல்லுகிறார் என்றுமாம்.*

அன்றிக்கே, "கீழ்ப்பாட்டில் நான் சொன்ன சரமச்லோகார்த்தத்தை 'கல்லார் உலகத்தில் ஏதிலராம் மெய்ஞானமில்' என்று ஸம்ஸாரிகள் அறியாதிருக்கும் அளவேயோ? ஞானிகளிற்

சிறந்தவர்களான ப்ரஹ்மருத்ரர்களும் அறியமாட்டார்கள்'' என்று சரமச்லோக வைபவம் சொல்லுகிறார் என்றுமாம்.

பொருளுணர்வரிய சென்ற பாசுரத்துக்கும், இப்பாசுரத்துக்கும் பட்டர் பொருள் அருளிச்செய்தார் என்பர் பெரியவாச்சான்பிள்ளை. "பட்டர் அருளிச்செய்ய நான் கேட்டேன்' என்று (நப) பிள்ளையருளிச்செய்வர்'' என்று நாலாயிரவ்யாக்யானங்களிலே எடுக்கப்படும் பாசுரங்களில் இவையிரண்டும் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

வ்யா:— (ஆரே அறிவார் அனைத்துலகும் உண்டுமிழ்ந்த பேராழியான் தன் பெருமையை) எல்லா உலகத்தையும் ப்ரளயத்தால் நோவுபடாமல் தன் திருவயிற்றிலே வைத்துப் பிறகு வெளிவிட்டவனாய், "அப்ரமேயோ மஹோ[illegible]:"[ரா-யு 19-31] [அளத்தற்கரிய பெருமையையுடைய கடல்] என்று சொல்லப்படும் பெருமையையுடைய கடல் போலிருப்பவனுடைய பெருமையை யார்தான் அறிவார்?(பேர் ஆழியான்) பெரியகடல்போன்றவன். இது பெரியவாச்சான்பிள்ளையின் நிர்வாஹம். "ரக்ஷணபரிகாமான பெரிய திருவாழியைத் திருக்கையிலே உடையனான க்ருஷ்ணனுடைய'' என்று அப்பிள்ளார் நிர்வாஹம். இப்பொருள் சரமச்லோகவைபவ பரமான இரண்டாவது பொருளில் பொருந்தியிருக்கும். ஆழி-கடலும், சக்கரமும்.

ப்ரஹ்மருத்ராதிகள் அறியாரோ? என்னில்: (கார் செறிந்த.... ....) அவன் பெருமையை அறிவது ஒரு புறமிருக்கட்டும். அவனுடைய இருப்பிடமான பரமபதத்தின் பெருமையைத்தான் ப்ரஹ்மருத்ரர்கள் அறிவார்களோ என்[illegible]ர். (கார் செறிந்த கண்டத்தான்) 'ஆலகால விஷத்தை உண்டு தேவர்களை ரக்ஷித்தோம்' என்னும் அபிமானத்தையுடையவனாய், அதுக்கு அடியான சக்தியை உடையவனான நீலகண்டனும். (எண் கண்ணான்) எட்டு திக்குகளிலும் ஏககாலத்தில் வியாபரித்துக் காரியம் செய்கைக்கு உறுப்பான எட்டு கண்களையுடையவனாய் ஜ்ஞானாதிகனான பிரமனும். (காணான்) காணார்கள். (கார்செறிந்த கண்டத்தான் காணான்) அதிகமான சக்தியை உடையவனானாலும் ஸர்வசக்தியின் இருப்பிடத்தைக் காணமுடியுமோ? (எண் கண்ணான் காணான்) அதிகமான ஞானத்தை உடைய அண்டாதிபதியானாலும் அண்டத்துக்கு அப்பாற்பட்ட பரமபதத்தை அறிய

முடியுமோ? (அவன் வைத்த பண்டைத் தானத்தின் பதி) அவன் தன் நித்யேச்சையாலே என்றும் உண்டாக்கிவைத்த பழையதான ஸ்தானமாகிற இருப்பிடத்தைக் காணார்கள்.

"யந் ந தேவா ந முநயோ ந சாஹம் ந ச ஶங்கர:।
ஜாநந்தி பரமேஶஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம்॥" [வி.பு 1-9-55]

[யாதொன்றை, தேவர்களும், முனிவர்களும், (பிரமனாகிற) நானும், சங்கரனும் அறியோமோ, அதுவே பரமேச்வரனான விஷ்ணுவின் பரமபதம்.] என்றும்,

"யந்நாயம் பகவாந் ப்ரஹ்மா ஜாநாதி பரமம் பதம்।
தந்நதா: ஸ்ம ஜகத்தாம தவ ஸர்வகதாச்யுத॥" [வி.பு 1-9-59]

[ஸர்வவ்யாபியான அச்சுதனே! யாதொரு பரமபதத்தை பகவானான பிரமன் அறியானோ, ஜகதாதாரமான அந்த உன் பரமபதத்தை வணங்குகிறோம்.] என்றும்,

"அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந:।
ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை:॥"
[பார-ஆர 136-18]

[மஹாத்மாவரான விஷ்ணுவினுடைய அந்த ஸ்தானம் ஸூர்யனுடையவும், அக்னியுடையவும் ஒளியை விஞ்சியது. அரசனே! அது தன்னுடைய ஒளியினாலேயே தேவர்களாலும் அஸுரர்களாலும் காண அரியது.] என்றும்

"திவ்யம் ஸ்தாநமஜரம் சாப்ரமேயம்
துர்விஜ்ஞேயம் சாகமைர் கம்யமாத்யம்।
கச்ச ப்ரபோ! ரக்ஷ சாஸ்மாந் ப்ரபந்நாந்
கல்பே கல்பே ஜாயமாந: ஸ்வமூர்த்யா॥" [பாரதம்]

[எம்பிரானே! அப்ராக்ருதமானதும், அழிவற்றதும், அளவிடவொண்ணாததும், அறியமுடியாததும், வேதங்களால் அறியத்தக்கதும் பழைமையானதுமான ஸ்தானத்தை அடைவீராக. ஒவ்வொரு கல்பத்திலும் உம் திருமேனியோடு அவதரித்து, சரணாகதர்களான எங்களை ரக்ஷிப்பீராக] என்றும் ப்ரஹ்மருத்ராதி தேவர்களால் அறியவொண்ணாதது பரமபதம் என்னுமர்த்தம் அறிவிக்கப்பட்டதன்றோ.

(பண்டைத்தானத்தின் பதி) பழைமையான ஸ்தானமாகிற இருப்பிடம். "ஆத்யம் ஸ்தாநம்" என்று கீழே எடுக்கப்பட்ட — [பகவானைக் குறித்து தேவர்கள் சொல்லும்]— பாரதச்லோகத்தில் சொல்லப்பட்டிருப்பது காண்க. ஆக, இவ்வளவும் ப்ராப்ய வைபவபரமான நிர்வாஹம்.

இனி, சரமச்லோகவைபவபரமான இரண்டாவது நிர்வாஹம்:— (ஆரே அறிவார் அனைத்துலகும் உண்டுமிழ்ந்த பேராழியான்றன் பெருமையை) எல்லாவுலகையும் ப்ரளயத்தால் நோவுபடாதபடி திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து, பிறகு அவற்றுக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து வெளிவிட்டு ரக்ஷித்தவனாய், பெரிய கடல் போன்று காம்பீர்யாதிஸ்வாபத்தையுடையவனுடைய நிரபேக்ஷ உபாயபாவத்தை (வேறொன்றையும் எதிர்பாராமல் உபாயமாயிருக்கும் தன்மையை) — யார்தான் அறிவார்? (அனைத்துலகும் உண்டுமிழ்ந்த பேராழியான்தன் பெருமையை) அனைத்துலகையும் உண்டு ப்ரளயாபத்திலிருந்து ரக்ஷித்தது ஒருவர் அபேக்ஷித்துச் செய்ததோ? அசித்ஸமராகக் கிடந்த அவர்களுக்கு தேஹேந்திரியங்களைக் கொடுத்து வெளிவிட்டதுதான் ஒருவர் அபேக்ஷித்துச் செய்ததோ?

> கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்றோர்
> எண்தானும் இன்றியே வந்தியலுமாறு
> உண்டானையுலகேழும் ஓர் மூவடி
> கொண்டானை, கண்டு கொண்டனை நீயுமே" [திருவாய் 1-10-5]

என்றார் நம்மாழ்வார். (பேராழியான் தன் பெருமையை) ஆபத்தடைந்தவர்களை அளிப்பதற்காக, எப்போதும் கையும் திருவாழியுமாயிருப்பது ஒருவர் அபேக்ஷித்தோ? பேராழியான்— ரக்ஷணத்தில் பெரிதான திருவாழியை தரித்தவன்.

"ப்ரஹ்மருத்ராதிகள் அறியார்களோ?" என்னில்;—(கார் செறிந்த கண்டத்தான் எண்கண்ணான் காணான் அவன் வைத்த பண்டைத் தானத்தின் பதி) ஜ்ஞான சக்திகள் மிக்கவர்களான ப்ரஹ்மருத்ரர்களும் அப்பெருமானாலே, நிதியைச் சேமித்து வைப்பதுபோலே பாமகுஹ்யமாக வைக்கப்பெற்றதாய், அவனுடைய பழயதான நிரபேக்ஷ உபாய

பாவத்துக்கு இருப்பிடமானதான சரமச்லோகத்தை அறியமாட்டார்கள். ஆகையாலேயே "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" [பார-வந 71-123] [மேலான உபாயமாக கிருஷ்ணனை அறிகிறார்கள்] என்கிற அவனுடைய நிரபேக்ஷ உபாயத்வமாகிற பெருமையை அறியமாட்டார்கள் என்கை. (பண்டைத்தானத்தின் பதி) 'உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம்'' [ர-ஸ்த 2·87] [உபாயத்வமும் உபேயத்வமும் உன்னுடைய ஸ்வரூபநிரூகதர்மங்களாகும்] ''வீடாம் தெளிதருநிலைமையது ஒழிவிலன் முழுவதும் இறையோன்'' [திருவாய் 1-3-2] என்கிறபடியே பகவானுக்கு ஸ்வரூபமாகையாலே மிகப்பழமையானதாய், அனைவர்க்கும் புகலிடமாகையாலே 'ஸ்தான' மெனப்படுவதான அவனுடைய நிரபேக்ஷ உபாய பாவத்துக்கு வாசகமாகையாலே இருப்பிடமான சரமச்லோகம். பதி—இருப்பிடம். "அந்த க்ருஷ்ணன் நிதி வைக்குமாபோலே முன்பே சேமித்து வைத்த, ஸர்வர்க்கும் விச்ரமஸ்தானமான தந்நிரபேக்ஷோபாயபாவத்துக்கு இருப்பிடமான சரமச்லோகத்தை தர்சிக்கமாட்டார்கள்'' என்று அப்பிள்ளார் உரையருளினர். 'பதி' என்பதைப் பதின் (पथिन्) சப்தவிகாரமாகக் கொண்டு 'பரமபதமார்க்கமென்னத் தகுந்த சரமச்லோகத்தை' என்று பொருள்கொள்வாருமுண்டு.

74. பதிப்பகைஞற் காற்ருது பாய்திரைநீர்ப் பாழி
மதித்தடைந்த வாளரவந் தன்னை —மதித்தவன்றன்
வல்லாகத் தேற்றிய மாமேனி மாயவனை
அல்லாதோன் றேத்தாதேன் நா.

பதவுரை:— பதி பகைஞற்கு ஆற்ருது—ஸஹஜ சத்ருவான பெரிய திருவடிக்கு அஞ்சி, பாய் திரை நீர் பாழி—பரந்த அலைகளோடே கூடின நீரையுடைத்தான கடல்போலேயுள்ள திருப்படுக்கையை, மதித்து—(பகவானைப்) புகலிடமாக நம்பி, அடைந்த—வந்து பற்றின, வாள் அரவம் தன்னை—ஒளிபொருந்திய ஸர்ப்பமாகிய ஸுமுகனை, மதித்து—ஆதரித்து, அவன் தன் — அந்த (சத்ருவான) கருடனுடைய, வல் ஆகத்து ஏற்றிய—வலிமை தங்கிய சரீரத்திலே ஏறவிட்டவனும், மா மேனி மாயவனை அல்லாது—சிறந்த திவ்ய மங்கள விக்ரஹத்தையுடையவனுமான ஸர்வேச்வரனையன்றி, ஒன்று—வேறொன்றை, என் நா—எனது நாவானது, ஏத்தாது—தோத்திரம் செய்யாது.

பெரி—அவ—எழுபத்துநாலாம் பாட்டு—(பதி) " न क्षमामि कदाचन " (ந க்ஷமாமி கதாசந). " न त्यजेयं कथञ्चन " (ந த்யஜேயம் கதஞ்சந). "ஆச்ரிதர் பக்கல் அபகாரம் பண்ணினாரை ஒரு காலும் பொறேன்" என்ற வார்த்தைக்கும், "மித்ரபாவ முடையாரை மஹாராஜர் தொடக்கமானார் விடவரிலும் விடேன்" என்ற வார்த்தைக்கும் அவிருத்தமாகச் செய்தருளினபடி. ஸுமுகனென்கிற ஸர்ப்பத்தைத் திருவடி ஆமிஷமாகப் பாதாளத்திலே தேடிச் செல்லுகிறபடியை அறிந்து, அதுவும் கண் வளர்ந்தருளுகிற திருப்பள்ளிக்கட்டிலைக் கட்டிக்கொண்டு கிடக்க, திருவடியும் ஸ்ரீபாதம் தாங்குவார் வார்த்தைகளைச் சொல்ல, இஸ்ஸர்ப்பத்தைத் திருவடிகையிலே காட்டிக்கொடுத்துத் திருவடியையிட்டுப் பொறுப்பித்தது. இவனை அவன் கைக்கொள்ளப்பெறுகையாலே இரண்டு அர்த்தமும் ஜீவித்தது.

வ்யா:— (பதிப்பகைஞற்காற்றாது) ஸஹஜஶத்ருவான திருவடிக்கு அஞ்சி, அவர் பலம் பொறுக்கமாட்டாது. (பாய்திரை நீர்ப்பாழி) பரந்த திரையையுடைத்தான கடல்போலே திருப்பள்ளிக் கட்டில். ஓரோ யுகத்திலே ஓரோ இடங்களிலே எல்லாம் பிறக்கக் கூடுமாகையாலே திருப்பாற்கடல் தன்னிலேயாகவுமாம். (மதித்தடைந்த) சரணாகதர் ஒருதலையானால், பிராட்டி திருவடி திருவநந்தாழ்வானை அஸாதாரண பரிகரத்தை விட்டும் ரக்ஷிப்பான் ஒருவனென்று நிச்சயித்தடைந்த. (வாளரவம்) ரண்யன் அங்கீகரிப்பதுக்கு முன்னே அவனுடைய சீலவத்தையாலே தன்கார்யம் தலைக்கட்டிற்றென்று பிறந்த ஒளி. "अन्तरिक्षगतः श्रीमान्"(அந்தரிக்ஷகத :ஸ்ரீமாந்)என்னும்படியே. (மதித்து) "நெஞ்சில் கொண்டு" என்னும்படியே சரணாகதனாக நினைத்து. (அவனித்யாதி) திருவடிதானே ப்ரஸங்நனாய்த் தன் தோளிலே தரிக்கும்படி பண்ணி, அத்தால் நிறம்பெற்று க்ருதக்ருத்யனாய், ஆச்சர்யயுக்தனான ஈச்வரனையொழிய வேறொன்றை ஏத்தாது என் நா. 'வேறொன்று' என்றது— தேவதாந்தரங்கள் பக்கல் அநாதரம்.

திவ்ய—அவ— சரமச்லோக வைபவம் சொன்னார் கீழ்ப்பாசுரத்தில். அதிற் சொன்ன சரணாகதரக்ஷணத்தை எவ்வகையிலும் செய்து முடிப்பவன் ஸர்வேச்வரன் என்பதை மஹாபாரதத்திற்சொன்ன வைநதேய வ்ருத்தாந்தத்தின் மூலம் மூதலிக்கிறார் இப்பாசுரத்தில்.

பாரதம் உத்யோக பர்வம், அத்யாயம் நூற்று மூன்று முதல் நூற்றைந்து வரை இவ்விருத்தாந்தம் பின்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கிறது:—இந்திரனுடைய சாரதியான மாதலி, தனது புத்திரியான குணகேசி என்னும் கன்னிக்கு வரனைத்தேடி நாரதருடன் பலவுலகும் சென்று, கடைசியில் பாதாளலோகத்தில் 'ஸுமுகன்' என்னும் நாக குமாரனைக்கண்டு, அவனை மாப்பிள்ளையாக அடையவிரும்பி, அவனுடைய பாட்டனான ஆர்யகனைக் கேட்க, அவ்வார்யகன், 'இந்த ஸுமுகனுடைய தந்தையை கருடன் கொன்று தின்று, இவனையும் ஒரு மாதத்தில் கொன்று தின்னப்போவதாகச் சொல்லியிருக்கிறான்' என்னும் விஷயத்தை மாதலியிடம் சொல்ல, அதைக்கேட்டும் பின் வாங்காமல், மாதலி உபேந்திரனோடு கூடிய தேவேந்திரனுக்கு இவ்விஷயத்தைத் தெரிவிக்க, அது கேட்ட உபேந்திரனான பகவான், 'இவனுக்கு அம்ருதத்தைத் தரலாம்' என்று சொல்ல, கருடனுடைய பராக்ரமத்துக்கு அஞ்சின இந்திரன் அவனுக்கு அமுதத்தைக் கொடுக்காமல் நீண்ட ஆயுளை வரமாகக் கொடுக்க, உடனே மாதலி அவனுக்குத் தன் மகளை மணம்புரிந்துகொடுத்தான். இச்சேதியறிந்த கருடன் உபேந்திரனோடு கூடிய இந்திரனையடைந்து தன் இரையைத் தடுத்ததற்காக நிஷ்டுரமாகப் பேசுகையில், சுமுகன் பாம்புருவத்துடன் பகவானுடைய கட்டிலின் காலைக்கட்டிக்கொள்ள, கருடன் 'நான் உன்னையும் தாங்கும் வாஹனமாயிருந்தும், கொடியாயிருந்தும் சேவை செய்ததற்கு இதுவா ப்ரத்யுபகாரம்? உன்னைத் தாங்கும் நான் பலசாலியா நீர் பலசாலியா என்று ஆலோசியும்' என்றாப்போலே ஸ்ரீபாதம் தாங்குவார் சொல்லும் வார்த்தையைச் சொல்ல, பகவான் கருடனை நோக்கி, 'உன் தற்பெருமை போதும்; உனையும் உலகெல்லாவற்றையும் தாங்குபவன் நான் என்பதை அறியாமல் பேசாதே. எனது வலக்கை ஒன்றைத் தாங்கு பார்க்கலாம்' என்று தன் வலத்திருக்கையை கருடன்மேல் வைக்க, அத்தால் வலியொழிந்து விழுந்த கருடன், பரமபுருஷனை வணங்கி அபராதக்ஷாமணம் செய்து கொள்ள, பகவானும் ஸுமுகனைத் தன் கால் கட்டைவிரலால் எடுத்து கருடன் தோளிலிட்டு இவனை உன் அடைக்கலமாகக் காப்பாற்றுவாயாக என்று சொல்ல, அதுமுதல் இருவரும் நண்பராயினர் என்பது இவ்விருத்தாந்தம். "அடுத்த கடும்பகைஞற்கு" என்ற பாட்டில் பொய்கைபாழ்வாரும், "நஞ்சு சேர்வதோர்" [பெரியதிரு 5-8-4] என்ற பாட்டில் திருமங்கை மன்னனும் இவ்விதிஹாஸத்தை அநுஸந்தித்தனர்.

"அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி" [ரா-யு 18-] [என்னைச்சரண மடைந்தவனுக்கு நான் எல்லா பூதங்களிடத்தினின்றும் அபயமளிக்கிறேன்.] என்று அருளிச்செய்பவனன்றோ ஸர்வேச்வரன். தன் அடியார்களில் தலைவனான கருடாழ்வானிடமிருந்து, தன்னைச் சரணம் பற்றிய சுமுகனுக்கு அபயமளித்தபடியை விவரிக்கிறது இப்பாசுரம். இருவரும் அடியாராகையாலே ஒருவரிடமிருந்து ஒருவரை ரக்ஷிக்கும் போது விலக்ஷணமானதொரு வழியைப் பின்பற்றி ரக்ஷித்தபடி. சுமுகனை ரக்ஷியாவிடில்,

"மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந।
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்"॥ [ரா-யு 18-3]

[நண்பனுடைய வேஷத்தோடு வந்தவனாயினும், அவனை ஒருபோதும் கைவிடேன். அவனுக்கு தோஷமிருந்தாலும் மிக நன்று. நல்லோர்களுக்கு இது நிந்திக்கத்தக்கதன்று.] என்னும் தன் வார்த்தைக்கு விரோதம் வரும். திருவடியின் உணவாக விஹிதனாயிருந்தும் உயிர் வாழ விரும்பியவனாகையாலே, சுமுகன் திருவடியிடம் அபசாரப்பட்டவனேயாவான். அவனைத்தானே ஏறிட்டுக்கொண்டு ரக்ஷித்தால்,

"மத்பக்தம் ச்வபசம் வாபி நிந்தாம் குர்வந்தி யே நரா:।
பத்மகோடிஶதேநாபி ந க்ஷமாமி கதாசந॥" [வராஹபுராணம்]

[நாய் மாமிசம் தின்னும் சண்டாளனாயினும் என் பக்தனுக்கு எவர்கள் நிந்தனை முதலான அபசாரங்களைச் செய்கின்றனரோ அவர்களை நூறு கோடி பத்ம காலமானாலும் ஒருபொதும் பொறுக்கமாட்டேன்.] என்ற தன் வசனத்துக்கு விரோதம் வரும். இவ்விரண்டுக்கும் விரோதமில்லாமல் சுமுகனைத் திருவடியின் கையிலேயே கொடுத்து, அவனைக் கொண்டே ரக்ஷிப்பித்தருளினபடி.

நித்யஸூரிகளில் ஒருவனான கருடாழ்வான் நாகங்களைக்கொன்று தின்பவனாகவும், பகவானையும எதிர்த்து வார்த்தை சொல்லக்கூடியவனாகவும் இருப்பனே என்றும் ஸந்தேஹம் எழலாம். பரமபுருஷன் தேவர்களில் ஒருவனாய், அதிதிகச்யபர்களுக்குப் பிள்ளையாய், இந்திரனுக்குத் தம்பியான உபேந்திரனாய் அவதரித்து நின்றபோது, கருடாழ்வானும் பக்ஷிகளில் ஒருவனாய் விநதையின் சிறுவனாய் அவ

தரித்து எம்பெருமானுக்கு வாஹனமாய் நிற்கும் நிலையாகையாலே, தான் அவதரித்து நிற்கும் ஜாதிக்கேற்ப பாம்புகளைக்கொன்று உண்பது நியாயமேயாகும். பகவானை எதிர்த்து வார்த்தை பேசி, அவனால் கர்வபங்கப்படுத்தப்பட்டது, பகவதபசாரம் செய்தவர்கள் அடையும் கதியை உலகிற்குக் காட்டுவதற்காகவும், பகவானுடைய பெருமையை வெளிக்காட்டுவதற்காகவுமான நாடகமே என்று கொள்ளவேண்டும்.

வ்யா:—(பகிப்பகைஞற்கு) 'பகிங்' ஶப்தம் வழியைக் குறிக்குமாகையாலே, வழிவழியாக சத்துருவாயிருப்பவனுக்கு என்று பொருள் படுகிறது. குலப்பகைவனுக்கு என்றபடி. பிறப்பிலேயே எதிரியாயிருப்பவனுக்கு என்று தாத்பர்யம். "புள்ளின் மெய்ப்பகை" என்று திருச்சந்தவிருத்தத்தில் அருளியபடியே பாம்புக்கும் கருடனுக்கும் இயற்கைப்பகையாயன்றோ இருப்பது. (ஆற்றாது)கருடனுடைய பலத்தைப் பொறுக்கமாட்டாமல் பயப்பட்டு. (பாய்திரை நீர்ப்பாழி) பரந்த அலைகளோடு கூடின நீரையுடைய கடல்போலுள்ள திருப்பள்ளிக் கட்டிலை. மஹாபாரதத்தில் பகவானுடைய கட்டிலைச் சுற்றிக்கொண்டு கிடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதாகையாலே படுக்கையென்று பொருள் கொள்ளப்பட்டது. அன்றிக்கே, கல்பாந்தரத்தில் திருப்பாற்கடலிலே இவ்விருத்தாந்தம் நடந்திருக்கக்கூடுமாகையாலே சொல்லுவதாகவும் கொள்ளலாம் (மதித்தடைந்த) "அன்றீன்ற கன்றின்மேல் வாத்ஸல்யத்தால் முன்னணைக்கன்றைக் கொம்பிலும் குளம்பிலும் கொள்ளும் தாய்ப்பசுவைப்போலே, ஒருவன் இன்றே தன்னை சரணமடைந்தானாகிலும், அவனை ரக்ஷிப்பதற்காக, கருடன் ஆதிசேஷன் முதலான நித்யஸூரிகளையும் விட்டு ரக்ஷிப்பவன் எம்பெருமான்" என்று நிச்சயித்து அடைந்த. (வாளரவம் தன்னை) ஒளிபொருந்திய பாம்பான சுமுகனை. கருடனைக்கண்டு பயந்திருக்கும் தசையிலும் ஒளிவிஞ்சியிருந்தபடி. எம்பெருமான் அங்கீகரிப்பதற்கு முன்பே, அவனுடைய ஸௌஶீல்ய ஸௌலப்யாதி குணங்களைக்கண்டு, 'தன் காரியம் ஸித்தித்தது' என்று நிச்சயித்திருந்தபடியாலே ஒளிவிஞ்சியிருக்கை. ராவணனை விட்டு ஆகாசத்திலே கிளம்பின விபீஷணாழ்வானும், "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாங்" [ரா-யு 16-17] [ஆகாயத்தில் கிளம்பியவனும் ஒளிவிஞ்சியவனுமான விபீஷணாழ்வான்] என்கிறபடியே

'ராமபிரான் நம்மை ஒருபோதும் கைவிடான்' என்னும் நிச்சயத்தாலே ஒளிவிஞ்சி நின்றான் என்றாரன்றோ ஸ்ரீவால்மீகி பகவானும். (மதித்து) க்ஷுத்ரனை அவனை ஒரு பொருளாக நினைத்து என்றுமாம். கட்டிலைச் சுற்றிநின்ற மாத்திரத்தாலே, அவனை சரணாகதனாக நினைத்து என்றுமாம்.

"நஞ்சு சோர்வதோர் வெஞ்சினவரவம்
வெருவிவந்து நின் சரணெனச் சரணாய்
நெஞ்சிற்கொண்டு நின் அஞ்சிறைப் பறவைக்கு
அடைக்கலம் கொடுத்து அருள்செய்ததறிந்து"
[பெரிய திரு 5-8-4]

என்றாரன்றோ திருமங்கை மன்னனும். (அவன் தன் வல்லாகத்து ஏற்றிய) அந்த கருடாழ்வான் தானே உகந்து தன்வலிமை பொருந்திய தோளிலேயும் மார்பிலேயும் மாலைபோலே தரிக்கும்படி செய்த. (மாமேனி) அடியானுடைய காரியம் நிறைவேறுகையாலே திருமேனி நிறம் பெற்றது.

"அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் ।
க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ ॥" [ரா-பா 1-85]
[லங்கையில் விபீஷணனை ராக்ஷஸராஜாவாக அபிஷேகம் செய்வித்து, தன் காரியம் முடியப்பெற்றவனாய், அப்போதே ஜ்வரம் நீங்கப்பெற்று, ஆநந்தித்தான் ராமபிரான்.] என்கிறபடியே ஆச்ரிதர் காரியத்தைத் தன் காரியமாக நினைத்து அதை முடித்தவுடன் உகப்பவனன்றோ இவன். (மாயவனை) குணத்திலும், திருமேனியிலும் ஆச்சர்யகரனாயிருப்பவனை. (அல்லாது ஒன்று ஏத்தாது என் நா) அவனைத் தவிர வேறொரு தெய்வத்தை என் நாக்கு துதிக்காது. "த்ருணீக்ருத விரிஞ்சாதிநிரங்குஶ விபூதய:" [பிரமன் முதலியோரின் பெருமைகளை த்ருணமாக நினைத்திருப்பவர்கள்] என்கிறபடியே தேவதாந்தரங்களை ஒரு பொருளாக நினையாதவரார்கையாலே, 'ஒன்று' என்கிறார்.

75. நாக்கொண்டு மானிடம் பாடேன் நலமாகத்
தீக்கொண்ட செஞ்சடையான் சென்று என்றும்-பூக்கொண்டு
வல்லவா றேத்த மகிழாத வைகுந்தச்
செல்வனார் சேவடிமேல் பாட்டு.

பதவுரை:—தீக்கொண்ட செம் சடையான் — நெருப்புப்போலே சிவந்த சடையையுடையனான ருத்ரன், நலம் ஆக-தகுதியாக, என்றும்-எந்நாளும், பூ கொண்டு—புஷ்பங்களைக் கையிற்கொண்டு, சென்று—(தானே) சென்று, வல்ல ஆறு—தன் சக்தியுள்ள வளவும், ஏத்த—துதிக்க, மகிழாத—(இதைத் தனக்கொரு பெருமையாக நினைத்து) மகிழ்ச்சி கொள்ளாத, வைகுந்தம் செல்வனார்—ஸ்ரீவைகுண்ட நாதனுடைய, சே அடி மேல் பாட்டு—திருவடிகளுக்கு உரிய பாசுரங்களை(க் கொண்டு) நாக்கொண்டு-நாவினால், மானிடம்-மனிதர்களை, பாடேன்-பாடமாட்டேன்.

பெரி–வ்யா:—எழுபத்தைந்தாம் பாட்டு. (நாக் கொண்டு மானிடம் பாடேன்) அவனைப் பாடக் கடவ நாவைக்கொண்டு க்ஷுத்ர மநுஷ்யரைப்பாடேன். (தீக்கொண்ட செஞ்சடையான்) அக்நிபோலே சிவந்த ஜடையை உடையவன். அன்றிக்கே, "அனற்கங்கையேற்றான்" என்கிறபடியே அக்னியையும் தரித்துச் சிவந்த ஜடையையும் உடையனென்றுமாம். (சென்றித்தியாதி) தானே சென்று புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு காலமெல்லாம் ஸத்ருஶமாகத் தன் சக்தியுள்ளவளவும் துதிக்க. (மகிழாதவித்யாதி) பரமபதத்தில் ஐச்வர்யத்தை உடையனாகையாலே க்ஷுத்ரரான இவர்கள் ஏத்த அவிக்ருதனாயிருக்கிறவனுடைய திருவடிகளில் பாட்டைக்கொண்டு மனுஷ்யரைப் பாடேன்.

திவ்ய-அவ:–ஜ்ஞானசக்தி முதலானவற்றில் மிக்கவர்களான ப்ரஹ்ம ருத்திராதிதேவர்களையே துதிக்க மாட்டாத நான் க்ஷுத்ர மனுஷ்யர்களையோ துதிக்கப் போகிறேன் என்கிறார்.

வ்யா:–(நாக்கொண்டு மானிடம் பாடேன்)"ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி" [விஷ்ணுதர்மம்] [எம்பெருமானைத் துதிப்பதே நாவாகும்] என்கிறபடியே அவனைப் பாடவேண்டிய நாவைக்கொண்டு மிகத் தாழ்ந்தவர்களான மனிதரைப் பாடமாட்டேன். பின் யாரைப்பாடுவீர் என்ன;-(நீங்கள் உயர்ந்தவனாக நினைத்திருக்கும் ருத்ரனும் எவனை என்றும் துதித்து நிற்கிறானோ அவனைப்பாடுவேன் என்கிறார் அடுத்தபடியாக:—(தீக்கொண்ட செஞ்சடையான்) நிறத்திலே அக்னியைக் கொண்டிருக்கும் சிவந்த ஜடையை உடையவன். அன்றிக்கே, "அனற்கு அங்கையேற்றான்" [முதல் திருவ-97] [நெருப்புக்கு அழகிய கையை

ஏற்றான்] என்ற பொய்கையாழ்வார் அருளிச்செய்தபடியே நெருப்பைக் கையில் கொண்டவனாய், சிவந்த ஜடையை உடையவனாயிருப்பவன். (சென்று என்றும்) வருத்த விஷயமாகையாலே என்றும் தானே சென்று, (பூக்கொண்டு வல்லவாறு என்றும் ஏத்த) மலர் நீர் சுடர் தூபம் முதலான ஆராதனைக்குரிய உபகரணங்களைக்கொண்டு தங்களுக்கு இயன்றவரையில் தினந்தோறும் துதிக்க. பூவைச் சொன்னது ஆராதநோபகரணங்கள் அனைத்துக்கும் உபலக்ஷணம். (என்றும் நலமாக ஏத்த) ஸர்வகாலங்களிலும் ஸர்வேச்வரனுடைய பெருமைக்குத் தக்கபடி ஏத்த. (வல்லவாறு ஏத்த) எவ்வளவு ஏத்தினாலும் இவனைத் துதித்து முடித்ததாகாதே. ஆகையால் தங்களால் முடிந்தவரையில் ஏத்த-

"வர்ஷாயுதைர் யஸ்ய குணா ந ஶக்யா
வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை:" [பார-கர்ண 83-65]

[எவனுடைய குணங்கள் பதினாயிரம் வருஷங்களிலும், எல்லாவுலகங்களும் கூடியும் பேசமுடியாதவையோ]

"யானுமேத்தி ஏழுலகும் முற்றுமேத்திப் பின்னையும்
தானுமேத்திலும் தன்னை ஏத்தவேத்த எங்கெய்தும்?" [திருவாய் 4-3-10]

என்னும் விஷயமன்றோ. (ஏத்த மகிழாத) இவர்கள் துதிப்பதினால் ஒரு பெருமையுண்டானாலன்றோ 'இன்னார் துதிக்கப்படும் பெருமையையுடையோம்' என்று அவன் மகிழ்ச்சியுறுவதற்கு இடம் உள்ளது. உண்மையில் இவர்கள் துதிப்பதெல்லாம் இவனுக்கு தோஷத்தையேயன்றோ விளைவிக்கிறது. "புகழ்வோம் பழிப்போம்" [பெரியதிருவ-2]

"கேழ்த்த சீர் அரன் முதலாக் கிளர்தெய்வமாய்க் கிளர்ந்து
சூழ்த்தமரர் துதித்தால் உன் தொல்புகழ் மாசூணாதே?" [திருவாய்3-1-7]

என்றானன்றோ நம்மாழ்வாரும். உத்க்ருஷ்டனான ருத்ரன் துதித்தும் மகிழ்ச்சியடையாமலிருப்பதற்குக் காரணமென்னென்னில்:(வைகுந்தச் செல்வனார்) ஸ்ரீவைகுண்டத்தில் ஐச்வர்யத்துக்கு அதிபதியாகையாலே க்ஷுத்ரரான தேவர்களுடைய துதியாலே ஒரு மாறுபாடின்றிக்கேயிருக்கிறபடி. (மகிழாத வைகுந்தச் செல்வனார்)"வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேக:"[தை-நா 10-20] [மரம் போலே மாறுபாடற்றவனாய், பரமபதத்திலே ஒப்பற்றவனான பரமபுருஷன் நிற்கிறான்.] என்றன்றோ வேதமும் ஓதிற்று. (செல்வனார் சேவடிமேல் பாட்டு) திருவுக்கும்

திருவாகிய செல்வனுடைய சிவந்த திருவடிகளின் மேல் ஆகவேண்டிய பாட்டுக்களைக் கொண்டு, என் நாவினால் அற்ப மனிதர்களைப் பாட மாட்டேன் என்று கீழோடே அந்வயம்.

76. பாட்டும் முறையும் படுகதையும் பல்பொருளும்
ஈட்டிய தீயு மிருவிசும்பும்—கேட்ட
மனுவும் சுருதி மறைநான்கும் மாயன்
தனமாயையில் பட்டதற்பு.

பதவுரை:—பாட்டும் முறையும்—இயலும் இசையும், படு கதையும்—பழைய சரிதங்களை கூறவந்த இதிஹாஸங்களும், பல் பொருளும்—பல அர்த்தங்களை யறிவிக்கிற புராணங்களும், ஈட்டிய தீயும்—(பஞ்சீகரணத்தாலே ஐந்து பூதங்களும் தன்னிலே அமையும்படி) சேர்க்கப்பட்ட அக்நியும், இரு விசும்பும்-பரந்த ஆகாசமும் (முதலான பஞ்சபூதங்களும்) கேட்ட மனுவும்—வேதத்திலும் கேட்கப்படுகிற மநுவின் ஸ்ம்ருதியும், சுருதி—அநாதியாக உச்சாரண அநூச்சாரண க்ரமத்தாலே ஓதப்பட்டு வருகிற, மறை நான்கும்-நான்கு வேதங்களும் (ஆகிய இவையெல்லாம்) மாயன் தன—ஆச்சர்ய சக்தி யுக்தனான எம்பெருமானுடைய, மாயையில் பட்ட—ஸங்கல் பத்தினாலுண்டான, தற்பு—ஸத்தையை உடையவை.

பெரி-வ்யா:—எழுபத்தாறும்பாட்டு-(பாட்டுமித்யாதி) இப்படி புராணங்களா(ளி)ல் பரக்கச் சொல்லப்பட்ட அர்த்தங்கள், காரணமான அக்நி, வ்யாபகமான ஆகாசம், "यद्वै किञ्च मनुरवदत्तद्भेषजं" (யத்வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம்) என்று ச்ருத்யாதிகளில் ஆப்ததமனாகக்கேட்ட மநுவும், என்றும் ஓதுவித்துப் போருகிற நாலுவேதமும், இவையெல்லாம் ஆச்சர்யபூதன் ஸங்கல்பத்திலேயுண்டான உண்மையுடைய.

திவ்ய-அவ:—இப்படி 'வேறொருவரையும் கவிபாடேன்' என்று சொல்லுகைக்குக் காரணமென்னவெனில்; உலகத்திலுள்ள சொற்களோடு பொருள்களோடு வாசியற அவனுடைய ஸங்கல்பத்தாலேயன்றோ உண்டாகின்றன என்று சொல்லுவதன் மூலம் அவனே கவிபாடத்தக்க பெருமையை உடையவன் என்று உணர்த்துகிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(பாட்டும் முறையும் படுகதையும் பல்பொருளும்) இவை நான்கும் புராணங்களில் பரக்கச் சொல்லப்படும் அர்த்தங்களைக் குறிக்கின்றன என்று பெரியவாச்சான்பிள்ளையின் நிர்வாஹம். அவையாவன

"ஸர்க்கச்ச ப்ரதிஸர்க்கச்ச வம்ஶமந்வந்தராணி ச।
வம்ஶாநுசரிதம் க்ருத்ஸ்நம் மயாத்ர தவ கீர்த்திதம் ॥" [வி-பு 6-8-13]

[ஸ்ருஷ்டியும், ப்ரளயமும், வமிசங்களும், மந்வந்தரங்களும், வமிசங்களின் கதையும் ஆகிய எல்லாம் என்னால் இங்கு உமக்குச் சொல்லப் பட்டது.] என்று தொடங்கி ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் ஓதப்பட்டவை. (பாட்டும்) அரசர்களிலிருந்து தொடங்கி, ஸர்வேச்வரன் வரையில் அவரவர்களுடைய பெருமைகளைப்பாடும் பாட்டுக்களும். "அக்நே: சிவஸ்ய மாஹாத்ம்யம்" என்று தொடங்கி, மாத்ஸ்ய புராணத்திற் சொன்னபடியே தேவதைகளையும், பித்ருக்களையும், அரசர்களையும் பரக்கப் பாடுகின்றனவன்றோ புராணங்கள். (முறையும்) வமிசங்கள், மந்வந்தரங்கள் ஆகியவற்றின் கிரமங்களும். "வம்சமந்வந்தராணிச" என்றார் பராசரபகவான்- (படுகதையும்) முன் நடந்தவையான ஸ்ருஷ்டி ப்ரளயங்களும், வம்சசரித்திரங்களும் "ஸர்க்கச்ச ப்ரதி ஸர்க்கச்ச–வம்சானுசரிதம் க்ருத்ஸ்நம்" என்றார் பராசரர். (பல் பொருளும்) இவற்றைத் தவிர புராணங்களில் பிரதிபாதிக்கப்படும் பூகோள நிர்ணயம், வர்ணாச்ரமாசாரங்கள் முதலான பல அர்த்தங்களும். இவையெல்லாம் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்

"அத்ர தேவாஸ் ததா தைத்யா கந்தர்வோரகராக்ஷஸா:।
யக்ஷ வித்யாதராஸ் ஸித்தா: கத்யந்தேऽப்ஸரஸஸ் ததா॥
முநயோ பாவிதாத்மாந: கத்யந்தே தபஸாந்விதா:।
சாதுர்வர்ண்யம் ததா பும்ஸாம் விசிஷ்டசரிதாநி ச॥
புண்யா: ப்ரதேஶா மேதிந்யா: புண்யா நத்யோऽத ஸாகரா:।
பர்வதாச்ச மஹாபுண்யாச் சரிதாநி ச தீமதாம்।
வர்ணதர்மாதயோ தர்மா: வேதஶாஸ்த்ராணி க்ருத்ஸ்நஶ:॥
யேஷாம் ஸம்ஸ்மரணாத் ஸத்யஸ் ஸர்வபாபை: ப்ரமுச்யதே॥"
[வி. பு 6-8-14........17]

[இப்புராணத்தில் தேவர்களும், அசுரர்களும், கந்தருவர், நாகர், ராக்ஷசர், யக்ஷர், வித்யாதரர், அப்ஸரஸ்ஸுக்கள் ஆகிய அனைவரைப் பற்றியும் சொல்லப்படுகிறது. தபஸ்விகளாய், ஆத்மதியானபரர்களான முனிவர்கள், நான்கு வருணங்கள், மனிதர்களுடைய சிறந்த சரிதங்கள், பூமியிலுள்ள புண்ணிய தேசங்கள், புண்ணிய நதிகள், கடல்கள், மலைகள், மிகப்புண்ணியமான ஞானிகளின் சரிதங்கள், வர்ணதர்மம் முதலானவை, ஸாமாந்யதர்மங்கள், வேததசாஸ்திரங்கள் ஆகியவற்றைப்

பற்றிய விஷயங்களனைத்தும் இப்புராணத்தில் சொல்லப்படுகிறது. இவைகளை நினைத்த மாத்திரத்திலேயே உடனே மனிதன் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறான்.] என்று விவரிக்கப்பட்டன. ஆக, இவ்வளவும் பெரியவாச்சான்பிள்ளையின் நிர்வாஹம்.

மணவாளமாமுனிகளின் சிஷ்யராய், அப்பிள்ளையென்றும் அப்பிள்ளாரென்றும் ப்ரஸித்தமான திருநாமத்தையுடையவர் பதவுரையில் காட்டியபடி நிர்வஹித்தார். (பாட்டும் முறையும்) இயலும் இயலைப் பாடும்முறையான இசையும். (படுகதையும்)பழைய விருத்தாந்தங்களை 'இப்படி, இப்படி' என்று கூறும் இதிஹாஸங்களும். (பல் பொருளும்) "ஸர்க்கச்ச ப்ரதிஸர்க்கச்ச" என்று தொடங்கிச் சொல்லப்படும் பல பொருள்களைச் சொல்லும் புராணங்களும். இது அப்பிள்ளை நிர்வாஹம்.

(ஈட்டிய தீயும்)பஞ்சீகரணத்தாலே மற்ற நாலு பூதங்களும் தன்னில் அமையும்படி சேர்க்கப்பட்டுக் காரணமாகும் அக்னியும். ஐந்து பூதங்களும் தனித்தனியே நின்றால் கார்யங்களை உண்டுபண்ணும் காரணமாக மாட்டாவாகையால், ஸர்வேச்வரன் ஒவ்வொரு பூதங்களையும் எட்டு பகுதிகளாகப்பிரித்து, அதில் ஒவ்வொன்றிலும் நாலு பகுதிகள் நிற்க, மற்ற நாலு பகுதிகளை மற்ற நாலு பூதங்களிலும் சேர்க்கும் ப்ரக்ரியை பஞ்சீகரணமாகும். (இருவிசும்பும்) மற்ற நாலு பூதங்களையும் வியாபித்து நிற்கையாலே அவற்றிலும் பெரிதான ஆகாசமும். இவையிரண்டையும் சொன்னது பஞ்சபூதங்களுக்கும் அவற்றாலுண்டாகும் கார்யப்பொருள்களுக்கும் உபலக்ஷணம். பெரியவாச்சான்பிள்ளையின் நிர்வாஹத்தில் இவ்வளவும் வாச்யங்களைச் சொல்லுகிறது; இனி, இவற்றுக்கு வாசகங்களைச் சொல்லுகிறது. அப்பிள்ளை நிர்வாஹத்தில் 'ஈட்டிய தீயும் இருவிசும்பும்' என்பது மட்டும் வாச்யபரம். முன்னும் பின்னும் வாசகபரம். (கேட்ட மனுவும்....தற்பு) "யத்வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம்" [தைத்ஸம் 2-2] [மனு சொன்னதெல்லாம் மருந்தாகும்] என்று வேதத்திலும் ஓதிக்கேட்கப்பெற்ற மனுஸ்ம்ருதியும், என்றும் ஆசாரியனால் ஓதுவிக்கப்பட்டு சிஷ்யனால் கேட்கப்படுகையாலே 'ச்ருதி' எனப்படும் நாலு வேதமும், ஆச்சர்யபூதனுடைய ஸங்கல்பத்தால் உண்டான தத்வஸ்திதியை உடையவை. (மாயை)"மாயா வயுநம்ஜ்ஞாநம்" என்கிற ஆர்ஷநிகண்டின்படி ஸங்கல்பரூபமான அறிவைக்குறிக்கும். "ஆத்மமாயயா ஸம்பவாமி"[கீதை4-6] [என் ஸங்கல்பத்தால் பிறக்கிறேன்] என்றான் கண்ணனும். தற்பு-தத்வம்; உண்மை.

77. தற்பென்னைத் தானறியா னேலும் தடங்கடலைக்
கற்கொண்டு தூர்த்த கடல்வண்ணன்—எற்கொண்ட
வெவ்வினையும் நீங்க விலங்கா மனம்வைத்தான்
எவ்வினையும் மாயுமால் கண்டு.

பதவுரை:—தட கடலை—பரந்த சமுத்திரத்தை, கல்கொண்டு—மலைகளினால், தூர்த்த—அணைசெய்து அடைத்தவனும், கடல்வண்ணன் தான்—கடல்போன்ற கருநிறமுடையவனுமான எம்பெருமான், என்னை—(தோஷமே வடிவெடுத்தவனான) என்னை, தற்பு—உள்ளபடியே, அறியான்ஏலும்—அறிந்திலனாயினும், என்கொண்ட—என்னைக்கொள்ளை கொண்டிருக்கிற, வெம்வினையும்—கொடிய பாவங்கள்யாவும், நீங்க—என்னை விட்டு நீங்கும்படியாக, கண்டு—நெஞ்சாலே நினைத்து, மனம்—தனது திருவுள்ளத்தை, விலங்கா—வேறு எங்கும் விலகிப் போகாதபடி, வைத்தான்—(என்மீதே ஒருமடைப்படுத்தி) வைத்தருளினன்; (ஆகையாலே) எவினையும்—பாபமென்று பேர் பெற்றவை எல்லாம், மாயும்—அழிந்து போகும்.

பெரிய-வ்யா:— எழுபத்தேழாம் பாட்டு. (தற்பித்யாதி) என்னை உள்ளபடி அறியானாகிலும். (தடங்கடலையித்யாதி)அரியது செய்யுமவன். ஆழக்கடவ கல்லைக் கொண்டு நீரிலே அணை கட்டினவன். (எற்கொண்டவித்யாதி) நான் உருமாயும்படி என்னை க்ரஸித்த மஹாபாபமும் நசிக்கும்படி வேறோரிடத்திலும் போகாதபடி திருவுள்ளத்தாலே கோ(க?)ண்டு என் பக்கலிலே மாஸ்ஸை வைத்தான். ஆதலால் பாபமென்று சொல்லப்படுகிறவையடைய மாயும்.

திவ்ய-அவ:-வாச்யவாசகங்களெல்லாம் அவனுடைய ஸங்கல்பாயத்தமாயிருப்பது ஒருபுறமிருக்கட்டும். தோஷமே வடிவெடுத்த என்ஸ்வரூபத்தைப் பாராமல் என்பக்கல் விசேஷகடாக்ஷம் பண்ணினபடியைக் கண்டால் நான் நாக்கொண்டு மானிடம் பாடமுடியுமோ என்கிறார்.

வ்யா:—(தற்பென்னைத் தானறியானேலும்) என்னை உள்ளபடி அறியானாகிலும். "குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன், நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன், புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன்" [திருச்சந்த-90] என்கிறபடியே தோஷமெல்லாம் வடிவெடுத்த என்னை உள்ளபடி அறியானாகிலும். (தானறியானேலும்)

''யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்'' என்கிறபடியே ஸர்வஜ்ஞனான தானே என் தோஷங்களை அறியானாகிலும். (என்னைத்தான் அறியானேலும்) 'என் தோஷத்தை' என்று சொல்லாமல், 'என்னை' என்பானென்? என்னில்; தோஷமே வடிவெடுத்தவராகத் தம்மை அறுதியிட்டிருக்கையாலே, 'என்னை' என்கிறார். தோஷங்கள் நிரூபிதஸ்வரூபவிசேஷணமாயிருக்கும் நிலைபோய், ஸ்வரூபநிரூபகமாயிருக்கிறபடி. (அறியானேலும்) ''அவிஜ்ஞாதா ஹி பக்தாநாம் ஆகஸ்ஸு கமலேக்ஷண:'' [பக்தர்களுடைய பாவங்கள் விஷயத்தில், தாமரைக்கண்ணன் அறியாதவனாகவேயிருக்கிறான்.] என்றதன்றோ.

> "அற்றமுரைக்கில் அடைந்தவர்பால் அம்புயைகோன்
> குற்றமுணர்ந்திகழும் கோள்கையனோ—எற்றேதன்
> கன்றினுடம்பின் வழுவன்றோ காதலிப்பது
> அன்றதனை ஈன்றுகந்த ஆ"

என்றார் அருளாளப்பெருமாள் எம்பெருமானாரும். (தடங்கடலைக் கற்கொண்டு தூர்த்த கடல்வண்ணன்) மிகப்பெரிய கடலைக் கல்லாலே அணைகட்டினவனாய், கடல்போன்று இருண்டு குளிர்ந்த வடிவையும், காம்பீர்யாதி ஸ்வபாவத்தையுமுடையவன். கடலிலே ஆழ்ந்து போகக்கூடிய கற்களைக் கொண்டு, குலபர்வதங்களையிட்டாலும் விழுங்கக்கூடிய கடலிலே அணைகட்டிய அகடிதகடநாஸாமர்த்யத்தை உடையவன். இப்படி அரியது செய்தது பிராட்டிக்காகமாத்திரமன்று; என்விஷயத்திலும் அரியது செய்தான் என்கிறார் அடுத்தபடியாக.— (எற்கொண்ட வெவ்வினையும் நீங்க) நான் 'அஸந்நேவ' என்று உருவழிந்துபோம்படி என்னை மூடிக்கொண்டிருந்த மஹாபாபங்களெல்லாம், ''வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ கானோ ஒருங்கிற்றுக் கண்டிலமால்'' என்னும்படி கை விட்டோடும்படி. வெவ்வினை கொடியபாபம்; 'எவ்வினை' என்று பிரித்து 'எல்லாப்பாபங்களும்' என்றும் கொள்வர். (விலங்காமனம் கண்டு வைத்தான்) ''கல்லும் கனைகடலும் வைகுந்த வானாடும் புல்லென்றொழிந்தனகொல்'' ''பனிக்கடலில் பள்ளி கோளைப் பழகவிட்டு ஓடிவந்து'' என்று சொல்லுகிறபடியே தான் என்னைத் தவிர வேறொரு விஷயத்தில் செல்லாபடி தன் திருவுள்ளத்தாலே ஸங்கல்பித்து, என்னிடத்திலே மனத்தை வைத்தான். (அறியானேலும்—மனம் வைத்தான்) என் ஸ்வரூபத்தை அறியாவிடிலும் என்னிடம் மனஸ்ஸை வைத்தான்; அறியாதவனே அறியலானான்; தோஷங்களை அறியாவிடிலும், குணங்களை ஒன்று பத்து நூறாக கிரஹித்து என்னிடம் ஈடுபட்டான். *அவிஜ்ஞாதாவானவனே *ஸஹஸ்ராம்சுவானான். (எவ்வினையும் மாயுமால்)

---

* அவிஜ்ஞாதா—(தோஷங்களை) அறியாதவன்; * ஸஹஸ்ராம்சு—(குணங்களை) ஆயிரம்மடங்காக அறிபவன். [விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.]

எற்கொண்ட வெவ்வினையும் நீங்க அவன் மனம் வைத்தபின்பு பாவங்கள் அழியாதிருக்க வழியுண்டோ? ஆகையால் பகவதபசாரம், பாகவதாபசாரம், அஸஹ்யாபசாரம் முதலான பாபங்களெல்லாம் அழிந்தொழியும். இது என் விஷயத்திலே செய்த அகடிதகடனை என்று பாவம்,

78. கண்டு வணங்கினார்க் கென்னாங்கொல் காமனுடல்
கொண்ட தவத்தாற் குமையுணர்த்த—வண்டலம்பும்
தாரலங்கல் நீண்முடியான்றன்பெயரே கேட்டிருந்து அங்
காரலங்க லானமையா லாய்ந்து.

பதவுரை:—காமன்-*மன்மதனுடைய*, உடல்-*சரீரத்தை*, கொண்ட-*நீறாக்கின*, தவத்தாற்கு—*தபஸ்ஸையுடைய சிவனுக்கு*, உமை-(*மனைவியான*) *பார்வதியானவள்*, உணர்த்த—*தெரிவிக்க*, வண்டு அலம்பும் தார் அலங்கல் நீள் முடியான் தன் பெயர் கேட்டிருந்தே — *வண்டுகள் (தேன் வெள்ளத்தில்) அலைகிற பூமாலையை நீண்ட திருமுடியிலுடையனான எம்பெருமானுடைய திருநாமங்களைக் கேட்டமாத்திரத்திலேயே* அங்கு—*அப்போதே*, ஆர்அலங்கல்ஆனமை-*மிகவும் அசைந்து போனமையை*, ஆய்ந்தால்—*ஆராய்ந்து பார்க்கில்*, கண்டு வணங்கினார்க்கு—*நேரேகண்டு வணங்குமவர்கட்கு*, என்ஆம்கொல்-*எப்படிப்பட்ட விகாரமுண்டாகுமோ (என்பது சொல்லமுடியாது)*

பெரி-வ்யா:—எழுபத்தெட்டாம்பாட்டு (கண்டு) அபிமதவிஷயத்திலே ப்ராவண்யத்தை விளைத்தவனை அநங்கனாக்கினவன் நெஞ்சுங்கூட ச்ரவண மாத்ரத்திலே பரவசமானபடி கண்டால், இவ்வஸ்துவை ஸாக்ஷாத் கரித்து ப்ரணாமாதிகளைப்பண்ணினார்க்கு எத்தனை நன்மை பிறவாது? என்கிறார். (தவத்தாற்கு) தபஸ்ஸுக்குப் பலம் ஒருத்தனுடைய ஹிம்ஸையாம்படி நெஞ்சு திண்ணியனானவனுக்கு. (உமையுணர்த்த) ப்ராஸங்கிகமாக பகவத்குணங்களைக் கேட்டு சிஷ்யாசார்யக்ரமம் மாறாடி, அவள் வாயாலே தான்கேட்டு. (வண்டித்யாதி) மதுவெள்ளத்திலே வண்டுகள் அலையாநின்ற திருத்துழாய்மாலையையும், ஆதிராஜ்யஸூசகமான முடியையும் உடைய ஸர்வேச்வரன்திருநாமங்களையே கேட்டு நெஞ்சாலே அநுஸந்தித்துக் கொண்டிருந்து. (ஆரலங்கலானமையால்) அலங்கலென்று அசைவாய், பாரவச்யத்தைச் சொன்னபடி.

திவ்ய-அவ:—அத்ருஷ்ட பலமான பாபநிவர்த்தநம் நிற்க; அவனைக் கண்டு வணங்கினவர்கள் த்ருஷ்டத்திலே அனுபவிக்கும் ஆநந்தம்தான் எத்தகையது? என்கிறார். யாத்ருச்சிகமாக பகவானுடைய திருநாமங்களைக் கேட்டமாத்திரத்தாலே, தமோகுணம் நிறைந்தவனாய், கோபவசப்படுமவனான ருத்ரனும் கூட விகாரமடையும் படியைப் பார்த்தால், நேருக்கு நேரே கண்டு வணங்கினவர்களுக்கு என்ன ஈடுபாடு ஏற்படும்? என்கிறார்.

வ்யா:—(காமனுடல் கொண்ட தவத்தாற்கு) தன் பத்னியிடத்திலே காதலை விளைவித்த காமனுடைய உடலை எரித்த தவத்தையுடையவனான ருத்ரனுக்கு. நெடுங்காலம் செய்ததவ வலிமையை அபிமதவிஷயத்தில் அன்பை விளைத்தவனை அழிப்பதிலே செலவிடும்படியான க்ரூரஸ்வபாவத்தை உடைய ருத்ரனுக்கு. (உடல் கொண்ட தவத்தாற்கு) தபஸ்ஸுக்குப் பலம் ஒருவனை அழிப்பதாம்படியான கல்நெஞ்சனுக்கு. இப்படிப்பட்ட கல்நெஞ்சன்கூட திருநாமச்ரவணத்தாலே நெஞ்சுருகிற்று என்று பாவம். (உமை உணர்ந்த) பார்வதியானவள் சொல்ல. இவ்விருத்தாந்தம் பின்வருமாறு:—ஒரு சமயம் ருத்ரன் தியானபரனாயிருக்கக் கண்ட பார்வதியானவள்

"கம் த்வமர்ச்சயஸே தேவ! கிம் தைவமதிகம் தவ ।
ஜபஹோம நமஸ்காரை: தம் வதஸ்வ மஹேச்வர ॥"

[தேவனே! நீர் ஜபஹோம நமஸ்காரங்களாலே யாரை அர்ச்சனம் செய்கிறீர்? உமக்கும் மேலான தெய்வம் எது? மஹேச்வரனே! அவனை எனக்கு உரைப்பீராக] என்று தொடங்கி பகவந்நாமங்களைச் செவிக்கினிதாகப் பாடி ப்ரச்னம் பண்ண அவளை மேலும் மேலும் திருநாமங்களைப் பாடச்சொல்லிக் கேட்டு, மிகவும் மேனிதளர்ந்து போனான் என்பர். (உமை உணர்த்த)ப்ரச்ன முகத்தாலே ப்ராஸங்கிகமாக பகவத்குண நாமங்களை அவள் சொல்லக்கேட்டு சிஷ்யாசார்யக்ரமம் மாறி, அவள் வாயாலே தான் பகவத்விஷயத்தைக் கேட்டபடி. (வண்டலம்பும் தாரலங்கல் நீண் முடியான் தன் பெயரே கேட்டிருந்து) வண்டுகள் தேன்வெள்ளத்தில் அலையப்பெற்ற திருத்துழாய் மாலையையுடைய நீண்ட மகுடத்தையுடைய எம்பெருமானுடைய பெயர்களைக் கேட்டு அநுஸந்தித்திருந்த மாத்திரத்திலேயே. (வண்டலம்பும் தாரலங்கல் நீண்முடியான்) "சுடர் முடிமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்" [திருவாய் 1—9—7] என்றார் நம்மாழ்வாரும். வண்டலம்பும்—வண்டுகள் சப்திக்கும் என்பாருமுண்டு. (நீண் முடியான்) "ஆதிராஜ்ய மதிகம் புவநாநாமீச தே பிசுநயந் கில மௌளி:" [நீ உலகங்களுக்கெல்லாம் தலைவன் என்பதை உன் கிரீடமே கோட்சொல்லித்தருகிறது.] என்று ஆழ்வான் அருளியபடியே ஸர்வாதிகத்வத்தைக் காட்டும் முடியையுடையவன். (அங்கு ஆரலங்கலானமை ஆய்ந்தால் கண்டு வணங்கினார்க்கென்னாங்கொல்)திருநாமத்

னைக் கேட்டவுடன் "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றும், "உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்தேன் உடம்பெலாம் கண்ணநீர் சோர" என்றும் "ஆஹ்லாத ஶீத நேத்ராம்பு: புலகீக்ருத காத்ரவாந் | ஸதா பரகுணாவிஷ்ட:" [ஆநந்தக்கண்ணீரையும் மயிர்க்கூச்செறியும் மேனியையும் உடையவனாய், எப்போதும் பரமாத்மகுணத்தால் ஆட்கொள்ளப்பட்டவனாயிருப்பான்] என்றும் சொல்லும் நிலைமையை அடைந்தபடியை ஆராய்ந்தால் பரமபுருஷனை நேரே கண்டு வணங்கினவர்கள் படும்பாடு எங்ஙனமிருக்கும்? அலங்கல்—அசைவு. (ஆரலங்கலானமை) மிகவும் அசைந்துபோனமை. அன்றிக்கே, அலங்கல் என்று மாலையாய் 'முடித்து வாடின பூமாலைபோலே துவண்டு விழுந்தான்' என்றும் கொள்வர். ஆரலங்கலானமையால், ஆய்ந்து—ஆராய்ந்து, கண்டு வணங்கினார்க்கு என்னுங்கொல் என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம்.

79. ஆய்ந்துகொண் டாதிப்பெருமானை அன்பினால்
வாய்ந்த மனத்திருத்த வல்லார்கள்—ஏய்ந்ததம்
மெய்குந்தமாக விரும்புவரே தாமும்தம்
வைகுந்தம் காண்பார் விரைந்து.

பதவுரை:—ஆதி—ஜகத்காரணபூதனான, பெருமானை — ஸர்வேச்வரனை, அன்பினால்—ப்ரேமத்துடன், ஆய்ந்து கொண்டு—அநுஸந்தித்துக்கொண்டு, வாய்ந்த மனத்து-(தமது) பாங்கான நெஞ்சிலே, இருத்த வல்லார்கள் தாமும்—நிலைநிறுத்திக் கொள்ள வல்லரானவர்கள், தம் வைகுந்தம்—தங்களுக்கென்று ஏற்பட்டுள்ள பரமபதத்தை, விரைந்து-சீக்கிரமாக, காண்பார்—காண விருப்பமுடையராய், ஏய்ந்த—ஆத்மாவோடு பொருந்திய, தம் மெய்—தங்களுடைய உடம்பை, குந்தம் ஆக-வியாதியாக, விரும்புவர்—எண்ணுவர்.

பெரி• அவ:—எழுபத்தோன்பதாம்பாட்டு (ஆய்ந்து)பகவத் விஷயத்திலே ருசியுடையவர்கள் அவனை ஏகாந்தமாய் அநுபவிக்கலாம் தேசம் பரமபதம் என்று ஆசைப்பட்டு, அதுக்குக் காற்கட்டாயிற்றென்று சொல்லலாம்படி அபிமானித்த சரீரத்தை "शरीरं व्रणवत्पश्येत्" (ஶரீரம் வ்ரணவத் பச்யேத்) என்னும்படியே நோயாக விரும்புவர்களென்கிறார்.

வ்யா:—(ஆய்ந்தித்யாதி) ஜகத்காரண பூதனான ஸர்வேச்வரனை ப்ரேமத்தாலே அநுஸந்தித்துக்கொண்டு இருத்துகைக்கு யோக்யமான நெஞ்சிலே வைக்கவல்லவர்கள். (ஏய்ந்த தம் மெய்) "ஸ்தூலோஹம், க்ருஶோஹம்" என்று தானாகச் சொல்லலாம்படியான சரீரத்தை. குந்தமாக—நோயாக.

திவ்ய-அவ:-அவனை நேரே கண்டு வணங்கினவர்களின் ஆநந்தம் மிகப் பெரிது என்றார். சரீரத்தில் ஈடுபாடு இவ்வாநந்தத்திற்கு இடையூறாய் நில்லாதோ? என்ன,— ஸர்வேச்வரனை நெஞ்சிற்கொண்டு பரமபதம் செல்ல வேணும் என்னும் த்வரையுடனிருப்பவர்கள், அதற்கு விரோதியாம்படி தாம் அபிமானித்த சரீரத்தை, "ஶரீரம் வ்ரணவத் பச்யேத்" [?] [சரீரத்தைப் புண்ணைப் போலே காணக்கடவன்] என்கிறபடியே நோயாக எண்ணுவர் களாகையாலே பகவதநுபவஜநிதமான ஆநந்தத்திற்கு சரீரப்ராவண்யம் இடையூறாய் நில்லாது என்கிறார்.

வ்யா:—(ஆய்ந்துகொண்டாதிப் பெருமானை அன்பினால்) ஜகத்காரண பூதனான ஸர்வேச்வரனை அன்பாலே அநுஸந்தித்துக்கொண்டு. "காரணம் த்யேய:" [அதர்வசிகை] [ஜகத்காரணவஸ்துவே தியானிக்கத்தக்கது] என்றல்லவோ சொலலப்பட்டது. (வாய்ந்த மனத்திருந்த வல்லார்கள்) 'பகவானை இருத்தவேணும்' என்றால் 'அல்லேன்' என்னாத நெஞ்சிலே வைக்க வல்லவர்கள். (வாய்ந்த மனம்) "முந்துற்ற நெஞ்சு" [பெரியதிருவ–1] "என்னை நெகிழ்க்கிலும் என்னுடை நன்னெஞ்சம் தன்னை அகல்விக்கத்தானும் கில்லான் இனி" [திருவாய் 1–7–8] என்கிறபடியே தம்மிலும் முற்பட்டிருக்கும் மனம். (ஆதிப்பெருமானை வாய்ந்த மனத்திருத்த வல்லார்கள்) "முழுவேழ் லகுமுண்டான் உகந்து வந்து அடியேனுள் புகுந்தான் அகல்வானுமல்லினி" [திருவாய் 2—6—7] என்கிறபடியே ஜகத்காரணபூதனைத் தம் பாங்கான நெஞ்சிலே ஸ்தாவரப்ரதிஷ்டையாக எழுந்தருளப்பண்ணவல்லவர்கள். (மனத் திருத்த வல்லார்கள்) "சஞ்சலம் ஹி மந:" [கீதை 6–34] "நின்றவா நில்லா நெஞ்சு" [பெரியதிருமொழி 1—1—4] என்கிற அதிசஞ்சலமான மனத்திலே இருத்துவது மிகவரிய காரியம் என்று உணர்த்துகிறார். (வல்லார்கள் தாமும்) இவ்வரிய காரியத்தைச் செய்தவர்களுடைய பெருமை சொல்லுகிறது. (வல் லார்கள் தாமும்) ப்ராப்யமான பகவத்விஷயத்திலே ருசியுடையர்களான இவர்கள். (தம் வைகுந்தம் விரைந்து காண்பார்) அந்த பகவதநுபவம் இடைய றுமல் செல்லும் தேசமான பரமபதத்தை விரைவிலே அடைய விருப்பமுள்ள வர்களாய். (தம் வைகுந்தம்) "மரீசீநாம் பதம்" [புருஷஸூக்தம்] "வான வர் நாடு" [திருவாய் 3-9-9] என்கிறபடியே வானிளவரசான ஸர்வேச் வரன் அடியார்க்கென்றே ஆக்கிவைத்திருக்கும் பரமபதத்தை. (விரைந்து காண்பார்) விரைவிலே காண விருப்பமுடையவர்களாய். (ஏய்ந்த தம் மெய் குந்தமாகவே விரும்புவர்) அவ்விருப்பத்தினாலேயே, தம்மோடு பொருந்தி யிருக்கும் தம் சரீரத்தை நோயாகவே எண்ணுவர். (ஏய்ந்த தம் மெய்) ஞானம் பிறந்தபின்பும், "ஸ்தூலோஹம், க்ருசோஹம்" [நான் தடித்தவன்; நான் மெலிந்தவன்] என்று தானாகவே வ்யவஹரிக்கலாம்படி ஆத்மாவோடு ஒன்றிநிற்கும் தம் சரீரத்தை. (குந்தமாகவே விரும்புவர்) நோயாகவே

என்னுவர். ஸுகத்துக்குக் காரணமாகவோ, ஸுகதுக்கங்கள். இரண்டுக்கும் காரணமாகவோ எண்ணுமல் துக்கஹேதுவாகவே எண்ணுவர். குந்தம்-நோய்.

80. விரைந்தடைமின் மேலொருநாள் வெள்ளம் பரக்கக்
கரந்துலகம் காத்தளித்த கண்ணன்—பரந்துலகம்
பாடின ஆடினகேட்டுப் படுநரகம்
வீடின வாசற் கதவு.

பதவுரை:—பரந்து—எங்கும் வியாபித்து, ஆடின-நர்த்தனம் செய்யும், உலகம்—சிறந்த பாகவதர்கள், பாடின—பாடின திருநாமங்களை, கேட்டு—கேட்டதனுல், படு நரகம் வாசல்—நரகங்களின் வாசல்களிலிருந்த, கதவு—கதவுகள், வீடின—விழுந்தொழிந்தன; மேல்ஒரு நாள்-முன்னெரு காலத்தில், வெள்ளம் பரக்க—பிரளய வெள்ளம் பரவினபோது, உலகம்—உலகங்களை யெல்லாம், கரந்து—(திரு வயிற்றில்) மறைத்து வைத்து, காத்து அளித்த—துன்பங்களைப் போக்கி ரக்ஷித்த, கண்ணன்-கண்ணபிரானை, விரைந்து அடைமின்-சீக்கிரமாகச் சென்று பணியுங்கோள்.

பெரி-வ்யா:—(விரைந்தடைமினித்யாதி) முன்பு ப்ரளயம் வருகிறதென்று லோகத்தை வயிற்றிலே வைத்து, ப்ரளயம் தேடி வந்தாலும் அத்தனைபோதும் தெரியாதபடி மறைத்துக் காத்து ரக்ஷித்த க்ருஷ்ணனை விரைந்து அடையுங்கோள். (உலகம்) என்று உத்க்ருஷ்டரைச் சொல்லுகிறது. (பரந்தித்யாதி) பரந்து, உத்க்ருஷ்டராய், ஆடினவர்கள் பாடின திருநாமங்களைக் கேட்ட நகரத்து வாசல்களில் கதவுவாங்கிப் போகட்டன. அன்றிக்கே, நரகத்து வாசல்களில் பிடுங்கிப்போகட்ட கதவுகளை நாட்டி "முனியாது மூரித்தாள் கோமின்" என்னும்படியே விரைந்து அடையுங்கோள் என்றுமாம். கண்ணன் என்றது கண்ணனை என்றபடி.

திவ்ய-அவ:—'ஞானிகள் தம் மெய் குந்தமாக விரும்புவதிருக்கட்டும். எங்களுக்கு ஸம்ஸாரபந்தம் விடமாட்டேனென்கிறதே' என்ன,—ப்ரளயங்கொண்ட உலகத்தை ரக்ஷித்த கண்ணனை அடைந்தால் ஸம்ஸாரப்ரளயம் கொண்ட நீங்களும் உஜ்ஜீவிக்கலாம் என்கிறுர்.

வ்யா:—(விரைந்தடைமின்) உங்களாபத்தைப் பார்த்தால் சடக்கென அடையவேண்டாவோ? யாரையடைவது என்ன, ப்ரளயங்கொண்டவர்களை எடுத்து ரக்ஷிப்பதையே தொழிலாகஉடையவனை என்கிறுர்மேல்;—(மேலொரு

நாள்...) இன்று உங்களை ஸம்ஸாரவெள்ளம் மூடிக்கொண்டிருப்பது போலே, அன்று ப்ரளயவெள்ளம் உலகனைத்தையும் சூழ்ந்துகொள்ள. (உலகம் கரந்து காத்து) உலகம் முழுவதையும், தன் திருவயிற்றிலே மறைத்து வைத்து. ப்ரளயம் நெடுங்காலம் தேடிவந்தாலும் இவர்களிருப்பிடத்தை அறியமுடியாதபடி தன் திருவயிற்றிலே மறைத்துக்காவல் காத்து. (அளித்த கண்ணன்) இம்முறையிலே உலகத்தை ரக்ஷித்த கண்ணனை விரைந்து அடையுங்கள் என்று கீழோடும், பாடினகேட்டு என்று மேலோடும் கூட்டுவது.

நரகபயம் எங்களைத் துன்புறுத்தும்போது நாங்கள் அவனை அடைவது எப்படி? என்ன,—(பரந்து ஆடின உலகம் பாடின கேட்டு) எங்கும் வியாபித்து நர்த்தனம் செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பாடின திருநாமங்களைக் கேட்டு. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்கிறபடியே உலகம் என்னும் சப்தம் விண்ணுளாரிலும் சீரியரான பாகவதர்களை குறிக்கிறது. (பரந்து ஆடின உலகம் பாடின கேட்டு) "கிடந்து மிருந்தும் எழுந்தும் கீதம் பலபல பாடி நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய்கின்றனவே" [திருவாய் 5-2-4] "நன்றிசை பாடியும் துள்ளியாடியும் ஞாலம் பரந்தார்" [திருவாய் 5-2-6] என்றார் நம்மாழ்வாரும். (கேட்டுப் படு நரகம்) இத்திருநாம ஒலி கேட்டவுடன் "நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி" [திருமாலை] என்கிறபடியே நரகமே சுவர்க்கமாகி யொழிந்தது. (நரகம் வீடின வாசற்கதவு)நரக வாசற்கதவுகள் விழுந்தொழிந்தன. ஆகையால் உங்களுக்கு நரகபயம் வேண்டா என்று கருத்து. (பாடினவாடினகேட்டுப்படு நரகம் வீடின வாசற்கதவு) "கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல் மலியப்புகுந்து இசைபாடி ஆடி உழிதரக்கண்டோம்—நலியும் நரகமும் நைந்த" என்று நம்மாழ்வார் இப்பாசுரத்தை விவரித்தருளினார்.

அன்றிக்கே, இப்பாசுரத்தை யமதூதர்களை நோக்கி ஆழ்வார் அருளிச் செய்வதாகவும் கொள்ளலாம்.

(வீடின வாசற் கதவு விரைந்து அடைமின்) திருநாமஸங்கீர்த்தனத்வனி கேட்டு, நரகத்திலுள்ளாரனைவரும் நரக வாசற்கதவை வீழ்த்திவிட்டுப் போய் விட்டார்கள். ஓ! யமதூதர்களே! விரைந்து வந்து நரகவாசற்கதவை அடைத்துக்கொள்ளுங்கள் என்றும் பொருள் கொள்ளலாம். "இனியார் புகுவார் எழு நரகவாசல் முனியாது மூரித்தாள் கோமின்" [முதல்திருவ-87] என்றார் பொய்கையாழ்வாரும்.

81. கதவு மனமேன்றும் காணலா மேன்றும்
குதையும் வினையாவி தீர்ந்தேன்—விதையாக
நற்றமிழை வித்தி யென்னுள்ளத்தை நீவிளைத்தாய்
கற்றமொழி யாகிக் கலந்து.

பதவுரை.—நீ-(ஞானம் சக்திமுதலியவற்றால் குறைவற்றவனை)நீ கற்ற மொழி ஆகி—நான் கற்ற தமிழ்ச்சொற்களுக்குப் பொருளாக இருந்துகொண்டு, கலந்து—என்னோடு ஒரு நீராகக் கலந்து, நல் தமிழை—சிறந்த தமிழ்ப் பாஷையை, விதை ஆக வித்தி—விதையாக விதைத்து, என் உள்ளத்தை—எனது ஹ்ருதயத்தை, விளைத்தாய்—(இப்பிரபந்தமாகிற பயிர்)விளையும்படி பண்ணினாய்; (அதனால்) மனம்—மனமானது, கதவு என்றும் — 'எம்பெருமானை யடைவதற்குத் தடை' என்று (சில ஸமயங்களில்) நினைத்தும், (மனம்) காணல் ஆம் என்றும்—'(மனமானது) எம் பெருமானைக் காண்பதற்குத் துணை' என்று (சில சமயங்களில்) நினைத்தும், குதையும் வினை ஆவி தீர்ந்தேன்— (ஆகவிப்படி ஒருநிலை நில்லாமல் மாறி மாறி) சஞ்சலப்படுவதையே தொழிலாக வுடைத்தான நெஞ்சைத் தவிர்ந்தேன்.

பெரி—வ்யா—எண்பத்தோராம் பாட்டு –(கதவித்யாதி) **"मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः"** (மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:) என்னும்படியே பகவத் விஷயத்தைக் கிட்டாமைக்குக் கதவு மநஸ்ஸென்றுமாம்; காண்கைக்கும் பரிகரமேன்றுமாம். (குதையித்யாதி) தடுமாற்றமான தோழில் தவிர்த்தேன். (விதையித்யாதி) தடுமாற்றம் தீருகைக்குச் சோல்லுகிறது.

திவ்ய—அவ— "விரைந் தடைமின்" என்றவுடன் உலகமெல்லாம் பகவத்ப்ரவணரானார்கள். ஆழ்வார் ஸாதித்த அருஞ்செயலைக்கண்டு திருவுள்ள முகந்த எம்பெருமான், 'ஆழ்வீர்! உமக்கு நான் செய்யலாவதொரு கைம்மாறு உண்டோ?' என்றான்; "என்னுடைய இக்காரியத்துக்கெல்லாம் அடியாக, என் உள்ளத்தைத் திருத்திப் பயிர் செய்தவன் நீயேயாயிருக்கும்போது, எனக்கு இனிச்செய்யவேண்டியது என்ன இருக்கிறது?" என்கிறார்.

வ்யா:—(கதவு மனமென்றும்... தீர்ந்தேன்) மற்றுள்ளார்க்கு பகவானை அடைவதில் உள்ள ஒரு பெருந்தடையை நான் தீரப்பெற்றேன் என்கிறார். அத்தடைதான் யாதென்னில்: (கதவு மனமென்றும் காணலாமென்றும் குதையும் வினையாவி)

''மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: ।
பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மந: ॥
[வி-பு 6-7-28]

[நெஞ்சே மனிதர்களுடைய ஸம்ஸாரபந்தத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணமாகிறது; நெஞ்சு சப்தாதி விஷயங்களில் ஈடுபட்டதாகில் பந்தத்திற்கும், விஷயங்களில் ஈடுபடாமலிருந்ததாகில் மோக்ஷத்திற்கும் காரணமாகிறது] என்கிறபடியே, நெஞ்சுதானே ஒரு சமயம் பரமபுருஷனைக் காணத்தடையாயிருக்கும் கதவுபோல் உள்ளதென்றும், மற்றொரு சமயம் அவனைக்காண ஸாதனமாயிருக்கிற தென்றும் சொல்லும்படி, ஒருநிலை நில்லாத தொழிலையுடைய நெஞ்சைத் தவிரப்பெற்றேன். (கதவு மன மென்றும் காணலா மென்றும்)

"ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மந:"
[கீதை 6-5]

[நெஞ்சே ஆத்மாவுக்கு உறவினனுகவும் ஆகிறது; நெஞ்சே ஆத்மாவுக்கு எதிரியாகவுமாகிறது.] என்றுனன்றோ கீதையில் கண்ணனும். (குதையும் வினையாவி தீர்ந்தேன்) தடுமாறும் தொழிலையுடைய நெஞ்சைத் தவிரப்பெற்றேன். பகவத்விஷயத்திலே ஒரு நிலைநிற்கும் நெஞ்சைப்பெற்றேன் என்று பாவம். (ஆவி) "ஊனில்வாழ் உயிரே" [திருவாய் 2-3-1] என்றும், கீழே எடுத்த கீதாச்லோகத்திலும் ஆத்மா என்றும், உயிர் என்றும் சொல்லப்படுவதுபோலே இங்கு 'ஆவி' என்று நெஞ்சு சொல்லப்படுகிறது.

மற்றுள்ளார்க்குள்ள இத்தடுமாற்றம் தீருகைக்கு ஹேது சொல்லுகிறது மேலே. (விதையாக நல் தமிழை வித்தி) இலக்கிய இலக்கணங்களில் ஒரு பழுது சொல்லவொண்ணுத அழகிய தமிழ் பாஷையை என் நெஞ்சிலே விதையாக விதைத்து. (கற்ற மொழியாகிக் கலந்து) நான் பிறந்தவன்று தொடங்கிப் பழகிப்போந்த தமிழ்மொழிக்குப் பொருளாகி என்னுள் புகுந்து (மொழியாகி) மொழிககு வாச்யனுய். (என் உள்ளத்தை நீ விளைத்தாய்) "நெஞ்சப் பெருஞ்செய்" [திருவாய் 5-3-4] எனப்படும் நெஞ்சாகிற நிலத்திலே, * பத்தியுழவனுகிற நீ, தமிழ் மொழியாகிற விதையை விதைத்து, இக்கவிகளாகிற பயிர் விளையும்படி செய்தாய். அதனுலேயே நான் கதவு மனமென்றும் காணலாமென்றும் குதையும் வினையாவி தீர்ந்தேன் என்று கீழோடே அந்வயம்.

82. கலந்தானேன் னுள்ளத்துக் காமவேள் தாதை
நலந்தானு மீதொப்ப துண்டே—அலர்ந்தலர்கள்
இட்டேத்து மீசனும் நான்முகனு மென்றிவர்கள்
விட்டேத்த மாட்டாத வேந்து.

பதவுரை:— காம வேள்தாதை — மன்மதனுக்குத் தந்தையான வனும், அலர்ந்த அலர்கள் இட்டு ஏத்தும் ஈசனும்—மலர்ந்த பூக்களை ஸமர்ப்பித்துத் துதி செய்கின்ற சிவபிரானென்ன, நான்முகனும்-பிரம னென்ன. என்ற இவர்கள்—என்கிற (சிறந்த) தேவர்களும், விட்டு ஏத்த மாட்டாத—வாய் விட்டுத் துதித்து முடிக்க முடியாதவனுமான, வேந்து—தேவாதிதேவன், என் உள்ளத்து—எனது நெஞ்சிலே, கலந் தான்—சேர்ந்து கொண்டான், ஈது ஒப்பது நலம் தானும் உண்டோ—இந்த நன்மையோடொத்த நன்மை வேறுண்டோ? [இல்லை.]

பெரி-வ்யா:-எண்பத்திரண்டாம் பாட்டு-(கலந்தானித்யாதி) எல்லா ரும் தன்னை ஆசைப்பட இருக்குமவன் என்னை ஆசைப்பட்டு ஹ்ருத யத்திலே கலந்தான். அழகாலே எல்லாரையும் அசப்படுத்தும் காமனுக் கும் உத்பாதகனானவன். (ஈதொப்பது நலந்தானுமுண்டே) அவன் தான் காட்டக் கண்ட இதுக்குக்கதிர் பொறுக்கிக் கண்ட நலங்கள் ஸத் ருமமே? (அலர்ந்தலர்களித்யாதி) சேவ்விப்பூக்களைக் கோண்டு ஏத்து கிற ருத்ரனும் சதுர்முகனும் வாய்விட்டு ஏத்தமாட்டாத ஸர்வாதிகன் என் உள்ளத்தைக் கலந்தான். அவ்வழகையும் மேன்மையையும் உடையவன் என்கை.

திவ்ய-அவ.—உள்ளத்தை விளைத்துக் குதையும் வினையாவி தீர்த்தது மட்டுமோ? மிகப்பெரியனான தான் மிகத் தாழ்ந்ததான என் நெஞ்சிலே கலந்த துக்கு ஒப்பான நன்மை உலகிலே உண்டோ? என்று உலகெல்லாமறியப் பறைசாற்றுகிறார்.

*வ்யா:—(கலந்தான் என் உள்ளத்து) கண்டகண்ட விஷயங்களிலே வாய்வைத்துப் போந்த என் உள்ளத்திலே ஒரு நீராகக் கலந்தான். அவன் தான் யாரென்னில்: (காமவேள்தாதை) தன் அழகாலே பிறரை மயக்கும் மன்மதனுக்கும் உத்பாதகனானகையாலே * மந்மதமந்மதனான பேரழகன் கிடீர் மிகத்தாழ்ந்த என் நெஞ்சையாசைப்பட்டுக் கலந்தது என்கிறார். 'காமவேள் தாதை—காமனுக்கும் தந்தை. (காமவேள்) காமன்—பிறரிடம் ஆசையை விளைக்குமவன். வேள்—அழகன். காமன்—வடமொழி; வேள்—தமிழ்ச் சொல். வெறும் அழகுதானோ உள்ளது என்னில்: (அலர்ந்தலர்கள்...வேந்து) அன்று மலர்ந்த பூக்களைப் பறித்து எம்பெருமான் திருவடிகளிலேயிட்டு, வாயாரத்துதிக்கும் ஈச்வராபிமானிகிய சிவனும், அவனுக்கும் தந்தையான பிரமனும் வாய்விட்டுப் பரிபூர்ணமாகத் துதிக்கமாட்டாத ராஜாதிராஜன்*

கிடீர் என்னோடு கலந்தது என்கிறார். (ஈசனும் நான்முகனும் என்றிவர்கள்) தேவர்தலைவர்களான இவர்களுடைய ப்ரஸித்தி சொல்லுகிறது. (விட்டேத்த) வாய்விட்டுத்துதிக்க; முழு மிடறுசெய்து துதிக்க; பரிபூர்ணமாகத் துதிக்க, (வேந்து கலந்தான் என் உள்ளத்து) ஸார்வபௌமன் கடதாஸியை ஆசைப் பட்டுக் கலந்தாற்போலேயிராநின்றது. (ஈதொப்பது நலந்தானுமுண்டே) இதற்கு ஸமானமானதொரு நன்மையும் உலகில் உண்டோ?(அலர்ந்தலர்கள்... விட்டேத்த மாட்டாத வேந்து கலந்தான்; ஈதொப்பது நலந்தானுமுண்டே) அவன் தானே மேல் விழுந்து காட்டக்கண்டு அநுபவித்த இவ்வநுபவத்துக்கு, நெற்களத்திலே உதிர்ந்து கிடக்கும் கதிர்களை சிரமப்பட்டுப் பொறுக்கி ஜீவிப் பாரைப்போலே, முயற்சி செய்து செவ்விப்பூக்களைப் பறிப்பது, துதிப்பது முதலான செயல்களை ஸாதனபுத்தியோடு செய்யும் ப்ரஹ்மருத்ராதிகளுடைய அநுபவங்கள் ஈடாகுமோ?

83. வேந்தராய் விண்ணவராய் விண்ணாகித் தண்ணளியாய்
மாந்தராய் மாதாய் மற்றெல்லாமாய்—சார்ந்தவர்க்குத்
தன்னாற்றான் நேமியான் மால்வண்ணன் தான்கொடுக்கும்
பின்னால் தான்செய்யும் பிதிர்.

பதவுரை:— நேமியான் — திருவாழி யாழ்வானை யுடையவனும், மால் வண்ணன் — அன்பே வடிவெடுத்தவனுமான எம்பெருமான், சார்ந்தவர்க்கு—தன்னை யடைந்தவர்கள் விஷயத்தில், வேந்தர் ஆய்—அரசர்கள் ஆகியும், விண்ணவர் ஆய்—(மழை பொழிவிக்கும்) தேவர்கள் ஆகியும், விண் ஆகி—பலமநுபவிக்கும் சுவர்க்கமாகியும், தண்ணளி ஆய்—(சுவர்க்கத்தில்) அருள் செய்பவனாய், மாந்தர் ஆய்—மனிசர்களான உறவினர்களாய், மாது ஆய்—தாய் செய்யும் நன்மைகளைச் செய்பவனாய், மற்று எல்லாம் ஆய்—மற்றுமுள்ள எல்லாவகை நன்மைகளையும் செய்பவனாய், (எவ்வளவு நன்மைகள் செய்தாலும்) தன் ஆற்றான்-தனக்குள் திருப்தி இல்லாதவனாய்க்கொண்டு, தான் கொடுக்கும்—தானே (எல்லாவற்றையும்) கொடுக்கும்; பின்னால் — இவ்வளவுக்கு மேலும், தான் பிதிர் செய்யும்—தானே விலக்ஷணமான மோக்ஷத்தைக் கொடுக்கும்.

பெரி• அவ:—இத்தோடு ஒக்கும் அழகுண்டோ? என்னும் அர்த்தை உபபாதித்துக் காட்டுகிறார்.

வ்யா:—(வேந்தராயித்யாதி) சிறியத்தைப் பெரியது தின்னாதபடி நோக்கும் ராஜாக்களாய், பூமியிலுள்ளார்க்கு வர்ஷத்தாலே உபகரிக்கும்

தேவர்களாய், பூமியிலுளளார் பண்ணின பலமனுபவிக்கும் ஸ்வர்க்க மாய், அங்கு இவர்களுக்குப் பண்ணும் தண்ணளியாய், இவர்களுக்கு ஸஜாதீயரான மநுஷ்யராய்; அழகாய் என்னவுமாம்; "सहस्रं हि पितुर्माता" (ஸஹஸ்ரம் ஹி பிதுர் மாதா) என்னவுமாம்; அநுக்தமான எல்லாமுமாய். (சார்ந்தவர்க்கு) இப்படி எல்லாமாவது தன் பக்கல் ந்யஸ்தபரரானவர் களுக்கு. (தன்னுற்றன் நேமியான் தான் கொடுக்கும்) எல்லாம் செய்தும் ஒன்றும் செய்யானுய்க் கொடுக்கும். (பின்னால் தான் செய்யும் பிதிர்) பின்னைச் செய்யுமது வ்யாவ்ருத்தம்; அவன் குமிழ்நீருண்டிட இவன் குமிழ்நீருண்ணக் காணு மத்தனை.

திவ்ய-அவ:— 'நலந்தானு மீதொப்பதுண்டே' என்று ஒரு நன்மை யைப் பேசினுர். "இது ஒன்ருே அவன் அடியார்க்குச் செய்யும் நன்மை? அடியார்கள் இங்கிருக்கும் நாள் இன்னது செய்வது என்னும் நியமமில்லாமல் ஸர்வவிதரக்ஷைகளையும் பண்ணி, சரீரம் விட்டால் சுவர்க்கலோக இன்பங் களையும், இவை யனைத்திலும் விலக்ஷணமான பரமபதவின்பத்தையும் கொடுத்து, இவ்வளவும் செய்தும், 'இவன் செய்ததுக்குத் தக்கதாக ஒன்றும் செய்யப்பெற்றிலோம்' என்று நெஞ்சாறல்பட்டிருப்பவனன்ருே அவன்" என்று சென்ற பாசுரத்திற்சொன்ன அர்த்தத்தை விவரித்துக் காட்டுகிருர் இப்பாசுரத்தில்.

வ்யா:--(வேந்தராய்) இவ்வுலகிலிருக்கும் வரையில், துர்ப்பலர்களை, பலசாலிகள் துன்புறுத்தாதபடி நோக்குகிற ராஜாக்களாய். "நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:" [அரசன் விஷ்ணுவிலும் வேறுபடாதவன்] என்றும், "திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக் கண்டேனேயென்னும்" [திருவாய் 4-4-8] என்றும் அரசர்கள் பகவதம்சபூதர்கள் என்னுமர்த்தம் அறிவிக்கப்பட்ட தன்ருே. (விண்ணவராய்) அரசர்கள் நல்லாட்சி புரிந்துவந்தாலும், நீர்வள மில்லாவிடில் பிரயோஜனமில்லையன்ருே. அந்த நீர் வளத்திற்குக் காரண மான மழையை உலகிலுள்ளார்க்கு உபகரிக்கும் தேவர்களாய். "ஸர்வ இஜ் யாச்ச க்ருஷ்ண." [எல்லா தேவர்களும் கண்ணனே] என்ருர் வ்யாசர். (விண்ணுகி) இவ்வுலகத்திலும் விலக்ஷணமானதாய், இங்கு அநுஷ்டித்த ஜ்யோதிஷ்டோமாதி கர்மங்களுக்குப் பலமனுபவிக்குமிடமான சுவர்க்கலோக மாகி. "இனிய நல்வான் சுவர்க்கங்களுமாய்" [திருவாய் 3-10-7] என்ருர் நம்மாழ்வாரும். (தண்ணளியாய்) அந்த சுவர்க்கலோகத்தில் இவர்களுக்கு இந்திராதி தேவர்கள் பண்ணும் இரக்கமாய். இந்திராதி தேவர்கள் மூல மாக எம்பெருமானே இவர்களுக்கு இரங்கி சுவர்க்க இன்பங்களைக் கொடுக் கிருன் என்று கருத்து.

"லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்" [கீதை 7-22]

[என்னாலேயே கொடுக்கப்படும் விருப்பங்களை தேவர்களிடமிருந்து அடைகிறான்.] என்றான் கீதையில் தானும். (மாந்தராய்) உறவினராயும், நண்பராயும் உதவும் மனிதர்களாய். "ஸுஹ்ருத் கதிர் நாராயண:" [ஸுபாலோபனிஷத்] (மாதாய்) பெற்ற தாயாய். இது தந்தைக்கும் உபலக்ஷணம். "ஸஹஸ்ரம் ஹி பிதுர் மாதா" [தாய்தந்தையைக்காட்டிலும் ஆயிரம்மடங்கு விஞ்சியவள்]என்று சொல்லுகையாலே தாயையிட்டுத் தந்தையை உபலக்ஷிக்கிறது. "பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ" [பெரியதிருவ–5] "மாதா பிதா நாராயண:" [ஸுபால] மாதாய்–மாதாவாய் என்றபடி. (மாதாய்) அழகாய் என்றுமாம். மாது—அழகு. இவன் அனுபவிக்கும் அழகுகளெல்லாம் அவனுடைய அழகேயென்கை.

"யத் யத் விபூதிமத் ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா।
தத்ததேவாவ கச்ச த்வம் மம தேஜோம்ஸஸம்பவம்॥" [கீதை10-41]

[செல்வம் நிறைந்ததாயும், அழகுள்ளதாயும், உறுதியுள்ளதாயும் உள்ள பொருள்களெல்லாம் என் தேஜஸ்ஸின் அம்சத்தால் உண்டானதாக அறிவாயாக.] என்று தானும்,

"அடங்கெழில் சம்பத்து
அடங்கக்கண்டு — ஈசன்
அடங்கெழில் அஃதென்று
அடங்குக உள்ளே" [திருவாய் 1-2-7]

என்று ஆழ்வாரும் அருளிச்செய்தனரன்றோ. (மற்றெல்லாமாய்) "ப்ராதா நிவாஸ: சரணம்" என்றும் "மற்றையாராவாரும் நீ பேசில்"[பெரியதிருவ–5] என்றும் சொல்லப்படும் மற்றுமுள்ள உறவினர் உபாயம் ப்ராப்யம் என்னும் எல்லாமுமாய்; இப்படி எல்லாமும் ஆவது யாருக்கென்னில்.(சார்ந்தவர்க்கு) தன்னை அடைந்தவர்களுக்கு இப்படி எல்லாமாகிறான். (தன் ஆற்றான்) இவ்வளவும் செய்தும் 'இவன் நம்மை அடைந்ததற்கீடாக ஒன்றும் செய்யப் பெற்றிலோம்' என்று தனக்குள், திருப்தியில்லாதவனாய்.

"கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்।
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி॥" [பாரதம்]

[வெகுதூரத்திலிருந்த என்னை துரௌபதி கோவிந்தா! என்று கூப்பிட்டகூக்குரல் விருத்தியடைந்த கடன்போல் என்னெஞ்சை விட்டு அகலுகிறதில்லை] என்பவனன்றோ. (நேமியான்) இவர்களுடைய விரோதியைக் கழிக்கைக்கும், தன்னை அனுபவிப்பிக்கைக்கும் கையும் திருவாழியுமாகக் காட்சியளிப்பவன். (மால் வண்ணன் தான் கொடுக்கும்) அன்பே உருவெடுத்தவனா

கையாலே, இப்படி எல்லாம் செய்தும் ஒன்றும் செய்யாதவனைப்போலே கொடுத்துக்கொண்டேயிருப்பன். (பின்னால் தான் செய்யும் பிதிர்) இவ்வுலகத்திலும் சுவர்க்கம் முதலானவற்றிலும் இவ்வளவும் செய்த பின்பு பரமபதத்திற்கு இவனைக் கொண்டுபோய்க் கொடுக்கும் அனுபவம் விலக்ஷணமானது. பிதிர்—மிகுந்தது; சேஷபூதமானது. அதாவது:—தான் அனுபவித்து மிகுந்ததைக் கொடுக்கும்; அதாவது—ஸர்வேச்வரனானவன் தான் இச்சேதனனை அனுபவித்து அமுதக்கடலிலே பரிபூர்ணமாக மூழ்கி நிற்க, அந்நிலையைக்கண்டு இவன் பகவதநுபவாம்ருத ஸாகரத்திலே உள்ளே மூழ்கி ஆநந்திக்கை; "அஹமந்நம்-அஹமந்நாத:" [தைத்திரீயம்] என்கிறபடியே ஈச்வரன் சேதனனை அனுபவித்து ஆநந்திக்க, அவ்வானந்தத்தை ஈச்வரானந்தத்துக்கு சேஷபூதமாய்த் தான் அனுபவிக்கை. "புங்க்தே ஶிவபோகமகிலம் பதிபோக சேஷம்" [ஸர்வேச்வரனுடைய போகத்துக்கு சேஷமானதை முக்தன் புஜிக்கிறான்] என்றார் வேதாந்ததேசிகரும்.

ஸர்வேச்வரன் தன் அடியார்க்கு மோக்ஷத்தைக் கொடுப்பது பொருத்தமுடையது; இவ்வுலக இன்பங்களையும், சுவர்க்க இன்பங்களையும் தருவதாகச் சொல்லுவது பொருந்துமோ என்னில். ஸகல பலப்ரதனான அவன் அடியாருடைய ருசிக்குத் தக்கவாறு இதர பலன்களையும் கொடுக்கக்குறையில்லை. பிராட்டிக்காகத் தன் உயிரைவிட்ட பெரியவுடையாருக்கு—(ஜடாயுவுக்கு)— இன்னது செய்வதென்றறியாமல் தடுமாறி

"யா கதிர் யஜ்ஞஶீலாநாம் ஆஹிதாக்நேச்ச யா கதி: ।
அபராவர்த்திநாம் யா ச யா ச பூமிப்ரதாயிநாம் ।
மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந் ॥" [ரா-ஆ-68-30]

[யாகமனுஷ்டிப்பார்க்கும், அக்னிஹோத்ரம் செய்பவர்கும், பூமிதானம் செய்வார்க்கும் திரும்பிவருதலில்லாத முக்தர்க்கும் எந்தெந்த கதிகளுண்டோ, மிகச்சிறந்த அந்தந்த லோகங்கள் அனைத்தையும் என்னால் நியமிக்கப்பெற்ற நீ அடைவாயாக] என்று கீழுலகவின்பங்களோடு, பரமபதவின்பத்தோடு வாசியற எல்லாவற்றையும் கொடுத்தானன்றோ ராமபிரான்.

84. பிதிருமனமிலேன் பிஞ்ஞகன் றன்னோடு
எதிர்வனவ னெனக்கு நேரான்—அதிரும்
கழற்கால மன்னனையே கண்ணனையே நாளும்
தொழுங்காதல் பூண்டேன் தொழில்.

பதவுரை:—அதிரும்கழல்கால—ஒலிக்கின்ற வீரக்கழலைத் திருவடிகளிலே அணிந்துள்ள, மன்னனை—ராஜாதிராஜனை, கண்ணனையே—கண்ணபிரானையே, நாளும்—எந்நாளும், தொழும்தொழில்—தொழுவதே

நித்யகர்மமாகும்படி, காதல் பூண்டேன்—அன்பு கொண்டிருக்கிற நான், பிதிரும் மனம் இலேன்—சஞ்சலப்படும் நெஞ்சுடையேனல்லேன், பிஞ்ஞகன் தன்னோடு எதிர்வன்—ருத்ரனை ஞானத்தில் ஒத்திருப்பேன், (என்னலாமாயினும்) அவன் எனக்கு நேரான்—அந்த ருத்ரன் (நித்திய தாஸனை) என்னோடு ஒவ்வான்.

பெரி-அவ:— எண்பத்துநாலாம் பாட்டு. – (பிதிரும்) அவனோபாதி நானும் வ்யாவ்ருத்தன் என்கிறார்.

வ்யா:—(பிதிருமனமிலேன்) ஏகரூபமன்றிக்கேயிருக்கிற மநஸ்ஸை உடையேனல்லேன். (பிஞ்ஞகனித்யாதி) "ईश्वरात् ज्ञानमन्विच्छेत्" (ஈச்வராத் ஜ்ஞாநமந்விச்சேத்) என்கிற தேவனோடு ஒப்பன். (அவனெனக்கு நேரான்) ஸத்வம் தலையெடுத்தபோது எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிறவன் எனக்கு ஒப்போ? (அதிருமித்யாதி) த்வநியாநின்ற வீரக்கழலைத் திருவடிகளிலேயுடைய ஸர்வாதிகனான க்ருஷ்ணனைத் தொழுகையே தொழிலாகக் காதல்பூண்ட எனக்கு ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலையெடுத்தபோது "ईश्वरोऽहं" (ஈச்வரோऽஹம்) என்றிருக்குமவன் ஒப்பன்று.

திவ்ய-அவ:-அவன் உபகரிப்பதில் அதிவிலக்ஷணனாயிருப்பதுபோலே எம்பெருமானுக்கு அன்பு செய்வதிலே நானும் ஒப்பற்றவன் என்கிறார்.

வ்யா:—(பிதிரும் மனமிலேன்) ஒரு படிப்பட்டிராத நெஞ்சை உடையேனல்லேன்; பகவத்விஷயம் ஒன்றிலேயே ஈடுபடும் நெஞ்சை யுடையேன். "கதவு மனமென்றும் காணலாமென்றும் குதையும் வினையாவி தீர்ந்தேன்" என்றதையே த்ருடீகரிக்கிறார். மனஸ்ஸை ஒரே விஷயத்தில் ஈடுபடுத்துவதிலே உமக்கு ஒப்புண்டோவெனில்; (பிஞ்ஞகன் தன்னோடு எதிர்வன்) "ஈச்வராத் ஜ்ஞாநமந்விச்சேத்" [மாத்ஸ்ய 67-41] [சிவனிடமிருந்து அறிவை விரும்பக்கடவன்] என்கிறபடியே தானும் சிறந்த அறிவாளியாய், பிறருக்கும் அறிவளிக்கும் சிவனை நான் இவ்விஷயத்தில் ஒப்பேன். ருத்ரனுக்கும் உமக்கும் ஸர்வப்ரகார ஸாம்யம் உண்டோ என்னில்; (அவன் எனக்கு நேரான்) மற்ற விஷயங்களில் உருத்திரன் எனக்கு ஒப்பாகமாட்டான்.

(அவன் எனக்கு நேரான்) ஸத்வம் தலையெடுத்தபோது,

"தாஸபூதாஸ் ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: ।
அதோऽஹமபி தே தாஸ இதி மத்வா நமாம்யஹம் ॥"

[ஈச்வரஸம்ஹிதை]

[பரமாத்மாவான உனக்கு எல்லா ஜீவர்களும் இயற்கையிலேயே அடிமைப் பட்டவர்கள்; ஆகையால் நானும் உனக்கு அடிமைப்பட்டவன் என்றறிந்து வணங்குகிறேன்.] என்றும்,

"க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம்"

[வி-பு 5-33-41]

[நீண்ட கையையுடைய கண்ணா! உன்னையே புருஷோத்தமனென்றறிந்தேன்] என்றும் ஸர்வேச்வரனே ரக்ஷகனென்று ருத்ரன் நினைத்திருப்பதுகொண்டு ஒருபுடை அவனை ஒப்புச்சொன்னேனித்தனை; ரஜஸ்தமஸ்ஸுக்கள் விஞ்சின போது "ஈச்வரோஹம்" [கீதை 16-14] என்று நினைத்து எதிரம்பு கோக்கும் அவன் உண்மையில் எனக்கு ஒப்பாகமாட்டான் என்கிறார். 'அவன் எனக்கு நேரான் என்று சொல்லுகைக்கு அடியாகத் தமக்குள்ள வைலக்ஷண்யத்தை அருளிச்செய்கிறார் அடுத்தபடியாக;—(அதிரும் கழற்கால மன்னனையே) அடியார்களின் விரோதிகளைத் தன் முழக்காலேயே முடிப்பதற்காகவே இடப்பட்டதாகையாலே, எப்போதும் சப்தியாநிற்கும் வீரக்கழலைக் காலிலே அணிந்து இச்செயலாலே அடியார்கள் குழாங்களை எழுதிக்கொண்டிருப்பவனையே. இத்தால் மேன்மை சொல்லிற்று; மேன்மை மட்டுமன்று; நீர்மையுமுண்டென்கிறது மேலே. (கண்ணனையே) இடையனாய்ப் பிறந்த கிருஷ்ணனையே. (நாளும் தொழும் தொழில்) என்றும் தொழுவதையே தொழிலாகக்கொண்டு. (காதல் பூண்டேன்) அதற்கடியான அவன் விஷயமான அன்பை விளைத்துக்கொண்டேன் நான். இப்படிக் கண்ணனுக்கு நித்ய கைங்கர்யம் செய்யப் பாரிக்கும் எனக்கு, பாணாஸுரயுத்தத்தில் கண்ணனோடு எதிரம்பு கோத்த ருத்ரன் ஒப்பன்று என்று கருத்து, 'தொழக்காதல்' என்றும் பாடம்.

"பிஞ்ஞகன் தன்னோடு எதிர்வன் அவன் எனக்கு நேரான்...கண்ணனையே நாளும் தொழக்காதல் பூண்டேன் தொழில்" என்னும் தொடர்களிலே, ஒரு சமயம், தம்முடைய அநாதரத்தாலே கோபங்கொண்டு முக்கண்ணைத்திறந்த ருத்ரனையும் தம் பகவத்பக்திப்ரபாவத்தாலே வென்று, அவனிடமிருந்து பக்திஸாரர் என்று பட்டம்பெற்ற விருத்தாந்தத்தை உணர்த்துகிறார் என்று பெரியோர் பணிப்பர்.

85. தொழிலெனக்குத் தொல்லைமால் தன்னாமமேத்த
பொழுதெனக்கு மற்றதுவே போதும்—கழிசினத்த
வல்லாளன் வானரர்கோன் வாலி மதனழித்த
வில்லாளன் நெஞ்சத் துளன்.

பதவுரை: — கழி சினத்த — *மிக்க கோபத்தையுடையவனும்*, வல்லாளன்—*மிக்க வலிமையுடையவனும்*, வானரர்கோன்—*குரங்குகட்கு அரசனுமாகிய*, வாலி—*வாலியினுடைய*, மதன்-*மதத்தை [கொழுப்பை]*, அழித்த—*தொலைத்த*, வில் ஆளன்—*சார்ங்கவில்லை ஆள்பவனான இராம பிரான்*, நெஞ்சத்து—*எனது நெஞ்சிடத்து*, உளன்—*எழுந்தருளியிருக்கிறான்*; (*ஆகையாலே*) எனக்கு—*எனக்கு*, தொழில்-*காரியம்*, தொல்லை மால் தன் நாமம் ஏத்த—*புராணனான அந்த ஸர்வேச்வரனுடைய திருநாமங்களை வாயாரப் புகழ்வதேயாம்*; எனக்கு—*எனக்கு*, மற்றதுவே-*கீழ்ச்சொன்ன ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தனத்திலே*, பொழுது போதும்-*போது போகும்*.

பெரிய-அவ:—எண்பத்தைந்தாம் பாட்டு. (தொழிலித்யாதி)எதிரிகள் சதுரங்கம் பொரப் போருவீரோ என்றழைக்க இவர் சொல்லும்படி.

வ்யா:—(தொழிலித்யாதி) எனக்குத் தொழில் புராணனான ஸர்வேச்வரனை ஏத்த. (பொழுதித்யாதி) நாங்களும் எல்லாக்கார்யமும் செய்து பகவந்நாம ஸங்கீர்த்தநமும் பண்ணுகிறிலோமோ? என்ன;— எனக்கு ராமவ்ருத்தாந்தம் கிடக்க வேறொன்றுக்குப் போது போராது. (கழிசினத்தவித்யாதி) மிக்க சினத்தையுடையனாய், வாநரராஜாவான வாலியுடைய செருக்கை வாட்டின சக்ரவர்த்தித் திருமகன் என்னெஞ்சிலே ஸந்நிஹிதன்.

திவ்ய-அவ:—“நாளும் தொழுங்காதல் பூண்டேன் தொழில்” என்கிறதென்? எங்களைப் போலே ஒரு சமயம் பகவத் விஷயத்தில் ஈடுபட்டும், மற்ற சமயங்களிலே சூது சதுரங்கமாடுவது முதலான செயல்களைச் செய்தும் போரலாகாதோ? என்று லௌகிகர் சிலர் கேட்க; எனக்குச் சக்ரவர்த்தித் திருமகனுடைய வீரசரிதமநுஸந்திப்பதற்கே காலமெல்லாம் போதுமாயிருக்க, மற்ற விஷயங்களுக்கு நேரமேது? என்கிறார்.

வ்யா:—(தொழிலெனக்குத் தொல்லைமால் தன் நாமமேத்த).எனக்குத் தொழில் பழையோனான ஸர்வேச்வரனை ஏத்துவதேயாம். “நாங்களும் எவ்வளவோ காரியம் செய்துகொண்டு நடுவே திருநாமஸங்கீர்த்தனமும் செய்ய

வில்லையோ? அப்படிச் செய்தாலென்ன" என்ன;-(பொழுதெனக்கு மற்றதுவே போதும்) எனக்கு அந்த பகவத் விஷயத்திற்கே பொழுது சரியாயிருக்கிறது. அந்த பகவத் விஷயத்திலும், அவனுடைய ஓரவதாரமான ராமன் விஷயமான நினைவு தவிர வேறொன்றுக்குப் பொழுதில்லை என்கிறார் அடுத்த படியாக:— (கழிசினத்த வல்லாளன்) மிகுந்த சினத்தையுடையவனாய் வலிமிக்கவனு யிருப்பவன். (கழிசினத்த) காலிலே விழுந்து கெஞ்சிய தம்பியை நிக்ரஹித்த செயலிலே இவனுடைய பெருஞ்சினத்தைக் காணலாம். (வல்லாளன்) ராவணனையும் ஒரு பூச்சியைப் பிடிப்பதுபோலே பிடித்துக்கட்டிய செயலிலே பெரும் பலத்தைக் காணலாம். (வானரர்கோன்) தன் சினத்தாலும், பலத்தாலும் வானரர்களை அடக்கியாண்டு அவர்களுக்கு ராஜாவாயிருந்தவன். (கழிசினத்த வல்லாளன் வானரர்கோன்) ராமபிரானைப்போலே தன் ஸௌசீல்யகுணங்களாலே குடிகளை ஈடுபடுத்தி 'இச்சாமோ ஹி மஹாபாஹும்' [தடக்கையனை ராமபிரானை அரசனாகக் காணவிரும்புகிறோம்] என்று அவர்களே விரும்பும்படியிருக்கையன்றிக்கே, தன் சினத்தாலும், வலிமையாலும் வானர ராஜ்யத்தை வசப்படுத்திக் கொண்டிருந்தான் வாலி என்று விளங்குகிறது. (வாலி மதனழித்த) வாலியின் கர்வத்தை ஒடுக்கிய. (கழிசினத்த வாலி மதனழித்த) அபயமென்று அடியில் வீழ்ந்த தம்பியையும் நிக்ரஹித்தவனுகையாலே இவன் கர்வத்தை ஒடுக்கினான் எம்பிரான் என்று பாவம். (வல்லாளன் மதனழித்த) தன் வலிமையை ராவணன் முதலான கொடியவர்களை ஒடுக்குவதற்கு உபயோகியாமல், அவர்களோடு தோழமை கொள்ள உபயோகித்தவனுகையாலும் இவன் ஒடுக்கத்தக்கவனே என்று கருத்து. (வானரர்கோன் மதனழித்த) இவன் துஷ்ட மிருகமாகையாலே இவனை ஒரு பொருளாக்கி நேர்நின்று சண்டை செய்யாமல் மறைந்து நின்று அடித்து கர்வத்தை ஒடுக்கியதே பொருத்தமுள்ளது என்று பாவம். (மதனழித்த வில்லாளன் நெஞ்சத்துளன்) வாலியை கர்வபங்கம் செய்த வில்லையுடையவன் என் நெஞ்சிலே ஸர்வகாலமும் எழுந்தருளியிருக்கிறான். அப்படியிருக்க நான் மற்ற விஷயங்களிலே போதுபோக்க நேரமேது என்று பாவம்.

86. உளன்கண்டாய் நன்னெஞ்சே யுத்தம னென்றும்
உளன்கண்டாய் உள்ளுவாருள்ளத்—துளன்கண்டாய்
தன்னொப்பான் தானு யுளன்காண் தமியேற்கு
என்னொப்பார்க் கீச னிமை.

பதவுரை:—நல்நெஞ்சே—எனக்குப் பாங்கான மனமே! உத்தமன்—(பலனை எதிர்பாராமல் ரக்ஷிக்கும்) புருஷோத்தமனான எம்பெருமான், உளன் கண்டாய்—(நம்மை ரக்ஷிப்பதற்கு) இருக்கிறான்காண்! என்றும் உளன் கண்டாய்—(இங்கும் அங்கும்) எக்காலத்திலும்(நம்மை ரக்ஷிப்ப

தில் நிலைநிற்பவனாய் இருக்கிறான் காண்; உள்ளுவார் உள்ளத்து—*நினைக்க இசைவார் மனத்திலே,* உளன் கண்டாய்—*நித்யவாஸம் பண்ணுமவன்காண்;* தன் ஒப்பான்ஈசன்—(*தனக்குப் பிறரொருவரும் ஒப்பில்லாமையாலே) தனக்குத்தானே ஒத்திருப்பவனான அந்த எம்பெருமான் தமியேற்கு—ஒரு கைம்முதலுமற்றவனான எனக்கும்,* என் ஒப்பார்க்கு—*என்னைப்போலே உபாய சூந்யராயிருப்பவர் கட்கும்,* தான் ஆய் உளன் காண்—*தானே ரக்ஷகனாயிருக்கிறான் காண்,* இமை—*இதனை அறி.*

பெரி-அவ:— எண்பத்தாறும்பாட்டு. (உளன்) அல்லாதார்க்கும் ஸர்வேச்வரன் உளனென்று உபாதித்தேன். நீயும் இவ்வர்த்தத்தை உண்டென்று நினைத்திரு என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

வ்யா:— (உளன்கண்டாய்) பரிஹரிக்கவொண்ணாத ஆபத்து வந்தாலும் பரிஹரிக்க வல்லவனுண்டு. (நன்னெஞ்சே) ஸர்வேச்வரன் உளனென்று உபபாதிக்கப்பாங்கான நெஞ்சே! (உத்தமனென்று முளன் கண்டாய்) இதுக்கு முன்பு நிர்ஹேதுகமாக ரக்ஷித்தவன் ப்ராப்தி தசையிலும் ரக்ஷிக்கும். (உள்ளுவாருள்ளத்துளன் கண்டாய்) அவன் ரக்ஷிக்க இத்தலையால் செய்யவேண்டுவது-ஆணையிடாமை; (தன்னொப்பானித்யாதி) அகிஞ்சநனான எனக்கும் என்னைப்போலே உபாயசூன்யரானவர்களுக்கும் தனக்கு உபமானமின்றிக்கே உளனான ஈச்வரன் உளன். (இமை) புத்திபண்ணென்றபடி.

திவ்ய-அவ:—கீழ்ப் பாசுரங்களிலெல்லாம், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதி ஸத்பாவத்தைப் பல படியாகப் பாரெல்லாமறியப் பேசினார்; இப்பாசுரத்தில்,—"தெய்வமில்லையென்பார்க்கும் ஸர்வேச்வரன் உளனென்று விவரித்துக் காட்டினேன்; நீயும் இவ்வர்த்தத்தை உண்டென்று நினைத்திருப்பாயாக" என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச் செய்கிறார்.

வ்யா:—(உளன் கண்டாய்) ஈச்வரனுடைய ஸத்பாவத்தை உபதேசிக்கிறாரல்லர், அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்த நெஞ்சாகையாலே. பின்னை என் சொல்லுகிறாரென்னில்: ரக்ஷகனாக உளன் கண்டாய் என்கிறார்; உன்னாலும், மற்று எவராலும் தவிர்க்க முடியாத ஆபத்துக்கள் வந்தாலும் தவிர்க்க வல்லவனாக அவன் உளன் கண்டாய் என்கிறார். (நன்னெஞ்சே) இவ்வர்த்தத்தை உபதேசிக்கத்தகுந்த யோக்யதையை

உடைய நெஞ்சே! பிறர்க்கும் இப்பொருளை உபதேசிக்கவல்ல நெஞ்சாகை யாலே தான் கேட்கத்தகுந்தது என்னும் விஷயத்தைச் சொல்லவேணுமோ? (நன்னெஞ்சே) "நெஞ்சமே! நல்லை நல்லை உன்னைப்பெற்றால் என் செய்யோ மினி என்ன குறைவினம்" [திருவாய் 1-10-4] என்றாப்போலே கொண்டாடு கிறார். ரக்ஷகனாகும்போது கைம்மாறு கருதி ரக்ஷிப்பனோ எனில்: (உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமன்) கைம்மாறு கருதாது ரக்ஷிக்கும் உத்தம னாகவன்றோ அவனுளன் என்கிறார். தன் நன்மையையே கருதி காரியம் செய்பவன் அதமன்; தனக்கும் பிறர்க்கும் நன்மையெண்ணிச் செயல்புரியு மவன் மத்யமன்; பிறர் நன்மையையே எண்ணி உதவுமவன் உத்தமன். "ஓங்கி உலகளந்த உத்தமனன்றோ இவன். ஸ்வதந்திரனாகையாலே, இது வரையில் நிர்ஹேதுகமாக ரக்ஷித்தபோதிலும், இனி என் செய்யப்புகுகிறானோ என்னில். (உத்தமன் என்று முளன் கண்டாய்) இதுக்கு முன்பு இவ்வுலகத்தில் நிர்ஹேதுகமாக ரக்ஷித்தது போலே, இனி அவ்வுலகிலும் கைம்மாறு கரு தாது தன் அனுபவத்தைக்கொடுத்து ரக்ஷிப்பவன். அவன் ரக்ஷகனாவதற்கு இத்தலையில் யோக்யதை கனக்க வேண்டுமோ? என்னில்: (உள்ளுவார் உள் ளத்து உளன் கண்டாய்) ப்ராஸங்கிகமாக பகவத்விஷயத்தைப் பற்றி நினைவு வந்தால், 'நினைக்கமாட்டேன்' என்று ஆணையிடாமல், நினைக்க இசைவாருடைய நெஞ்சிலே உளன் என்கிறார்; நெஞ்சிலே நினைக்க இசைகையே இவன் ரக்ஷகனாகைக்கு இத்தலையில் வேண்டிய யோக்யதை என்கை. (உள்ளுவார் உள்ளத்து உளன்) "கூடுமனமுடையீர்கள் வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ" [திருப்பல்-4] "போதுவீர் போதுமினோ" [திருப்பாவை-1] என்றனர் பெரியாழ்வாரும், திருமகளாரும். (தன்னொப்பான் ஈசன்) "ந தத்ஸமச் சாப்யதிகச்ச த்ருச்யதே" [ச்வே] "ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாயா" [திருவாய்2-3-2] என்கிறபடியே தனக்குத்தானே உபமானமான ஸர்வேச்வரன். நிர்ஹேதுக ரக்ஷகத்வத்திலே இவனுக்கு இணை வேறெவருமில்லை என்று கருத்து. (ஈசன்) உடையவனாகையாலே உடைமையை ரக்ஷிக்கக் கடமைப்பட்டவன் இவனே என்று உணர்த்துகிறார். (தமியேற்கு என்னொப்பார்க்குத் தாயாயுளன்காண்) உபாயசூன்யனான எனக்கும் என்னை ஒத்திருக்கும் பரமைகாந்திகளுக்கும் ரக்ஷகனாயிருக்கிறான் காண் ஸர்வேச்வரன். (தமியேற்கு) தனிமைப்பட்டவனுக்கு; தனிமைப்பட்டிருக்கை யாவது "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்றாப்போலே தன்னை ரக்ஷிப்பதற்குத் தன் கையில் கைம்முதலின்றியிருக்கை. "அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:" என்கிறபடியே கருணைக்கு ஒப்பற்ற விஷயமாயிருப் பவனுக்கு என்றுமாம். (தாயாயுளன்). ரக்ஷகனாயுளன்; ரக்ஷகத்வமே இவனுக்கு ஸ்வரூபம்-(ஸ்வரூபநிரூபகதர்மம்)- என்று கருத்து. (இமை) இவ்வர்த்தத்தை அறிவாயாக.

87. இமயப் பெருமலைபோ லிந்திரனுர்க்கிட்ட
சமய விருந்துண்டார் காப்பார்—சமயங்கள்
கண்டா னவைகாப்பான் கார்க்கண்டன் நான்முகனேடு
உண்டா னுலகோ டுயிர்.

பதவுரை:— இமயம் பெருமலைபோல்—*பெரிய இமயமலைபோன் றிருக்கும்படி*, இந்திரனுர்க்கு இட்ட—*இந்திரனுக்காகச் சமைத்து வைத்த*, சமயம் விருந்து—*வழக்கமான ஆராதனையை*, உண்டு—*உட்கொண்டபோது, (நேர்ந்த கல்மழையாலாகிய ஆபத்தில் நின்றும்)* ஆர் காப்பார்—*காப்பாற்றினது யார்?* சமயங்கள்—*வைதிக மதங்களை*, கண்டான்—*(ஆதியில்)ஸாக்ஷாத்கரித்தவன்*, ஆர்—*யார்?* அவை காப்பான்—*அவற்றை (நிலைகுலையாதபடி) ரக்ஷிப்பவன்*, ஆர்—*யார்?* கார்க்கண்டன் நான்முகனேடு காப்பான் ஆர்—*சிவனையும் பிரமனையும் (பெரிய ஆபத்துக்களில் நின்றும்) ரக்ஷிப்பவன் யார்?* உலகோடு உயிர் உண்டான் ஆர்—*உலகங்களையும் (உலகங்களிலுள்ள) ஜீவராசிகளையும்(பிரளயத்தில்) உண்டு ரக்ஷித்தவன் யார்? [எல்லாம் எம்பெருமானே யன்றோ.]*

பெரி-அவ:—எண்பத்தேழாம் பாட்டு. (இமைய வித்யாதி) தம்மை யொக்கும் அகிஞ்சனர்க்கிவன் நிர்வாஹகனானபடியைக் காட்டுகிறுர்.

வ்யா:— (சமயவிருந்து) சமயம் பண்ணினவிருந்து (ஆர்காப்பார்) இந்த்ரன் பாதகனாய் வர்ஷிக்கிறபோது எம்பெருமானன்றோ காத்தான். இடையரோ? (சமயவித்யாதி) வைதிக சமயத்தைக் கண்டானும், அவற்றை ரக்ஷிப்பானும், நீலகண்டன், சதுர்முகன், முதலானவர்கள் துரிதங்களைப்போக்குமவனும், இவ்வாத்மாக்களையும் வயிற்றிலே வைத்துப் பரிஹரித்தானும் எம்பெருமானையொழிய மற்றுர்?

திவ்ய-அவ:— "என்னைப்பார்க்குத் தாளுயுளன்" என்று சென்ற பாசுரத்திற் சொன்னபடியே, தன்னையொத்த அகிஞ்சனர்க்கு இவன் உதவும் படியைப் பலபடியாக நிரூபிக்கிறுர்.

வ்யா:— (இமயப் பெருமலைபோல் இந்திரனுர்க்கிட்ட சமய விருந் துண்டு ஆர் காப்பார்) "அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் தயிர் வாவியும் நெய்யளறும்" [பருப்பதம்—பர்வதம்] என்று பெரியாழ்வார் அருளிச்செய்த படியே இந்திரனுக்கென்று வருடந்தோறும் வழக்கமாக ஆயர்கள் சமைத் திடும் இமயமலை போன்ற சோற்றைத்தானே உண்டு, அதனுல் கோபங்

கொண்ட இந்திரனால் வர்ஷிக்கப்பட்ட கல்மழையினின்று இடையர்களைக் காப்பதற்காக ஏழு நாள் கோவர்த்தனகிரியைத் தூக்கிநின்று ரக்ஷித்தவன் யார்? (ஆர் காப்பார்) அநுகூலனான இந்திரனே பிரதிகூலனாய் நின்று கல் மழை பொழிந்தபோது, இடையர்கள் தங்களைத் தாங்களே ரக்ஷித்துக் கொண்டார்களோ, அல்லது எம்பெருமான் அவர்களைக் காப்பாற்றினானோ என்பதை ஆராய்ந்தாலாகாதோ? என்னுப்பார்க்கு இவன் உதவினது இங்குமட்டுமன்று; மற்றும் பல விடங்களிலுமுண்டு என்று காட்டுகிறார் அடுத்தபடியாக: (சமயங்கள் கண்டான் ஆர்) அகிஞ்சனரான அடியார் கடைத் தேறுவதற்காக, "மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி" [ர–ஸ்த 2–1] [கருணைக்கடலான ஸர்வேச்வரன் வேதத்தை விளக்கைப்போலே தருகிறான்] என்கிறபடியே வைதிகமதத்தை ஸாக்ஷாத்கரித்து இவ்வுலகில் பரவச்செய்த வன் யார்? (சமயங்கள்) 'சமயம்' என்னுமல் சமயங்கள் என்று பன்மையா கச் சொல்லுவானேன்? என்னில், ஐச்வர்ய கைவல்ய பகவத்ப்ராப்திகள் என்று பலவகையான ப்ராப்யங்களையும், பக்தி, ப்ரபத்தி, திருநாமஸங்கீர்த்தனம் முத லான பலவகை ப்ராபகங்களையும் வைதிகமதமானது காட்டுகையாலே அதைப் பல மதங்களின் ஸமுதாயமாகவும் சொல்லலாம். ஆகையாலே சமயங்கள் என் கிறார். அகிஞ்சனர்க்கு உதவுவதை விவரிக்கும் பிரகரணமாகையாலே புறச்சம யங்களை இங்கு சொல்லுவதாகக் கொள்ளுவது பொருந்தாது. "அறமுயல் ஞானச்சமயிகள்" [திருவிருத்தம்] என்று நம்மாழ்வாரும் வித்யாபேதத்தாலே பலவகைப்பட்டிருக்கும் பக்தியோகநிஷ்டர்களை 'சமயிகள்' என்று பன்மையா கப்பேசினாரன்றோ. (அவை காப்பானார்) அந்த மதங்கள் நிலைகுலையாதபடி அவற்றை ரக்ஷிப்பவனார்? இதுவும் அகிஞ்சனரான அடியாரை ரக்ஷிப்பதற்குச் செய்தது. (கார்க்கண்டன் நான்முகனோடு காப்பானார்) ப்ரஹ்மருத்ரர்களும், ராவணாதியராலே துன்புற்று அகிஞ்சனராய் அடையும்போது அவர்களுடைய துன்பத்தைத் துடைப்பவன் யார்? அன்றிக்கே, (கார்க்கண்டன் நான்முக னோடு உண்டான் உலகோடுயிர்) என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம். அதிகமான ஞானசக்திகளையுடைய ப்ரஹ்மருத்ரர்களோடு, மற்றுள்ள ஜீவர் களோடு வாசியற ப்ரளயாபத்திலேயகப்பட்டு கதியற்றுத் திரியும்போது அவர் களை வயிற்றிலே வைத்து ரக்ஷிப்பவனும் இவனேயென்கிறார். "எல்லாரு மறியாரோ எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவரல்லாதார், தாமுளரே' [பெரியதிரு11–6–2] என்றார் மங்கைமன்னனும். (உலகோடு உயிர் உண்டா னார்) உயிர்களையும், அவற்றிற்கு உறைவிடமான உலகங்களையும் வயிற்றிலே வைத்து ரக்ஷித்தவன் ஆர்? இப் பாசுரத்தை அடியொற்றியே ஆளவந்தார்,

"கஸ்யோதரே ஹரவிரிஞ்சிமுக: ப்ரபஞ்ச:"

[யாருடைய திருவயிற்றிலே ப்ரஹ்மருத்ரர்களை முன்னிட்ட உலகம் ஒடுங் கிற்று] என்றும்,

"வேதாபஹார குருபாதக தைத்யபீடாத்-
யாபத் விமோசந மஹிஷ்ட பலப்ரதாநை:।
கோ'ந்ய: ப்ரஜாபசுபதீ பரிபாதி"

[வேதாபஹாரம், (தந்தை தலையைக் கிள்ளிய) பெரும்பாவம், அசுரபீடை முதலான ஆபத்துக்களை அகற்றி, பெரும்பலன்களைத் தந்து ப்ரஹ்மருத்ரர்களை ரக்ஷிப்பவன் யார்?] என்றும் ஸ்தோத்ரரத்னத்திலே அருளிச்செய்தாரென்பது ஸ்பஷ்டம்.

88. உயிர்கொண் டுடலொழிய வோடும்போ தோடி
அயர்வென்ற தீர்ப்பான்பேர் பாடி—செயல்தீரச்
சிந்தித்து வாழ்வாரே வாழ்வார் சிறுசமயப்
பந்தனையார் வாழ்வேல் பழுது.

பதவுரை:— உடல் ஒழிய—*சரீரத்தைப் போட்டு விட்டு,* உயிர் கொண்டு—*ப்ராணனைப் பிடித்துக்கொண்டு,* ஓடும்போது—(*இவ்வாத்மா*) *ஓடும்போது,* ஓடி—(*எம்பெருமானாகிய தானே*)*ஓடிச்சென்று,* அயர்வு என்ற—*கஷ்டமென்று சொல்லப்படுகிற எல்லாவற்றையும்,* தீர்ப்பான்—*தீர்க்குமவனான எம்பெருமானுடைய,* பேர்—*திருநாமங்களை,* பாடி—*வாய்விட்டுப்பாடி,* செயல் தீர—*பேற்றுக்காக நாம் செய்யவேண்டிய செயல் [ப்ரவ்ருத்தி] ஒன்றுமில்லையென்று,* சிந்தித்து—*ஸ்வரூபத்தை யுணர்ந்து,* வாழ்வாரே—*வாழுகின்றவர்களே,* வாழ்வார்—*வாழ்ச்சி பெறுவர்;* சிறு சமயம் பந்தனையார்—*அற்பங்களாய் பல நியமங்களோடு கூடினவையாய் ஸம்ஸாரபந்தத்திற்கே காரணமாகவுள்ளவையான உபாயங்களைப்பற்றினவர்களுடைய,* வாழ்வு ஏல்—*வாழ்ச்சியோ வென்றால்,* பழுது—*உபயோகமற்றது.*

பெரி-அவ:—எண்பத்தெட்டாம் பாட்டு. (உயிர்) இப்பாட்டிலும் அவ்வர்த்தத்தையே விஸ்தரிக்கிறார்.

வ்யா:—(உயிரித்யாதி)இவ்வாத்மா சரீரத்தைப் போகட்டு ப்ராணனைக் கொண்டு யமபடராலே ப்ரேரிதமாய்ப் போம்போது. (ஓடியித்யாதி) ஆச்ரிதரானவர்களை ஆளிட்டுந் தொழாதே தானேயோடி அவர்கள் தர்சனத்தாலே வந்த அறிவுகேடு முதலான துரிதங்களையெல்லாம் போக்குமவன் திருநாமத்தை ப்ரியத்தோடே சொல்லி, 'இவ்வாத்மா செய்யக்கடவதொன்றுமில்லை; எம்பெருமானே நிர்வாஹகன்' என்றிருக்குமவர்கள் வாழ்வார். (சிறு சமயமித்யாதி) துக்கஹேதுவாய், அஹங்காரசர்ப்பமாகையாலே பந்தகமாய், க்ஷுத்ரமான கர்மாத்யுபாய பேதங்களைப் பற்றினார்க்கொரு ப்ரயோஜனமில்லை.

திவ்ய-அ:—அகிஞ்சனரான அடியார்க்கு இவன் செய்யும் உதவிகளை இப்பாட்டிலும் தொடர்ந்து விவரிக்கிறார்.

வ்யா:— (உயிர்கொண்டு உடலொழிய ஓடும்போது) இவ்வாத்மா சரீரத்தை விட்டு ப்ராணனைப் பற்றிக்கொண்டு யமதூதர்களாலே தூண்டப்பட்டுப் போகும்போது. (ஓடி) அடியார்கள் அல்லலுறுவதைக் கண்டிருப்பான் ஒருவனன்றே. ஆளிட்டு அந்தி தொழுவதுபோலே, தன் கிங்கரர்களை அனுப்பி ரக்ஷித்தாலும் திருவுள்ளம் ஆறுதலடையாதே. [ஆளிட்டு அந்தி தொழுவதாவது:—அசக்தராயிருப்பவர்கள், தமக்கு பதிலாக ஓர் ப்ரதிநிதியை நியமித்து ஸந்த்யாவந்தனம் செய்கை.] ஆகையாலே தானே ஓடிச்சென்று அடியாரல்லல் தவிர்க்கிறபடி. (ஓடி) "பகவதஸ் த்வராயை நம:" [ர—ஸ் த—2] [பகவானுடைய வேகத்துக்கு நமஸ்காரம்] என்று அடியார் ஈடுபடுவதொன்றன்றோ இவனுடைய ஓட்டம். (அயர்வென்ற தீர்ப்பான்) யமதூதர்களுக்கு வசப்பட்டு இவன்பட்ட துன்பங்களையெல்லாம் ஒன்றொழியாமல் தீர்ப்பவன். அவர்களைக் காண்பதாலே பயந்து நடுங்கி அறிவிழப்பது, அவர்களால் தேஹத்தை விட்டு வெளிவரும்படி பற்றியிழுக்கப்படுவது முதலான துன்பங்களையெல்லாம் போக்குமவன். (அயர்வென்ற) உண்மையில் யமபடர்களுக்கு வசப்பட்டு இவன் அனுபவிக்கும் துன்பமே துன்பமெனும் பெயருக்குப் பொருந்தியது; மற்ற துன்பங்களெல்லாம், இதற்கொப்பிடும்போது இன்பமேயாகும் என்று கருத்து. (தீர்ப்பான் பேர்பாடி) துன்பம் துடைத்தவனின் திருநாமத்தை வாயாரச் சொல்லி. (செயல் தீரச் சிந்தித்து வாழ்வாரே வாழ்வார்) ஸாதனமாகச் செய்யும் செயல்கள் தீர்ந்தொழியும்படியாக அவனையே உபாயமாக நினைத்து வாழுமவர்களே உண்மையில் வாழ்ச்சிபெற்றவர்கள். (செயல் தீரச் சிந்தித்து வாழ்வார்) "தன் துன்பங்களைத் துடைக்கவும், பேரின்பமடையவும் தன்னால் செய்யக்கூடியதொன்றுமில்லை; யமபடரிடம் அகப்பட்டுச் செய்வதறியாமல் துன்புறும்போது தானே ஓடிச்சென்று ரக்ஷிக்கும் அவனே உபாயம்" என்று நினைத்திருப்பவர்கள். "கடைத்தலையிருந்து வாழும் சோம்பர்" என்று தொண்டரடிப்பொடிகளால் சொல்லப்பட்டவர்கள்.

அகிஞ்சனருடைய பெருமை சொன்னார் கீழ்; ஸகிஞ்சனருடைய சிறுமை சொல்லுகிறார் மேல்:—(சிறு சமயப் பந்தனையார் வாழ்வேல் பழுது) "ஜன்மாந்தரஸஹஸ்ரேஷு" என்கிறபடியே அரும்பாடுபட்டு ஸாதிக்க வேண்டுமவையாகையாலும், இவனுடைய அத்யந்த பரதந்திர ஸ்வரூபத்துக்கு மாறுபட்டு அஹங்காரகர்ப்பமாயுள்ளதாகையாலும், இவனை ஸம்ஸாரத்திலேயே நெடுநாள் கட்டிவைப்பவையாய், தாழ்ந்தவையான கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்னும் உபாயங்களைப் பற்றினவர்களுக்கு ஒரு பயனுமில்லை. (சிறு சமயம்) "பராயணம் நாராயணம்" [நாராயண ஸூக்தம்] [மேலான

உபாயமாயிருக்கும் நாராயணன்] என்னும் அவனைப்போலன்றியே தாழ்ந்த உபாயங்கள். (சமயப் பந்தனை) "நெறிகாட்டி நீக்குதியோ" [பெரியதிருவ-6] என்கிறபடியே மோக்ஷோபாயமென்று பேராய், உண்மையில் இவனை பகவத் விஷயத்திலிருந்து நெடுங்காலம் நீக்கிவைத்து, ஸம்ஸார பந்தத்திற்கே உபாயங்களாகின்றன அவை என்று கருத்து. (வாழ்வேல் பழுது)ஆராய்ந்து பார்த்தால் அவர்களுக்கு அவ்வுபாயங்களால் வருவது ஒரு பயனுமில்லை என்று பாவம். (சமயம்) ஒவ்வொரு மனிதனுக்கும், அவனவனுடைய ருசிக்குத்தக்கவாறு வ்யவஸ்தை—(பாகுபாடு)—செய்யப்பட்டிருக்கையாலே, உபாயங்களை 'சமயம்' என்கிறார். "செயல்தீரச் சிந்தித்து வாழ்வார்" என்று எடுக்கப்பட்ட நிவ்ருத்தி நிஷ்டருக்கு எதிர்த்தட்டாக எடுக்கப்பட்ட "சிறுசமயப் பந்தனையார்" பரவ்ருத்திதர்மமாகிற உபாயாந்தரங்களிலே நிஷ்டரானவர்கள் என்று பொருள்கொள்வதே பொருத்தமுள்ளதாகையால், புறச்சமயிகளைச் சொல்லுவதாகப் பொருள் கொள்ளுவது அவ்வரஸம். மேலும், பரோபதேசம்செய்து புறச்சமயிகளையெல்லாம் பகவத்பரர்களாகத் திருத்தியபிறகு அவர்களை நிந்திக்கவேண்டிய அவசியமுமில்லை. (சிறு சமயப் பந்தனையார் வாழ்வேல் பழுது) "அந்வய வ்யதிரேகங்களாலே இவற்றுக்கு உபாயத்வம் முதலிலே 'இல்லையென்று உள்ளபடி உணர்ந்திருக்கும் ஜ்ஞாநிநாமக்ரேஸரராகையாலே ,பந்தனையார் வாழ்வேற் பழுது' என்று அவற்றில் ஒரு சரக்கற அருளிச்செய்கிறார்—" என்று அப்பிள்ளையுரை. அந்வயவ்யதிரேகங்களாலே உபாயத்வமில்லையென்று அறிகையாவது:— கர்மயோகம் முதலியவற்றை உடையார்க்கும், பகவான் பிரீதியடையாதபோது மோக்ஷமில்லையென்று காண்கையாலும், கர்மயோகாதிகளில்லாத க்ஷத்ரபந்து, கண்டாகர்ணன் முதலானோர்க்கு மோக்ஷமுண்டாவதைக் காண்கையாலும் இவற்றுக்கு உபாயத்வமில்லையென்று அறிகை.

89. பழுதாகா தொன்றறிந்தேன் பாற்கடலான்பாதம்
வழுவா வகைநினைந்து வைகல்—தொழுவாரை
கண்டிறைஞ்சி வாழ்வார் கலந்த வினைகெடுத்து
விண்டிறந்து வீற்றிருப்பார் மிக்கு.

பதவுரை:—பழுது ஆகாது ஒன்று — பழுதுபடாத [சிறந்த] ஒரு பாயத்தை, அறிந்தேன்—தெரிந்து கொண்டேன்; (அது என்னவென்றால், கேண்மின்:) பால் கடலான் பாதம்—க்ஷீராப்தி நாதனுடைய திருவடிகளை, வழுவா வகை நினைந்து—தப்பாதபடி அநுஸந்தித்து, தொழுவாரை—எப்போதும் வணங்குமவர்களை, கண்டு—(சென்று) தரிசித்து, இறைஞ்சி-வணங்கி, வாழ்வார்-வாழ்பவர்கள் [பாகவத பக்தர்கள்,] கலந்த வினை கெடுத்து— ஆத்மாவோடு சேர்ந்த தீவினைகளைத்

தொலைத்து, விண் திறந்து—பரமபதவாசலைத் திறந்து, மிக்கு—சிறப்புடனே, வீற்றிருப்பார்—எழுந்தருளியிருக்கப் பெறுவர்.

பெரி-வ்யா:—எண்பத்தோன்பதாம் பாட்டு. (பழுதாகாது) பழுதாகாத உபாயங்களில் உத்க்ருஷ்டமான உபாயம். (ஒன்றறிந்தேன்) பாகவத ஸமாச்ரயண மென்றறிந்தேன். (கலந்தவித்யாதி) ஆத்மாவோடு அவிநாபூதமான பாபத்தைப் போக்கி ஸ்ரீவைகுண்டத்தில் வாசல்திறந்து அங்கே அதிஸம்ருத்தமான ஜ்ஞானபக்திகளையுடையராய் பகவத் கைங்கர்யத்தில் தலைவரான நித்யஸூரிகளுக்கு அடிமைசெய்யப்பெறுவார்கள்.

திவ்ய-அவ:—இப்படி கர்மயோகம் முதலிய உபாயங்களைப்போல் நிஷ்ப்ரயோஜநமாயிருக்கையன்றிக்கே, பழுதற்ற உபாயம் உண்டோ என்னில் பகவத்ஸமாச்ரயணமும், பாகவத ஸமாச்ரயணமும் பழுதற்ற உபாயங்கள். அவயிரண்டினுள்ளும் பாகவத ஸமாச்ரயணமே உயர்ந்தது என்கிறார்.

வ்யா.—(பழுதாகாதொன்றறிந்தேன்) வீணாகாத உபாயங்களில் உயர்ந்ததொன்றை அறிந்தேன். வீணாகாத உபாயங்களாவன:—1. பகவானை உபாயமாகப் பற்றுகை. 2. பாகவதர்களை உபாயமாகப் பற்றுகை. 3. பாகவதர்களின் அபிமானத்தின் கீழ் ஒதுங்கியிருக்கை. இவை மூன்றும் உத்தரோத்தரம் உத்க்ருஷ்டமானவை. இவற்றுள் இரண்டாமதான பாகவத ஸமாச்ரயணத்தை இப்பாசுரத்திலும், முதலதான பகவத்ஸமாச்ரயணத்தையும், மூன்றுமதான பாகவதாபிமான நிஷ்டையையும் அடுத்த பாசுரத்திலும் அருளிச்செய்கிறார். அப்பழுதாகாத உபாயம்தான் என்னென்னில்: (பாற்கடலான் பாதம்) போகபூமியான பரமபதத்தைவிட்டு, ஆச்ரயிப்பாரைப் பெறுவதற்காகப் பாற்கடலிலே பள்ளிகொண்டருளுமவனுடைய திருவடிகளை. (வழுவா வகைநினைந்து) தப்பாத முறையிலே அநுஸந்தித்து. அதாவது,—அதையே ப்ராப்யப்ராபகங்களாக நினைத்து. கற்பகவ்ருக்ஷத்திடம் சென்று கௌபீநபிக்ஷை கேட்பாரைப்போலே மோக்ஷப்ரதமான ஸர்வேச்வரனுடைய திருவடிகளையடைந்து, ப்ரயோஜனாந்தரங்களைப் பிச்சை கேட்கை தப்பான முறையன்றோ. அப்படியல்லாமல், அத்திருவடிகளையே மோக்ஷோபாயமாக நினைத்து. (வைகல் தொழுவாரை) விஷயத்தின் இனிமை ஒருநாள் தொழுதவுடன் தினந்தோறும் தொழச் செய்துவிடுமன்றோ. (தொழுவாரைக்கண்டு) பகவத்பக்தர்களைத் தாமே தேடிச்சென்று கண்டு. இத்தால் அடுத்த பாசுரத்தில் சொல்லப்படும் விலக்ஷணாதிகாரிகளுக்கும், இவர்களுக்குமுள்ள வாசி உணர்த்தப்படுகிறது. "ப்ரஜாபதிம் த்வோ வேத" என்றாற்போலே, தாமே சென்று பாகவதர்களைப் பற்றுமவர்கள் இவர்கள். பாகவதர்களுடைய அபிமானத்துக்கு விஷயமாயிருப்பவர்கள் அவர்கள். (கண்டு இறைஞ்சி வாழ்வார்)

பகவத் பக்தர்களைக் கண்ணாரக்கண்டு, வாயாரத்துதித்து வாழ்ச்சிபெற்றவர்கள்; (கலந்த வினை கெடுத்து விண்ண திறந்து வீற்றிருப்பார் மிக்கு) ஆத்மாவோடு இரண்டறக் கலந்துநிற்பதோ என்னும்படியாக ஒன்றிநிற்கும் பாபங்களைப் போக்கி, ஸ்ரீவைகுண்டத்தில் திருவாசல் திறக்கப்பெற்று, அங்கே மிகவதிக மான ஜ்ஞானபக்திகளை உடையவர்களாய் பகவத் கைங்கர்யம் செய்வாரில் தலைவரான நித்யஸூரிகளுக்கு அடிமை செய்யப்பெறுவர். (மிக்கு வீற்றிருப்பர்) ஞானபக்திகள் மிகுந்தவராய் வீற்றிருப்பர். (வீற்றிருப்பர்) வீறு தோற்ற இருப்பர். பகவத் கைங்கர்யம் செய்யும் நித்யஸூரிகளிலும் தங்களுடைய ஆதிக்யம் தோற்றும்படி பரமப்ராப்யரான பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்யப்பெறுவர்.

90. வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார் வேங்கடத்தான்
பால்திருந்த வைத்தாரே பன்மலர்கள்—மேல்திருந்த
வாழ்வார் வருமதிபார்த் தன்பினராய் மற்றவற்கே
தாழ்வா யிருப்பார் தமர்.

பதவுரை:—வீற்றிருந்து—பெருமைவிளங்க (இவ்வுலகில்) இருந்து விண்—பரமபதத்தை, ஆள வேண்டுவோர்—ஆட்சிசெய்ய விரும்பியிருப்பார், வேங்கடத்தான் பால்—திருவேங்கடமுடையான் பக்கலில் பல் மலர்கள்—பலவகைப்பட்ட மலர்களை, திருந்த—நன்றாக, வைத்தாரே—ஸமர்ப்பித்தவர்களேயாவர்; வரும் மதி பார்த்து—(எம்பெருமானுடைய திருவுள்ளத்தில்) ஓடுகின்ற கருத்தையறிந்து, அன்பினர் ஆய்—பக்தியையுடையவர்களாய், மற்றவற்கே—அந்த எம்பெருமானுக்கே, தாழ்வு ஆய் இருப்பர்—அடிமைப்பட்டிருப்பவர்களாலே, தமர்—அபிமானிக்கப்பட்டவர்கள், மேல் திருந்த வாழ்வார்—முன்னடிகளிற் சொல்லப்பட்டவர்களிற் காட்டிலும் விலக்ஷணராக வாழ்பவராம்.

பெரி—வ்யா:—தொண்ணூறும் பாட்டு. (வீற்றிருந்தித்யாதி) விலக்ஷணமான பகவத்கைங்கர்யத்திலே அதிகரித்து ஸ்ரீவைகுண்டத்திலுள்ளார்க்கும் அப்படியே வர்த்திக்க வேண்டியிருக்கப்பெற்றவர்கள் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே நிரந்தரமாகவே ஆச்ரயித்தவர்கள். அதிலும் விலக்ஷணமான பாகவதப்ராப்தி காமராய், அது பெற்றவர்கள் பாகவதராலே அங்கீக்ருதரானவர்களென்கிறார். (வருமதியித்யாதி) எம்பெருமான் திருவுள்ளத்திலே செல்லுவன அறிந்து அதுக்கீடான அடிமைகளிலே ஸ்நேஹித்து, அவன்பக்கல் ப்ரவணரானவர்களாலே விஷயீக்ருதரானவர்கள்.

திவ்ய-அவ:—''பழுதாகாதொன்றறிந்தேன்'' என்று பழுதாகாத உபாயங்களில் ஒன்றாகிய பாகவதஸமாச்ரயணத்தைச் சொன்னார் கீழ்ப் பாசுரத்தில்; பழுதாகாத உபாயங்கள் மற்றுமுள்ளவற்றையும் அருளிச் செய்யலாகாதோ என்ன, ''பகவத்ஸமாச்ரயணமும், பாகவதாபிமான நிஷ்டையையும் மற்றுமுள்ள பழுதாகாத உபாயங்கள்; அவற்றிலே பாகவதாபிமான நிஷ்டையாகிய சரமோபாயத்தைக் கைக்கொண்டவர் மிகவும் விலக்ஷணராவர் என்கிறார் இப்பாசுரத்தில். '''பழுதாகாதொன்றறிந்தேன்' என்கிற பாட்டை பூர்வோபாயத்துக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது; 'நல்லவென் தோழீ'[நாச்—திரு]'மாறாய தானவனை' [நான்—திருவ-18] என்கிற பாட்டுக்களையும், ஸ்தோத்ரத்தில் முடிந்த ச்லோகத்தையும், 'பசுர் மநுஷ்ய:' என்கிற ச்லோகத்தையும், இதுக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது'' என்ற ஸ்ரீவசநபூஷண ஸூத்ரங்களும், அவ்விடத்து வியாக்கியானங்களும் இங்கு அநுஸந்திக்கத்தக்கவை. பாகவத விஷயத்தில் ஸ்வகத ஸ்வீகாரம்—[தானே பற்றுகை]—சென்ற பாசுரத்தில் சொல்லப்பட்டது;பாகவத விஷயத்தில் பரகதஸ்வீகாரம் சென்ற பதினெட்டாம் பாசுரத்திலும், இப்பாசுரத்திலும் சொல்லப்படுகிறது. பகவத்விஷயத்திற்போலவே, பாகவத விஷயத்திலும் ஸ்வகத ஸ்வீகாரம், பரகதஸ்வீகாரம் என்னும் இரண்டுமுண்டு என்பதும், இரண்டும் பழுதாகாத உபாயங்களென்பதும்,

''குருணா யோऽபி மந்யேத குரும் வா யோபி மந்யதே ।
தாவுபௌ பரமாம் ஸித்திம் நியமாதுபகச்சத: ॥''

[குருவினால் எவன் அபிமானிக்கப்படுகிறானோ, குருவை எவன் அபிமானிக்கிறானோ, அவர்களிருவரும் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தைத் தப்பாமல் அடைகின்றனர்]என்று பாரத்வாஜஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டதன்றோ

வ்யா:—(வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார்)வீறுதோற்ற பகவத் கைங்கர்ய நிஷ்டராயிருந்து, பரமபதத்திலுள்ளாரும் தங்களுக்குக் கைங்கர்யம் செய்யும்படியானபடியான பலனைப்பெற விரும்பியிருப்பார். (வேங்கடத்தான் பால் திருந்த வைத்தாரே பன்மலர்கள்) எளியவர்க்கு முகங்கொடுத்து அவர்களை உய்விப்பதற்காகத் திருவேங்கடமலையிலே எழுந்தருளியிருப்பவனிடத்திலே சாஸ்திரோக்த முறை தப்பாதபடி பலவிதமான மலர்களை இட்டு அர்ச்சித்தவர்களேயாவர். பகவத் கைங்கர்யம் செய்தவர்கள், பரமபதத்திலும் பகவத் கைங்கர்யம் செய்யப்பெறுவர் என்கை. இந்த பகவத் ஸமாச்ரயணத்திலும் மிகவுயர்ந்தது பாகவதாபிமான நிஷ்டை என்று அருளிச்செய்கிறார் அடுத்தபடியாக — (வருமதிபார்த்து) ''யேந யேந தாதா கச்சதி தேந தேந ஸஹ கச்சதி'' [எப்படியெப்படியெல்லாம் ஸர்வேச்வரன் நினைக்கிறானோ அப்படியப்படியெல்லாம் இவனும் நினைக்கிறான்.] என்கிறபடியே ஸர்வேச்வன் திருவுள்ளத்தில் நினைக்கிறவற்றை முன்கூட்டியே அறிந்து. (அன்பினராய்

மற்றவற்கே தாழ்வாயிருப்பார்) அதுக்குத் தகுந்த கைங்கர்யங்களிலே அன்பு செய்து, அந்த பகவானுக்கு அடிமைப்பட்டிருப்பவர்கள். (தாழ்வாயிருப்பார் தமர் மேல் திருந்தவாழ்வார்) பகவத்பக்தர்களாலே 'நம்முடையான்' என்று அபிமானிக்கப்பட்டவர்கள், பகவத் ப்ராப்தியிலும் உயர்ந்ததான பாகவத கைங்கர்யத்தைப்பெற்று போனந்தத்துடன் வாழப்பெறுவர் என்கிறார். பாகவதாபிமான நிஷ்டர் பாகவத கைங்கர்யத்தைப் பெறுவர் என்கை. யதோபாஸநம் பலம் என்னும் தத்க்ரதுந்யாயத்தை அனுஸந்திப்பது.

91. தமராவார் யாவர்க்கும் தாமரை மேலாற்கும்
அமரர்க்கும் ஆடரவார்த்தாற்கும்—அமரர்கள்
தாள் தாமரை மலர்களிட்டிறைஞ்சி மால்வண்ணன்
தாள் தாமரை யடைவோ மென்று

பதவுரை:— மால் வண்ணன்— கரியமேனியனை எம்பெருமானுடைய, தாள் தாமரை—திருவடித் தாமரைகளில், மலர்கள் இட்டு—புஷ்பங்களை ஸமர்ப்பித்து, இறைஞ்சி—வணங்கி, தாள் தாமரை அடைவோம் என்று— அத்திருவடித் தாமரைகளையடைவோமென்று, தமர் ஆவார்—பக்தராயிருக்குமவர்கள், தாமரை மேலாற்கும்— திருநாபிக் கமலத்திற் பிறந்த பிரமனுக்கும், ஆடு அரவு ஆர்த்தாற்கும்—ஆடுகின்ற ஸர்ப்பங்களை (உடம்பிலே) கட்டிக் கொண்டிருக்கும் சிவனுக்கும், அமரர்க்கும்—நித்யஸூரிகளுக்கும், யாவர்க்கும்—மற்றுமெல்லார்க்கும், அமரர்கள்—தேவதைகளாவர்.

பெரி-வ்யா:—தொண்ணூற்றோராம் பாட்டு. (தமரித்யாதி) "தாள் தாமரை மலர்களிட்டிறைஞ்சி, மால்வண்ணன் தாள்தாமரை அடைவோமென்று தமராவர்யாவர்க்கும் தாமரைமேலாற்கும் அமரர்க்கும் ஆடரவார்த்தாற்கும் அமரர்கள்" என்றந்வயம். அமரர்கள்—நித்யஸூரிகள், மால் வண்ணன்—க்ருஷ்ணன்.

திவ்ய-அவ:— இம்மூன்றுவிதமான அதிகாரிகளுக்கும் பகவத்பக்தி பொதுவானதென்றும், அவர்கள் உபயவிபூதியிலுள்ளார் அனைவரிலும் உயர்ந்தவர்களென்றும் அருளிச்செய்கிறார்.

வ்யா:—(தாள் தாமரை மலர்கள் இட்டு) எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளிலே இன்ன பூ என்னுமல் கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியும் ஆம்பலும் முதலிய பூக்களை இட்டு. "புரிவதுவும்

புகை பூவே" [திருவாய்1–6–1] என்கிறபடியே எம்பெருமானுக்கு ஆகாத பூவில்லை என்றபடி. அன்றிக்கே, உயர்ந்த திருவடிகளுக்குத் தக்கவாறு உயர்ந்த தாமரைமலர்களை இட்டு என்றும் பொருள் கொள்ளலாம். இது காயிகமான வ்யாபாரம். (இறைஞ்சி)வாயாரத் துதித்து. வாசிகமான செயல். (மால் வண்ணன் தாள் தாமரையடைவோம் என்று தமராவார்) நீலவண்ணனை எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளை அடையவேணுமென்று நெஞ்சிலே நினைந்து அவனுக்கு ஆட்பட்டிருக்குமவர்கள். (அடைவோமென்று தமராவார்) மானஸமான அநுஸந்தானம். (தமராவார்) மநோவாக்காயங்களாகிற முக்கரணங்களாலும் மால்வண்ணனுக்கு அடிமைப்பட்டிருக்குமவர்கள். (தாமரை மேலாற்கும்) எல்லாவுலகுக்கும் உற்பத்திஸ்தானமான உந்தித்தாமரையின் மேலிருந்துகொண்டு உலகையெல்லாம் படைத்தவனுக்கும். (ஆடவார்த்தாற்கும்) ஆடும்படியான பாம்பை ஆபரணமாகத் தன் உடம்பில் கட்டிக்கொண்டவனான ஸம்ஹாரமூர்த்தியான ருத்ரனுக்கும், (யாவர்க்கும்) இவ்வுலகில் மற்றுமுள்ள இந்த்ரன், சந்த்ரன் முதலான தேவர்கள் மனுஷ்யர்கள் முதலான அனைவர்க்கும். இத்தால் லீலாவிபூதி முழுவதும் சொல்லப்பட்டது. (அமரர்க்கள்) உபயவிபூதியிலுள்ளாரிலும் உயர்ந்தவர்கள். (அமரர்கள்) தேவதைகள்; பூஜ்யர்கள். "சிதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" [திருவிரு–79] "தேவர்வைகல் தீர்த்தங்களேயென்று பூசித்து நல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே" [திருவாய் 7–10–11] என்றார் நம்மாழ்வாரும்.

92. என்று மறந்தறியேன் என்னெஞ்சத்தே வைத்து
நின்று மிருந்தும் நெடுமாலை—என்றும்
திருவிருந்த மார்பன் சீரிதரனுக் காளாய்
கருவிருந்த நாள்முதலாக் காப்பு.

பதவுரை:— கரு இருந்தநாள் முதலா—(நான்) கர்ப்பத்திலிருந்த நாள் தொடங்கி, காப்பு—(எம்பெருமானாலே) ரக்ஷைபெற்றவனுகை யாலே, திரு என்றும் இருந்த மார்வன் சிரீதரனுக்கு— பிராட்டி நித்யவாஸம் பண்ணப்பெற்ற திருமார்வையுடைய அந்தத்திருமாலுக்கு ஆள் ஆய்—ஆட்பட்டவனாய், நெடு மாலை—(அந்த)ஸர்வேச்வரனை, என் நெஞ்சத்து — என்னுடைய ஹ்ருதயத்திலே, வைத்து— நிலைநிறுத்தி, நின்றும் இருந்தும் என்றும்—நிற்றல் இருத்தல் முதலிய எல்லா நிலைமைகளிலும், மறந்தறியேன்— மறவாமல் (அவனையே) நினைப்பவனாயிருக்கிறேன்.

பெரி-வ்யா:— தொண்ணூற்றிரண்டாம் பாட்டு. (என்றுமித்யாதி) கர்ப்பத்திலே இருந்தநாள் தொடங்கி எம்பெருமான் என்னை நோக்கிக்

கொண்டு போருகையாலே, என்றும் திருவிருந்தமார்பன் சிரீதரனுக்காளாகவும் பெற்று, வ்யாமுக்தனானவனை என்னெஞ்சிலே வைத்து என்று மோக்க நின்றபோதோடு இருந்தபோதோடு வாசியின்றிக்கே மறந்தறியேனென்கிறார்.

திவ்ய-அவ:—நானும் அவனுடைய தமர்களிலே ஒருவன் என்கிறார்; கர்ப்பத்திலிருந்த நாள் முதல் ஸர்வேச்வரன் என்னை ரக்ஷித்துக்கொண்டு போருகையாலே, எல்லாக்காலத்திலும் நான் அவனை மறந்தறியேன் என்கிறார்.

வ்யா:—(என்றும் மறந்தறியேன் என்னெஞ்சத்தே வைத்து நின்றுமிருந்தும் நெடுமாலை) "என்னில் முன்னம் பாரித்துத்தான் என்னை முற்றப் பருகினான்" [திருவாய் 9-6-10] "அதனிற் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாயோ" [திருவாய் 10-10-10] என்கிறபடியே என்னுடைய காதலிலும் முற்பட்டதாய் பெரியதான காதலையுடைய ஸர்வேச்வரனை என்னெஞ்சிலே வைத்து, நிற்கிறபோதோடு, இருக்கிறபோதோடு வாசியற எல்லாக்காலத்திலும் மறவாமலிருக்கிறேன். (நின்றுமிருந்தும்)

"ஆஸீநா வா ஶயாநா வா திஷ்டந்தோ யத்ர குத்ர வா।
நமோ நாராயணாயேதி மந்த்ரைக ஶரணா வயம்॥" [நாரதீயம்]

[எங்கேயாவது இருந்தபோதோடு, படுத்திருக்கும்போதோடு நின்றபோதோடு வாசியறத் திருமந்திரத்தையே சரணமாகக் கொண்டுள்ளோம் நாங்கள்.] என்றாப்போலே நிற்பதிருப்பது முதலான விடவொண்ணாத காரியங்களைச் செய்யும்போதும் நாராயணதியான பரஞகவேயிருக்கிறேன் என்கை. மறவாமலிருந்தவளவேயோ? என்ன, கைங்கர்யத்திலும் அந்வயிக்கப்பெற்றேன் என்கிறார். (என்றும் திருவிருந்த மார்வன் சிரீதரனுக்காளாய்) "நித்யஸ்ரீ:" [விஷ்ணுஸஹஸ்ரநாமம்] "அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா" [திருவாய்6-10-10] என்கிறபடியே அடியாரை அநுகூலித்த கணத்திலேயே அடிசேர்ப்பிப்பதற்காக அகலகில்லாமல் ஸ்ரீதேவி நித்யவாஸம் செய்யும் ஸ்ரீதரனுக்குக் கைங்கர்யமும் செய்யப்பெற்றேன்.(என்றும் திருவிருந்த மார்வன் சிரீதரன்) மற்றுள்ளாரை ஸ்ரீமான்கள் என்பது மாம்பழத்தோடு ஸம்பந்தலேசமுமற்ற ஐந்துவை 'மாம்பழமுண்ணி' என்பது போலே. இவனே ஸ்ரீதேவியால் நித்யவாஸம் செய்யப்பெற்ற திருமார்பையுடையவனாகையாலே ஸ்ரீதரன் என்றும் அந்வர்த்த நாமம் உடையவனாகிறான். (சிரீதரனுக்காளாய்) "திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்" [திருப்பல்-11] என்கிறபடியே கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநம் என்னுமர்த்தத்தையும் தாம் இப்பெருமைகளைப் பெற்றதுக்கு மூலகாரணம் அவளோடுண்டான ஸம்பந்தம் என்பதையும் உணர்த்துகிறார். மறந்தறியாமைக்கும்,ஆட்செய்கைக்கும் அடியென்னென்னில் (கருவிருந்த நாள் முதலாக் காப்பு) நான் கர்ப்பவாஸம் செய்தபோதிலிருந்து, என்னைக் கடாக்ஷித்து ஸாத்விகனாக்கி அவன் என்னை காப்பாற்றுகையாலே இப்பெருமைகளைப் பெற்றேன் என்கிறார்.

(கருவிருந்த நாள் முதலாக்காப்பு) நான் கர்ப்பத்திலிருந்த நாள் தொடங்கி என்னைக் கடாக்ஷித்து ரக்ஷிக்கையாலே நான் இப்பேறு பெற்றேன்.

"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந:॥
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்தசிந்தக:॥"
[பாரமோக்ஷ]

[பிறக்கும்போதே எவனொருவனை மதுசூதனன் கடாக்ஷிக்கிறானோ அவன் ஸத்வகுணம் நிறைந்தவனாக அறியத்தக்கவன். அவனே மோக்ஷத்தைப்பற்றிச் சிந்திப்பான்.] என்று சொல்லப்பட்டதன்றோ. "கருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்" [6] "கருக்கோட்டியுட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்" [87] என்று பொய்கை பூதத்தாழ்வார்களும் தாங்கள் ஜாயமான கடாக்ஷம் பெற்றுக் கருவிலே திருவுடையரானமையைப் பேசினரன்றோ.

93. காப்பு மறந்தறியேன் கண்ணனே யென்றிருப்பான்
ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும்—ஆக்கை
கொடுத்தளித்த கோனே குணப்பரனே உன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்

பதவுரை:—அங்கு—அந்தப்பிரளய காலத்தில், பல் உயிர்க்கும்—எல்லா ஆத்மாக்களுக்கும், ஆப்பு ஒழியவும்—சரீர இந்திரியக்கட்டு அழிந்துபோயிருந்தாலும், (மறுபடியும்) ஆக்கை கொடுத்து—சரீரங்களைக்கொடுத்து, அளித்த—அருள்செய்த, கோனே—பிரானே! காப்பு—(நீ செய்தருளும்) ரக்ஷையை, மறந் தறியேன்—ஒருநாளும் மறக்கமாட்டேன்; கண்ணனே என்று இருப்பன்— (ப்ராப்யப்ராபகங்கள்) கண்ணனே என்று உறுதிகொண்டிருப்பேன்; குணம்—திருக்குணங்களினால், பரனே—சிறந்த பெருமானே! மெய் தெளிந்தார் தாம்—உள்ளபடி (ஸ்வரூபத்தைத்) தெளிவாக அறிந்தவர்கள், உன்னை விட துணியார்—உன்னை விடமாட்டார்கள்.

பெரி-வ்யா:—தொண்ணூற்றுமூன்றும் பாட்டு. (காப்பித்யாதி) எம்பெருமானுடைய ரக்ஷையை மறந்தறியேன். க்ருஷ்ணனே ப்ராப்யப்ராபகங்களென்றிருப்பன், (ஆப்பித்யாதி) ஸர்வாத்மாக்களுக்கும், கரணகளேபரங்களையிழந்தால் அத்தை மீளவும் கொடுத்து ரக்ஷிக்கைக்குறுப்பான ஸ்வாபாவிகமான சேஷசேஷிபாவமான ஸம்பந்தத்தையுடையவனே! இஸ்ஸம்பந்தத்தை மெய்யாக அறிந்தவர் உன்னைவிடத் துணியாரென்கிறார்.

திவ்ய:—"ஆழ்வீர்! மறந்தறியேன் என்று இறந்தகாலத்தில் நிகழ்ந்ததைச் சொன்னீர்; எதிர்காலத்தில் மறக்கக்கூடுமன்றோ?" என்று ஸர்வேச்வரன் வினவ, "பிரானே! நீ செய்த ரக்ஷையையும், உன் ஸ்வபாவத்தையும் உள்ள படி அறிந்தவர்கள் உன்னை விடுவதும் முடியுமோ?" என்கிறார்.

வ்யா:—(காப்பு மறந்தறியேன்) பிரானே! கர்ப்பத்தில் இருந்தபோது துடங்கி நீ செய்துவரும் ரக்ஷையை மறந்துவிட்டேன் என்று நினைத்தனையோ? நான் தோன்றினவன்று முதல் நீ ரக்ஷகனாயிருக்கும் போது உன்னை நான் மறக்க வழியுண்டோ? ஸாதநாந்தரங்களிலும், விஷயாந்தரங்களிலும் மண்டி மறந்தாலோ? என்னில்;—(கண்ணனே யென்றிருப்பன்) கிருஷ்ணனாய் அவ தரித்த நீயே ப்ராப்யமும் ப்ராபகமும் என்றிருக்கும் நான் ப்ராபகாந்தரப்ராப் யாந்தரங்களில் புக வழியுண்டோ? நீ செய்த உதவிகளையும், உன் குணங் களையும் உள்ளபடி அனுஸந்தித்தால் உன்னை விட முடியுமோ என்கிறார் மேல்:—(ஆப்பங்கொழியவும் பல்லுயிர்க்கும் ஆக்கை கொடுத்தளித்த கோனே) எல்லா ஆத்மாக்களும் சரீரேந்திரியங்களையிழந்து தவிக்கும்போது,அவர்களுக்கு சரீராதிகளைக் கொடுத்து ரக்ஷித்த ஸ்வாமியே! ஆப்பு-இவனை இந்த ஸம்ஸாரத் திலே அகப்பட்டுக்கட்டுண்ணப்பண்ணும் உபகரணமாயிருக்கையாலே 'ஆப்பு' என்று சரீரேந்திரியங்களைச் சொல்லுகிறது. (கோனே) உடையவனாகை யாலே உடைமையை ரக்ஷித்தான் என்று பாவம். (ஆப்பங்கொழியவும்...... கோனே) நீ அடியிலே செய்த உதவியைக் கண்டபின்பு உன்னைவிட்டு அகல முடியுமோ? உன் சேஷித்வம் கண்டபின்பு உன்னைவிட்டு அகலமுடியுமோ? (குணப்பரனே) "உயர்வறவுயர்நலமுடையவன்" [திருவாய்1-1-1] என்கிற படியே குணங்களால் மிகவுயர்ந்திருப்பவனே! உன் குணங்கண்ட பின்பு தான் உன்னை விட்டு நீங்கமுடியுமோ? (உன்னை விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்) உன்னை உள்ளபடி அறிந்தவர்கள் ஒருபோதும் உன்னை விட்டு நீங்க எண்ணமாட்டார்கள். (உன்னை......தாம்) ரக்ஷகனன்றென்று விடுவதோ? உபகாரகனன்றென்று விடுவதோ? குணஹீனனென்று விடுவதோ? வகுத்த வனன்றென்று விடுவதோ? எத்தைச் சொல்லி விடுவது?

94. மெய்தெளிந்தா ரென்செய்யார் வேறானார் நீறாக
கைதெளிந்து காட்டிக் களப்படுத்து—பைதெளிந்த
பாம்பினணையா யருளா யடியேற்கு
வேம்புங் கறியாகுமென்று.

பதவுரை:—வேறு ஆனார்-வேறுபட்டவர்களான [பகைவர்களான] துரியோதநாதிகள், நீறு ஆக—சாம்பலாய் ஒழிந்து போம்படியாக, தெளிந்து—(ஆச்ரித விரோதிகளை அழிப்பது தக்கதே என்று)தேறி

கை காட்டி—(பாண்டவர்களுக்கு) வேண்டிய உதவிகளைச் செய்து, களம் படுத்து—(அந்த எதிரிகளைப்) போர்க்களத்தில் கொன்றொழித்து, (இவ்வகையாலே மண்ணின்பாரம் நீக்கி) தெளிந்த பை பாம்பு இன் அணையாய்—விளங்குகின்ற படங்களையுடைய ஆதிசேஷனாகிற இனிமையான படுக்கையைச் சென்று சேர்ந்த பிரானே! அடியேற்கு—அடியேனுக்கு, அருளாய்—அருள் புரியவேணும்; என்று—வேணுமென்று விரும்பினால், வேம்பும் கறி ஆகும்—வேப்பிலையும் கறியாகச் சமைத்துக்கொள்ளக் கூடியதே; மெய் தெளிந்தார்—உள்ளதை உள்ளபடியறியுமவர்கள், என் செய்யார்—எதுதான் செய்ய முடியாதவர்கள்? [எது நினைத்தாலும் செய்யக் கூடியவர்கள்].

பெரி-அவ:-தொண்ணூற்றுநாலாம் பாட்டு. (மெய்தெளிந்தாரித்யாதி) அத்யந்த ஹேயனாகிலும் என்னை விஷயீகரித்தருளவேணும்; என்னிலுந் தண்ணியாரையு "**यदि वा रावणः स्वयं**"(யதிவா ராவண: ஸ்வயம் என்னும் படியை வஸ்துஸ்திதி அழகியதாக அறியுமவர்களென்றும் விஷயீகரி(க்க)ப் ப(டுமவ)ரென்கிறார்.

வ்யா:—(வேறானரித்யாதி) ஒன்றாய் வாழாதே வேறான-துர்யோதனாதிகள் பஸ்மமாம்படி பரஹிம்ஸையென்று கலங்காதே ஆச்ரித விரோதிகளாகையாலே திருவுள்ளந்தெளிந்து அணிவகுத்து யுத்தகளத்திலே கொண்டு விழவிட்டுப் பின்னும் படுக்கையிலே சாய்ந்தவனே! (பை தெளிந்த) எம்பெருமானுடைய ஸ்பர்சத்தாலே குளிர்ந்த பணங்கள். அவர்கள் தக்கவைவர்; நீ ஹேயரையும் ஏறிட்டுக்கொண்டால் ரக்ஷிக்கலாம். கறியாகக் கொள்ளுவோமென்று அபிமானிக்க வேம்பு கறியாகிறாற்போலே. வஸ்துஸ்திதி அறிவார் எவ்வளவு செய்யார்கள்? "**किमत्र चित्रं धर्मज्ञ**" (கிமத்ரசித்ரந்தர்மஜ்ஞ) இதிவத்.

திவ்ய-அவ:—'நீர் விடாவிடிலும், உம் தோஷங்கண்டு நான் உம்மை விட்டால் என் செய்வீர்?' என்ன, 'எம்பிரானே! உன் ஸ்வரூபத்தை மறந்து பேசுகிறாய்போலும்! சரணாகத ரக்ஷகத்வமே வடிவெடுத்தவனான உன்னை நீ ஆராய்ந்து பார்த்தாயாகில், தோஷமே வடிவெடுத்த என்னை இதுவரை ரக்ஷித்ததோடன்றியில், காலத்வமுள்ளதனையும் ரக்ஷிப்பதும் செய்வாய். ஆரோக்யஹேது என்று அறிந்தால், வேம்பின் இலையும் விரும்பியுண்ணும் கறியாகுமன்றோ. அப்படியே என்னையும் திருவுள்ளம்பற்றவேணும் என்கிறார்.

வ்யா:—(மெய் தெளிந்தார் என் செய்யார்) தமக்கு எது குணத்தை யளிப்பது என்பதை உள்ளபடி அறிந்தவர்கள் எதுதான் செய்யமாட்டார்கள்? பிரானே! தோஷமற்றவனை ரக்ஷித்தால் உனக்குப் பெருமையோ, தோஷம் நிறைந்த என்னைப் போன்றவனை ரக்ஷித்தால் உனக்குப் பெருமையோ, என்பதை உள்ளபடி ஆராய்ந்தால் நீ எனக்கு எந்த ரக்ஷணத்தைத்தான் செய்ய மாட்டாய். அன்றிக்கே, உன்னுடைய சரணாகதரக்ஷகத்வமாகிற ஸ்வரூபத்தை நீ உள்ளபடி ஆராய்ந்தால் நீ எனக்கு எதைத்தான் செய்யமாட்டாய் என்றுமாம். தோஷங்களைக் காணாமல் ரக்ஷிக்குமளவன்றிக்கே, ''யதி வா ராவண: ஸ்வயம்'' [ரா-யு 18-33] என்று ''தோஷமுள்ளவனைக் கிடைக்கப் பெறுவோமோ, அவனையும் ரக்ஷித்தோம் என்னும் புகழ்படைக்கைக்கு?'' என்று ஆசைப்பட்டு தோஷமே ரக்ஷணஹேதுவாக ரக்ஷிக்குமவனன்றோ நீ. 'நான் சரணாகதரக்ஷனென்னுமிடத்தை எங்கே கண்டீர்?'' என்ன, பாண்டவர்களை ரக்ஷித்த செயலிலே கண்டேன் என்கிறார் மேலே;-(வேறானார்) ''த்விஷதந்நம்'' என்கிற படியே, மூவுலகிற்கும் முந்தைத் தந்தையான அவனும் நெஞ்சு கொதித்து 'எதிரிகள்' என்று வாய்விட்டு அருளிச்செய்யும்படி பாண்டவத்வேஷிகளாயிருக்கும் துரியோதனாதியர். (வேறானார் நீறாக) துரியோதனாதியர் ஒரு பிடி சாம்பலாகும்படி. (தெளிந்து கைகாட்டி) 'இவர்களைக் கொல்லவேண்டிவருகிறதே' என்று கலங்காமல், ஆச்ரித விரோதிகள் கொல்லத்தக்கவரே என்று தெளிந்து அணிவகுப்பது முதலான உதவிகளைச் செய்து. (களப்படுத்து) யுத்தகளத்திலே உயிரிழந்து விழச்செய்து. (பைந்தெளிந்த பாம்பின் அணையாய்) அடியாரல்லல் தவிர்த்த அசைவுதீரத் திருப்பள்ளியிலே சாய்ந்தவனே! தன்னோடுண்டான ஸ்பர்சத்தாலே குளிர்ந்திருக்கும் படங்களையுடைய திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தருளினவனே! (அருளாய் அடியேற்கு) ''தக்க ஐவர்'' என்கிறபடியே ஸகிஞ்சனராய், குணவான்களான அவர்களை ரக்ஷித்தாற்போலே அகிஞ்சனனாய் அகுணனான என்னையும் ரக்ஷிக்கவேணும். அவர்களை ரக்ஷித்ததிலும் என்னை ரக்ஷிப்பதாலேயே நீ நிறம்பெறுவாய். தோஷமுள்ள உம்மை எப்படி விரும்புவது? என்னில்: (வேம்புங்கறியாகுமேன்று) ஆரோக்யமளிப்பது முதலான குணங்களைக் கண்டு விரும்பினால், வேப்பிலையும் கறியமுதாகிறதன்றோ. (மெய்தெளிந்தார் என்செய்யார்) நீ செய்தவற்றிற் போலவே செய்யப்போகுமவற்றிலும் ஆச்சரியம் என்ன இருக்கிறது உன் ஸ்வரூபத்தை உள்ளபடி அறியும்போது? என்று கருத்து.

''கிமத்ர சித்ரம் தர்மஜ்ஞ லோகநாத ஸுகாவஹ |
யத்த்வமார்யம் ப்ரபாஷேதா: ஸத்த்வவாந் ஸத்பதே ஸ்தித: ||

[ரா-யு 18-36]

[தருமமறிந்தவனே! லோகநாதனே! ஸுகமளிப்போனே! ஸத்வகுணமுடையவனாய், நல்வழியில் நிற்கும் நீ இந்நல்வார்த்தை நவின்றதில் என்ன ஆச்சர்யமுள்ளது?] என்றாப்போலே.

95. என்றேனடிமை யிழிந்தேன் பிறப்பிடும்பை
ஆன்றே னமரர்க் கமராமை—ஆன்றேன்
கடனாடும் மண்ணாடுங் கைவிட்டு மேலை
யிடநாடு காண வினி.

பதவுரை:—அடிமை—அடிமையை, என்றேன்—ஏற்றுக்கொண்டேன், பிறப்பு இடும்பை—பிறப்பினால்வரும் அஹங்காரமமகாரங்களில் நின்றும், இழிந்தேன்— நீங்கினேனே; அமரர்க்கு— பிரமன் முதலிய தேவர்களுக்கும், அமராமை — என் அருகு நாடவொண்ணாதபடி ஆன்றேன்— (ஞானம் பக்தி முதலியவற்றால்) நிரம்பினேனே; கடன் நாடும்—ஸ்வர்க்கம் முதலிய லோகங்களையும், மண் நாடும்—இப்பூலோகத்தையும், கை விட்டு— உபேக்ஷித்து. மேலை— எல்லாவற்றுக்கும் மேற்பட்டுள்ளதாய், இடம்— (அடியார்கள் குழாங்களுக்குத் தகுதியாக) இடமுடைத்தான, நாடு— திருநாட்டை, காண— கண்டு அநுபவிக்கலாம்படி, இனி—இப்போது, ஆன்றேன்— (பரபக்தி) நிரம்பப் பெற்றேன்.

பெரி-வ்யா:— தொண்ணூற்றைந்தாம் பாட்டு. (என்றேனடிமை) அடிமையென்றால் மருந்துபோலேயிராதே அதிலே பொருந்தினேன். (இழிந்தேனித்யாதி) அடிமைக்கு விரோதியாய் ஸாம்ஸாரிகமான அஹங்காரமமகாரமாகிற பர்வதத்தில் நின்றுமிழிந்தேன். (ஆன்றேனித்யாதி) ப்ரஹ்மாதிகளுக்கும் என்னைக்கண்டால் கூச வேண்டும்படி ஜ்ஞாநபக்த்யாதிகளால் பூர்ணனானேன். அதுக்குமேலே புண்யபலம் புஜிக்கும் ஸ்வர்க்காதிலோகங்களையும் புண்யார்ஜநம் பண்ணும் பூமியையும் உபேக்ஷித்து அவற்றில் விலக்ஷணமாய் இடமுடைத்தான ஸ்ரீவைகுண்டம் காணலாம்படி இப்போது பரபக்தியுக்தனானேன் என்கிறார்.

திவ்ய—அவ:-- "அருளாய் அடியேற்கு" என்றபடியே எம்பெருமான் அருள, தாம் இஷ்டப்ராப்திகளையும், அனிஷ்ட நிவ்ருத்திகளையும் பெற்றபடியைப் பேசுகிறார்,

வ்யா:— (என்றேனடிமை) ஒழிவில்காலமெல்லாம் செய்யவேண்டிய அடிமையிலேபொருந்தினேன்;இதுக்குமுன்புஅடிமையிலே ருசியுண்டானாலும், அதுப்ரக்ருதி ஸம்பந்தபலத்தாலே மருந்திலே நோயாளிக்குள்ள ருசிபோலே அளவுபட்டிருக்கும். இப்போது அடிமை ருசி அளவற்றதாயிற்று. இப்போது அடிமையிலே பொருந்துகைக்கு அடியென்னென்னில்: (இழிந்தேன் பிறப்பிடும்பை) பிறப்பினால் வரும் அஹங்காரமமகாரங்களாகிற தடையிலிருந்து

நீங்கினேன். (இழிந்தேன்) அஹங்காரமமகாரங்கள் பர்வதம்போலே பெருத்திருக்கையாலே அவற்றை விட்டு இறங்கினேன் என்கிறார்.

(ஆன்றேன் அமரர்க்கு அமராமை) தேவதாந்தரங்களை நான் அணுகும் நிலை போய், அவர்கள் என்னை அணுகக் கூசும்படி ஞானபக்திகளால் நிறைவுபெற்றேன். (கடன் நாடும் மண்ணுடும் கைவிட்டு மேலை இடநாடு காண இனி ஆன்றேன்) புண்ணிய பலமனுபவிக்கும் சுவர்க்கத்தையும், புண்ணியம் அநுஷ்டிக்கும் இவ்வுலகையும் கைவிட்டு, பழையதாய், இடமுடையதான பதத்தைக் காணலாம்படி பரமபக்தியால் நிரம்பினேன். கடன்நாடு-தீர் தீரவேண்டிய கடனைப்போலே, அனுபவித்தேதீரவேண்டிய புண்ணிய புஜிக்கும் நாடான சுவர்க்கம்.(இடநாடு) "ஸர்வாத்மஸாதாரண நாதகோ பூரேபி துஷ்பூர மஹாவகாசம்" [ர-ஸ்த1-38] [எல்லா ஆத்மாக்களு பொதுவான எம்பெருமானுடைய அடியார்குழாங்கள் அனைவரும் திர லும் இடமுடையதான பரமபதம்] என்று சொல்லப்பட்டதன்றோ.

96. இனியறிந்தே னீசற்கும் நான்முகற்குந்தெய்வம்
இனியறிந்தே னெம்பெருமா னுன்னை—இனியறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்.

பதவுரை:—எம்பெருமான்— எம்பெருமானே! ஈசற்கும் —னுக்கும், நான்முகற்கும்—பிரமனுக்கும், தெய்வம்—தெய்வமாக, அறிந்தேன்— இப்போது(உன்னை) திடமாகத் தெரிந்துகொண்டே இனி-இப்போது, உன்னை அறிந்தேன்-உன் ஸ்வரூபத்தை (உள்ள அறிந்தேன்; காரணன்நீ-ஸகலஜகத்துக்கும் காரணபூதன் நீ; கற்றவை இதற்கு முன்பு அறியப்பட்ட பொருள்களெல்லாம் நீ; கற்பவை இனிமேலறியப்படும் பொருள்களும் நீ; நல்கிரிசை—நிர்ஹேதுகரக்ஷ மாகிற நல்ல வ்யாபாரத்தை யுடையனான, நாரணன்நீ—நாராயணன இவையனைத்தையும், நான் நன்கு அறிந்தேன்—நான நன்றாகத் தெரி கொண்டேன்.

பெரி-வ்யா:— தொண்ணூற்றாறும் பாட்டு. (இனியறிந்தேன்) இப்போது ஈசனுக்கும் நான் முகனுக்கும் தெய்வமென்றெனக்குக்கைவந்தது; இப்போது நீயானபடியே உன்னையறிந்திருந்தேன்; ஸர்வத்துக்கும் காரணன் நீ; இதுக்கு முன்பு அறிந்தனவும் இனிமேல் அறியக்கடவ பதார்த்தங்களுமெல்லாம் நீயிட்ட வழக்கு. (நற்கிரிசை) நிர்ஹேதுகமாய் ரக்ஷிக்கும் ஸ்வபாவனும் அதுக்கடியான சேஷியான நாராயணன் நீ. (நன்கறிந்தேன் நான்) இப்பொருள் எனக்கு அழகியதாகக் கைவந்ததென்கிறார்.

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் முற்றிற்று.

திவ்ய-அவ:-முக்தி தசையிலே இவன் பெறும் பெருமைகளுக்கெல்லாம் மூலகாரணம் ஞானவிகாஸமன்றோ. தாம் அதைப்பெற்றதைப்பேசி கிரந்தத்தைத் தலைக்கட்டுகிறார் இப்பாசுரத்தோடு.

வ்யா:—(இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்குப் தெய்வம்) ஈசனென்று பெயர்பெற்ற சிவனுக்கும் நாலுமுகத்தையுடைய பிரமனுக்கும் நீயே தெய்வம் என்பதை இப்போது நேராகக் கண்டேன். இதுக்கு முன்பு சாஸ்திர முகத்தாலே அறுதியிட்டிருந்த அர்த்தத்தை நேரே ஸாக்ஷாத்கரித்தேன். ஒரு கிரந்தமாகில், உபக்ரமும், உபஸம்ஹாரமும் —(தொடக்கமும், முடிவும்)—ஒருபடிப்பட இருக்கவேண்டும் என்னும் நியமமுண்டாகையாலே, "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" என்று தொடங்கின அர்த்தத்தையே பேசி முடிக்கிறார். (இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை) இப்போது உன்னை உள்ளபடியே நேருக்கு நேரே ஸாக்ஷாத்கரித்தேன். நீர் ஸாக்ஷாத்கரித்தபடிதான் என்னென்னில்; (காரணன் நீ) ஸகலஜகத்காரணன் நீயே என்றறிந்தேன். (கற்றவை நீ கற்பவை நீ) இதுக்கு முன்பு அறிந்த பொருள்களும், ஞானவிகாஸம் பிறந்த பின்பு இனி அறியப்போகும் பொருள்களும் எல்லாம் நீயிட்டவழக்கு என்று அறிந்தேன். "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்ற வேதாந்தபரிபாஷையை அடியொற்றிப் பேசுகிறார். (நற்கிரிசை நாரணன் நீ)நிர்ஹேதுகமாக ரக்ஷிக்கையாகிற நல்லசெயலை உடையவனாய், இப்படி ரக்ஷிக்கைக்கு ஹேதுவான ஸ்வாமித்வத்தையுடைய நாராயணண் நீ என்று அறிந்தேன்; நாரணன்—நரஸமூஹங்களான நாரங்களுக்கு ஸ்வாமியாயிருப்பவன். இதுக்கு முன்பு இவற்றை அறிந்ததில்லையோ என்னில்; (நன்கறிந்தேன் நான்) இதுக்கு முனபு சாஸ்திர முகத்தாலே அறிந்த அறிவு ஒருபுறமிருக்க, இப்போது நேராகவே நன்கு அறியப்பெற்றேன் நான்.

इत्थं श्रीश्रीनिवाससूरेः सूनोः करात्समुदितेयं।
व्याख्या सद्भिः सेव्या चतुर्मुखान्तादिदिव्यगाथाया:॥

இத்தம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸஸூரே: ஸூநோ: கராத் ஸமுதிதேயம்।
வ்யாக்யா ஸத்பிஸ் ஸேவ்யா சதுர்முகாந்தாதி திவ்யகாதாயா:॥

[ஸ்ரீ ஸ்ரீநிவாஸசார்யஸ்வாமியின் குமாரரால் எழுதப்பெற்ற இந்த நான்முகன் திருவந்தாதி வியாக்கியானம் நல்லோர்களால் ஸேவிக்கத்தக்கது.]

திவ்யப்ரபந்த ஸாரத்தில்
நான்முகன் திருவந்தாதி வியாக்கியானம் முற்றிற்று

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.



இனியறிந்தே னீசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தே னெம்பெருமா னுன்னை-இனியறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்.

— ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி. —